

# வடிவங்கள் மாறலாம் போராட்டம் தொடரும்...

கைமண்

# வடிவங்கள் மாறலாம்!

# போராட்டம் தொடரும்...

*ஒரு சமூகவியல் ஆய்வு*

**கைமண்**

**மறு நிர்மாணம்**

சமூகவியல் ஆய்வு மையம்

Vadivangal Maralaam!
Porattam Thodarum...

First Edition : July 2011

Publishers
Maru Nirmaanan ©

marunirmaanam@gmail.com

All rights relating to this work rest with the copy right holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibted under the copy right act, without the prior writen permision of the publisher of this book.

*மானுடகுல விடுதலைக்காக மரணித்தவர்களுக்கு...*

# பதிப்புரை

அன்பு வாசகர்களே!

‘மறுநிர்மாணம்’ பதிப்பகம் தனது முதலாவது பதிப்பைத் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறது. சமூகம் என்பது இறந்துபோன பிணக்குவியல்கள் அல்ல. அது மீண்டும் மீண்டும் உயிர்த் துடிப்புடனும், வீரியத்துடனும் எழுந்துவரும் ஓர் இயங்கியல் கட்டமைப்பு.

உலக சமூக வரலாறானது, முன்நோக்கிச் செல்லும் உந்துசக்திகளால் மீளவும் மீளவும் கட்டமைக்கப்பட்டே வருகின்றது. இந்த நிகழ்வுப் போக்கானது ஓர் உள்ளார்ந்த தன்னியல்பான தன்மையினதாயினும் திட்டமிட்ட வழிகாட்டல்கள், முன்னெடுப்புக்களே பெறுபேறுகளை ஆக்கபூர்வமாக்குகின்றன.

விளைவுகளில் இருந்து முறையாக கற்றுக்கொள்வதும், கற்றுக்கொண்டவற்றை சரியாக பிரயோகப்படுத்துவதும் என்ற ஆய்வு-நடைமுறை வளையங்கள் (சுருளி வடிவில் மேல் செல்லும் வளையங்கள்) மீண்டும் மீண்டும் முயற்சிக்கப் பட்டுக்கொண்டே இருக்கின்றன. சமூக விடுதலையின் மனிதகுல விடுதலையின் அச்சாணியும் இதுவேயாகும்.

“கண்ணோட்டத்து உள்ளது உலகியல்...” என்கிறார் வள்ளுவர். பிரச்சனைகளை ஆய்ந்தறியும் பார்வையின் முக்கியத்துவம் திரும்பத் திரும்பப் புதிப்பிக்கப் படுகிறது.

அரசியல், பொருளாதாரம், படைப்பியல், பண்பாட்டியல் மற்றும் இன்னோரன்ன சமூகத்துறைகளில் எல்லாம் ஆய்வுகள் நிகழ்ந்தவண்ணமே உள்ளன. பொருள் ஆதாரமின்மை, அடக்குமுறை, நோய், மூப்பெய்தல் போன்ற பல்வேறு காரணங்களால் பல கிடைத்தற்கரிய ஆய்வினர்களின் படைத்தற்கரிய ஆக்கங்கள், உலகம் முழுதும் தேங்கிக் கிடக்கின்றன. இது இலங்கைத் தீவுக்கும் பொருந்தும்.

ஆய்வாளர்களை ஊக்குவித்து ஆய்வு நூல்களை வெளிக்கொணரும் பணியில் தனிநபர்களும் அமைப்புக்களுமாக பலரும் பங்குகொண்டு வருகிறார்கள். அந்த அணியில் ஓர் அங்கமாக தன்னை இணைத்துக்கொள்வதில் ‘மறுநிர்மாணம்’ உவகை கொள்கிறது.

பட்டப் படிப்புக்களுக்காய் புலமைசார்ந்து வரும் ஆய்வுகளிற்கும் சமூக ஈடேற்றம் கருதி முளைவிடும் ஆய்வுகளிற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. புதிய கருத்துருவாக்கங்களுக்கு ஆதாரநூல்கள் கிடையா. இது புரிந்துகொள்ளப் படவேண்டும்.

தத்துவஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் அடிப்படையான வேறுபாடே அவை எழுப்பும் கேள்விகள் தான். விஞ்ஞானம் ஒரு நிகழ்வுப் போக்கை எவ்வாறு

நிகழ்கிறது? என்று ஆய்கிறது. தத்துவஞானமோ ஏன் நிகழ்கிறது? என்ற கேள்வியில் தொடங்குகிறது.

இந்த இரண்டு கேள்விகளும் சரியாக ஒன்றிணைக்கப்படுமானால் தத்துவ-விஞ்ஞானம் பிறப்பிக்கப்படும். அப்படியான ஆய்வுகளுக்கே ‘மறுநிர்மாணம’’ முதன்மையளிப்பதாய் இனம் காட்டுகிறது. ஆயினும், வெறுமனே கற்றுத் தேர்ந்த ஒரு சிறு புலமைசார் வாசகர் வட்டத்தை மையப்படுத்தாது ஒப்பீட்டளவில் ஓர் பரந்துபட்ட வாசகர்களை இலக்கு வைத்தே மறுநிர்மாணத்தின் பதிப்புக்கள் அச்சுப் பெறும்.

அந்தவகையில் எமது இந்த முதலாவது பதிப்பும் பரந்துபட்ட வாசகர்களின் வாசிப்பை வேண்டிநிற்கிறது. எந்த ஒரு ஆய்வுப் படைப்பும் முற்று முழுதானது அல்ல. தனிநபர்களாக நாம் கற்றிருப்பது ‘கைமண்’ணே. கட்டடத் துறையிலும் /இயந்திரவியல் துறையிலும் முதலில் மாதிரிகளை உருவாக்குவார்கள். அதில் ‘பரிணாம மாதிரி’ (evolutionary Prototype) என்று ஒரு வகை உண்டு. எமது முதல் படைப்பும் அவ்வகையினதே. வளர்த்தெடுக்கக்கூடிய பல கருத்துக்கள், கருதுகோள்கள் இவ்வாய்வில் உண்டு. இவ் ஆய்வை மேலும் வளர்த்தெடுக்க விரும்பும் அக்கறையாளர்களின் படைப்புக்களை ‘மறுநிர்மாணம்’ பரிசீலிக்கும்.

உயரிய பண்புடைய விமர்சனங்களை ‘மறுநிர்மாணம்’ ஏற்றுக் கொள்ளும். எமது இப்பணியின் வளர்ச்சி வாசகர்களின் மனங்களிலேயே தங்கியிருக்கிறது. அவர்களது ஊக்கமும், உற்சாகமும், பங்களிப்பும் எம்மை இரண்டாவது பதிப்பை நோக்கி உந்தித் தள்ளும்.

ஓரு சிறிய விளக்கின் வெளிச்சத்தை சீறிப்பாயும் புயற் காற்றினூடாக அணையாது இருக்க கரங்களைக் கொண்டு தடுக்க செய்யும் முயற்சி இது. சக்தியின் பலமே ஆயிரம் கரங்கள். கரங்களை இணைப்போம். மறுநிர்மாணத்தில் இணைவோம்.

இம்முயற்சியில் எம்மோடு ஒத்துழைத்த நூலாசிரியர் மற்றும் நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

நூல்கள் தனிமனித மூளையில் வரையப்பட்டாலும் கருத்துக்களின் கருவறை சமூகமே. சமூகமாய் சிந்திப்போம்.

*“காலம் பிரபஞ்சங்களை விடப் பெரியது. அதன் எண்ணிலடங்கா புள்ளிகளில் சிறு துளியாய் நிகழ்காலம் இருக்கிறது. சாத்தியக் கூறுகளை எந்த அதீத கணனிகளும் கணித்துவிட முடியாது. அது ஒரு மாபெரும் சக்தி. மலைகள் அதன் மடியில் மடுவாகின்றன. சிறு அணுக்கள் மலைகளாகின்றன. காலத்தின் மடியில் எத்தனையோ பிரபஞ்சங்கள் முலைப்பால் குடித்து தவழ்ந்து கொண்டிருக்கின்றன. வயோதிகம் எய்தி எத்தனையோ பிரபஞ்சங்கள் தடுமாறிக்கொண்டிருக்கின்றன. காலம் மாற்றங்களால் ஆனது” - (வே. இராமநாதன்).*

**மறுநிர்மாணம் பதிப்பினர்**

# ஆசிரியர் உரை

தனிநபர் இராணுவ எதேச்சாதிகாரத்தை எதிர்கொண்டு சமூக ஜனநாயகத்தையும் தேசிய ஜனநாயகத்தையும் இலங்கையில் மீட்டெடுப்பதற்கு குறைந்தது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியாவது இலங்கைக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது. இலங்கை மக்கள் எப்போது இந்த அவலத்தில் இருந்து மீள்வார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும்போது, கடந்த கால வரலாறு நினைவுக்கு வருகின்றது.

1930களின் நடுப்பகுதியில் இலங்கைக்கு முழுச் சுதந்திரம் கேட்டு அணி திரண்ட யாழ்-வாலிபர் காங்கிரஸ், 1940களின் பிற்பாதி முழுமையும் இடதுசாரி இயக்கங்களின் தலைமையின் கீழ் தம்மை அணிதிரட்டிக் கொண்ட மலையக மக்களின் விழிப்புணர்வு, மந்திரிசபையைக் கடலினில் மிதக்க விட்ட 50ன் முற்பகுதியில் நடந்த தொழிலாளர்களின் கர்த்தால், முதலாளித்துவ தலைமையிலும், தொழிலாள வர்க்க அமைப்புகளின் உதவியுடனும், சிங்களக் கிராமப்புறங்களைப் பிரதானமாகக்கொண்டு 1950களின் பிற்பகுதியிலும் 60களிலும் நடைபெற்ற 'அப்பே ஆண்டுவ' எழுச்சி, அதே காலப்பகுதியில் தேசிய ஒடுக்குமுறைக்கெதிராக சத்தியாக்கிரகப் போராட்டமாக எழுந்த தமிழர்களின் சிங்கள 'ஸ்ரீ' எதிர்ப்பு எழுச்சி, சிங்களக் கிராமப்புற படித்த இளைஞர்களை அடித்தளமாகக் கொண்டு 1971-இலும், 90-களின் முற்பகுதியிலும் நடந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜே.வி. பி கிளர்ச்சிகள், 1960-களின் பிற்பாதி முழுமையும் யாழ் குடா நாட்டில் நடந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், தமிழ்க் கிராமப்புற படித்த இளைஞர்களை அடிப்படையாகக் கொண்டு வட்டுக்கோட்டை மாநாடு வரை நடைபெற்ற தமிழ்ப் போராளிக் குழுக்களின் முற்போக்கு ஜனநாயக ஆயுத எழுச்சிகள், அதன் பின்னால் தமிழ் மக்களால் நடத்தப்பட்ட பாராளுமன்ற ஜனநாயகப் போராட்டங்கள், 1990-களிலும் 2000-ம் ஆண்டுகளின் முற்பாதி வரையிலும் நடந்த பலமிகு ஆயுதப் போராட்டங்கள் ஆகிய இவற்றை எல்லாம் தற்போது மீண்டும் நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது.

இவை தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்திய போராட்டங்கள். பிரதேச அளவிலும், துறை சார்ந்த அளவிலும் நடந்த போராட்டங்களும் உள்ளன. போக்குவரத்துத்துறைத் தொழிலாளர்களின் போராட்டம், பெருந்தோட்ட நிலங்களை சிங்களமயப் படுத்துவதை எதிர்த்து மலையகத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் என்பன இவற்றில் சிலவாகும். ஒவ்வொரு உச்ச கட்ட நெருக்கடிகளையும் போர்க்களங்களாக மாற்றிக் கொள்ளும் ஆற்றல் இலங்கை மக்களுக்கு உண்டு என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் நல்ல தளபதியின்மையால் இக்களங்கள் அனைத்தும் முழுமையான பலனைத் தரவில்லை. சில களங்கள் அதிக இழப்பையே தந்துள்ளன. அது மட்டுமல்ல, இப்போராட்டங்கள் எதுவுமே இலங்கையின்

சமூக உருவாக்கத்தில் உழைக்கும் மக்களுக்குச் சாதகமான எந்த அடிப்படை மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. அனைத்துப் போராட்டங்களும் மத்தியதர வர்க்கத்தினரின் மேல் நிலை நகர்வுக்கு உதவுவதாகவே அமைந்தன. இருந்தும் இலங்கை மக்கள் சலிப்பின்றி தாம் போர்க்குணம் உள்ளவர்கள் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார்கள். இலங்கை மக்களின் இந்தச் சலிப்பற்ற போர்க்குணத்துக்கான காரணங்கள் எவை? அவர்களின் தோல்விக்கான காரணங்கள் எவை? போராட்டங்களின் பலாபலன்களை பிறர் காவுகொண்டு போகும் நிலை தொடர்ச்சியாக ஏற்பட்டு வருவதற்கான காரணங்கள் எவை? அவற்றைத் தடுப்பது எவ்விதம்? எப்போது? என்பதே இன்று மக்களின் அரசியல் அதிகாரத்துக்காகப் போராடுபவர்களின் முன்னால் உள்ள கேள்விகளாகும். இக் கேள்விகளுக்கான பதிலைத் தேடுவதற்கான அரசியல் கருத்துக் களத்தில் இந்நூலையும் சேர்த்துக் கொள்ளவும்..

இந்நூல், முழுநாட்டினதும் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவர்களினதும், மக்களின் முயற்சிகளைக் காவு கொள்பவர்களினதும், அக மற்றும் புற சமூக-பொருளாதார-அரசியல் அணிகளின் வர்க்க மூலம் பற்றியும், அவ் வர்க்கங்களின் தேவைகள், வளர்ச்சி விதிகள், சமூக-அசைவியக்கப் போக்குகள், அவர்களின் உத்தேச எதிர்காலச் செயற்பாடுகள், அவர்களின் பலம், பலவீனங்கள் ஆகியன பற்றிய ஆய்வின் முதல் பகுதியாகும். (மொத்தம் நான்கு பகுதிகள்). இம் முதல் பகுதி இலங்கையின் சமூக உருவாக்கத்தைச் சீரழிக்கும் மூன்று பிரதான சிந்தனைப்போக்குகள் பற்றிய ஆய்வாக அமைகின்றது.

1. **மகிந்த சிந்தனை**

சிங்கள மேட்டுக்குடியினரின் சிந்தனை. பிற இன மேட்டுக்குடியினரின் ஒரு பகுதியினரும் இதில் அடங்குவர். இது சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதாகவும் உள்ளது.

2. **தமிழ்ப் பேரகங்காரவாதம்**

தமிழ் மேட்டுக்குடியினரதும், நடுத்தர வர்க்கத்தின் மேலணியினதும் சிந்தனையாகும். மேற்கு முகாம் ஆதரவுத் தமிழ்த் தேசியவாதிகளின் தேசியவாதம் இதுவேயாகும். ‘நாடு கடந்த தமிழீழ அரசு’ இப்போக்கின் அரசியல் பிரதிநிதிகளின் ஒரு பகுதியாகும்.

3. **இடது-தீவிரவாத சிங்கள-பௌத்த பேரகங்காரவாத சிந்தனை**

ஜே.வி.பியே இப்போக்கின் அரசியல் பிரதிநிதியாக உள்ளது. முதலாவது தடையும் தலையாய தடையும் மகிந்த அணிதான். இந்த உண்மையைத்

தெரிந்தவர்களையும் விட, தெரியாதவர்கள்போல் நடிப்பவர்களினதும், ஏதோ ஒப்புக்கு இவ் அணியை வசைபாடுவர்களினதும், திரைமறைவில் (கடற்கரை மணலில் தனது தலையைப் புதைத்துக்கொண்டு உலகின் கண்களைத்தான் கட்டிவிட்டதாக பெருமைப்படும் தீப்பறவையைப்போல) இவ்வணியுடன் பேரப்பேச்சுகளில் ஈடுபடுவர்களினதும் எண்ணிக்கை அதிகம். இதனாலேயே இலங்கைக்கு 'வெற்றி'யைப் பெற்றுத் தந்த, இன்னும் பல மகத்தான 'வெற்றி'களை பெற்றுத் தரப்போகிற மகிந்த சிந்தனை, ஆய்வுக்குரிய முதலாவது பொருளாக எடுக்கப்பட்டுள்ளது. அதிலும் மகிந்த சிந்தனையின் இராணுவ உள்ளடக்கம், பொருளாதார உள்ளடக்கம், இராஜ தந்திர உள்ளடக்கம் ஆகிய பகுதிகளுக்கே முதன்மை முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மகிந்த சிந்தனை என்பது வெறுமனே ஒரு கருத்துக் கட்டுமானமோ அல்லது அரசியல் வேலைத்திட்டங்களின் தொகுப்போ அல்ல. உண்மையிலேயே அது இராணுவ எதேச்சாதிகாரக் கட்டுமானத்தின் நாடியும் நாளமுமாகும். இலங்கையின் இன்றைய பிரதான சமூக-அரசியல்-பொருளாதாரப் பிரச்சனையானது அதன் அரச கட்டுமானம் தொடர்புபட்ட பிரச்சனையேயாகும். இதனால் தான் மகிந்த சிந்தனையின் இராணுவக் கட்டுமானத்துக்கே இந்நூல் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. நூலின் அதிக பக்கங்கள் அதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளன.

மகிந்த சிந்தனையின் கருத்துக்கட்டுமானம் மகாவம்சமேயாகும். மகாவம்சக் கருத்துக் கட்டுமானத்துக்கு எதிராக ஒரு கலாச்சாரப் புரட்சியே தேவைப்படும் நிலையில் ஆகக் குறைந்தது ஒரு பகிரங்க சொல்லாடலைக்கூட அரசியல் அரங்கினில் மார்க்சியர்கள் உட்பட எவருமே இதுவரை முன்னெடுத்துச் செல்லவில்லை. மார்க்சியக் கோட்பாடுகள் இலங்கைக்குப் பொருத்தமான வழியில் உருவாக்கப் படவேண்டுமானால், 'சப்பாத்துக்கள்' தேடி உலகெங்கும் பறப்பதை விடுத்து, இலங்கையின் சித்தாந்தக் களத்தில் மகாவம்சக் கருத்துக் கட்டுமானத்துக்கு எதிரான ஒரு சித்தாந்தப் போராட்டத்தை மார்க்சியர்கள் நடத்தவேண்டும். மகாவம்சத்தின் அரசியல் விளைவுகளுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட தேசியங்களினால் தேசிய யுத்தங்கள் நடத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமானால் மகாவம்சக் கருத்துக் கட்டுமானத்துக்கு எதிரானதோர் சித்தாந்தப் போராட்டம் சிங்கள மக்கள் மத்தியில் நடத்தப்படவேண்டும். இல்லையேல் தொலைந்துபோன இலங்கைத் தேசியத்தை மீட்கமுடியாது. இலங்கை இன்னும் ஒரு லெபனானாக மாறுவதைத் தடுக்க முடியாது. இவ்விபரம் இந்நூலில் விவாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் காரணகாரியத் தொடர்புகள் இதில் விவாதிக்கப்படவில்லை. மூன்றாம் பகுதியில் இது நடைபெறும்.

இலங்கை என்றோர் நாடு இன்னமும் உண்டு. அது அழிந்து விடவில்லை. ஆனால் இலங்கைத் தேசியம் குற்றுயிரும் குறை உயிருமாக உள்ளது. அவளுக்கென்றோர் தேசமுமில்லை, அரசும் இல்லை. பௌத்த சிங்கள பேரகங்காரவாதிகளிடமும், அந்நிய தேசங்களிடமும் அவற்றைப் பறிகொடுத்து

விட்டு நடைப்பிணமாக உள்ளாள். இது யுத்த களத்தில் அனைத்து ஆயுதங்களையும் பறிகொடுத்துவிட்டு வெறுங்கையுடன் நிற்பவரின் நிலைக்கு ஒப்பானதாகும். மகிந்த ராஜபக்ஷ தன்னை உருமறைப்புச் செய்வதற்காக அவளது ஆடைகளையும் களைந்துவிட்டார்.

எது எவ்வாறாயினும் இன்றைய இலங்கைத்தீவில் இரு அரசுகள் உள்ளன.

1. **பௌத்த சிங்களத் தேசியம்**

இலங்கைத் தேசியத்தின் இரத்தத்தைக் குடித்து அதைக் குற்றுயிராக்குவதன் மூலம் உருவாகியுள்ள பௌத்த சிங்கள பேரினவாதத் தேசியம். உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரபூர்வமான, அரசுடனான தேசமாக உள்ளது.

2. **யாழ்-மேட்டுக்குடி மையவாத தமிழீழத் தேசியம்**

உட்பிளவுகள் கொண்ட யாழ்-மேட்டுக்குடி மையவாதத் தமிழீழத் தேசியம், அதிகார பூர்வமற்ற முறையில் உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அரசுடன் கூடிய தேசமாக இருந்தது. அது இன்று தோற்றுப்போயுள்ளது. தேச அரசுகளின் தோல்வி தேசங்களின் அழிவல்ல. தமிழீழத் தேச அரசு மீண்டும் முன்பைவிட அதிக சக்தியுடன் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளக்கூடிய அனைத்து வளங்களும் உள்ள உறங்குநிலைத் தேச அரசாக உள்ளது. இந்த உறங்குநிலை கோமாநிலையல்ல. இது தலைமறைவு, உருமறைப்பு உறங்குநிலையாகும். இவ்வரசைப் புதுப்பிப்பதற்கு வல்லரசுகள் வரிசையில் காத்து நிற்கின்றன. "பிரபாகரன் மீண்டும் வருவார்" என்பதன் உள் அர்த்தம் இதுதான். 'சீ சோ'(seesaw) விளையாட்டுக்குச் சோடி தேவை என்ற நிலை தோன்றினால் தமிழீழ அரசுக்கு உயிர் கொடுக்க மகிந்தவும் தயாராய் உள்ளார் என்பதில் ஆச்சரியமில்லை. சாத்தானுடனும் வாழப் பழக வேண்டும் என ஜே.ஆர். வேதமோதவில்லையா? 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' எனக்கூறிய பிரேமதாசா, புலிக்கு ஆயுதம் வழங்கவில்லையா?

இம் மூன்று போக்குகளும் ஒன்றுக்கு ஒன்று பகைமை கொண்டது போலவே தெரிகிறது. ஆனால் உண்மை அவ்விதமானதல்ல. சிங்கள-பௌத்த பேரினவாத அரசிற்கும் இலங்கை மக்கள் அனைவருக்கும் இடையேயான உறவு முறை பகைமைத் தன்மை கொண்டதே. இதில் எந்த விதமான சமரசமும் இருக்க முடியாது.

ஆனால் முன் சொன்ன மூன்று போக்குகளுக்கும் இடையேயான உறவு பகைமைத் தன்மை கொண்டதல்ல. அவை சிநேகத் தன்மை கொண்டவை. அவற்றிற்கு இடையே காலத்துக்குக் காலம் நடைபெறும் ஊடல்கள்,

கூடல்களை மேலுமொரு உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுப்பதற்கான தகவமைப்புகளேயாகும். இவ்வித தகவமைப்பு நிகழ்வுகளின்போது சாடிஸ்டுகள்போல் ஒருவரையொருவர் பிய்த்துக் கொள்வார்கள். யுத்த வெறித்தனத்தின் மூலம் தமது நரம்பு முறுக்கேறல்களைத் தீர்த்தும் கொள்வார்கள். இவர்கள் வர்க்கமேல்நிலையாக்கம் அடைந்து கொண்டேயிருப்பார்கள். மக்கள் உடல்ரீதியாகவும், பொருள்ரீதியாகவும், உணர்வுரீதியாகவும் அழிந்துகொண்டேயிருப்பார்கள். இச் செயற்பாடு இந்நூலில் வரலாற்று ஆதாரங்களுடன் விவாதிக்கப்பட்டுள்ளது.

இம் மூன்று போக்குகளும் இலங்கை மக்களின் மனங்களில் இருந்து அப்புறப்படுத்தப்படவேண்டும். இந்த மூன்று போக்குகளினதும் அரசியல் அதிகார அங்கங்கள் அரசியல்ரீதியாகத் தோற்கடிக்கப்படவேண்டும். இருந்தும் இம் மூன்று போக்குகளுக்கும் இடையில் வேறுபாடுகளும் உண்டு. இலங்கை மக்களின் நிரந்தர எதிரிகளான இம்மூன்று போக்குகளினதும் அரசியல் அதிகார அங்கங்கள் ஒரே நேரத்தில் இலங்கை மக்களின் பகைவர்களாக இருப்பதில்லை. கால, இட சூழலைப் பொறுத்து பகைவர் வேறுபடுவர்.

அடுத்ததாக, அதிகாரப் பங்கீடு பற்றிய அரசியல் சொல்லாடல்கள் இந்நூலில் இல்லை. அறவே இல்லை என்று சொன்னாலும் அது தவறல்ல.

காரணம் அரசிடம் கோரிக்கை வைப்பது அர்த்தம் இல்லாதது. வல்லரசுகளின் நிர்ப்பந்தத்தால் அரசு தானாக அதிகாரப் பரவலாக்கல் பொதியைக் கொடுக்க முன் வரும். அதன் பேரில் எதையாவது திணிக்கும். சிலர் ஆதரிப்பர். சிலர் எதிர்ப்பர். சில மாற்றங்களுடன் திணிப்பு அமுலுக்கு வரும். அது அறிக்கையாக மட்டும் இருக்கும். அதை அமுல்படுத்தும்படி பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டேயிருக்கும். இதுதான் வழமையாக உள்ளது. ஆகவே, அதுபற்றி தற்போது ஏன் வீணாக அலட்டிக் கொள்ளவேண்டும்.

தமிழ் மற்றும் சிங்கள மக்களிடையே, தனித்தோ அல்லது ஒன்றிணைந்தோ, குறைந்தது முதலாளித்துவ தேசிய ஜனநாயகப் புரட்சியாவது நிச்சயமாக நடைபெறும். அப்போது உருவாகி வரும் மக்கள் அதிகாரங்கள், அதிகாரப் பரவலாக்கல் பற்றிப் பேசிக்கொள்ளட்டும். அதுதான் நடைமுறைப்படுத்தப்படும் அதிகாரப் பரவலாக்கலாக இருக்கும். இப்போதென்ன அவசரம்? ஆகையால் அதிகாரப் பரவலாக்கல் பற்றிப் பேசுவதை இந்நூல் தவிர்த்துள்ளது. ஆனால் ஆவலுடன் எதிர்பார்க்கும் அந்த மக்கள் அதிகாரங்கள் பற்றி இந்நூல் அலசுகிறது.

குற்றுயிர் ஆக்கப்பட்டுள்ள இலங்கைத் தேசியத்தையும் தமிழீழத்

தேசியத்தையும் ஜனநாயகத் தேசியங்களாக உருவாக்கம் செய்வதே இந்நூலின் பேரவாவாகும். ஆனால் அதற்கான வேலைத்திட்டங்களுக்கான விதந்துரைகள் எதையும் இந்நூல் முன்வைக்கவில்லை. அது ஒரு அமைப்பின் கடமையேயாகும். தனி நபர் என்ற முறையில் நூலாசிரியருக்கு அதற்கான ஆற்றலோ தகைமையோ இல்லை. இலங்கையின் சமூக நிகழ்வுகளுக்கான காரண-காரியத் தொடர்புகளை ஆராய்வதே இந்நூலின் நோக்கமாக உள்ளது. சில காரணங்களே ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ளன. சில காரியங்களே வெளிக்கொணரப்பட்டுள்ளன. சித்தாந்த அடித்தளம், பொருளாதார அடித்தளம் என்ற காரணிகள் மிக மேலோட்டமாகவே எடுக்கப்பட்டுள்ளன. அதேபோல், மக்களின் பொருளாதார வாழ்நிலை, இலங்கையின் பொருளாதார நெருக்கடிகள், பண்பாட்டுச் சிதைவுகள் போன்ற காரியங்கள் தனி முக்கியத்துவம் கொடுத்து விவாதப்பொருள் ஆக்கப்படவில்லை. இவ் ஆய்வைத் தொடரவேண்டுமென்பதே ஆசிரியரின் அவாவாகும். அதற்கான உள்ளடக்கக் கட்டுமானம் நான்கு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளது.

வாசகர்களின் வரவேற்பைப் பொறுத்தே இது அமையும். பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்நூலின் ஆக்கத்துக்கான அனைத்து வேலைகளும் நான்கு சுவர்களுக்குள்ளே சுமார் பத்துப் பேருடைய ஒத்துழைப்புடனேயே நடைபெற்றன. இதற்காக எடுக்கப்பட்ட காலம் 14 மாதங்களாகும். அந்தப் பத்துப்பேரின் பொறுப்புணர்ச்சிக்கும் ஒத்துழைப்பு மனப்பான்மைக்கும், வழங்கிய ஒத்துழைப்புகளுக்கும் எனது நன்றிகள். காலம் வரும்போது அவர்கள் யாரென்பது தெரிய வரும்.

- *கைமண்*

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| 1 யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள்கள் | 1 |
| 2. யுத்தகாலப் பேரழிவுகள் | 29 |
| 3.அ. மகிந்த சிந்தனையும் பொருளாதாரக் கட்டுமானமும் | 39 |
| 3.ஆ. இராணுவக் கட்டுமானமும் மகிந்த சிந்தனையும் | 64 |
| 3.இ மகிந்த சிந்தனையும் இராஜதந்திரமும் | 298 |
| பின்னிணைப்புகள்: | 315 |

1. ஊக்குவிப்பும் தகவல்களும் தந்த நூல்கள்.
2. இணையத்தளக் கட்டுரைகளும், இணையத்தளங்களும்.

# 1. யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள்கள்

1அ. வள அபகரிப்பு:

1.அ.1. நில ஆக்கிரமிப்பு

1. தமிழ் வன்னியில்...

2 யாழ் குடாநாட்டில்...

3. திருகோணமலையில்...

1.அ.2. கடலை ஆட்சி கொள்ளல்

1. இலங்கையின் கடல் வளம்-அறிமுகம்

2. மகிந்த சிந்தனையின் கடல் வளப் பிரகடனம்

3. கடல் வளம்-யுத்தம்-நோர்வே-மகிந்த

4. இந்தியாவுடனான கடல்சார் சொத்து இழுபறி

அ.அனைத்துலகக் கடற் பரப்பில்

ஆ. ஆழமற்ற கடலின் ஆழமான பாதுகாப்பு

5. ஆழ்கடலில் ஆழமற்ற பாதுகாப்பு (*Shallow defence*)

## யுத்தத்தின் குறிக்கோள்

*“பல்வேறு அரசியல் குழுக்களிடையே நடக்கும் போராட்டங்களின் இறுதிக் குறிக்கோள் செல்வங்களையும், வளங்களையும் யார் யாருக்கு எந்தெந்தளவில் பகிர்ந்தளிப்பது என்பதுதான். இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்கள் செல்வங்களையும் வளங்களையும் தம் கட்டுப்பாட்டின்கீழ் கொணர்ந்து அவற்றை வெவ்வேறு அளவுகளில் துய்ப்பதற்குத் தமது ஆதரவாளர்களுக்கு அனுமதியும் ஆதரவும் வழங்குகின்றனர்” – (எஸ்.வி.இராஜதுரை).*

1980களின் முற்பகுதியில் தொடங்கி 2009 மே மாதம் 18ம் திகதி முடிவடைந்த யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள்கள் என்று கூறுவது, இந்த யுத்தத்திற்கு இறுதிக் குறிக்கோள் என்றொன்று உண்டு என்பதைச் சொல்லாமல் சொல்கிறது. யுத்தத்தைத் தொடக்கி வைத்த சிங்கள-பௌத்த பேரகங்காரவாதிகளே அதை முடித்தும் வைத்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரையும் அவரின் சகாக்களையும் அரசியல் போர்க்களத்திலிருந்து (பாராளுமன்றத்திலிருந்து) துரத்தியடிப்பதன் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த யுத்தம், பிரபாகரனையும் அவரின் சகாக்களையும் இராணுவப் போர்க்களத்திலிருந்து துரத்தியடிப்பதில் முடிவடைந்துள்ளது. எல்லாளன்-துட்டகைமுனு மோதலிலிருந்து ஆரம்பித்த இந்த யுத்தத்தின் ஒரு அத்தியாயம் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. இவ்விதம் கூறுவது நாமல்ல, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவேயாகும்.

சிங்கள-பௌத்த பேரகங்காரவாதிகளின் கணிப்பீட்டின்படி யுத்தத்தின் இறுதிக் குறிக்கோள் இன்னமும் நிறைவடையவில்லை. அது எப்போது நிறைவடையும் எனக் கருதுகிறார்கள்? “அரசு தேசத்தின் அச்சுப்பிரதியாக இருக்க வேண்டும். தேசம் இனத்தின் அச்சுப்பிரதியாக இருக்கவேண்டும்” என்ற பாசிசக் கோட்பாடு நடைமுறைக்கு வரும்வரை யுத்தம் தொடரும். ஆகவே துட்டகைமுனுக்கள் மீண்டும் மீண்டும் தோன்ற வேண்டும். இறுதிக் குறிக்கோள்வரை யுத்தம் தொடர வேண்டும் என்பதே சிங்கள-பௌத்த பேரகங்காரவாதிகளின் எதிர்பார்ப்பாகும்.

பாசிசக் கற்பனைகள் பற்றிய விவாதத்துள் மூழ்கி, அல்லது அந்த எதிர்பார்ப்புகள் பற்றிய அச்சத்தை மக்கள் மத்தியில் வளர்த்து எம்மையும் கெடுத்துக் கொள்ளாமல் விடுவதற்காக, பேரகங்காரவாதிகளின் இறுதிக் குறிக்கோள்கள் பற்றிய விவாதத்தைத் தவிர்த்து யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள்கள் என்னவாக இருந்தன என்பதை ஆராய்வோம்.

## 1.அ.) **வள அபகரிப்பு**

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்குச் சொந்தமான நில வளம், நீர் வளம், கடல் வளம் ஆகியவற்றை அபகரிப்பது.

### 1.அ.1.) **நில ஆக்கிரமிப்பு**

### 1. **தமிழ் வன்னியில்...**

முள்வேலி முகாம்கள் “மகிந்த சிந்தனை”யை நிறைவேற்றுவதற்கான பூகோளப் பரப்பைத் தங்குதடையின்றித் திறந்து விட்டுள்ளதுதான் பேரழிவு யுத்தத்தினது வெற்றியின் சிறப்பாகும். வன்னிப் பிரதேச நிலங்களை யார் யாருக்கு, என்னென்ன வழிவகைகளில் மறுபங்கீடு செய்வது என்பதை எந்தக் குழப்பமுமின்றி செயல்படுத்துவதற்கு இம் முள்வேலி முகாம்கள் பெரும் துணையாகவிருந்தன. அது இன்றும் தொடர்கிறது.

வன்னிப்பகுதிகளில் வாழும் மக்களில் மிகப் பெரும்பான்மையினருக்கு சொந்த நிலம் இல்லை. அதாவது, நிலத்தில் தனிநபர் உரிமையை சட்டரீதியாக நிலைநாட்டும் காணி உறுதிப் பத்திரம் அவர்களிடமில்லை. அவர்களிடம் இருப்பதெல்லாம் அரச குத்தகைக் காணிகளேயாகும். பல நிபந்தனைகளுடன் வழங்கப்பட்ட இக் காணிகளை திருப்பி எடுத்துக் கொள்ளும் உரிமை அரசுக்கு உண்டு. சொந்த உறுதிக் காணியுள்ள விவசாயிகள் (எண்ணிக்கையில் சிறுபான்மையினர்) 19ம் நூற்றாண்டிற்கு முன்னைய வன்னிய மூத்தகுடிகளின் வம்சாவளியினராகும். இவர்களே பாரம்பரிய வன்னியராகும். ஆனால் தற்போது இவர்களின் பயன்பாட்டிலுள்ள நிலத்தில் உறுதிக்காணி மிகச் சிறிய பகுதியேயாகும். மீதமான நிலங்கள் அரச குத்தகைக் காணிகளாகும்.

அதே நேரத்தில் தமிழ்த் தேசியத் தலைவர்களுக்கு வேண்டிய யாழ்ப்பாணத்து உயர் அரச அதிகாரிகளுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் வன்னிக் காடுகளில் ஒருவருக்கு 100 ஏக்கருக்கு குறையாத குளநீர்ப்பாசன வளமான நிலங்கள் உள்ளன. இவற்றில் பலகாணிகள் குளத்தையும் அதனுடன் கூடிய நீர்ப்பாசன நிலத்தையும் உள்ளடக்கியதாகும். இக் காணிகள் ‘ஜப்பான் உறுதி’ என அழைக்கப்படுகின்றது. புதிய நில உடைமை முறையின் மூலம் யு.என்பி அரசாங்கத்தால் தமது ‘தமிழ் அரசு’ நண்பர்களுக்கு 1960களில் பரிசாக வழங்கப்பட்டமையாகும். இப்பணக்கார விவசாயிகளின் எண்ணிக்கை மிகச் சில நூறுகளைத் தாண்டாது. ஆனால் இவர்களிடம் உள்ள காணிகளோ பல ஆயிரம் ஏக்கர்களாகும். இவை அரச

குத்தகைக் காணிகளல்ல, உறுதிக் காணிகளாகும். இதுதான் வன்னியின் முதலாவது நிலப்பறிப்பாகும். வன்னியர்களிடம் இருந்து பறித்து யாழ் மேட்டுக்குடியினரிடம் கொடுத்தது யூ.என்.பி. ஆகும்.

வன்னியின் உழைக்கும் விவசாயிகளில் அதிகப் பெரும்பான்மையினரின் நிலம் அரச குத்தகை நிலங்களேயாகும். இந் நிலங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் உரிமையும், அவற்றை மறுபங்கீடு செய்யும் உரிமையும் ஸ்ரீலங்கா அரசுக்கு உண்டு. அரசின் இவ்வித நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் சிரமம்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக பத்தாயிரக்கணக்கான ஏக்கர் மலைப்பகுதி நிலம் பிரித்தானிய காலனியல் ஆட்சிக்குத் தொடர்ந்து தேவைப்பட்டது. இதனால் மலைப்பகுதி நிலங்களை அபகரிப்பதற்காக, தனியுரிமைக்கான ஆவண ஆதாரங்கள் எதுவும் இல்லாத இலங்கைத் தீவின் அனைத்து நிலங்களையும் அரசுடமை ஆக்கினார்கள். இவ்விதம் அரசுடமை ஆக்கப்பட்ட மலையக நிலங்களில் கணிசமான ஏக்கர்கள் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைக்காக அந்நிய முதலாளிகளுக்கு வழங்கப்பட்டன. இவ்விதமாக, அன்று மலைநாடு பிரித்தானியர்களின் காலனியானது. நேற்று இச் சட்டத்தைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தின் சிலபகுதிகள் சிங்களவர்களின் காலனியானது. இன்று அதே சட்டத்தைப் பயன்படுத்தி வன்னி காலனியாகிறது.

பிரதேச விரிவாக்கத்துடன் இணைந்த மறுகாலனியாக்கத்திற்கான பொருளாதாரத் தேடலிலும் ஸ்ரீலங்கா அரசு முன்னேற்றம் கண்டு வருகின்றது. பிரதேச விரிவாக்கமென்ற இவ் இறுதி நோக்கத்தின் ஒரு பகுதியான நில அபகரிப்பு நிறைவேறும்வரை முள்வேலிகள் திறக்கப்பட மாட்டாது என்று கூறமுடியாது. அவை உருமாற்றமடையலாம். ஆனால் ஸ்ரீலங்கா அரசு சுதந்திரமாக நில அளவுகளை மேற்கொண்டு நிலப் பகிர்வுகளை முடிவுக்குக் கொண்டு வரும்வரை தடுக்கி விழுந்த இடங்களிலெல்லாம் இராணுவ முகாம்கள் இருக்கும் நிலையே தொடரும். பல்வேறு விதமான அழுத்தங்களின் காரணத்தால் முள்வேலி முகாம்கள் பரவலாக்கப்பட்டு, அவற்றின் வடிவங்கள் மாற்றப்பட்டும் வருகின்றன. முள்வேலிகள் இல்லாத சிறு சிறு முகாம்களே அப்புதிய வடிவங்களாகும். இடம் பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையினர் தமது சொந்த இடங்களில் குடியேற்றப்படவில்லை. மாறாக, உருமறைப்புச் செய்யப்பட்ட முள்வேலி முகாம்களிலேயே தங்கவை க்கப்பட்டுள்ளார்கள். இனியும் இதுவே நடக்கும். வவுனியா முகாமில் வாழும் மக்களில் முப்பது விழுக்காட்டினரின் நிலம் ஏற்கனவே அபகரிக்கப்பட்டு விட்டதாக ஒரு தகவல். இக்கொடுமையைப் பொறுக்க முடியாத ஜே.வி.பி.

தலைவரின் பாராளுமன்ற உரையை TamilNet இவ்வாறு குறிப்பிடுகிறது.

*''விவாதத்தில் பங்குபற்றிய ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் திரு. அநுரா குமார திசநாயக்க, இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் முடியும்வரை வடக்கு கிழக்கு நிலங்களின் விநியோகத்தை நிறுத்தி வைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.''*

அவர் மேலும் கூறியதாவது, *''இடம் பெயர்ந்த மக்கள் அவரவர்களின் சொந்த நிலத்தில் குடியேற்றப்பட வேண்டுமானால் நில விநியோகத்தையும் நில விற்பனையையும் உடனடியாக நிறுத்தவேண்டும். யுத்தத்திற்குப் பின்னர் தோன்றிய முதலீட்டு வாய்ப்புகளின் காரணத்தால், வர்த்தக வட்டாரங்களில் இன்று நடைபெறும் ஆலோசனைகள் வடக்குக் கிழக்கில் நிலம் வாங்குவது தொடர்பானதாகவே உள்ளன. பங்குச் சந்தையிலோ அல்லது வேறு துறைகளிலோ முதலீடு செய்வதையும் விட, வடக்குக் கிழக்கில் நிலம் வாங்குவதில் முதலீடு செய்வதே இன்றைய முதலீட்டுப் போக்காக உள்ளது. என்பதையும் சுட்டிக்காட்டினார்''* (TamilNet).

நில விற்பனையையும் நில மறுபங்கீட்டையும் தமிழர்களுக்குப் பாதகமாக நடத்துவதற்காகத்தான் முள்வேலி முகாம்கள் அமைக்கப்பட்டன என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

## 2 யாழ் குடாநாட்டில்...

யாழ் குடாநாட்டில் அரச குத்தகை நில உடமை முறை இல்லை. தனியார் நில உடமை மாத்திரமே உண்டு. மிகப் பெருமளவிலான விவசாய நிலம் வெள்ளாளர் என்ற சாதிப்பிரிவினருக்கே சொந்தமானதாக உள்ளது. இச் சாதிப்பிரிவினரின் மேட்டுக்குடியினர் யாழ் குடாநாட்டிற்கு அப்பாலும் உறுதி நிலங்களுக்கும் அரச குத்தகைக் காணிகளுக்கும் உடமையாளர்களாக உள்ளார்கள். இச் சாதிப்பிரிவின் விவசாயிகளில் அதிக எண்ணிக்கையானோர் வறிய சிறு நிலவுடமை விவசாயிகளேயாகும். வறிய குத்தகை விவசாயிகளும் இதற்குள் அடங்குவர். இதனால் இச்சாதிப் பிரிவினர் அனைவரும் மேட்டுக்குடிகளல்ல. ஆனால் யாழ் குடாநாட்டு மேட்டுக்குடியினரின் ஏகப் பெரும்பான்மையோர் வெள்ளாளரேயாகும். பெரும் நில உடமையாளர்களும், இதே சாதியைச் சேர்ந்த உயர் அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், கல்விமான்கள், பிற அறிவுஜீவிகள், நிதி மூலதன உரிமையாளர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய ஒரு கொத்தணியே அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் யாழ் மேட்டுக்குடியினராகும். "ஆண்ட பரம்பரை"யின் வாரிசுகளும் "யாழ்பட்டினவாத"த்தை மீட்க முனைபவர்களும் இக் கொத்தணியினரேயாகும். வேறு சாதிகளைச் சேர்ந்த

மேட்டுக்குடியினரும் யாழ் குடாநாட்டில் உள்ளனர். ஆனால், இவர்கள் வெள்ளாள மேட்டுக்குடியினர்போல் கொத்தணிகளாகவும் இல்லை. அரசியல் ஆதிக்கம் பெற்றவர்களாகவும் இல்லை.

பொருளாதார மற்றும் பண்பாட்டுக் காரணங்களுக்கான நில விஸ்தரிப்பு யாழ்குடாநாடு தவிர்ந்த பிறபகுதிகளில் மட்டுந்தான் நடைபெறுவதாகவே கருதப்படுகிறது. இதுவரை அப்படித்தான் இருந்தது. ஆனால் இந்தத் தடவை அது யாழ் குடாநாட்டிலும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முள்வேலி முகாம்கள் இல்லை. ஆனால் முள்வேலிகளற்ற முள்வேலி முகாம்கள் 2009க்கு முன்னர் இருந்தே நடைமுறையில் இருந்து வருகின்றன. புதிதாக உருவாக்கப்பட்டும் வருகின்றன. யாழ் குடாநாடு அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் வந்து பல வருடங்களாகியும், அங்கு புதையுண்ட நிலையிலான கண்ணி வெடிகள் எதுவும் இல்லாத நிலையிலும், அவர்கள் ஏன் இன்னும் தமது முன்னைய இடங்களில் குடியிருத்தப்படவில்லை? சிங்களப் பேரினவாதிகளால் இதுவரை நிறைவேற்றப்படாதிருந்த நில விஸ்தரிப்பு இனித்தான் நிறைவேற்றப்படப் போகின்றது. யாழ் குடாநாட்டில் இயல்பான சிங்களக் குடியேற்றங்களோ, அரச சிங்களக் குடியேற்றங்களோ எதுவுமே இல்லை. அதுபோல் மலையகத் தமிழரின் குடியிருப்புகள் அங்கு மருந்துக்குக்கூட இல்லை. கிழக்கு மாகாணத் தமிழ்க் குடும்பங்கள்கூட இல்லை என்பது மேலதிகத் தகவலாகும். புலிகளின் ‘‘தேசியத் தற்பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வால்’’ காலாகாலமாக இருந்து வந்த இஸ்லாமியக் குடியிருப்புகளும் தற்போது இல்லை. இலங்கைத் தீவில் தனது மொழிசார் இனவழித்தூய்மையை (ethnic purity) இழக்காமல் இன்றுவரை இருந்து வரும் ஒரே மாவட்டம் யாழ்ப்பாணம்தான். அதாவது ‘யாழ் பட்டினம்’ இன்னமும் ‘யாழ் பட்டினமாகவே’ தொடர்கிறது. ஆனால், ‘யாழ் பட்டினத்தின் ஆண்ட குடிகளோ’ இலங்கைத்தீவின் மீதமாயிருக்கும் எட்டு மாகாணங்களிலும் குடியேறியுள்ளர்கள். அதுவும் மிகத் துரிதமாக வளர்ந்து வரும் மேற்கு மாகாணத்தில் இன்றும்கூட மிக வளமாக வாழ்ந்தும் வளர்ந்தும் வருகிறார்கள். ‘எனது சட்டைப்பையில் இருக்கும் பணம் (யாழ் பட்டின நிலம்) எனக்கு மாத்திரமே (தமிழீழத்திற்கு) சொந்தமானது. ஆனால் உனது சட்டைப்பையில் இருக்கும் பணமோ (எட்டு மாகாணங்களிலும் உள்ள நிலம்) எல்லோருக்கும் (இலங்கைத் தேசியத்திற்கு) பொதுவானது’ என்பதே ‘யாழ் பட்டினத்’ தேசியமாக உள்ளது. இத் தேசியம் சாத்தியப்படுமா?

சாத்தியப்படும் என்ற நம்பிக்கையை ‘யாழ் பட்டின’ ஆண்ட பரம்பரையினருக்குத் தோற்றுவித்தது. சில நூறு வருடங்களாக ‘யாழ் பட்டின’த்துள் வெற்றிகரமாகக் கோலோச்சி வரும் தேசவழமைச் சட்டமேயாகும். இச் சட்டம், நிலமானது சுதந்திர வர்த்தகப் பண்டமாக

மாறுவதைத் தடை செய்கின்றது. வெள்ளாளர்களே, அதிலும் சில கிளையினரே பரம்பரையாக நில உரிமையாளர்களாக இருக்கும் நியதியை இது பேணிப் பாதுகாத்து வருகின்றது. நில உரிமை மறுக்கப்பட்ட பிற சாதியினரையும் கிளையினரையும் வன்னிப்பகுதியை நோக்கித் துரத்தி வருகிறது. முதலாளித்துவ ஜனநாயக மற்றும் நவீன தாராளவாதிகளால் கூட ஏற்றுக்கொள்ளப்பட முடியாத இந்த சாதியமைப்புப் பாதுகாப்புத் தேசவழமைச் சட்டத்தை தமது ஆட்சிக் காலத்தின்போது புலிகள் முறைத்தும் கூடப் பார்க்கவில்லை. கொள்கையளவில் கூட இதை எதிர்க்கவில்லை. புலிகளின் நிறைவேற்று அதிகாரம் மிக்க பொறுப்பாளர்களில் அனைவரும் வெள்ளாளர் அல்லாதவர்களாக இருந்ததனாலும், புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியற் தலைவர்களில் பெரும்பான்மையோர் வெள்ளாளர்களாக இருந்ததனாலும், இவர்கள் வெள்ளாள ஆதிக்கத்திற்கு எதிரானவர்கள் எனக் கருதப்பட்டது. இவ்விதம் நடந்தவர்கள் இதைக் கண்டுகொள்ளாமல் விட்டது ஏன்?

அவர்களால் கண்டுகொள்ளப்படாது விடப்பட்டவை இது மாத்திரமல்ல. நிலம் தொடர்பான வேறு விவகாரங்களும் உண்டு. முன் சொன்ன, ‘ஜப்பான் உறுதிக் காணி’ விவகாரத்தையும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை. அது மட்டுமல்ல, குளநீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், நீர்ப்பாசன வசதியுள்ள 5 ஏக்கருக்கு அதிகமாகாத காணி விவசாயிகளுக்கு அரச குத்தகையாக வழங்கப்பட்டன. ஆனால், முன் சொன்ன யாழ் மேட்டுக்குடியினரில் சிலர் சில வருடங்களுக்குள் ஏதோவொரு வழியில் சில பத்து ஏக்கர்களுக்குக் குறையாத வயல் நிலங்களுக்கு பயன்பாட்டுரிமை உள்ளவர்களானார்கள். யுத்தகாலத்தின்போது இவர்கள் புலம் பெயர்ந்து சென்றுவிட்டார்கள். ஆனால் இன்னமும் அவர்கள் பெயரிலேயே பயன்பாட்டுரிமையுள்ளது. புலிகளின் ஆட்சியின்போது அக்காணிகளில் புலிகள் பயிர் செய்தார்கள் அல்லது தம்மவர்களுக்கு குத்தகைக்குக் கொடுத்தார்கள். பயன்பாட்டுரிமையாளருக்கு குத்தகைப் பணம் எதுவும் கொடுபடவில்லை. இது நல்லதுதான். அதே நேரம் அவரின் உடமை உரிமையில் கை வைக்கவில்லை.

அதே நேரத்தில், யாழ் குடாநாட்டில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களின் குடியிருப்பு நில உடமை உரிமையைப் பறிப்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளார்கள். முஸ்லிம்களை வெளியேற்றியதன் பின்னர் அந்நிலங்களை வேறு எவருக்கும் கொடுக்கவில்லை. அவற்றைத் தமது தேவைகளுக்காக வைத்துக்கொள்ளும் எண்ணம் இருந்திருக்கலாம்.

யாழ் மேட்டுக்குடியினரின் நில ஆதிக்கத்தையும், நில உடமையில் நிலவிய சாதியத் தூய்மையையும் காரணங்காட்டி பௌத்த-சிங்களப் பேரினவாதம் யாழ் குடாநாட்டினுள் நுழைய முற்படுகின்றது. பௌத்த மதபீடங்களைக்கூட

சாதி அடிப்படையில் பிரித்து வைத்துள்ள தீண்டப்படாதவர்களாக கருதப்படும் 'றொடியாஸ்' போன்ற சாதிப் பிரிவுகளையும், வேடர்களையும் இன்னமும் விளிம்பு நிலையில் வைத்துள்ள 'உடறட்ட' (மலைநாட்டு) பௌத்த சிங்கள 'கொவிகம' சாதியைத் தவிர்ந்த பிற சாதியினர் அரசியல் அதிகாரத்துக்கு வர முடியாத சமூகக் கட்டமைப்பைக் கொண்டுள்ள (ஆர். பிரேமதாசா விதிவிலக்கு. ஜே.வி.பியை அடக்கியது போன்ற எதிர்பாராத சில அரசியற் சூழல் வாய்ப்பாக அமைந்தது) 'ராஜகாரிய' (அரச கருமம்) என்ற மரபுவழி உழைப்புச் சுரண்டல் முறை பௌத்த மதபீடங்களால் இன்னமும் பயன்படுத்தப்படுவதை அனுமத்தித்துள்ள சிங்கள பௌத்த பேரினவாதம் என்ற ஓநாய், தேசவழமைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட அடிமை குடிமை என்ற ஆடுகளுக்காக அழத் தொடங்கியுள்ளது. தேசவழமையை பலவீனப்படுத்தக்கூடிய முறையில் யாழ் குடாநாட்டினுள் குடியிருப்புகளை அமைக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கி உள்ளது.

## 2. திருகோணமலையில்...

'மகிந்தவும் இராணுவக் கட்டுமானமும்' என்ற பகுதியிலுள்ள 'இந்திய எதிர்ப்பாளர்களுக்கா?' என்ற தலைப்பின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலான நில அபகரிப்புப் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.அ.2) கடலை ஆட்சி கொள்ளல்

இப்பிரதேச விரிவாக்கம் விவசாய நிலங்களை மாத்திரம் மையமாகக் கொண்டதல்ல. கடல் வளங்களையும், நிலக்கீழ் வளங்களையும், பிற இயற்கை வளங்களையும் சிங்கள மயப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

### 1) இலங்கையின் கடல் வளம்-அறிமுகம்

கடலில் உள்ள தீவுகள், குன்றுகள் ஆகியவற்றின் அடிப்பரப்பும், படுகைகளும் ஆயிரக்கணக்கான நூற்றாண்டுகளுக்கு வேண்டிய கனிம வளத்தைத் தரக்கூடியவை. அவற்றைப் பேரளவில் அடுத்த நூற்றாண்டிற்குப் பயன்படுத்தலாம் என்ற நிலை வரும் என்பது கடலியல் அறிஞர் முடிவாகும்.

இலங்கைத் தீவு சுமார் 1,800 கி.மீ. நீளக் கடற்கரையைக் கொண்டது. 31,250 சதுர கி.மீ. அளவுக்கு கண்டத் திட்டையும் கொண்டது. இலங்கையின் மக்கள் தொகையில் சுமார் 54.3 சதவீதம் பேர் கடற்கரை மாவட்டங்களில் வசிக்கிறார்கள். கொழும்பிற்குச் சற்று வடக்கேயிருந்து காலிவரையிலான

தென்மேற்குக் கடற்கரை மாவட்டங்கள் இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 15 சதவீதத்தையே உள்ளடக்கியவை. ஆனால் நாட்டின் 40 சதவீதம் பேர் இந்தப் பகுதிகளில் தான் வசிக்கிறார்கள். இலங்கையின் கடற்கரைப் பகுதியானது நாட்டின் மொத்த நிலப்பகுதியில் 24 சதவீதம் தான். ஆனால் வருடாந்தர மீன் உற்பத்தியில் 60 சதவீதம் இங்கிருந்துதான் கிடைக்கிறது. இலங்கையின் கடற்கரைப் பகுதியைப் பொறுத்தவரை மணற்பாங்கான கடற்கரைகள், காயல்கள், சுரபுன்னைக் காடுகள், கடற்கரையோர சதுப்பு நிலங்கள் எனப் பல்வேறு விதமான நிலப்பகுதிகளை உள்ளடக்கியது. மிருகங்களிடமிருந்து கிடைக்கும் புரதங்களில் 65 சதவீதமும், மொத்தப் புரதத்தில் 13 சதவீதமும் கடல் மீன்களிடமிருந்துதான் கிடைக்கின்றன. (கச்சதீவும் இந்திய மீனவரும், ப.31)

சமீப ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட இலங்கைக்கு உரித்தான கடல் அடிவளம் அளப்பரியதாகும். இவ் வளம் சிறிய நாடான இலங்கையின் தேவையையும் பூர்த்தி செய்து ஏற்றுமதிக்கான வளமாகவும் உள்ளது. 19ம் நூற்றாண்டில் இலங்கை பெருந்தோட்டப் பயிர் வளத்தைக் கண்டு பிடித்தது. 20ம் நூற்றாண்டில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வீட்டுப் பணியாளர்களாகவும், சுதந்திரப் பொருளாதார வலயத்துள் அரை-கொத்தடிமைகளாகவும் பணிபுரியும் பெண் மனித வளத்தை உருவாக்கியது. 21ம் நூற்றாண்டில் மட்டற்ற எண்ணை எரிவாயு வளத்தைக் கண்டு பிடித்துள்ளது. இம்மூன்றும் சேர்ந்து பெருமளவு அந்நியச் செலவாணியை ஸ்ரீலங்கா அரசுக்கு ஈட்டித் தரவுள்ளது. இயல்பாக அமைந்த சுற்றுலாத்துறை வருமானம் ‘போனஸ்’ அந்நியச் செலவாணியாகும்.

எண்ணை வளத்தின் ஒரு சிறு பகுதியின் இருப்புப் பற்றிய தகவல்கள் 1970களிலேயே கண்டறியப்பட்டுவிட்டன. ஆனால் யுத்தத்தின் காரணத்தால் எண்ணை அகழ்வுகள் தடைப்பட்டிருந்தன. தற்போது முன்னர் இருந்ததைவிட புதிய வள அமைவிடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ‘யுத்தத்தின் வெற்றி’ இவ்வளங்களை பயன்படுத்துவதைச் சாத்தியப்படுத்தியுள்ளது.

பாக்கு நீரிணை ஓரமாக அமைந்துள்ள காவேரித் திடல் (Basin) இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் சொந்தமானதாகும். இத்திடலின் 65 விழுக்காடு இந்தியாவுக்குச் சொந்தமான முற்று முழுப்பொருளாதார வலயத்துள் அமைந்துள்ளது. இங்கு எண்ணை அகழ்வு நடைபெற்று வருகின்றது. மீதமான 35 விழுக்காடு ஸ்ரீலங்காவிற்குச் சொந்தமான பகுதியில் அமைந்துள்ளது. மன்னார் வளைகுடாப்பகுதியிலும் அம்பாந்தோட்டைப் பகுதியிலும் கூட எண்ணை வளம் இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது. மன்னார் வளம் ஏற்கனவே இனங்காணப்பட்டிருந்தது. இவ் ஆய்வை நடத்த ஸ்ரீலங்கா அரசு 65 இலட்சம் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. இலங்கையின்

கரையோரமாக 35,000 சதுர கிலோமீற்றர்களுக்கு எண்ணை வளம் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. ஈரானும் ஐக்கிய அரேபிய எமிசாரும் எண்ணை அகழ்வுக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியுள்ளன. சவூதி அரேபியாவும் ஸ்ரீலங்காவும் இணைந்து எண்ணை அகழ்வில் ஈடுபடுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. மன்னார் திடலில் மீதமாகவுள்ள மூன்று பகுதிகளையும் எண்ணை அகழ்வுக்காக பிற நாடுகளிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னார் திடலில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படும் இந்த மசகெண்ணையைக் கொண்டே இலங்கையின் எரிபொருள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதே ஸ்ரீலங்கா அரசின் நோக்கமாகும். இதற்காக இலங்கையில் உள்ள சபுகஸ்கந்தை எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை விஸ்தரிப்பதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. தற்போதைய எண்ணை உற்பத்திக்கு ஒரு நாளைக்கு 50,000 பீப்பாய்கள் உற்பத்தி செய்வதென இலக்கு வைக்கப்பட்டுள்ளது.


உலகின் பிரதானமானதும் அடிப்படையானதுமான நுகர்வுப் பொருட்களில் ஒன்றான எரிபொருள் வளம் ஸ்ரீலங்கா அரசிடம் தாராளமாக உண்டு. இவ்வளத்திற்காகத்தான் 'நாலாவது ஈழப்போர்' நடந்தது. இவ்வளத்தை அனுபவிக்கும் உரிமைக்கு எந்தத் தடைகளும் வரக்கூடாது என்பதில் அரசும் அதன் நட்பு நாடுகளும் மிக எச்சரிக்கையாக உள்ளன.

அறியப்படாத அல்லது அறிந்துகொள்ள முடியாத இலங்கைக்குச் சொந்தமான மற்றோர் கடல் வளமும் ஸ்ரீலங்காவிற்கு உண்டு. அறிந்துகொள்ள முடியாமைக்கு தொழில் நுட்பப் பிரச்சனைகள் எதுவும் காரணமல்ல. 1974இல் கைச்சாத்திடப்பட்ட கச்சதீவு ஒப்பந்தந்தான் இதற்கான காரணமாகும். இவ் ஒப்பந்தத்தின்படி இந்திய அரசின் முன் அனுமதியின்றி கச்சதீவின் கடற்பரப்பில் எந்த கடல் வள ஆய்விலும் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட முடியாது. அவ்வளங்களைப் பயன்படுத்துவதிலும் இரு நாடுகளும் இணைந்தே செயற்பட முடியும். இதனால் புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட கச்சதீவைச் சுற்றியுள்ள கடல் வளம் இன்னமும் ஆய்வுக்கு உட்படுத்தப்படாமலேயே உள்ளது. இதற்காக இந்தியாவும் ஸ்ரீலங்காவும் தமது வலிமையைப் பரிசோதித்துப் பார்க்கும் முயற்சியில் இறங்குவது எதிர்பார்க்கக்கூடியதே. கச்சதீவை மீட்கும் இயக்கம் இந்திய எண்ணை அகழ்வுக் கம்பனிகளின் தூண்டுதலாக இருக்கலாம்.

## 2) மகிந்த சிந்தனையின் கடல் வளப் பிரகடனம்

“எமது நாட்டைப் போன்று இருபது முப்பது மடங்கு கடற்பரப்பின் உரிமை எமக்கு கிடைக்க வேண்டும் என நான் நம்புகிறேன்.” (மகிந்த ராஜபக்ஷ)

“அவுஸ்ரேலியாவின் New South Wales பல்கலைக் கழகமும், நோர்வே நாட்டின் TGS-NOPEC கொம்பனியினதும், சுவீடன் நாட்டின் Petroscan கொம்பனியினதும் பெற்றோலியம், புவியியல் வல்லுனர்களும் (Geologists) தீவின் மேற்குக்கரைப் படுகையில் ஐதரோகாபன் திரட்டுகள் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். செயற்கைக் கோள் (satellite gravity) ஆய்வுகளும், சுமார் ஆயிரம் கிலோமீற்றர் தூரத்திற்கு நிகழ்ந்த கடல் அடிப்பரப்பு நில வெடிப்புகளால் உருவான வண்டல்கள் பற்றிய ஆய்வுகளும் இதை உறுதி செய்துள்ளன”. (அமைச்சர் பௌசி)




சக்திவலு கேந்திர நிலையம்

“ 2008ம் ஆண்டில் எண்ணெய் விலை மூன்று மடங்கு அதிகரித்ததன் காரணத்தினால் உருவாகிய பொருளாதார அதிர்ச்சி முழு உலகினதும் பொருளாதாரத்தை தீக்கிரையாக்கியது. எண்ணெய் விலை மூன்று மடங்கு அதிகரித்தமையினால் உருவாகிய நெருக்கடி அவ்வாறெனின், எண்ணெய் இல்லாதிருப்பின் எவ்விதத்திலானதொரு நெருக்கடி உருவாகும் என்பதைப்பற்றி எதிர்வு கூறுவதற்கு ஒருவராலும் இயலாது. நாம் பெற்றோலியத்தின்மீது கட்டியெழுப்பப்பட்ட நாகரீகத்தின் உச்சநிலையிலுள்ள தசாப்தத்தினையே கடந்து சென்றுகொண்டிருக்கின்றோம். இன்னும் ஐந்து தசாப்தங்களில்

எண்ணெய் ஒரு சக்தி வளமாக இருக்காது. இப் பின்னணியிலேயே எமக்கே உரித்தான சக்தி வளங்களைக் கண்டுபிடிப்பதற்கு நாம் முற்பட்டிருக்கிறோம். அதன் ஆரம்ப கட்டமாக இக்கண்டத் தடாகத்தின் வண்டல் படிமத்தின் கனத்தின் மூலம் எமது நாட்டிற்குரித்தாக வேண்டிய தேச எல்லையை அளவிட்டு ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன் சமர்ப்பிப்பதற்கு எமது கல்விமான்களால் இயலுமாயிருந்தது. கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதியை கைப்பற்றியிருந்த கடற் புலிகளின் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளமையால் எம்மால் உண்மையிலேயே எமது கடல் எல்லையின் உரிமையை அனுபவிப்பதற்கான பொன்னான வாய்ப்புக் கிட்டியுள்ளது.

எமது நாட்டைப் போன்று இருபது முப்பது மடங்கு கடற்பரப்பின் உரிமை எமக்கு கிடைக்க வேண்டும் என நான் நம்புகிறேன். அதன் அனைத்து வளங்களும் எதிர்காலத்தில் எமது பிள்ளைகளுக்கு உரித்தாகும். அதனை நிறைவேற்றுவதற்கு முடியுமானதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன்.

போர் நிறுத்தம் என்ற போர்வையின் ஊடாக வடக்கு, கிழக்கு என்ற இரு மாகாணங்களையும், கடல் எல்லையினையும் பயங்கரவாதத்திடம் ஒப்படைத்த இரகசிய உடன்படிக்கையின் மூலம் எமது கரையோர மற்றும் கடற் பிரதேசங்களில் எண்ணெய் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளை ரீ.ஜி.எஸ்-நொபெக் என்னும் கம்பனியின் ஊடாக வெளிநாட்டவர்களிடம் கையளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சியினைத் தோற்கடித்து நான் அந்த உடன்படிக்கையினை இரத்துச் செய்தேன். பயங்கரவாதத்திலிருந்தும் சர்வதேச மோசடி வியாபாரிகளின் பிடியிலிருந்தும் விடுவித்து, தேசத்திற்கு உரித்தாக்கப்பட்ட எமது சமுத்திரப் பரப்பை பயன்படுத்தி தேசியப் பொருளாதாரத்தை சக்திவளத்தின் மூலம் போஷிப்பதற்கு இப்போது எம்மால் முடியுமாயுள்ளது.

இவ்வாண்டில் முதலாவது எண்ணெய்க் கிணறை அகழும் பணியை ஆரம்பிப்பேன். எமது எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களையும் அணுசக்தியையும் உற்பத்தி செய்வதற்காக எரிபொருளாக இருக்கின்ற கனிம வளத்தையும் நாட்டுக்குரிய பெறுமதியான சொத்தாக எதிர்வரும் தசாப்தத்தில் தோற்றுவிப்போம். அம்பாந்தோட்டையிலும் சபுகஸ்கந்தையிலும் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அதே நேரத்தில், அதன் மூலம் சர்வதேச எண்ணெய் வர்த்தகத்துக்குத் தேவையான தொழில்நுட்ப அடிப்படை எமக்குக் கிடைக்கும். எமது மின்சார முறைமையை மீண்டும் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படாத வகையில் பாரிய அபிவிருத்திக்கு ஆற்றுப்படுத்தியுள்ளதோடு, எதிர்காலத்தில் எமது எரிபொருளின் மூலம் ஓடுகின்ற வாகனங்களும், உற்பத்தி மூலம் பெறப்படுகின்ற மின்சாரமும் எமக்குக் கிடைக்கும்.


சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால், எமது பிராந்தியத்தில் சக்திவள மைய நிலையமாக எமது தாய்நாடு வளர்ச்சியடையும், அதன் மூலம் இலட்சக்கணக்கானவர்களுக்கு புதிய தொழில்களும் வருமானமும் கிடைக்கும். அதே நேரத்தில் எமது தேசிய வருமானம் எதிர்வரும் 5 ஆண்டுகளில் இரட்டிப்பாகும். இலக்கை நிறைவேற்றிக்கொள்வதற்கு எமக்கு ஆற்றல் கிடைக்கும் என நான் நம்புகின்றேன்." (மகிந்த சிந்தனை, ப15-16)

வாருங்கள்! கடல் வளம் நுகர. (மற்றோர் அழைப்பு.)

அந்நிய முதலீடுகளைக் கவர்வதற்காக 2009, ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடத்தப்பட்ட முதலீட்டு மாநாட்டில் சிபிஎஸ்எல்-இன் (CBSL) கவர்னர் நிவார்ட் கப்ரல் கூறியதாவது, "ஸ்ரீலங்கா மிக விரைவில் தனது வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள மன்னார் குடா நீர்ப்பரப்பினில் எண்ணெய் அகழ்வதற்கான புதிய ஒப்பந்தங்களைக் கோரவுள்ளது. எமது நாடு தனது கடற்பரப்பின் ஒரு பகுதியை (Block) பிரித்தானியாவின் Carim Energy கம்பெனியின் இந்திய அணியான Carim India விற்கு ஏற்கனவே வழங்கி விட்டது. எண்ணெய் அகழ்வு எதிர்காலத்தில் இலங்கையின் மிகப் பெரும் செல்வ வளமாக மாறும். நாம் எமது கதவுகளை 1977களிலேயே திறந்து விட்டோம். ஒரு ஒழுங்கான கால இடைவெளியில் நாம் புதிய புதிய கதவுகளை தொடர்ந்தும் திறந்து வருகிறோம். இப்போதுள்ள வேறுபாடு என்னவென்றால், முன்னர் அது திறந்துதான் இருந்தது. ஆனால் பயத்தின் காரணத்தால் யாரும் வரவில்லை. இப்போது பயப்பட எதுவுமில்லை வரலாம்." (newsrilanka.com2009/09) கடலின் அடிப்பரப்புக் கதவுகளும் முழுவதுமே திறக்கப்படவுள்ளதாக அறிவிப்பதற்காக நடத்தப்பட்ட இந்த மாநாட்டில் 40 தாய்வான் நாட்டு முதலீட்டாளர்கள் பங்கு கொண்டிருந்தார்கள்.

## 3. கடல் வளம் - யுத்தம் - நோர்வே - மகிந்த

ஸ்ரீலங்காவில் காணப்படும் எண்ணெய் வளத்தின் அளவு சுமார் 900 கோடி 'பரல்கள்' எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இது உலகின் மொத்த எண்ணெய் இருப்பின் ஒரு விழுக்காடாகும். (lankaweb.com) "2010ம் வருடத்தில் மன்னார் கடற்படுக்கையில் அகழப்படும் எண்ணையைக் கொண்டு எமது சுத்திகரிக்கப்படாத எண்ணைத் தேவையை நிறைவு செய்து கொள்ள விரும்புகிறோம்." (dailynews.lk) மகிந்த இங்கு குறிப்பிட்ட அந்த ஒப்பந்தம் எது? அதுதான் இலங்கை அரசுக்கும் நோர்வே நாட்டுக்கும் இடையிலானதாகும்.




இலங்கையின் கடற்பரப்பினில் காணப்படும் எண்ணெய் வளத்திற்கும் நான்காவது ஈழப்போருக்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் உண்டெனக் கருதுவதற்கான ஆதாரங்கள் உண்டு.

2001-ம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசு நோர்வே நாட்டைச் சேர்ந்த TGS-NOPEC Geophysical கம்பனியுடன் எண்ணெய் வள ஆய்வு தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது. இவ் ஒப்பந்தங்களின் சரத்துகள் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. 2002, பெப்ரவரி மாதம் இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அப்போதுதான் முன்னைய ஒப்பந்தம்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. இந்த இரண்டாவது ஒப்பந்தம் செய்யப்படுவதற்கு சில நாட்கள் முன்னராகத்தான் (2002 பெப்ரவரி) நோர்வே நாட்டால் தயாரிக்கப்பட்ட ‘ஸ்ரீலங்கா-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம்’ கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில் ஒரு அவசரத்தன்மையும் காட்டப்பட்டது. இவ்வித ஒப்பந்தங்களை சட்டரீதியாகச் சாத்தியப்படுத்தும்

மசோதா ஸ்ரீலங்கா பாரளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமுன்னரேயே ஒப்பந்தம் கைச்சாத்தானது. 2003ம் ஆண்டு ஜுலை மாதம், 27ம் திகதியே இதற்கான மசோதா பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் அதே ஆண்டு செப்ரெம்பர் 3ம் திகதியே அது நிறைவேற்றப்பட்டது. 'பெற்றோலிய வள அபிவிருத்திச் சட்டம் எண் 27' என்பதே அதன் பெயராகும்.

எண்ணெய்க்காகவும் எரிவாயுக்களுக்காகவும் கடலடி நிலத்தை அகழ்வதிலும் அவற்றை வெளிக்கொணர்வதிலும் நோர்வே உலகின் தலையாய நாடாகும். இந்நாடு தனது TGS-NOPEC நிறுவனத்தின் மூலம் மன்னார் குடாக்கடலிலும் தீவின் மேற்குக் கடற்தளத்திலும் காணப்படும் ஐதரோ-கார்பன் படிமங்களின் கனபரிமாணத்தைக் கண்டு கொள்வதற்கான கடலடி கனிமக் குவியல்கள் (Seismic) பற்றிய ஆய்வில் மட்டுந்தான் ஈடுபட்டிருந்தது என்று கூறுவதற்கில்லை. இலங்கையில் இத் தொழில்துறை சார்ந்த கைத்தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதிலும், அவ்வளர்ச்சியைத் தனது நாட்டின் தொழில் துறையுடன் இணைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தது. ஸ்ரீலங்கா-நோர்வே கைத்தொழில் ஒத்துழைப்புத் திட்டத்தினூடாக தொழில் முனைவோர் பிரதிநிதிகள் குழுவொன்றை 2007ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கை வர்த்தக சபை (Sri Lanka chamber of Commerce), நோர்வே நாட்டிற்கு அனுப்பி வைத்தது. இக் குழுவில், பெற்றோலியம் தொடர்பான மூன்று தொழிற்துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பதினான்கு ஸ்ரீலங்கா கம்பனிகள் இடம்பெற்றிருந்தன. அவற்றில் உள்ளடங்கிய பிரதான கம்பனிகள், John Keells Holdings, The Maharaja Organisation (Projects) and Hayleys Advantis ஆகும். இலங்கையில் தமது தொழில்துறைகளை நோர்வேயின் உதவியுடன் வளர்ப்பதுவும், நோர்வேயில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை ஆராய்வதுமே இவ்விஜயத்தில் பங்குகொண்ட கம்பனிகளின் நோக்கங்களாக இருந்தன. கடல் வளம் மிக்க இலங்கையைத் தனது காலனியாகப் பயன்படுத்தும் எண்ணம் கொண்ட நோர்வேயும் இதை ஊக்குவித்தது.

இரு நாடுகளுக்கிடையேயான சமாதானத் தூதராகச் செயற்பட்ட நோர்வே பிரதிநிதி எரிக் சொல்கெய்ம் எண்ணெய் வள ஆய்வு தொழில்முறை நிபுணராகும். இவரும் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் நெருங்கிய நண்பர்கள் என்பதுவும் இங்கு அவதானிக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

TGS-NOPEC-இற்கும் ஸ்ரீலங்கா அரசிற்கும் இடையேயான ஒப்பந்தம் என்னவானது? 2006-ம் ஆண்டு இவ் ஒப்பந்தம் இரத்தாகிறதென மகிந்த ராஜபக்ஷ ஒருதலைப்பட்சமாக அறிவித்தார். ஆய்வின் முடிவுகளை பிரிட்டிஸ் காஸ் (British Gas) எனும் பிரித்தானியக் கம்பனியொன்றுக்கு இருபது இலட்சம் அமெரிக்க டொலருக்கு விற்றதன் மூலம் உடன்பாட்டிற்கு எதிராக அக்கம்பனி நடந்து கொண்டது எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆனால் இச்சம்பவத்திற்கு முன்னால், ஸ்ரீலங்கா அரசு ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக நோர்வே கம்பனி குற்றஞ்சுமத்தி ஸ்ரீலங்கா அரசிடமிருந்து பத்தரை இலட்சம் அமெரிக்க டொலர் இழப்பீட்டுத் தொகையும் பெற்றுக் கொண்டது. அனைத்துலகளவில் ஏலம் கூறாமல் சிற்சில பகுதிகளை இந்தியாவுக்கும் சீனாவுக்கும் எண்ணெய் மற்றும் வாயுக்களை அகழ்ந்தெடுப்பதற்காக நேரடியாகவே கொடுத்ததையே ஒப்பந்த மீறல் என அக்கம்பனி குற்றஞ்சாட்டியது. அது மட்டுமல்ல, ஆய்வு முடிவுகள் கூட, ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவில்லை. ஸ்ரீலங்கா அரசு பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் அவுஸ்ரேலிய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ் உடன்படிக்கையில் ஏற்பட்ட இழுபறி சமாதானப் பேச்சுவார்த்தையின் இழுபறியாக மாறுகிறது. 2006-ம் ஆண்டு ஆவணி மாதம் சிறிலங்கா அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து தான் விலகிக்கொள்வதாக ஒருதலைப்பட்சமாக அறிவிக்கின்றது.

கடல்வள அபகரிப்புக்கும் இந்த யுத்தத்திற்கும் இடையே இருந்த தொடர்பைப் புரிந்துகொள்ள இவ் ஆதாரங்களே போதுமானது.

மேலுமொரு ஆதாரம்: கடல் வள அகழ்வுக்கான ஏல விற்பனவுகள் அனைத்தும் 2007-ம் ஆண்டு ஜுலை மாதத்திற்கு முன்னரேயே செய்யப்படவேண்டுமென்பதே அரசின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் ஒரு பாளத்தை (Block) 3D seismic Surveys ஆய்வுக்கு உள்ளாக்க சுமார் பதினேழு இலட்சம் அமெரிக்க டாலர்கள் தேவைப்படுமென அரசாங்கம் கருதியது. இது சிறியதொரு நாட்டினால் சுமக்க முடியாத பொருளாதரச் சுமையாகும். ஆகவே ஒப்பந்தக்காரர்களே அவ் ஆய்வினைச் செய்யவேண்டி வருமென அரசாங்கம் கருதியது. இதையேற்றுக்கொண்ட USTDA (U.S. Trade and Devolopement Agency) எனும் கம்பனியொன்று ஒப்பந்தக்காரர்களுக்கு அவசியப்படும் ஒழுங்கு விதிகளை வரைவதற்காக ஐந்து இலட்சம் அமெரிக்க டாலர்களை ஸ்ரீலங்கா அரசுக்கு மானியமாக வழங்கியது. *(karainet.org dailymirror.lk dailynews.lk, thesundayleader.lk, Norwegian oil pact halted By Santhush Fernando Courtesy Nation 28-08-2006, lankaweb. com, sundayobserver . lk)*

## 4. இந்தியாவுடனான கடல்சார் சொத்து இழுபறி

### அ. அனைத்துலகக் கடற் பரப்பில்

எந்த நம்பிக்கையில் மகிந்த இவ்விதம் கூறுகிறார்? அதுவும் ஒரு நிச்சயமற்ற கூற்று. அதற்கான காரணம் என்னவெனில், 2009-மே மாதம் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில் மிகப் பெருமளவிற்கு எண்ணெய், கனிமவளங்கள், உலோகங்கள், வாயுப் படிமங்கள் ஆகியவற்றைத் தன்னுள் கொண்டுள்ள சுமார் ஐந்து இலட்சம் சதுர கிலோமீட்டர் கடற் பரப்பை மிக அமைதியாக ஆனாலும் மிகுந்த துணிச்சலுடன் உரிமை கோரியுள்ளது இந்தியா.

இன்னும் சில வாரங்களில் மேலும் இதேயளவு கடல் பரப்பிற்கு உரிமை கோரவுள்ளது. இன்னமும் எல்லைக் கோடுகள் வரையப்படாத இக் கடற் பரப்பில் இதே மாதிரியானதொரு உரிமை கோரலை ஸ்ரீலங்காவும் முன்வைத்துள்ளது. இதனால் இரு கோரிக்கைகளுக்கும் இடையே உராய்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளுண்டு. ஒரு கடலோர நாடு தனக்கே மட்டும் உரித்தான பொருளாதார வலயங்களுக்கும் அப்பால் விரிந்து செல்லும் கடல் பரப்பிலும் உரிமை கோரலாமென்ற உடன்படிக்கையே இவ்வித உரிமைக் கோரிக்கைகளுக்கான காரணமாகும். இது ஐ.நா. சபையால் முன்னின்று உருவாக்கப்பட்டதோர் அனைத்துலக உடன்படிக்கையாகும். இவ் உடன்படிக்கை, ‘கடல் சட்டங்களுக்கான ஐ.நா. சபை உடன்படிக்கை’யென அழைக்கப்படுகிறது. The United Nations Convention on the Law of the Sea -Unclos). இதன்படி அந்நாடு தனது, தனக்கே உரித்தான பொருளாதார வலயத்தின் -exclusive economic zone- எல்லையில் இருந்து 150 மைல் வரை உரிமை கோர அனுமதிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானாலும் இலங்கையாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை உற்று நோக்குவோமானால் அது இந்தியாவுடன் எந்த உராய்வுகளையும் ஏற்படுத்தக் கூடியதானதாக இல்லை. இம்மாத இறுதியில் இந்தியாவால் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிற இரண்டாவது கோரிக்கைதான் இலங்கையின் கோரிக்கையுடன் சிக்கலை ஏற்படுத்தப்போகிறது. இந்தியாவால் உரிமை கோரப்படவுள்ள சில பகுதிகள் ஏற்கனவே ஸ்ரீலங்காவால் உரிமை கோரப்பட்டுள்ளனவாக இருப்பதுதான் இதற்கான காரணமாகும்...

“எமது கடலில் புதைந்துள்ள செல்வங்கள் பற்றிய பொருளாதார மதிப்பீடொன்றை நாம் இதுவரையிலும் செய்ததில்லை. ஆனால் இந்த வள ஆய்வுகள் நாம் எந்தத் துறையைத் தேடவேண்டும் என்பது தொடர்பாக எமக்கு நல்லதோர் பார்வையைத் தந்துள்ளது. உதாரணத்திற்கு, வாயுப்

படிமங்களா அல்லது பிற ஐதரோ கார்பன்களா..." (புவி அறிவியல் அமைப்பின் செயலாளர் Shailesh Naik)

அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் அடுத்ததாக இவ்வித முயற்சியில் ஈடுபடவுள்ள உலகின் மூன்றாவது நாடு இந்தியாவேயாகும். (India's seabed claim may lead to dispute with Sri Lanka by Jacob P. Koshy)

## ஆ. ஆழமற்ற கடலின் ஆழமான பாதுகாப்பு

### 1. கச்சதீவு

### கச்சதீவின் அமைவிடம்

இராமேசுவரத்திலிருந்து 17 கி.மீ. வடகிழக்கில் ஆள் அரவம் இல்லாத உயரம் குறைவான ஒரு குட்டித்தீவுதான் கச்சதீவு. இலங்கையைச் சேர்ந்த சைவப்புலவர் உடுப்பிட்டி கதிர் தணிகாசலம் கச்சதீவு இலங்கை நெடுந்தீவிலிருந்து 18 மைல் தொலைவிலும், இராமேசுவரத்திலிருந்து 12 மைல் தொலைவிலும் உள்ளது என்று நேரில் கண்டு எழுதியுள்ளார். (நமது கச்சதீவு, ப: 19)

இத்தீவு 1974-ம் ஆண்டு இந்தியாவால் இலங்கைக்கு உரித்தாக வழங்கப்பட்டது. இதற்கான உடன்படிக்கையில் 26.06.1974 அன்று புதுடெல்லியில் இந்திரா காந்தியும், 28.06.1974 அன்று கொழும்பு நகரில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரும் கையெழுத்திட்டனர். ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னரேயே இரு நாடுகளுக்கும் இடையில் கச்சதீவு தொடர்பான இழுபறி இருந்துவந்தது.

இரண்டாம் உலகப்போரின்போது இலங்கை அரசால் பீரங்கித் தளமாக கச்சத்தீவு பயன்படுத்தப்பட்ட பின்னர், 1949-ல் இந்தியா தனது கடற்படைப் பயிற்சியை இத்தீவில் மேற்கொள்ளப் போவதாக அறிவித்தது. இப்பயிற்சிக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்த இலங்கை, ஒரு கடிதத்தை இந்திய அரசுக்கு அனுப்பியது. அக்கடிதத்தில், கச்சதீவானது இலங்கைக்குரிய பகுதியென்றும், பயிற்சியை மேற்கொள்வதற்கு இந்தியா முன்கூட்டியே இலங்கையிடம் அனுமதி பெற வேண்டுமெனவும் இலங்கை கூற, அது முதன்முதலாக இந்திய நாடாளுமன்றத்தில் எதிரொலித்தது. பிரிட்டிஸ் இராணுவத்தின் வலுவான தளமாக இலங்கை மாற்றப்பட்டு, அது இந்தியாவுக்கான அச்சுறுத்தலாக மாறியிருந்த காலத்தில் இந்தியா வலுவான முறையில் இலங்கைக்குத் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. (கச்சத்தீவு, ப- 10)

1951-ல் இலங்கைப் பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவுடனும் 1954-ல் இலங்கைப் பிரதமர் ஜான் கொத்தலாவலவுடனும் பண்டித நேரு நடத்திய பேச்சுவார்த்தை, ஒப்பந்தங்களின் மூலம் தமிழர், தமிழ்நாட்டின்மீது போதுமான அக்கறை இந்திய அரசுக்கு இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட இலங்கை அரசு, தமிழக மண்ணான கச்சதீவில் கால் வைக்கத் தயக்கமின்றித் துணிந்தது.

1955-ம் ஆண்டு இலங்கைக் கடற்படை வீரர்கள் கச்சதீவில் இறங்கித் தம் போர்ப் பயிற்சிகளைச் செய்தனர். இந்திய அரசோ 'கண்டிக்கிறோம்' என்று வாயால் கூறியது.

தீவிர எதிர்ப்பு இந்தியாவிடமிருந்து வெளிவராததைக் கண்ட இலங்கை அரசு, இந்தியாவின் கண்டனத்தைப் பொருட்படுத்தாமல் 1956 மார்ச் மாதம் மீண்டும் கச்சதீவில் கடற்படைப் பயிற்சியை மேற்கொண்டது. முன்பு கூறிய கண்டனம் கூட இல்லாமல், 'இரு நாட்டுத் தூதர்கள் கூடிப்பேசும் வரை கச்சத்தீவில் நடத்தும் கடற்படைப் பயிற்சியை ஒத்திப்போடுக' என்று நயமாக இந்திய அரசு கூறியது. 'பயிற்சியை ஒத்தி வைக்கிறோம் ஆனால் கச்சத்தீவு எங்களுடையதே' என்று இலங்கை கூறியது. (சேது சமுத்திரத் திட்டம், ப- 38)

ஸ்ரீலங்கா, இந்தியா, தமிழ்நாடு என்ற மூன்று தரப்பையும் எடுத்துக் கொண்டால், கச்சதீவு விவகாரத்தில் ஸ்ரீலங்காவும் இந்தியாவும் ஒரு பக்கமாகவும் தமிழ்நாடு தனித்து வேறொரு பக்கமாகவும் நிற்கின்றன. தமிழ்நாட்டின் பொதுவான அபிப்பிராயம் இவ் ஒப்பந்தத்திற்கு எதிரானதாகவே உள்ளது. இந்தியத் தேசியத்தை பாதுகாப்பதில் முன்னணி வகிக்கும் கட்சிகளில் ஒன்றான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் கச்சதீவு விவகாரத்தில் தமிழ்நாட்டினது பொது அபிப்பிராயத்துடனேயே தன்னை இனங்காட்டி நிற்கின்றது. கச்சதீவை இலங்கையிடம் ஒப்படைப்பது தொடர்பாக, நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதே தவிர, தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. கச்சதீவு கையளிக்கப்பட்டமைக்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் இன்றுவரை பெறவில்லை. எனவே கச்சதீவு கொடுக்கப்பட்டது உறுதி செய்யப்படவில்லை. கொடுத்தது செல்லாது என செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழக்குத் தொடுத்துள்ளார்கள்.

கச்சதீவு தொடர்பாக தமிழ்நாடு அரசு ஸ்ரீலங்காவுடன் முரண்படுவதற்கான பிரதானமானதும் உடனடியானதுமான காரணம், கச்சதீவைச் சுற்றியுள்ள பரவைக் கடலில் காணப்படும் மீன்வளமேயாகும். இது மீனவர்களின் நலனுடன் தொடர்புபட்டது. இதே மீன்வளம் இலங்கை மீனவர்களுக்கும் உரியதாகும். இலங்கை மீனவர்களுடன் ஒப்பிடும்போது, இந்திய மீனவர்களிடம் மீன்பிடி

உயர் கருவிகளும், தொழில் நுட்பமும், மீனவமும் உண்டு. தமது இப் பலத்தை வைத்துக்கொண்டு அவர்கள் போட்டி போடுகிறார்கள். சட்டரீதியாகத் தமக்குள்ள உரிமைகள் என்ற பலத்தை வைத்துக்கொண்டு இலங்கை மீனவர்கள் போட்டி போடுகிறார்கள். சமாதானமாகத் தீர்க்கவேண்டிய இப்போட்டியைச் சண்டையாக மாற்றும் முயற்சியில் ஸ்ரீலங்கா அரசும், தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகளில் சிலவும் ஈடுபட்டுள்ளன. ஸ்ரீலங்கா அரசின் நோக்கம், இலங்கை மீனவர்களின் நலனை முன்னிறுத்தி பரவைக்கடல் பாதுகாப்பில் தனது கரத்தை ஓங்கச்செய்வதாகும். முன்சொன்ன அரசியல் கட்சிகளின் நோக்கம், இந்திய மீனவர்களின் நலனை முன்னிறுத்தி தமிழ் அடையாள அரசியலை ஓங்கி வளரச் செய்வதாகும். ஆனால் பாதிக்கப்படும் இலங்கை மீனவர்களில் தமிழ் மீனவர்கள்தான் அதிகமானவர்கள் என்பது பொய்யல்ல. மன்னாரிலிருந்து சுழிபுரம் வரையான மீனவர்கள்தான் மிக அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள். இந்திய மீனவர்களை தடுக்கும் முயற்சியில் புலிகளும் ஈடுபட்டதற்கான காரணமும் இதுவேதான். தமிழீழத் தேசியமும் தமிழ்நாட்டுத் தேசியமும் முரண்படும் இடமும் இதுதான். இலங்கை மீனவ அமைப்பினர் தமிழ்நாட்டு மீனவர்களைச் சந்தித்து மீன் வளத்தைப் பகைமைப் போட்டியின்றி பங்கிட்டுக் கொள்வது தொடர்பான இணக்கமான சில முடிவுகளுக்கு வந்தார்கள். அம்முடிவுகள் என்னவானது? சமாதானமாக மட்டுமே தீர்க்கப்படவேண்டிய இப் பிரச்சனையை பகைமையாக வளர்ப்பதால் பயனடையப் போவது நிச்சயமாக இந்திய மீனவர்களல்ல. இந்திய அரசியல் கட்சிகளால் ஓரங்கட்டப்பட்டு வரும் அவர்கள் மேலும் ஓரங்கட்டப்படுவார்கள். ஸ்ரீலங்கா அரசு தனது கடற் பாதுகாப்பைப் பலப்படுத்தும். அரசியல் கட்சிகள் தமது வாக்கு வங்கியைப் பலப்படுத்துவார்கள்.

எவ்விதமோ தற்போது கச்சதீவு இலங்கைக்கே சொந்தமாகிவிட்டது. ஆனால் இன்னும் அதைத் தனது இராணுவக் காவலரணாக மாற்றும் அரசின் முக்கால் நூற்றாண்டுக் கனவு நனவாகவில்லை. இந்திய மத்திய அரசு அதற்குத் தடையாக இருக்கவில்லை. தமிழ்நாட்டரசின் எதிர்ப்பானது முணுமுணுப்பாகவோ, மடல் வரைதல்களாகவோ, வீரதீர மேடைப் பேச்சுகளாகவோ அமைதியாக முடிவடையும் என்பதே ஸ்ரீலங்கா அரசின் கணிப்பீடாகும். 2009 மே வரை, புலிகளே அக்கனவுக்குப் பெரும் தடையாக இருந்தார்கள். இனித்தான் அக் கனவு நனவாக்கப்படவேண்டும். மகிந்த சிந்தனையின் யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள்களில் ஒன்று நிறைவேறியுள்ளது.

## 2. ‘சேது’ கால்வாய்

இதுவும் ஒரு நீடித்த வரலாறுள்ள பிரச்சனையாகும். இந்திய சுதந்திரத்திற்கு முன் பிரிட்டிஷ் அரசுக்கு சேதுகால்வாய் திட்டத்தை நிறைவேற்ற 1860-ல் கமாண்டர் டெய்லர் என்பவர் 50 லட்ச ரூபாயில் மதிப்பீடு தயார் செய்து கொடுத்தார். இதுதான் முதலாவது முயற்சியாகும் அதற்குப்பின்னர் 1945வரை பத்துத்திட்டங்கள் வரையப்பட்டன. ஆனால் எதுவுமே அமுல்ப்படுத்தப்படவில்லை. சுதந்திரத்துக்குப்பின் 1955-ல் மீண்டும் திட்ட வகுப்புகள் ஆரம்பமாகின. இறுதியாக 19.05.2005-ல் மைய அரசு அனுமதி வழங்கிய ரூபாய் 2450 கோடி மதிப்பீட்டில் தயாரித்த திட்டத்தை 2006-ல் திருமதி. சோனியா காந்தி அவர்கள் மதுரையில் தொடங்கி வைத்தார். ஆனால், இதில் 60 சதவீதம் வேலை முடிந்த நிலையில் 2008-ல் உச்சநீதிமன்றம் இடைக்கால தடையாணை வழங்கியதின் காரணமாக வேலை நிறுத்தப்பட்டுள்ளது. மத அடிப்படைவாத ஆட்சேபனையே இத் தடையாணைக்கான காரணமாகும். ஆனால் இதைவிட பல ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மணல் சரிவின் காரணத்தால் இத்திட்டம் நீண்டகாலம் நின்று பிடிக்காது, கால்வாயின் ஆழமின்மையின் காரணத்தால் இது வருமானமில்லாத திட்டமாக அமையும், கடலின் இயற்கைச் சமநிலை எதிர்மறைப் பாதிப்புக்குள்ளாகும் என்பவையே அவ் ஆட்சேபனைகளாகும். இவையெல்லாம் வெளிப்படையான காரணங்களாக இருந்தாலும், மறைமுகமான மற்றோர் காரணிதான் பிரதான தடையாக உள்ளது. அதுதான் இந்திய மத்திய அரசின் நாட்டமின்மையாகும். இந்தியாவின் தென்பகுதிக் கடல் பாதுகாப்புக்கு இக்கால்வாய்த்திட்டம் உதவும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

தமிழகக் கடற்கரையில் இந்தியக் கடற்படை, கடலோர பாதுகாப்புப்படை ஆகியவற்றின் சில முகாம்கள் இருந்தாலும், இன்று அவற்றின் பெரிய கப்பல்கள் வங்கக்கடலில் நங்கூரமிட்டு, சிறு படகுகள் மூலமாகத்தான் பாக் கடலில் கண்காணிப்புச் செய்யப்படுகிறது. மண்டபத்திலிருந்து சிறு கப்பல்கள்கூட மன்னார் வளைகுடா செல்லவேண்டுமானால் இலங்கையைச் சுற்றித்தான் செல்ல வேண்டிய நிலை.

சேது சமுத்திரத்திட்டம் 12 மீற்றர் ஆழத்திற்குப் பாக் கடலுக்கும், மன்னார் வளைகுடாவிற்கும் கடல் வழிப்பாதை அமைக்கப் போவதால் இந்த நிலைமாறி கடற்படையின் பெரிய கப்பல்கள் கூட விரைவாக வங்கக்கடலிலிருந்து இந்துமகா சமுத்திரத்திற்குச் செல்ல முடியும். இதற்கான நேரமும் ஒரு நாள் குறையும் இக்கப்பல்களின் எரிபொருள் செலவும் குறையும்.

எனவே பாக் நீர்சந்தி, பாக் கடல், மன்னார் வளைகுடா பகுதிகளுக்கு

நிறைந்த முழு பாதுகாப்பு, இப்போது கடற்படை கப்பல்கள் செல்ல முடியாத இடங்களுக்குச் சென்றடையவும் வாய்ப்பு, விரைவாக ரோந்துப் பணி, செலவு குறைவு ஆகியவை கடற்படைக்கும், அதன் விளைவாக இந்தியப் பெருநாட்டிற்கும் சேதுச் சமுத்திரத் திட்டத்தால் உடனடியாகக் கிடைக்கப் போகும் பயன்கள். (சேது சமுத்திரத் திட்டம்) இவ்விதம் இருக்கக் கூடியதாக, இந்திய மத்தியரசு இதில் நாட்டம் காட்டவில்லை.

இதற்காக இவ்விதமானதோர் காரணமும் இருக்கிறது. சேது சமுத்திரக் கால்வாய், இந்தியாவின் கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களில் இருந்து வரும் சரக்குப் பெட்டக சேகரக் கப்பல்கள் துரிதமாக கொழும்புத் துறைமுகத்தை அடையவே வழி செய்யும். கொழும்புத் துறைமுகம்தான் இந்தியாவின் சரக்கு பெட்டக சேகரத்தளமாகப் போகிறது என்பதைப் புரிந்து கொண்ட ஸ்ரீ லங்கா அரசு தனது கையாளுதிறனை சர்வதேசத்தரத்தில் உயர்த்திக் கொள்ளும்.. அதற்காக உலகளாவிய அரசியல் பொருளாதார உபாயத்தையும் கடைப்பிடிக்கும். இவ் யுத்தத்தின் வெற்றி அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இன்னோர் காரணத்தையும் ஊகிக்கக் கூடியதாய் உள்ளது. கச்சதீவுக்கும் இக் கால்வாய்க்கும் உள்ள தொடர்பே அதுவாகும். சேது சமுத்திரக்கால்வாய் கடலுக்குள் இந்தியாவின் கடல் ஆதிக்க எல்லைக்குள் வருவதாகவே கூறப்படுகிறது. கால்வாய் இந்தியக் கரைப்பகுதியிலிருந்து 12 கடல் மைலுக்குள் அமைந்துள்ளது. இன்றைய நிலையில் கால்வாய் செல்லும் பகுதி கச்சத்தீவின் வெகு அருகிலேயே சுமார் 5 கடல் மைல்களுக்குள்ளாகவே அமைய வாய்ப்பிருக்கிறதாகக் கருதப்படுகிறது. இது இலங்கையின் கடல் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதியேயாகும். சேது கால்வாயில் தனக்கும் உரிமையுண்டென ஸ்ரீலங்கா அரசு கேட்கமாட்டாது என்பதை நிச்சயப்படுத்தமுடியுமா? சேது கால்வாய்த் திட்டம் இலங்கைக்குச் சாதகமாக மாறுவதற்கான வாய்ப்புகளே அதிகமானதாகவுள்ளது. யுத்தம் இக்கடற்பகுதியை தடையற்ற பிரதேசமாக ஆக்கிக்கொடுத்துள்ளது. இந்திய உதவியுடன் இப்பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வாய்ப்புகளையும் வழங்கியுள்ளது.

## 5. **ஆழ்கடலில் ஆழமற்ற பாதுகாப்பு** (Shallow defence)

புலிகளின் கடற்படை நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா அரசை நிறையவே பலவீனப் படுத்தியும், அச்சுறுத்தியும் உள்ளன என்பதை அரசு ஊடகங்களே ஒத்துகொண்டுள்ளன. பின்வரும் கூற்றுக்கள் அதற்கு சான்று பகர்கின்றன.

த.ஈ.வி.பு-களின் 'கடல் கொள்ளைகள்'

- ஒக்டோபர் 1994-ல் வெற்றிலைக்கேணி கடல் பகுதியில் MV Ocean Trader என்ற கப்பலின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.
- ஜூன் 1995-ல் காங்கேசந்துறைக் கடல் பகுதியில் பகுதியில் MV Sea Dancerr என்ற கப்பலின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. கப்பல் அழிக்கப்பட்டது.
- ஆகஸ்ட் 1995-ல் முல்லைத்தீவுக் கடல் பகுதியில் MV Lanka Mudithaf என்ற கப்பலின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.
- ஆகஸ்ட் 1995-ல் முல்லைத்தீவுக் கடல் பகுதியில் MV Irish Monao என்ற கப்பல் கடத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது.
- ஏப்ரல் 1996-ல் கொழும்பு கடல் பகுதியில் தாக்குதல் தொடுத்தது. முயற்சி முழுமையான வெற்றி அளிக்காவிட்டாலும், மூன்று வெளிநாட்டுக் கப்பல்கள் சேதப்படுத்தப்பட்டன
- ஆகஸ்ட் 1996-ல் முல்லைத்தீவுக் கடல் பகுதியில் பிலிப்பைன்சில் பதிவுசெய்யப்பட்ட MV PrincessWav எனும் கப்பல் புல்மோட்டைத் துறைமுகத்தில் கனிமங்கள் ஏற்றிக் கொண்டிருக்கும்போது கடலுக்குள் வைத்து வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. 15துருப்பினர் கொல்லப்பட்டனர். இப் பொதி சுமக்கும் கப்பல் ஜப்பானுக்குச் சொந்தமானதாகும்.
- ஆகஸ்ட் 1998-ல் முல்லைத்தீவுக் கடல் பகுதியில் வைத்து MV Princess Kash என்ற இந்தியக் கப்பல் கடத்தப்பட்டது. 6000தொன் எடையுள்ள இக் கப்பல் துபாயை அடித்தளமாகக் கொண்டு செயல்படும் Goodwill company க்குச் சொந்தமானதாகும். இதில் யாழ்ப்பாணத்திற்குத் தேவையான உலர் உணவுகள், சிமெண்ட், வாகனங்கள் ஆகியவை இருந்தன.
- ஜூலை 1999-ல் திருகோணமலைத் துறைமுகத்துக்கு அருகாமைக் கடல் பகுதியில் MV NewcoEnduranceat என்ற கப்பல் அழிக்கப்பட்டது.
- செப்ரம்பர் 1999-ல் முல்லைத்தீவு வடக்குக் கடல் பகுதியில் MV Julia என்ற கப்பலுக்கு எதிராக தாக்குதல் நடத்தப்பட்டது
- ஜூன் 2000-ல் பருத்தித்துறைக் கடல் பகுதியில் MV MercsUhana

என்ற கப்பல்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது

- செப்ரம்பர் 2001-ல் பருத்தித்துறை கடல் பகுதியில் MV Pride என்ற கப்பல் அழிக்கப்பட்டது.
- ஒக்டோபர் 2001-ல் MT Dunhinda என்ற கப்பல் தாக்கப்பட்டது.
- மார்ச் 2003-ல் Fu-Yuan என்ற பெயருள்ள சீனக் கப்பல் ஒன்று சிறைபிடிக்கப்பட்டு வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது. அதில் இருந்த சிப்பந்திகள் உட்பட 20பேர் கொல்லப்பட்டனர்.
- டிசம்பர் 2006-ம் ஆண்டு MV Farah III என்ற பெயருள்ள ஜோர்டானியக் கப்பலொன்றைத் தாக்கி அதை சூறையாடினார்கள்.
- ஜனவரி 2007-ல் யாழ்ப்பாணத்திற்கு நிவாரணப் பொருட்கள் ஏற்றிச் சென்ற MV Liverpool. எனும் கப்பலை பருத்தித்துறைக் கடல் பகுதியில் வைத்துத் தாக்கினார்கள். இது ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தகவல் பிரிவால் வெளியிடப்பட்ட தகவலாகும். அதனாலேயே 'கடற்கொள்ளை' எனத் தலைப்பிட்டிருக்கிறார்கள் கடற் கலங்களின் மீதான தாக்குதல்கள் அனைத்தும் இலங்கையின் கடற்பரப்பினில் தான் நடைபெற்றுள்ளது. சர்வதேசக் கடற்பரப்பினிலோ அல்லது பிறநாடுகளின் கடற்பரப்பினிலோ நடைபெறவில்லை. 'தமிழீழ அரசு' தமிழீழக் கடல் பரப்பின் மீதான தனது இறையாண்மையை நிலைநாட்டுவதற்காகவும் ஸ்ரீலங்கா அரசுக்கு பொருளாதார, இராணுவ நெருக்கடிகளைக் கொடுப்பதற்காகவும், எதிரியின் போர்க்கலங்களைப் பறிப்பதற்காகவும் நடத்தப்பட்ட தாக்குதல்களாக இவற்றைக் கருதினால் அவை யுத்த நடவடிக்கைகளாகும். அந்த உரிமை புலிகளுக்கு உண்டு. இத் தாக்குதல்கள் அனைத்தினதும் அரசியல் ஒரே விதமானவையல்ல. இவை அரசியல் ரீதியாக சரியானவையா என்பது விவாதிக்கப்படலாம். ஆனால் இவற்றைக் கடற் கொள்ளையாக சித்தரிப்பது தவறானது.

கண்டுபிடிக்கப்பட்ட புலிகளின் போர்த்தளபாட கப்பல்களின் பட்டியல்

1. 1990 டிசம்பர் மாதம், மலேசியாவின் பெனாங் துறைமுகத்தில் வைத்து MV Sun Birdwas எனும் கப்பல் மலேசிய அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.
2. 1991 நவம்பர் மாதம் காரைக்காலை அண்டிய கடல் பகுதியில் வைத்து MV Tongnovawas எனும் கப்பல் இந்திய கடற் படையால கைப்பற்றப்பட்டது.
3. ஜனவரி 1993-ல் MV Ahatwas எனும் கப்பல் வங்கக் குடாவில் வைத்து பிடிபடாமல் தப்பிச் சென்றது.

4. பெப்ரவரி 1996-ல் MV horizonwas எனும் கப்பல் முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து ஸ்ரீலங்கா கடற் படையினால் அழித்தொழிக்கப்பட்டது.
5. நவம்பர் 1997-ல் முல்லைத்தீவு கடற் பகுதியில் வைத்து MV Fratzescomwas எனும் கப்பல் ஸ்ரீலங்கா கடற் படையினால் அழித்தொழிக்கப்பட்டது.
6. மார்ச் 1998-ல் MV Mariammawas எனும் கப்பல் நிக்கோபார் தீவின் மேற்குக் கடற் பகுதியில் வைத்து பிடிபடாமல் தப்பிச் சென்றது.
7. 1999 மே மாதம் MV Showamaruwas எனும் கப்பல் நிக்கோபார் தீவின் மேற்குக் கடற் பகுதியில் நிற்பது கண்டுகொள்ளப்பட்டது.
8. 2000 செப்ரம்பர் மாதம் Phuket-ல் முழுமை அடையாத குட்டி நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று தாய்லாந்து அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.
9. செப்ரம்பர் 2006-ல், கல்முனைக் கடற் பரப்பில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படை இனந்தெரியாத கடற் கலன் ஒன்றை அழித்தது.
10. பெப்ரவரி 2007-ல் தென் தெய்வேந்திரா முனையில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படை இனந்தெரியாத கடற் கலன் ஒன்றை அழித்தது.
11. மார்ச் 2007-ல், அறுகம் குடாவிற்கருகில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படை இனந்தெரியாத கடற் கலன் ஒன்றை அழித்தது.
12. மே 2007-ல், ஸ்ரீ கிரிஷ்ணாவாஸ் என்ற மிதவைப் படகு த.ஈ.வி.பு களுக்கு வெடிபொருட்கள் கொண்டுசென்று கொண்டிருக்கும் போது மாலதீவுக் கடற்பகுதியில் வைத்து மாலைதீவு தேசியப் பாதுகாப்புப் படையால் மூழ்கடிக்கப்பட்டது. இதுவும் ஸ்ரீலங்கா அரசின் தகவல்களாகும்.

பாதுகாப்புப் பக்கத்தில் கடலின் முக்கியத்துவதைப் புரிந்து கொள்ள, அல்லது அதிபர் மஹிந்த ராஜபக்ஷ (President Mahinda Rajapakse) எதற்காக கடல் மீட்கப்பட்டதையிட்டு இவ்வளவு ஆரப்பரிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள, ஈழப்போர் நான்கின் போது கடலும் கடலிலான மோதல்களும் வகித்த பங்களிப்புகள் பற்றி கடற்படைத் தளபதி அட்மிறல் வசந்த கறனகொடவின் மேற்கோள்களிலிருந்து பார்ப்பதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

“ஈழப் போர் நான்கின் வெற்றி தோல்வியை கடல்தான் தீர்மானிக்கும்”

என, 2006 ஒக்டோபர் மாதம் கடற்புலிகளின் தளபதி சூசை கூறிய கூற்றை ஆதாரங்காட்டும், கறன்னகொட, "ஆம், அது உண்மையிலேயே கடலில் வைத்துத்தான் தீர்மானிக்கப்பட்டது. எமது (கடற்படை) படைநடப்புகள்தான் தீர்மானகரமானதாக இருந்தன...." LTTE யின் பெரும் இராணுவ வியூகத்தைப் பற்றி விளக்கும்போது அவர் கூறியதாவது, "திருகோணமலை கடற்தளத்தையும் துறைமுகத்தையும் நடுநிலைப் படுத்திய பின்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதே அவர்களின் திட்டமாக இருந்தது..........". "எமது கடற்படையானது, 2006-ல், ஒவ்வொன்றும் 12 மணிநேரத்துக்கு மேல் நீடித்த 21 கடல் சண்டைகளில் LTTE யுடன் ஈடுபட்டுள்ளது.......... LTTE யின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட ஸ்ரீலங்கா கடற்படை, 2005-ன் முடிவில் இருந்தே எதிர்தாக்குதலுக்கான திட்டங்களை வரையத் தொடங்கியிருந்தது. நாம் அன்றிலிருந்தே தயாரிப்புகள் செய்யத் தொடங்கியிருந்தோம். LTTE யாழ்ப்பாணத்தின் கட்டுப்பாட்டை தமது கைகளுள் எடுக்க முற்படுகிறார்கள் என்பது எமக்குப் புரிந்து விட்டது. அவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை நாசஞ்செய்ய விரும்புவதையும் அறிந்து கொண்டோம். இதனால் கொழும்புத் துறைமுகமும் தாக்கப் படக்கூடும் என்பதை அனுமானித்துக் கொண்டோம்." என கறனாகொட உறுதிப் படுத்தினார்.

".......எவ்விதமும், LTTE யின் பத்து ஆயுதக் கப்பல்களை அழித்ததுதான் யுத்தத்தின் திருப்பு முனையாக இருந்தது......"

"........ 2006-ன் முற்பகுதியில், ஸ்ரீலங்கா கடற் படை, LTTE யின் 11 மிதவைக் கப்பல்களை (எட்டு சிலாவத்துறைப் பகுதியில், மூன்று முல்லைத்தீவுப் பகுதியில்) அழித்தது. இந்த மிதவைக் கப்பல்கள் ஒவ்வொன்றும் பல மீன்பிடி மிதவைக் கப்பல்களை தம்முடன் இழுத்து வந்தன......"

பல துறைகளில் இருந்து கிடைத்த தகவல்களின்படி எந்த நாட்டுக்கும் சொந்தமில்லாத 'மனித இனத்தின் பொதுப் பயன்பாட்டுப் பகுதி' ("common heritage of mankind,") என அழைக்கப்படும் ஆழ்கடல் பகுதியில் LTTE யின் ஆயுதக் கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன என்பதை ஸ்ரீலங்கா கடற்படை அறிந்துகொண்டது. எப்பெப்போ அவசியம் ஏற்படுகிறதோ அப்பப்போ இக்கப்பல்கள் இப் பகுதியில் இருந்து கிளம்பி இலங்கைக் கடற்கரையில் இருந்து 400 கிலோமீட்டர் தூரத்தில் வந்து நின்று அங்கு வரும் தமது இழுவைக் கப்பல்களில் ஆயுதங்களை ஏற்றி விட்டு தமது பாதுகாப்பான இடத்துக்குத் திரும்பி விடுகின்றன.

2010 செப்ரம்பர் மாதம் புலிகளின் இராணுவ அங்கம் தோற்கடிக்கப்பட்டு 17மாதங்களின் பின்னால் ஸ்ரீலங்காவின் கடற்படைத் துணைத் தளபதி வைஸ் அட்மிறல் டி.எஸ்.ஜி. சமரசிங்க, புலிகளின் கடற்படையால்

மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படக் கூடிய 'அனர்த்தங்கள்' பற்றி குறிப்பிடுகையில்:

"வடக்கு இலங்கையில் உள்ளவர்களும் (தமிழ் மீனவர்கள்) இந்திய மீனவர்களும் (தமிழக மீனவர்கள்) இரகசியமாகத் தகவல்த் தொடர்புகள் எதனையும் மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளாமல் தடுக்கத் தீவிரமாகக் கண்காணிப்பது அவசியமானதாக இருக்கிறது". தமிழ் போராளிகளுடனான போரில் கற்ற பாடங்கள் குறித்து சமரசத்துக்கான கமிஷனிடம் தகவல்களைத் தெரிவித்தபோது இதை அவர் வலியுறுத்தினார்".

"விடுதலைப்புலிகளை அழித்திருந்தாலும் அவர்கள் மீண்டும் புதிய வடிவிலோ பெயரிலோ தங்களைப் புதிப்பித்துக் கொள்ளும் வாய்ப்பை மறுக்க முடியாது. இராணுவரீதியாக விடுதலைப் புலிகளை வெற்றி கொள்வது மிக எளிதாக இருந்ததில்லை".

"கடல் பரப்பினில் அவர்கள் மிகுந்த சாகசக்காரர்களாக இருந்தார்கள். கடற் பரப்பையும் அதில் மீன்பிடிக்க வரும் ஆயிரக்கணக்கான படகுகளையும் கண்காணிப்பது எந்த நாட்டுக் கடற்படைக்கும் சவாலான வேலையே".

"வடக்கு இலங்கையில் உள்ள தமிழ் மீனவர்கள் இந்தியாவின் (தமிழ் நாட்டு) மீனவர்களோடு எளிதில் தொடர்பு கொண்டு விடுவார்கள். அவர்களுடைய பேச்சும் பரிமாற்றமும் கடலில் மீன் பிடித்தலோடு இருக்கும்வரை நமக்கு ஆபத்து இல்லை. ஆனால் கடந்த கால அனுபவங்களை நாம் மறக்கக் கூடாது. விடுதலைப் புலிகள் தங்களுக்கு வேண்டிய எரி பொருள், உணவு தானியங்கள், மருந்து மாத்திரைகள், ஆயுதம் தயாரிப்பதற்கான கருவிகள், வெடிமருந்துகள், வெளிநாடுகளில் ஆயுதத் தரகர்களிடம் இருந்து வாங்கிய நவீன ஆயுதங்கள் ஆகியவற்றைக் கடல் வழியாகத்தான் கடத்தி வந்தார்கள். எனவே கடற் போரில் அவர்களை வெல்வது மிகுந்த சவாலாக இருந்தது.

2002-2004 ஆண்டு காலத்தில் இலங்கை இராணுவத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்ட காலத்தில் கூட வி.பு-கள் இந்தக் கடல் வழியை தங்களுடைய நோக்கத்துக்காக பயன்படுத்துவதை நிறுத்தவேயில்லை. அப்போது நடந்த ஒரு சம்பவத்தை நினைவு கூர்வது அவசியமென்று கருதுகிறேன்.

2003 பெப்ரவரி 6-ம் திகதி இந்திய நாட்டுப் படகொன்று இலங்கையின் கடற்பரப்பினில் வந்து கொண்டிருந்தது. அதில் என்ன இருக்கிறதென்று அறிய விரும்பினோம். வி.புலிகளுக்காக அதில் ஆயுதங்கள் கடத்தி வரப்படுகின்றன என்பதையும் ஊகித்துவிட்டோம். அப்போது இலங்கைக் கண்காணிப்பு

அமைப்பைச் சேர்ந்த வெளிநாட்டவர் ஒருவரை எமது (இலங்கைக் கடற்படை) அதிவிரைவுப் படகில் அழைத்துச் சென்று கொண்டிருந்தோம். அவரையே அந்த இந்தியப் படகிலேறி என்ன இருக்கிறதென பார்க்குமாறு கூறினோம். அதில் ஏறிப்பார்த்த அவர் ஆயுதங்களும் எறி வெடிகுண்டுகளும் இருப்பதைக் கண்டு பிடித்தார். உடனே அந்தப் படகில் இருந்தவர்கள் அவரை மிரட்டி கடலில் குதிக்க வைத்தனர். நாங்கள் அவரை உயிருடன் காப்பாற்றினோம் என்றாலும், எந்தவிதத் தடயமும் எங்களுக்குக் கிடைக்காமல் இருக்க அந்தப் படகையே வெடிவைத்துத் தகர்த்தனர் விடுதலைப் புலிகள்''.

''இப்போது வாரந்தோறும் திங்கள், புதன், வியாழக்கிழமைகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்பகுதிக்கு வருகின்றன. அவை அங்கே இருப்பதை வி.புலிகளோ அவர்களுடைய புதிய அவதாரமோ தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளக்கூடும். 2007 டிசம்பர் 26ம் திகதி 14பேருடன் இலங்கைக் கடற்படையின் அதி விரைவு கண்காணிப்புப் படகு தன்னுடைய பணியைச் செய்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ வந்த தற்கொலைப்படை வீரர் ஒருவர் அப் படகின் அடிப்பகுதிக்குச் சென்று தன்னுடைய உடலில் கட்டியிருந்த வெடி குண்டை இயக்கி அந்தப் படகையே வெடிக்க வைத்துத் தகர்த்தார். படகில் இருந்த 14பேரில் ஒருவர் மட்டுமே உயிர் பிழைத்தார''.

''அதனால்தான் இப்போது இந்திய கடல் எல்லையை மிகக் கவனமாகத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். அப்படியும் சட்டவிரோதமான காரியங்கள் எங்கள் கண்ணிலும் சிக்காமல் நடந்து கொண்டுதான் இருக்கின்றன''.

''இலங்கையின் கடற் பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதால் இனி எதிர் காலத்தில் அடிக்கடி மோதல்கள் நிகழக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சட்டவிரோதமாக மீன் பிடிப்பதில் இந்திய மீனவர்கள் தேர்ச்சிபெற்றவர்களாக இருப்பதால் அவர்களைக் கண்காணிப்பதுவும், பிடிப்பதுவும் பெரிய சவாலாக இருக்கின்றதென கூறியிருக்கிறார் சமர சிங்க. (தினமணி)

கடற்படைத் தளபதியின் இக்கூற்று தாம் இந்திய மீனவர்களை தாக்குவதை நியாயப்படுத்துவதாகவும், இந்திய கடற்படைமீது தமக்கிருக்கும் அவநம்பிக்கையை நாசுக்காக சுட்டிக் காட்டுவதாகவும் உள்ளது.

நிலத்துக்கு அடுத்ததாக கடலைக் காலனிகொள்வதற்கு பாதுகாப்புக் காரணிகளும் உண்டென்பதை இவரின் கூற்று எடுத்துக் காட்டுகிறது. கடற்கொள்ளைக்கும் விடுதலைப் புலிகளின் கடற்படைக்கும் தொடர்புகள் இருந்ததா? அது இன்னமும் நீடிக்கிறதா? அல்லது தாம் மீண்டும்

உயிர்பெற்றெழ கடற்கொள்ளையருடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார்களா? என்ற சந்தேகம் ஸ்ரீலங்கா, இந்தியா ஆகிய இரு அரசுகளுக்கும் உண்டு. தமிழீழ நிலப்பரப்பில் இருந்து அழிக்கப்பட்ட புலிகள் தமிழீழ கடற்பரப்பின் எல்லைக்காடுகளில் (சர்வதேசிய கடற்பரப்பில்) வாழ்கிறார்களா என்ற சந்தேகமும் இருக்கக் கூடும். மீனவர்களைக் கண்காணிக்கும் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசின் அதீத எச்சரிக்கையும், இந்தியரசின் அதீதப் பொறுமையும் இச் சந்தேகங்களின் வெளிப்பாடுகளாக இருக்கலாம். புலிகளின் கடற்படையின் அழிவு தொடர்பான எந்த விவகாரங்களும் இதுவரையில் கசிவாகக்கூட வெளிவரவில்லை. அதேபோல் இந்தியாவிடம் பிடிபட்ட கடற்கொள்ளையர் பற்றிய எந்த விபரத்தையும் இதுவரை இந்தியா வெளியிடவில்லை. கடலை காலனிகொள்வதற்கான பாதுகாப்புக் காரணிகள் மேலும் உள்ளன.

இவ் யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள் நில அபகரிப்பும், கடல் அபகரிப்புமேயாகும். நில அபகரிப்பு ஒரு தொடர்கதை.

இதுவரை இவ் அபகரிப்பில் பயன்பாட்டில் இல்லாமலிருந்த அரச காணிகள் மாத்திரமே இடம்பெற்றன. அனால், இத்தடவை தனியாருக்கு வழங்கப்பட்ட அரசு குத்தகைக் காணிகளும் அபகரிக்கப்படுகின்றன.

இதுவரை விவசாயப் பயன்பாட்டிற்காகவே அபகரிப்புகள் நடந்தன. அபகரிக்கப்பட்ட நிலங்கள் சிங்கள விவசாயிகளுக்கே கொடுபட்டன. ஆனால், இத்தடவை தொழில் வளர்ச்சிக்காக, தமிழர்களின் நிலமும், சிங்களவர்களின் நிலமும் பறிக்கப்பட்டு அந்நிய மற்றும் உள்நாட்டுக் கம்பனிகளுக்கு தாரை வார்க்கப்படுகின்றன. இதுதான் நில அபகரிப்பின் புதிய பரிமாணமாகும்.

கடல் அதிகரிப்போ ஒரு புதுக்கதை. நில அபகரிப்பு படிப்படியாகவே நடைபெற்றன. ஆனால் கடல் அபகரிப்போ எடுத்த எடுப்பிலேயே ஒரு உயர்ந்த கட்டத்தை அடைந்துள்ளது. இதற்கு முன்னமும் சிங்கள மீனவர்கள் மீன்பிடிகாலங்களில் தமிழ்ப் பகுதிகளுக்குவந்து வாடியிட்டுத் தங்கும் சம்பவங்கள் நடைபெற்றன. இலங்கையின் மீன் வளத்தை இலங்கை மக்கள் தமக்குள் பங்கிடுதலே இங்கு பிரச்சனையாக இருந்தது. அனால் இப்போதோ இலங்கை முழுமைக்கும் சொந்தமான கடலின் அனைத்து வளங்களும் அந்நியர்களுக்குப் பங்கிடப்பட்டு வருகின்றது.

நில ஆதிக்கத்தையும் விட கடல் ஆதிக்கமே யுத்தத்தின் உடனடிக் குறிக்கோளாக இருந்துள்ளது. இதன் விளைவுதான் புலிகளை முற்றாக அழிப்பதற்கான எத்தனமாகும்.

# 2) யுத்தகாலப் பேரழிவுகள்

2.அ. 2009-மே 18 இற்கு முன்னைய பேரழிவுகள்

2.ஆ. போர்க்களத்திலான அழிவுகள்

2.இ. இறுதிப் போரின் முன்னும் பின்னுமான நிலைமைகள்

## அறிமுகம்

பேரழிவோ, சிற்றழிவோ அதிகார அங்கங்களால் தாம் அதிகாரத்துக்கு வருவதற்காகவோ அல்லது தமது கைகளில் குவிந்திருக்கும் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காகவோ இன்றேல் அதை விரிவுபடுத்துவதற்காகவோ நடத்தப்படும் அனைத்து ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் பட்டியலிடுவது அவசியம். இவ்விதம் பட்டியலிடுவது எல்லோர்க்கும் சாத்தியமில்லை. அதாவது எல்லோராலும் முடியாது. அவர்களின் பக்கச்சார்பு அதற்கு இடந்தரமாட்டாது. UTHR(University Teachers for Human Rights) தவிர்ந்த வேறு எவரும் இதைச் செய்துள்ளதாகத் தெரியவில்லை.

ஒரு அழிவை ஆதரிக்கும் அதேவேளையில் மற்றோர் அழிவைக் கண்டிப்பவர்களாகவே காணப்படுகிறார்கள். மனித உரிமைக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஸ்ரீலங்கா(யாழ்ப்பாணம்)-UTHR-வை முன்மாதிரியாகக் கொள்ள எவர்களும் முன்வருவதாகவும் தெரியவில்லை. நெற்றிக்கண் நக்கீரர்கள் இல்லாத சமூகம் என்ற குறையை நீக்க UTHR-ன் இருப்பு துணை புரிகிறது. இவ் அத்தியாயத்திலும் இந்நூலிலும் நன்றியுடன் அவர்களை முன்மாதிரியாகக் கொள்ள முயற்சிக்கப்பட்டுள்ளது.

அனைத்துலகளவிலும் உள்நாட்டளவிலும் செயல்படும் சில மனித நேய அமைப்புகளும் பக்கச்சார்பின்றி பட்டியலிடும் வேலையைச் செய்துவந்துள்ளார்கள். ஆனால் அவ் ஆவணங்களின் அரசியல் உள்ளடக்கம் பிரதான மார்க்கத்தில் இருந்து திசை திருப்புவதாகவே அமைந்துள்ளது. இவற்றை வர்க்க மற்றும் தேசிய அடக்குமுறையுடன் தொடர்புபட்ட ஒரு அரசியல் விவகாரமாகப் பார்ப்பதற்குப் பதிலாக இவற்றை ஒரு மனிதாபிமானப் பிரச்சனையாகவே பார்க்கின்றனர்.

எதற்காக ஆவணப்படுத்துகிறோம் என்பது இரண்டாவது விவகாரம். மனிதர்கள் தமக்கிடையேயான பேதங்களை மறக்க வேண்டும். நடந்த கசப்பான அனுபவங்களை புறந்தள்ளி வைக்க வேண்டும். தமக்குள் நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதமானதோர் இலங்கையை உருவாக்க வேண்டும். பல நூற்றாண்டு காலமாக வெள்ளையர்களால் அடக்கப்பட்ட கறுப்பர்களும் அடக்கிய வெள்ளையர்களும் இணைந்து தென்னாபிரிக்காவாக, செழிப்பான வாழ்வுக்கான தேசிய அடித்தளத்தை அமைக்கவில்லையா? இது உலக வரலாற்றின் சமீபத்திய சமூக நிகழ்வுகளில் ஒன்றாகும். இவ்விதமானதோர் சமூக நிகழ்வு இலங்கையிலும் ஏற்படக்கூடாதா? ஏற்படுத்த வேண்டாமா? இதுதான் அனைத்துத் தரப்பினரதும் உழைக்கும் மக்களின் நிலைப்பாடாகும்.

ஆனால், அனைத்துத் தரப்பினரும் ஆளும் வர்க்கங்களும் நடுத்தர வர்க்கங்களின் மேலணியும் வேறு விதமாகவே சிந்திக்கின்றனர். இன, மத, சாதிய ஒடுக்குமுறைகளை மீண்டும் மீண்டும் மறு உற்பத்திசெய்து அந்தச் சூட்டில் குளிர்காய்வதே அவர்களின் நோக்கமாகும். தமது அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு இதுதான் அவர்களுக்கான சுலபமான மார்க்கமாக உள்ளது. இதனால் பகைமையென்னும் புண்ணை ஆறாமல் வைத்திருப்பதற்காக அதை மீளவும் மீளவும் நொதியப்பண்ணுவதற்காக பழைய பகைமை நிகழ்வுகளை நினைவு படுத்திக் கொண்டே இருப்பார்கள். இதன் மூலம் ரணசிகிச்சை மூலம் ஆற்றக்கூடிய புண்ணை புற்றுநோய்ப் புண்ணாக மாற்றிவருகிறார்கள். இவர்கள் ஆவணப்படுத்துவதன் நோக்கம் இதுதான். உழைக்கும் மக்களின் நலன் விரும்புவோர் இவற்றை எதற்காக ஆவணப்படுத்த வேண்டும்.

1. குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.
2. குற்றவாளிகளை இரட்சகர்களாகவும் தலைவர்களாகவும் நம்பியிருப்போர்கள் அந்த நம்பிக்கையில் இருந்து விடுபடுவதற்கான ஆதாரங்கள் வேண்டும்.

ஆவணப்படுத்தும் விடயங்களிலும் வேறுபாடுகள் உண்டு.

1. ஏற்கனவே கூறியதுபோல் அனைத்து அழிவுகளும் ஆவணப்படுத்தப்படும்.
2. அழிவுகள் மட்டுமல்ல, இன, மத மற்றும் சாதிய பகைமை உறவுகளுக்கு இடையில் இன்னமும் உயிர்வாழும் சிநேக உறவுகளும் ஆவணப்படுத்தப்படும்.

இவைதான் எதிர்காலத்தின் நம்பிக்கை நட்சத்திரங்களாகும். இவை புள்ளிவிபரம் சம்பந்தப்பட்டவை மாத்திரமல்ல உணர்வுகள் சம்பந்தப்பட்டவையுமாகும். ஆகவே இலக்கியங்களே இதற்குரிய பொருத்தமான ஆவணங்களாகும். ஆனாலும் அரசியல் ரீதியான அமைப்புகள் நேசக்கரம் நீட்டி நின்ற நிகழ்வுகள் இந்நூலில் பட்டியலிடப்பட்டுள்ளன.

1975-க்கும் 2002-க்கும் இடைப்பட்ட காலத்தில், 3,28,000 குடிமக்கள் இறந்துள்ளார்கள். இவர்களில் பலர் தமிழர்கள். 2003-2008 இடைப்பட்ட காலத்தில் 30,000-50,000-க்கும் இடைப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம். அப்படிப் பார்த்தால் இந்த எண்ணிக்கை 4,00,000-ஆகும். 50% தமிழ் மக்கள் அகதிகள் என்பது அதிகாரபூர்வத் தகவலாகும். வேறென்ன ஆதாரம் வேண்டும்?.(bmj.com)

ஸ்ரீலங்காவில் நிலவும் முரண்பாடுதான் ஆசியாவிலேயே அதிக சிக்கல் மிகுந்த முரண்பாடாகும். உலகிலேயே என்று கூறினாலும் தகும். இச் சிக்கல் பல அரசாங்கங்களினதும், கிளர்ச்சிக் குழுக்களினதும், ஊடகங்களினதும், உலகளவிலான சமூகநாட்டமுள்ள பிரஜைகளினதும் கவனத்தை ஈர்த்துள்ளன. கடந்த சுமார் 25வருட காலத்தில் 2006-ம் ஆண்டின் பிற்பகுதிவரை சுமார் 70,000 மக்கள் இறந்துள்ளனர். பல நூறாயிரக்கணக்கான மக்கள் உடல் ஊனப்படுத்தப் பட்டுள்ளார்கள், சுமார் பத்து இலட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். இவ்விதம் இடம் பெயர்ந்தவர்களின் ஒரு பகுதியினர் உள்ளூரிலும் மற்றோர் பகுதியினர் அந்நிய நாடுகளிலும் வாழ்கின்றனர். பல இலட்சக் கணக்கானவர்களின் வீடுகள் முற்றாகவே சேதப்படுத்தப் பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான பொது மற்றும் தனியார் கட்டிடங்கள் முழுமையாக அல்லது பகுதியாக சேதப்படுத்தப்பட்டுள்ளன. பொருள் இழப்புகள், மனித அங்கவீனங்கள், இயற்கை இழப்புகள் ஆகியனவற்றின் பண மற்றும் சமூகப் பெறுமானம் பல இலட்சம் கோடிகளுக்கு வரும்' (Economy of the Conflict Region in Sri Lanka, M. Sarvananthan)

## 2.அ.) **2009-மே 18இற்கு முன்னைய பேரழிவுகள்**

'அனைத்துலகச் சட்ட திட்டம்' (International Law Project) மற்றும் 'அனைத்துலக கல்வி வளர்ச்சி' ஆகிய அமைப்புகள் இணைந்து "ஆயுத மோதல்களும் மனித உரிமைச் சட்டங்களும்- 'ராஜபக்ஷ சகாப்தம்' என்ற தலைப்பிலான தமது அறிக்கையில் 4வது ஈழப் போரின் இறுதிப் போருக்கு முன்னர் நடந்த பேரழிவுகளைப் பின்வருமாறு பட்டியலிட்டுள்ளனர்.

2005-ம் ஒக்டோபர் மாதம், மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிகளைத் தொடர்ந்து நாலரை வருட யுத்த நிறுத்தம் ஒரு முடிவுக்கு வருகிறது. மீளவும் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக, தமிழ் குடிமக்களும், அவர்களுடன் சேர்ந்து சில பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் முஸ்லீம் மக்களும் அகதிகளாக தஞ்சம் கேட்டு அலைந்து திரிய ஆரம்பித்தார்கள். இவ்விதம் திரிபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவருகிறது. மேலெழுந்தவாரியான கணக்கெடுப்பின்படி இந்த உள்ளூர் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை ஏழு இலட்சமாகும். இதில் ஐந்து இலட்சம் மக்கள் முன்னைய கால இராணுவ நடவடிக்கைகளினாலும், 2004 டிசம்பர் 26ல் ஏற்பட்ட பேரிழப்பிற்கு காரணமான சுனாமியினாலும் உருவான உள்ளூர் அகதிகளாகும். ஸ்ரீலங்கா இராணுவத்தால் நடத்தப்பட்ட அனர்த்தங்கள் ஜூன் 2006-ல் இருந்து வேகம் கொண்டதனால் 2006 ஆகஸ்ட மாதம் வரையான காலப்பகுதியில் இரண்டு இலட்சம் பேர் அகதிகளாகினர். புதிதாக இவ்விதம் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை ஸ்ரீலங்காவில் மீதமாய் இருக்கும் தமிழ் மக்களின் பாதித் தொகையிலும்

விட அதிகமானவர்களாகும். ஒக்டோபர் 2005-ல் இருந்து ஆகஸ்ட் 2006-க்கு இடைப்பட்ட காலத்தில் 750 தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 480 பேர் காணாமல் போயுள்ளார்கள். ஆயிரக் கணக்கானவர்கள் காயமடைந்துள்ளார்கள். கோவில்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், அம்புலன்சுகள் தமிழ் மக்கள் அடைக்கலமாக இருக்கும் பொது நிலையங்கள், சந்தைகள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றின் மீது அரசாங்கப் படைகள் குண்டுமாரி பொழிந்தன. இது வேண்டுமென்று நடத்தப் படுவதாகவே இருந்தது. .

ஆகஸ்ட் 6-ல் மூதூரில் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த Action Contre le Faim எனும் அமைப்பின் ஊழியர்கள் 17 பேர் கொல்லப்பட்டனர். ஆகஸ்ட் 14-ல் அல்லைப்பிட்டியில் St. Philip Neri Church இன் மீது நடந்த தாக்குதலில் 15 பேர் இறந்தனர், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆகஸ்ட் 12-ல், பள்ளி-அனாதைவிடுதியின் மீது குண்டு வீசப்பட்டது. பல பெண் சிறார்கள் கொல்லவும் காயப்படுத்தவும் பட்டார்கள். இதை எழுதிக் கொண்டிருக்கும் போது (செப்ரம்பர் 2006) அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில் எனும் இடத்தில், ஶ்ரீலங்கன் இராணுவ பயிற்சி முகாமுக்கு அருகில் இராணுவம் சுட்டு 10 முஸ்லீம்கள் இறந்தார்கள் என்ற தகவல் கிடைத்தது. அப்போது அங்கு தண்ணீர்ப் பிரச்சனைக்காக தமிழரும் சிங்களவரும் தமக்குள் மோதிக் கொண்டிருந்தார்கள். ஶ்ரீலங்கா ஆயுதப்படையினர் அப்பகுதியைவிட்டு அகல வேண்டும் என்று மக்கள் கர்த்தாலும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தினர். முஸ்லீம் காங்கிரசின் தலைவர் இந்தத் தாக்குதலைக் கண்டித்திருந்தார். செப்ரம்பர் 2006-ல் இராணுவம் முஸ்லீம் ஆர்ப்பாட்டக் காரர்களின்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி 14 பேரைக் காயப்படுத்தியது.

இதே காலப்பகுதியில் Action Contre le Faim-ற்கு எதிராக மாத்திரமல்ல, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு (TRO) எதிராகவும், செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளைக்கு எதிராகவும், அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் World Concern அமைப்பின் உள்ளூர் கிளைக்கு எதிராகவும் தாக்குதல் நடாத்தப்பட்டது. அதன் ஊழியர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள் அல்லது கொல்லப்பட்டுள்ளார்கள்.

ஆயுத மோதலின் வளர்ச்சி உருவாக்கிய மானிடப் பேரழிவு பெரும் தொகையான மக்கள் இடம் பெயர்வதுடன் மட்டும் நின்று விடவில்லை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் மீதான கடுமையான தடையாகவும் இருந்தது. இதுவே ஶ்ரீலங்கா அரசுக்கு எதிரான ஒரு போர்க் குற்றத்தை சுமத்துவதுக்குரிய காரணமுமாகின்றது.

## 2.ஆ) **போர்க்களத்திலான அழிவுகள்**

Kenneth Roth,Executive director, human Rights Watch

Yvonne Terlingen (head of Amnesty International Office at the United Nations), Dr. Monica Serrano (Executive Director, Global Centre for the Responsibility to Protect), Gareth Evans,( President and CEO,International Crisis Group) ஆகிய நான்கு அமைப்புகளும் இணைந்து ஜப்பானிய பிரதமந்திரிக்கு பகிரங்கமாக எழுதிய கடிதம் ஒன்றில் 4-வது ஈழப்போரின் இறுதிக் களத்தில் நடந்த பேரழிவுகளைப் பட்டியல் இட்டுள்ளனர். அவை அப்படியே தரப்பட்டுள்ளன. அக் கடிதம் இவ்விதம் ஆரம்பமாகின்றது.

'ஸ்ரீலங்கா விவகாரம் பற்றி ஜப்பானியப் பிரதம மந்திரிக்கான கூட்டுக் கடிதம்' . 11 May 2009

Dear Prime Minister Taro Aso,

தத்தமது நிறுவனத்தின் பேரில் கீழே ஒப்பமிட்டுள்ளவர்களால் அனுப்பப்படும் இக்கடிதத்தின் நோக்கம், ஸ்ரீலங்காவின் வடபகுதியில் மோசமடைந்தும், மடிந்தும் வரும் மனித உரிமைகள் மற்றும் மனிதநேயங்கள் பற்றி உங்கள் கவனத்தை ஈர்ப்பதேயாகும். ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் இறுதிப் போராகக் கருதப்படக்கூடிய இந்த யுத்தத்தில் கட்டவிழ்த்து விடப்படும் அனர்த்தங்களை எதிர்கொள்வதில் ஜப்பான் மேலும் அதிக முன் முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

"துப்பாக்கிச் சூட்டுத் தடுப்பு வலயம்" என அழைக்கப்படும் பகுதியில் பல பத்தாயிரக் கணக்கான குடிமக்கள் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளார்கள். இங்கு ஒரு இரத்த ஆறு ஓடுவதற்கான வாய்ப்பு உண்டு என ஐ.நா.சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் John holmes அவர்கள் கடந்தமாதம் எச்சரித்திருந்தார். கீழே ஒப்பமிட்டுள்ள நான்கு அமைப்புகளும் ஸ்ரீலங்காவிற்கு உள்ளும் புறமும் மிக நெருக்கமாகச் செயல் பட்டுவருகின்றன. எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஜப்பானும் பிற செல்வாக்கு மிக்க தேசங்களும் உடனடியாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது என்றுமில்லாத அளவுக்கு மிக மிக அவசரமானது என்று பிரேரிக்கின்றோம். ஐ.நாவின் தகவலின்படி, 2009 ஜனவரியில் இருந்து இன்றுவரையான காலகட்டத்தில் 6,000-க்கு மேற்பட்ட குடிமக்கள் இவ் வலயத்துள் இறந்துள்ளார்கள். 13,000-க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளார்கள். வெளிப்படையாகப் பேசுவதை முடிந்தவரை தவிர்த்துவரும் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கம் இந்த நிலமை "பேரழிவுக்குக் குறைந்த தோன்றலல்ல" எனக் குறிப்பிட்டுள்ளது.

உடல் ஆரோக்கிய உரிமை, உணவு, தண்ணீர், சுகாதாரம் ஆகியவற்றைப் பெறுவதற்கான உரிமை, ஆகியனவை முறையாக நடைமுறைப் படுத்தப் படுகின்றனவா என்பதை மதிப்பீடு செய்த ஐ.நா சபையின் கண்காணிக்கும் நிபுணர்கள் மே 8-ம் திகதி வெளியிட்ட கூட்டறிக்கையில் இவ் வலயத்துள் "வெளிப்படைத் தன்மையின்மையும் பதில் கூறக் கடமைப்பாடின்மையும் சுதந்திரமாகத் தலை விரித்தாடுகின்றன." எனக் கூறியுள்ளது.

இதே அதிகாரிகளில் ஒருவரான Philip Alston, கூறுவது, ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் இழப்புகளுக்கு பதில் கூறும் கடமைப்பாட்டுத் தன்மை இன்னமும் ஏற்படவில்லை. அதேபோல், பத்திரிகையாளர்களுக்கும் எந்தவகை மனித உரிமைக் கண்காணிப்பாளர்களுக்கும் யுத்த பிரதேசத்தினுள் நுழைய இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. இம் மோதலின் இரு பகுதியினரும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களையும் மனித உயிர்களையும் துச்சமெனக்கருதி நடந்துகொள்வதில் மிருகத்தனமாக நடந்து வருகின்றனர். த.ஈ.வி.பு-கள் மக்களை மனிதக் கேடயமாகப் பாவிப்பதுடன் இவ் வலயத்தில் இருந்து மக்கள் தப்பிச் செல்வதை வலுக்கட்டாயமாகத் தடுத்தும் வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசும் பாரிய மனித உரிமை மீறல்களைச் செய்துள்ளது. பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுகிறேன் என்று கூறுவதன் மூலம் அரசின் இம்மீறல்களை ஏற்றுக்கொள்ளும்படி கூறுகிறது. ஆனால் நிச்சயமாக அது முடியாது. அரசு படைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆஸ்பத்திரியையும் உள்ளடக்கி மக்கள் அடர்த்தியாக வாழும் இடங்களின் மீது குண்டுகள் வீசியுள்ளன. துப்பாக்கிச் சூடற்ற வலயத்தில் பாரிய ஆயுதங்கள் பயன்படுத்தப் படவில்லையென அரசு ஜப்பானுக்கும் ஐ.நா சபைக்கும் தொடர்ச்சியாகப் பொய்கூறி வருகிறது. அதே நேரத்தில், ஐ.நா சபையும், பக்கச் சார்பற்ற மனித நேய அமைப்புகளும் மனித உரிமை அமைப்புகளும், ஊடகத் துறைகளும் யுத்தப் பாதிப்பு வலயங்களுக்குச் செல்வதை அரசு மறுத்தும் வருகின்றது. இந்த உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தி ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு உதவவேண்டுமானால், களத்தில் உண்மையில் என்னதான் நடக்கிறது என்பதை உலகம் புரிந்து கொள்வது அவசியமென்பது முதலில் புரிந்து கொள்ளப்படவேண்டும்.

இக் கடிதத்தில் எம்மால் வெளிப்படுத்தப்பட்டுள்ள நாட்டங்களை பல மனித நேய முகவர்கள் எம்முடன் பகிர்ந்து கொண்டுள்ளனர் என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். வலயத்தில் உள்ள தமது ஊழியர்களின் பாதுகாப்புக்காக இவர்கள் இதுபற்றி வெளிப்படையாகப் பேசுவதை தவிர்த்து வருகிறார்கள்.

## மற்றோர் தகவல்

The Times and Le Monde newspapers களால் மேற்கொள்ளப்பட்ட மோதுதல் வலய நிலவரங்கள் பற்றிய தகவல் திரட்டல்களின் போது ஐ.நா பணியாளர்களின் கூற்றை ஆதாரங்காட்டி, 2009 ஜனவரிக்கும் மே மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் 20,000 தமிழ் குடிமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் எனக் கூறப்பட்டுள்ளது (TamilNet).

"Day of Reckoning in Sri Lanka", எனும் கட்டுரையில் Robert Templer என்பவர் Foreign Policy எனும் பகுதியில் 20 April 2009-ல் குறிப்பிடும் பொழுது நாளை மதியத்தை, தமிழ் புலிகள் சரணடைய வேண்டியதற்கான காலக்கெடுவாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது. சண்டைக்குத் தயாராய் இருக்கும் கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்கத் தயாராய் இல்லையானால், யுத்ததில் ஈடுபட்டிருக்கும் இரு பகுதியினரிடையே அகப்பட்டிருக்கும் குடி மக்களை அவர்களுக்கு ஏற்படக்கூடிய அவலச் சாவில் இருந்து காப்பாற்ற வேண்டுமானால், நமக்கு முன்னால் உள்ள ஒரே வழி சண்டையை நிறுத்துவதற்காக வலுக் கட்டாயமானதும், உடனடியானதுமான அனைத்துலகத் தலையீடுதான். வேறு வழிகள் இல்லை.

ஒரு குறுகிய பரப்பினுள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் சிக்குண்டுள்ளனர். இவ்விதம் சிக்குண்ட இவர்கள், ஸ்ரீலங்காவின் இராணுவத் துருப்புக்களுக்கும் மீதமாக இருக்கும் த.ஈ.வி.புகளுக்கும் இடையே யுத்ததின் நடுவில் மாட்டப்பட்டு செய்வதறியாது உள்ளார்கள். ஸ்ரீலங்காவின் வடகீழ் மாகாணத்தின் கடற்கரையோரமாக இருக்கும் இந்த குறுகிய பரப்பு தொடர்ந்து சுருங்கி வருவது மற்றோர் அவலமாகும். அவலங்களின் உச்சம், கடந்த மூன்று மாதங்களாக உணவு, தண்ணீர், மருந்து ஆகியவற்றைப் பெறுவதற்கான வாய்ப்புகள் மிக அரிதாக உள்ள இந்த மக்களின் மீது உலகின் பெரும் பான்மையினரின் பார்வை இன்னமும் விழாதிருப்பதுதான்.

காட்டுக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட ஒரு ஓடைப் பகுதியில், கடல் போன்ற மக்கள் கூட்டம், அங்கொன்றும் இங்கொன்றுமான கூடாரங்களிலும், கையில் கிடைத்தனவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட பரந்து கிடைக்கும் குடில்களிலும் வாழ்கிறார்கள். இத் 'துப்பாக்கிச் சூடுகள் அற்ற வலயம்' ஸ்ரீலங்கா அரசின் குண்டு மழைக்கு உள்ளாகிக் கொண்டே உள்ளது. தமிழ் புலிகள் அங்குள்ள மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதற்காக அவர்கள் அப்பகுதியில் இருந்து வெளியேறுவதைத் தடுத்து வருகிறார்கள். கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி 2009 ஜனவரி நடுப்பகுதிகளில் இருந்து இன்றுவரையான காலப்பகுதியில் 5,000 குடிமக்கள் இறந்துள்ளார்கள். இவர்களில் குறைந்தது 500பேர் குழந்தைகளாகும். 10,000-க்கு

மேற்ப்பட்டவர்கள் காயமடைந்துள்ளார்கள். இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து நேற்று இரவு அரசாங்கத்தின் இந்த வலயத்தில் இருந்து பல பத்தாயிரக் கணக்கானோர் தப்பியிருந்தாலும் கூட இன்னும் அதிகமானோர் பெரும் ஆபத்துகளில் சிக்குப்பட்டிருக்கிறார்கள். (crisisgroup.org)

யுத்தத்தின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் பிரதேசம் சுடுகாடாய் மாறியிருந்தது. அரச இராணுவம் மிகக் கொடூரமான முறையில் எஞ்சியிருந்த மக்களை அழித்திருக்கிறது. 'மக்களே புலிகள் புலிகளே மக்கள்' என்ற புலிகளின் பொய்யான முழக்கத்தை தனக்குச் சாதகமாக்கி இறுதியுத்தத்தில் பேரழிவை நடாத்தியிருக்கிறது. உலகின் எந்த மூலையிலும் இப்படி ஒரு அழிவை தான் பார்த்திருக்கவில்லை என்று பான்கிமூன் சொல்லுமளவுக்கு அங்கு யுத்தம் தாண்டவம் ஆடியிருக்கிறது. புலிகளின் சரணடைவுக்குப் பின் அங்கு எஞ்சியிருந்த காயப்பட்டவர்கள், அங்கவீனர்கள் எங்கே என்பதும் அவர்கள் எப்படிக் கொல்லப்பட்டார்கள் என்பதும் எல்லோரும் அறிந்த பொய்யாகிக் கிடக்கிறது. யுத்தத்தில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் பெண்போராளிகளது உடல்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. நாம் இவற்றைச் செய்தது விடுதலைப் புலிகளா அல்லது இராணுவமா என்று விவாதம் நடாத்திக் கொண்டு இருக்கிறோம். ஆனால் இந்த யுத்தத்தில் பங்குபற்றிய இருசாராரும் இதைச் செய்யமாட்டார்கள் என்று அடித்துச் சத்தியம் செய்ய முடியாமல் இருபகுதியினரும் செய்த மகோன்னதத் தவறுகள் நமது கண்முன் விரிந்து கிடக்கின்றன. (மிகைப்படுத்தப்பட்ட வரலாறில் தொலைந்து விட்ட வீரம். கையேந்தி நிற்கும் தமிழ்ப் பாசிசம்- உயிர்மெய் சிறப்பிதழ்-72)

## இறுதிப் போரின் முன்னும் பின்னுமான நிலமைகள்

அனைத்துலக மனித உரிமை அமைப்பான Save the Children குறிப்பிடும் போது. "உணவுக்கும் தண்ணீருக்கும் அப்பால், இந்த மக்களுக்கு வைத்திய கவனிப்பு அவசியப்படுகிறது. பலர் காயம் பட்டுள்ளார்கள், இவர்கள் வைத்திய பராமரிப்பெதுவுமின்றி இவ்வளவு காலமும் இருந்துள்ளார்கள். மனக்கிலி கொண்டிருக்கும் குழந்தைகளை பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்று அவர்களை சாதாரண நிலைக்குக் கொண்டுவரவேண்டும்."

"கடந்த சில வாரங்களாக கிட்டத்தட்ட 2,00,000 மக்கள் மோதல் பகுதியைவிட்டு வெளியேறியதன் காரணத்தால் இப் பிராந்திய அகதி முகாம்கள் ஏற்கனவே நிரம்பி வழிகின்றன. மிதமிஞ்சிய எண்ணிக்கையால் ஏற்கனவே நல்ல தண்ணீருக்கும், சுகாதாரத்துக்கும், போதியளவு உணவுக்கும் போராடிக் கொண்டிருக்கும் முகாம்களில் இந்த மக்களும் தங்கவைக்கப் படுகிறார்கள். மித மிஞ்சிய எண்ணிக்கையால் நோய்த்தடுப்பும் உதவிகள் விநியோகமும் கடும் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது." என விபரிக்கிறது

இவ் நிறுவனம்.

ஒக்ஸ்பார்ம் நிறுவனத்தின் தற்காலிக இயக்குனர் டேவிட் வைற் (David white) கூற்றின்படி சண்டையின் முடிவானது, புதிய மக்கள் மிகப் பெரும் தொகையில் வெளியேறும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. தற்போதைய முகாம்கள் இவர்களை உள்ளடக்குவதற்குப் போதாதென்பதே எமது கவலையாகவுள்ளது.

மே 18 2009-ல், Save the Children நிறுவனம் மேலும் குறிப்பிடுகையில் “இன்னும் ஐம்பதினாயிரம் மக்கள் ஸ்ரீலங்காவின் வட- கிழக்குப் பகுதியிலுள்ள மோதல் வலயத்தை விட்டு வெளியேறவுள்ளார்கள். இது தவிர்க்கமுடியாதவொரு மனிதநேய நெருக்கடியைத் தோற்றுவிக்கப் போகிறது”. எனத் தெரிவித்தது.

சிறுபான்மை மக்களின் கிளர்ச்சிக் குழுவான த.ஈ.வி.பு(தமிழ் புலிகள்)-களுடனான 26 வருட மோதலில் தாம் வென்றுவிட்டதாக ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்த அதே நேரத்தில், Save the Children நிறுவனம், இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட இடம் பெயர்ந்த மக்களால் ஏற்கனவே நிரம்பிவழியும் திட்டமிடப்பட்டுள்ள 40-ற்பது அரச கட்டுப்பாட்டு முகாம்களுக்கும் மனிதாபிமான உதவிகளைப் பெறுவதற்கான நிரந்தர வாய்ப்புகள் ஏற்படுத்தப் படவேண்டும் என அறைகூவல் விடுத்தது.

இம் முகாம்களில் ஏற்கனவே 18 வயதுக்குட்பட்ட ஐம்பதினாயிரம் சிறார்கள் உள்ளார்கள். இவர்களில் 32%-னர் போஷாக்குக் குறைந்தவர்களாகும். இச் சிறார்களில் தமது தாய் தந்தையரும், உறவினர்களும் நண்பர்களும் கோரமான முறையில் மரணமடைந்ததை நேரில் கண்டதாலும், மேலும் பலர் தஈவிபு-களுடன் சேர்ந்து போராடக் கட்டாயப் படுத்தப்பட்டதனாலும் மனம் உடைந்து போயுள்ளதுடன் தமது கசப்பான அனுபவங்களை மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்வதில் அச்சமுடையவர்களாகவும் உள்ளார்கள். ஐந்து வயதைக்கூட அடையாத ஆயிரக்கணக்கான பாலகர்கள், தமது பெற்றோர்களை இழந்தோ அல்லது மோதல் வலயத்தில் இருந்து கூட்டம் கூட்டமாக வெளியேறும் போது உறுவுகளைப் பிரிந்தோ தனியாகவும் மனம் குழம்பியுமே வருகிறார்கள். (As Sri Lanka Conflict Ends Crisis Escalates , WASHINGTON)

## 3.அ) **மகிந்த சிந்தனையும் பொருளாதாரக் கட்டுமானமும்**

3.அ.1. பொதுத்துறை மையப் பொருளாதாரம்- 'அப்பே ஆண்டுவ'

3.அ.1.1. வடமாகாணத்தின் பொருள் உற்பத்தி அரங்கம்

அ. விவசாயத் தொழிலாளப் பஞ்சமர்கள்
ஆ. கைத்தறித் தொழிலாளப் பஞ்சமர்கள்
இ. பஞ்சமராக ஆக்கப்பட்ட நிலவுடைமைச் சிறு விவசாயிகள்
ஈ. வெள்ளாளச் சாதிப்பிரிவினரின் கீழணி
உ. மீனவர்கள்
ஊ. நுகர்வோர் கூட்டுறவுகள்

3.அ.2. முன்னாள் தாராளவாதமும் வடக்கின் வீழ்ச்சியும்

3.அ.3. சேமநலப் பொருளாதாரம்

3.அ.3.1. திட்டங்களும் அதற்கான காரணங்களும்

அ. வாக்குவேட்டைத் தூண்டில்களா?

ஆ. பொருளாதாரச் சமத்துவமின்மையை ஈடுசெய்யவா?

இ. வறியோரா? விளிம்புநிலையோரா?

இ.1. மத்தியதர வர்க்கத்தினர்

இ.2. விளிம்பு நிலையோர்

2.அ. யார் இந்த விளிம்புநிலையோர்?

2.ஆ. விளிம்புநிலை வறுமைக்கான காரணங்கள்

இ.3. விளிம்பு நிலையாக்கமும் எதிர்வினையும்

இ.3.1. தேசியத்தை நிராகரிக்கும் வர்க்கப் பார்வை

இ.3.2. வர்க்கத்தை நிராகரிக்கும் தேசியப் பார்வை

3.அ.4 இந்நாள் தாராளவாதப் பொருளாதாரமும் வடக்கின் எதிர்காலமும்

## 3.அ.1) **பொதுத்துறை மையப் பொருளாதாரம்** - **'அப்பே ஆண்டுவ'**

மகிந்த சிந்தனையின் உள்நாட்டு பொருளாதாரக் கொள்கை இதுவரை இருந்தது போலல்லாமல் மாறுபட்டதாகவேயுள்ளது. தாராளவாதப் பொருளாதாரக் கொள்கையும், பொதுத்துறை மையப் பொருளாதாரக் கொள்கையும் ஒன்றையொன்று நிராகரிப்பனவாகவே இதுவரை இருந்து வந்தன. ஆனால் மகிந்த சிந்தனையோ, ஒன்றுக்கொன்று நேரெதிரான, ஒன்றையொன்று மறுதலிப்பதான, ஒன்றின் இருத்தலை மற்றொன்றின் இருத்தல் அனுமதிக்க மறுக்கின்ற இரு துருவங்களான இவ் இரண்டையும் மிக லாவகமாக ஒன்று சேர்க்கப்போவதாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதன்மூலம், IMF, WB, ADB ஆகியவற்றின் வழிகாட்டுதலின் கீழ் இயங்கத் தயாராகிக் கொண்டிருக்கும் ஒரு தாராளவாதப் பொருளாதாரத்தை பொதுத்துறை மையப் பொருளாதாரத்தால் உருமறைப்புச் செய்வதில் மகிந்த சிந்தனை, அறிக்கையளவில் வெற்றிபெற்றுள்ளதென்று கூறலாமா, அல்லது உண்மையிலேயே ஒன்று சேர்ப்பதற்கான முயற்சியா? இல்லையேல் இது கட்சிக்குள் /கூட்டணிக்குள் உள்ள இரு கோட்பாட்டாளர்களையும் திருப்திப் படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட கலவையா என்பது ஆராயப்படவேண்டும்.

ஏனெனில் இவ்விதக் கலவைகள் வரலாற்றுக்கு ஒன்றும் புதியதல்ல. காந்தியப் பொருளாதாரமும் நேருவியப் பொருளாதாரமும் ஒரே கட்சிக்குள் (இந்தியக் காங்கிரஸ்) சுமார் இருபது வருடங்கள் சமாதான சகஜீவனம் நடத்தவில்லையா? ஆற்றைக் கடந்தபின்னர் நேருவியம் காந்தியத்தைத் தூக்கி வரலாற்றுக் காட்சிப் பொருளாக்கி கண்காட்சிச் சாலையில் பவுத்திரமாகப் பூட்டி வைக்கவில்லையா? அதேபோல் நேருவியத்துடன் ஒரே கட்சிக்குள் இணைந்திருந்த மன்மோகனிஸம் நேருவியத்தைப் புறக்கணித்து இந்தியாவெங்கணும் மேலாண்மை செலுத்துமளவிற்கு செழித்து வளரவில்லையா?

இருவகைப் பொருளாதாரக் கட்டுமானத்தை பிரதிநிதித்துவப்படுத்த இருவகைக் கட்சிகள் தேவைதானா? இந்திய ஜனநாயகத்தில் மதசார்பற்ற கட்சி, இந்துத்துவக் கட்சி என இரு கட்சிகள் உள்ளன. ஆனால் இரண்டினதும் பொருளாதாரக் கோட்பாடுகளும் ஒன்றுதான். ஸ்ரீலங்காவில் இரு கட்சிகளும் சிங்கள-பௌத்த பேரினவாதக் கட்சிகளே. ஆகவே எதற்காக இரு கட்சிகளென்று எண்ணியிருக்கலாம். யு.என்.பியின் பொருளாதாரக் கோட்பாட்டை உள்வாங்கிக் கொண்டால், ஒரு கட்சி ஜனநாயகத்துடன் ஸ்ரீலங்காவை ஆளலாம் என்று தீர்மானித்துள்ளார் போலும்.

மகிந்த சிந்தனையில் முன்வைக்கப்பட்டுள்ள பொதுத்துறை மையத் திட்டங்களில் சில:

“2005-ம் ஆண்டில் நான் ஆட்சிக்கு வருகின்ற போது உள்நாட்டு கமத்தொழில் வீழ்ச்சியடைந்து விவசாயி தற்கொலை செய்கின்ற நிலைமைக்கு உள்ளாகி இருந்தார். நெற் சந்தைப்படுத்தும் சபை, உணவு ஆணையாளர் திணைக்களம் ஆகிய மொத்த கையிருப்புகளை பேணி வருகின்ற நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. சந்தைப்படுத்தல் திணைக்களம் சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய பொதுமக்களுக்கு அத்தியாவசிய பண்டங்களையும் சேவைகளையும் விநியோகிக்கின்ற நிறுவனங்கள் அழிக்கப்பட்டிருந்தன. அதன் பெறுபேறாக பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் அவற்றின் விலைகளை தீர்மானிக்கின்ற அதிகாரம் ஒரு சில மோசடி வியாபாரிகளின் கைகளுக்குச் சென்றிருந்தது.

இன்று வாழ்க்கைச் செலவைப் பற்றி பேசுகின்றவர்களேதான், 1977-ல் இருந்து 2005 வரை வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கு தவறிய, மற்றும் அரசாங்கத்தின் அந்தப் பொறுப்பினை அது விலக்கி வைத்த பாவத்திற்கு, கூடுதலாகவும் குறைவாகவும் பங்களிப்புச் செய்தவர்களாக இருப்பதையிட்டு நான் வியப்படைகிறேன்.

நெற் சந்தைப்படுத்தும் சபையை மீளத் தாபித்து, பிரதான நகரங்களில் பொருளாதார மத்திய நிலையங்களை அமைத்து, சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற நிறுவனங்களை பலப்படுத்தி கடந்த 4 ஆண்டுகளில் நான் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்கின்ற, நிலைத்திருக்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டேன். இதன் பெறுபேறாக விவசாயிகளது வருமான வழிவகைகள் விரிவடைய ஆரம்பித்துள்ளன.” (மகிந்த சிந்தனை ப 18,19)

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களும் இவைபோன்று இன்னும் பிறவும் அமைப்பதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது ‘அப்பே ஆண்டுவ’ (எங்கள் அரசாங்கம்) என்று சிங்கள உழைக்கும் மக்களாலும், ஜனநாயக சக்திகளாலும், இடதுசாரிகளாலும் மனப்பூர்வமாகப் புகழப்பட்ட பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்திலேயாகும். இவை அரசுடமை/ அரை-அரசுடமை நிறுவனங்களாகும். இடைத் தரகர்களின் சூறையாடலில் இருந்து விவசாயிகளையும் நுகர்வோர்களையும் பாதுகாப்பதில் இவ் அமைப்புகள் பெரிதும் உதவின. விவசாயிகளினதும், மீனவர்களினதும் கிராமப்புற, பிற சிறு உற்பத்தியாளர்களினதும் கைகளில் பணம் புரள்வதற்கும் அவர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளை மீளாக்கம் செய்து கொள்வதற்கும் இவ் அமைப்புகள் பிரதான காரணங்களாக இருந்தன. நில உடமையாளர்களின் நுகத்தடியின் கீழ் கட்டுப்பட்டிருந்த சிங்கள விவசாயிகளின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இவை வழிவகுத்தன.

### 3.அ.1.1) **வடமாகாணத்தின் பொருள் உற்பத்தி அரங்கம்**

அப்பே ஆண்டுவவில் சிங்களப் பேரகங்காரத்தின் துர்நாற்றம் வீசினாலும், வடகிழக்கு மாகாண சிறு உற்பத்தியாளர்கள் இன, மொழி, மத வேறுபாடின்றி இவ்வித அமைப்புகளால் நிறைவான பயனடைந்தார்கள். குறிப்பாக மிகப் பின்தங்கிய நிலையில் இருந்த மீனவர்கள், இதுவரையில்லாத பொருளாதார சமூக முன்னேற்றம் அடைந்தார்கள்.

### அ) **விவசாயத் தொழிலாளப் பஞ்சமர்கள்**

அதேபோல், வடமாகாணத்தின் ஒடுக்கப்பட்ட சாதியினர் காலனிக்குப் பின்பான தமது அரசியல் பொருளாதார வரலாற்றில் இதுவரையும் இல்லாத சமூக-பொருளாதார முன்னேற்றமும் அரசியல் முன்னேற்றமும் அடைந்தார்கள். தென்னை, பனை மரங்களில் இருந்து கள்ளு இறக்குதலும், கூலி விவசாயமுமே இவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பிரதான பரம்பரைத் தொழில்களாக இருந்து வந்தன. இவர்களில் ஒரு பகுதியினர் சிறு குத்தகை வறிய விவசாயிகளாகவும் இருந்தனர். ஆனால் மரமும் இவர்களுடையதல்ல, தாம் சீவிய கள்ளை விற்பனைசெய்யும் உரிமையும் இவர்களுக்கு இல்லை, விற்பனை நிலையங்களும் இவர்களுடையதல்ல. அது நில உடமையாளர்களான வெள்ளாளர்களுக்கே சொந்தமானதாக இருந்தது. அவர்கள் மனம் வைத்தால்தான் எதுவுமுண்டு. இவர்கள் எந்தவிதமான அமைப்பும் இல்லாத தொழிலாளர்களாகவே இருந்தனர். சீவலுக்கான மரங்களைக் கொடுப்பது, எத்தனை மரங்கள் என்பதைத் தீர்மானிப்பது, கொடுத்த மரங்களை திடீர் எனத் திரும்பப் பெற்றுக் கொள்வது, ஏதாவது பிணக்குகள் ஏற்பட்டால், அது தனது மரந்தானே என்ற திமிரில் கள்ளிறக்கக்கூடிய பாளைகளை வெட்டிவிடுவது, பெறப்பட்ட கள்ளின் அளவைத் தம்முடனேயே வைத்துக் கொள்வது, ஆகியன 100 வீதமும் நில உடமையாளர்களான வெள்ளாளர்களின் உரிமையாகவே இருந்தன. அதே நேரத்தில் சீவல்தொழிலார்களோ, தம்மால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டத்தில் இருந்தும் பிரதான உற்பத்திச் சாதனமான மரத்திலிருந்தும் முற்றிலுமாக அந்நியமயமாகியும், தொழிலாளி முதலாளி உறவை நெறிப்படுத்துவதற்கு எந்தவிதமான தொழில் ஒழுங்குமுறைகள் இல்லாமலும் இருந்தனர். அதே நேரத்தில் முதலாளிகளோ இவற்றைத் தன்னிச்சையாகத் தீர்மானிக்கும் நிலையில் இருந்தார்கள். இந்தத் தன்னிச்சைத்தனம் பனைமரங்களின் உரிமையாளர்களான சில தனிநபர்களால் அல்லாமல் வெள்ளாளர் என்ற சாதிப் பிரிவினரால் பிரயோகிக்கப்பட்டது. உடமைச் சாதிப்பிரிவினரின் எண்ணிக்கை இத் தொழிலாளர்களின் சாதிப்பிரிவினர்களின் எண்ணிக்கையை விட பல பத்து மடங்கு அதிகமானதாக இருந்தது. சமூகத்தின் அனைத்து அதிகாரங்களும் வெள்ளாளர் சாதியினரின் கைகளில்

இருந்தன. இவைதான் வர்க்க ஒடுக்கு முறைக்கு உள்ளாகி இருந்த தொழிலாளர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டுள்ள இவ் இரு சாதிப்பிரிவுகளும் கொடூரமான சாதிய அடக்கு முறைக்கும் உள்ளாக்கப் பட்டமைக்கான காரணங்களாக இருந்தன. நிலமானிய உற்பத்தி உறவு (பொருளாதார அடிக்கட்டுமானம்), சாதிய அடக்குமுறைக்கும் (அரசியல் மேற்கட்டுமானம்), சாதிய அடக்குமுறை நிலமானிய உற்பத்தி உறவுக்கும் மாறி மாறிச் சேவை செய்து வந்தன. ஒன்றையொன்று பாதுகாத்தும் வந்தன. இதையே இவ்விதமாகவும் சொல்லலாம். வர்க்க ஒடுக்குமுறை சாதிய ஒடுக்கு முறைக்கும், சாதிய ஒடுக்குமுறை வர்க்க ஒடுக்குமுறைக்கும் மாறிமாறிச் சேவைசெய்யும் ஒரு சுழல் சமூக நிகழ்வுப் போக்கொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. 'தெங்கு-பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்' என்ற அமைப்பு தோன்றியதன் பின்னர் இச்சீவல் தொழிலாளர்களின் நிலமை அடிப்படை மாற்றத்துக்குள்ளாகியது. மரங்களைச் சங்கமே பொறுப்பெடுத்துக் கொண்டது. உற்பத்திச் சாதனங்களில் ஒன்றான மரம் தொழிலாளியின் கூட்டுரிமையாகியது. பாளை சீவும் கத்தியும், ஏறுபெட்டி தளைநாரும் அவனின் தனியுடமையாகவே இருந்தன. இந்த உற்பத்திக் கலனே அவனின் படைக்கலனாகவும் இருந்தது. பனைமரம் முதலாளிகளின் எதேச்சதிகாரப் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டது. அதேநேரத்தில் விற்பனவு உரிமை முற்றுமுழுதாக தொழிலாளர்களின் கூட்டுரிமையானது. மிகுந்த அச்சத்துடன் குடிசைகளில் வைத்து செய்யப்பட்டு வந்த கருப்பணி காய்ச்சும் தொழில் கூட்டுறவுச் சங்கத்தால் மேற்கொள்ளப்படும் குறுந்தொழிலாகியது. கள் கண்ணாடிக் குடுவைகளில் (போத்தல்) அடைக்கப்பட்டு இதற்கென்று அமைக்கப்பட்ட கடைகளுக்கு விற்பனவுக்கு வந்தது. இவை அடிப்படைப் பொருளாதார மாற்றங்களாகும். அத்துடன் நிலையான பொருளாதார மாற்றமுமாகும். இது இந்த இரு சாதிப்பிரிவுகளின் சமூக-பொருளாதார நிலையில் ஒரு முன்நோக்கிய பாய்ச்சலை உருவாக்கியது. இழிவாக நோக்கப்பட்ட ஒரு சமூகம் கௌரவமாக நோக்கப்படும் ஒரு நிலை உருவானது. தாராளவாதப் பொருளாதாரத்துக்கு எதிரான இந்தத் திட்டம் 'அப்பே ஆண்டுவ'வின் தொடர்ச்சியாகும். இக்கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதில் கம்யூனிஸ்ட் கட்சியும் ( ரஸ்ய, சீனப் பிளவுக்கு முன்னைய கட்சி), என்.எம்.பெரேராவின் தலைமையிலான லங்கா சமசமாஜ கட்சியுமே தலையாய பங்கு வகித்தன. இது மட்டுமல்ல இம் மாற்றங்களும் இதனுடன் இணைந்த வேறுசில சமூக சீர்திருத்த மாற்றங்களும் பிற பஞ்சமர்களின் வாழ்க்கையிலும் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தியது.

### ஆ) கைத்தறித் தொழிலாள பஞ்சமர்கள்

அதேபோல் நெசவுத் தொழிலையே தமது குலத்தொழிலாகக் கொண்டிருந்த மற்றோர் அடிமைச் சாதிப்பிரிவினரின் வாழ்க்கையிலும் ‘அப்பே ஆண்டுவ’ கொள்கைகள் பல வளர்ச்சிகளை ஏற்படுதியது. இந்த மக்களை வடமாகாண அதிகார அடுக்குகள் கண்டு கொள்ளவேயில்லை. இந்த அதிகாரவர்க்கத்தால் இவர்களின் உண்மையான குலத்தொழில் மறைக்கப்பட்டு ‘பறை மேளம்’’ அடிப்பதுவே இவர்களின் குலத்தொழிலாகக் காட்டப்பட்டது. சமூகத்துக்குத் தேவையான ஒரு அடிப்படைப் பொருள் இவர்களால்தான் உற்பத்தி செய்யப்படுகிறதென்ற உண்மை இருட்டடிப்புச் செய்யப்பட்டது. துணி நெய்வதற்குப் பயன்படும் தறி எனும் உற்பத்திக் கருவி இவர்களுடையதாகவே இருந்தது. ஆனால் மூலப்பொருள் கொள்வனவுச் சந்தையும் உற்பத்திப் பொருள் விற்பனவுச் சந்தையும் இவர்களிடமிருந்து அந்நியமாகியே இருந்தன. நிதிச் சந்தையோ வெள்ளாளர்களின் கைகளிலேயே இருந்தது. பொருளாதாரத் தரித்திரியமே (pauperization) இவர்களில் பெரும்பான்மையோரின் வாழ்க்கை நிலையாக இருந்தது. இருந்தும், இவர்களில் மிகச் சிறு அளவினர் தமது உற்பத்தியில் உபரி திரட்டுவதில் வெற்றி பெற்றனர். தமது மரபுவழி உற்பத்திக் கருவிகளை தமது தனியுடைமையாக வைத்திருக்கும் உரிமை இச்சாதிப் பிரிவினருக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் மாத்திரமல்ல குடியிருப்புக்கான நிலம், கட்டிடங்கள் ஆகியனவற்றையும் தமதாக வைத்திருப்பதற்கான உரிமையும் வழங்கப்பட்டிருந்தது. இருந்தும் இவர்கள் விவசாயிகளாகவோ, விவசாயக் கூலிகளாகவோ இருக்கவில்லை. பஞ்சமர்களில் ஒரு சாதிப்பிரிவு மற்றோர் சாதிப்பிரிவுடன் உற்பத்திக் களத்தில் தொடர்பு கொள்வதென்பது அடக்கும் சாதியினரால் தடுக்கப்பட்டிருந்தமையானது இதற்கோர் காரணமாக இருக்கலாம். விவசாய அடிமைச் சாதிகளை வெள்ளாளரைத் தவிர வேறு எவரும் கூலிகளாகப் பயன்படுத்தக் கூடாதென்று நிலவிய சமூக ஒழுங்குகள் ஒரு காரணமாக இருக்கலாம். நெசவாளர்களுக்கு எந்த இலாபமும் இல்லாத கைத்தறித் துறையைக் கைவிட்டு நெசவாளர் வேறு துறைக்கு மாறினால் நெசவுத் தொழில் அழிந்துவிடும் என்று மேட்டுக்குடியினர் அஞ்சியதும் இதற்கானதோர் காரணமாக இருக்கலாம்.

‘அப்பே ஆண்டுவ’ கொள்கையின் வெற்றிகளிலொன்றான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு விற்பனவுச் சந்தையிலும் நிதி மூலதனச் சந்தையிலும் பேரம் பேசும் சக்தியை இவர்களுக்கு கொடுத்தது. தமது சொந்தக் கருவிகளுடன் சுதந்திரமான சிறு உற்பத்தியாளகளாக வளர்வதற்கான வாய்ப்புகளை எற்படுத்திக் கொடுத்தது.

### இ) பஞ்சமராக ஆக்கப்பட்ட நிலவுடைமைச் சிறு விவசாயிகள்

'அப்பே ஆண்டுவ' வேலைத்திட்டத்தால் வெள்ளாள சாதிப்பிரிவின் அடக்குமுறையிலிருந்து விடுவிக்கப்பட்ட அடுத்த சாதிப்பிரிவுதான் கோவியர் எனும் சாதிப்பிரிவாகும். இப்பிரிவு குடிமைச் சாதி என அழைக்கப்பட்டது. இவர்களுக்குச் சொந்தமான சிறு நிலத்துண்டுகள் இருந்தன. அத்துடன் குத்தகை விவசாயிகளாகவும் இருந்தனர். அந்த உரிமை இவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கவில்லை.

சிறுஅளவு நிலம் வைத்திருக்கும் உரிமை இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை நிலமும் வழங்கப்பட்டது. ஆனால் வெள்ளாள நில உடமையாளர்களின் அடிமைச் சாதிகளை கூலிக்கு அமர்த்தும் உரிமை இவர்களுக்குக் கிடையாது. முந்திரி (திராட்சை), உருளைக் கிழங்கு ஆகிய இரு பணப் பயிர்களையும் தவிர பிற அனைத்துப் பயிர்களும் மனித உழைப்புச் செறிவு விவசாயமாகவே இருந்தன. ஆனால் கூலிகளோ வெள்ளாள நில உடமையாளர்களின் தனிச் சொத்தாகவே இருந்தனர். இந்த நிலையில் இச் சிறு உடமை விவசாயிகள் தமக்குத் தேவயான கூலிகளுக்கு எங்கே செல்வார்கள்? தமது குடும்ப உறுப்பினர்கள் தவிர வேறு யாரையும் வேலைக்கமர்த்த முடியாதவர்களால் பணப்பயிர் செய்ய முடியுமா? பணப்பயிர் செய்கையாளர்களான வெள்ளாள நில உடமையாளர்களுடன் போட்டி போடமுடியுமா? அத்துடன் இவர்கள் நிலங்களில் கிணறும் இருக்கவில்லை. நீர்ப்பாசன குளங்களின் கீழ் இவர்களுக்கு நிலங்களும் இருக்கவில்லை. இதனால் இவர்களும், சிறு நில உடமை உரிமை பெற்ற பிறரும் வான்பயிராக பணப்பயிரல்லாத குரக்கன் (ராகி), சாமி, தினை போன்ற சிறுதானிய உற்பத்தியிலேயே ஈடுபட்டார்கள். இதையே தமது உணவாகவும் கொண்டார்கள். இதனால் இவர்களிடையே பணப்புழக்கம் மிக இறுக்கமானதாகவே இருந்தது. குடிமை வேலைகளில் ஏதோ சொற்பம் கிடைத்தால் சரி. ஆனால் குடிமைக்கான கூலிகள் பணமாகக் கிடைப்பது மிகவும் அரிது.

'அப்பே ஆண்டுவ' கொள்கைகளில் பொதிந்திருந்த நிலச்சீர்திருத்தக் கொள்கைகளும், விவசாய சீர்திருத்தக் கொள்கைகளும் மேற்சொன்ன சாதிப்பிரிவினர் குடிமைகள் நிலையில் இருந்து விடுபட உதவியது. இவர்களும் பணப்பயிர்ச் செய்கை விவசாயிகளாக மாறினார்கள். இவர்கள் கைகளிலும் உபரி சேர ஆரம்பித்தது. யாழ் குடாநாட்டில் முதன்முதலில் விடுதலை பெற்ற குடிமைச் சாதிப்பிரிவு இதுவேயாகும். இவ் விடுதலையை இவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது முதலத் தலைமுறை இடதுசாரிகளேயாகும். அதுவும் குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சியேயாகும்.

## ஈ) வெள்ளாள சாதிப்பிரிவினரின் கீழணி

1950-களின் முடிவு வரை, பின்வரும் அம்சங்களைப் பெற்றிருந்தோரே வெள்ளாள மேட்டுக்குடியாகக் கருதப்படும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். அவையாவன: அதிகளவு விவசாயக் குடியிருப்பு நிலங்களுக்கு சொந்தக்காரர்களாய் இருத்தல், விவசாய நிலங்களைத் தாமும் செய்தல் குத்தகைக்கும் கொடுத்தல், தமக்குச் சொந்தமான பனைமரங்களையும் குத்தகைக்கு விடல், ஆங்கில அறிவு பெற்றிருத்தல், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களில் அரச உத்தியோகஸ்தர்களாக இருத்தல், வக்கீல்கள், வர்த்தகர்கள், வட்டிக்குப் பணம் கொடுப்போர் ஆகியனவாகும். ஒரே குடும்பத்தில் இவற்றில் பல இருப்பதே பொதுவானதாக இருந்தது. மொத்த வெள்ளாளர்களில் இந்த எண்ணிக்கை மிகக் குறைவானதே. பத்து விழுக்காடு வருமா என்பது கூட சந்தேகமே.

அடுத்த மேலணி தமது சொந்த நிலத்தில் தாமும் உழைத்து, தமது உறவினர்களின் உழைப்பை உழைப்புப் பரிமாற்றமாகப் பெற்றுக்கொண்டு, போதாமையை ஈடுசெய்ய கூலியடிமைகளின் உழைப்பையும் பெற்றுக்கொள்பவர்கள். இவர்களை மத்தியதர விவசாயிகளின் மேலணியெனக் கருதலாம். விவசாயமே இவர்களின் பிரதானமான வருமானமாக இருக்கும்.

அதற்கடுத்த கீழணி விவசாயம் ஒன்றையே தமது ஒரே வருமானமாகக் கொண்ட உழைக்கும் சிறு விவசாயிகள். இவர்களின் விவசாய நிலம் சொந்தமானதாகவோ, அல்லது குத்தகைக்கு எடுத்ததாகவோ இருக்கும். சாதியக் கட்டமைப்பு எந்த பொருளாதார பலாபலனையும் இவர்களுக்கு பெற்றுக்கொடுக்கவில்லை. இவர்களே வெள்ளாளரில் அதிக எண்ணிக்கையினராகும். வர்க்கரீதியாக வெள்ளாளர் எல்லோரும் ஆளும் வர்க்கத்தினரல்ல. இதில் பெரும்பான்மயோர் ஆளப்படும் வர்க்கத்தினரே.

## உ) மீனவர்கள்

மீனவர்கள் சம்மட்டிமார்களின் (மீன்பிடித்துறை ‘நிலப்பிரபு’) ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவதையும், வெள்ளாள மேல்தட்டு வக்கத்தினரின் கட்சிகளின் (அதுதான் தமிழ் தேசியக் கட்சிகள்) புறக்கணிப்புகளின் மத்தியிலும் வளர்வதைச் சாத்திய மாக்கியது. அது மாத்திரமல்ல, நண்டு, இறால், கடல் அட்டை போன்ற கடல் வாழ் உயிரினங்களை இடைத்தரகர்கள் எவருமேயின்றி மீனவர்கள் அந்நியச் சந்தையில் தாமே நேரடியாக வர்த்தகம் செய்துகொள்வதையும் சாத்தியமாக்கியது. ‘அப்பே ஆண்டுவ’வால் அறிமுகப் படுத்தப்பட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பே இதற்கான காரணமாகும். கல்வியை அனைவருக்கும் பொதுவானதாக ஆக்குவதில் ‘அப்பே

ஆண்டுவ' அரசாங்கம் மேற்கொண்ட சில கல்வியமைப்புச் சீர்திருத்தங்கள் இதற்கான மற்றோர் காரணமாகும். இச் சீர்திருத்தங்கள் வெள்ளாளரின் உழைக்கும் விவசாயிகள் உட்பட உழைக்கும் மக்களின் குடும்பத்துச் சிறார்கள் கல்வித்துறையில் முன்னேறுவதைச் சாத்தியப்படுத்தியது.

### ஊ) **நுகர்வோர் கூட்டுறவுகள்**

யாழ் மாவட்டத்தில் நுகர்வோர்கள், நுகர்வுக்காகவென்று தனியான கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து வெற்றிகரமாக நடத்தி வந்தார்கள். இவை முழு இலங்கைக்குமே முன்னுதாரணமாக இருந்தன. இவற்றில் சில சிறு தொழில்த்துறை முகவர்களாகவும் இருந்தனர். (எ.கா: பண்டத்தரிப்பு பல் நோக்கு கூட்டுறவுச் சங்கம்) இன்னும் சில பண வர்த்தகத்திலும் ஈடுபட்டன. இவ்வித சங்கங்கள் அனைத்துச் சாதிப் பிரிவினர்களுக்கும் பொதுவானதாகவே இருந்தன.

*தமிழ் மேட்டுக்குடிக் கட்சிகளின் நிலைப்பாடு.*

ஆனால் யாழ்ப்பாண மேட்டுக்குடியின் கட்சிகள் (அதுதான் தமிழ் தேசியக் கட்சிகள்) இந்த மாற்றத்துக்கு எதிராகவே செயற்பட்டன. இந்த மாற்றத்தை மட்டுமல்ல, தாரளாவாதப் பொருளாதார எதிர்ப்புத் திட்டங்கள் அனைத்தையும் அவர்கள் எதிர்க்கவே செய்தனர்.

### 3.அ.2) **முன்னாள் தாராளவாதமும் வடக்கின் வீழ்ச்சியும்**

1977-ற்குப் பின், உலக வங்கியின் ஆலோசனையின் பெயரில் யு.என்.பி இவ் அமைப்புகளில் எதனையுமே கண்டுகொள்ளவில்லை. அனைத்துப் பொருளாதாரக் களங்களிலும் தனியார் துறையையே ஊக்கப்படுத்தியது. இதனால் இவற்றில் சில அமைப்புகள் அழிந்துபோயின. மேலும் சில பேரளவுக்கு மட்டுமே நின்று பிடித்தன. இன்னும் சில, பல்விதமான சிரமத்தின் மத்தியில் வெற்றிகரமாகத் தம்மைப் பாதுகாத்து வருகின்றன.

இவற்றை மீட்கப் போவதாகக் கூறும் மகிந்த சிந்தனையின் இவ் வேலைத்திட்டம் இலங்கையின் அனைத்துச் சிறு உற்பத்தியாளர்களையும் நிச்சயமாகக் கவரும். அவர்கள் கவரப்பட்டுள்ளார்கள் என்பதைக் காணக் கூடியதாகவும் உள்ளது.

### 3.அ.3) **சேமநலப் பொருளாதாரம்**

மக்களின் பல்வேறு தட்டினரின், அத்தியாவசிய அன்றாட வாழ்க்கைத்

தேவைகளுக்கான செலவீனத்தின் பல பகுதிகளை அரசு தனது பொறுப்பாக ஏற்றுக் கொள்ளல். இலவசக் கல்வி, இலவச வைத்திய சேவை, குறைந்த கட்டண போக்குவரத்து வசதிகள், இலவச பொழுது போக்கு வசதிகள், ஆபத்துக் கால துயர் துடைப்பு நிதி, வேலைவாய்ப்பு அற்றோர்களுக்கு உதவித் தொகை வழங்கல் இத்தியாதியே அவையாகும். இதைவிட விவசாயம், கால்நடை போன்ற உணவுற்பத்தித் துறைகளுக்கு மானியம் வழங்கலும் இவற்றுள் அடங்கும். ஒரு நாட்டின் பொருளாதார வடிவத்தில் இதுவுமோர் அங்கமாகிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மக்களுக்கு-குறிப்பாக விழிம்பு நிலையோர்க்கு, இதுவோர் வருவாயினமாகவும், அரசுக்கு இதுவோர் செலவீனமாகவும் அமைகிறது. உழைப்பாளர்களின் ஊதியத்தின் பகுதிகளாக வழங்கப்படும் மானியங்களும் சலுகைகளும் வேறானவை. அவை சேமநல வழங்கல்களல்ல. அவை சேவை வடிவிலும் பொருள் வடிவிலுமான ஊதியங்களேயாகும். சேமநல திட்டங்கள் அரசால் வழங்கப்படும் தானங்களாகவே உருவகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இவற்றைப் பெறுபவர்கள் அரசுக்கு நன்றிக்கடன் உள்ளவர்களாக இருக்க உளவியல் ரீதியில் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். இவ்வித பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டுள்ள அரசு சேமநல அரசென அழைக்கப்படுகிறது.

### 3.அ.3.1) **திட்டங்களும் அதற்கான காரணங்களும்**

பொருளாதாரம் பற்றிய பகுதியைப் பார்த்தால் மகிந்த சிந்தனையின் பெரும் பகுதி விளிம்பு நிலை மக்களுக்கு வழங்கப்படவுள்ள சேமநலன் பற்றியும், வழங்கப்பட்டுவரும் சேமநலன்களின் அபிவிருத்திகள் பற்றியதாகவுமே உள்ளன. மாற்றுத் திறனாளிகள், கைம்பெண்கள், முதியோர், கற்கும் திறன் குறைந்தோர், தொழில் வாய்ப்பு அற்றிருக்கும் இளைஞர் யுவதிகள், மனநிலை பாதிக்கப்பட்டோர், அநாதைகள், வைத்திய வாய்ப்புகள் பெறமுடியாத நோயாளிகள், இப்படிப் பலரையும் அன்பு வார்த்தைகளால் வாரி அழைக்கின்றது மகிந்த சிந்தனை. அவை எல்லாவற்றையும் இங்கு தரப்போனால் அதிக இடத்தைப் பிடித்து விடும். தமிழ் நாட்டு நிலமை தெரிந்தவர்கள் கருணாநிதி அரசாங்கத்தை உவமானத்துக்கு எடுத்துக் கொள்ளலாம். மது பானம் விற்று மானியப் பணம் பெறுவோம் என்று மட்டும் அதில் எதுவும் இல்லை. இதோ அவற்றில் சில:

- ஒவ்வொரு சமுர்த்தி குடும்பதற்கும் ஏதாவது ஒரு தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கு தேவையான மூலதனத்திற்காக 100,000 ரூபா வரை கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். நிறையுணவுப் பொதிக்கு மேலதிகமாக சமுர்த்தி பெறும் குடும்பங்களின் தாய்மார்கள் குழந்தை பெறுகின்ற போது குழந்தைக்குத் தேவையான பொருட்கள் அடங்கிய

பரிசுப்பொதி ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய 'பட்ஜட் பக்' சதொச வர்த்தக நிலையத்திற்கு மேலதிக சில்லறை வியாபார நிலையங்களின் ஊடாகவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தின் உற்பத்தி இந்த ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் ஆரம்பமாவதைத்தொடர்ந்து, ..... குறைந்த செலவிலான மின்சாரத்தை, நலன்களை பொது மக்களுக்கு பெற்றுக் கொடுப்பேன். இதற்கிணங்க குறைந்த வருமானமுள்ள வீடுகளுக்கான மின்சார கட்டணத்தில் 30 வீதக் கழிவினை வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

- 2012ல் அனைவருக்கும் மின்சாரம் என்ற நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வரையில், அனைத்து குடும்பங்களிற்கும் மாதாந்தம் 5லீற்றர் மண்ணெண்ணையை இலவசமாக வழங்குவேன்.

சமுர்த்திக் குடும்பங்கள்

- சமுர்த்தி நிவாரணம் கிடைக்காதுள்ள அனைத்துக் குடும்பங்களிற்கும் சமுர்த்தி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பேன்.
- 1000 ரூபாவுக்கும் குறைவாக சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் அக்கொடுப்பனவை 1000 ரூபாவினால் அதிகரிப்பேன்.
- 3 வயதிற்கு குறைவான பிள்ளைகள் இருக்கும் பட்சத்தில் அப் பிள்ளைகள் சார்பில் ரூபா 1500 மேலதிக நிவாரண தொகையை வழங்குவேன்.
- அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு அக்குடும்பங்களின் பொருளாதார நிலையை கணக்கில் எடுக்காது சமுர்த்தி நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன். (ப 20,21)

## அ. வாக்குவேட்டைத் தூண்டில்களா?

இவை அனைத்தும் வாக்குப் பெறுவதற்கான பொருளாதாரக் கவர்ச்சிகள் என்பதே பலரின் கருத்தாகும். பாரளுமன்ற ஜனநாயத்துக்கு கட்டுப்பட்டுள்ள

அரசியல் எதிர்கட்சிகள் இதை இவ்விதந்தான் விளக்குகின்றன. ஆனால் தாம் ஆட்சிக்கு வந்தால் இதையேதான் செய்கின்றன. முதலாளித்துவ ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றெனக் கருதப்படும் ஊடகங்களும் கூட இவ்விதம் சிந்திக்கும்படியும், செயற்படும்படியும் அரசியல் கட்சிகளைத் தூண்டுகின்றன. இவற்றை வைத்துக் கொண்டே கட்சிகளை எடைபோட மக்களைப் பயிற்றுவிக்கின்றன. இவ் அனுகுமுறை அனைத்து ஜனநாயக நாடுகளுக்கும் பொதுவானதாகவே உள்ளது. தமிழ் நாட்டு அனுபவத்தை கொண்டு நோக்கும் போது இவை வாக்குகள் பெறுவதற்கான தூண்டிலகள் என்பது உண்மைதான். அமெரிக்காவில் இறுதியாக நடந்த தேர்தலிலும் இத் தூண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.(வைத்திய சேவைக்கான சலுகைகளை/ மானியத்தை அதிகரிப்பது). ஆனால் தேர்தல் வெற்றிக்கு இது ஒரு காரணியல்ல. முதலாளிய நாடுகளிலும் கூட (வளர்ந்த நாடுகள்) இவ்வித சேமநலத்திட்டங்கள் உள்ளன. கட்சிகளின் ஏதேச்சதிகாரம் நிலவுகின்ற ஜனநாயக நாடுகளில் தேர்தல் வெற்றிகள் என்பவை இத்தகு திட்டங்களின் ஒரு உப விளைவுதான். இலங்கையின் அனுபவத்தை பார்ப்போம்.

மகிந்தவின் தேர்தல் வெற்றிக்கு இது காரணமல்ல என்று சில சிங்களக் குரல்களும் ஒலிக்கின்றன. ஆவற்றில் சிலவற்றைப் பார்ப்போமானால் இந்த விடயம் தெளிவாகும்.

உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல், பாரளுமன்றத் தேர்தல், ஜனதிபதித் தேர்தல் என நான்கு வகையான தேர்தல்கள் இலங்கையில் உண்டு. அபிவிரித்தி அடைந்த பல நாடுகளுடனும் முதிர்ச்சி அடைந்த பல ஜனநாயகங்களுடனும் ஒப்பிடும்போது ஸ்ரீலங்காவின் வாக்களிப்பு விழுக்காடானது ஆச்சரியப்படக்கூடியளவிற்கு அதிகமானதாகவே உள்ளது. உதாரணத்திற்கு, 2005 ஜனாதிபதித் தேர்தலில், 25 மாவட்டங்களின் 15 மாவட்டங்களில் பதியப்பட்ட வாக்குகள் 80வீதமாகும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்டங்கள் தவிர்ந்த (இங்கு தமிழ் மக்கள் வாக்களிப்பில் இருந்து ஒதுங்கி நிற்க கட்டாயப்படுத்தப்பட்டார்கள்) பிற மாவட்டங்களில் போடப்பட்ட வாக்குகள் 70வீதத்துக்கும் அதிகமாகும். தேர்தலுக்குத் தேர்தல் இது மாறுபடுகிறது என்பது உண்மையே. இருந்தும் மேற்குலக ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்ட பிற நாடுகளில் குறைந்துவரும் வாக்களிப்போரின் விழுக்காட்டை நோக்கும் போது இலங்கை மாறுபாடுடையதாகவே காணப்படுகிறது. இதை வைத்துக்கொண்டு பேர் பெற்ற ஜனநாயக நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை முன்னேறிய ஜனநாயக நாடு என்ற முடிவுக்கு வந்துவிடலாமா? ஸ்ரீலங்கர்களாகிய நாம் உயர்தர ஜனநாயகவாதிகளாகவும் உணர்வு பூர்வமாக தேர்தல்களில் பங்களிப்பவர்களாகவும் உள்ளோம் என்று அர்த்தமாகுமா? இங்குள்ள பிரதான கேள்வி ஸ்ரீலங்கர்களாகிய நாம் எதற்காக வாக்களிக்கிறோம் என்பதேயாகும். அதிகளவில் வாக்களிப்பில்

ஈடுபடும் குழுக்களில் ஒன்றைப்பற்றி மாத்திரமே நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவர்களுக்கு தேர்தல் என்பது காலாகாலத்துக்கு வரும் ஒரு திருவிழாவோ அல்லது தமது குடியியல்க் கடமையை நிறைவேற்றுவற்கான ஒரு அரிய சந்தர்ப்பமோ அல்ல. மாறாக அது இவர்களுக்கு தமது வருமான மார்க்கத்தையோ, தமது சுதந்திரத்தையோ, தமது பாதுகாப்பையோ மற்றும் இது போன்ற பிற வாய்ப்புகளையோ நெருக்கடிக்கு உள்ளாக்கும் வலுமிக்க ஒரு சமூக நிகழ்வாகவே இவர்கள் தேர்தல்களைக் கருதுகின்றனர்.

இவ் ஏழை மக்களின் ஜனநாயக உரிமைகளை தட்டிப்பறித்துக் கொள்வதற்கு இச் சேமநலத் திட்டங்களை பயன்படுத்திக் கொள்வதையிட்டுத்தான் நான் வேதனை அடைகிறேன். நாட்டின் ஏழைமக்களின் துயர் துடைப்பதற்காக கடந்த காலத்தில் எம்மிடம் உலர் உணவுப் பங்கீட்டு அட்டை இருந்தது, பின்னர் ஜனவசியத் திட்டம் இருந்தது. தற்போது சமுர்த்தித் திட்டம் உள்ளது. இத்திட்டங்களைப் பெறும் தகுதி உள்ளவர்கள் யார்? பெறத் தகுதி அற்றவர்கள் யார்? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை அரசியல்வாதிகளும் அவர்களின் முகவர்களும் தன்னிச்சையாக தமது கைகளிலேயே வைத்துள்ளனர். வாக்குகள் சேர்ப்பதற்கு இந்த அதிகாரத்தை இவர்கள் ஒரு கருவியாகப் பயன் படுத்திவருகின்றனர். இதனால் இந்த ஏழை மக்கள், ஆளும் கட்சிகளின் தேர்தல் ஊர்வலங்களிலும், கிராமியக் கூட்டங்களிலும் பங்கு பற்றுவது கட்டாயமாக்கப் படுகின்றது. இவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதில் இருந்தும், கட்சியின் திட்டங்களை விமர்சிப்பதில் இருந்தும் தடுக்கப்படுவதுதான் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். (election for whom- and what for groundviews.org)

இங்கு அவர் கூற வருவது, விழிம்பு நிலை மக்கள், எந்த அரசியல் கட்சி முன்வைக்கும் இத்தகு திட்டங்கள் அதிக பலனைத் தருபவை என்று சீர்தூக்கிப் பார்த்து, அவற்றை விவாதத்துக்கு உள்ளாக்கி அதன் பின்னர் வாக்களிக்கவில்லை. யார் ஆட்சியில் இருக்கிறார்களோ அல்லது யார் ஆட்சிக்கு வருவார்கள் என்பது நிச்சயமானது என அவர்கள் நம்பவைக்கப் படுகிறார்களோ அவர்களுக்கே வாக்களிக்கிறர்கள். காரணம், தாம் தற்போது அனுபவித்துவரும் சலுகைகள், இலவசங்கள், சேமநலத் திட்டங்கள் ஆகியனவற்றை வெல்லப் போகிறவர்கள் பறித்துவிடுவார்களோ என்ற அச்சமேயாகும். அதாவது இவர்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்துவது யாரையும் வெல்லவைப்பதற்காகவோ யாரையும் தோற்கடிப்பதற்காகவோ அல்ல, மாறாக வெல்லப் போகிறவர்களிடம் இருந்து தமது இலவசங்களையும், சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காகவேயாகும். இவ்வித நிலமையில் வாக்குகளைப் பெற்றுக் கொடுப்பது இவ்விதத் திட்டங்களா? அல்லது அவற்றை அமுல்படுத்தும் கட்சியின் கைகளில் குவிந்துள்ள எதேச்சதிகாரமா? என்ற கேள்வி எழுகிறது. எதேச்சதிகாரம் முன்னாலும்

சேமநலத்திட்டங்கள் பின்னாடியும் வருகின்றன.

## ஆ. பொருளாதாரச் சமத்துவமின்மையை ஈடு செய்யவா?

இதன் வாக்குகளின் அதிகரிப்பு என்ற உடனடி அரசியல் பலாபலனைவிட நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதாரப் பலாபலனே முதன்மை பெற்றதாகும். அது தான் இத்திட்டத்தின் நோக்கமாகும். தாராளவாதப் பொருளாதாரம் பொருளாதாரத்தின் அனைத்து அம்சங்களையும் சுதந்திரச் சந்தையிடமே ஒப்படைக்கின்றது. பொருளாதார நடவடிக்கையில் இருந்து அரசை முடிந்தவரை ஒதுங்கி நிற்க வைத்து விடுகின்றது. அதற்குப் பதிலாக பாதுகாப்பு, நீதிசேவை இரண்டையும் தவிர முடிந்தவரை அனைத்து உற்பத்தி, விநியோக நடவடிக்கைகளையும், நாட்டின் அனைத்துச் சேவை வளங்கு துறைகளையும் தனியார்வசம் ஒப்படைத்துவிடும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுகின்றது. அதில் பிரமிக்கத்தக்க வெற்றிகளையும் ஈட்டி வருகின்றது. மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட கல்வி, சுகாதாரம், வைத்தியம், தகவல் பரிமாற்றம், போக்குவரத்து, பொழுதுபோக்கு, கலை இலக்கியம் போன்ற சேவை வழங்கு துறைகளையும் தனியார் மயப்படுத்த துடியாய் துடிக்கின்றது, ஆலாய்ப் பறக்கின்றது. ஆன்மீகத்தைக் கூட விட்டுவைக்கத் தயாராயில்லை. இவ்விதமாக அனைத்துத் துறைகளிலும் தனியார் மயமும் சுதந்திரச் சந்தையும் கைகோர்த்து தரணி எங்கும் சல்லாபித்து வருகினறன. இலங்கையிலும் இதுதான் நடக்க உள்ளது என்பதை மகிந்த சிந்தனை பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளது. 2005ல் இருந்து இதுதான் இலங்கையின் நடமுறையாகவும் உள்ளது. இச் சல்லாபப் பயணத்தின் விளைவு?. இச் சமூக-பொருளாதார நிகழ்வுப் போக்கை நிகழ்ச்சி நிரலாகக் கொண்ட நாடுகளின் சமூகம் துருவச் சேர்க்கைக்கு (polarization) துரிதமாக உள்ளாகி வருகின்றன. மிகத்துரிதமான மையவாக்கமும், அதைவிடத் துரிதமான விழிம்பு நிலையாக்கமும் நடைபெற்றுவருகின்றன. இலங்கையின் மேல் மாகாணத்தின் வளர்ச்சிக்கும் (கொழும்பு) ஏனைய மாகாணங்களின் வளர்ச்சிக்கும் இடையேயான மலைக்கும் மடுவுக்கும் இடையே இருக்கும் வேறுபாடு இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். மையவலயம், விளிம்பு நிலை வலயம் ஆகியவற்றின் உருவாக்கத்திற்கும் சேம நலத்திட்டங்களுக்கும் என்ன தொடர்பு என்பதைக் காணமுற்படுவோம். இச் சேம நலத்திட்டங்கள் பிரதானமாக சமூக-பொருளாதார விழிம்பு நிலையினருக்கானதேயாகும். சாதாரண சொல்லாடல்களில் இந்த விழிம்பு நிலையோர் வறியவர்களென அழைக்கப்படும் நிலை தோற்றுவிக்கப்பட்டிரு க்கின்றது.

## இ) வறியோரா? விளிம்பு நிலையோரா?

உலக வங்கியும் அதன் அறிவு ஜீவிப் பரிவாரங்களும் விளிம்பு நிலை மக்களை வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளவர்கள் எனப் பெயர் சூட்டி அழைக்கின்றார்கள். தமது பிரச்சார வல்லமையால் அதிகமானோர் இவ்விதமே அழைக்கும் நிலையைத் தோற்றுவிப்பதில் வெற்றி பெற்றுள்ளார்கள். இந்த அணியின் வர்க்க குணாம்சத்தையும், வர்க்க நிலைப்பாட்டையும் மூடி மறைத்து இதுவொரு வர்க்க நீக்கம் செய்யப்பட்ட அணியென்ற பிம்பத்தை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கமாகும். அதேபோன்று விளிம்பு நிலையோரை சிந்தனைரீதியாக வர்க்க நீக்கம் செய்யும் நோக்கமும் இவர்களுக்கு உண்டு. இது உலக வங்கியால் நடத்தப்படும் ஒரு வர்க்கப் போராட்டமாகும். தமிழ் நாட்டிலும் இவர்களுக்கு இதே பெயர்தான், இலங்கையிலும் இவர்களுக்கு இதே பெயர்தான். தாராளவாதப் பொருளாதாரத்தை அமுல்படுத்தும் நாடுகளில் எல்லாம் இதே பெயர்தான்.

நாமும் விளிம்பு நிலையோர் என்ற பதத்தையே தொடர்ந்து பயன்படுத்துவோம். ஆனால் உள்ளடக்கத்தில் மாறுபட்டதாக.

### இ.1) மத்திய வர்க்கத்தினர்

தொடருமுன், நடுத்தர வர்க்கம் என்று இங்கு கூறப்பட்டுள்ளவர்கள் பற்றிச் சில வார்த்தைகள்: இது ஒரு ஒப்பு நோக்குப்பதமாகவே பயன்படுத்தப்படுகின்றது. இதன் அர்த்தம் காலத்துக்குக் காலம் மாறுபட்டும் வருகிறது. உலக சமதர்ம முகாம் தகர்ந்து, பெரும் சமதர்ம நாடுகள் எல்லாம் பெரும் முதலாளித்துவ நாடுகளாக மாறிய பின்னர் மூன்றாம் உலக நாடுகளில் வர்க்க அரசியற் பார்வை மேலோங்கியிருந்த நிலை அற்றுப்போய்விட்டது. மானுடஇன(Race), இனக்குளும(Ethnic), மதவிய, மொழியிய, சாதிய அடையாள அரசியல் பார்வைகளே இன்று மக்களின் சிந்தனைகளைக் கவ்விப்பிடித்துள்ளன.

அதே போல் வேறொரு பக்கத்தில், ‘வறுமைக் கோட்டுக்குக் கீழென்ற பொருளாதார அடையாள அரசியற் பதமொன்று அறிமுகமாகி வருகின்றது. தமிழ் என்ற அடையாள அரசியலை வைத்துக் கொண்டு தமிழ் நாட்டு ஆளும் வர்க்க அரசியல் கட்சிகள் தமிழ் நாட்டு மக்களைப் படாதபாடு படுத்துவதைப் புரிந்துகொள்ள அதிக அரசியலறிவு தேவையில்லை.

நுகர்வியப் பண்பாட்டை காட்டுத் தீ போல பூசைபோட்டு வளர்த்துவரும் தாராளவாதப் பொருளாதாரத் தரப்பினர், வர்க்க அரசியல் மறக்கப்பட்டுவிட்ட இந்த அரசியல் சூழலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு நடுத்தர வர்க்கத்தினருக்கு புதியதோர் அர்த்ததைக் கொடுத்துள்ளனர். இதன்படி நுகர்வுப்

பொருள் சந்தைக்கான வய்ப்புகள் உள்ளவர்களே மத்தியதரவர்க்கத்தினர் என இனங்காட்டப்படுகின்றனர். தமிழர்களிடையே இவ் அர்த்தத்திலேயே இச்சொற்பதம் இன்று பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. எந்த மனநெருடலும் இன்றி இச் சந்தையில் நுகர்வுப் பொருட்களைத் தாராளமாக வாங்கிக் குவிப்பவன் நடுத்தர வர்க்கத்தின் மேலணியாகக் கருதப்படுகிறான். மன நெருடல்களுடன் திக்குமுக்காடியபடி இச்சந்தையில் நின்று பிடிப்பவர்கள் மத்தியதரவர்க்கத்தின் கீழணி எனப்படுகிறார்கள். அவர்கள் நுகர்வது எவ்வளவு ரூபாய்க்குள் அமைய வேண்டும் எனவும் பட்டியல் இட்டு வைத்துள்ளனர்.

இவர்களின் பகுப்புப்படி நேர்த்தியாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தொழிலாளி வர்க்கத்தினரினதும், தொழில்நுட்பவியலாளர்களினதும் (இவர்களும் தொழிலாளர்களே) நுகர்வு ஆற்றல் சுமாரானதாக இருப்பதால் இவர்களும் நடுத்தர வர்க்கத்தினுள் சேர்க்கப்படுகின்றனர். இப்பகுப்புப்படி நுகர்வுத் திறன் மிக்கவர்களை ஒரு தொகுப்பாக்குகிறார்கள். ஆகவே இது ஒரு சமூகத்தட்டாகிறது. ஒரு பொருளாதார மாணவனுக்கு இப் பகுப்பும் தொகுப்பும் சில வேளைகளில் வருமான வேறுபாடுகளையும், நுகர்வின் ஏற்ற இறக்கங்களையும் புரிந்துகொள்ள உதவலாம்.

ஆனால் ஒரு அரசியல் அல்லது அரசியல்-பொருளாதார மாணவன் இப் பகுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடாது. சுமூகத்தின் இயக்கச் செயற்பாட்டை புரிந்து கொள்ள இது உதவாது. அது மாத்திரமல்ல அவனைத் தப்பான இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும். அவனுக்குத் தேவையானது சமுகத்தை வர்க்கரீதியாகப் பிரித்தும் (வர்க்கங்கள் பற்றிய அறிவு) பகுத்தும் (வர்க்கத்தட்டுகள் பற்றிய அறிவு) தொகுத்தும் (சமூகத் தட்டுகள்பற்றிய அறிவு), பார்க்கும் ஆற்றலேயாகும். இனக் குழும, மொழிக் குழும, நுகர்வியர்க் குழும அடையாள அரசியல் என்ற கருமுகிலை அகற்றிப் பார்க்கும் ஆற்றல் மட்டுமல்ல அவற்றைத் துரத்தியடிக்கும் ஆற்றலும் வேண்டும்.

## இ.2) **விளிம்பு நிலையோர்**

### 2..அ) **யார் இந்த விளிம்பு நிலையோர்**?

ஒரு வர்க்கத் தட்டினரான, இந்த விளிம்பு நிலையோர் இலங்கையின் மொத்த மக்கள் தொகையினரில் 35-40 வீதத்திற்கும் அதிகமானவர்களாக உள்ளனர். இவர்களுடன் நடுத்தர மக்களின் கீழ்த் தட்டினரையும் (இவர்களும் வறுமையில் வாழ்கிறார்கள்) சேர்த்துப் பார்த்தால் இந்த வலயத்தினரின் எண்ணிக்கை இலங்கையின் சனத்தொகையின் அரைவாசிக்கும் அதிகமானவர்களாகும்.

வறிய சிறு உடமை /சிறு குத்தகை விவசாயிகள், அங்காடி வியாபாரிகள், சிறு வியாபாரிகள், கிராமியத் தொழிலாளர்கள், நகர்ப்புற பயிற்றப்படாத மற்றும் முழுப் பயிற்சியில்லாத் தொழிலாளர்கள், நகர்ப்புற நுண் தொழில் முனைவோர்(குடிசைத் தொழிலாளர்-Micro Indusries), அழகியல் சேவை வழங்கல்த் தொழிலாளர்கள், பெரும் தோட்டத் தொழிலாளர்கள் (சுமார் 150வருட அனுபவமுள்ள, பெருந் தோட்டத் தொழிலையே தமது வாழ்வாகக் கொண்ட அமைப்புச் சார் தொழிலாளர்களாகிய இவர்கள் தமிழராகப் பிறந்த சாபக் கேட்டிற்காக, இலங்கையில் இன்னமும் வறியவர்க்குள் வறியவர் என்ற சமூகத்தட்டினராகவே உள்ளனர்) நாட்டுப்புறக் கலைஞர்கள், கலைத்தொழில் தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட சாதியினரின் மதகுருக்கள், கைவினைஞர்கள், பாலியல் தொழிலாளர்கள், துப்பரவுத் தொழிலாளர்கள், சுற்றுச்சூழல் மாசு அகற்றிகள் (குப்பை பொறுக்குபவர்கள்) அமைப்புச் சாராத் தொழிலாளர்கள், சேவை வழங்கு துறைக் குறுந் தொழில் முனைவோர்களிடம் பணிபுரியும் வெண் ஆடைத் தொழிலாளர்கள், வேலை வாய்ப்பற்றோர், ஆளும் வர்க்க உறுப்பினர்களாக உள்ள அரசியல் வாதிகளினதும், ராஜபோகம் அனுபவிக்கும் போக்கிரிகளினதும் விசுவாசிகளும் அடிபிடிக் கையாட்களும், உதிரித் தொழிலாளர்கள் (லும்பன்), அகதிகள், இத்தியாதியோரே விளிம்புநிலையோர் என்று அழைக்கப்படும் இந்த வர்க்கத் தட்டினரின் உறுப்பினர்களாகும்.

ஏறத்தாள ஒரே பொருளாதார தரத்திலுள்ள, வெவ்வேறு வகைப்பட்ட சுரண்டப்படும் வர்க்கங்களை உள்ளடக்கிய இவ் வர்க்கத்தட்டினர் இல்லாமல் ஒரு பொருளாதாரத்தால் உயிர் வாழ முடியுமா? அதுவும் நவீனமயப்படுத்தலில் பல தடங்கல்களை எதிர் கொண்டுள்ள இலங்கை போன்ற மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரத்திற்கு இவ் வறுமைப்பட்டோர் பட்டாளத்தின் இருத்தல் ஒரு அத்தியாவசியத் தேவையாகும். வேண்டியபோது சேர்த்துக் கொள்ளவும் வேண்டாதபோது தூக்கி எறியவுமான (hire and fire) அணி இல்லையானால் ஆரம்பமாகியுள்ள கட்டுமானத்துறைப் ‘புரட்சி’ சாத்தியமா? பெரும் கைத்தொழிலுக்கும், நடுத்தரக் கைத்தொழிலுக்கும் அவசியமான சிற்சிறு பாகங்களை உற்பத்தி செய்வது சாத்தியமா (Bata System)? ஆண்களின் பாலியல் தினவுகளை அமைதியான முறையில் தீர்ப்பது சாத்தியமா? சினிமாத்துறை, கோடிகள் புரளும் துறையாக துரிதமாக வளர்வது சாத்தியமா? நகரங்கள் நாற்றமெடுப்பதைத் தடுப்பது சாத்தியமா? தமிழ்நாட்டு மொழியில் கேட்பதானால் சிங்காரச் சென்னை சாத்தியமா? பாதுகாப்புச் சேவை வழங்கு துறைக்கு அவசியமான அரை-அடிமைத் தொழிலாளர்களை (ஆணையிடுகிறேன் கீழ்ப்படி கொள்கையின் படி செயற்படும் - Order and Obey Policy-படைவீரர்கள்) சேர்த்துக் கொள்ளல் சாத்தியமா? hire and fire தொழிலாளர்கள் இல்லாமல் இலங்கையின் மிகப் பெரும் வருமானமீட்டுத் துறையாக வளரவுள்ள சுற்றுலாத் துறை சாத்தியமா? 16 வயதுக்கு

உட்பட்ட சிங்கள சிறுவர்களிடமும் சிறுமிகளிடமும் இருந்து பாலியல் இன்பம் அனுபவிக்கும் சுற்றுலாப் பயணிகளைத் திருப்திப் படுத்துவது சாத்தியமா? வீட்டுப் பணியாளர்களும் 'ஆயாக்கள்', வீட்டுத் தோட்டக் காரர்களும் இல்லாமல் பணக்கார வீடுகளின் இருத்தல் சாத்தியமா? பௌத்த பன்சாலைகளில் திருவிழாக்காலங்களின் போது தொண்டு வேலைகள் நடைபெறுவதுவும், விழாக்களுக்குத் தேவையான பெருமளவிலான சிறுசிறு பொருட்கள் சேர்பதுவும் சாத்தியமா? பன்சாலைகளுக்குச் சொந்தமான நன்செய், புன்செய் நிலங்களின் பராமரிப்புச் சாத்தியமா? வடபகுதியின் ஆழமற்ற கடற் பரப்புகளில் (வட-கிழக்குப் பகுதி) மீன்பிடிக்கும் சிறு மீனவர்களினதும், ஆழமற்ற கடற்பகுதிகளில் மீன்பிடிக்கும் சிங்கள சிறு மீன்பிடி மீனவர்களினதும் முயற்சிகள் இல்லாமல் இலங்கை மக்களின் கடல் உணவுத்தேவை பூர்த்தியாவது சாத்தியப்படுமா? இச் சிங்கள சிறு மீனவர்கள் சுற்றுலாப் பயணிகளின் காட்சிப் பொருளாக இருந்து இலங்கைக்கு வருமானம் ஈட்டித்தருவதை யாரும் மறக்கமுடியுமா?- பெரும் குழிகளை களைப்பின்றித்தோண்டும் ஆயிரக்கணக்கான hire and fire மாணிக்கக்கல் தோண்டும் தொழிலாளர்கள் இல்லையானால், மாணிக்கக்கல் கிடைக்காத பட்சத்தில் கூலி கேட்கும் போர்க்குணமுள்ள முன்னணித் தொழிலாளர்களை அதே குழியில் வெட்டிப் புதைக்கும் உரிமை முதலாளிக்கு இல்லையானால் மாணிக்கக்கல் அகழ்வுத் தொழில் சாத்தியமா? சிறுபான்மைத் தேசியங்களின் மீதான இன ஒழிப்பு நடவடிக்கைகளின்போது பாதுகாப்புப் படையின் முறைசாராத் துணைப்படையாகச் செயல்படும் இவர்கள் இல்லையானால் சிங்கள பேரினவாதிகளின் மேலாதிக்கம் சாத்தியமாகுமா? தமிழர்களினதும் முஸ்லீம்களினதும் சொத்துக்களை சூறையாடுவதுதான் சாத்தியமா? இவ் வலயத்தினரின் பங்களிப்பு இன்றேல், ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையின் எண்ணிக்கையை வகை தொகையின்றி அதிகரிப்பது சாத்தியமாகுமா? இலவசங்களைக் கொடுத்து வாக்குகள் பெற்று ஜனநாயகத்தைக் காப்பதுதான் சாத்தியமா? பிழைக்கத் தெரியாதவர்கள், அநாகரீகமானவர்கள், இலவசங்களை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும் சோம்பேறிகள், என்றெல்லாம் முதலாளியப் பண்பாளர்களாலும், தூய்மை கெட்டவர்கள் எனச் சாதியப் பண்பாட்டாளர்களாலும் கருதப்படும் இவ் வலயத்தினரின் சமூக-பொருளாதார முக்கியத்துவத்தையும், உற்பத்தியிலும், சேவை வழங்கல் துறையிலும் இவர்கள் வகிக்கும் கேந்திர முக்கியத்துவம் மிக்க பங்களிப்பையும் எடுத்துக் காட்டுவதற்காகவே இவ்வளவு அதிகமான உதாரணங்களைக் கூறவேண்டிவந்தது. வாசகர்கள் இதுபோல் பல துறைகளை சிந்தித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

## 2.ஆ) விளிம்பு நிலையோரின் வறுமைக்கான காரணங்கள்

1. தொழில் நுட்பத் திறனின் அசுர வளாச்சியின் காரணத்தால், இவர்களின் உழைப்பின் மதிப்பு சராசரி உழைப்பின் மதிப்பைவிட மிகக் குறைவாக இருத்தல். அந்த உழைப்பை நிராகரிக்கவும் முடியாது, அதன் மதிப்பைக் கூட்டவும் முடியாது.
2. வேலையின்மை - இது அரசின் நேரடி அந்நிய முதலீட்டுக் கொள்கையால் ஏற்படுத்தப்படுவது. பத்துப் பேருக்கு வேலை கிடைத்தால் ஆகக் குறைந்தது அதைவிட மூன்று மடங்கு பேரின் (முப்பது பேர்) வேலை பறிக்கப்படுகின்றது. நிலமும் பறிபோகின்றது.
3. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு. அரசால் நிறுத்தப்பட முடியாதது. டாலரின் மனதைக்(மதிப்பை) குளிரவைப்பதற்காக அரசே உருவாக்கிக் கொள்வது.
4. அரசின் அநாவசியச் செலவுகள். ஜனாதிபதி இரண்டாம் தடவை பதவி ஏற்கும் போது நடந்தது இதில் ஒன்று.
5. சமூக அனர்த்தங்கள். இவை அரசால் நடத்தப்படுவன.
6. இயற்கை அனர்த்தங்கள். அரசால் தடுக்கப்பட முடியாதன.
7. ஊழல்.1 - இது விளிம்பு நிலை மக்கள் அதிகார வர்க்கத்திற்கு ரசீதுகள் எதுவுமின்றி நேரடியாகச் செலுத்தும் நேர் வரியாகிவிட்டது. வரித்தொகை எவ்வளவென்பது அதிகாரியின் பணத்தேவையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும். கட்டத் தவறினால் உரிமைகளும் சலுகைகளும் மறுக்கப்படும். அரசே ஊக்கப் படுத்துவது.
8. ஊழல்2 - அரசாங்க நிதியை அல்லது அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய நிதியை அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் கொள்ளையடிப்பது. இதனால் மக்களுக்குப் போகவேண்டிய மானியங்கள், சலுகைகள், சேவைகள் ஆகியவற்றில் துண்டு விழல்.
9. ஊழல் 3 அரச நிர்வாக இயந்திரத்தை தமது வர்த்தக நடவடிக்கைகளுக்குச் சாதகமாக வளைத்துப் போடுவதற்காக பல்தேசியக் கம்பனிகள் அரச அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் வளங்கும் 'நன்கொடைகள்'. இவை அரசின் வரவினத்தைப் பாதிக்கும். வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழும். ஈடுசெய்ய மானியங்கள் வெட்டப்படும்.
10. நிரந்தரக் குடியிருப்பு இன்மை அல்லது அதற்கான

உத்தரவாதம் எதுவும் இன்மை.

11. இனவாத அரசால் நடத்தப்படும் உள்நாட்டு யுத்தங்கள்.

## 2.இ) விளிம்பு நிலை வர்க்க மற்றும் சமூகத்தட்டுகள்

இலங்கையில் விளிம்பு நிலையோர் அனைவரும் ஒரே தேசிய இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால் முன்கூறிய பகுப்பு முற்றிலும் சரியானதாகவே இருக்கும். ஆனால் தற்போதைய இலங்கை, ஒற்றைத் தேசிய இன இராணுவ ஏதேச்சதிகார அரசின் கீழ் பல தேசிய இனங்கள் வாழும் ஒரு பூகோளப்பரப்பாகும். இதனால் இலங்கையின் இந்த விளிம்பு நிலை வலயத்தினரை இரு வகையினராகப் பிரிக்கலாம்.

ஒன்று தாராளவாதத்தின் இயல்பான போக்கால் அவஸ்தைப் பட்டுகொண்டிருக்கும் சிங்கள விளிம்பு நிலையினர். ஒரு வர்க்கத்தட்டு என்ற முறையில் இவர்கள் அடக்கி ஒடுக்கப் படுகிறார்கள். ஆனால் ஒரு ஆளும் தேசிய இனத்தின் உறுப்பினர் என்ற முறையில் வர்க்க ஒடுக்குமுறையை விட மேலதிகமான அடக்கு, ஒடுக்கு முறைகள் எதுவும் இவர்கள் மீது பிரயோகிக்கப் படவில்லை. அதே நேரம் விளிம்பு நிலையோர்க்கு வளங்கப்படும் சலுகைகள் அனைத்தும் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தைச் சேர்ந்த இவர்களின் வர்க்க சகோதரர்களுக்கு வளங்கப்படுவதில்லை. இது சிங்கள விழிம்பு நிலையோரைப் பெருமிதம் கொள்ள வைக்குமானால் அது ஆபத்தானது. ஏனெனில் இவர்கள் மீது செலுத்தப்படும் வர்க்க ஒடுக்குமுறை ஒன்றும் மென்மையானதல்ல. இச் சலுகைகளும் வாய்ப்புகளும் இவர்கள் நீண்ட நேரத்துக்கு முழங்காலில் நிற்க உதவுமே தவிர நேராக நிமிர்ந்து நிற்க உதவாது. முதலாளித்துவம் தனது வர்க்க எதிரிகளை அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் சரி அவர்களை சொந்தக்காலில் எழுந்து நிற்கவும் விடாது, சோம்பேறிகளாகவோ அல்லது பலவீனர்களாகவோ படுத்துக் கிடக்கவும் விடாது. முழங்காலில் நிற்க வைப்பதையே விரும்பும் சிங்கள விளிம்பு நிலையோர் பொருளாதார ரீதியிலோ, அரசியல் ரீதியிலோ முழங்காலில் நிற்பது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. அது வேதனைக்குரியதுமல்ல, ஏனெனில் அவர்கள் எழுவார்கள். ஆனால் பேரங்காரவாத சிந்தனையின் பாற்பட்டு அவர்கள் சிந்தனை ரீதியாகவும் முழங்காலில் நிற்பார்களேயானால் அதுதான் ஆபத்தானது. அவர்களுக்கு மாத்திரமல்ல, இது முழு இலங்கைக்கும் ஆபத்தானது.

தமிழ் பேசும் மக்கள், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களிடையே உள்ள விளிம்பு நிலையோர், இரண்டாவது வகை விழிம்பு நிலையோராகும். இந்த விளிம்பு நிலையோர், முன்கூறிய வர்க்கத்தட்டினரையும் பிறரையும் உள்ளடக்கிய ஒரு சமூகத் தட்டாகிறார்கள்.

பணக்கார விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், சேவை வழங்குதுறை நடுத்தரவர்க்கத்தினர், நகர, கிராம சிறு உற்பத்தியாளர்கள் ஆகியோரே அந்தப் பிறராகும்.

ஆனால் சிங்கள விளிம்பு நிலையோரோ, உழைக்கும் வர்க்கத்தினரின் பல்வேறு பிரிவினையினரையும் உள்ளடக்கிய ஒரு வர்க்கத் தட்டினராக மாத்திரமே உள்ளனர்.

தமிழினம் அல்லது தமிழர்கள் அனைவரும் இலங்கையில் விளிம்பு நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள் என்று கூறுவது முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பது போன்றதாகும். தமிழர்களின் மேட்டுக்குடி தமது வர்க்க நிலையில் மேலும் மேலும் வளர்ந்து கொண்டுதான் உள்ளார்களே தவிர அவர்கள் தமது வர்க்க நிலையிலிருந்து இறங்கவில்லை. இடப்பெயர்வுகள் அவர்களுக்கு சாதகமானதாகவே அமைந்துள்ளது. இதனால் தமிழ்த் தேசியம் விளிம்பு நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பது சுத்தப் பொய். விளிம்புநிலையோரை தமது அரசியல் படையணியாகப் பயன்படுத்துவதற்காக இப் பொய்யை பரப்பிவருகிறது. இன அடக்குமுறையானது, தமிழ்த் தேசியத்தின், இரு வர்க்கத்தட்டினரை விளிம்பு நிலைக்குள்ளாக்கியுள்ளது. இவ்விரு வர்க்கத்தட்டினரையும் ஒரு சமூகத்தட்டாக்கியுள்ளது.

## இ.3). **விளிம்பு நிலையாக்கமும் எதிர் வினையும்**

விளிம்பு நிலையாக்கமென்பது ஒரு நாட்டின்/தேசத்தின்/சமூகத்தின் அரங்குகளில் நடைபெறும் ஒரு சமூக நிகழ்வுப் போக்காகும். அரங்குகள் பலது, ஆகவே விளிம்பு நிலையாக்கமும் பலவாகும். இவ்விடத்தில் நாம் இலங்கையின் அரசியல்-பொருளாதார அரங்கிலான விளிம்பு நிலையாக்கம் பற்றியே விவாதிக்கின்றோம். இதுதான் நேரடியான வர்க்க விளிம்பு நிலையாக்கமாகும். தேசிய இன விளிம்பு நிலையாக்கம், மத மற்றும் சாதிய விளிம்பு நிலையாக்கம் ஆகியன எங்கும் வியாபித்து நடந்து கொண்டிருக்கும் ஒரு நிலப்பரப்பில் ஒட்டு மொத்த அரசியல் - பொருளாதார அரங்கைப்பற்றி மட்டும் பேசுவது சரியா? இது பிரச்சனையைத் திசை திருப்புவதாக அமைந்துவிடாதா? பேரகங்காரவாதத்திற்கு துணைபோகும் அல்லது சரணடையும் ஒரு சிந்தனைப் போக்காக அமைந்து விடாதா? என்பன போன்ற கேள்விகள் எழவே செய்யும். நியாயமான கேள்விகள். ஆனால் பதில்?

1950-களில் இருந்து 1970-கள் வரை வடமாகாணத்தில் இடதுசாரிக் கட்சிகள் தேசிய இன விவகாரத்தில் நடந்து கொண்டதைப் போலும் நடக்கக் கூடாது. 1970-களில் இருந்து 1990களின் பிற்பகுதிவரை தமிழ்ப் போராளிகள் தேசிய இன விவகாரத்தில் நடந்து கொண்டது போலும் நடந்து

கொள்ளக் கூடாது.

### இ.3.1) **தேசியத்தை நிராகரிக்கும் வர்க்கப் பார்வை**

முதல் தலைமுறை இடது சாரிகள், வடமாகாணத்தின் வர்க்கக் கட்டுமானத்தைப் புரிந்திருந்தார்கள், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும் சமூகத்தட்டுகளும் எவை என்பதைப் புரிந்து கொண்டிருந்தார்கள். மாறி மாறி வரும் அரசாங்கங்களின் வர்க்கத் தன்மையையும் புரிந்து கொண்டிருந்தார்கள், முழு நாட்டிலும் அப்பப்போ ஏற்பட்டுவந்த வர்க்க நிலை மாற்றங்களையும் புரிந்து கொண்டிருந்தார்கள். இதனால் மக்கள் மீதான வர்க்க ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு (வடக்கில்) தலைமை தாங்கினாரகள். நிலைத்து நிற்கக் கூடிய பல வெற்றிகளை அந்த மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார்கள். இதனால் அம் மக்களின் இதயங்களில் இன்றும் நிலைத்து நிற்கிறார்கள். ஆனால் மக்களின் மன அரங்கினில் இன்றும் வாழும் இவர்களால், தேசிய இன விவகாரங்களில் தாம் விட்ட தவறின் காரணத்தால் மக்களின் நிகழ்கால அரசியலில் அரங்கினில் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முன்நாள் அரசியல் தலைவர்கள் என்ற மரியாதையை மட்டும் காப்பாற்றிக் கொண்டுள்ளார்கள். தமது தவறுகளால் தமது தலைமை அந்தஸ்த்தை தாமே அழித்துக் கொண்டார்கள். இருந்தும் அது ஒரு இயக்கம். இயக்கம் என்பது வெறுமனே ஒரு அல்லது சில தனிநபர்களோ நிறுவனங்களோ அல்ல. இயக்கத்தினதும், இயக்கத்தின் தலைமையில் அணிதிரண்டு போராடிய மக்களினதும் தியாகங்கள் என்றுமே வீண் போகாது. ஒடுக்கப்பட்ட மக்கள் அதை வீண் போக விடமாட்டார்கள். நல்லதோர் வர்க்கக் களம் உருவானது, போராளிகளும் வந்தனர், தளபதியின் தவறால் போராட்டம் இடைநிறுத்தப்பட்டது. ஆழ்மனப் படிமங்கள் பௌதீக வடிவம் பெறும் புதிய தலைமை உருவாகும், போராட்டம் தொடரும்.

### இ.3.2) **வர்க்கத்தை நிராகரிக்கும் தேசியப் பார்வை**

தமிழ்ப் போராளிகளைப் பொறுத்தவரை அவர்கள் தேசிய இன அடக்குமுறைக்கு அடிப்படையான வர்க்கக் காரணிகளையும் அதன் இயக்கப் போக்கையும் தவிர மீதமெல்லாவற்றையும் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டவர்களாகும். எந்த ஊசலாட்டமும் இன்றி பேரினவாத அரசை எதிர்த்துப் போராட உறுதி பூண்டவர்கள், போராடியவர்கள், அதற்காகப் பெரும் தியாகங்களைச் செய்தவர்கள், பேரினவாத அரசையும் அதை வெளிப்படையாகவும் இரகசியமாகவும் இயக்குபவர்களையும் அம்பலத்துக்குக் கொண்டுவந்தவர்கள், அவர்களின் ஜனநாயக ஆடைகளைக் களைந்து நடு வீதியில் அம்மணமாக ஓடவிட்டவர்கள். தொடர்ந்தும் இவ்விதம் நடந்து கொள்வதற்கான ஆர்வமும் ஆற்றலும் மிக்கவர்கள்.

ஆனால், தமது ‘வர்க்கங்கள் கடந்த’ சிறுபிள்ளைத் தனமான அரசியல் பார்வையால், நிலைத்து நிற்கக் கூடிய வெற்றி எதையும் அவர்களால் ஏற்படுத்த முடியவில்லை. 1990களின் பிற்பாதியில் அவர்களின் மண்டை ஓட்டுக் குவியல்களில் இருந்து தமிழ்ப் பேரகங்கார இராணுவ எதேச்சதிகார அரசொன்று உருவானது. இது இவர்கள் விரும்பாத, இவர்கள் எதிர்பாராத ஒரு முடிவாக இருந்தாலும் இவர்களால் அதைத் தடுக்க முடியவில்லை. இவர்களின் தவறுகளால் இவர்களின் அணி சிதறடிக்கப்பட்டு, அரசியல் ரீதியில் ஓரங்கட்டவும் பட்டார்கள். பலர் தமது தவறுகளுக்கு தமது உயிரையே பலிகொடுத்தார்கள். இவர்கள் தமது முயற்சிகளில் தோற்றுப் போனாலும், அம்முயற்சியில் அவர்கள் சிந்திய இரத்தமும் காட்டிய துணிச்சலும் வழங்கிய அர்ப்பணிப்புகளும் மக்கள் மனதைவிட்டு என்றுமே அழியாது. அவர்களின் தவறுகளையும் மக்கள் மறக்க மாட்டார்கள், அவர்களின் தியாகங்களையும் மக்கள் மறக்க மாட்டார்கள். விதைகளாகி விட்ட அந்த நினைவுகள் விருட்சமாகாமல் விட்டு விடுமா என்ன? ‘விதை முளைத்தால் மரம், இல்லாவிட்டால் உரம்’ என்ற கூற்றுப் பொய்யாகி விடுமா என்ன? அவர்கள் வீழ்த்தப்பட்டது உண்மை. ஆனால், அந்த வீழ்ச்சி எதிரிகளின் பலத்தாலானதல்ல, போராளிகளின் பலவீனத்தால் ஆனது என்பதைப் போராளிகளும் அறிவர் மக்களும் அறிவர். அவர்கள் வரலாற்றின் வளரும் சக்திகள், ஆகவே வீழ்த்தப்பட்டவர்கள் வீழ்ந்தே இருக்க மாட்டார்கள். தோல்வியின் படிப்பினைகளுடன் எழுவார்கள், சிறுபிள்ளைகளாகவல்ல. முன்னைய சிறுபிள்ளைத்தனத்தையும், இளம் பருவக் கோளாறுகளையும் உதறியெறிந்த இளைஞர்களாக. இதுதான் இலங்கை மக்களின் எதிர்பார்ப்புகளாகும்.

வர்க்கப் பிரிப்போ வகுப்போ தொகுப்போ இல்லாத அரசியல் பார்வையே இவர்களின் தோல்விக்கான காரணமாகும். ஸ்ரீலங்கா அரசின் வர்க்கக் குணாம்சத்தை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அதை ஒரு இனவாத அரசாக மாத்திரமே பார்த்தார்கள். இலங்கைக் காங்கிரஸ், தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் நடவடிக்கைகளை தமிழ் இனத் துரோகமாகத்தான் பார்த்தார்களேதவிர, தமிழ் மேட்டுக்குடியினரான இத் தலைவர்கள் தமது வர்க்க நலனுக்கு ஒப்ப தமிழ்த் தேசியத்தை மிகச் சரியாகவே பயன்படுத்தியுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. தேசியம் வர்க்க நலன்களுக்கு அப்பாற்பட்டது, தேசிய இயக்கத்துள் வர்க்க பேதங்களைக் கொணரக் கூடாது, தேசியம் புனிதமானது, தேசியம் இன்றைய எரியும் பிரச்சனை, பிற விவகாரங்களைப் புகுத்தி அதை நீர்த்துப் போகச் செய்யக்கூடாது, என்றெல்லாம் நகைப்புக்கிடமாகச் சிந்தித்தார்கள். ஒவ்வொரு வர்க்கமும் தத்தமது வர்க்க நலனுக்கு ஒப்ப தேசியத்தை வடிவமைக்க முற்படுகின்றது. தேசியத்தின் தலைமையை தனது கரங்களில் எடுத்துக் கொள்ள தீவிரமாகப்

போராடுகிறது. போராடியே ஆகவேண்டியும் உள்ளது. ஏனெனில் ஒவ்வொரு வர்க்கத்துக்கும், தத்தமது வர்க்க நலன் தான் அனைத்து நலனயும் விட உயர்ந்தது. இப் புரிதல் இல்லாமையினால் தமிழ்ப் போராளிகள் தமக்குக் கிடைத்த நல்லதோர் களத்தைத் தவறவிட்டுவிட்டார்கள். தேசியப் போராளிகள் என்ற பங்களிப்பைக்கூட அவர்களால் வகிக்கமுடியவில்லை.

அப்படியானால் இக் கேள்விக்கான பதில்:

முதலில் முழு இலங்கையின் அரசியல்-பொருளாதார அரங்கைப் புரிந்து கொள்ளவேண்டும். இலங்கையின் அரசியல் கட்டுமானத்திலும் சமூகக் கட்டுமானத்திலும் அடிப்படை மாற்றங்களை கொண்டுவர நினைக்கும் அனைவருக்கும் இது ஒரு கட்டாய நிபந்தனையாகும். இந்தப் புரிதலின் அடிப்படையில்தான் இன ஒடுக்குமுறைக்கும் சாதிய ஒடுக்குமுறைக்கும் எதிரான வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, இம் மாற்றங்களைக் கொண்டுவரும் ஒருவர் பாக்கியில்லாமல் அனைவரிலும் ஒவ்வொரு தனிநபர்களும் தான் எந்த வர்க்கத்தின் அரசிய-பொருளாதார நலனைப் பிரதிநிதித்துவப்படுத்துக ிறேன் என்பதையிட்டு தெழிவான, ஊசலாட்டமற்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். பொதுத் தன்மையில் பேசுபவர்கள், எவராயினும் சரி அவர்கள் மேட்டுக்குடியின் அரசிய-பொருளாதார தேவைக்காக மக்களை இரையாக்கப் புறப்பட்டுள்ள புதிய வார்ப்புகள் எனக் கருதப்பட வேண்டியவர்களேயாகும்.

### 3.அ.4) இந்நாள் தாராளவாதப் பொருளாதாரமும் வடக்கின் எதிர்காலமும்

தமிழ்த் தேசியத்தின் தலைவர்களாக இதுவரை இருந்து வந்தது வடமாகாண மேட்டுக் குடியினரேயாகும். அதாவது இவர்கள்தான் தளபதிகள். ஆனால் இவர்கள் களத்தில் இறங்கவில்லை. திரைமறைவில் இருந்தவண்ணம் தலைமை தாங்கினார்கள். மத்திய வர்க்கத்தின் மிகப் பெரும்பான்மையினரே இவர்களின் போர்ப் படையினராக இருந்து வந்துள்ளார்கள். தற்போதும் இதையே தொடர எண்ணி அதற்கான தயாரிப்புகளில் இத் தலைவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் இத் தடவை ஒரு யுத்தத்தை நடத்தும் எண்ணத்தில் இவர்கள் இல்லை. தேசிய தற்காப்பு யுத்தத்தின் நோக்கம் நிறைவேறிவிட்டதாகவே இவர்கள் கருதுகிறார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் முதலீடு செய்வதே இவர்களின் நோக்கமாக உள்ளது. அதற்குரிய பணமும் தொழில் நுட்பமும் அவர்களிடம் உண்டு. பஞ்சையர்களானதும் பரதேசிகளானதும் சாதாரண மக்கள்தான், இவர்களல்ல.

இவர்கள் செல்வச் சீமான்களாகச் செழித்து வளர்ந்தனர். இம் முதலீடுகளின் இயக்கத்திற்குப் பாதுகாப்பான முறையிலான ஒரு அதிகாரப்பரவலாக்கலே இவர்களின் இன்றைய தேவையாக உள்ளது.

இதனால் மகிந்த சிந்தனையின் பொருளாதாரச் சிந்தனை, வட-கிழக்குப் பகுதியில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகளுண்டு. தனியார் முதலீட்டுக் கொள்கையின் தீய அம்சத்தை சிங்கள மக்கள் ஏற்கனவே அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர். யுத்தம் அவர்களின் கோபங்களைத் திசை திருப்பிவந்தது. இனி அக்கோபம் அரசுக்கு எதிராக எழும். இதனால்தான் மகிந்த சிந்தனையின் பொருளாதாரச் சிந்தனை இரு அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

*சேமநலத்திட்டம்* - இது சிங்கள மக்களுக்கு அவர்களின் வர்க்க உணர்வை அடக்குவதற்கு

*தாராளவாதத்திட்டம்* - இது வடக்கு-கிழக்கு முதலீட்டாளர்களுக்கு அவர்களின் தமிழ்த் தேசிய உணர்வை முனை மழுங்கச் செய்வதற்கு.

## 3.ஆ) இராணுவக் கட்டுமானமும் மகிந்த சிந்தனையும்

3.ஆ.1. ஜனாதிபதி மகிந்தவுக்கு முன்னைய ஜனாதிபதிகள்
3.ஆ.2. போர்வீரர் நலன் பேணல்

3.ஆ.3. எதற்காக இந் நலன் பேண் திட்டங்கள்?
3.1. இராணுவத்தைப் பலப்படுத்தல்

3.2. எதற்காகப் பலப்படுத்தப்படுகிறது?
3.2.1. இராணுவச் சதிக்கு அஞ்சியா?
3.2.1.அ. கரவாஸ்-கொவிகம ஆதிக்க மோதல்
3.2.1.ஆ. கடற்படை-தரைப்படை மோதலா?
3.2.2. மீண்டும் ஒரு தமிழ் எழுச்சியா?
2.அ. இந்தியத் தலையீட்டுக்கா?

3.2.3. மேற்காதரவுத் தமிழ்த் தேசியத்திற்கா?

3.அ. சிசுக் கொலையுண்ட இலங்கைத் தேசியங்கள். (தமிழ்த் தேசியத்தின் முதலாவது அத்தியாய நிகழ்வுகளில் சில)

3.ஆ. குற்றுயிராக்கப்பட்ட இலங்கைத் தமிழ்த் தேசியம்
(தமிழ்த் தேசியத்தின் இரண்டாவது அத்தியாய நிகழ்வுகளில் சில)

3.இ. அகச் சிதைவுத் தமிழீழத் தேசியம். (தமிழ்த் தேசியத்தின் 3-வது அத்தியாய நிகழ்வுகளில் சில):

3.ஈ. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் (TGTE) தமிழ்த் தேசியத்தின் உத்தேச நாலாவது அத்தியாய ஆரம்ப நிகழ்வுகள்

3.2.4. தமிழ் ஜனநாயகத் தேசியவாதிகளுக்கா?

3.2.5. இஸ்லாமிய எழுச்சிக்கா?
5.அ. கிழக்கில் தமிழ்ப் பேரகங்காரவாதம்
5.ஆ. காலனியல்கால இன ஒழிப்புச் சம்பவம்
5.இ. முஸ்லீம்களின் மதச்சார்பின்மை
5.ஈ யாழ் முஸ்லீம்களும் இடதுசாரிகளும்
5.உ. ஒலுவில் பிரகடனம்

3.2.6. ஆசிய வல்லரசுகளின் கடும்போக்கா?
3.2.7 இந்திய எதிர்ப்புக் கிளர்ச்சியா?
7.அ. தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையம்
7.ஆ. ஜே.வி.பியின் இந்திய விஸ்தரிப்பு எதிர்ப்புக் கொள்கை
3.2.8. முழு இலங்கை முதலாளிய ஜனநாயக இயக்கத்திற்கா?

3.2.9. இலங்கைத் தொழிலாள வர்க்கப் புரட்சியாளர்களுக்கா?

3.2.9.1. தன்னெழுச்சிப் போராட்டங்கள்
3.2.9.2. 'பொருளாதார யுத்தம்' யாருக்கு எதிராக?
3.2.9.3. இடதுசாரிகளின் நிலை

3.அ. முதல் தலைமுறை இடதுசாரிகள்
அ.1. முதலாளிய அரசு இயந்திரத்தைக் கையேற்றல்
அ.2. பாராளுமன்ற ஜனநாயகப் பாதை
அ.3. முதலாளியம் அற்ற பாதை
அ.4. பண்பாடுபற்றிய குறை மதிப்பீடு
அ.4.1 மகாவம்சக் கட்டுமானம்
அ.5. ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள்
அ.6. பொருளாதாரவாதம்
அ.6.1. வயிற்றுப் பிழைப்புவாதம்
அ.6.2. தொழிற்சங்கங்கள்

3.ஆ. இரண்டாவது தலைமுறை இடதுசாரிகள்
ஆ.1. மாஓயிஸ வாரிசுகள்
ஆ.2. ஜே.வி.பி
ஆ.3. கீழைக்காற்று
ஆ.4. புதிய ஜனநாயக மா-லெ-மா கட்சி

3.2.10. இன்னோர் இனப் படுகொலைக்காகவா?
10.அ. இனச் சுத்திகரிப்பின் இயங்கியல்
10.ஆ. இன்னோர் இனப்படுகொலை சாத்தியமா?

3.2.11. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவா?

## 3.ஆ.1) **ஜனாதிபதி மகிந்தவுக்கு முந்திய ஜனாதிபதிகள்**

ஸ்ரீலங்காவின் அரசியல் கட்டுமானத்தின் புற வடிவத்தைச் சிதைக்காமலே, இராணுவம் அரசியலுக்குக் கட்டுப்பட்டிருந்த நிலையை மாற்றி, அரசியலானது இராணுவத்துக்குக் கட்டுப்பட்டிருக்கும் நிலையை தோற்றுவித்தவர் ஜனாதிபதி மகிந்தவல்ல, அது முது பெரும் 'யங்கி டிக்கி' JRJ-ஏ யாகும். இதற்காக அவர் எந்த இராணுவச் சதியையும் செய்துவிடவில்லை. ஜனநாயகத் தேர்தலின் ஊடாகவே இதைச் சாதித்தார். இவரின் முதலாவது நடவடிக்கை நிறைவேற்று அதிகாரம் கொண்ட, தேவைப்பட்டால் பாராளுமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் தனது கைகளில் எடுத்துக் கொள்ளக்கூடிய அதிகாரம் பெற்ற, பாரளுமன்றத்துக்கு கட்டுப்படாத, ஜனாதிபதி ஆட்சிக் கட்டுமானத்தை பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்மதத்துடன் தோற்றுவித்ததாகும்.

அதனுடன் இணைந்ததான அடுத்த நடவடிக்கை, இந்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை பாரளுமன்றத்துக்கோ வேறு எந்த அரசியல் கட்சிகளுக்கோ இல்லாமலாக்கியதாகும். அந்த உரிமை கட்சிகளின் ஊடாக அன்றி நேரடியாகவே மக்களிடம் தரப்பட்டது. (ஆகா! அருமையான ஜனநாயகம்!) எந்தத் தனிநபரும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிற்கலாம். அதாவது அவர் மக்களுக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டவர் அரசியல் கட்சிகளுக்கோ, பாராளுமன்றத்திற்கோ, வேறு எந்த நிறுவனத்திற்குமோ அல்ல, மக்களுக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டவர்.

ஆனால் மக்களோ பாரளுமன்ற அரசியல் கட்சிகளை மையமாக வைத்தே அணிதிரட்டப்படுகின்றனர். தொழிற் சங்கங்கள், விவசாய சங்கங்கள், மாணவர் சங்கங்கள், மீனவர் சங்கங்கள், நலன் புரிச்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் இத்தியாதி சங்கங்கள் அனைத்துமே அரசியல் கட்சிகளை மையமாக வைத்தே செயல்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் இவை அரசியல் கட்சிகளின் அங்கங்களாகவுள்ளன அல்லது அவற்றின் துணையுடன் இயங்குகின்றன. ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் அரசியல் கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு இருக்கையில், இச் சங்கங்களுக்கு மட்டும் சுதந்திர வாய்களா இருக்கும்? இக் கட்சிகளை மீறி மக்கள் தம் விருபப்படி சங்கங்கள் அமைப்பார்களானால் அது பயங்கரவாதம் / தீவிரவாதம் / சட்டவிரோதம் / அந்நிய ஊடுருவல் என்று நாமம் சூட்டப்பட்டு அவை ஏதோ வகைக் குற்ற நடவடிக்கைகளாகக் கருதப்படும். அப்படியானால் மக்கள் எவ்விதம் குறைந்தது தமது உடன்பாடின்மையையாவது எடுத்துக் காட்டுவது? அதற்குக் கூட வழியில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தல்வரை பொறுத்திருப்பது என்று தானே இதற்கு அர்த்தம்? இதன் உண்மையான

விளக்கம் தனது பதவிக்காலம் முடியும் வரை ஜனாதிபதியை எவருமே எதுவும் கேட்கமுடியாது, ஒன்றுமே செய்யவும் முடியாதென்பதேயாகும். இதைத் தனிநபர் சர்வாதிகாரமென்று கூறாமல் வேறெவ்விதம் கூறுவது?

இலங்கையின் இன்றைய நிலையில் தரகு முதலாளிய அரசு / அரசுயந்திரமென்பது பரந்து விரிந்த உழைக்கும் மக்கள்மீது வர்க்க ஒடுக்குமுறையையும், முதலாளிய ஜனநாயக அணியினர்மீது தனிநபர் சர்வாதிகாரத்தையும், இலங்கையின் பூர்வீகத் தமிழர், மலையக வம்சாவளித்தமிழர், முஸ்லீமகள், பௌத்தர் அல்லாத பிற மதத்தினர், சில தமிழ் மற்றும் சிங்கள உயர் சாதிப்பிரிவினர், ஆகியோர்மீது இன,மத, சாதிய ஒடுக்குமுறையையும் செலுத்தும் சர்வாதிகாரமேயாகும். பிற இன,சாதி,மதப் பிரிவினர் மீதான சர்வாதிகாரமானது சிற்சில காலங்களில் அப்பிரிவுகளின் ஆளும் வர்க்கங்களுக்கெதிரான சர்வாதிகாரமாகவும் செயற்படுகிறது.

இச் சர்வாதிகாரத்தின் முதன்மை உறைவிடங்கள், அதாவது சர்வாதிகாரம் செலுத்தப்படுவதைச் சாத்தியப்படுத்தும் அங்கங்களாவன பாதுகாப்புப் படைகள், சட்டவாக்க அங்கங்கள், அதிகாரத்துவ அங்கங்கள், நீதி பரிபாலனத்துறை, பண்பாட்டுக் கட்டுமானம் ஆகிய ஐந்துமேயாகும். ஏனையவை அனைத்தும் இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலை கட்டுமானங்களேயாகும். முன்னையவை நான்கும் அரச நிறுவனங்கள், பின்னையது சுயாட்சித் தன்மை பெற்ற ஒரு சமூக நிறுனமாகும். இலங்கையில் பண்பாட்டுக் கட்டுமானம் எனும் இச்சமூக நிறுவனம் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட மத நிறுவனங்களை மையமாகக் கொண்டே ஒருங்கமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் பௌத்த மதம் அரசின் தனிவிசேட கவனிப்பைப் பெற்ற மத நிறுவனமாகவுள்ளது. பௌத்தந்தான் இலங்கையின் அரச மதம் என்பதை என்றும் மறவாதிருப்போமாக! பௌத்தம் அரச மதமென்ற நிலையைத் தோற்றுவித்தது JRJ அல்ல. பௌத்த சிங்களத் தேசியத்தின் தலைவர்களான 'அப்பே ஆண்டுவ'த் தலைவர்களேயாகும். அவர்களின் அரசியல் ஊக்குவிப்போர்களாய் இருந்த முதல் தலைமுறை இடதுசாரிகளோ, சிங்களத் தேசியவாதத்தை ஜனரஞ்சகப் படுத்துவதற்கென வகுக்கப்பட்ட ஒரு தந்திரோபாயமாக மதவாதத்தை நியாயப்படுத்தினார்கள். ஆனால் இது விதேசிய முதலாளிய சர்வாதிகாரத்துக்கு ஒரு பலமிக்க சமூக அடித்தளத்தை அமைத்துக் கொடுத்ததாக அமைந்துவிட்டது. முதல் தலைமுறை இடதுசாரிகளின் உதவியுடன் நிலமானிய முறைப் பண்பாட்டுக் கட்டுமானம் புதிய சூழலுக்கு ஒப்பத் தன்னை மறுவிருத்தி செய்துகொண்டது.

புதிய அரசியல் சாசனத்தால், பாரளுமன்றமென்ற சட்டவாக்க அங்கம் ஜனாதிபதிக்கு அடிமைப்படுத்தப் பட்டதை ஏற்கனவே கவனித்தோம்.

### 3.ஆ.1.1) **நீதித்துறையை சிறைப்பிடித்தல்**

இச் சாசனம் நடைமுறைக்கு வந்த உடனேயே JRJ, நீதி பரிபாலனத்துறையுடன் ஒரு யுத்தத்தையே நடத்தினார். பாராளுமன்றத்தினதும், ஜனாதிபதியினதும் பாதுகாப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நீதிபரிபாலனத் துறைக்கிருந்த சாசன ரீதியான பாதுகாப்பை, 1978 சாசனம் நீக்கியது. இதே சாசனம், நீதிபரிபாலனத்துறைக்கான அனைத்து நியமனங்களை மேற்கொள்ளும் பொறுப்பையும் கேட்டுக் கேள்விக்கிடமின்றி ஜனாதிபதியின் வசம் ஒப்படைத்தது. ஜனாதிபதிக்கும் பிரதம நீதிபதிக்கும் இடையேயான ஆலோசனைகள் நடைபெறும் மரபுகள் மற்றும் சடங்குகள் எதையுமே விட்டுவைக்கவில்லை. அனைத்தும் துடைத்தெறியப்பட்டன. பதவி உயர்வின்போது முதுநிலை (seniority) ஒழுங்குகள் மீறப்படுதல், அரசியல் பாரபட்சம் காட்டப்படுதல் போன்ற அதிகாரத் துஷ்பிரயோகங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான எந்தப் பாதுகாப்பும் நீதிபரிபாலனத்துறைக்கு வழங்கப்படவில்லை. நீதி பரிபாலனத்துறை தனது தன்னாட்சியுரிமையை இழந்து ஜனாதிபதி ஆட்சி முறைமைக்குக் கட்டுப்படுவது எழுதப்படாத ஒரு மரபாகிவிட்டது. இன்றும் இப்புதிய மரபு தொடர்கிறது. வடக்கு, கிழக்கு இணைவை செல்லாததென நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. ஜனாதிபதி மகிந்த தனது பதவிக்காலம் முடியுமுன்னரே ஜனாதிபதி பதவியில் இருந்த வண்ணமே ஜனாதிபதித் தேர்தலை நடத்த அனுமதித்தது, இரண்டு தடவைதான் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் நிற்கலாம் என்ற விதியை சர்வஜன வாக்குரிமை இன்றியே திருத்த பாராளுமன்றத்திற்கு அனுமதி வழங்கியது, ஐ.நா சபையின் விசாரணைக்கு உட்படவேண்டிய கடமைப்பாடு ஸ்ரீலங்கா அரசுக்கில்லையெனத் தீர்ப்பு வழங்கியது, அனைத்துலகத் தொழிலாளர் சங்க (ILO) விதிகளுக்குக் கட்டுப்படவேண்டிய அவசியம் ஸ்ரீலங்கா அரசுக்கு இல்லையென தீர்ப்பு வழங்கியது, ஆகியவை நீதி மன்றம் தனது சுயாதீனத்தை ஜனாதிபதியிடம் இழந்து விட்டதற்கான சில ஆதாரங்களாகும்.

அனைத்துலக மனித உரிமைப் பிரகடனங்கள் எதையுமே ஸ்ரீலங்கா அரசு சட்டரீதியாகப் பிரயோகிக்க வேண்டியதில்லை எனத் தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பு இலங்கையின் மனித உரிமை பாதுகாப்பிற்கு பெரும் குந்தகம் விளைவிப்பதாக அமையும். இந்த முடிவும், 1949 ஜெனிவா உடன்படிக்கையின் பொதுப் பகுதி3ஐப் (Common Article3) பிரயோகிப்பதை மறுக்கும் அதிகாரிகளின் முடிவும் பாரிய மனித உரிமை மீறல்களினாலோ அல்லது போர்க் குற்றங்களினாலோ பாதிக்கப்பட்டவர்களுக்கு தேசிய நிவாரணம் பெற்றுக் கொடுப்பதை சாத்தியமற்றதாக மாற்றியுள்ளது.

இலங்கை மக்களின் பாராளுமன்ற ஜனநாயக உரிமைகள், மனித

உரிமைகள், சாசன உரிமைகள் ஆகியனவற்றை மறப்பதற்கும், தேவைப்படின் அடக்குவதற்காகவுந்தான் நீதிபரிபாலனத்துறையின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. மிகப் பிரதான சுதந்திரப் பறிப்புத்தான் கீழே தரப்பட்டுள்ள, ஸ்ரீலங்காவின் இரு அவசரகாலச் சட்ட விதிகளின் தொகுப்புகளாகும்.

1. எண் 25, 1947-ன் பொதுநலப் பாதுகாப்புச் சட்டம் (Public Security Ordinance)

2. 1979-ன் பயங்கரவாத தடுப்புச் சட்டம்.

இவ்விரு சட்டவிதிகளும் முறைகேடான தடுப்புக்காவல்களையும் சித்திரவதைகளையும் தடுப்பதில் நீதிமன்றங்களுக்குரிய அதிகாரங்களையும், நீதிவழங்கும் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவதில் கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது.

### 3.ஆ.1.2) **பாராளுமன்றத்தைச் சிறைப்பிடித்தல்**

JRJ பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பாரளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்கிறேன் எனத் தேதியிடப்படாத கடிதங்களை வாங்கி வைத்துக்கொண்டே தனது காரியங்களைப் பார்த்தார். ஆனால் MR அவரையும் மிஞ்சிவிட்டார்.

JRJ-ஐத் தொடர்ந்து ஜனாதிபதியான றணதுங்க பிரேமதாசா IPKF-ஐ வெளியேற்றுவதற்காக புலிகளுடன் வரலாற்றுத் திருப்புமுனையான சமரச ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். இது இவரின் தன்னிசையான முடிவாகும். அதேபோல் JVP யின் தலைவர் றோகன விஜயவீரவை எந்த விசாரணையுமின்றி சிறையில் வைத்தே கமுக்கமாகக் கொலை செய்ததுவும் தன்னிச்சையான முடிவுதான். ஜனாதிபதி மகிந்த அதை முல்லைத்தீவு வெட்ட வெளியில் வைத்துச் செய்தார். ஆனால் இது களத்தில் நடந்த கொலை, முன்னையது சிறையில் நடந்தது.

ஜனாதிபதி மகிந்தவின் அரசியல் மூதாதையர்களில் இளையவரான குமாரதுங்க சந்திரிகா பண்டாரநாயக்க பாராளுமன்றத்துடன் ஏற்பட்ட முரண்பாட்டில் அப்போதைய பிரதமர் றணில் விக்கிரமசிங்காவின் அமைச்சுகளைப் பறித்தார், அதுவும் சரிவராது போனபோது பாராளுமன்றத்தையே கலைத்துவிட்டார்.

இச் சம்பவங்கள் ஜனாதிபதியைப் பகைத்துக் கொண்டால் என்ன நடக்கும் என்பதைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் நன்றாகவே புரிய வைத்தன. இந்த அச்சத்தை ஜனாதிபதி மகிந்த

தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். எட்டு வருட ஆட்சியை (மனதளவில்) உறுதிப் படுத்திக் கொண்டார். தனிநபர் சர்வாதிகாரம் மேலும் கெட்டிப்படுத்தப்பட்டது.

அதிகார வர்க்கத்தினருக்கும், சட்டவாக்கத்துறையின் தலைமகர்களுக்கும் (அமைச்சர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும்) இடையே ஒரு நட்புறவு நிலவுவதே பாராளுமன்ற ஜனநாயகத்தின் பிரதான ஓட்டமாக இருந்தது. ஆனாலும் இந் நட்புறவானது சம நிலையில் இருப்பவர்களுக்கிடையேயான நட்புறவாக இருக்கவில்லை. சத்தம் போட்டுப் பேசும் உரிமை உள்ளவனுக்கும், அடக்கி வாசிக்கும் கடமையுள்ளவனுக்கும் இடையேயான நட்புறவாகவே இருந்தது. சராசரி அதிகாரிகள் விட்டுக் கொடுத்தனர், சில 'புத்திசாலித்தனமான' அதிகாரிகள் விட்டுப்பிடித்தனர். ஜனாதிபதி முறை நடைமுறைக்கு வந்ததன்பின்னர், நிலைமை தலைகீழாக மாறியது. தலைமகர்கள் அடக்கிவாசிக்கவும், அதிகாரிகள் உரத்துப் பேசவும் ஆரம்பித்துவிட்டார்கள். அதிகார வர்க்கத்தினர் ஜனாதிபதிச் செயலகத்தின் அதிகார முத்திரையுடன் செயற்படுவதே நிஜமானது. இதனால் அதிகார வர்க்கத்தினரும் சட்டவாக்கத்துறையை மதிக்காத போக்கு ஒன்று உருவாகியுள்ளது. 1977இன் பின், ஜனாதிபதி மகிந்த காலத்தில்தான் இந்த நிலைமை அதிகரித்துள்ளது. மகிந்தவின் மிகப் பெரிய அமைச்சரவை நாட்டை ஆளுவதற்காக அமைக்கப்பட்டதல்ல. அரசியல் கட்சிகளையும், அரசியல் செல்வாக்கு மிக்க தனிநபர்களையும் கைக்குள் போட்டுக் கொள்வதற்காக அமைக்கப்பட்டதொரு அமைச்சரவையாகும். இது போகிகளையும், சுகபோக மோகிகளையும் கொண்டு அதிகளவு பணச்செலவில் நடந்து கொண்டிருக்கும் ஒரு கொலுப் பொம்மைக் காட்சிச்சாலையாகும். இதனால் ஜனாதிபதிச் செயலகம் அதிகார வர்க்கத்தினரை கட்டுப்படுத்தும் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையின் ஜனநாயக ஆட்சி முறையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகார அடுக்கின் விளிம்பு நிலையோராகவும் மாறிவிட்டார்கள். ஜனாதிபதியின் வாக்கு வங்கிகளாகவும் ஆகிவிட்டார்கள்.

### 3.ஆ.1.3) **பண்பாட்டுக் கட்டுமானத்தை வளைத்துப் போடல்**

ஆளும் வர்க்கச் சர்வாதிகாரம் 'சமூகமாக'ச் செலுத்தப்படுவதைச் சாத்தியப் படுத்தும் அங்கங்களான பாதுகாப்புப் படைகள், சட்டவாக்க அங்கங்கள், அதிகாரத்துவ அங்கங்கள், நீதி பரிபாலனத்துறை, பண்பாட்டுக் கட்டுமானம் ஆகிய ஐந்திலும், சட்டவாக்கத்துறை வெறுமனே ஒரு அலங்காரப் பொம்மையாகி விட்டது. அதிகாரத்துவ அங்கம் நேரடியாகவே ஜனாதிபதி செயலகத்தின் கீழ் வந்துவிட்டது. நீதி பரிபாலனத்துறையும் தனது சுயத்தை இழந்து விட்டது.

பண்பாட்டுக் கட்டுமானத்தைப் பொறுத்தவரை பௌத்த மத நிறுவனத்தை மையமாகக் கொண்ட, மகாவம்சம் என்ற மெல்லிய தங்கநூல் இழையால் பின்னப்பட்ட பௌத்த கட்டுமானம் ஒன்றைத்தவிர ஏனையவை எல்லாம் முடிந்தால் பிழைத்துக் கொள்ளுங்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. சர்வாதிகாரத்தை இயக்கக்கூடிய நிலையிலிருப்பது, பாதுகாப்புப் படையையும், அதிகாரக் கட்டுமானத்தையும் தனது கைகளில் வைத்துள்ள ஜனாதிபதிச் செயலகம் மாத்திரமேயாகும். இச் செயலகத்தை அணுகக் கூடிய வாய்ப்புகளைப் பெற்றிருப்பது பௌத்த மத நிறுவனங்கள் மாத்திரமேயாகும். ஆனால் இங்கும் சாதிப்பாகுபாடு இருப்பதால் கொவிகம சாதிய பௌத்த நிறுவனத்துக்கு மாத்திரமே கட்டுப்பாடுகளற்ற வாய்ப்புகள் உண்டு. பௌத்த-சிங்கள பேரகங்காரவாதத்தின் சர்வாதிகாரத்துக்கும் பௌத்த பண்பாட்டுக் கட்டுமானத்துக்குமிடையில் நெருக்கமான பிணைப்புகளுண்டு. இப் பிணைப்புகள் பற்றிய விளக்கங்கள் இனிவரும் பகுதிகளிலுண்டு.

### 3.ஆ.1.4) **ஊடகத் துறையை முடக்கியது**

ஜனாதிபதி மகிந்தவின் யுத்தப்பிரகடனம், புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரானது மாத்திரமல்ல, அது இலங்கையின் ஒட்டுமொத்த ஊடகத்துறைக்கும் எதிரானதாகும். முன் கூறிய பொதுநல பாதுகாப்புச் சட்டமும், பயங்கரவாத தடுப்புச் சட்டமும் ஊடகத்துறைக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது. தொடர்ந்தும் அமுலிலிருக்கும் அவசரகாலச் சட்டம் எரியும் நெருப்புக்கு எண்ணெயூற்றுகின்றது. ஊடகவியலாளர்களில் சிலர் கொலைசெய்யப்பட்டார்கள், பலருக்கெதிராக கொலைப்பயமுறுத்தல்கள் விடப்பட்டன. இதனால் இவர்களில் சிலர் புலம்பெயர்ந்தார்கள். சில ஊடகங்கள் தடைசெய்யப்பட்டன, சில முடக்கப்பட்டன. யுத்தம் நடை பெற்றுக்கொண்டிருக்கும்போது தமது ஜனநாயக விரோதச் செயலை நியாயப்படுத்த மகிந்தவிற்கு சில நியாயங்களிருந்தன. ஆனால் யுத்தம் முடிந்து, குறுகிய கால இடைவெளியில் நடத்தப்பட்ட மூன்று பிரதான தேர்தல்களின்போதும் ஊடகத்துறை சிறைபிடிக்கப்பட்டிருந்தது.

...... பாதுகாப்பு ஊடக மையத்தின் சுவர்களில் இவ்விதம் எழுதப்பட்டிருந்தது.

“பத்திரிகைச் சுதந்திரத்தை எமக்குத் தந்தது நிருபர்களல்ல, அது இராணுவவீரர்களே!”

“பேச்சுச் சுதந்திரத்தை எமக்குத் தந்தது கவிஞர்களல்ல, அதுவும் இராணுவவீரர்களே!”

முதலாளித்துவ ஜனநாயகத்துவவாதிகளால் ஜனநாயகத்தின் ஐந்தாவது தூணெனப் புகழ்ந்து பேசப்படும் ஊடகத்துறை இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டுள்ளது. ஜனநாயக்கத்தை மறுக்கும் மத்தியத்துவம்பற்றி எதுவுமே பேசாமல் அந்த மத்தியத்துவத்தால் குற்றுயிரும் குறை உயிருமாக ஆக்கப்பட்டுள்ள ஜனநாயகம் பற்றி மட்டுமே புகழ் பாடுபவர்களையே முதலாளித்துவ ஜனநாயகவாதிகளென குறிப்பிடுகிறோம்.

## ஆளும் வர்க்க உள்முரண்பாடுகள்

சிங்களத் தேசியத்தின் மேட்டுக் குடியினர், சாதிரீதியாகவும், மதரீதியாகவும், குல கோத்திர ரீதியாகவும் தமக்குள் இடைவிடாது மோதிக்கொண்டிருப்பதையே தமது இயல்பான சுபாவமாகக் கொண்டவர்களாகும். மன்னர் காலத்தில் இருந்து இது தொடர்கிறது. காலனிக்குப் பின்பு போர்வையின் அடியில் அப்பப்போ புகைந்து கொண்டிருந்த முரண்பாடுகள், ஜனாதிபதி ஆட்சி முறையுடன் மீண்டும் பகிரங்க அரங்கிற்கு வரத்தொடங்கியுள்ளன.

றத்வத்த குடுமபத்தைச் சேர்ந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையைப் பறித்தார் ஜே.ஆர் இது உடறட்ட - மலைநாட்டுச் சிங்களவர்களுக்கும் பாத்தறட்ட - கரையோரச் சிங்களவர்களுக்கும் இடையே இருந்து வரும் முரண்பாடு. றத்வத்த குடும்பத்தைச் சேர்ந்த உடுகம எனும் இராணுவ அதிகாரிதான் 1960களில் ஜே.ஆர் அரசாங்கத்திற்கு எதிரான இராணுவ சதிக்குத் தலைமை தாங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டவராகும்.

அத்துலத் முதலியைப் போட்டுத்தள்ளினார் ஜனாதிபதி பிரேமதாசா.

## அத்துலத் முதலி கொலை

1993-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், 23-ம் திகதி, இவர் கொழும்பில் வைத்து சுட்டுக்கொல்லப்படுகிறார். சுட்டுக்கொன்றது புலிகளியக்க இளைஞன் என்பது உடனடியாகக் ‘கண்டுபிடிக்கப்படுகிறது’. அரசாங்கத்தின் இக் ‘கண்டுபிடிப்பை’ எவருமே ஏற்றுக்கொள்ளவில்லை. இது ஜனாதிபதி பிரேமதாசா அவர்களின் திருவிளையாடலென்பதே பொதுவான கருத்தாகவிருந்தது. இறுதி மரியாதை செலுத்துவதற்காக வந்த பிரேமதாசாவையும் அவரின் சகாக்களையும், திருமதி அத்துலத் ஸ்ரீமணி வீட்டினுள் நுழையவே அனுமதிக்கவில்லை. அதேவேளை இராணுவ உயரதிகாரிகளும், பிற முப்படையினரும் அனுமதிக்கப்பட்டனர். இக்கொலைக்கு மூன்று வருடங்களின் முன்பாக அத்துலத் முதலியின் நண்பரும், கொழும்புவாழ் உயர் மேட்டுக்குடி உறுப்பினர்களில் ஒருவருமான திரு. றிச்சட் டி சொய்சா என்பவர் பொலிஸ் குழுவென சந்தேகிக்கப்படும் அணியால் சுட்டுக்கொல்லப்பட்டார். அரசசார்புப் படையினரால் நடத்தப்பட்ட முதலாவது சிங்கள உயர்குடிக்கொலை இதுவேயாகும். இது அத்துலத் முதலிக்கு விடப்பட்ட எச்சரிக்கையாகவே கருதப்பட்டது. பிரமேதாச

அரசாங்கத்தில் கல்வியமைச்சராக இருந்த (1988-1991) அத்துலத் முதலி 1991-ல் அரசாங்கத்திலிருந்தபடியே பிரேமதாசாவின் அதிகாரத் துஷ்பிரயோகத்தையும் ஊழலையும் எதிர்த்துப் பகிரங்க இயக்கம் நடத்தினார். புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதும் இந்த அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஒன்றாக குற்றம் சாட்டப்பட்டது. இதனால் கட்சியைவிட்டு வெளியேற்றப்பட்ட இவர் 'ஜனநாயகத் தேசிய முன்னணி' என்றோர் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராகவும் செயல்பட்டார். பிரேமதாசாவை எதிர்த்து ஜனாதிபதி தேர்தலில் நின்று தோல்வியும் கண்டவராகும்.

கொழும்புவாழ் மேட்டுக்குடிக் குடும்ப, கொவிகம சாதிய உறுப்பினரான இவர், ஓரே கட்சியில் போட்டியிட்டும், சலவைத் தொழிலாளர் சாதிப்பிரிவைச் சேர்ந்தவரும், மேட்டுக்குடி குடும்ப உறுப்பினரல்லாதவருமான பிரேமதாசாவிடம் தோல்வி கண்டது ஏன் என்பது ஆராயப்படவேண்டும். பிரேமதாசா கடுமையான இந்திய எதிர்ப்பாளர். அத்துலத் முதலி தீவிர இந்திய ஆதரவாளர். ஜேவிபி யை எதிர்ப்பதில் பிரேமதாசா காட்டிய துணிச்சல் அத்துலத் முதலியிடம் காணப்படவில்லை. இவையிரண்டும் உடனடி அரசியல் காரணங்களாக இருக்கலாம். சிங்கள மேட்டுக்குடிக்கு பிரேமதாசா தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் காரியம் முடிந்ததும் அவர் கழற்றிவிடப்பட்டார். 'ஜனநாயகத்தின்' மூலம் முடியாததை கொலையின் மூலம் சாதித்துவிட்டார்கள்.

1984-1988-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஜே.ஆர் அரசின் பாதுகாப்பமைச்சராக இருந்தவர் அத்துலத் முதலியேயாகும். புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான போர் நடவடிக்கைகளில் உறுதியானவர், துணிச்சலானவர், கடுமையானவரென சிங்கள இனவாதிகளால் பாராட்டப்பட்டவராகும். புலேந்திரனும் அவரின் நண்பர்களும் தற்கொலை செய்யக்கூடிய சூழலை உருவாக்கி, இந்தியரசையும் புலிகளையும் மோதத்தூண்டியவரும் இவரேயாகும். 1987-ல் பாராளுமன்றக் கட்டிடத்தில் வைத்து இவர்மீது குண்டெறியப்பட்டது. பலத்த காயமடைந்தாலும் அரசியலில் இருந்து இவர் ஒதுங்கவில்லை.

### காமினி திசநாயக்க கொலை

அத்துலத் முதலியின் கொலைக்குப்பின் றணசிங்க பிரேமதாசாவும் கொலைசெய்யப்பட்டார். அதற்கடுத்ததாக கொலைசெய்யப்பட்ட சிங்கள மேட்டுக்குடி அரசியல்வாதி காமினி திசநாயக்காவாகும். இவர் உடறட்ட கொவிகம சாதியின் உறுப்பினராகும். நுவரெலியவாசியான இவரின் குடும்பம் மிக 'உயர்' குடும்பமாகும். 1994 ஜனாதிபதித் தேர்தலின் போது இவர் UNP சார்பில் சந்திரிகா குமாரதுங்காவை எதிர்த்து ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டார். அப்போது சந்திரிகா குமாரதுங்க பிரதம மந்திரியாகவும்,

காமினி திசநாயக்க எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தார். இருவரும் பலம்பெற்ற ‘உடறட்ட’ கொவிகம சாதியின் உயர் குடும்ப உறுப்பினர்களே. இந்தத் தேர்தலின்போதுதான் காமினி திசநாயக்க கொலைசெய்யப்பட்டார். இவரின் மனைவி ஸ்ரீமா திசநாயக்க போட்டியிட்டுத் தோல்விகண்டார். சந்திரிகா குமாரதுங்க வெற்றிபெற்றார்.

இலங்கையின் மிகப்பெரும் அபிவிருத்தித் திட்டமான மகாவலி அபிவிருத்தித் திட்டம் அவரின் பொறுப்பிலேயே இருந்தது. 30வருடங்கள் எடுக்குமென எதிர்பார்த்த திட்டத்தை இவர் 6வருடங்களில் முடித்தார். இதனால் நெல் உற்பத்திப் பெருக்கத்திலும், மின் உற்பத்திப் பெருக்கத்திலும் ஏற்பட்ட வளர்ச்சிக்காக இவர் பெரிதும் பாராட்டப்பட்டார். யாழ்ப்பாண நூல்நிலைய எரிப்பிலும் இவருக்கு நேரடிப் பங்குண்டு. இதனால் தமிழ் மக்களால் இவர் பெரிதும் வெறுக்கப்பட்டார். இக் கொலை பெண் தற்கொலைப்படை உறுப்பினர் ஒருவரால் செய்யப்பட்டதாகவே கருதப்பட்டது.

ஆனால், சிங்கள மேட்டுக்குடி அரசியல்வாதிகளின் ஒவ்வொரு கொலைக்கும், அவர்களுக்கெதிரான ஒவ்வொரு கொலை முயற்சிக்கும் பின்னால் நேரடியானதும் உடனடியானதுமான உள்மோதல்கள் செயல்பட்டிருப்பது கூர்ந்து கவனிக்கப்படவேண்டியதொன்றாகும்.

பிரதமர் ரணிலை செல்லாக்காசாக்க பல முயற்சிகள் மேற்கொண்டார், ஜனாதிபதி சந்திரிகா.

ஜனாதிபதி மகிந்த இப்போது தனது பங்கை ஆரம்பித்துள்ளார். கரவாஸ் இன சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து விட்டார். (இவை பற்றி விரிவாக தொடரும் பகுதிகளில் தரப்பட்டுள்ளன.) இதன் மூலம் கொவிகம சாதிப்பிரிவினரின் அரசாக, மகிந்த அரசு மாறியுள்ளதானது ஒளிவு மறைவற்றதாகிவிட்டது. கரவாஸ் மதபீடமான அமரபுர நிக்காயாவும் ஓரங்கட்டப்படுகிறது. இதன் மூலம் முன் சொன்ன குணங்களுடன் சேர்ந்து கொவிகம வெள்ளாள சர்வாதிகாரம் என்ற குணாம்சத்தையும் இவ் வரசு பெறுகிறது.

இந் நிலைதான், ஜனாதிபதி மகிந்தவை இராணுவவாதத்தையும், பௌத்த சிங்கள மத அடிப்படைவாதத்தையும் தனது இரு பெரும் சகாக்களாக வைத்துக் கொள்ள வைத்துள்ளது. இதுவே ஜனாதிபதி மகிந்த சிந்தனையின் இராணுவக் கோட்பாடுகளின் அடிப்படையாகும். இனிவரும் பகுதிகளில் அக் கோட்பாடுகள் எவையென்பதை நோக்குவோம்.

## 3.ஆ2) **போர்வீரர் நலன் பேணல்**

*ஜனாதிபதி மகிந்த சிந்தனையின் குறிப்பிடக்கூடிய மற்றோர் அம்சம், இராணுவத்துருப்புகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு அவர் மேற்கொண்ட, மேற்கொள்வதாக அவர் அறிவித்துள்ள நடவடிக்கைகளாகும். அது, கீழ்க்கண்ட வாக்குறுதிகளை பாதுகாப்புப் பிரிவுக்கு வழங்குகிறது.*

## 2.அ) **இராணுவ நலன் பேணல்**

- சுதந்திரத்தின் உதயத்திற்கு பங்களித்தோர் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் போது உயிர் நீத்த அல்லது ஊனமுற்ற, ராணுவ வீரர்கள் ஒரே இனத்தையோ அல்லது ஒரே இனப்பிரிவையோ சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் போராடியது எந்தவொரு இனத்திற்கோ அல்லது இனப்பிரிவிற்கோ எதிராக அல்ல.
- .........இறுதிப் படைவீரர் வரை அவர்களது குடும்பங்களின் பிள்ளைகளுக்காக என்னால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு நான் தயங்கமாட்டேன்.
- ...........முழுமையான ஊனமுற்ற நிலைக்குள்ளாகிய அனைத்து ஊனமுற்ற இராணுவப் படை அங்கத்தவர்களுக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அதே போன்று ஊர்காவற்படை வீரர்களுக்கும் உயிர் வாழும் வரை சம்பளம் வழங்குவேன். அதேபோன்று அவர்களுக்கு பராமரிப்பையும் வழங்குவேன்.
- உயிர் நீத்த மற்றும் முழுமையாக ஊனமுற்ற நிலைக்கு உள்ளாகி இருக்கும் ஒவ்வொரு படைவீரரது குடும்பத்திற்கும் ஒரு காணியின் அல்லது வீட்டின் உரிமையை உறுதி செய்யும் பொருட்டு ‘இப்பலோகம’ என்னுமிடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ‘றண ஜயபுர’ வீடமைப்புத் திட்டத்தைப் போன்ற 15 திட்டங்களை இராணுவ வீரர்களது தேவைக்கு ஏற்ப நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் நிர்மாணிப்பேன். இதற்குத் தேவையான நவீன உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு ரூபா 500 கோடி ஒதுக்குவேன். வீடுகளை நிர்மாணிப்பதற்கு 10 பர்சஸ்களுக்கு (perch) குறையாத காணியினை வழங்குவேன்.
- படைவீரர்களுக்கு காணி வழங்குகின்ற போது தற்போது அறவிடுகின்ற மதிப்பீட்டுப் பெறுமதியில் 10% அறவிடுவதை இரத்துச் செய்வேன்.
- அரசாங்க காணிகளில் அத்துமீறிக் குடியேறி அல்லது உரிமைப்பத்திரம் உள்ள காணிகளில் 2010 ஜனவரி 1ம் திகதியில் வசிப்பவர்களுக்கு அதன் உரிமையை சட்டரீதியாக

ஒப்படைப்பேன்.

- .....இராணுவ வீரர்களுக்கு சிறிய அல்லது நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டின் பொருட்டு ரூபா 20 இலட்சம் வரையிலான கடன் முறை ஒன்றை உருவாக்குவேன்.
- மன அமைதியைப் பெறக்கூடிய மற்றும் மதரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அநுராதபுரம், பொலநறுவை, கதிர்காமம், மடு (மன்னார்) ஆகிய வணக்கத்துக்குரிய பிரதேசங்களில் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் சென்று தங்கி வருவதற்கான நவீன தங்கு விடுதிகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். (மகிந்த சிந்தனை ப 25,26,27)

இராணுவவீரர்களுக்கு மாத்திரமல்ல காவல் துறைக்கும் அவ்வித திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சிவில் பாதுகாப்பு அணியும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## இ.2ஆ) **பொலிஸ் சேவை நலன் பேணல்**

- ➢ யுத்தத்திற்குப் பிந்திய சூழ்நிலையில் சட்டத்தையும் அமைதியையும் பேணிவரும் பொருட்டு பொலிசாரின் கடமை மிக முக்கியமானது என்பதனை நான் அறிவேன். ஒழுக்கமுள்ள ஒரு நாட்டையும் விழுமியங்கள் நிறைந்த சமூகத்தையும் கட்டியெழுப்பும் பொருட்டு போதைப் பொருட்களை ஒழித்தல், பாதாள உலக அச்சுறுத்தல்களை ஒடுக்குதல், குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல் மற்றும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் தாபிப்பதற்குத் தேவையான அடிப்படைப் பின்னணியினை அமைத்தல் என்பவற்றிற்கு பொலிசாரின் உதவியினை மென்மேலும் பயன்படுத்துவேன்.

- ➢ பொலிஸ் புலனாய்வு நடவடிக்கையை இலகுபடுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளை குறைவின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- ➢ இராணுவச் சேவையைப் போன்றே பொலிஸ் உத்தியோகத்தருக்குத் தேவையான அறிவு மற்றும் கௌரவத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு ரூபா 50 கோடியை ஒதுக்குவேன்.

- ➢ பொலீஸ் உத்தியோகத்தர்களினது வீடமைப்புப்

பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விசேட வீடமைப்புத் திட்டங்களை அமுலாக்குவேன்.

- பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தீர்வை வரியற்ற வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டமொன்றை அமுலாக்குவேன்.

சிவில் பாதுகாப்பு படையணி

- சிவில் பாதுகாப்பு படையணியை நிரந்தர சேவையாக மாற்றி, 20 வருடகால சேவையை பூர்த்தி செய்த பின்னர் அவர்களுக்கு ஓய்வூதிய உரிமையை பெற்றுக் கொடுப்பேன்.

இடச்சுருக்கம் கருதி நலன் பேணல் திட்டங்களில் சிலவற்றையே இங்கு தந்துள்ளோம். இராணுவத்தைப் பேணுவதற்கு பெருமளவு நிலமும் நிதியும் ஒதுக்கப்படுகிறது என்பதை உணர்த்தவே இவை தரப்பட்டுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட மகிந்த சிந்தனையை படித்துப் பார்ப்பது நல்லது. ஒரு நலன்புரி அரசென்ற நிலையிலிருந்து இலங்கை மக்களினது வெவ்வேறு பகுதியினர் எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரசனைகள் மிக முறையாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 3.ஆ.3) **எதற்காக இந்த நலன் பேணல் திட்டங்கள்**

### 3.1). **இராணுவத்தைப் பலப்படுத்தல்**

இவை அனைத்தும் மகிந்தவுக்கும் சரத் பொன்சேகாவுக்கும் இடையேயான முரண்பாட்டின் விளைவா? என்றோர் கேள்வியும் உண்டு. அது உடனடிக் காரணமாக இருக்கலாம். அதைவிட வேறு அடிப்படைக் காரணங்களும் உண்டு என்றாலும் இதுவும் ஒரு அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. கீழ்வரும் கூற்று அதற்கு ஆதாரமாக உள்ளது.

- மனிதாபிமான நடவடிக்கையின்போது அல்லது பயங்கரவாதத்திற்கு எதிராக நடைபெற்ற அனைத்துப் போராட்டங்களின் போதும் இலங்கையின் பாதுகாப்புப்படைகள், அனைத்து சர்வதேச உடன்படிக்கைகளிற்கு ஏற்ப ஒழுக்கம் பேணுகின்ற வகையிலும் மனித நேயமிக்க விதத்திலுமே செயற்பட்டுள்ளன என்பதனை நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.
- ஆதலால் பணத்திற்கு அல்லது வேறு குறுகிய நோக்கத்திற்காக காட்டிக் கொடுக்கின்ற எவருக்கும் அடிபணிவதற்கும் மற்றும்

எமது எந்தவொரு இராணுவ உத்தியோகத்தருக்கோ அல்லது படைவீரருக்கோ எதிராக வெளிநாட்டில் எவ்வித நடவடிக்கை எடுப்பதற்கும் நான் இடமளியேன்.

வேறெவரும் என்று இங்கு கூறுவது சரத் பொன்சேகாவேயாகும். நீங்கள் செய்த குற்றங்களில் இருந்து நான் உங்களைப் பாதுகாப்பேன் என்று பகிரங்கமாக அபயம் அளிக்கிறார்.

மகிந்த சிந்தனையின் இந்த மன்னிக்கும் மனப்பான்மையை ஜப்பானும் சுட்டிக்காட்டியுள்ளது. அனைத்துலக சட்டத் திட்டம் (International Law Project) மற்றும் அனைத்துலக கல்வி வளர்ச்சி ஆகிய அமைப்புகள் இணைந்து ‘‘ஆயுத மோதல்களும் மனித உரிமைச் சட்டங்களும்- ராஜபக்ஷ சகாப்தம்’’ என்ற தலைப்பிலான தமது அறிக்கையில் பின்வருமாறு கூறுகின்றனர்.

‘‘ரோக்கியோ நன்கொடை மாநாட்டின் இணைத் தலைவர்களால் செப்டம்பர் 12-2006-ல் வெளியிடப்பட்ட அறிக்கை ஸ்ரீலங்காவில் நடக்கும் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதில் திருப்திகரமானதாக இல்லையானாலும் ஸ்ரீலங்காவில் ‘மன்னித்து மறக்கும் பண்பாடு’ மிகத் தாராளமாக இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருப்பது ஒரு உண்மையை வெளிக்கொணர்கிறது.’’

அவ் அறிக்கை மேலும் கூறுவதாவது, இந்த இணைத் தலைவர்களின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள ‘மன்னித்து மறக்கும் பண்பாடு’ பிரேமதாசாவின் ஜனாதிபதி ஆட்சியின் போது, 1992-ல் நடந்த ஜேவிபிக்கு எதிரான அடக்கு முறையின்போது ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்ட 27,000க்கு அதிகமான சிங்களக் குடிமக்களுக்கும் பொருந்தும். இதே காலப்பகுதியில் இந் நடவடிக்கையின் போது பல ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் காணாமல் போயினர். அவர்களைப்பற்றிய தகவல்கள் இன்னமும் இல்லை. இவ்விவகாரம் பற்றி நாம் எமது தலைமையில் நடந்த ஐ.நா மனித உரிமைக் கலந்துரையாடல்களின்போதும், எமது அறிக்கைகள் மூலமாகவும் பல தடவை வெளிக்கொணர்ந்தோம். இது திரு.ராஜபக்ஷ அவர்களால் வரவேற்கப்பட்டதுடன் அவரும் இந்நிகழ்வுகளில் பங்குபற்றியுமிருந்தார். திரு ராஜபக்ஷ, தான் அதிகாரத்துக்கு வந்து இது நாள்வரையும் இவர்கள் எங்கு என்று முழுமனதுடன் தேடவும் முற்படவில்லை, இவர்களில் அதிகளவினரின் குடும்பங்களுக்கு இழப்பீடு கொடுக்கவும் முன்வரவில்லை.

அப்பழுக்கற்ற பௌத்த-சிங்கள அடிப்படைவாதிகளாக இருக்கும்படி சிங்கள மக்களுக்கு வழிகாட்டும் பௌத்த-சிங்கள பேரினவாதத் தலைவர்கள்தாம் அவ்விதம் இருந்திருக்கிறார்களா என்றால், என்றுமே இருந்ததில்லை இனி இருக்கப் போவதும் இல்லை என்பதே பதிலாகும். தேவை ஏற்படும் போது

இன, மத, மொழி வேறுபாடின்றி தமது வர்க்க நண்பர்களை கட்டித் தழுவ அவர்கள் என்றுமே தவறியதில்லை, அவர்கள் யாராய் இருந்தாலும் அதே போல் தேவை ஏற்படும் போது அவர்கள் தமது வர்க்க எதிரிகளின் கழுத்தை நெரிக்கவும் தயங்கியதில்லை. அன்றைய ஆளும் வர்க்கத்தின் வர்க்க எதிரி ஜேவிபி. அதனால் அன்று நட்பு, குடும்ப அதிகாரத்துக்கு தடையாக இருக்கும் ஜேவிபியுடன் இன்று பகைமை, அவ்வளவுதான்.

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் இடையேயான முரண்பாடு சிநேக முரண்பாடாகையால் ‘மன்னிப்போம் மறப்போம் பண்பாடு’ சட்டரீதியாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த, சரத் பொன்சேகா மோதல் ஒரு உடனடிக் காரணிதான், ஆனால், அதற்காக நேற்றுத் தோன்றி நாளை மறையும் காரணியல்ல. இலங்கை இராணுவம் தோன்றிய காலத்திலிருந்து முளைவிட்டு பெரும் விருட்சமாக வளர்ந்துவரும் காரணியாகும். தற்போது இது ஜனாதிபதி மகிந்த எதிர் சரத் பொன்சேகா எனும் முரண்பாடாக மேலெழுந்துள்ளது. நீண்டகால வரலாறுள்ள இக் காரணி பற்றி ‘இராணுவச் சதிக்கு அஞ்சுகிறாரா’? எனும் தனியான தலைப்பின் கீழ் கூறப்பட்டுள்ளது.

இராணுவப் படைகளின் அதிகரிப்புக்கு இதைவிட வேறும் பல அடிப்படைக் காரணங்களும் உண்டு. ஜனாதிபதி மகிந்தவே அதை அழகாகக் கூறுகிறார்.

‘கொடூர பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட போதிலும், நாட்டின் பாதுகாப்புக்கு இருந்த அச்சுறுத்தல்கள் முடிவடைந்திருக்கும் என நான் ஒருபோதும் கருதமாட்டேன். அவை பல்வேறு வடிவங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேலெழலாம் என்பதனை நான் அறிவேன். அத்தகைய எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எமது வீரம் மிக்க பாதுகாப்புப் படையினர் நாட்டிற்காக அபிமானத்துடன் முன்வருவர் என்பதனை நான் அறிவேன். அதற்காக பாதுகாப்புச் சேவைகளை பலமாக வைத்திருப்பேன்.’ (மகிந்த சிந்தனை)

மகிந்த மிக நிதானமாகவும், விவேகமாகவும்தான் உள்ளார். இந்திய சாணக்கியர்களின் ஆலோசனைகளை மிக நன்றே புரிந்து வைத்துள்ளார். அந்தப் பல்வேறு வடிவங்களும் பல்வேறு சந்தர்ப்பங்களும் எவை? முகிந்த சிந்தனையில் குறிப்பாக எதையும் காணவில்லை. அவற்றை விலாவாரியாகக் கூறி அவர் தனது அச்சத்தை மக்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லைப் போலும். ஆனால், அவர் சொன்ன வார்த்தைகளில் இருந்து அவர் சொல்லாமல் மறைக்கும் வார்த்தைகளை எம்மால் புரிந்துகொள்ள முடியும்.

### 3.1.1) **படைப்பல அதிகரிப்பு**

படைப்பல அதிகரிப்பென்பது அரசு இயந்திரத்தைப் பலப்படுத்துவதும் வளர்த்தெடுப்பதுவும் என்பதேயாகும். சமூகத்தின் ‘சேவகனாக’ ஆரம்பத்தில் பிறப்பெடுத்த அரசு, படிப்படியாக சமூத்தில் இருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு சமூகத்தின் ‘எஜமானன்’ என்ற வடிவத்தை அடைந்தது. பூர்ஷ்வா குடியரசின் அமைவின் பின், இவ் அரசு அதன் ‘உயர்ந்த கட்டத்தையும்’, இறுதிக் கட்டத்தையும் அடைந்தது. அதன் பின்னர், பூதாகரமான அதிகாரத்துவ அடுக்குகளையும் அதே அளவு இராட்சதத் தனமான நிலையான இராணுவத்தையும் கொண்ட இவ்வரசு சமூகத்தை அழுத்திச் சிதைக்கும் துன்பமிகு ஒட்டுண்ணி இயந்திரமாக விசுவரூபம் எடுத்து நிற்கின்றது. எவ்விதமும், பிறந்தது அனைத்தும் தமது இறப்பையும் சந்தித்தே ஆகவேண்டும் என்ற இயக்கவியல் விதிக்கமைய, அரசும் தவிர்க்க முடியாமல் என்றோ ஒரு நாள் இறக்க விதிக்கப்பட்டுள்ளது.

அதாவது, அரசென்பது யாரோ ஒரு சிலரின் அகநிலைத் தேவையிலும் ஆர்வத்திலும் இருந்து பிறந்த அருவமான கருத்துருவல்ல, மாறாக சமுதாயத்தின் புறநிலை அத்தியாவசியத்தில் இருந்து உருவாக்கவும் அழிக்கவும் படும் ஒரு உருவமான பருப்பொருளாகும். (Baburam Bhattarai, The Question of Building a New Type of State)

மகிந்தவை இவ்வளவு துரிதமாகச் படைப்பல அதிகரிப்பில் ஈடுபடவைக்கும் அந்தப் புறநிலை அவசியம் என்ன அல்லது எவை? ஸ்ரீலங்கா அரசு மரணப்படுக்கைக்கு சென்றுவிட்டதா? அல்லது சென்று கொண்டிருக்கின்றதா? என்பதையும், படைப்பலத்தை அதிகரிக்கும் அரசைப் பாடையில் ஏற்றப்போகும் அந்த புறநிலை அத்தியாவசியங்கள் எவை? அவற்றின் தற்போதைய பலம், பலவீனங்கள் என்ன? என்பதைப் பற்றிய சொல்லாடலே இந்தப் பகுதியாகும்.

#### 3.1.1.அ) **எண்ணிக்கை அதிகரிப்பு**

எண்ணிக்கையளவில் பலப்படுத்தப்படுகின்றது என்பதற்குச் சில ஆதாரங்கள்:

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், 2009 நவம்பர் மாதம், முப்படையின் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, பத்திரிகைகளுக்கு வழங்கிய அறிக்கைகளின்படி, இந்த வருடத்தினதும் இனி வரப்போகும் வருடங்களினதும் படையினது எண்ணிக்கை இலக்கை அடைவதற்காக ஆட்சேர்ப்பு தொடர்ந்து கொண்டேயிருக்கும். தற்காப்புக்காகவும், தாக்குதல்களுக்காகவும் ........புதிய

அதிகாரிகள் அதிகளவில் தேவைப்படுகிறார்கள்....... புதிய பிரிவுக்காக 10,000 துருப்பினரை சேர்த்துக் கொள்வதே எமது குறிக்கோளாகும். அவர் மேலும் கூறியதாவது, அனைத்து துருப்புகளுக்கும் அலுவலர்களுக்குமான மாதாந்த ஊதியம் ரூபாய் ஆயிரமாக அதிகரிக்கப்படும். அத்துடன் இராணுவத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூபாய் மூவாயிரம் உற்சாக கொடுப்பனவாகவும் வழங்கப்படும். முன்னர் இந்தக் கொடுப்பனவு வட கிழக்கு யுத்தக் களத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இனி இது இராணுவத்தில் உள்ள அனைவருக்கும் விரிவுபடுத்தப்படும். மேலும், இராணுவத்தில் சிலர் ஓய்வு பெற்றுவிட்டார்கள். சிலர் நோயாளர்களாகி உள்ளார்கள். அத்துடன் இராணுவத்தை விட்டோடியவர்களும் கடமைக்கு வருகை தராமல் விட்டவர்களும் உள்ளார்கள். இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நாம் புதியவர்களைச் சேர்க்க வேண்டியுள்ளது. எனவும் கூறினார். இதற்கிடையே, விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் (wing Comandar) ஜனக நாணயக்கார, விமானப் படைக்கு புதியவர்களைச் சேர்ப்பதற்கான முடிவு திகதி என்றொன்று இல்லை எனக் கூறினார். மேலும், நாம் புதிய அலுவலர்களை எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் சேர்த்துக் கொண்டே இருக்கின்றோம்.

இவ்வருடம் ஜனவரியிலிருந்து இன்றுவரை 8000 புதிய உறுப்பினர்கள் கடற் படையில் இணைக்கப்பட்டுள்ளார்கள் என கடற்படையின் பிரதிப் பேச்சாளர் கப்ரன் செனறட்னே கூறினார். அவர் மேலும் கூறியதாவது, வரப்போகும் அண்மிய நாட்களில் மேலும் ஆயிரக் கணக்கான மாலுமிகளையும் அலுவலர்களையும் இணைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, என்பதாகும். (tamilnet.com)

இவரின் இந்த நேர்காணல் தொடர்பாக 'Sri Lanka's expanding peacetime army' என்ற தலைப்பில் பிபிசி இணையத் தளத்தில் வெளியான கட்டுரையின் சில பகுதிகள்

.......இருந்தும் ஏற்கனவே இரண்டு இலட்சம் பேரைக்கொண்ட இராணுவத்தின் எண்ணிக்கையை 50 வீதம் அதிகரிக்க வேண்டும் (மூன்று இலட்சம்) என இராணுவப் பிரதானி கூறினார்........

கொழும்பில் முப்படைகளைப் புகழ்ந்து ஏராளமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இராணுவ ஆட்சேர்ப்பை ஊக்கப்படுத்துவதற்காக இன்னமும் (யுத்தம் நடந்து பல மாதங்களாகியும்) சிங்கள மொழியூடாக தொலைக்காட்சி நிலையங்கள் அனைத்தும் 'எமது தேசம் தனக்கான நாயகர்களைத் தேடிக் குரல் கொடுக்கிறது.!' எனத் தீவிரமாக விளம்பரம் செய்து வருகின்றன. பலர் ஆர்வமுடன் சேர்ந்தும் வருகிறார்கள். அபிவிருத்தி

வேலையை முன்னெடுத்துச் செல்ல உதவுவதற்காகவும், சாத்தியப் படக்கூடிய போர்க் குணம் மிக்க எழுச்சியை அடக்குவதற்காகவுமே இந்தப் பிரமாண்ட 50வீத அதிகரிப்பு மிகுந்த ஆர்வத்துடன் அமுல் நடத்தப்படுகிறது. வடக்கில் மேலும் பல படைத்தளங்கள் அமைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு.

> ‘தற்போது முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் பாதுகாப்புப் படையின் இரு இராணுவத் தலைமை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அண்மித்த எதிர்காலங்களில் இப் பகுதிகளில் எந்தவிதமான பயங்கரவாத நடவடிக்கைகளும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக இத் தலைமை நிலையங்களின் கீழ் பல இராணுவ முகாமகள் பரவலாக அமைக்கப்படும்.’ எனக் கூறினார். ‘.............மக்கள் குடியிருக்கக் கூடிய நிலை ஏற்படுத்தப்படும். ஆனால், இப்பகுதியில் நடக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருமுகப்படுத்தபட்ட ஒரு நிறுவனம் ஊடாக நாம் கண்காணித்து வருவோம்.............’

(ஏ.மு. சசிக்குமார் எனும் முதுநிலை புலனியல் இதழியலாளாருக்கு ஜனாதிபதி மகிந்தவின் தம்பியும், பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷ வழங்கிய செவ்வியொன்றை அடியொற்றி எழுதப்பட்ட கட்டுரையின் சில பகுதிகள். (Nine decisions that helped Lanka beat the LTTE, adaderana.lk)

“ஜனாதிபதி ராஜபக்ஷ 2005-ல் ஜனாதிபதியாகப் பொறுப்பெடுத்துக் கொண்டபோது, ஸ்ரீலங்கா இராணுவத் துருப்புகளில் (SLAF) சுமார் 26,000 பேர்வரை தமது உயிர்களைத் தியாகம் செய்திருந்தனர்.”

கோத்தபாய மேலும் கூறியதாவது “ஜனாதிபதி ராஜபக்ஷ, 2005-இல் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் நாம் இதற்கு முன்னைய அனைத்துப் போர் நடவடிக்கைகளைப் பற்றியும் ஆராய்ந்தோம்.... தோல்விக்கான காரணம் எதையுமே படையணியுடன் தொடர்புபட்டு எம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. நாம் LTTE-க்கு எதிரான போர் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதானால், கடந்த 30 வருடங்களாக LTTE ஐ எதிர்த்துப் போராடி வரும் அதே படையணியை வைத்துக் கொண்டு தான், நாம் யுத்ததைத் தொடரவேண்டியுள்ளது என்ற எளிய உண்மையை எம்மால் புரியக்கூடியதாக இருந்தது. இதே படையணியையும் அதனது விசேடப் படைப்பிரிவையும் கமாண்டோக்களையும் கொண்டும் யுத்ததை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருந்தது. அவர்கள் அங்குதான், யுத்தக் களத்தில்தான் உள்ளார்கள். இருந்தும், நான்கு ஜனாதிபதிகளால் தலைமை தாங்கப்பட்ட முன்னைய அரசாங்கங்களால் நாட்டின் போர்ப்படைத்திறனைச் சரியாகப் பயன் படுத்த முடியாது போனமை ஏன்? என்பது ஒரு கேள்வியாகவே இருந்தது.” மேலும் தொடர்கிறார், “ இதற்கான தீர்வு படையின் எண்ணிக்கையை அதிகரிப்பதே என்ற முடிவுக்கு நாம வந்தோம்.

இதற்கு முன்னர் எஸ். எல். ஏ. எவ் ஆல், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாததன் பிரதான காரணம் அதன் எண்ணிக்கைப் போதாமையேயாகும். படைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதென்பது LTTE யின் மீது ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். இதனால் எமது இரண்டாவது தீர்மானகரமான அரசியல் முடிவு SLAF ஐ விரிவுபடுத்தல் என்பதாகும். ' இதை அவர் அழுத்தமாகக் கூறினார்.

எண்ணிக்கை தொடர்பான விடயத்தில் சிறிய இராணுவத்தை வைத்திருக்கும் சிறிய நாடுகள், தமது கடற்படையினதும் ஆயுதப்படையினதும் பாத்திரம் பற்றி மீளச் சிந்திக்க வேண்டும். அவர் மேலும் கூறியதாவது எண்ணிக்கையை அதிகரிப்பதென முடிவடுத்துவிட்டோம், ஆனால் அது ஒரேயிரவினில் நடந்து விடாது என்பது எமக்குத் தெரியும். இதனால் நாம் கடற் படையினதும் ஆகாயப் படையினதும் பங்களிப்பை மறு ஆய்வுக்குள்ளாக்கினோம். விளைவு, அவர்களை அவர்களின் மரபுவழி பங்களிப்புடன் கூடவே தரையிலான பங்களிப்பிலும் ஈடுபடுத்தினோம். அதற்காக அவர்களைப் பழக்கி எடுத்தோம். இதனால், தரையை கட்டுப்படுத்தும் எமது சக்தி ஒரே இரவிலேயே அதிகரித்தது. விசேட அதிரடிப்படையையும் (STF) நாம் இதே நோக்கத்திற்காகப் பயன் படுத்தினோம். (STF என்பது, இராணுவப் பயிற்ச்சியும், தன்மையும் பெற்று ஶ்ரீலங்கா காவல் துறையின் ஒரு அங்கமாக விளங்கும் ஒரு படைப்பிரிவாகும். இது நாட்டுக்கு உள்ளே நடக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளையும் கிளர்ச்சிகளையும் அடக்குவதற்காக பயன்படுத்தப்படும். முக்கிய நபர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது, பிரதான நிலையங்களுக்கும், நிகழ்வுகளுக்கும் பாதுகாப்புக் கொடுப்பது போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப் படும்.) இது மாத்திரமல்ல, தரையைப் பாதுகாப்பதற்கான ஒருங்கிணைந்த படையணியின் போரிடும் திறனுக்கு ஒரு பாதுகாப்புப் புற வலயமாக ஶ்ரீலங்கா காவல் துறையையும் பயன் படுத்தினோம்.

அவர்கள் குடிமக்கள் பாதுகாப்புப் படை (Civil Defence Force.) எனுமோர் புதிய துணை இராணுவப் படையையும் அமைத்தார்கள். LTTE யால் அச்சுறுத்தப்பட்ட கிராமங்களில் இருந்து திடகாத்திரமான 42,000 மனிதர்கள் இதில் திரட்டப் பட்டார்கள். இவர்களுக்கு போர்ப் பயிற்சியும், தானியங்கி சுடுகலங்களும் வழங்கப்பட்டன. LTTE யின் தாக்குதலில் இருந்து கிராமத்தைப் பாதுகாப்பதே இவர்களின் கடமையாக இருந்தது.

2009, மே மாதம் யுத்தத்தின்போது இரு வாரங்களில் நாம் குடிமக்கள் பாதுகாப்புப் படை உறுப்பினர்களில் இருந்து 5,000 பேரை இராணுவத்தினுள் உள்வாங்கினோம். என்று அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது; "எமது இராணுவச் செயற்பாடுகளை எம்மால் பரந்து விரிந்த தளத்தினில் செயல் படுத்தக்கூடியதாக இருந்தது. LTTE ஐப் பல திசைகளில் இருந்தும் சுற்றி வளைக்கக் கூடியதான தந்திரோபாயச் சுதந்திரமும், படை நகர்த்தலுக்கான சாத்தியப்பாடுகளும் இருந்தன. தரைத் துருப்புக்களை அதிகரிப்பதற்கு நாம் கையாண்ட வழி முறைகள் SLAF ற்கு ஆள் சேர்ப்பதற்கும், இவ்விதம் சேர்க்கப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்குமான கால அவகாசத்தை எமக்கு வழங்கியது. கிழக்கு மாகாணத்தை ஒன்றிணைந்த படைகள் கட்டுப்படுத்தி வந்தன. SLAF, வடக்கின் பல முனைகளில் நடைபெற்ற போராட்டங்களில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருந்தது. இவை LTTE யின் மீது ஒரு கனமான அழுத்தத்தைக் கொடுத்து வந்தது மாத்திரமல்ல, SLAF இன் விரிவாக்கத்திற்கான கால அவகாசத்தை பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதத்தையும் எமக்கு வழங்கியது. ஒவ்வொரு மாதமும் 5000 துருப்புகளைப் புதிதாகச் சேர்த்து வந்தோம். இவர்களைக் கொண்டு புதிய பட்டாலியன்களையும் (Batallion), துணை இராணுவப் பிரிவுகளையும் உருவாக்கி வந்தோம். மூன்று வருடத்தில் எமது இராணுவத்தின் எண்ணிக்கை 1,00,000-இல் இருந்து 3,00,000-ஆக அதிகரித்தது, அதாவது மூன்று மடங்காக்கினோம். வேடிக்கை என்னவென்றால் 1980-களில் எமது முப்படைகளின் எண்ணிக்கை 30,000-ஆக இருந்தது. ஜனாதிபதி ராஜபக்ஷ பொறுப்பெடுத்த 2005-ல் இந்த எண்ணிக்கை 1,25,000-ஆக இருந்தது. 2005-2009 இடைப்பட்ட காலத்தில் இவ் எண்ணிக்கை 4,50,000-ஆக உயர்ந்தது. இதில் இராணுவத்தின் எண்ணிக்கை 3,00,000 ஆகும். இந்த அதிகரிப்புத்தான் யுத்தத்தின் போது காயம் அடைந்தவர்களுக்குப் பதிலாக உடனுக்குடன் புதியவர்களை ஈடுசெய்வதைச் சாத்தியமாக்கியது. (கடந்த மூன்றரை வருடத்தில் 6000 துருப்பினர் கொல்லப் பட்டுள்ளனர்) எமது படையினருக்கு போதியளவு ஓய்வெடுப்பதற்கான வாய்ப்பையும் தம்மை இளைப்பாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பையும் கொடுத்ததுவும் இவ் எண்ணிக்கை அதிகரிப்புத்தான். LTTE யின் மீது பாரிய அழுத்ததைக் கொடுப்பதை சாத்தியப் படுத்தியதும் இவ் எண்ணிக்கை அதிகரிப்புத்தான்.

Socialist Equity Party (SEP) படை அதிகரிப்புத் தொடர்பான சில தகவல்களைத் தருவதுடன் அது தொடர்பான தமது அரசியல் கண்ணோட்டத்தையும் தருகிறார்கள். அதுவும் இந்த இடத்தில் பொருத்தமாக அமையும் என்பதால் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். ஸ்ரீலங்கா பூர்சுவாக்கள், தமது அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக பிரமாண்டமான ஒரு இராணுவத்தைக் கட்டிவருகிறார்கள். நாட்டின் அளவுடனும், குடிமக்கள் தொகையுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதுதான் உலகத்தின் மிகப் பெரும் இராணுவமாகும். 2007-இல் அதன் எண்ணிக்கை ஒரு இலட்சத்து இருபதினாயிரமாக இருந்தது. 2008இல் மாத்திரம் 80,000 புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இளைஞர்கள். இதில்

மிகப் பெரும்பான்மையினர் சிங்களவர்களாகும். சிங்கள இளைஞர்களை சேர்த்துக் கொள்வதற்காக, பெருமளவுக்கான ஒரு மோதலுக்கான இராணுவத் திட்டத்தை அரசாங்கம் மிக இரகசியமாக வைத்திருந்தது. இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மிகக் குறைவாக இருந்ததே இப் பெருமளவான ஆட்சேர்ப்பைச் சாத்தியமாக்கியது. அப்போது நாட்டின் மொத்த இளைஞர்களில் 22.4வீதம் மாத்திரமே வேலை வாய்ப்புப் பெற்றிருந்தனர். இந்தப் புதிய ஆட்சேர்ப்பு இல்லையானால் கொழும்பு நிர்வாகத்தால் இவ் வெற்றியை அடைவது சாத்தியமற்றதாகியிருக்கும். தனது இராணுவத் திட்டத்தை இரகசியமாக வைத்திருந்ததால் இளைஞர்கள் இதைத் தமது வேலை வாய்ப்பாகக் கருதிச் சேர்ந்தார்கள். இவ்விதம் சேர்ந்தவர்கள் LTTE இற்கு எதிரான யுத்தத்தில் பகடைக் காய்களாகப் பயன் படுத்தப் பட்டார்கள்.

ஸ்ரீலங்கா இராணுவம் 6,261 துருப்புகளை இழந்துள்ளது. 29,551 பேர் காயமடைந்துள்ளார்கள், 2,556 பேர் நிரந்தர அங்கவீனர்களாகி உள்ளார்கள். (Rajesh Tyagi, The collapse of the ethno-nationalist project of the LTTE and the Tamil Question in Sri Lanka )

SEP யினர் தமது அனைத்து வெளியீடுகளிலும் பூர்சுவாக்கள் என்ற பதத்தையே பயன்படுத்துகின்றனர். முதலாளித்துவவாதிகள் என்ற அர்த்தத்திலேயே இப்பதம் பயன்படுத்தப் படுகிறது. இலங்கை ஆளும் வர்க்கத்தைக் குறிப்பதற்கு இப் பதப் பிரயோகம் தவறானதாகும். இலங்கையின் ஆளும் அணி பல வர்க்கங்களை உள்ளடக்கிய ஒரு வர்க்கத்தட்டாகும். இதில் பூர்சுவாக்களும் ஒரு பகுதியினராகும். இந்த வர்க்கத்தட்டின் தலைமை வர்க்கம் பூர்சுவாக்களாகத்தான் எப்போதும் இருந்ததும் இல்லை. இருக்கும் என்பதுவும் இல்லை. நில மானிய முறை நில உடைமையாளர்கள், முதலாளித்துவ நில உடைமையாளர்கள், மதநிறுவன உயர் நிலை துறவிகள், இராணுவ, காவலத் துறை அதிகாரிகள், பொதுத்துறை நிறுவன அதிகாரிகள் (உற்பத்தித் துறையும், சேவை வளங்கு துறையும்), அரச நிர்வாக அதிகாரிகள், கல்வி மான்கள், (Professionals), தொழில் நுட்பவிற்பனர்கள், பணவியாபாரிகள், இத்தியாதியோர்தான் இதன் முக்கிய உறுப்பினர்களாகும். இவ் வர்க்கத்தட்டின் அதிகாரங்களும் ஓரிடத்தில் குவிந்ததாகவில்லை. அதாவது அதிகாரம் ஒரு முனைத்தன்மை பெற்றதல்ல. அதன் குவிமையம் பல முனைகளாக உள்ளது. இந்த வேறுபாடு போதாதென்று, இவர்கள் தமக்குள் சாதி, மத, இனரீதியாகவும் பிரிவு பட்டும் உள்ளார்கள். இப் பிரிவுகள் சில வேளைகளில் இவர்களால் சுலபமாகத் தீர்க்கப்பட முடியாதளவிற்கு பகைமை முரண்பாடுகளாக மாறுவதுமுண்டு. 1970கள் வரை தமிழ் சிங்கள முரண்பாடு இவ்விதமான ஒன்றுதான். சிங்கள ஆளும் வர்க்கத்துடன் ஒப்பிடும்போது அதிக புலமைத்துவம் பெற்றிருந்த தமிழ் கல்விமான்கள் வர்க்கத்துக்கும், மிகக் குறைவான புலமைத்துவத்துடன்

விளங்கிய சிங்கள வர்த்தக வர்க்கத்தினதும் நிலமானிய நில உடமை வர்க்கத்தினதும் கூட்டிற்கும் இடையே இருந்த முரண்பாடுதான் அணைக்க முடியாத பெரு நெருப்பாக மாறியது. அதுமட்டுமல்ல, வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியின் காரணத்தால் வெவ்வேறு வல்லரசுகளுக்கு ஆதரவான கோஷ டிகளாகவும் ஆளும் வர்க்கங்கள் பிரிவு பட்டுள்ளார்கள். ஆகவே இலங்கை ஆளும் வர்க்கத்தை, உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் குறிப்பிடும் போது மேட்டுக்குடியினர் என்ற பதமே மிகப் பொருத்தமானதாகும். இது ஆளும் வர்க்கத்தின் வர்க்கக் குணாம்சத்தை நீர்த்துப் போகச் செய்யக்கூடிய ஒரு எளிமைப்படுத்தும் பதமல்ல. ஆளும் வர்க்கத்தின் பன்முக வர்க்கத் தன்மையை எடுத்துக் காட்டும் ஒரு பதமாகும். இதனால் ஒட்டுமொத்த ஆளும் வர்க்கங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, இந்நூலில் மேட்டுக்குடியினர் என்ற பதமே பயன்படுத்தப்படுகிறது.

படைப் பலத்தை அதிகரிப்பது என்று நோக்கும்போது அதன் தன்மையிலும் மாற்றம் செய்யப்படுகிறது என்பதை இங்கு கவனிக்கவேண்டும்.

1970-கள் வரை கடற் படையும், கப்பற் படையும் தரைப்படையின் துணைப் படைகளாகவும், சடங்கு அமைப்புகளாகவுமே இருந்தன. ஆனால் 1971 ஏப்ரல் கிளர்ச்சிக்கு வட-கொரியாவின் ஆதரவுண்டு என்ற அச்சமும் அரசாங்கத்திற்கு இருந்தது. அத்துடன் கடற் பாதுகாப்பும் அவசியப்பட்டது. பங்களாதேச பிரிவினை யுத்தத்தின் போது இலங்கை பாகிஸ்தான் பக்கமே இருந்தது. இந்தியாவிடமிருந்து கச்சதீவைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும் இருந்தது. இதனால் விமானப்படையையும் கடற்படையையும் பலப்படுத்த ஆரம்பித்தது. ஆனால் இந்திய மத்திய அரசால் நடத்தப்பட்ட பூமாலை இராணுவ நடவடிக்கையின் பின்னரேயே இப்படைப்பிரிவுகளின் தேவையை ஸ்ரீலங்கா அரசு இன்னும் அதிகமாகப் புரிந்து கொண்டது. புலிகளின் கடற்புலிகள் படைப் பிரிவின் தோற்றத்துடனும் இதன் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கிறது. உள் நாட்டு யுத்தத்தில் புலிகளை வெற்றி கொள்வதற்கு பலமிக்க கடற்படை அத்தியாவசியம் என்ற நிலை உருவாகின்றது. கூடவே ஆயுதப்படையின் தேவையும் அதிகரிக்கிறது. இத் தேவை பல்வேறு காரணங்களால் மேலும் அதிகரித்துள்ளது. கச்சதீவின் பாதுகாப்பும், கடல்வள அதிகரிப்பும் இதற்கான பிற காரணங்களாகின்றன.

### இ.3.1.1.ஆ) **ஆயுத, நிதியாதார அதிகரிப்பு**

எண்ணிக்கை அதிகரிப்பு மட்டும் போதுமா? ஆயுத அதிகரிப்புக்கு என்ன செய்யப்படவுள்ளன? என்ன செய்யப்பட்டுள்ளன?

ஆயுதங்களின் அதிகரிப்பு நான்கு வகைகளில் சாத்தியம்,
முதலாவது- வெளிப்படையான சந்தை,
இரண்டாவது- பிற நாடுகளின் ஆயுத உதவிகள்,
மூன்றாவது- சொந்தமான ஆயுதத் தயாரிப்பு,
நான்காவது- கள்ளச் சந்தையில் வாங்குவது.

ஒரு அரசாங்கத் தலைவர் என்ற முறையில் கள்ளச் சந்தையில் வாங்குவது மிகவும் சிரமமானது. முடியாது என்பதல்ல. இது அரசாங்கத்தின் அரசியல் இறையாண்மைக்கும் உள் நாட்டு ஸ்திரத்தன்மைக்கும் ஆபத்தானதாகும். மெக்சிகோவின் போதைவஸ்துக் கடத்தல் மன்னர்களுடன் தொடர்பு கொண்டால் அமெரிக்காவின் மெல்லிய புன் முறுவலுடன் எவ்வளவு ஆயுதங்களும் வாங்கலாம். பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரிடம் புத்தம் புது அமெரிக்க ஆயுதங்களே வாங்கலாம். புலிகள் விட்ட தவறுகள் சிங்கங்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்காதா?.

அரசு என்ற கட்டுமானத்தின் ஆக்கக் கூறுகளில் ஒன்றுதான் வர்த்தகக் கட்டுமானமாகும். இதுதான் அரசை பொருளாதார ரீதியாக விரிவுபடுத்துவதைச் சாத்தியப்படுத்தும் கட்டுமானமாகும். பலமான வர்த்தகக் கட்டுமானம் இல்லையேல் பலமான பொருளாதாரக் கட்டுமானம் இருக்க முடியாது. பலமான பொருளாதாரக் கட்டுமானந்தான் அரசின் அடிப்படை இலட்சியம். இந்த வர்த்தகக் கட்டுமானத்தில் ஆயுத வர்த்தகக் கட்டுமானமும் அடங்கும். ஆயுத வர்த்தகம் உட்பட அனைத்து வர்த்தகமும் திட்டவட்டமான ஒரு அரசியல் நோக்கம் கொண்டதாக அமையவேண்டும். அரசியல்தான் இக்கட்டுமானத்தை பிணைத்து உருவாக்கும் சிமெண்டாக இருக்கவேண்டும். சிறந்த அரசியல் இராஜதந்திரத்தை கடைப்பிடிக்கும் அரசுதான் சிறப்பான வர்த்தகக் கட்டுமானத்தைக் கொண்ட அரசாகவும் இருக்கமுடியும். அப்போதுதான் அந்நாட்டின் பொருளாதாரக் கட்டுமானத்தால் ஏகாதிபத்திய உலகப் பொருளாதாரக் கட்டுமானத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டு வளரமுடியும். அப்போதுதான் அனைத்துலக அரங்கில் அந்நாட்டின் அரசியல் ஆளுமை தனது தனித்துவத்துடன் வளர்ச்சிபெற முடியும்.

பல்தேசியக் கம்பனிகளின் வர்த்தகக் கட்டுமானமும் தேசிய அரசுகளின் வர்த்தகக் கட்டுமானமும் தன்மையில் வேறுபட்டவை. முன்னையவற்றின் பிரதான நோக்கம் வர்த்தகம். இந்த நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக அவர்கள் அரசியல்வாதிகளின் செல்வாக்கை நாடுகிறார்கள். அது அவர்களுக்குப் போதும். கம்பனிகள் தமது கம்பனி நலன் பற்றியே சிந்திக்கிறார்கள். ஒட்டு மொத்த வர்க்க நலன்பற்றிச் சிந்திப்பதில்லை. தேசிய அரசுகளின் பிரதான நோக்கம் அரசியல் ஆளுமை. வர்த்தகத்தை தமது ஒட்டுமொத்த வர்க்க நலனுக்கு உட்பட்டதாகவே இவை கருதுகின்றன.

ஒரு வர்த்தகக் கம்பனியின் ஆட்சியின் கீழிருந்த இந்தியத் துணைக்கண்டம் ஒரு ஏகாதிபத்தியத்தின் ஆட்சியின் கீழ் எவ்விதம் மாறியது என்ற வரலாறு இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

பாதுகாப்பு வழங்குவதற்கென்று தனியார் கம்பெனிகள் இருப்பது அனைவரும் அறிந்ததே. அனைத்துலக மட்டத்தில் செயல்படும் தனியார் கம்பனிகளும் உள்ளன. பல நாடுகளின் உள்நாட்டு யுத்தங்களிற்கு இவர்களே காரணமாகவும் உள்ளனர்.

அதேபோல் போதைவஸ்துக் கடத்தல், பாலியல் தொழிலாளர்கள் கடத்தல், அரை-அடிமைகள் கடத்தல், ஆயுதக் கடத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் கம்பனிகளுமுள்ளன. இவற்றில் சில, பல அரசாங்கங்களை ஆட்டிப்படைக்கும் அளவுக்கு ஆயுத வல்லமை பெற்றனவாகவும் உள்ளன. ஆனால் இவற்றில் எதுவுமே அரசியல் ஆளுமை பெற்றவையல்ல. எந்த நாட்டையும் இவை ஆளவுமில்லை. ஆனால் தமக்கென்று சுயமான பாதுகாப்புப் பிரதேசங்களை வைத்துள்ளன. அரை-தன்னாட்சி உரிமை உள்ள இவ்வமைப்புகள் ஏகாதிபத்திய அரசுகளின் புலனாய்வுத் துறையினரின் அனுசரணையுடன்தான் செயற்படுகின்றன.

கள்ளச் சந்தையில் ஆயுதங்கள் கொள்வனவு செய்வதுவும், சக்தி மிக்க ஒரு கைக்கூலி இராணுவத்தை உருவாக்குவதும் இன்று ஒரு பெரும் சவாலுமல்ல. பெரும் சாதனையுமல்ல.

கள்ளச்சந்தை ஆயுதக்கொள்வனவு, அரசின் ஆயுதத் தேவையைப் பூர்த்திசெய்யும், சந்தேகமில்லை. ஆனால் இது அரசின் வர்த்தகக் கட்டுமானத்தைப் பலவீனப்படுத்தும். அரசின் அரசியல் ஆளுமையை உள்நாட்டிலும் அனைத்துலக அரங்கிலும் சிதைக்கும். உலக அரசியல் அரங்கிலிருந்து அவ்வரசு தனிமைப்படும். கள்ளச்சந்தை ஆயுத வர்த்தகமானது முன்கூறிய கம்பனிகளுக்கு பொருந்தும், ஆனால் ஒரு தேசியரசுக்குப் பொருந்தாது. புலிகளின் தலைமை இழைத்த பெருந்தவறு இதுதான். இதனால் ஒரு தேசிய அரசை உருவாக்குவதிலும் அத்தேசிய அரசுக்கு அனைத்துலக அரங்கில் ஒரு அரசியல் ஆளுமையை உருவாக்குவதிலும் அவர்களால் நிறைவான சாதனைகளைப் படைக்க முடியவில்லை. நன்மையைவிட தீமையே அதிகமாகிவிட்டது.

சொந்தத் தயாரிப்பு என்பது இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு ‘சுண்டைக்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்’ என்பதற்கு ஒப்பானதாகும். ஆனால் ஆயுத விற்பனவை ஒரு அனைத்துலக வர்த்தகமாகக் கொண்டால், அல்லது பிற ஆயுத உற்பத்தி முதலாளிகளின்

ஆயுத உற்பத்தித் தொழிற்சாலையாக இலங்கையை மாற்றினால் இது சாத்தியமே. இருந்தும், ஸ்ரீலங்கா அரசு சிறு ஆயுத உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

வெளிப்படையான சந்தையில் ஆயுதம் வாங்க வேண்டுமானால், 'கையில காசு வாயில தோசை' என்று நடக்கக்கூடிய பணக்கார நாடாக ஸ்ரீலங்கா இருக்க வேண்டும். அதாவது அந்நிய செலவாணி தாராளமாக இருக்கவேண்டும். ஆனால் கடன் கட்டவே தேசிய வருவாய் போதுமானதாக இல்லாத நிலையில் இது சாத்தியமா? 2011-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் பாதுகாப்புக்கான செலவீனமாக 215 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தினை விட 6 சதவீத அதிகரிப்பாகும். ஆயுத உபகரணங்கள் வாங்கியது தொடர்பான முன்னைய கடனுக்காகத்தான் இத் தொகை என காரணம் கூறப்பட்டது. இது ஆயுதங்களுக்கான கடன் மாத்திரமேயானால் பிற கடன்கள்??

2008-ம் ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகை எட்டு வீதத்தினால் (ஒரு பில்லியன் அமெரிக்க டொலரினால்) அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009-ம் ஆண்டு செப்டம்பர் 31-ம் திகதி வரை அரசாங்க வெளிநாட்டுக் கடன் 1,541.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

யுஎன்பி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தனது கட்சியின் கேகாலை மாவட்ட மாநாட்டுரையின் போது "வாங்கிய கடனைத் திருப்புவதுதான் அரசாங்கத்தின் பெரும் சுமையாகவுள்ளது. கடந்த வருடம் அபிவிருத்தி, முதலீடு, சம்பளம் மற்றும் சேமநலன் ஆகியவற்றிற்காக 6,720 பில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. அதே நேரம் வாங்கிய கடனுக்காக 8,240 பில்லியன் ரூபாய்கள் கொடுபட்டுள்ளன. முன் சொன்ன நான்கு செலவினங்களிலும் விட அதிகமாக கடன் திருப்புவதற்கான செலவினம் உயர்ந்து நிற்பது இதுவே முதற் தடவையாகும்" எனக் குறிப்பிட்டார்.

இந்த நிலைமையில் இது சாத்தியமா? சாத்தியமாவதற்கான வாய்ப்புகள் உண்டு. இலங்கைத்தீவு கடல் சார் எரிபொருள் மற்றும் கடல்சார் கனிம வளங்களில் மிகச் செல்வச் செழிப்பு மிக்க நாடென்பது கணடுபிடிக்கப் பட்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்புத்தான் யுத்தத்தின் போது மகிந்தவுக்குக் கிடைத்த பேராதரவுக்கான காரணமாகும்.

*See also Awards and decorations of the military of Sri Lanka Read more: answers.com/topic/sri-lanka-army*

| Type | Origin | Quantity | Notes |
|---|---|---|---|
| | | **Main Battle Tanks** | |
| T-55/T-55AM2[52] | Soviet Union | 140+ | |
| Type 69[57] | China | 20+ | |
| Type 59 | China | 80+ | |
| | | **Light Tanks** | |
| Type 63 | China | N/A | Amphibious |
| | | **Infantry fighting vehicles** | |
| BMP-3[58] | Soviet Union | 45 | |
| BMP-2 | Soviet Union | 240 | |
| BMP-1 | Soviet Union | 13 | |
| | | **Armoured personnel carriers** | |
| Norinco Type 89 (YW534)[59] | China | N/A | Tracked |
| Type 85 (YW531H) | China | N/A | Tracked, Amphibious |
| Type 63 (YW531)[60] | China | N/A | Tracked |
| BTR-80 | Soviet Union | 33 | wheeled |
| Type 92 (WZ551) | China | 200 | wheeled |
| BTR-152 | Soviet Union | N/A | wheeled, operational state unknown |
| Unibuffel | Sri Lanka | N/A | Locally manufactured, Mine-protected APC |
| Unicorn | Sri Lanka | N/A | Locally manufactured, Mine-protected APC |
| Buffel | South Africa | N/A | Mine-protected APC |
| Hotspur Hussar[32] | United Kingdom | N/A | wheeled, operational state unknown |
| Shorland S55 | United Kingdom | N/A | wheeled, operational state unknown |

| Type | Origin | Quantity | Notes |
|---|---|---|---|
| **Rocket artillery** | | | |
| RM-70 Multiple rocket launcher[61] | Czechoslovakia | 30+ | 122.4 mm Multiple rocket launcher |
| BM-21 Multiple rocket launcher[61] | Soviet Union | 5 | 122.4 mm Multiple rocket launcher |
| **Towed artillery** | | | |
| Type 66 152 mm gun-howitzer | China | 36 | 152 mm gun-howitzer |
| Type 59 130mm field gun | China | 12 | 130 mm field gun |
| Type 60 122mm howitzer | China | N/A | 122 mm howitzer |
| Ordnance QF 25 pounder | United Kingdom | N/A | field guns - Ceremonial Gun Troop |
| Ordnance QF 75 mm | United Kingdom | N/A | field guns - Ceremonial Gun Troop |
| **Mortars** | | | |
| Type 86 (W86) | China | 55 | 120 mm towed mortar |
| Type 84 (W84) | China | N/A | 82 mm mortar |
| Type 89 | China | N/A | 60 mm light mortar |
| **Weapon Locating Radar** | | | |
| AN/TPQ-36 Firefinder Radar | United States | N/A | Weapon Locating and Counter-battery Radar |
| SLC-2 Radar | China | N/A | Weapon Locating and Counter-battery Radar |

இவ் ஆதரவு இனியும் தொடரும். இதனால் சிறிலங்கா அரசுக்கு ஆயுதங்கள் விற்பதில் அனைத்து நாடுகளும் ஆர்வமாகவே உள்ளன. அந்நியச் செலாவாணித் தட்டுப்பாடு குறைவான நாடுகள் கடனுக்கு விற்பனவு செய்கின்றன, அல்லது ஆயுதம் வாங்கக் கடன் கொடுக்கின்றன.

அதிக தட்டுப்பாடான நாடுகள் அடக்கி வாசிக்கின்றன. முன்னாள் சோவியத் ரசியாவும் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் சிலவும் தற்போது தமது தேவைக்கு அதிகமாக, சந்தையை நோக்கமாகக் கொண்டே ஆயுத உற்பத்தி நாடுகளாக மாறிவருவதால் (உக்ரேன், ஜோர்ஜியா) அவற்றிடமும் ஆயுதங்கள் வாங்கலாம். ஆகவே ஆயுதக் கொள்வனவு ஸ்ரீலங்கா அரசுக்கு ஒரு பிரச்சனையாக இருக்க வாய்ப்பில்லை.

முள்ளிவாய்க்கால் பேரழிவின் போது 'மனிதாபிமானத் தலையீடு' என்ற வகையராவின் கீழ் போர் அவலத்துக்குள் சிக்குண்ட தமிழ் மக்களை மீட்பதற்கான அல்லது அவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்வதற்கான வழிமுறைகளை வகுப்பதற்காக அமெரிக்கக் கடற்படையின் 'மதிப்பீட்டு அணி'யொன்று ஸ்ரீலங்காவிற்கு வருகை தந்திருந்தது. இதற்காக தனது கடற்படையை அனுப்பிவைக்கவும் தயாராய் இருந்தது. ஆனால் கொழும்பு அத் தலையீட்டைத் தவிர்த்து அமெரிக்காவுக்குத் தண்ணிகாட்டுவதில் வெற்றி பெற்றுவிட்டது. 2006-ம் ஆண்டு புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளுக்காக தான் வழங்கிய முக்கியத்துவமிக்க ஆதரவைச் சுட்டிக்காட்டி அமெரிக்கா விசனப்பட்டுக் கொண்டது. ஆனால், இவ்வாதரவுக்காக 2007 மார்ச் மாதம் அமெரிக்காவுடன் தான் செய்துகொண்ட Access and Cross Servicing உடன்படிக்கையை எடுத்துக்காட்டி அமெரிக்காவின் கோபத்தைத் தணித்துவிட்டது. இவ் உடன்படிக்கையின் படி அமெரிக்காவின் போர்க் கப்பல்களும், போர் விமானங்களும் ஸ்ரீலங்காவின் வசதி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளலாம். இருந்தும், இந்து மகாசமுத்திரத்தின் எல்லைவரை (ஆப்கானிஸ்தான்) வந்துவிட்ட நேட்டோ (NATO) அமைப்பு, நேட்டோவின் இந்து மகாசமுத்திரக் கிரீடத்தின் மாணிக்கக் கல்லாகக் கருதப்படும் ஸ்ரீலங்காவிற்குள் வருவதற்கான முயற்சி தள்ளிப்போடப்பட்டதால் அமெரிக்காவின் கோபம் இன்னமும் தணியவில்லை.

இரண்டாவது வகையான பிறநாடுகளின் ஆயுத உதவிகளும் சாத்தியமானதாகவே உள்ளது.

20-ம் நூற்றாண்டுவரை இருந்த ஸ்ரீலங்காவின் நிலை வேறு இன்றைய ஸ்ரீலங்காவின் நிலை வேறு. எரி பொருள் வளங்களைப் பங்கிட்டுக் கொள்வதில் உலக அரங்கில் ஒரு கடும் போட்டி நிலவுவதை எவரும் அறிவர். இதில் சுவையான விடயம் மேற்குலகிற்கு எரிபொருள் வளங்கள் செல்வதை தடுப்பதில் ஒரு பனிப்போர் நடைபெறுவதேயாகும். இதில் மேற்குலகிற்கு எதிரான அணியின் மூர்க்கமான முன்னணிப் போராளிகள் சீனாவும், ரஷ்யாவுமேயாகும். இப்போரில் மேற்குலகு தொடர்ந்து பல தோல்விகளைச் சந்தித்து வருகிறது. இலங்கையில் மேற்குலகுக்கு ஏற்பட்ட தோல்வியும் இதில் ஒன்று. இலங்கைத்தீவின் கடல்சார் வளங்கள் மேற்குலகிற்குச் சென்று

விடக்கூடாது என்பதில் இவ்விரு நாடுகள் மட்டுமல்ல, இந்தியா உட்பட மிகப் பல ஆசிய ஆபிரிக்க நாடுகள் ஓரளவு ஆர்வம் காட்டி வருகின்றன. ஆர்வ மிகுதியால் சில நாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு என்ன உதவியும் செய்வதற்குத் தயாராகவுள்ளன. அதாவது, அவர்கள் எல்லோர்க்கும் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ ஒரு செல்லப்பிள்ளையாகவே உள்ளார். அவர் காட்டில் இப்போ மழை பெய்கிறது. அது அமிலமழை என்பதை அவர் உணராவிட்டாலும் மக்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள்.

'ஸ்ரீலங்காவின் இறையாண்மையைப் பாதுகாப்பது', 'எல்லா மக்களுக்கும் பொருத்தமான தீர்வு' 'நாம் எல்லோரும் ஸ்ரீலங்கர்கள், எமக்குள் பேதங்கள் தேவையில்லை' என்பனவற்றின் உண்மையான அர்த்தம் என்ன? இலங்கை மக்களின் ஆழ்கடல் வளங்களையும், இலங்கை மக்களின் வளமிக்க பரவைக்கடல் படுக்கைகளையும் (இவற்றின் வளங்கள் அளவிடப்பட்டு, அவற்றை அகழ்ந்தெடுப்பதற்காக அந்நிய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டும் வருகின்றன.) இலங்கை மக்களின் வடபகுதித் தீவுகளைச் சுற்றியுள்ள பிரமிக்கத்தக்க வளங்களையும்( இவை பற்றிய கருதுகோள்கள் மட்டும் முன்வைக்கப்பட்டுள்ளன, இன்னமும் அளவிடப்படவில்லை.) அதிபர் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரைத் தவிர வேறு எவரும் பங்குபோட்டுவிட வந்துவிடக்கூடாதென்பதேயாகும். இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதி தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதை ஒத்துக் கொண்டால் அவர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டி வந்துவிடாதா? அதாவது ஸ்ரீலங்கர்கள் என்பது அதிபர் மஹிந்த ராஜபக்ஷ குடும்பமேயாகும் என்பதே இதன் அர்த்தமாகும். இங்கு சொல்ல வந்த விடயம் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் வரம்புகளற்ற ஆசைக்கான காரணம் தனக்கு ஆயுதத் தட்டுப்பாடு வருவதற்கான வாய்ப்பில்லை என அவர் கருதுவதேயாகும்.

இதற்கோர் எடுத்துக் காட்டாக யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது, அதிபர் மஹிந்த ராஜபக்ஷ இராணுவத்துக்கான செலவை எப்படிச் சமாளித்தார் என Outlookindia என்ற இதழுக்கு SP வளங்கிய செவ்வியின் சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

கடந்த சில வருடங்களாக இந் நாட்டில் கட்டுமான அபிவிருத்திகள் எதுவும் பாரியளவில் நடந்துள்ளதாக எனக்குத் தெரியவில்லை. கட்டப்பட்ட சில பாலங்களும், வீதிகளும் சென்ற அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு இவ் அரசாங்க காலத்தில் நிறைவேற்றப்பட்டவையேயாகும். அபிவிருத்தியை நிறுத்தியதற்கு யுத்தம் ஒரு காரணமாக இருந்திருக்க முடியாது.

**யுத்தத்தில் எவ்வளவு செலவானது?**

எமது GDP யில் நான்கு விழுக்காட்டைக்கூட நாம் செலவழிக்கவில்லை.

கடந்த மூன்று வருட யுத்தத்தின் போது அதன் தொகை என்னவாகவிருக்கும்?

ஒரு எடுத்துக்காட்டாக சென்ற வருடம் இராணுவத்துக்கான செலவை எடுத்துக் கொண்டால், அது 700 கோடி ரூபாயாகும் (US $62 மில்லியன்). ஆனால் இந்தத் தொகை நாம் வெடி பொருட்கள் வாங்கவும் பிற பாதுகாப்புப் பொருட்கள் வாங்கவும் செலவிட்ட தொகையையும் உள்ளடக்கியதாகும். நாம் யுத்தத்தை ஆரம்பிக்கமுன்னர் (கடைசிக் கட்டமான 2006 ஆகஸ்ட் - 2009 மே வரை) அது 320 கோடியாக இருந்தது. யுத்தத்தின் போது இது இருமடங்காகியது. ஆனால் யுத்தத்தின் போது நாம் வாங்கியவற்றில் அனேகமானவை வெடிபொருட்களேதான். நாம் எந்த புது ஆயுதங்களையோ ஆயுதத் தொகுப்புகளையோ வாங்கவில்லை. நாம் வைத்திருந்த ஆயுதத் தொகுப்புகள் அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் வாங்கிய கனரக சுடுகலங்களேயாகும். 2007-ம் ஆண்டின் இறுதிவரை ஏற்கனவே எம்மிடம் இருந்த பழைய வெடிபொருட்களைப் பயன்படுத்தித்தான் போராடிக் கொண்டிருந்தோம். நாம் கோரியிருந்த புதிய கருவிகள் 2008-ல் தான் எமது கைகளுக்குக் கிடைத்தன. 2008-ல் வாங்கப்பட்ட ஆயுதங்களில் பெரும்பான்மையானவை கடனுக்கு வாங்கப்பட்டவையாகும். உண்மையிலேயே இந்தக் கடன் அனைத்தும் கொடுத்து முடிக்கப்பட வேண்டியது 2012-லேயே ஆகும். பெருமளவான கடன்கள் சீனாவில் இருந்து கிடைத்ததாகும். கடனுக்கு ஆயுதங்கள் வாங்கக் கூடியதாய் இருப்பது அவர்களிடம் மாத்திரந்தான். பீக்கிங் ஒலிம்பிக் போட்டியின் போது அவர்களால் நான்கு மாதங்களுக்கு எந்தக் கப்பலையும் அனுப்ப முடியவில்லை. அந்த நேரத்தில் நான் பாகிஸ்தான் இராணுவத் தளபதியை அணுகி அவரின் இராணுவக் கிடங்கினிலிருந்து அவசரத் தேவைகளுக்காக ஓரளவு வெடிபொருட்களைப் பெற்றுக் கொண்டேன்.

வேறு எந்த நாட்டிடமிருந்தாவது நீங்கள் வெடிபொருட்கள் பெற்றுக் கொண்டீர்களா?

எமது விமானப்படை உக்ரேனில் இருந்து மிக்-MiG- விமானங்களையும், இஸ்ரேலில் இருந்து குண்டுகளையும் பெற்றுக் கொண்டது.

புது டெல்லியிடம் இருந்து நீங்கள் பெற்றுக் கொண்ட உதவிகள் எவை?

அரசியல் ஆதரவும் தார்மீக ஆதரவும். ('He Said The Army's Too Strong, Sri Lanka Will Become Like Myanmar' outlookindia.com).

SP ராஜதந்திரம் கருதி சில உண்மைகளை மறைத்தாலும் இந்தியாவிடம் இருந்தும் ஆயுதங்கள் வாங்கப்பட்டனவென்றே நம்பப்படுகிறது. ஆனால் மேலே தரப்பட்டுள்ள ஆயுத கொள்வனவு விபரப்பட்டியல் இலங்கைக்கான ஆயுத விற்பனவில் இந்தியாவின் பங்கு மிக அற்பமே என்பதைக் காட்டுகின்றது.

2008-ல், சீனா ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு US$ 57 மில்லியன் பெறுமானமுள்ள ஆயுதங்களை விற்பனை செய்தது. 2007-ம் ஆண்டு இந்தியா US$ 21மில்லியன் மதிப்புள்ள ஆயுதங்களை வளங்கியது. 2006-ம் ஆண்டு உக்ரேன் US$ 22மில்லியனுக்கு ஆயுதங்கள் வழங்கியது, தன் பங்கிற்கு இஸ்ரேல், 2000ம் ஆண்டு US$ 16 மில்லியனுக்கு ஆயுதங்கள் விற்பனவு செய்தது. (The collapse of the ethno-nationalist project of the LTTE and the Tamil Question in Sri Lanka" -Rajesh Tyagi )

2000 ஆண்டில், புலிகளால் நடத்தப்பட்ட "ஓயாத அலைகள்" தாக்குதலின் போது, ஏற்ப்பட்ட நெருக்கடிகளிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தை மீட்பதற்காக, குறுகிய கால அவகாசத்தில் Multi-Barrel Rocket Launcher System (MBRLS) மற்றும் உயர் தொழில் நுட்ப ஆயுதங்களை பாகிஸ்தான் வழங்கியது.

பொன்சேகாவின் பாகிஸ்தான் விஜயத்தின் பின்னர், பாகிஸ்தான் ஸ்ரீலங்காவிற்கு US$100 மில்லியன் பெறுமதிமிக்க 22 அல்-காலித் கவச வாகனங்களை விற்பனை செய்துள்ளது. பல இடத்தில் இருந்து கிடைத்த தகவல்களின்படி, ஸ்ரீலங்கா கொத்தணிக் குண்டுகள், ஆழ ஊடுருவிச்சென்று வெடிக்கும் குண்டுகள், ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், Multi-Barrel Rocket Launcher System (MBRLS) ஆகியனவற்றை பாகிஸ்தானிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது. பாகிஸ்தானிடமிருந்து அதிகளவு ஆயுதங்கள் வாங்கும் மத்திய கிழக்கு நாடுகளைப்போல் ஸ்ரீலங்காவும் பாகிஸ்தானிடமிருந்து அதிகளவு ஆயுதங்களை வாங்கும் நாடுகளிலொன்றாக ஆகியுள்ளது. (Pakistani Arms Enabled Lanka Defeat of LTTE, HAQ'S MUSINGS)

பிற நாட்டு 'உதவிகள்' முற்றாக நின்றுவிட மாட்டாது. ஆனால் ஏதோ சில காரணங்களால் குறைவதற்கான வாய்ப்புகள் தற்காலிகமாக வேனும் உருவாகலாம். அப்படி நின்றாலும் கூட அதைச் சமாளிப்பதற்குரிய திறன் தனக்குண்டு என அதிபர் மஹிந்த ராஜபக்ஷ நம்புகிறார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விமர்சனத்துக்கும் முன்னாள் தளபதி SPயின் கூற்றுக்கும் இடையே பெரும் வேறுபாடு தெரிகிறதல்லவா? அதிக பணம் இராணுவத்துக்குப் போனதென்கிறார் ஒருவர், மிகக்குறைந்தளவே

செலவானது என்கிறார் இன்னொருவர். யாருமிங்கு பொய் கூறவில்லை. ஊழல் நடந்துள்ளதென்பதை சூட்சுமமாகச் சுட்டிக்காட்டுகிறார் SP. ஆனால், அக்குற்றச்சாட்டை SP மீது குற்றஞ்சுமத்தி அவரைச் சிறையில் தள்ளிவிட்டார் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ. இவர் தன்னை இராணுவரீதியாக பலப்படுத்தி வருவதற்கு ஊழலுமொரு காரணம். ஊழல் நடத்துவதற்கு மூடிய நிர்வாகம், சிறகுடைந்த பத்திரிகை ஜனநாயகம், அதிகாரத்துவ குடிமைய நிர்வாகம் ஆகியன அவசியம். இவற்றின் தொகுப்புத்தான் தனிமனித இராணுவ சர்வாதிகாரம்.

ஒரு சமூகம், சமூகப் புரட்சிக்குத் தயாராகிவருகிறது என்பதற்கான முன்நிபந்தனைகளில் ஒன்று மக்களுக்கும் அரசுக்கும் இடையேயுள்ள தூரம் சம்பந்தப்பட்டதாகும். அரசு எவ்வளவு தூரத்திற்கு மக்களிலிருந்து அந்நியமாகி செல்கின்றதோ அவ்வளவு தூரத்திற்கு புரட்சி அண்மித்து வருகின்றதென்று அர்த்தமாகும். அதேபோல், மற்றோர் நிபந்தனை, மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்கான ஜனநாயக வழிமுறைகள் எவ்வளவு தூரத்திற்கு அடைபட்டு வருகின்றனவோ அவ்வளவு தூரத்திற்கு புரட்சிகர வழிமுறைகள் திறக்கப்படுவதற்கான காலம் நெருங்கி வருகின்றதென்று அர்த்தமாகும். ஆனால் இந்நிபந்தனைகள் மட்டும் போதுமென்பதல்ல. பிற நிபந்தனைகளும் பொருந்தி வரவேண்டும்.

1978-உடன் ஸ்ரீலங்கா அரசு தனது அழிவு படலத்துள் நுழைந்து விட்டது. அதாவது அதன் வீழ்ச்சிக் காலம் ஆரம்பமாகி விட்டது. வீழ்ச்சிப்படலத்தின் கால அவகாசத்தை நீட்டுவதற்காக இந்தியாவின் உதவியைப்பெறும் முயற்சியில் JRJ வெற்றிபெற்றார். ஆனால் UNP-க்குள் இருந்த உள் முரண்பாட்டின் காரணத்தாலும், புலிகள், JVP ஆகிய இயக்கங்களின் எதிர்ப்பின் காரணத்தாலும் இம் முயற்சி தோல்வி கண்டது. அதற்கடுத்ததாக ஜனாதிபதி சந்திரிகா எடுத்த முயற்சியும் அதைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்த முயற்சியும் (சமாதானத்துக்கான முயற்சி), ஆளும் வர்க்கங்களுக்கிடையே உள்ள போட்டியின் காரணத்தால் தோற்றுவிட்டன. யுத்தத்தை நடத்தி, அதில் வெற்றிபெற்று அழிவுப்படலத்தைத் தடுத்து நிறுத்திவிடலாம் எனத் திட்டமிட்டார் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ. ஆனால் அவர் நினைத்ததொன்றாகவிருக்க நடந்ததோ இன்னொன்றாகியுள்ளது. எவ்விதம்? யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதாரச் சுமைகளைச் சமாளிப்பதற்காகவும், இராணுவத்துக்கான பராமரிப்புச் செலவுகளை ஈடுகட்டுவதற்காகவும் மக்கள் மீதான வரிப்பணம் மேலும் அதிகரிக்கப்படும். தற்போது தெற்காசியப் பிராந்தியத்திலேயே பணவீக்க அதிகரிப்பு அதிகளவில் உள்ள நாடு ஸ்ரீலங்கா தான் என JVP யின் அறிக்கையொன்று கூறுகிறது. வரி அதிகரிப்பால் ஏற்படும் எதிர்ப்பை அடக்க இராணுவம் மேலும் பலப்படுத்தப்படும். இதனால் வரிச்சுமை மேலும் கூடும் இவ்விதமே அரசின் அழிவுவரை தொடரும்.

‘கெடுவான் கேடு நினைப்பான்’ என்ற விதிக்கமைய அதிபர் மஹிந்த ராஜபக்ஷவும் வரியை அதிகரிக்கத் தயங்கப் போவதில்லை, தயங்கவும் முடியாது. இதனால் விளையும் பஞ்சமும், வறுமையும் அவருக்கல்ல, அது மக்களுக்கே. ஆனால் மக்களின் கோபத்தின் பலனோ அவருக்கும் மக்களுக்கும். அவருக்கு அழிவாக மக்களுக்கு வெற்றியாக.

அழிவுப் படலம் ஆரம்பமாகிவிட்டது என்பதன் அர்த்தம் மூலோபாய நிலையில் அரசு, தாக்குதல் நிலையில் இருந்து தற்காப்பு நிலைக்குச் சென்றுவிட்டது என்பதேயாகும். அதே நேரத்தில் தந்திரோபாயமாக நோக்கினால் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக அது நடத்திய, நடத்திக் கொண்டிருக்கின்ற, இனி நடத்தப்போகின்ற தாக்குதல்கள் இதுவரை இருந்ததைவிட மூர்க்கத்தனமானதாகவும், கொடூரமானதாகவும், நீடித்த தன்மை கொண்டதாகவும் இருக்கும். அதனது தற்காப்பில் அது மட்டும் அக்கறை கொள்ளவில்லை. உலகளாவிய ஏகாதிபத்தியக் கட்டமைப்பும் அக்கறை கொண்டுள்ளதே இந்த மூர்க்கத் தாக்குதல்களுக்கான காரணங்களாகும். உலகின் எந்த மூலையிலானாலும் சரி அது ஒரு மிகச்சிறிய தீவாக இருந்தாலுங்கூட, தரகு முதலாளித்துவ அரசு வீழ்வதை ஏகாதிபத்தியக் கட்டுமானம் அனுமதிக்காது. அவ்வரசைக் காப்பாற்ற அக்கட்டுமானம் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

‘ஜனநாயகத்தை’க் கட்டிக் காப்பதாகக் கூறப்படும் நான்கு தூண்களைப் பற்றி மகிந்தவுக்குக் கவலையில்லை. அது பிறரை அரசியல் முட்டாள்களாக்குவதற்கான ஒரு கட்டுக்கதை என்பதை மகிந்த நன்கு அறிவார். ஒடுக்கும் வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தின் அச்சாணி ஆயுதப்படைகள்தான் என்பதையும், இந்த அரசியல் அதிகாரத்தை வீழ்த்தக் கூடிய சக்தி மக்களின் எழுச்சி அல்லது ஆயுதபாணிகளின் கிளர்ச்சிதான் என்பதையும் ஜனாதிபதி மகிந்த நன்கு அறிந்துள்ளார் போலும். இந்த உண்மையைப் புரிந்து கொள்ள அவர் ஏதாவது இஸங்களைப் படித்திருப்பாரோ என்னவோ தெரியாது ஆனால் இலங்கையின், குறிப்பாக சிங்கள இனத்தின் தொன்மைக்கால அரசியல்-வரலாற்று அனுபவங்களையும், காலனியல் கால அரசியல்-வரலாற்று அனுபவங்களையும், காலனிக்குப் பின்பான மே 2009 வரையான அரசியல்-வரலாற்று அனுபவங்களையும் அவர் உணர்வு பூர்வமாகக் கற்றுள்ளார் போலும். ஆயுதம்-படை-யுத்தம் இந்த மூன்றையும் அச்சாணியாகக் கொண்டே தீர்க்கமான அரசியல் அதிகார மாற்றங்கள் நடைபெற்று வந்துள்ளன. சுதந்திரத்துக்குப்பின் ஸ்ரீலங்கா அரசு மூன்று உள்நாட்டு யுத்தங்களை எதிர்கொண்டு மூன்றிலும் வெற்றி பெற்றுள்ளது. இவ் அரசியல்-வரலாற்று அனுபவங்கள் அனைத்துமே ஒன்றில் அந்நிய ஆக்கிரமிப்பும் அதற்கெதிரான போராட்டங்களும் சம்பந்தப்பட்டவை அல்லது மக்களின் எழுச்சியை அடக்கி ஒடுக்கியது சம்பந்தப்பட்டவை. இவை

கற்றுத்தரும் ‘அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழலில் இருந்துதான் பிறக்கிறது.’ என்ற மிக எளிய பாடத்தைப் புரிந்து கொண்டு தனது இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கு, பிரபாகரன்போல் இவருக்கும் வேறு எந்த இஸங்களும் தேவைப்படவில்லை. இதனால்தான் அவர் ஒரு சாராருக்குத் தளபதியாக இருந்ததுபோல் இலங்கையின் சிங்கள-பௌத்த மேட்டுக்குடியினரின் நம்பிக்கைக்குரிய அரசியல்-இராணுவத் தளபதியாக இவராலும் இருக்க முடிகிறது. இருவரும் ‘சாது மிரண்டால் காடு கொள்ளாது’ என்பதைப் புரிந்து கொள்ளாத ‘பயமறியா இளங்கன்று’ வகையினராகும்.

‘அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழலில் இருந்துதான் பிறக்கிறது’ எனச் சொன்னவர் ஒரு இஸத்திற்குச் சொந்தக்காரராகும். மக்களுக்கான அதிகாரத்தை வேண்டி நின்றவராகும். மக்கள் விரோதிகளின் அதிகாரத்தை விழுத்த ஒரு இராணுவம் - இது முதல் நடவடிக்கை.
மக்களை இராணுவமயமாக்குவதன் மூலம் தாமே அமைத்த இராணுவத்தைத் தாமே கலைத்தல் - இது இரண்டாவது நடவடிக்கை.
யுத்தமற்ற சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் ஆயுதங்களை பழைய இரும்புக் கடைக்கு விற்றல - இது மூன்றாவது நடவடிக்கை.
இக் கனவுகளின் முதல் படியாகத்தான் அவர் மேற்கண்டவாறு கூறினார். மற்றும்படி, ‘கண்ணுக்கு கண்’, ‘பல்லுக்கு பல்’ என்ற பழிவாங்கும் உணர்வுள்ளவர்களுக்கும், சில ஆயிரக்கணக்கானவர்களின் ஆதிக்கத்தை பல இலட்சக் கணக்கானவர்களின் மீது துப்பாக்கி முனையில் திணிப்பவர்களுக்காகவும், இது சொல்லப்படவில்லை. அவர்களுக்குப் பொருத்தமானது, சாதாரண மக்களால் கூறப்படும், ‘ஆயுதம் எடுத்தவன் ஆயுதத்தாலேயே அழிவான்’ என்ற கூற்றேயாகும். இது பிரபாகரனுக்கும் பொருந்தும் மகிந்தவுக்கும் பொருந்தும். றோகன விஜயவீரவுக்கும் பொருந்தும். இருந்தும் மக்கள் விரோதிகளின் அரசியல் அதிகாரம் ஒழிக்கப்படும்வரை இராணுவம் என்ற நிறுவனம் கேந்திர முக்கியத்துவம் பெற்றதாக அமைகிறது. நேபாள அனுபவம் இதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## நேபாள அனுபவம்

நேபாளத்தில் தற்போது நடக்கும் அரசியல் தேக்கநிலை, ஆயுதப்படையினரின் அவசியமும், அதிகரிப்பும் தொடர்பான விவகாரந்தான். அந்நிகழ்வுகளை சற்று நோக்குவோம்.

நேபாள உள்நாட்டு யுத்த முடிவிலான சமாதான உடன்படிக்கை ஏற்பட்டு நான்கு வருடங்களின் பின்னர் (ஐக்கியப்பட்ட நேபாள கம்யூனிஸ்ட் கட்சி) Unified CPN(M) கோர்க்கா மாவட்டத்தின் பலுங்ராற் எனும் இடத்தில் தனது விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்தைக் கூட்டியது. இதில் ஏறத்தாள 6000 கட்சி பிரதிநிதிகள்(Deligates) பங்கு பற்றினர். இதில் ஐக்கியநாடுகளின்

முகாமைத்துவத்தின் கீழுள்ள விடுதலைப்படை வீரர்களின் 1200 பிரதிநிதிகளும் அடங்குவர். சமாதானச் செயல் பாட்டினுள் நுழைந்தபின்னர் கட்சி பெற்றுக் கொண்ட வெற்றிகளையும் தோல்விகளையும் மதிப்பீடு செய்தலே இக் கூட்டத்தின் நோக்கமாக இருந்தது.

கூட்டமுடிவில் அரசியல் சாசன உருவாக்கத்துக்கும் சமாதானத்துக்குமான தமது பங்களிப்பு தொடர்ந்தும் வழங்கப்படும் என்பது உறுதி செய்யப்பட்ட அதேவேளை தமது இலக்குகள் அடையப்பட முடியாது போகுமானால் பொதுவான பரந்த புரட்சி ஒன்றை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

மேற்கு நேபாளத்தில் சுங்பங் எனுமிடத்தில் 2005-ம் ஆண்டு ஒன்றுகூடிய மாஓயிஸ்டுகள் ‘ஜனநாயகக் குடியரசு’எனும் பாதையைத் தேர்ந்தெடுத்தார்கள். இம்முடிவு 2006 மக்கள் இயக்கத்தின் தோற்றத்திற்கும், சமாதான செயல்பாட்டில் நுழைவதற்கும், அரசியல் சாசன அவைத் தேர்தலுக்கும், மன்னராட்சியின் முடிவுக்கும் இட்டுச் சென்றது. இந் நடவடிக்கைகளுக்காக பிற அரசியல் கட்சிகளுடன் ஒரு கூட்டும் உருவானது. தாம் அரசாங்க அதிகாரத்துக்கு வந்த 2008-ம் ஆண்டு காத்மண்டுவின் புறநகரப்பகுதியான கரிபடியில் மாஓயிஸ்டுகள் சந்தித்துக் கொண்டார்கள், அச் சந்திப்பில் மக்கள் சமஷ்டி ஜனநாயகக் குடியரசு நிறுவப்படுமென அறிவித்தார்கள். இந்த அறிவிப்பை தமது குறிக்கோளுக்கு மாறானதென புரிந்துகொண்ட ஏனைய கட்சிகள், இராணுவத் தளபதியை பதவி விலக்க மாஓயிஸ்டுகள் மேற்கொண்ட முயற்சிகளுக்கெதிராகச் செயற்பட்டார்கள். இந்நிகழ்வைத் தொடர்ந்து அரசியல் செயற்பாடுகளும், சமாதானத்துக்கான செயற்பாடுகளும், அரசியல் சாசன உருவாக்கச் செயற்பாடுகளும் மந்தமடைய ஆரம்பித்தன. மாஓயிஸ்டுகள் ஜனநாயகத்துக்கு எதிராகச் செயல்படுகிறார்கள் என இந்தியாவும் ஏனைய அரசியல் கட்சிகளும் அவர்கள்மீது குற்றம் சுமத்தின. மக்கள் விடுதலை இராணுவத்துடனான தமது தொடர்புகளை மாஓயிஸ்டுகள் துண்டித்துக் கொள்ளும்வரை அவர்களின் கைகளில் அதிகாரம் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என வாதிட்டனர். தேர்தலில் தாம் அதிக வெற்றிகளைப் பெற்றிருந்துங்கூட தம்மைத் ‘தனிமைப் படுத்துவதற்காகவும்’ ‘நேபாள இராணுவத்தை ஜனநாயகப்படுத்தல்’ உட்பட்ட அரசியல் மார்க்கங்களை தடுத்து நிறுத்துவதற்காகவும் இந்தியாவும் பிற பாரளுமன்றக் கட்சிகளும் கூட்டிணைந்து செயல் படுகின்றன என்று பதிலுக்கு மாஓயிஸ்டுகள் குற்றஞ்சாட்டினர்.

2005-ல் இக்கட்சி, ‘நிலப்பிரபுத்துவம்’தான் நாட்டு மக்களின் பிரதான எதிரியெனப் பிரகடனப்படுத்தியது. இந்த அடிப்படையில் ஒரு ஜனநாயகக் குடியரசை அமைப்பதற்காக இந்தியாவுடனும் ஏனைய கட்சிகளுடனும் ஒரு நட்புறவை ஏற்படுத்திக் கொண்டது. ‘மன்னராட்சி’ வீழ்ந்ததன் பின்பு

கட்சியின் பிரதான குறிக்கோள் ‘தேசியவாதம்’ஆக இருக்கவேண்டுமென்ற விவாதம் கட்சிக்குள் ஆரம்பமானது.

கட்சியின் சமீபத்திய முன்சொன்ன விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்தொடரில் ‘இந்தியாவும் உள்ளூர் பிற்போக்கணியினரும்’ இணைந்த கூட்டுக்கும் நேபாள மக்களுக்கும் இடையேயான முரண்பாடுதான் நேபாளத்தின் பிரதான முரண்பாடு (principal contradiction) என்ற கருத்தை திரு பிரச்சண்டா முன்வைத்தார். அவர் மேலும் கூறியதாவது இராணுவத்தளபதியை பதவியில் இருந்து விலக்குவதற்கு செய்யப்பட்ட முயற்சியை தோற்கடிப்பதற்கான அரசியல் எதிர்ப்பின் இயக்குனராக(Director) இந்தியா செயற்பட்டுள்ளது. நேபாளக் கட்சிகளிடையே அரசியல் உடன்பாடு ஏற்படுத்துவதைத் தடுத்ததுவும், சமீபத்திய பிரதம மந்திரி தேர்வில் தனக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலையில் இருந்த மாதேசியர்களின் கட்சிகளை தடுத்து நிறுத்தியதும் இந்தியாதான். நேபாள ஊடகங்களின் சுதந்திரத் தன்மைக்கு தடங்கலை ஏற்படுத்தியதும், அரசியல் சாசன அவையைக் கலைப்பதற்கான சதிவலையைப் பின்னுவதும் இந்தியாதான். இவரின் கணிப்பின்படி இந்தியாதான் பிரதான எதிரியாகிறது.

கட்சியின் குறிக்கோள் ‘சமாதானமும் அரசியல் சாசனமும்’ ஆக இருக்கும் அதேவேளை, அதனுடன் கூடவே பொதுவான புரட்சி ஒன்றுக்கான தயாரிப்புகளிலும் கட்சி ஈடுபடுமென திரு.பிரச்சண்டா கூறினார். அவரின் இந்த ‘இரு மார்க்கத்திட்டம் கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (Maoists in Nepal......The Hindu)

நேபாள இராணுவத்தை ஜனநாயகப்படுத்தல்’ என்பதன் மூலம் கட்சி கருதுவது, தற்போதைய இராணுவத் தளபதியைப் பதவிநீக்கம் செய்வது, தளபதிப் பொறுப்பை கட்சியால் நியமிக்கப்படும் ஒருவரிடம் ஒப்படைப்பது, தமது தலைமையில் உள்ள மக்கள் இராணுவத்தையும் இன்றைய இராணுவத்தையும் ஒன்றிணைப்பது, இவ்விதம் உருவாக்கிய இராணுவத்தை மக்களின் மேற்பார்வையில் வைத்திருப்பதற்கான கட்டுமானப் பொறிமுறைகளை உருவாக்குவது ஆகியவேயாகும். ஒரு வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தின் மையப்பிரச்சனையே இராணுவ அதிகாரம் சம்பந்தப்பட்டதுதான் என்பதில் மாத்திரமல்ல இராணுவத்தை மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கைகள் புதிய ஜனநாயக அரசின் ஆரம்பகாலத்தில் இருந்தே எடுக்கப்படவேண்டும் என்பதிலும் கட்சி தெளிவாகவுள்ளது. ‘அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழலில் இருந்துதான் பிறக்கிறது!’ என்பதை, அரசியல் அதிகாரம் இராணுவத்தின் கைகளில்தான் உள்ளது எனக் கட்சி வியாக்கியானம் கொடுக்கவில்லை. துப்பாக்கிகளையும் ஜனநாயகப்படுத்த முயற்சிக்கின்றது.

ஒரு நாட்டின் இராணுவத்தளபதி என்பவர் அந்நாட்டின் அரசியல் அதிகாரத்தின் உறைவிடங்களில் ஒருவரென்பதை இந்த நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இலங்கையில் பிரபாகரன் முடக்கப்பட்டதும் சரத்பொன்சேகா சிறைபிடிக்கப்பட்டதும் அற்ப நிகழ்வுகளல்ல, ஒரு இராணுவப்புரட்சி நடந்துள்ளது.

## 3.2 ) **எதற்காகப் பலப்படுத்தப்படுகிறது**?

### 3.2..1) **இராணுவச்சதிக்கு அஞ்சியா**?

#### அ) **கரவாஸ்-கொவிகம ஆதிக்க மோதல்**

மேற்குலகின் உதவியுடன் ஒரு இராணுவச் சதியை எதிர்பார்க்கிறாரா?

ஜனாதிபதித் தேர்தலின் போது ஒரு நாள் நள்ளிரவில், 'எனது ஆட்சிக்கெதிராக இராணுச் சதியொன்று நடக்கவுள்ளது, உதவி! உதவி!' என்று இந்தியத் தலைமைக்குக் கேட்கும்படி ஆட்சியாளர்கள் கூக்குரலிட்டது வெறுமனேயொரு வேடிக்கைக் கதையல்ல.

SP வை வளர்த்தெடுத்த, அவராலேயே வளர்க்கப்பட்ட புகழ்பெற்ற 'சிங்க' றெஜிமண்ட் கீழிறக்கப்பட்டுள்ளது. புகழ்பெற்ற அப்படைப்பிரிவு முக்கியத்துமற்ற செயல்பாடுகளுக்குத் திருப்பிவிடப்பட்டுள்ளது. SP யின் தொடர்பில் இருந்தபடியால் சிங்க ரெஜிமண்ட் சந்தேகத்திற்கு உள்ளாகியுள்ளது...........

''அம்பலாங்கொட சிங்கய (சிங்கம்)' இராணுவத்துள் தனது சொந்த விசுவாசிகளையும் கொண்டுள்ளார். ஒரு புலனாய்வுத் தகவலின்படி 75% - 80% இடைப்பட்ட கீழ்மட்ட இரணுவத் துருப்புகள் இந்த சிங்கயவின் ஆதரவாளர்களேயாகும். அதிகாரிகளை எடுத்துக்கொண்டால் 40% இவரின் ஆதரவாளர்களே. இவர்களில் பெரும்பான்மையினர் (captain) கப்ரனில் இருந்து கர்ணல் (colonel) வரையான பதவியில் உள்ளவர்களே. இந்த முன்னாள் கமாண்டர் '3A' சூத்திரத்தை முழுவீச்சில் பயன்படுத்தி தனது அணியை வளர்த்துக் கொள்கிறார். (3A-அம்பலாங்கொட, ஆனந்தா கல்லூரி, இராணுவம்(Army). இராணுவத்தின் உற்சாகத்தை உசுப்பி விடுவதற்காக, JVP ஜாதிக கெல உறுமய(JHU) ஆகிய இயக்கங்களை இராணுவ முகாம்களுக்குச் சென்று பரப்புரை செய்ய அதிபர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி அனுமதியளித்தது. இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பை ஊக்குவிக்கும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டனர். இதன் விளைவாக JVP இராணுவத் துருப்பினரிடையேயும், JHU அதிகாரிகளிடையேயும் செல்வாக்குப்

பெற்றிருந்தனர். இன்று ஜே.வி.பி யை சரத்பொன்சேகாவும், ஜாதிக கெல உறுமய வை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஆதரிக்கின்றன. (Politicisation or Military and the Ponsekara Factor - D.B.S.Jeyaraj).

## அ.1) **சரத்-கரவாஸ் தொடர்பு**

சரத் பொன்சேகா கரவாஸ் (karavaas-உச்சரிப்பு) சமூகத்தைச் சேர்ந்தவராகும். இது ஒரு சாதிப்பிரிவாகவே கருதப்படுகிறது. காலனி காலத்தில் இருந்தே (19ம் நூற்றாண்டு) இச்சாதிப் பிரிவினருக்கும் கொவிகம(உச்சரிப்பு Govigama) சாதிப்பிரிவினருக்கும் இடையே சமூக மேலாண்மைக்கான போட்டி நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. அதன் தொடர்ச்சியும் அப் போட்டியின் ஒரு உயர்ந்த கட்டமுந்தான் சரத் பொன்சேகா (கரவாஸ்) - மகிந்த (கொவிகம) மோதலாகும். கரவாஸ் சமூகத்தால் நடத்தப்படும் இணையத்தளம் ஒன்றில் இருந்து சிலபகுதிகள் இங்கு தரப்படுகின்றன. இவ் இணையத்தளத்தில் கரவாஸ் பிரிவினர் தாம் ஒரு சாதிப்பிரிவினர் என்பதை ஆணித்தரமாக மறுக்கிறார்கள்.

இதுதான் ஸ்ரீலங்காவின் மரபுவழி மறவர் (போர்வீரர்கள்/ ஷைத்திரியர்கள் / முடிக்குரிய துருப்புகள்) இனமாகும். இந்திய பிராந்தியத்தில் ஒருவருடனொருவர் தொடர்புபட்டு ஆட்சி புரிந்த ஆளும் மன்னர் குடும்பங்களுள் கரவாஸ் இனமும் ஒன்றாகும். பொலநறுவக் காலத்திலேதான், ஸ்ரீலங்காவை ஆளும் மரபுவழியுரிமை கரவாஸ் ஆட்சியாளர்களிடம் கையளிக்கப்படுகிறது. மன்னர் கஜபாகு கரவாஸ் மன்னர்களில் பேரும் புகழும் பெற்றவராகும்.

பொலநறுவ காலத்தில் இருந்து ஸ்ரீலங்கா பல கரவாஸ் மன்னர்களாலும், குறுமன்னர்களாலும் ஆளப்பட்டுவந்தது. கடைசிவரை இருந்த மூன்று கரவாஸ் இராசதானிகளும் கரவாஸ் இராஜ குடும்பங்களிடம் இருந்துதான் ஐரோப்பியர்களுக்குக் கைமாறியது. 16-ம் நூற்றாண்டில் கோட்டையும் யாழ்ப்பாணமும் போர்த்துக்கீசர் வசமும், 19-ம் நூற்றாண்டில் கண்டி இராச்சியம் பிரித்தானியரிடமும் கைமாறியது.

ஐரோப்பிய காலனியாக்கம் அனைத்துச் சுதேசிய இராசதானிகளையும், ஆட்சியாளர்களையும் செயல் இழக்கச் செய்தது. இதனால் கரவாஸ்களும், இந்திய ஷைத்திரியர்களான ராஜ்புட்களும் பேரிழப்புகளுக்கு உள்ளானார்கள். கரவாஸ்கள் தாம் இழந்த செல்வங்களிலும் அதிகாரங்களிலும் சிலவற்றை பிரித்தானிய ஆட்சிக்காலத்தின் போது மீட்டெடுத்துக் கொண்டார்கள். இவ்விதம் மீட்டெடுக்கப்பட்டவற்றை சுதந்திரத்துக்குப் பின்பான கொவிகம ஆதிக்க ஸ்ரீலங்கா அரசு பறித்தெடுத்துக் கொண்டது. அத்துடன் கடந்த அரை நூற்றாண்டுகளாக ஸ்ரீலங்கா அரசின் துணையுடன் நடத்தப்பட்டு வரும்

கருத்துருவாக்க நடவடிக்கைகள் கரவாஸ் இனத்தினரை ‘மீனவ சாதி’ என அடையாளப் படுத்துவதாகவே அமைந்துள்ளன.

கரவாஸ் இனத்தவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீலங்காவில் குடியேறியவர்களாகும். இவர்களில் பெருமளவினர் தென்னிந்தியக் கடலோரப் பகுதிகளில் அமைந்திருந்த தொன்மைக்கால குருமண்டலத்தில் இருந்து வந்தவர்களாகும்.

தற்போது கரவாஸ் இனத்தினர் பன்முகத்தன்மை கொண்டவர்களாக சமூக-பொருளாதாரத் துறைகளின் அனைத்து அங்கங்களிலும் பரவிக் காணப்படுகிறார்கள். இவர்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பேசுபவர்களாகவும் பௌத்தம், இந்து, றோமான் கத்தோலிக்கம், பாதிரிவேதம் ஆகிய மதங்களைப் பின்பற்றுவோராகவும் உள்ளனர். (karava. org)

இக் கூற்று பௌத்த- சிங்களவர்களைப் பற்றிய மகாவம்சத்தின் புனைவுக்கு எதிரானதாக அமைகின்றது. கரவாஸ்களைப் புறந்தள்ளி வைப்பதற்காக உருவான நூல்தான் மகாவம்சமா என்றோர் கேள்வி எழுகிறது?

இந்த கொவிகம எதிர் கரவாஸ் சமூக நிகழ்வுதான் 19-ம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்து 20-ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை மேல்நாட்டுச் சிங்களவர் எதிர் கரையோரச் சிங்களவர் (Udaratta sinhalayo Vs Paatharatta Sihalayo) என்ற அரசியல் நிகழ்வுப் போக்காகச் செயல்பட்டது. இலங்கை மூன்று சமஷ்டிகளாகப் பிரிக்கப்படவேண்டும் (வடக்கு-யாழ்பட்டினம், உடறட்ட-கண்டிய இராசதானி, பாத்தறட்ட - கோட்டே இராச்சியம்,) என்றோர் கோரிக்கை ஆரம்பத்தில் பிரித்தானியர்களிடம் முன்வைக்கப் பட்டதாகவும் வரலாற்றுப் பதிவுகள் உண்டு. இலங்கையில் எத்தனிக்கப்பட்ட இரு இராணுவச் சதிகளுக்கும் இந்த முரண்பாட்டுக்கும் தொடர்பு உண்டு.

சுதந்திரத்துக்குப்பின் இலங்கையின் பாதுகாப்புப்படை படிப்படியாகப் பௌத்த சிங்களமயப் படுத்தப்பட்டும், உடறட்ட கொவிகம ஆதிக்கத்துக்கு உள்ளாகியும் வந்தது. அவ் வரலாறு பற்றியதோர் குறிப்பு:

1)............”இன்னுமோர் சந்தர்ப்பத்தில் SWRDB, இலங்கையின் Inspector General of Police பதவிக்கு முதுநிலைவழித் தகுதியுடைய மூன்று Deputy Inspector General-கள் இருக்கக் கூடியதாக, அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதற்காக ‘பௌத்தனான’ குடியியல் அதிகாரி ஒருவரை நியமித்தார்.”

2) “ அப்போதுதான் (தமிழர்களின் சத்தியாக் கிரகப் போராட்டத்தின்

போது) இராணுவத்துள் இனவாத அரசியல் நுழைகிறது. யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட இருந்த 3-வது களப் படைப்பிரிவு லெப்ரினன் கர்னல் வில்மர் (வில்லி) அப்ராகாம்ஸின் ஆளுகையின் கீழ் இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் அப்படைப்பிரிவுக்கு இவர் தலைமை தாங்கிச் செல்வது தடுக்கப்பட்டது. அவர் தமிழர் என்பதே அதற்கான காரணமாக இருந்தது. இவருக்கு இரண்டாவது நிலையில் இருந்த ஆணையிடும் அதிகாரி டபிள்யு. இக்னீசியஸ் லோயலாவும் ஒரு தமிழரே. ஆகையினால் மூப்புநிலை வரிசைப்படி இவ்விருவருக்கும் அடுத்த கீழ்நிலையிலிருந்த மேஜர். வில்ரன் எ.வைற் எனுமொரு பறங்கியரே (Burgher) ஆணையிடும் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலையேற்பட்டது. அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்தவர் என்.கியு.டயஸ் ஆகும்.

இனப் பாகுபாட்டின் காரணத்தால் ஆணையிடும் அதிகாரி ஒருவர் தனது துருப்புகளுக்கு ஆணையிடும் உரிமையிலிருந்து தடுக்கப்பட்டதானது இராணுவ வட்டாரங்களில் இதுதான் முதல் தடவையாக இருக்கலாம்.

'கேர்னல்' றிச்சட் உடுகம திருமதி பண்டாரநாயக்கவிடம் வைத்த விண்ணப்பத்தின் பேரில்தான் வில்லி அப்ராகாம் தடுத்துவைக்கப் பட்டார் என்பது அப்போது இராணுவ வட்டாரங்களில் ஒரு பரம இரகசியமாகவே இருந்தது. யாழ்ப்பாணத்தில் நடந்த வன்முறையற்ற சத்தியாக்கிரகத்தை இராணுவத்தினர் அடித்துக் கலைத்ததை மேற்பார்வையிட்டது உடுகமவேயாகும். இந்தச் சம்பவத்தால் தமிழரை வெற்றி கொண்ட மாவீரராக உடுகம போற்றப்பட்டார்.

**இலங்கையின் முதலாவது சதி**

நாட்டை வழி நடத்திச் சென்ற முறையின் மீதான வெறுப்புகளின் அதிகரிப்பானது, காவல் துறையினதும், இராணுவத்தினதும், சில உயரதிகாரிகளின் இரத்தம் சிந்தாச் சதிக்கான திட்டமிடலில் முடிவடைந்தது. இது நடந்தது 1962-இல். இனக்குழும ரீதியில் அப்போது இலங்கை இராணுவத்தில் சிங்களவர் 70%. பறங்கியர்கள் 7%, முஸ்லீம்கள் 11% (அநேகமானோர் மலேசிய முஸ்லீம்கள்) மீதமானோர் (12%) தமிழர்களாகவும் இருந்தனர். அதிகாரிகளில் 40% ற்கும் அதிகமானோர் கிறிஸ்தவர்களாகும். இக் கிறிஸ்தவர்கள் - சிங்களவர்கள், தமிழர்கள், பறங்கியர்களாக இருந்தனர்.

தகவல்கள் முன்கூட்டியே கசிந்து விட்டதால் திட்டமிட்டவர்கள் பின்வாங்கிக் கொண்டார்கள். விசாரணைகள் நடந்தன. ஆகக் குறைந்தது 26பேர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார்கள்.

இது அப்பே ஆண்டுவ வேலைத்திட்டத்திற்கு எதிராக இலங்கையின் நில உடமை வர்க்கத்தின் ஒரு சாராரும், தரகுமுதலாளிகளில் ஒரு பகுதியினரும், ஐரோப்பிய மயமாகியிருந்த கிறிஸ்துவ மேற்தட்டினரும், யு.என்.பியினரும் இணைந்து நடத்திய ஒரு வர்க்கப் போராட்டமாகும். பாரளுமன்றத் தேர்தல் மூலம் முடியாததை இராணுவச் சதிமூலம் நிறைவேற்றப் பார்த்தார்கள். இச்சதியிலும் உடறட்ட-பாத்தறட்ட முரண்பாடும், தமிழ்-சிங்கள முரண்பாடும் செயல்பட்டுள்ளது. பறங்கியர்களைத் தவிர்த்து மீத ஆளும் வர்க்க கிறிஸ்தவர்கள் தமிழர்களாகவும் பாத்தறட்ட சிங்களவர்களாகவுமே இருந்தனர். தமிழ் உயர் மட்ட கிறிஸ்தவர்களில் அநேகர் யாழ்ப்பாண வேளாளர்களாக இருக்க (தமிழ்த் தேசியத்தின் மூலவேர்களில் ஒன்று இங்கு உள்ளது.) பாத்தறட்ட கிறிஸ்தவர்கள் கரவாஸ்களாக இருந்தனர். காலனியல் வாதிகளுக்கு ஆதரவான இச் சதிக்கு கேரளாவில் உள்ள கிறிஸ்துவ நிறுவனங்களும் உதவி புரிந்ததற்கான பதிவுகளுமுண்டு.

இச் சதியைத் தொடர்ந்து அரசு எடுத்த நிலைப்பாடு இதை உறுதிப்படுத்துகிறது.

கருவிலேயே கலைந்துபோன சதி எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியது. சதித்திட்டம் தீட்டியவர்களில் அதிகமானோர் கிறிஸ்தவர்களாக இருந்ததனால் அன்றிலிருந்து, அப்போதைய பிரதமமந்திரி திருமதி பண்டாரநாயக்க கிறிஸ்தவர்களையிட்டு மித மிஞ்சி எச்சரிக்கையாக இருக்க ஆரம்பித்தார். இதனால் அயுதப்படையின் நிர்வாகத்தில் அரசியல் ‘தலையீடுகள்’ அதிகரித்தன. கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஒழிவு மறைவற்ற ஓரவஞ்சனை ஆரம்பமானது. ஆட்சேர்ப்பிலும் பதவி உயர்விலும் சிங்கள - பௌத்த மதிப்பீடு மிகக் கறாராகப் பின்பற்றப்படல் ஆரம்பமானது.

ஆரம்பத்தில் பிரித்தானியாவில் உள்ள Sandhurst இராணுவக் கல்லூரிக்கு அனுப்பப்படும் மூன்று பயிலுனர்களில் ஒருவர் கிறிஸ்தவராக இருப்பார். ஆனால் ஸ்ரீமா பண்டாரநாயக்க காலத்தில் மூவருமே சிங்கள பௌத்தர்களாகவே இருந்தனர்.

இது ஒரு சதிக்கான உதாரணம் மட்டுமல்ல, இலங்கை இராணுவம் எவ்விதம் சிங்கள பௌத்தமயமாகி வருகின்றது என்பதற்கும் ஒரு உதாரணமாகும்.

இராணுவத்துள் மதச்சார்பு செயல்பட்டதற்கான மற்றோர் மிகத் தெளிவான உதாரணந்தான் 1964-ல் நடந்த பிரிகேடியர் கெயின் விவகாரமாகும். முதுநிலை அடிப்படையில் இராணுவ ஜெனரலாக பதவி உயர்வு பெற வேண்டிய இவர் குறைத்து மதிப்பிடப்பட்டார். சிங்கள பௌத்தரான ரிச்சட் உடுகம இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

ஆனால், 1966-ல் சந்தேகிக்கப்பட்ட மற்றோர் இராணுவச் சதியில் சமபந்தப்பட்டாரென்ற குற்றச்சாட்டில் உடுகம தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திக் கொண்டதால் அவர் அப் பதவியில் இருந்து விலக்கப்பட்டார். 1966-இல் கெயின் மீண்டும் இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்டார். இச் சந்தேகிக்கப்பட்ட சதி நடந்தது 1966-ல். அப்போது டட்லி சௌநாயக்காவை பிரதமராகக் கொண்ட யு.என்.பி அரசாங்கம் ஆட்சியிலிருந்தது.

இவ்வரசாங்கம் வடக்கு-கிழக்கு நிர்வாகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தமிழ் மொழிப் பயன்பாட்டிற்கான அனுமதியை வழங்கியிருந்தது. SLFP-LSSP-CP கூட்டு இந்த அனுமதிக்கு எதிராக இனவாத அடிப்படையில் தனது எதிர்ப்பைக் காட்டியது. இந்தச் சூழலில்தான் சதிமுயற்சி சந்தேகிக்கப்பட்டது. துப்புத்துலக்கப்பட்டது. முறியடிக்கப்பட்டது.

இதில் தொடர்பு இருந்ததாகக் கூறி மத்திய மற்றும் கீழ்நிலை மட்ட அலுவலர்கள் தண்டிக்கப்பட்டார்கள். 20% இராணுவத் துருப்புகள் அரசாங்கத்திற்கெதிராக அரசியல் மயப்படுத்தப்பட்டு இருப்பதாகவும், இவ்வரசாங்கம் சிங்கள பௌத்த நலன்களை தமிழர்களிடம் விற்பதாக நம்ப வைக்கப்பட்டிருப்பதாகவும் புலனாய்வுத்துறையறிக்கை அரசாங்கத்தை எச்சரித்தது. 1966 சதி முயற்சியில் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட மூவரும் சாமானியர்களல்ல. இராணுவ காமாண்டர் ரிச்சர்ட் உடுகம, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் என்.கியு. டயஸ், மிகச் செல்வாக்கு மிக்க பௌத்த துறவி வணக்கத்துகுரிய கென்பிட்டகெதற ஞானசிக தேரோ ஆகியோரே அந்த மூவருமாகும். Dr. திச என்ற பெயரில் றோகன விஜயவீராவும் (JVP ஸ்தாபகரும், முன்னாள் தலைவருமாகும்) இதில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்பட்டார்.

இது றணில் விக்கிரமசிங்கவின் அரசியல் முன்னோடிகளின் ஆட்சிக்காலத்தில், அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் இராணுவ முன்னோடிகளால் நடத்தப்பட்ட சதியாகும். இச் சதியை அடக்குவதாகக் கூறி இராணுவத்துள் களையெடுப்புகள் நடந்துள்ளன. ரிச்சர்ட் உடுகமவிற்கு வைக்கப்பட்ட ஆப்பு இராணுவத்துள் உடரட்ட சிங்கள றதல (நில உடமையாளர்கள்) குடும்பத்தின் மேன்மைநிலைக்கு வீழ்ந்த அடியாகும்.

1971 JVP கிளர்ச்சி அடக்கப்பட்டது. மீண்டும் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடைபெற்றது. இம்முறை அது அதிக அரசியல் தன்மைபெற்றதாக இருந்தது. அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருப்பவர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இது KGB - யின் காலமாக இருந்தது. கண்டிய கொவிகம பௌத்தர்களுக்கு (Kandyan Govigama Buddhists) முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இக் காலப்பகுதியில்தான் கடலில் என்றுமே நீந்தியறியாத

உடறட்ட (மலைநாடு) சிங்கள இளைஞர்கள் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அதே நேரம் கடலுடன் யுத்தம் நடத்துவதையே வாழ்க்கையாகக் கொண்ட கத்தோலிக்க இளைஞர்கள் (கரவாஸ்) வெளியே குளிரில் நிறுத்தப்பட்டார்கள். இக் காலத்தில்தான் குடும்ப உறுப்பினர்களுக்குச் சலுகை காட்டி அதிகாரப் பதவிகளுக்கு கொணரும் நடைமுறை வெளிப்படையாகவே பின்பற்றப்படும் போக்கு தலைதூக்கியது. இளநிலைப் பதில் லெப்ரினன் அனுரத்த றத்வத்த லெப்ரினன் கேர்ணலாக பதவியுயர்த்தப்பட்டு அவருக்குப் பிரதான பாத்திரம் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் அவருக்கு நிர்வாகப் பொறுப்புகளும் வழங்கப்பட்டன. றத்வத்த ஆளும் குடும்பத்தின் உறுப்பினராகும். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் உறவினர். (Politicisation Of Military And The Fonsek…thesundayleader.lk)

சரத் பொன்சேகா சதி செய்ய முற்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டாலும், சட்டரீதியாக அவ்விதமான குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்படவில்லை. மாறாக ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தற்போது இராணுவ நீதி மன்றம் அவருக்கு சிறைத்தண்டனை வழங்கியுள்ளது. ஜனாதிபதி நடத்தி முடித்துள்ள சமீபத்திய இராணுவக் களையெடுப்பு KGB வகைப்பட்டதல்ல, அது PGB (பாத்தறட்ட கொவிகம புட்டிஸ்ட்) வகைப்பட்டதாகும்.

## அ.2) JVP-கரவாஸ் தொடர்பு

அதுமட்டுமல்ல 1971-ல் நடந்த J.V.P கிளர்ச்சிக்கும் இம்முரண்பாட்டிற்கும் கூடத் தொடர்பு இருந்துள்ளது.

J.V.P தலைவர் றோகன விஜயவீர, அம்பாந்தோட்ட மாவட்டத்தின் துறைமுக நகரமான தங்கலவின் வர்த்தகர் ஒருவரின் மகனாகும். மகிந்தவும் இதே மாவட்டத்தைச் சேர்ந்தவராகும். அதேபோல், J.V.P யின் ஆரம்பகால உறுப்பினர்களில் அனேகர் கரவா மற்றும் டுறவா என்னுமிரு சாதிப்பிரிவினரையும் சேர்ந்த இளைஞர்களேயாகும். டுறவாவும் ஒடுக்கப்பட்ட சாதியினராகவே கணிக்கப்படுகின்றனர். இவர் 1971-ல் ஒரு ஆயுதக் கிளர்ச்சியை நடத்தினார். 1971 ஏப்ரல் 5-ம் திகதி ஆரம்பித்த தாக்குதல் ஒரு மாதத்தில் தோற்கடிக்கப்பட்டது. ஆனால் மகியங்கன, அனுராதபுரத்தில் சில கிராமப்புறங்கள் ஆகியனவற்றை மீட்டெடுக்க மேலும் சில கிழமைகளாகின. அதேபோல் தென் மாகாணத்தின் நகரங்களிலும் (கரவாஸ்களின் பாரம்பரியப் பிரதேசம், முன்னாள் பாத்தறட்ட) இக் கிளர்ச்சி அதிக தூரத்திற்கு வெற்றியளித்தது. மிக மூர்க்கமாகவும் நடந்தது. ஏப்ரல் 10-ம் திகதி மாத்தறை மாவட்டம் முழுமையாகவும், காலி மாவட்டத்தின் அம்பலாங்கொட நகரம் (சரத் பொன்சேகாவின் நகரம் - இவர் அம்பலாங்கொட சிங்கம் என்றே இராணுவத்துள் அழைக்கப்பட்டார்) முழுமையும் கிளர்ச்சிக்காரர்களின்

கைகளுக்குச் சென்றது. தென் மாகாணத்தின் பிற பிரதேசங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நிலையை நெருங்கி இருந்தார்கள்.

“1966-ன் நடுப்பகுதியில், தோழர் விஜயவீராவையும் உள்ளடக்கி சீன சார்பு கம்யூனிஸ்ட கட்சியின் உறுப்பினர்களில் சிலர் அக்மீமனவில் (காலி மாவட்டம்) மற்றோர் கலந்துரையாடலை நடத்தினார்கள். 1965-ல் நடந்த முன்னைய கலந்துரையாடலில் பங்குபற்றிய கிட்டத்தட்ட அதே ஆட்களே இந்நிகழ்விலும் பங்குபற்றினார்கள். இச் சீனசார்புத் தலைமை கட்சியைச் சீர் செய்ய எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் தடுத்து வருவதனால், உண்மையிலேயே புரட்சிகரமான கட்டுமானத்தையும் புரட்சிகரமான ஆன்மாவையும் கொண்ட இயக்கமொன்று எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் கட்டியமைக்கப்படவேண்டுமென இக் கலந்துரையாடல் தீர்மானித்தது.”........ இயக்க உறுப்பினர்களுக்கு மார்க்ஸியக் கல்வி போதிப்பதற்கான முதலாவது கல்விப் பாசறை நடந்ததும் இதே இடத்தில்தான். (History of the Janatha Vimukthi Peramuna)

JVP யின் மக்கள் ஆதரவு அடித்தளத்தை அகற்றுவதற்காக ஜனாதிபதி ஆர். பிரேமதாச ஜனசவிய (Janasaviya) மற்றும் கம்உதாவ (Gamudhava) எனும் இரு திட்டங்களைக் கொண்டுவந்தார். ஜனசவிய என்பது ஏழைகளுக்கு மானியம் வளங்குவது. கம் உதாவ என்பது குடியிருப்பு திட்டங்கள் அமைப்பது. இதில் முதலாவது திட்டம் கம்பாந்தோட்டவிலேயே ஆரம்பமானது. வீடு கட்டும் திட்டம் மகியங்கனவில் ஆரம்பமானது. இதுவொரு எதிர்பாரா நிகழ்வல்ல. இவைதான் JVP யின் கோட்டையாக இருந்தன. (The JVP like the LTTE, Tisaranee Gunasekara)

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் காரணத்தாலும் அதன் பின்னரும் சிறைக்கும் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்ட இளைஞர்களை மீட்பதற்காகவும், அவர்களுக்குப் புனர்வாழ்வு பெற்றுக் கொடுப்பதற்காகவும் இன்றைய அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அன்று கடுமையாக உழைத்தார் என்றும் இப்பிரச்சனையை ஐ.நா வரை கொண்டுசென்றார் என்றும் அவரை இன்றுவரை புகழ்பவர்கள் இருக்கவே செய்கின்றனர். நல்லது செய்தால் புகழ்வதில் தப்பில்லை. ஆனால் இவரொரு சிறந்த ஜனநாயகவாதியாக, தான் அங்கம் வகித்த அரசாங்கத்தையே விமர்சிப்பவராக இருந்தாரென்று கூறுவதுதான் தப்பானது. அதிபர் மகிந்த ராஜபக்ஷவின் சாதியப் பின்னணி எது என்பதைப் பார்த்தால் இது புரியும். இவரொரு பாத்தறட்ட கொவிகம சிங்கள - பௌத்த மாறாமரபுவாதிகளின் பார்வையின்படி இவரொரு நியம–சிங்களயோ வல்ல, இவர் தீட்டுப்பட்ட சிங்களவராகும். யாழ்ப்பாண சாதிய மொழியில் சொல்வதானால் இவர் சுண்டியெடுக்கப்பட்ட வெள்ளாளரல்ல. ஐரோப்பியப் பண்பாடுகளால் தீட்டுப்பட்ட சிங்களவரே. இந்த விவகாரத்துக்காகத்தான் பாத்தறட்ட கிறிஸ்துவ பண்டாரநாயக்க உடறட்ட றதல வீட்டில் பெண்

எடுத்தார். மகிந்த அந்தளவிற்குப் போகவில்லை. ஆட்சியதிகாரத்தை உடறட்ட கொவிகமவிடம் இருந்து பாத்தறட்ட கொவிகமவின் கைகளுக்கு கொணர முயற்சித்தார். இன்று அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். இவ் வெற்றிக்காக அவர் பாத்தறட்ட அரசியல் அணிகளுடன், சாதி வேறுபாடுகளைக் கடந்து ஒரு உத்தியோகப்பற்றற்ற முன்னணியை உருவாக்கிக் கொண்டே வந்தார். (தமிழ் நாட்டு அரசியல் தெரிந்தவர்கள் பா.மா.க தலைவர் மருத்துவர் இராமதாசுவை மனதில் இருத்தவும்.) சிறைபட்ட JVP யினருக்கு மறுவாழ்வுக்காக அவர் தோளை உயர்த்தியது இதற்காகத்தான். ஆனால் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் இவரால் தயாரிக்கப்பட்ட பட்டியலே கிடப்பில் போடப்பட்டு விட்டது. அதே போல் UNP க்கு எதிரான கடும் போக்காளர்களான JVP நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் UNP உடனிணைந்து சரத் பொன்சேகாவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியதற்கும் சாதிய விவகாரத்துக்கும் ஏதாவது தொடர்புண்டா என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இவற்றின் முடிவு JVP ஐ குறிப்பிட்ட ஒரு சாதிப் பிரிவின் கட்சியாக இனங்காட்டுவதல்ல. அது உண்மையுமல்ல. கண்டிய, கரையோர மற்றும் வன்னிய நகர்ப்புற கிராமப்புற சிங்கள இளைஞரிடையே இவ்வமைப்பு பரவியிருந்தது. 1977-ல் இருந்து 80வரையான காலத்தில் தமிழ், இளைஞர்களிடையேயும் வேர்விட்டிருந்தது. இருந்தும் இது சிங்களவர்களின் இயக்கமாக மாத்திரமல்ல சிங்கள இயக்கமாகவும் இருந்தது, இருக்கின்றது. இருந்தாலும் குறிப்பிட்ட சாதிப் பிரிவின் கருத்தாதிக்கம் இருக்க வாய்ப்புள்ளது என்பதே இங்கு சொல்ல வருவதாகும். இது JVP க்கு மட்டும் உரியதொரு சுபாவமல்ல. தெற்காசியாவின் அனைத்து சமூக இயக்கங்களினதும், நிறுவனங்களினதும் சுபாவம் இதுவேயாகும்.

இப் பிராந்தியத்தில் சாதி, தேசியம், வர்க்கம் ஆகிய மூன்றையும் சார்ந்தே அனைத்தும் இயங்குகின்றன. எந்தவொன்றும் மற்றொன்றை விலக்கிவைப்பதாகவுமில்லை, விலக்கி வைத்ததாகவுமில்லை. மாறாக இம்மூன்றும் ஒன்றையொன்று அணைத்தபடியே உள்ளன. இப் பிராந்திய சமூக இயக்கங்களினதும் நிறுவனங்களினதும் இரசாயனமானது, இம்மூன்றில் ஏதாவதொன்றை அதிகமானதாகவும் இன்னொன்றைக் குறைந்ததாகவும் கொண்டிருக்கலாம். அல்லது ஒரு சூழலில் ஒன்று குறைந்தும் இன்னொன்று கூடியும், பிறிதோர் சூழலில் இது தலைகீழாகவும் இருக்கலாம். ஆனால் எப்போதும் இம்மூன்றும் ஓரிடத்தில் ஒன்று கூடியிருக்கும். அதே நேரத்தில் இயக்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இயல்பாகவே அமைந்துள்ள இம்மூன்றும் எப்போதும் தன்னுணர்வுடன்தான் இருக்கும் என்பதுவுமில்லை. தன்னுணர்வற்ற நிலையில் இவையொரு செயலூக்கியாகவும் அமையலாம். மதம் அரசியலுக்குள் நுழையும் பட்சத்தில் அதுவும் சேர்ந்து நான்காகின்றது. ஆகவே இப் பிராந்திய, எந்தவொரு சமூக இயக்கத்தையும் அல்லது

நிறுவனத்தையும் பற்றி ஆராயும் போது இந்த மூன்றையும் கட்டாயமாகக் கணக்கில் கொள்ள வேண்டும். குடும்பம்கூட ஒரு சமூக நிறுவனந்தான், ஒவ்வொரு தனிமனிதனும் அவன் மட்டில் அவனுமொரு பண்பாட்டு வகைப்பட்ட சமூக நிறுவனந்தான். இதனால் தனி மனிதனுக்கும் இது பொருந்தும். ஆகவே எவரும் எதுவும் இதிலொன்றை அல்லது மற்றொன்றை சார்ந்திருப்பது இயல்பானது.

ஆனால், எவரும் எதுவும் தன்னை இம் மூன்றில் இருந்தும் நீக்கம் செய்து கொள்வதென்பது முடியும், முடியவும் வேண்டும் ஆனால் அந்த நீக்கம் இயல்பானதாகவும் அமையாது. சுலபமானதாகவும் அமையாது. வர்க்கம் மட்டும் இதற்கு விதிவிலக்கு. எவராலும் தம்மை வர்க்க நீக்கம் செய்யமுடியாது. வர்க்கங்களுக்கு அப்பால் நிற்க முடியாது. ஏதோவொரு வர்க்கச்சிந்தனையை அல்லது வர்க்கநிலைப்பாட்டை தனது மனதில், உணர்வில் அல்லது மூளையில் சுமந்தேயாகவேண்டும் சுமந்தேயாவார். எந்த வர்க்கமென்பதைத் தீர்மானிக்குமுரிமை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உண்டு. அது இன்று ஒன்றாகவும் நாளை மற்றொன்றாகவும் கூட இருக்கலாம். ஆனால் தன்னை வர்க்கநீக்கம் செய்துகொள்ளமுடியாது.

மதம் சுறுசுறுப்பான ஒரு அரசியல் பாத்திரம் வகிக்கும் சூழலில் சமூக இயக்கங்களும் நிறுவனங்களும் தனி நபர்களும் தம்மை மத நீக்கம் செய்து கொள்வதற்கான உரிமையுண்டு. மதம் மாறவும் உரிமையுண்டு. நிறுவனம் அல்லது தனிமனிதர், ஒரு இடத்திலில்லாவிட்டாலும் இன்னோரிடத்தில் தம்மைச் சாதிய, மத, அல்லது இன நீக்கம் செய்துவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடும். காலப்போக்கில் இவை அவர்களை அல்லது அவற்றை தன்னுணர்வற்ற நிலையில் கவ்விக்கொள்ளும், அல்லது தன்னுணர்வாக இவை அல்லது அவர்கள் அவற்றைத் தழுவிக்கொள்வார்கள். அவ்விதம் தழுவிக் கொள்ளும் பட்சத்தில் தனது முன்நாள் நண்பர்கள் அவர்களைக் கேலி செய்தால், அடையாளங்களின்றி இன்றைய உலகில் வாழமுடியாதென்றோ சூழலின் கைதியாகிவிட்டோம் என்றோ கூறுவர். அதை தத்துவார்த்த ரீதியில் நியாயப்படுத்தவும் செய்வர். இந் நியாயங்களை ஏற்றுக்கொண்ட அவர்களின் முன்நாள் நண்பர்களில் சிலர், அவர்கள் வழிசென்று சில நாட்களில் அவர்களின் இந்நாள் நண்பர்களாகி விடுவார்கள், அல்லது இவர்களுக்கெதிரான வேறோர் அடையாளத்தினுள் புகுந்து இந்நாள் பகைவர்களாகி விடுவார்கள். இது தெற்காசியப் பிராந்திய பொது நியதியாகும்.

யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்கத்தினரிடையே நிலவுமொரு சொல்லாடல் நினைவுக்கு வருகின்றது. “இருபது வயதில் கம்யூனிஸ்டாக இல்லாதவன் பிழைக்கத் தெரியாதவன் முப்பது வயதிலும் கம்யூனிஸ்டாக

இருப்பவனும் பிழைக்கத் தெரியாதவன்.'' யாழ்ப்பாணத்து அகராதியின்படி கம்யூஸ்டுகளுக்கு அர்த்தம் 'சாதியில்லாதவர்கள்', 'கடவுளில்லாதவர்கள்' என்பதேயாகும். கல்வியைத் தொடர குறிப்பாக பல்கலைக்கழகத்திலும், வெளிநாடுகளிலும் கல்வியைத் தொடர 'நீக்கங்கள்' அவசியப்படுகின்றன. ஆனால் வாழத்தொடங்க 'அடையாளங்கள்' அவசியப்படுகின்றன.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பீட்டர் கெனமன், சீன-சோவியத் கருத்து பேதத்தால் கட்சி இருகூறானபின்னர் சண்முகதாசனை பொது மேடைகளில் நாகலிங்கம் சண்முகதாசனெனக் குறிப்பிட்டு பேசத் தொடங்கினார். இதற்கு முன்னர் என் சண்முகதாசனெனக் கூறிவந்தார். என் என்பது எனது என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டது. ஒன்றாகவிருக்கும்போது 'நீக்கம்', பிரிந்தபின்னர், 'அடையாளம்'.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மறைந்த முன்னாள் பொதுச்செயலாளர், 'சிங்' 'அடையாளத்தை' தனது இறப்புவரை கடைப்பிடித்தார். முழுமையான 'நீக்கம்'?! ஆனால் கட்சியிலிருந்து அவர் நீக்கப்படவில்லை. நம்பூதிபாட் தனது பெயரில் இருந்து, ஒரு சாதியைக் குறிக்கும் நம்பூதியை நீக்கவில்லை. ஈ.வே.ரா பெரியார் தனது பெயரிலிருந்து நாயக்கரென்ற சாதிப்பெயரை நீக்கினார். இது அவர் தன்னை சாதி நீக்கம் செய்துகொண்டதாக அர்த்தப்படுமா? 'பிராமணரல்லாத சாதி' என்ற அடையாளத்துக்காக நாயக்கரென்ற அடையாளத்தை நீக்கினார். பரந்த சாதியடையாளத்தைப்பெற எண்ணிக்கையில் குறுகிய சாதிய அடையாளத்தை நீக்கினார். இன்று தமிழரில் ஒரு சாரார் தமக்குத் தனித்தமிழ் பெயர்கள் வைத்துக் கொள்வதன்மூலம் தம்மை ஆரிய நீக்கம்(?!) செய்து கொள்வதாகக் கூறிக்கொள்கின்றனர். சாதிய அடையாளத்தை நீக்குவதற்காகப் போராடிய ராமானுஜரை வனவாசமனுப்பிய சோழ அரசை திறனாய்வுகளெதுவுமின்றி தமிழின் அடயாளமாக உயர்த்திப் பிடிப்பதன் மூலம் சாதிய அடையாளத்தை பலப்படுத்த முயற்சிகள் நடக்கிறதாவெனும் சந்தேகமெழுகிறது.

யாரையும் குறைகூறுவது இங்கு நோக்கமல்ல. தெற்காசிய சமுகக் கட்டுமானத்தின் நிலையை எடுத்துக்காட்டுவதே இங்குநோக்கமாகும்.

தெற்காசியப் பிரதேசத்தில், முதுநிலைச் சாதியம், இளநிலைத் தேசியம் ஆகிய இரண்டும் ஒன்றையொன்று தள்ளியும் தழுவியும் கொண்டு, இரண்டுமே ஒன்றிலொன்று சார்ந்து நின்று வளர்ந்து வருகின்றன. முதுநிலைச் சாதியம் தனது குணாம்சத்தை இளநிலைத் தேசியத்திற்கு கொடுத்து வருகின்றது. இதனால் அப்பப்போ இரகசியமாகவும் பகிரங்கமாகவும் சாதியத் தேசியங்களும் தோன்றி மறைந்தவண்ணமாகத்தான் உள்ளன. இது தனித்தனி சாதியத் தேசியங்களாகவும் இருக்கலாம், ஒரு சாதியக்

கூட்டணி தேசியத்தின் தலைமையைக் கைப்பற்றுவதாகவும் இருக்கலாம். பல சந்தர்ப்பங்களில் சிற்சிறு தேசிய அரசுகள் உருவாவதைத் தடுத்துவருவதுவும் இந்த முதுநிலைச் சாதியந்தான். பெரும் தேசிய அரசுகளைப் பாதுகாத்து வருவதும் இந்த முதுநிலைச் சாதியந்தான்.

எந்த சமூக கட்டுமானத்துள்ளும் சாதியத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றல் தெற்காசிய சமூகங்களுக்குண்டு. வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் கூட அவர்கள் தமது சாதியத்தை பதியம்போட்டு வளர்த்துவிடுவார்கள். புலம் பெயர்ந்த உயர் சாதியினருக்கு தாய்ப் பூமியென்பது தமது சாதிய நெறிகளைப் பேணும் புனித பூமியாகவும், அதற்கான சடங்குகளை நடத்தும் மைதானமாகவுமே உள்ளது. ஆகவே எத்தனை விடுதலைப் போராட்டங்கள், எத்தனை சுதந்திரப் போராட்டங்கள் ஏற்பட்டாலும் சாதிய அடிப்படையிலான சமூக உயர்வு தாழ்வு பேணல் குணாம்சம் அவர்களிடமிருந்து இலகுவில் விலகிவிடாது. இதோ மிகத் தெளிவானதோர் ஆதாரம்.

‘பொருளாதார மற்றும் சமூக ஆய்வுக்கான தேசிய நிறுவனம் (National institute of economic and social research) எனும் அமைப்பு பிரித்தானியாவில் வாழும் இரண்டு இலட்சம் தலித் மக்களின் சமூக வாழ்நிலை பற்றியதோர் ஆய்வினை மேற்கொண்டுள்ளது. ‘உயர் சாதியினர் குறைந்த சாதியினர் மீது சாதிய இழிவு படுத்தலிலும் தொல்லைகள் கொடுப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்’ என்று கூறும் அவ்வாய்வு மேலும் தொடர்கிறது. ‘சாதிய இழிவு படுத்தலையும், தொல்லைப்படுத்தலையும் குறைப்பதற்கு இந்திய சமூகத்தில் தாம் தங்கியிருப்பது பிரச்சனைக்குரியது’ சாதியின் காரணத்தால் தொழில் மறுக்கப்படும் நிலமைகூட நிலவுவதாக அவ்வறிக்கை கூறுகிறது. அவ் அறிக்கை மேலும் கூறுவதாவது, ‘இந்திய உபகண்ட வம்சாவழியினரிடையேதான் சாதிய விழிப்புணர்வு அதிகமாக செறிந்து காணப்படுகிறது. நீண்டகால வரலாறுள்ள CastWatchU.K எனும் பிரித்தானிய நிறுவனம் இவ்வாய்வறிக்கையை வரவேற்றுள்ளது. ‘சாதிய இழிவுபடுத்தல் சட்டவிரோதமானதென பிரகடனப்படுத்தும் உத்தரவை அறிவிப்பு செய்வதைத் தவிர மாற்றுவழி எதுவும் பிரித்தானிய அரசுக்கு இல்லை.’ என CastWatchU.K அமைப்பின் செயலர் டவீந்தார் பிரசாத் கூறியுள்ளார். ஆதாரபூர்வமான இந்த அறிக்கையின் காரணத்தால் பிரித்தானிய அரசாங்கம் சாதிய இழிவுபடுத்தலானது இனவாத(racial) ஏற்றத்தாழ்வை அடிப்படையாகக் கொண்டதென ஏற்றுக்கொண்டு இவ்வித இழிவுபடுத்தலை சட்டவிரோதமானதெனப் பிரகடனப்படுத்தும் சூழ்நிலை தோன்றியுள்ளது. அவ்விதம் நடந்தால், இதுதான் சாதிய இழிவு படுத்தலுக்கு எதிராக சட்டமியற்றிய முதலாவது மேற்குலக நாடாக இருக்கும். ஆனால் பிரித்தானியாவில் வாழும் புலம் பெயர்ந்த சாதிமான்கள் இதை

அனுமதிப்பதாக இல்லை. இப்பிரச்சனையையொட்டி இந்தியப் புலம் பெயர்ந்தோர் இரு முகாம்களாகப் பிரிந்துள்ளனர். Hindu Forum of Britain போன்ற வலதுசாரிக்குழுக்கள் இந்திய சமுதாயத்தின் உள் பிரச்சனையில் தலையிடும் உரிமை பிரித்தானியருக்கு இல்லை என விவாதிக்கின்றனர். (The Hindu).

தெற்காசியாவின் இந் நிலையை எவ்விதம் எதிர்கொள்வதென்பது பற்றி இவ்விடத்தில் எதுவும் கூறப்படவில்லை. ஒரு வாக்கியம் மட்டும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

நிலவும் பண்பாட்டுக் கட்டுமானத்திலுள்ள முற்போக்குக் கூறுகளின் துணைகொண்டே ஆதிக்கம் செலுத்தும் பிற்போக்குக் கூறுகளை வெற்றி கொள்ள வேண்டும். தெற்காசியப் பிராந்தியத்திலுள்ள சமூக இயக்கங்கள், சமூக நிகழ்வுப்போக்குகள், சமூக விழுமியங்கள், நிறுவனங்கள், தனிமனிதர்கள் ஆகியனபற்றி மதிப்பீடு செய்யும்போது இந்த மூன்று அம்சங்களையும் பற்றி கட்டாயமாகக் கணக்கில் கொள்ளவேண்டும். இதுஒன்றும் அசிங்கமானதல்ல, ஒழுக்கக்கேடானதுமல்ல. பேசப்படக்கூடாத விவகாரங்களுமல்ல. இந்த அணுகுமுறையே இவ்வாய்வில் பின்பற்றப்பட்டுள்ளது. ஆனால் தகவல்கள் போதாமையால் பூரணத்துவமாகவில்லை.

இவ்வித அணுகுமுறை தென்கிழக்காசிய நாடுகளின் அரசு பற்றிய பகுப்பாய்வுக்கும் பொருந்தும். நேபாள அரசுபற்றி மேற்கொள்ளப்பட்டதோர் மதிப்பீடு ஒரு எடுத்துக்காட்டாக இங்கு தரப்படுகிறது. இது அணுகுமுறைக்கானதோர் மாதிரியே தவிர, செயலுக்கான ஒரு வழிகாட்டியல்ல. நேபாளச் ‘சப்பாத்து’ க்கான விளம்பரத்துக்காகவும் அல்ல.

நேபாளின் மத்தியத்துவப்படுத்தப்பட்ட நிலவுடமையரசு, கூர்க்கா இனத்தைச் சேர்ந்த மன்னன் பிரதிவ நாராயண் ஷாவின் தலைமையின் கீழ் சுமார் 250 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாகும்.- பிராமணர்களுக்கும் நேபாளத்தில் வாழும் ராஜ்புட்ஸ்களுக்கும் இடையேயான உறவின் வழித்தோன்றல்களே கூர்க்காஸ்களாகும். இவர்கள் இந்துக்கள். 1951-லும் 1990-லும் சிறிதளவு சீர்திருத்த மாற்றங்கள் ஏற்பட்டாலும் கூட, அரசின் வர்க்கத்தன்மை அரை-காலனியல், அரை-நிலப்பிரபுத்துவ குணாம்சம் பெற்றதாகவும், அதன் அரசியல் வடிவம் அடிப்படையில் அரசவம்சாவழி முற்றுமுழு அதிகாரத்துவ அமைப்பைக் கொண்டதாகவும் இருந்தது.

1951லும் 1990-லும் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து வந்த தசாப்தங்களில் அரசவம்சாவழி-முற்றுமுழு அதிகாரத்துவத்திற்குப்

பதிலாக 'அரசியற்சாசன-முற்றுமுழு அதிகாரத்துவத்தை'க் கொண்டுவர எடுத்த முயற்சிகள் எதுவுமே வெற்றியளிக்கவில்லை. நேபாள சமூகத்தின் அடித்தளம் எந்த மாற்றமும் இன்றி தொடர்ந்தும் அரை-காலனியல், அரை-நிலபிரபுத்துவத் தன்மை பெற்றதாக இருந்தமை, 1951-இல் ஏற்பட்ட அபிவிருத்தியையும் பொருட்படுத்தப்படாமல் இருந்தமை, மத்திய அரசின் தோற்றக்காலத்தில் உருவாக்கப்பட்ட நிலையான இராணுவமும், அதிகாரத்துவக் கட்டுமானமும், அரச வம்சாவழியினருக்கு விசுவாசமாக இருத்தலுக்கே முதன்மை கொடுத்து வந்தமை, ஆகியனவே இதற்கான காரணங்களாகும். நிலப்பிரபுத்துவ அரசின் தேசிய மற்றும் பிராந்திய வடிவத்தின் பொதுவான தன்மையின் படி, நேபாளின் பழைய அரசு ஆரிய-ககஸ் (Kahas) உயர்சாதிய பேரகங்காரவாதத்திலேயே தங்கியுள்ளது. அத்துடன் அது ஒரு ஏக சுபாவ, மிகை-ஒருமுனைப்படுத்தப்பட்ட அரசாகும். இதன் காரணத்தால் பெரும்பான்மையினரான திபெத்தோ-பர்மன் மற்றும் ஒஸ்ரோ-திராவிட (Tibeto-Burman and Austro-Dravid) தேசியங்களும், மாதேசிகளும் (அதாவது, ரெறாய் சமவெளி மக்கள்) மற்றும் தூர-மேற்குப் பிரதேச செரி-மகாகாலி, கார்னாலி ஆகிய மக்கள் பிரிவினரும் (Seti-Mahakali and Karnali) ஏக சுபாவ, மிகை-ஒருமுனைப்படுத்தப்பட்ட நிலப்பிரபுத்துவ அரசால் மிகக் கடுமையான அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளார்கள். இது மட்டுமல்ல, இந்து வர்ணாச்சிரம ஒழுங்கின்படி (சாதிய உயர்-தாழ்வு அடுக்கு) தீண்டப்படாதவர்களாகக் கருதப்படும் தலித்துகளும், தந்தைவழி ஆதிக்கத்தின் கீழ் பெண்களும் இப் பிரபுத்துவ அரசால் மோசமான அடக்குமுறைக்கு உள்ளாகிவருவது இயல்பாகவே இருந்துவருகிறது. (The Question of Building a New Type of State web-kasama)

### அ.3) **கரவாஸ்களின் காலனிய கால நிலை**

Caste Conflict and Elite Formation: the Rise of the Karava Elite in Sri Lanka என்ற நூல் பற்றி Michael Roberts இன் நூல் மதிப்பீட்டில் இருந்து சில வாக்கியங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

நூல் ஆசிரியர் இதை இவ்விதம் முன்வைக்கிறார் 'கரவா' மேட்டுக்குடியின் சாதனைகள் சிங்கள உலகின் வளர்ச்சிப் படிமுறைகளைப் புரிந்து கொள்வதற்கானதோர் சாளரமாக விளங்குகிறது என நம்பப்படுகிறது."

"காலனியல் சகாப்தத்தின் போது ஸ்ரீலங்காவில் கரவாஸ் மக்களின் ஆண்களிடையேயும் பெண்களிடையேயும் இருந்து முதலாளியத் தன்மையும் மேற்கத்தையக் கல்வியும் மிக்க மேட்டுக்குடியினரின் தோற்றம்" பற்றி நூலாசிரியரின் விளக்கந்தான் இப்புத்தகத்தில் அதிக வெற்றி பெற்ற பகுதியாகுமென்பதில் சந்தேகமில்லை.

“மேலோங்கி வந்த கரவாஸ் குடும்பங்கள் ஒப்புநோக்கில் சாதாரண நிலையிலிருந்த குடும்பங்களிலிருந்தே வந்தவர்களாகும். பிரித்தானியருக்கு முன் கரவா முதலியார்களிலும், கிராம பிரதான அதிகாரிகளிலும் மிகச் சிறு அளவினரே குறிப்பிடக்கூடியளவிற்கான அதிகாரத்துக்கும் சமூக அந்தஸ்துக்கும் உரியவர்களாக இருந்தனர்.” என்கிறார். ஆனால் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலமையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஆசிரியர் தரும் தகவலின் படி 1858-1899 இடைப்பட்ட காலத்தில் மேற்கு மாகாணத்தின் சாராய குத்தகைக்காரர்களில் 84 வீதத்தினர் கரவாஸ்களாகும். அதே போன்று 19ம் நூற்றாண்டின் இறுதியில் 40% காரீயச் சுரங்கங்கள் இவர்களின் கைகளிலேயே இருந்தன. இதே காலப்பகுதியில் ராணிக்குரிய புறம்போக்கு நிலங்களை வாங்குவதற்காகக் கொடுபட்ட பணத்தில் 80% பணம் கரவாஸ்களால் செலுத்தப்பட்டதாகும். 1917-1927 காலப்பகுதியிலான கணக்கெடுப்பின்படி பெரும் தோட்ட உரிமையாளர்களில் 50 வீதத்தினர் கரவாஸ்களாகும். இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் கொழும்பு நகரத்தின் பெரும் சொத்துடமையாளர்களில் 40 வீதத்தினர் கரவாஸ்களாகவே இருந்தனர். சிங்கள ஜனத்தொகையில் 8.5-10 விழுக்காட்டினரான கரவாஸ்களின் இப் பிரமாண்ட வளர்ச்சி மிகப்பெரும் சாதனைதான்.

ஸ்ரீலங்காவின் சமீபத்திய குடியேறிகளான இந்த கரவாஸ்கள் கொவிகம சாதியின் சடங்குச் சேவைகளிலேயோ பன்சாலச் (பௌத்த கோவில்கள்) சேவைகளிலோ ஈடுபடுவதில்லை. இவர்கள் அதிகளவு நெற்காணிகளைக் கட்டுப்படுத்துபவர்களுமல்ல. ‘இவர்களுக்கென விதிக்கப்பட்ட தொழிலானது’ மாசுபடலென்ற பக்கத்தில் இழிவானது, தூய்மையற்றது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

‘சங்க’த்தில் (பௌத்த துறவிகளின் அணி) உயர் நிலைகள் அனைத்தையும் தமதாக்கிக் கொள்ள கொவிகம எடுத்த முயற்சிக்கு எதிர் வினையாக கரவாஸ்கள் தமக்கெனத் தனியான நிக்காய (பௌத்த மதநிறுவனம்) ஒன்றையே அமைத்ததையும், பிரித்தானிய அரசாங்கத்திடம் இருந்து உயர் கௌரவ பதவிகளையும் அங்கீகாரத்தையும் பெறுவதற்காக இவர்களால் நடத்தப்பட்ட தீவிர பிரச்சார இயக்கத்தையும், அரசியல் பிரதிநிதித்துவத்திற்காக மேற்கொண்ட கடும் முயற்சிகளையும் முறையாகப் பதிவு செய்துள்ளார். (ozlanka.com/reviews/caste)

“பௌத்தத்தை பாதுகாப்பதற்காகவும், நிலைநிறுத்துவதற்காகவும் கௌதம புத்தரால் நேரடியாகவே பொறுப்புக் கொடுக்கப்பட்டவர்கள்தான் சிங்கள பௌத்தர்களாகுமெனக் கருதுவதே சிங்கள-பௌத்த மாறாமரபியல்வாதிகளின் (அடிப்படைவாதிகளின்) கண்ணோட்டமாகவுள்ளது. இக் கருத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்காகத்தான் ஸ்ரீலங்காவானது

‘தம்மத்தின்’ தீவாகக் கருதப்பட்டு ‘தம்மதீப’ வென அழைக்கப்படுகிறது. ஐந்தாம் நூற்றாண்டின் ‘புனைகதை வரலாறான’(mythyology) மகாவம்சம் ‘தம்ம’ வையும் சிங்கள மக்களையும் ஒன்றாக இனங்காண்கின்றது. ‘தம்மவின்’ தீவாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா, எப்போதுமே பௌத்தர்களின் முற்றுமுழு ஆளுமைக்குட்பட்டதாகவே இருக்கவேண்டுமென்ற கருத்தியலை உருவாக்கியது மகாவம்சமேயாகும்.

ஸ்ரீலங்காவின் அரசியல் விவாதங்களில் இக்கண்ணோட்டமானது தொடர்ந்து வெளிப்பட்டுவருவது அனைவருமறிந்ததே.

பண்பாட்டு மாறாமரபியல்வாதிகளின் இரண்டாவது அம்சம் எல்லைகள் பற்றிய அக்கறையும், தூய்மைக்கேடு பற்றிய அச்சமுமாகும். இங்குதான் இனக்குழுமவாதம் பிரதான விவாதமாகிறது. இவ்வச்சம் சிங்களவர்கள் அல்லாதவர்களை ஒட்டியது மட்டுமல்ல, ‘முறையான உரிமைகளற்ற சிங்களவர்களை’ ஒட்டியதுமாகும். தம்மத்தைப் பாதுகாப்பதென்பது தூய்மையைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதென்பதாகிறது. முறையான உரிமையுள்ளவர்களே ‘தம்ம’ தீவின் இறைமைக்குப் பொறுப்பானவர்கள் என்றாகின்றது.

அதுமட்டுமல்ல, முறையான உரிமையற்றவர்கள் சிங்களவர்கள் அல்லாதவர்களாக இருந்தாலும் சரி ‘பிற’ சிங்களவர்களாகவிருந்தாலும் சரி, அவர்கள் தீவின் எதிரிகளாகவும் பௌத்தத்தின் எதிரிகளாகவும் அடையாளங்காட்டப்படுகிறார்கள். எவ்விதமிருந்தாலும், மகாவம்சம் இறைவனின் போதனைகளின் தொகுப்பாகக் கருதப்படும் பகவத் கீதை, பைபிள், திருக்குறான் போன்றதோர் நூலல்ல. இருந்தும் பௌத்தர்களுக்கு இது முக்கியத்துவமிக்கதோர் நூலாகவேயுள்ளது. அத்துடன் “பௌத்த ஸ்ரீலங்காவின் சமகாலக் கண்ணோட்டங்கள் அனைத்தையும் நியாயப்படுத்தக் கூடிய அதிகாரமிக்க அங்கீகரிக்கப்பட்ட நியாய வாதங்களாக கடமை புரிகிறது.” உண்மையில் சொல்வதானால், மதத்துக்கும் அரசுக்குமிடையேயான தொடர்பை அதிகாரபூர்வமானதொன்றாக மாற்றுவது மகாவம்சந்தான். இதனூடாக ஏற்படும் கடந்தகாலத்துடனான தொடர்புதான் நிகழ்கால அரசியல் எதிர்பார்ப்புகளையும் வருங்கால அரசியல் முடிவுகள் என்னவாக இருக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தும் ஒன்றாக உள்ளது. (A Review of Bhuddist Fundermentalism and Minorities Identity in Sri Lanka buddistethics.org)

வட,கிழக்குப் பகுதியின் கரவாஸ்கள், சிங்கள கரவாஸ் மேட்டுக்குடி போல் ஐரோப்பிய மயப்படுத்தப்பட்டவர்களல்ல. இரு பகுதிகளிலும் வெவ்வேறு விதமான வளர்ச்சியேற்பட்டுள்ளது. இது ஏனென்பது ஆராயப்படவேண்டும். புலிகள் இராணுவ எதேச்சதிகார இயக்கமாக மாறியதற்கான சமூகக்

காரணங்கள் பற்றிப் புரிந்து கொள்ள இவ்வாய்வு பயன்படலாம். தமிழ்க் கரவாஸ்களின் வளர்ச்சிதான் புலிகளா? என்று கமுக்கமாக நடைபெறும் சொல்லாடல்களில் உண்மையுண்டா என்பதையும் கண்டுகொள்ளலாம்.

கரவாஸ் மேட்டுக் குடியினர்தான் யு.என்.பி-யின் முதுகெலும்பாகும். கட்சித்தலைவர்கள் கொவிகமவாக இருக்கின்றனர். கட்சி சிங்கள-பௌத்த தேசியத்தின், குறிப்பாக மகாவம்ச விசுவாசிகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இது அவசியமானது. ஆட்சியின் உச்சத்திலிருக்கும் தனிநபர், சியாம் நிக்காயாவின் அங்கமான மல்வத்த துறவிகளின் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்பது எழுதப்படாதவொரு சாசனச் சடங்காகும். வலிமைவாய்ந்த தனிநபர்கள் கிடைக்காத பட்சத்தில் சடங்குகள் வளைந்து கொடுக்குமென்பது அனைவரும் அறிந்ததே. றணசிங்க பிரேமதாசாவைப் பயன்படுத்திக் கொள்வதற்காக ஒரு தடவை வளைந்து கொடுத்தது.

மேற்குலகம் இக் கட்சியின் ஊடாகத்தான் காய் நகர்த்துகிறது. சுமார் 4வருட கால பேச்சுவார்த்தைக்கு காரணமாக இருந்தது இக்கட்சியேதான். புலிகளுடன் இணைந்து ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்துவதுதான் இக் கட்சியின் குறிக்கோளாகவிருந்தது. புலிகளின் ஒரு பகுதியினரும் அதை விரும்பினர். பேச்சுவார்த்தை இருவரின் விருப்பத்தையும் நிறைவேற்றக் கூடியதாக முன்னேறியும் வந்தது. குழப்பியது அதிபர் மஹிந்த ராஜபக்ஷ. அதேபோல், வெள்ளைக்கொடி காட்டியபடி சரணடையவந்த புலித்தலைவர்களின் ஒரு பகுதியினரை சுட்டுக்கொன்றது தவறென்பதுவும், அவ்விதம் சுட்டுக்கொன்றது கோத்தபாய ராஜபக்ஷ என்பதுவுமே சரத் பொன்சேகாவின் பிரதான குற்றச்சாட்டாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் எல்.ரி.ரி.ஈ க்கும் இடையே நடந்துவந்த பேச்சுவார்த்தையின் மூன்றாங்கட்ட அமர்வின் முடிவில் இரு பகுதியினரும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கை இவ்விதம் கூறுகிறது:

“LTTE-ன் தலைமையினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கிணங்க, தமிழ் பேசும் மக்களின் வரலாற்று பூர்வமான வதிவிடங்களுக்கு ‘அகவய சுய-நிர்ணய உரிமை’ என்ற கோட்பாட்டின் வழிநின்று ஒரு தீர்வுக்கு வந்து சேர்வதெனவும், இத் தீர்வு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சமஸ்டி அமைப்புகளென்ற அடிப்படையிலேயே அமையுமெனவும் இரு பகுதியினரும் ஏற்றுக் கொண்டனர். இத்தீர்வு அனைத்துச் சமூகத்தினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டுமென்பதையும் இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்டனர்.” ஆனால் நெய் திரண்டுவரும் வேளையில் தாழி உடைந்துவிட்டது.

புலித் தலைவர்களை உயிருடன் பிடிப்பதுதான் யு.என்.பி யின் விருப்பமாகவும், பிடிபடுவதுதான் புலித்தலைவர்களினது விருப்பமாகவும்

இருந்தது. இவ்விதம் உயிருடன் பிடிக்காததுதான் சரத் பொன்சேகா–மகிந்த முரண்பாட்டின் வெடிப்புப்புள்ளியாகும். உயிருடன் பிடிபட்டிருந்தால், அது யு.என்.பி நடத்திய மூன்றாவது இராணுவப் புரட்சியாக இருந்திருக்கும். ரணில் விக்கிரமசிங்க, புலிகளின் சில தலைவர்கள் (பிரபாகரன், தனது தலைமையிலான இராணுவாட்சி தவிர வேறெதையும் விரும்பவில்லை) ரஃப் கக்கீம் (Rauff Hakeem) ஆகியோர் தலைமையில் ஒரு சமஸ்டி அரசாங்கம் அமைந்திருக்கக் கூடும். பிள்ளையான், கருணா ஆகியோரை முன்வைத்து கிழக்கில் நடந்தது வடக்கிலும் நடந்திருக்கும். கருணாவை ஜனநாயக முறைப்படுத்தியது UNP யும் பிரித்தானிய அரசுமேயாகும். ஆனால், ரணில் விக்கிரமசிங்க விதைத்ததை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அறுத்தெடுத்துவிட்டார். அதிபர் மஹிந்த ராஜபக்ஷ மீது மேற்குலகின் கோபத்துக்கான காரணமும் இதுவேயாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் மரபுவழி முழுநேர அரசியல் ஊழியரும் தலைவருமான தனது இடத்தை சரத் பொன்சேகாவிற்கு மனமுவந்து விட்டுக்கொடுத்ததுவும் இக்கட்சியின் தலைவர்தான். அதற்காக அக்கட்சி JVP யுடனும் இணைந்து கொண்டது. சரத் பொன்சேகா தனது அரசியல் வருகையை அறிவித்தது அமெரிக்காவில் கரவாஸ்களின் அமர்புர நிக்காயத் துறவிகளின் முன் வைத்துத்தான் என்பதுவும் கவனத்துக்குரியதோர் தகவலாகும். இன்று இந்தியாவுக்கு எதிராக அமைக்கப்பட்டுள்ள Patriotic National centre PNC (இவ் வமைப்புப்பற்றிய விளக்கம் இந்திய எதிர்ப்பணிக்கா என்ற தலைப்பில் உள்ளது.) இல் முன்னணி வகிப்பது இப்பீடத்தின் பௌத்த துறவிகளே என்பதுவும் கவனத்துக்குரிய மற்றோர் தகவலாகும். சரத் பொன்சேகாவிற்காக இரு நிக்காயக்களின் துறவிகளும் ஒருவரோடு ஓருவர் தெருத் தெருவாக அடித்துக் கொண்டதுவும் பலரும் அறிந்த இரகசியமே.

### அ.4) **மூன்று நிக்காயக்கள்**

பௌத்த குருக்களின் குழாம் பொதுவாக சங்க (Sanga) என்று அழைக்கப்படும். இச் சங்க இலங்கையில் மூன்று நிக்காயக்கள் ஆக பிரிந்துள்ளனர். நிக்காயக்கள் என்பன பௌத்த மதத்தின் தனித்தனியான அமைப்புகளாகும். மூன்று நிறுவனங்களும் பௌத்த மதத்தின் தேரவாதப் பிரிவையே பின்பற்றுகின்றன. அவை பின்பற்றும் மதக்கோட்பாட்டின் அடிப்படையில் இப் பிரிவுகள் அமையவில்லை. அனைத்தும் ஏறத்தாள ஒரே கோட்பாட்டையே பின்பற்றுகின்றன. வழிபாட்டுமுறைகளும் அநுட்டானங்களுந்தான் வேறுபடுகின்றன. முக்கியமாக நிறுவனம் அதன் உறுப்பினர்களான துறவிகளை நெறிப்படுத்தும் கோட்பாடுகளில்தான் வேறுபாடுகள் உள்ளன.

### முதலாவது - சியாம் நிக்காய

இதுவே முதலில் உருவான நிக்காயவாகும். இது தாய்லாந்தில் உருவாக்கப்பட்டது. தாய்லாந்து அப்போது 'சியாமின் இராச்சியம்' என்றே அழைக்கப்பட்டது. உபாலி தேரோ வெனும் பிக்குவே இதன் நிறுவனராகும். இவர் இதை நிறுவியதற்கான காரணங்கள் இரண்டாகும்.

ஒன்று: பௌத்த மதச் சடங்குகளில் விரவியிருந்த இந்துமத செல்வாக்கை அகற்றுவது. சியாம் நிக்காயாவின் உருவாக்கத்துக்குப் பின்னர்தான் புத்தரின் புனிதப் பல், தலதாமாளிகையின் வழிபடும் சொரூபமாகவும், ஊர்வலத்தின்போது எடுத்துசெல்லப்படும் சொரூபமாகவும் மாறியது. அதற்கு முன்னர் இந்துக் கடவுள்களின் உருவங்களே வழிபடும் சொரூபங்களாக இடம்பெற்றிருந்தன. சியாம் நிக்காயவின் உருவாக்கத்தின் பின் கண்டிய மன்னன், "இனி தெய்வங்களும் மனிதர்களும் புத்தரைத்தான் பின்பற்றவேண்டும்" எனப் பிரகடனப்படுத்தினார். தெய்வங்களென இவர் குறிப்பிடுவது, இந்துக் கடவுள்களின் சொரூபங்களையேயாகும்.

இரண்டாவது காரணம், பௌத்த குருமாரிடையே காணப்பட்ட 'வினய' விற்கு (மதக் கட்டுப்பாடுகள்) எதிரான நடவடிக்கைகளாகும். திருமணம் முடித்தல், சொந்த வீடு, நிலம் ஆகியன வைத்திருத்தல், சுகபோக வாழ்க்கையில் ஈடுபடல் அகியவையே அந்த நடவடிக்கைகளாகும். சங்கவை மன்னரின் அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்டு, துறவிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது இக் கிளர்ச்சியின் மற்றோர் அம்சமாகும். இக் கிளர்ச்சியை எதிர்த்த 32 முதுநிலை துறவிகள் யாழ்ப்பாணத்திற்கு துரத்தியடிக்கப்பட்டதாக வரலாற்றுத் தகவலுண்டு.

### இரண்டாவது- அமரபுற நிக்காய

சியாம் நிக்காய தனது நிறுவனத்துள் உயர் பதவிகளுக்கு வரும் தகமை கொவிகம சாதியினருக்கு மாத்திரமே உண்டென்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்தது. இதனால் சியாம் நிக்காய அமைப்பினுள் சாதிப் பிரச்சனை மேலோங்கியது. கொவிகம சாதியைச் சேராத பௌத்த துறவிகள் மத அனுஷ்டானத்தில் பல சீர்திருத்தங்களைக் கோரி கிளர்ச்சி செய்தனர். பிரித்தானிய பண்பாட்டுச் சீரழிவிலிருந்து பௌத்த பண்பாட்டைப் பாதுகாப்பதாகவும் இது அமைந்திருந்தது. 1803-ல் சங்கம் இரண்டாகப் பிரிகிறது. தென்பகுதியில் சமூக-பொருளாதார வளர்ச்சி பெற்றிருந்த பௌத்த பிக்குகள் அமரபுர மகா நிக்காய எனும் அமைப்பைத் தோற்றுவிக்கின்றனர். கொவிகம அல்லாத பகுதியினரே அதிலும் குறிப்பாக கரவாஸ் சாதிப்பிரிவுத் துறவிகளே இதன் உறுப்பினராகிறார்கள். இருந்தும் பல்வேறு சாதிகள் இதன் உறுப்பினர்களாகியதால் அமரபுர நிக்காய 21 உபகுழுக்களாகப்

பிரிக்கப்பட்டுள்ளன.

அமரபுர என்பது பர்மாவின் ஒரு நகரத்தின் பெயராகும். இந்த நிக்காயாவின் ஸ்தாபகத் துறவி அமரபுரவில்தான் குருத்துவ உயர் அந்தஸ்தைப் பெறுகிறார்.

**மூன்றாவது - ரமண நிக்காயவாகும்**

பௌத்த துறவிகளிடையே மீண்டும் சாதியம் தலை தூக்குகிறது. ஒடுக்கப்பட்ட சாதியினருக்கான நிக்காய ஒன்று அமைகிறது. 'சலகம' சாதிப்பிரிவைச் சேர்ந்த துறவி ஒருவரால் 1864 ம் ஆண்டு அமைக்கப்பட்டதுதான் ரமண நிக்காயவாகும். இத்துறவிக்கு உயர் நிலை பௌத்த துறவிக்குரிய அந்தஸ்துக் கொடுத்ததுவும் பர்மாவிலுள்ள ஒரு பௌத்த மதபீடமேயாகும்.

## அ.5) தொடரும் நிக்காய முரண்பாடுகள்

இரு பெரும் தலைவர்களின் வாக்குமூலத்தை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அதிபர் மஹிந்த ராஜபக்ஷ, அமரபுர நிக்காயத்தின் பிரதம செயலர் வண. கலாநிதி. பிரமன்வத்த சீவாலி அனுநாயக்கே ஆகியோரே அந்த இருவருமாகும். அமரபுர நிக்காயத்தின் நிறுவனர் வெலிறற ஸ்ரீ ஞானவிமலத்திஸ்ஸ மகா தேர அவர்களின் 175வது நினைவு தினம் சமீபத்தில் கொண்டாடப்பட்டது. இதற்காக பலரும் தமது வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தனர். இவை வரலாற்று ஆவணங்களாகவும் இருக்கின்றன.

அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் செய்தியிலிருந்து சில வாக்கியங்கள்

"சங்கராஜா மகா தேர அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்ட பௌத்த மறுமலர்ச்சி இயக்கமானது தனது ஆரம்ப இடமான கண்டியிலிருந்து ஸ்ரீலங்காவின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியது.

அதி வணக்கத்துக்குரிய வெலிறற ஸ்ரீஞானவிமலதிஸ்ஸ மகா தேர அவர்கள் பௌத்த சித்தாந்தத்தையும், பாளி மொழியையும் வெலிறற சங்கராஜா மகா தேர அவர்களிடம், கண்டியிலுள்ள மல்வத்து விகார வில் கற்றுத் தேர்ந்தார். சுமார் 175 ஆண்டுகளுக்கு முன்னால் அமரரான அதி வணக்கத்துக்குரிய வெலிறற ஞானவிமலதிஸ்ஸ மகா தேர அவர்கள், டச்சுக்காரர்களினதும் ஆங்கிலேயர்களினதும் செல்வாக்கால் உருவான பண்பாட்டு விழுமியச் சீரழிவுச் சகாப்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் அதிக துன்பங்களைச் சுமந்துள்ளார்.

ஸ்ரீலங்காவிற்கான உயர்மட்டக் குருத்துவத்தை அடையும் விடயத்தில். அந்நிலையை அடைவதில் கரையோரச் சிங்களவர்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை மகா தேர தீர்த்துவைத்தார்.''

அதிபர் மஹிந்த ராஜபக்ஷ சில உண்மைகளை மறைக்கிறார். முதலாவது பௌத்த மறுசீரமைப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்கியது உபாலி தேரவேயாகும். இவருக்கு ஆதரவு தந்தது சியாமின் பௌத்த மதபீடமாகும். இந்த மறுசீரமைப்பானது சாதிய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதாகவும் அமைந்தது. அதி வணக்கத்துக்குரிய வெலிரற ஞானவிமலதிஸ்ஸ மகா தேர கற்றது கண்டியில் அல்ல, பர்மாவிலாகும். எந்த நிக்காயவை எதிர்த்து இம் மகா தேரர் போராடினாரோ அந்த நிக்காயதான் இவரின் ஆசிரியர் என்று கூற வருகிறார். அதிபர் மஹிந்த ராஜபக்ஷ கூறும் மல்வத்து விகார, சியாம் நிக்காயவால் நடத்தப்படுவதாகும். சியாம் நிக்காயவைப் பாதுகாப்பதே அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் குறிக்கோளாகவுள்ளது. கரையோரச் சிங்களவர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளென்று கூறுவதன்மூலம் கரவாஸ் என்று நேரடியாகக் குறிப்பதைத் தவிர்க்கிறார். தனது மூதாதையினரும் பாதிக்கப்பட்டனர் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறார். ஆனால், சியாம் நிக்காயத் துறவிகளைப் பகைத்துக் கொள்ளக்கூடாதென்பதற்காக நெருக்கடி கொடுத்தது யாரென்பதைக் கூறுவதைத் தவிர்க்கிறார்.

அமரபுர நிக்காயவின் பொதுச் செயலரின் வாழ்த்துரை அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் கூற்றை நிராகரிப்பதாக அமைந்துள்ளது.

“சங்க சாசன சமத்துவத்தை அனைவரும் பெற்றுக்கொள்வதற்கான நிலைமை 1761வரை காணப்படவில்லை. குறிப்பிட்ட ஒரு சாதியைத் தவிர பிற சாதியினர் நிர்வாண நிலையை அடையாளப்படுத்தும் கொடியைத் தொடுவதற்குக் கூட அனுமதியில்லா நிலையே காணப்பட்டது. இவ்விதம் தொடுபவர்களின் தகுதி குறைக்கப்பட்டது. பௌவள தமந்த தேரர்தான் கல்வியைத் தொடர பர்மா செல்லும்படி தனது மாணவனான வெலிரற ஞானவிமலதிஸ்ஸ மகா தேரவுக்கு ஆலோசனை வழங்கினார். இவரின் ஆலோசனையின் பேரில் பர்மாசென்ற இம் மாணவன் அங்கு தனது பௌத்த கல்வியைத் தொடர்ந்து உயர் குருத்துவ அந்தஸ்தும் பெற்றார். பல பௌத்த துறவிகளும், அக்காலகட்ட அரச அதிகாரிகளும் ஏற்படுத்திய தடைகளைத் தாண்டி பல்வேறு சாதியைச் சேர்ந்த துறவிகளும் உயர் குருத்துவ அந்தஸ்துப் பெற நடவடிக்கைகள் எடுத்தார்...''

சமகால நிகழ்வுக்கு மீண்டும் வருவோம். ஜனாதிபதித் தேர்தலின் போது சரத் பொன்சேகாவுக்காக பகிரங்கமாகவே செயல்பட்ட இராணுவ வீரர்கள்

தண்டிக்கப்பட்டமையும், சரத் பொன்சேகா தனக்கு நம்பிக்கையானவர்களாக வைத்துக் கொண்டிருந்த அவரது கல்லூரி சகாக்களை (ஆனந்தா கல்லூரி முன்னாள் மாணவர்கள்) ஜனாதிபதி மகிந்த விலக்கியமை அல்லது பதவி இறக்கியமை போன்ற நடவடிக்கைகள் இராணுவக் களையெடுப்பொன்று நடைபெறுவதைக் காட்டவில்லையா?

சரத் பொன்சேகா தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு விட்டாலும் கூட, பௌத்த குருமாரினதும், அரசியல் கட்சிகளினதும் உதவிகளுடனும் மேற்குலக நாடுகளின் தூண்டுதலிலும் இராணுவச் சதி ஒன்று நடைபெறும் என்பதை ஜனாதிபதி மகிந்த எதிர்பார்ப்பது இரகசியமுமல்ல, நடக்கமுடியாததொன்றுமல்ல.

### 3.2.1.ஆ) **கடற்படை தரைப்படை மோதலா**?

யுத்தம் முடிந்தபின்னர் சரத்திற்கும் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ விற்கும் இடையில் தோன்றி வளர்ந்துவரும் முரண்பாடு பற்றித்தான் மிகப் பகிரங்கத்துக்கு வந்தது. அதுதான் இன்று தென் இலங்கையின் பிரதான அரசியல் முரண்பாடாகவும் ஆகியுள்ளது. அதற்கான அரசியல் காரணம் என்னவென்று புரியக் கூடியதாய் அல்லது பொருத்திப் பார்க்கக் கூடியதாயுள்ளது. ஆனால் சரத்திற்கும் கடற்படைக் கமாண்டர் அட்மிறல் வசந்த கறணகொடவுக்கும் இடையே முரண்பாடு இருந்ததாகவும் தகவல்களுள்ளன. இவை முன்னைய முரண்பாட்டின் (கரவாஸ்-கொவிகம) நீட்சியா அல்லது இது வேறு நிகழ்வுப் போக்கா என்பது புரியவில்லை. ஆனால் இவ்விதமும் ஒரு முரண்பாடு உள்ளது என்பதைப் புரிந்து கொள்வோம்.

### **அம்முரண்பாடு பற்றிய சில தகவல்கள்**

பொதுமக்களின் அதிகளவான ஏற்றிப் போற்றல்கள் SLA இன் காலாட் படைக்கானதாக இருந்த வேளையில், சென்றவாரம், கடற்படையின் முதுநிலை அதிகாரிகள், SLA இன் கடற்படைப்பிரிவுதான் புலிகளை வீழ்த்துவதில் தலைமைப் பாத்திரம் வகித்ததாகக் கூறியுள்ளார்கள்.

தரைப்படைக்கும் LTTE க்கும் இடையேயான பிரதான சண்டை ஆரம்பிக்க முன்னரேயே கடற் படையினர், 2008-ல் LTTE யின் 10 பொதிக் கப்பல்களை அழித்தொழிப்பதன் மூலம் அதன் போரிடும் வலுவை அழித்துவிட்டனர் எனவும் கூறினர்.

.....சென்றவாரம் நடந்த ஒரு செவ்வியில் அவர் “எதிரிகளின் கடல் மார்க்க வாய்ப்புகள் பறிக்கப் பட்டிருக்குமானால், தாக்குதல் நடவடிக்கைகள் மிக

விரைவிலேயே முடிவடைந்திருக்கும்''

இவரின் கூற்றுப்படி, கடந்த வருடம் டிசம்பர் மாதம் வரை LTTE யால் ஸ்ரீலங்காவிற்குள் கடல் மார்க்கமாக ஆயுதங்களைக் கடத்தக் கூடியதாய் இருந்துள்ளது.

சரத்தின் நேர்காணலைத் தொடர்ந்து, கடற்படை கமாண்டர் யுத்தம் முடிந்ததன் பின் அரசு தொலைக்காட்சிக்கான நேர்காணலில், இராணுவ வெற்றியின் மகிமைகள் அரசின் தலைமை, ஆயுதப் படை, மக்கள் ஆகிய மூவரிடையேயும் சமமாகப் பங்கிடப்படவேண்டும் எனக் கூறினார். அப்படியில்லாமல் ஒரு தனிநபரினதோ, ஒரு படைப்பிரிவினதோ சாதனையாக எடுத்துக் கொள்ளப்படக்கூடாது. இவரின் கூற்று சரத்திற்க்கும் எதிரான நேரடி விமர்சனமாகவே காணப்படுகின்றது.

தரைப்படையினர் செத்த பாம்பை அடித்துவிட்டு தம்பட்டம் அடித்துத் திரிகிறார்கள் எனச் சொல்லாமல் சொல்லுகிறார். முன்னர் மேற்கோள் காட்டப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவின் செவ்வியின் போதும் அவர் தரைப்படையின் பங்கையே முக்கியத்துவப்படுத்துகிறார். JRS யின் கீழ் கண்ட கூற்றும் அதையே பகர்கிறது. இவற்றை வைத்துத்தான் கடற்படை கமாண்டர் அவ்விதம் கூறினார் போலும்.

இவ்விரு தளபதிகளுக்கும் இடையேயான வாக்குவாதங்கள் ஒரு பகிரங்க இரகசியமாகும். யுத்தம் முடிவடைவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னரே இவர்கள் தம் இருவரிடையேயுமான ஒத்துப் போகாத் தன்மையை ஒளிக்க முற்படவில்லை.

''கடற்படைதான் யுத்தத்தைத் திசை திருப்பி வெற்றிக்கிட்டுச் சென்றது'' எனவும் கடற் தளபதி கூறினார்.

(Everyone wants to be a hero as the battle for plaudits begins. Mandana Ismail Abeywickrema)

இம் முரண்பாட்டில் கடற்படைத் தளபதி ஒரு 'நேர்மையான' நிலைப்பாட்டை எடுத்திருப்பதுபோலத் தெரிகிறது. அவர் எந்தத் தனிநபரும் வெற்றியைத் தனதாக்கிக் கொள்வதைத் தடுக்க முயற்சிக்கிறார் போல் தெரிகிறது. அத்துடன் கடற்படை ஒரு தீர்க்கமான பங்களிப்புச் செய்திருந்தும்கூட உரிய மதிப்புக் கொடுபடவில்லை என்ற ஏக்கமும் தென்படுகிறது.

இங்கு இலங்கையின் பாதுகாப்புத் துறையில் மூன்றாவது முனையா என்ற கேள்வியெழுகிறது. புலிகளுக்கெதிரான யுத்தத்தின் போது இந்திய

கடற்படைக்கும் ஸ்ரீலங்கா கடற்படைக்கும் பொதுவான வேலைத்திட்டங்களின் அடிப்படையில் நெருங்கிய நட்புறவு இருந்தது. பாதுகாப்புப் படையினுள் இந்தியா தனக்கென்றோர் முனையைத் திறந்துள்ளதா? என்ற கேள்வியுமுள்ளது.

### 3.2.2) **மீண்டும் ஒரு தமிழ் எழுச்சியா**?

தமிழரின் தற்காப்பு யுத்தம் மீண்டும் எழும் என்பதை நிச்சயமாக எதிர்பார்க்கிறார். நான்கு சாத்தியப் பாடுகள் தெரிகின்றன. அவை,

### 2.அ) **தமிழர் ஊடான இந்தியத் தலையீட்டுக்கா**?

#### 2.அ.1) **இந்திய-ஸ்ரீலங்கா முரண்பாடு**

ஸ்ரீலங்கா அரசைத் தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ்க் கொணரும் முயற்சியில் இந்தியாவென்றுமே வெற்றி பெறப்போவதுமில்லை, அதற்கான முயற்சியில் ஈடுபடுவதை ஒருகணமேனும் நிறுத்தப் போவதுமில்லை. அதிபர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் இதற்கிணைந்து போனாலும், இலங்கைச் சமூகம் (அரசு உட்பட) இதற்கு இணங்கிப் போவதற்கான சாதக அம்சங்கள் மிகவும் குறைவானவையாகவே உள்ளன. மேற்குலகுடனும் சீனாவுடனும் இணைந்து போவதற்கான பரப்பளவைவிட இந்தியாவுடன் இணைந்து போவதற்கான பரப்பளவு மிகவும் ஒடுங்கினதாகும். சிங்கள சமூகமும், ஸ்ரீலங்கா அரசும் சீனாவுடன் முரண்படுவதற்கான காரணங்கள் எதுவுமே இன்னமும் விவாத அரங்கிற்கு வரவில்லை. சிங்கள தேசியத்தின் சித்தாந்த அடிப்படையான மகாவம்சம் (இது ஒரு புராணக் கதையல்ல, இது ஒரு சித்தாந்தம், இது ஒரு சிந்தனை முறை,) இந்திய எதிர்ப்புக் கொண்டதாகவே உள்ளது என்று சொல்வது தவறு, இந்திய எதிர்ப்பே அதன் சாராம்சமாகவுள்ளது. அதனது இந்திய எதிர்ப்பு உள்ளடக்கம்தான் நவ-காலனியல் காலத்துக்குப் பொருத்தமான, இந்தியத் தேசவிஸ்தரிப்பு எதிர்ப்புக் கொள்கையாக உருவம் கொண்டுள்ளது. ('இந்திய எதிர்ப்புக் கிளர்ச்சியா?' எனும் பகுதியில் மேலும் விபரங்கள் உள்ளன) சிங்களத் தேசியத்தின் சித்தாந்த அடிப்படை, என்று தகர்க்கப்படுகிறதோ அன்றுதான் சிங்கள சமூகத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒரு நல்லுறவு ஏற்படும். மகாவம்ச சித்தாந்தத்தை விட்டால் வேறுவழியில்லை என்ற நிலையிலுள்ள மகிந்தவால் இது முடியுமா? அல்லது மகிந்தவின் ஊடாக இந்தியாவால்தான் இது முடியுமா? நிச்சயமாக முடியாது.

மகாவம்சம் எனும் சித்தாந்தம் அப்படியே தொடரவில்லை. காலத்துக்கு காலம் அது தொடர்ச்சியாகத் தன்னை மறுபிறப்பெடுத்துக் கொண்டே

உள்ளது (Reproduction). இதன் மூலம் புதிய சமூகஉருவாக்கத்திற்கு ஒப்ப வளர்ந்து வருகிறது. ஆரம்பத்தில் இது மன்னராட்சிக் காலத்து ஆளும் வர்க்கச் சித்தாந்தம், பின்னர், இது அநகாரிக தர்மபாலவின் சளையா முயற்சியில் ஏ.ஈ. குணசிங்கவின் அரசியல் தலைமையில் காலனியல் கால சிங்களத் தேசியமாக வெற்றிகரமாக மறுபிறப்பெடுத்தது. அடுத்த கட்டமாக 'அப்பே ஆண்டுவ'த் தலைவர்களின் துணிச்சலான தலைமையில் முதல் தலைமுறை இடதுசாரிகளின் ஒத்துழைப்புடன் நவகாலனியல் கால ஆளும் வர்க்கத்தின் சித்தாந்தமாக மறுபிறப்பெடுத்துள்ளது. இதனால்தான் சிங்களத் தேசியமானது இனக்குழும-மதவாதத் தேசியம் என அழைக்கப்படுகிறது.

சரத்தும், அதிபர் மஹிந்த ராஜபக்ஷவும் அதை மேலும் வளர்த்தெடுத்துச் சென்றுள்ளனர். அதிபர் மஹிந்த ராஜபக்ஷ தொடர்கிறார். இதற்காக இந்தியாவை காலத்துக்குக் காலம் பயன்படுத்தியும் வருகின்றனர். அதிபர் மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றார். இதனால் ஸ்ரீலங்காவின் ஆளும் வர்க்கத்தை தூக்கியெறிந்தால் தவிர மகாவம்சம் எனும் சித்தாந்தத்தின் அரசியல் மேலாண்மையைத் தூக்கியெறிய முடியாது. அதேபோல் இச் சித்தாந்தத்தை சிங்கள மக்கள் தமது மனங்களில் இருந்து தூக்கியெறியாமல் அவர்களால் சிங்கள இனக்குழும-மதவாதத் தேசியக் கண்ணோட்டத்தில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியாது. மகிந்த இதைச் செய்வாரா? நிச்சயமாக செய்யமாட்டார். இந்தியா இதைச் செய்யுமா? இது, இலங்கையில் ஒரு மக்கள் ஜனநாயகப் புரட்சியை அல்லது ஒரு சோஷலிஸப் புரட்சியை இந்தியா செய்யுமா? என்று கேட்பதைப் போலுள்ளது.

சிங்கள இனக்குழும - மதவாதத் தேசியக் குணாம்சம் கொண்ட, ஸ்ரீலங்காவின் ஆளும் வர்க்கத்துடன் உள்ள உறவை ஒட்டவும் முடியாது, வெட்டவும் முடியாது திண்டாடுவதே இந்தியாவின் நிலையாகும். இது புலிவாலைப் பிடித்தவரின் நிலையாகும். இதனால், ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியா ஓரங்கட்டப்படப் போவது நடைபெறும் அல்லது ஸ்ரீலங்கா இந்தியாவுக்கொரு சிறைக் கூடமாக மாறுவது நடைபெறும். இது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும்.

தமிழ் நாடும் கருணாநிதி குடும்பமும் போல் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ குடும்பமும் இலங்கையும் இருக்குமென்று இந்தியா நினைத்தால் அதைப் போன்ற பைத்தியக் காரத்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. கொக்கென்று (தமிழ் நாடென்று) நினைத்தாயோ கொங்கணவா? (இந்திய மத்தியரசே?) என்று இலங்கை மக்கள் கேட்கும் காலம் விரைவில் இல்லாவிட்டாலும் மிகத் தொலைவிலுமில்லை. கொக்கென்று (பாகிஸ்தானென்று) நினைத்தாயோ கொங்கணவா? என்று பிரேமதாசா கேட்டு இன்னமும் 20வருடங்கள் முடியவில்லை என்பதை இந்தியா மறந்திருக்க நியாயம் இல்லை.

அவ்விதம் நடந்தால், அதாவது இந்தியா ஓரங்கட்டப்படும் நிலை ஏற்படுமானால் அதற்கு எதிர்வினையாக அகவய சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தமிழீழத் தேசிய இயக்கமொன்றை இந்தியா, இலங்கையில் தூண்டிவிட முயன்றால் அது ஆச்சரியமானதாகவும் இருக்காது. இந்தியா அதற்கும் தயாராகவேயுள்ளது. அதற்கான ஆட்களும் இந்தியாவின் கைகளில் உள்ளனர். அதில் இந்தியா நிறையவே முன் அனுபவம் பெற்றுமுள்ளது. முன்னர் போல் 'போ!' என்று சொன்னதும் மூட்டைமுடிச்சைக் கட்டிக் கொண்டு போவதற்குரிய நிலையில் தற்போது இந்தியா இல்லை. முன்னர் இலங்கையில் இந்திய முதலீடுகளில்லை, தற்போதோ நிறையவே உள்ளன. குறிப்பாக கடல் வள முதலீடு. (இந்திய எதிர்ப்புக் கிளர்ச்சியா? எனும் பகுதியைப் பர்க்கவும்) முன்னர் சீனப் போட்டி இல்லை, தற்போதோ கடும் போட்டியுள்ளது. முன்னர் பிராந்திய மேலாதிக்கத்திற்கு மட்டுமே இலங்கை தேவைப்பட்டது, தற்போதோ அதனுடன் சேர்த்து தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் இலங்கை தேவைப்படுகிறது. 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற நிலைதான். ஆகையினால் முழு இலங்கையை முழுங்க முடியாவிட்டாலும், குறைந்தது வடக்குக் கிழக்கையாவது தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முற்படலாம்.

அதிபர் மஹிந்த ராஜபக்ஷ இதையும் எதிர்பார்க்கிறார். இதற்காக அவருக்கு இராணுவம் தேவைப்படலாம். அத்துடன், மேற்குலகுடன் ஒரு நட்புறவை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் புலிகளின் ஒரு பகுதியினரை தன்னுடன் அணைத்துக் கொம்பு சீவி விட்டு இந்திய ஆதரவுக் குழுக்களுடன் மோதவிடலாம். வடகிழக்கில் மீண்டும் ஓர் இரத்த ஆறு ஓடும். மீண்டும் ஓர் சகோதர யுத்தம் நடக்கலாம். மக்கள் மீண்டும் யுத்தக் கெடுபிடிகளுக்குள் இழுத்துவிடப்படலாம்.

இரு அரசுகளுக்கும், இவ்விரு அரசுகளுக்கு ஆதரவான தமிழ்க் குழுக்களுக்கும் ஒரு வேலைத்திட்டம் கிடைத்துவிடும்.

இவ்விதமான நிலையில், அன்னியத் தலையீட்டை விரும்பாத தேசபக்தர்களினதும், காலனியல் ஆட்சியை விரும்பாத தேசிய ஜனநாயகவாதிகளினதும், மக்கள் ஜனநாயகத்தையும் தேசிய ஜனநாயகத்தையும் ஒரு சேர விரும்பும் ஜனநாயகத் தேசியவாதிகளினதும், சமூகப் புரட்சியாளர்களினதும், போரைவிரும்பா சமாதானப் பிரியர்களினதும் பிற முற்போக்கு சக்திகளினதும் குறிப்பாக தமிழ் முற்போக்குவாதிகளினதும் வேலைத்திட்டமென்ன? அவர்களுக்கு ஓர் அரசியல் ஆபத்து மாத்திரமல்ல, உயிராபத்தானதுங்கூட என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இம் மோதலில் யாரை ஆதரிப்பதென்ற கேள்வியை நோக்கி அவர்களின் சிந்தனை செல்லுமானால் அது தவறானது. தமது கழுத்துக்கு மேலே ஒரு

கத்தி தொங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டு காலம் தாழ்த்தாமல் அவர்கள் ஒரு வேலைத்திட்டத்திற்கு வருவது அவசியம். இவ்வித நிலை ஏற்படுவதைத் தடுக்க முடியுமானால் அது இன்னும் நல்லது. தடுக்கப்படுமா?

இது இந்தியத் தலையீட்டின் ஒருபக்கம். ஆனால் அதுதான் ஒரே பக்கம் என்பதல்ல, இன்னோர் பக்கமும் உண்டு. இந்திய எதிர்ப்புக் கிளர்ச்சியா என்ற பகுதியில் அந்த மற்றோர் பக்கத்தைக் காணலாம்,

### அ.2) **இந்திய ஆதரவு அமைப்புகள்**

IPKF திரும்பி வரும்போது தன்னுடன் அழைத்துவந்த இரு குழுக்கள் இந்திய மத்திய அரசின் ஆதரவுடன் செயல்பட்டு வருகின்றன. ஒன்று டெல்லியிலேயே முகாமிட்டுள்ளது. அதன் செயல்பாடுகள் பற்றி ஊடகங்கள் வாயிலாக எதையும் அறிய முடியவில்லை. மற்றையது தமிழ் நாட்டில் செயல்படுகிறது. இவை இந்தியாவால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கங்களல்ல. நீண்டகால வரலாறுள்ள போராட்ட இயக்கங்களாகும். இவை புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் இருந்து தப்பிக்கவும், புலிகளை எதிர்க்கவும் இந்தியாவைச் சார்ந்து நிற்கும் தந்திரோபாயத்தை வகுத்துக் கொண்ட தமிழ்த் தேசிய இயக்கங்களாகும். தமிழ்நாட்டில் பாதுகாப்புத் தரப்பட்டுள்ள ஒரு இயக்கம், இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளையும் தமது இந்திய வேலைத்திட்டத்தில் இணைக்க ஆரம்பித்துவிட்டனர். இந்தியாவில் உள்ள அகதிகளுக்கென தனியான அமைப்பொன்று அவசியமென்ற கருத்தை முன்வைத்துச் செயல்படுகின்றனர். இவ் அகதிகள் தற்போது இலங்கை செல்வது புத்திசாலித்தனமானதல்ல என்பதே இவர்களின் கருத்தாகவுள்ளது. இது 'நாடு கடந்த தமிழீழ அரசுக்கு' போட்டியான அமைப்பொன்றை இந்தியாவில் அமைப்பதற்கான முயற்சியாகவுமிருக்கலாம். திபெத்திய அகதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் உரிமை இலங்கை அகதிகளுக்கும் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கை வரவேற்க்கப்படக் கூடியதே. இத்திட்டம் இந்தியாவிலுள்ள அகதிகளுக்கு நல்லதாகவே அமையும்.

இன்னோர் குழு மாநில அரசின் துணையுடன், குறிப்பாகத் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் நெருங்கிய நட்புடன் செயற்பட்டு வருகின்றது. இது ஜனநாயக வரையறைகளுக்குள் நிற்கக் கூடிய முறையில் தன்னை வளர்த்துவரும் குழுவாகும். இக் குழுவின் தலைவர் ஸ்ரீசபாரட்ணத்தைத் தலைவராகக் கொண்டிருந்த TELO இயக்கத்தின் அரசியல் ஆலோசகராகக் கருதப்பட்டவராகும். அமெரிக்க ஆதரவாளர் என்ற சந்தேகத்தின் பெயரில், அன்ரன் பாலசிங்கத்துடன் சேர்த்து இந்திய அரசால் நாடுகடத்தப்பட்டவராகும்.

இவர் இந்தியாவில் தொண்டு நிறுவனம் ஒன்று அமைத்து, அகதிகளின் அபிவிருத்தி தொடர்பாக செயற்பட்டு வருகிறார். தற்போது ஸ்ரீலங்கா அரசின் அங்கீகாரத்துடன் ஸ்ரீலங்காவிற்கும் இதன் அபிவிருத்தி வேலைகள் விஸ்தரிக்கப் பட்டுள்ளன. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின், குறிப்பாக கிறிஸ்துவ நிறுவனங்களின் நிதி உதவிப்பலம் இவருக்குத் தாராளமாகவுண்டு. தமிழ்த் தேசியத்தின் 'தந்தை'யின் மகனென்ற அடையாளமும், சமஷ்டிக் கட்சி எனும் பெயரில் பதிவுசெய்து, தமிழ் அரசுக் கட்சி என்று தமிழ் நாமம் சூட்டிக்கொண்ட கட்சியின், கட்சிப் பத்திரிகை என்று கருதப்பட்ட பத்திரிகையே 'சுதந்திரன்'. இத் தொண்டு நிறுவனத்தின் பெயரும் அதேதான். தந்தையின் பெயரும், 'சுதந்திரன்' (சிறு எழுத்து மாற்றத்துடன்) இவருக்கொரு படிமத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது உண்மைதான். ஆனால் இத்தொண்டு நிறுவனத்துள் ஊழலும், யாழ் மேட்டுக்குடித் தன்மையும் மலிந்து காணப்படுகிறதென பொதுவாகக் கருதப்படுவதால், அகதிகள் இவரை ஒரு அரசியல்வாதியாகக் கணிக்கவில்லை. இலங்கையின் அரசியலில் ஒரு தலைவனாக வர இவர் மேற்கொண்டுவரும் முயற்சிகளில் மிக மெதுவான முன்னேற்றமே காணப்படுகிறது. இந்தியா தவிர்ந்த பிற நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர் மத்தியிலும் யாரும் இவரைக் கணக்கில் கொள்ளவில்லை. இந்திய மேலாதிக்கம் பற்றி இலங்கைச் சமூக உருவாக்கத்தின் ஒவ்வொரு மூலக்கூறுகளும் விழிப்புடனிருக்கின்றன என்பதற்கு இதையொரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாமா?

இவர் அரசியல் அமைப்பு எதையும் வெளிப்படையாகத் தோற்றுவிக்கவில்லை, இவரின் தொண்டு நிறுவனமே ஒரு அரசியல் அமைப்பாகவும் செயற்பட்டு வருகிறது. புலிகளுக்கெதிரான வெளிப்படையான தாக்குதல் எதையும் இவர் முன்னெடுத்துச் செல்லவில்லை. அதேபோல் என்றுமே புலிகளைப் பற்றிய நேர்மறை அணுகுமுறை எதையும் கூட முன்வைக்கவில்லை. எதிர்மறை அணுகுமுறையையே முன்வைத்து வந்தார். ஆனால் மிக நாசூக்காக, சற்றுக் கூர்ந்து பார்த்தால் தவிர மற்றும்படி, புலிஎதிர்ப்பாளரென்பது தெரியாமலே இது நடந்தது. இதனால் அகதி முகாம்களுக்குச் சென்று வருவதில் இவர்களுக்கு எந்த நெருக்கடியுமில்லை. அகதிகளுக்கும் இவர்களுடன் பழகுவதில் எந்த மனநெருடல்களுமில்லை. அரசியல் ரீதியில் நண்பர்கள் இல்லாவிட்டாலும் எதிரிகள் அல்ல என்ற கருத்தே அகதி முகாம்களில் நிலவுகிறது.

இந்தியாவிலுள்ள அகதிகளில் பலர் புலிகளால் பாதிக்கப்பட்டிருந்தாலுங்கூட, புலிகளைத் தமிழ் வீரத்தின் அடையாளச் சின்னமாகவும், முன்னோடிகளாகவும் கருதுவதே அகதிகளின் பிரதான கருத்தோட்டமாகவுள்ளது.

### 3.2.3) **மேற்குலக ஆதரவுத் தமிழ்த் தேசியத்திற்கா?**

மேற்குலக ஆதரவுத் தமிழ்த் தேசிய மேட்டுக்குடிக்கும் சிங்கள பௌத்த மேட்டுக் குடிக்கும் இடையேயான உறவுமுறை ஆரம்பத்தில் நட்புறவாகவும், மன்னிங் பிரபுவின் அரசியல் சீர்திருத்தத்தின் பின்னர் இவ் உறவு பகைமை உறவாகவும் மாறியது. அந்த நிலை இன்றுவரை தொடர்கிறது. அது எவ்விதம் என்பதை நோக்குவோம்.

### 3.அ.) **சிசுக் கொலையுண்ட இலங்கைத் தேசியங்கள்**

*(தமிழ்த் தேசியத்தின் முதலாவது அத்தியாய நிகழ்வுகளில் சில)*

'இலங்கைத் தேசியம்' என்ற ஒன்று இருக்கவில்லையென்று கூறமுடியாது. ஒன்றல்ல, இரண்டு குழந்தைகள் பிறந்தன.

### 3.அ 1) **காலனியல் ஆதரவுத் தேசியம்**

காலனியல் ஆட்சியாளர்களாலும் அவர்களின் இலங்கைத் தரகர்களினாலும் (இலங்கைத் தேசிய காங்கிரஸ்) வளர்க்கப்பட்டதே இலங்கை (வி)தேசியக் குழந்தையாகும். காலனியல் மற்றும் நிலப்பிரபுத்துவ ஆதரவே அதன் அரசியல் குணாம்சமாக இருந்தது. இது காலனியல் சார்பு இலங்கை (வி)தேசியம்.

1919-ல் இலங்கையின் காலனியல் ஆதரவு மேட்டுக்குடியினர் அனைவரும் இணைந்து இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்றோர் அரசியல் அமைப்பை உருவாக்கினர். முஸ்லீம் மேட்டுக்குடியினர் இதில் பங்குபற்றினார்களா என்பது தெரியவில்லை. அதன் தலைவராக முழு இலங்கைக்குமென ஏகமனதாகத் தெரிவானவர் சேர்.பொன். அருணாச்சலமேயாகும். இவர்தான் இவ் அமைப்பின் அமைப்பாளருமாகும். சிங்கள விதேசியர்கள், ஒரு தமிழனை அதுவும் ஒரு சைவ-வெள்ளாள மறுமலர்ச்சிக்காரரை எதற்காக தேர்ந்தெடுத்தார்கள்? அன்றைய சிங்கள விதேசியர்கள் இனவாதக் கண்ணோட்டம் அற்றிருந்தார்கள் என்பதா? முஸ்லீம்களைப் படுகொலை செய்து நான்கு வருடத்துள் எல்லாவற்றையும் மறந்து விட்டார்களா? இல்லை. அவர்கள் திருந்தவுமில்லை, மறக்கவுமில்லை. இலங்கையின் மேட்டுக்குடியனரிடையே இருந்த தொழில் பிரிவினையே ஒரு தமிழனைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணமாகும்.

## காலனியல்கால தொழில் பிரிவுகள்

இலங்கையின் மேட்டுக் குடியினர் மூன்று பிரதேசங்களாகவும், மூன்று தொழில் பிரிவினராகவும் காணப்பட்டனர்.

**மூன்று பிரதேசங்கள்:**

மத்திய பிரதேசம் - இன்றைய மத்திய மாகாணமும் வட-மேல் மாகாணத்தின் ஒரு பகுதியும்.

தென் பிரதேசம் - இன்றைய தென்மாகாணமும் மேல் மாகாணத்தில் தென்பகுதியும்.

வடபிரதேசம் - இன்றைய யாழ்-குடாநாடு.

**மூன்று தொழிற் பிரிவுகள்**

1.) நிலமானிய நில உடமையாளர்கள் - மத்திய பிரதேசத்திலேயே இவர்கள் செறிந்து காணப்பட்டார்கள்.

2.) தரகு முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள், பெரும் தோட்டத்துறைக்கு அவசியமான பண்டங்களையும் சேவைகளையும் விநியோகிப்பவர்கள். உதாரணமாக, JRJ யின் குடும்பம் பெருந்தோட்ட முதலாளிகளுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் மாட்டு இறைச்சி விநியோகஸ்தர்களாக இருந்தார்கள் எனச் சொல்லப்படுகிறது. அன்றைய real estate வர்த்தகர்களாகவும் இருந்தனர். கட்டிடங்கள் வாடகைக்கு விடுதலே அன்றைய பிரதான தொழிலாக இருந்தது. தென் பிரதேசத்திலேயே இவர்கள் செறிந்து காணப்பட்டனர்.

3.) நிர்வாக சேவைத்துறை சார்ந்து படித்தவர்கள் (Administrative Service Oriented Proffessionals) ASOP, காலனியல் சிவில் நிர்வாகசேவையில் உயர் நிலையில் இருந்து கடைநிலை வரை இருந்தவர்கள், காலனியல் சட்ட நுணுக்கங்களில் கல்வி ஞானம் மிக்கவர்கள், ஆங்கில மொழி பயன்பாட்டில் விற்பனர்கள் வடபிரதேசத்திலேயே இவர்கள் செறிந்து வாழ்ந்தார்கள். அதற்கடுத்ததாக தென்பகுதியில் வாழ்ந்தார்கள். இந்த ASOP யினர் டச்சுக் காலத்திலேயே தோற்றுவிக்கப்பட்டவர்களாகும். முதலியார் என்பதே அப்போது அவர்களின் பதவிப்பெயராக இருந்தது. காலப்போக்கில் இதுவொரு சாதிப்பிரிவாகவுமானது.

இந்த மூன்றும் மாத்திரந்தான் பிரித்தானிய காலனியல் காலத்தின் தொழில் பிரிவுகளாக இருக்கவில்லை. இம்மூன்றையும் ஆட்டிவைத்த,

இம்மூன்றுக்கும் எஜமானரான மற்றோர் தொழில் பிரிவும் இருந்தது. அதுதான் பெருந்தோட்டத் தொழில் துறையாகும். இதுதான் இலங்கைப் பொருளாதாரத்தின் தலைமைத்துறையாகும். ஆனால் அது இலங்கை மேட்டுக் குடியினருக்குச் சொந்தமானதாக இருக்கவில்லை. ஆகவே அது இங்கே தவிர்க்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசத்தில் மையங்கொண்டிருந்த நிலமானிய நில உடமைமுறை, மத்திய பிரதேச மக்களின் வாழ்க்கையில் காத்திரமான ஒரு பொருளாதாரப் பங்கை வகித்தாலும் தேசியப் பொருளாதாரத்தில் மிகக் குறைந்த பங்கையே வகித்தது. முதலாளித்துவத் தன்மைபெற்ற பிற இரு துறைகளுடன் இது முரண்படவும் செய்தது. இதன் காரணத்தால், றதலயோ (நிலப்பிரபுக்கள்) என அழைக்கப்பட்ட மலைநாட்டு மேட்டுக்குடியினர், 1925-ல் இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து விலகி ‘கண்டியத் தேசிய சபை’ (Kandyan National Assembly) என்ற அமைப்பை உருவாக்கினர். மத்திய மலைநாட்டிற்கு சுயாட்சிப் பிரதேசம் வேண்டி நின்றனர். நிலப்பிரபுத்துவத்தின் தனித்து நிற்கும் போக்கும், இப் பிரதேசம் பிற மதக்கலப்பில்லாமல் இருந்ததால் உருவான தூய்மைவாதப் போக்குமே இதற்குக் காரணங்களாக அமைந்தன. இத்தூய்மைவாதப் போக்கால் அவர்கள் தம்மை நியம (உண்மையான) சிங்களவர்களென அழைத்துக் கொண்டார்கள். ஆனால் காலப்போக்கில் இம்முரண்பாடு சுமூகமாகத் தீர்க்கப்பட்டு அக் கோரிக்கை கைவிடப்பட்டது. திருமண உறவுகளும் ஒரு தீர்வுப்பொதியாகச் செயல்பட்டது. நாற்பது வயதைத் தாண்டிய, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆங்கில ஒறேட்டர் கிறிஸ்தவ பண்டாரநாயக்க. 25 வயதே ஆகாத, குறைந்த கல்வியறிவுடைய றத்வத்த குடும்ப பெண்ணை (மலைநாட்டில் ஒரு ‘றதல’ குடும்பம்) திருமணம் செய்து கொண்டது இதில் ஒன்று.

நிலப்பிரபுத்துவ நிலவுடமை தவிர்ந்த பிற இரு துறைகளும் இலங்கைப் பொருளாதாரத்தில் பெருந் தோட்டத்துறைக்கு அடுத்ததாக பிரதான பங்கு (தலைமைப் பங்கல்ல) வகித்தன. இவை இரண்டில் நிர்வாகத்துறையானது, வர்த்தகத் துறைக்குக் குறைவில்லாமல் தேசியப் பொருளாதாரத்திற்கு வருமானத்தை ஈட்டித்தந்ததுடன் காலனியல் அரசியல் நிர்வாகத்துடன் மிக நெருங்கிப் பழகும் தன்மையும் பெற்றிருந்தது. மகாராணிக்கு கணிதம் சொல்லிக் கொடுத்தவர்கள் (சுந்தரலிங்கம்), மகாராணிவீட்டுக்கு தமது சொந்த வீடு போல் போய்வரக்கூடியவர்கள் (ஜி.ஜி.பொன்னம்பலம்), மகாராணியிடம் நைற் (Knight) பட்டம் பெற்றவர்கள் (பொன்.இராமநாதன்), மகாராணியின் அப்புக்காத்துக்கள் (Oueen Council) ஆகியோர் நிறைந்த இடம் யாழ்ப்பாணமாகும்.

பாதுகாப்புச் சேவைத்துறையிலும் இவர்கள் உயர் மட்டத்தில்

இருந்தார்கள். இவை மட்டுமல்ல, ‘சைவ மறுமலர்ச்சி இயக்கம்’ ஆங்கில மொழிக்கோ கிறிஸ்துவ மதத்திற்கோ எதிரானதாக அமையவில்லை. ஆசியத் தொன்மைக்கும், யூதத் தொன்மைக்குமிடையில் பொது அடையாளங்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டார்கள். பிரித்தானியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களிலிருந்து, யாழ்குடாநாட்டில் நிலவிய சாதிய அமைப்பை, அவர்களுடன் மோதாத முறையில் பாதுகாப்பதே அதனது பிரதான குறிக்கோளாக இருந்தது. அதில் வெற்றியும் கண்டார்கள். மதம் மாறியவர்கள் சாதியத்தூய்மை இழந்தவர்களென்ற படிமம் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்படவில்லை. மதம் மாறிய மேட்டுக்குடி வெள்ளாளர்கள் நிர்வாகத்துறையில் நல்ல பதவிகளும் பெற்றார்கள். மதம்மாறாதிருந்த சைவ வெள்ளாள மேட்டுக்குடியினர் இதற்குச் சளைத்தவர்களல்ல. பிரித்தானிய நிர்வாகத்துடன் இவர்களுக்கு இருந்த தொடர்பு பர்மா, சிங்கப்பூர் என்று விரிந்திருந்தது. இக் காரணங்களால் யாழ்ப்பாண மேட்டுக்குடியின் அரசியல் பிரதிநிதிகள் இலங்கைத் தேசிய அரசியலில் தலைமைப்பாத்திரம் வகித்தார்கள்.

காலனியல் சார்பு தரகு வர்த்தக ஆளும் வர்க்கத்தின் சிங்களப் பகுதிக்கும் (டி.எஸ்.சேனநாயக்க பிரிவு), ஆளும் வர்க்கத்தின் ASOP யின் தமிழ்ப் பகுதிக்கும் (சேர்.பொன். இராமநாதன் பிரிவு) இடையே எழுந்த மோதலினால் காலனியல் இலங்கைத் (வி)’தேசியக்’ குழந்தை சிசுக் கொலை செய்யப்பட்டது. இக் கொலையில் ஆழும் வர்க்கத்தின் இரு பகுதிக்கும் (தமிழ், சிங்கள) சம பங்குண்டு. குழந்தை உடனடியாகச் சாகவில்லை, படிப்படியாக சித்திரவதை செய்தே கொல்லப்பட்டது.

இலங்கையெனும் நாட்டில் சிங்கள மேட்டுக்குடியினருக்குள்ள உரிமைகள் அனத்தும் தமக்குமுள்ளதென தமிழ் மேட்டுக் குடியினர் கருதியிருந்தனர். தாம் பிரித்தானியரின் உள்வீட்டுப்பிள்ளைகளானதால் தம்மை உசத்தியானவர்களெனவும் கருதியிருந்தனர். சிங்கள மேட்டுக் குடியினரும் இவர்களை மதித்தனர். இதனால் ‘தேசிய’ ஒற்றுமை-இனிதே இருந்தது. ‘சிங்களவர்கள் மூடர்கள்’ (சிங்கள மோடயோ) ‘எருமைப் பால் குடிப்பதால் புத்தி மங்கிப்போனவர்கள்’, ‘கால் பணத்துக்காக தாயின் களுத்தைக் கூட அறுப்பவர்கள்’ போன்ற கருத்தாக்கங்கள் இவர்களின் படைப்புகளே. தமிழர்களின் வீட்டுவேலைப் பெண்கள் ‘ஆயா’ என்ற சிங்களப் பெயரால் அழைக்கப்பட்டதற்கும் இவர்கள்தான் காரணம். அதாவது சிங்களப் பெணகள் ‘ஆயாக்கள்’ என்பதே தமிழ் மேட்டுக் குடியினரின் பொதுப் புத்தியாக இருந்தது. இவ்விதந்தான் இவர்கள் ‘சிங்களவர்களை’ ‘மதித்தார்கள்’. அதாவது உயர்வுச் சிக்கலுடன் நட்பைப் பேணினர். உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பழகினர். சிங்கள மேட்டுக் குடியினரும் ‘உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி’ ‘எங்களுக்கும் காலம் வரும்’ என்ற நம்பிக்கையுடன் நட்பைப் பேணினர்.

காலனி விசுவாசிகளான இம்மூன்று அணியினரும் இவ்விதமானதோர் ‘தேசிய’ ஒற்றுமையைத் தமக்குள் பேணிவந்தார்கள். இதனால் இத் ‘தேசியம்’ இறந்தது.

இவ்விறப்பு திடீரென்று ஏற்படவில்லை. மெதுவாகவே நடந்தேறியது. மனிங் பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசியல் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்தபோதுதான் இந்தத் தேசியம் மரணப்படுக்கையில் வீழ்ந்தது. இச் சீர்திருத்தம் இதுவரை காலமிருந்த இனவாரியிலான பிரதிநிதித்துவத்தை நீக்கி, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியது.

இப்பிரதிநிதித்துவம் - இலங்கை ‘சட்டசபையில்’ இதுவொரு பொம்மைச் சட்டசபை-சிங்கள மேட்டுக்குடியினரின் உறுப்புரிமையை அதிகரித்தது. மேல்மாகாணத்தில் தமிழ் மேட்டுக் குடியினருக்கு ஒரு ஆசனம் தருவதாக சிங்கள மேட்டுக்குடி உறுதியளித்திருந்தது. பழிவாங்குவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த சிங்கள மேட்டுக்குடி விட்டுக்கொடுக்குமா? கையை விரித்து விட்டார்கள். தமிழ் மேட்டுக் குடியினரின் உயர்வுச் சிக்கலுக்கு விழுந்த முதலாவது சம்மட்டி அடி இதுதான். இதன் பின்னர்தான் ஒரு மொழிவழி-இனக்குழும-தேசியம் என்ற முறையில் தாம் உயர்ந்தவர்களல்ல என்பதைப் புரிந்து கொள்ள ஆரம்பித்தார்கள். இனியும் தாம் இலங்கை ஆளும்வர்க்கத்தின் செல்வாக்குமிக்க பகுதியாகவிருக்க முடியாதென்பது புரியத் தொடங்கியது போலும். விளைவு, இலங்கைத் தேசியக் காங்கிரஸை விட்டு நொந்த மனதுடன் வெளியேறுகிறார்கள். இருந்தும் இலங்கைத் ‘தேசியம்’ மரணிக்கவில்லை. ஒரே வீட்டில் இருந்து குடும்பம் நடத்தியவர்கள், தாம்பத்தியவுறவை முறித்துக் கொள்ளாமல், இரண்டு தனித்தனி வீடுகளிலிருந்து குடும்பம் நடத்தத் தீர்மானிக்கின்றனர். UNP யும், தமிழ்க் காங்கிரஸும் உருவாகின்றன. ஒரு வீட்டுடனும் ஒரு சின்ன வீட்டுடனும் இலங்கைத் ‘தேசியம்’ தொடர்கிறது. சின்னவீடாகவாவது வைத்திருக்கும்படி பொன் களின் வாரிசு பொன்னம்பலம். டி.எஸ்.சேனநாயக்கா காலில் விழுமளவிற்கு உயர்வுச் சிக்கல் தாழ்வுச் சிக்கலாக மாறுகிறது. அதாவது ஒருமுனையிலிருந்து மற்றோர் முனைக்குப் போகிறார்கள். மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கும்வரை இலங்கைத் தேசியம் தன் சின்னவீட்டுடன் தொடர்கிறது. மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கியதன் எதிர் வினையாக 1950களின் நடுப்பகுதியில் ‘சிங்களத் தேசியம்’, ‘தமிழ்த் தேசியம்’ என இரு தேசியங்கள் உருவாகின்றன. இலங்கை (வி)’தேசியம்’ அல்லது இலங்கையின் காலனியல்த் தேசியம் மரணிக்கின்றது.

### 3.அ 2) **இலங்கை முற்போக்குத் தேசியம்**

இது இடதுசாரிகளால் வளர்க்கப்பட்டது. சோசலிஸமும் ஏகாதிபத்திய எதிர்ப்புமே அதன் குணாம்சங்களாகவிருந்தன. இது ஏகாதிபத்திய எதிர்ப்பு உழைக்கும் மக்கள் தேசியமாகும். அதாவது ஜனநாயகத் தேசியமாகும்.

அது மட்டுமல்ல, மத, மொழி, இன வேறுபாடின்றி இலங்கை மக்கள் அனைவரையும் ஒரே அணியின் கீழ் அணிதிரட்டும் முயற்சியிலும் ஈடுபட்டது. சகல பிரிவினர்களினதும் சம உரிமைக்காகவும் போராடியது. இதனால் இது தேசிய ஜனநாயக உள்ளடக்கம் கொண்ட இலங்கைத் தேசியமாய்ச் சுடர்விட்டது.

இது இரணைப்பிரசவமல்ல. இரண்டாவதாகச் சொல்லப்பட்டதே மூத்த குழந்தையாகும். இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் உதவியுடன் அக்கா வளர்ந்தாள். காலனியல் வாதிகளின் உதவியுடன் தங்கை வளர்ந்தாள். முதல் தலைமுறை இடதுசாரிகளின் தவறுகளின் காரணத்தாலும், காலனியல் எஜமானர்களின் தேசிய ஜனநாயக விரோத நடவடிக்கைகளாலும் மூத்தவள் முடமாக்கப்பட்டாள். முஸ்லீம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இன வன்செயல், மலையாளிகள் துரத்தப்படட்து, மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கியது, ஆகியவை இவற்றில் சிலவாகும். இவ்விதமாக 1940கள் வரை இலங்கைத் தாயின் மடிமீது சந்தோசமாக தவழ்ந்து திரிந்த அக்குழந்தை தென்புடன் நடந்துதிரியும் பருவத்தை அடையுமுன்னரேயே ஊனமாக்கப்பட்டுவிட்டது. (இலங்கைத் தொழிலாள வர்க்கப் புரட்சியாளர்கள் ஊடாகவா? என்ற பகுதியைப் பார்க்கவும்)

*காலனியல் எதிர்ப்புத் தேசியத்தின் முதல் சகாப்தம் முடிவுறுகிறது.*

இரு பக்க இனவாத (Sihala and Tamil racialists) வரலாற்றாளர்களும், இரு பக்க இனக்குழும-தேசிய வரலாற்றாளர்களும் (Sinhala and Tamil Ethno-Nationalist) 50கள் வரையான 'இலங்கைத் தேசியத்தின்' இந்த வரலாற்றை தமிழ் பேசும் மக்களினதும், சிங்கள மக்களினதும் வரலாறாக திரித்தும் பரப்பியும் வருகிறார்கள். மக்களின் பொதுப் புத்தியில் இதை ஏற்றி வைப்பதில் போட்டி போட்டுக் கொண்டு செயல் பட்டுவருகிறார்கள்.

உண்மையிலேயே இது இலங்கை மக்களின் வரலாறல்ல. இது காலனியல் ஆட்சியாளர்களினதும் அவர்களின் தொங்கு தசைகளாகச் செயல்பட்ட தமிழ் சிங்கள மேட்டுக்குடியினரினதும் வரலாறாகும். காலனியல் கால இந்திய வரலாறென்பது எதுவாயிருக்கின்றது. இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறுதான் இந்திய வரலாறு. பிரித்தானிய ஆட்சிக்கு துணைபோன பல

பத்தாயிரக்கணக்கான பாதந்தாங்கிகள் இருந்தனர். அவர்களைப் பற்றிய வரலாற்று ஆய்வுகள் சரித்திரப் புத்தகங்களில் இருக்கின்றன. ஆனால் மக்களின் மனங்களிலில்லை. அரசியல் இயக்கங்களிடையே நடைபெறும் விவாதங்களில் இல்லை. சுதந்திரகாலத்து வரலாற்றில் விடுபட்டவைதான் அதிகமானது என்ற வரலாற்று உணர்வுடன் இந்திய முற்போக்குவாதிகள் விடுபட்டனவற்றையும் மறக்கப்பட்டனவற்றையும் ஆராய்ந்து வருகிறார்கள். அவற்றை நூல் வடிவாக்கி மக்கள் மனதினில் நினைவுகளாகப் பதியவைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மக்களின் நிகழ்கால மனப்படிமங்களை உருவாக்குவதில் கடந்தகால வரலாற்றுக்குரிய பாத்திரத்தை அவர்கள் புரிந்துள்ளார்கள். ஆனால் இலங்கையின் நிலையோ பரிதாபத்துக்குரியதாகவுள்ளது. காலனியல் கால மேட்டுக்குடியினரின் வரலாற்றையும் அவர்களின் சிந்தனை முறையையும் மக்களின் வரலாறாகவும் சிந்தனை முறையாகவும் புரிந்து கொண்டு அவற்றின் தொடர்ச்சிதான் நாம்(மக்கள்) எனக் கருதிக் கொண்டு இனவாத, இன-குழுமவாத வேள்விகள் நடத்தி இலங்கையை மனிதர் வாழமுடியாத சுடலையாகவும், மனிதம் வாழமுடியாத நரகமாகவும் மாற்றி வருகிறோம். இலங்கை மக்களின் வரலாறு எழுதப்பட வேண்டும். இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியின் மக்கள் வரலாற்றில் இடதுசாரி இயக்கங்களின் வரலாறு ஒரு பெரும் பகுதியாகும். அளவில் மட்டுமல்ல குணாம்சத்திலும்தான்.

காலனியல் எஜமானர்கள் இவ்விரு கொலைகளையும் ஊக்குவித்தனர். காலனிய எஜமானர்கள், தரகு ஆளுமணியினர், மதவாதிகள் ஆகிய அனைவருமாகச் சேர்ந்து, தனக்கோர் முற்போக்குத் தேசிய வாரிசில்லா (ஜனநாயகத் தேசியத்தையும், தேசிய ஜனநாயக்கத்தையும் உள்ளடக்கியதே முற்போக்குத் தேசியம்) நிலைக்கு இலங்கைத்தாயை உள்ளாக்கி விட்டார்கள். முதல்த் தலைமுறை இடதுசாரிகளின் தவறுகள் இவர்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது.

வரலாறு தேங்கி நின்றதாக வரலாறில்லை. தன்முன்னால் உள்ள தரவுகளைக் கொண்டு அது மீண்டும் கற்பமானது. மீண்டும் இரு குழந்தைகள். ஒன்று, சிங்கள பௌத்த தேசியம் என்ற அருவருப்பான பெயர் கொண்ட இன அடிப்படை மதத் தேசியமெனும் (Ethno-Religious Nationalism E-RN) துஷ்டக் குழந்தை. மற்றையது முற்போக்கு உள்ளடக்கம் கொண்ட தமிழ்த் தேசியம். இது இலங்கைத் தமிழ்த் தேசியமென இனி வரும் பகுதிகளில் குறிப்பிடப்படுகிறது. இங்கும் முற்போக்கு இலங்கைத் தமிழ்த் தேசியமே (இ.த.தே) முதலில் பிறக்கின்றது. இது தமிழரசுக் கட்சியால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றது. அதற்கு அடுத்ததாகத்தான் நவ-காலனியல் சமூகக் கட்டமைப்புக்கு ஒப்ப SWRD யால் வடிவமைக்கப்பட்ட E-RN பிறக்கின்றது.

E-RN பற்றி முதற் பகுதியில் பார்த்தோம். இப்போது இ.த.தே பற்றிப் பார்ப்போம். அப் பகுதிக்குள் செல்லுமுன்பாக தேசியத்தை முற்போக்கு பிற்போக்கென வகைப்படுத்தல் பற்றிய சிறு குறிப்பு

### 3.அ 2.1) **தேசியம், எது முற்போக்கு? எது பிற்போக்கு?**

ஒரு தேசியத்தின் தன்மையை அல்லது இயல்பைத் தீர்மானிப்பது அதன் வர்க்கத் தலைமை மட்டுமல்ல. வர்க்கத் தலைமை இரண்டாம் பட்சமானது. அத் தேசியத்தின் சித்தாந்தம் எது என்பதே அடிப்படையானது. E-RNக்கு முற்போக்குவாதிகளால் தலைமை கொடுக்க முடியுமா? இதைச் செய்யப்போய்த் தான் முதல் தலைமுறை இடதுசாரிகள் தாமும் அரசியல்ரீதியாக E-RN களாக மாறிவிட்டனர். தலிபான் தேசியத்திற்கு முற்போக்குவாதிகளால் தலைமை தாங்கமுடியுமா? இன்றைய சீனதேசியத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்க முடியுமா? இவை எல்லாம் முடியாது. ஏன்? ஒரு தேசியத்தின் உள்ளடக்கம் பிற்போக்குத்தனமானதாக இருந்தால் அத் தேசியத்துக்கு முற்போக்குவாதிகளால் தலைமை தாங்கமுடியாது. அவ்வகைத் தேசியவாதத்துடன் எந்த முற்போக்குவாதியும் எந்த இணக்கத்திற்கும் செல்ல முடியாது. அதே நேரத்தில் முற்போக்கு உள்ளடக்கம் கொண்டதோர் தேசியம் எந்த வர்க்கத்தினதும் தலைமையிலும் இருக்கலாம்.

இவ்வித முற்போக்குத் தேசியம், முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமையில் இருக்கும்போது, அம் முதளாளிவர்க்கம் தமது மக்களின் சமூக ஜனநாயகத்திற்கும், அத்தேசத்திலுள்ள பிற சிறுபான்மை இன-குழுமங்களின் தேசிய ஜனநாயகத்திற்கும் எதிராகச் செயற்படுமானால் அது உழைக்கும் வர்க்கத் தேசியத்துடன் பகைமையுறவைக் கடைப்பிடிக்கும் முதலாளித்துவத் தேசியமாகின்றது. அவ்விதமில்லாத நிலையில் அது உழைக்கும் மக்களுடன் நட்புறவு கொண்ட முதலாளித்துவத் தேசியமாகின்றது.

இவ்வித முற்போக்குத் தேசியம் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் இருக்குமானால், அது முரணில்லாத் தேசியமாகின்றது. அதுதான் உழைக்கும் மக்களின் தேசியமாகின்றது.

### 3.ஆ) **குற்றுயிராக்கப்பட்ட இலங்கைத் தமிழ்த் தேசியம். (தமிழ்த் தேசியத்தின் இரண்டாவது அத்தியாய நிகழ்வுகளில் சில)**

இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கம் வட்டுக்கோட்டை மாநாடு (வ.மா) வரை வடக்கு-கிழக்குத் தமிழ் ஆளும் வர்க்கங்களின் குறிப்பாக, யாழ் மேட்டுக்குடிகளின் தலைமையிலேயே இருந்தது. இவ் வர்க்கத்தின் பிற்போக்குக் கூறுகள் யாவரும் அறிந்ததே. இருந்துங்கூட அது முற்போக்கு உள்ளடக்கம் கொண்டதோர் முதலாளித்துவத் தேசியமாகவே இருந்தது. உலகளவில்

அது தமிழன் என்ற இன-மொழிவழிக்குழுமம் பற்றிப் பேசினாலும், சொந்த நாட்டின் வேலைத்திட்டத்தில் அது இன-குழும அடிப்படை இல்லாததாகவே இருந்தது.

அதேநேரத்தில், வட்டுக்கோட்டை மாநாட்டுக்குப் பின்னர் தோன்றிய 'தமிழீழத் தேசியத்தின் (த.தே)' தலைமை, அதன் ஆரம்ப காலங்களில் ஆளும் வர்க்கமல்லாத நடுத்தர வர்க்கத்தின், அதிலும் குறிப்பாக உற்பத்தி நடவடிக்கைகள் எதிலுமே ஈடுபட்டறியாத, எவரையும் சுரண்டியோ, சூறையாடியோ அறியாத இளைஞர்களின் கைகளிலேயே இருந்தது. இருந்தும், மேட்டுக்குடியினரின் தலைமையிலிருந்த முன்னையதை முற்போக்குத் தேசியமென்றும் பின்னயதை பிற்போக்குத் தேசியமென்றுமே இங்கு கூறுகிறோம். ஏன்?

### 3.ஆ.1) **இலங்கைத் தமிழ் தேசியத்தின் உள்ளடக்கம்**

வட்டுக்கோட்டை மாநாடு வரையான தமிழ்த் தேசியத்தின் முற்போக்கு உள்ளடக்கங்கள்:

- இலங்கையில் வாழும் அனைத்துத் தமிழ் பேசும் மக்களினதும் தேசிய ஜனநாயக உரிமைள் பற்றிப் பேசும் தேசியம்.
- மத சார்பின்மைக் கோட்பாட்டை தனது சித்தாந்த அடிப்படையாகக் கொண்டதோர் தேசியம்.
- இனக் குழும-Ethinic based- அடிப்படையில்லாத் தேசியம்.
- தாய் மொழியை மாத்திரமே அடிப்படை இணைப்புக் காரணியாகக் கொண்டதோர் தேசியம்.
- இலங்கையின் இறைமைக்கும், ஒன்றிணைவுக்கும் (Intergration) எந்தத் தீங்கும் விளைவிக்காத தேசியம்.
- நிலவும் ஜனநாயகக் கட்டமைப்புக்குள்ளேயே பிரச்சனையைத் தீர்க்கக்கூடிய வேலைத்திட்டத்தை முன்வைத்த தேசியம்.

அதன் பிற்போக்கு உள்ளடக்கங்கள் :

- மேற்கு முகாமிற்கு ஆதரவான தேசியம்
- சாதிய ஒடுக்குமுறையாளர்களின் தேசியம்.
- சமூக ஜனநாயகத்தை மறுக்கும் தேசியம்.

இவைதான் இலங்கைத் தமிழ் தேசியத்தின் முற்போக்கு மற்றும் பிற்போக்கு உள்ளடக்கங்களாகும். பிற்போக்கு உள்ளடக்கங்கள் மூன்றும் அதற்குத் தலைமை தாங்கியவர்களின் வர்க்கச் சுபாவங்களாகும். இவை அனைத்தினதும் சராசரி, இலங்கைத் தமிழ் தேசிய இயக்கத்திற்கு முற்போக்குத் தன்மையை வழங்குவதாக இருந்தது. இதில் பிரதானமானது இன-குழும சார்பின்மையும், மதச் சார்பின்மையுமாகும்.

### 3.ஆ.2.) **தலைமை வர்க்கத்தின் வகிபாகம்**

வட்டுக்கோட்டை மாநாட்டுடன் உள்ளடக்கம் மாற்றமுறுகிறது. இது எவ்விதமென்பதை ஆராயமுன்பு அக் காலம்வரை இலங்கைத் தமிழ் தேசியத்தின் தலைவர்களின் அரசியல் பாத்திரம் எவ்விதமிருந்தது என்ற கேள்விக்குள் செல்வோம். இலங்கைத் தமிழ் தேசியத்தின் ஆரம்ப காலத்தில் இருந்து வட்டுகோட்டை மாநாடு வரை, -சுமார் முப்பது வருடங்கள்- தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைமை ஒரே அணியிடமே - தமிழரசுக் கட்சி - இருந்துள்ளது. இதனால் 30 வருட நிலமையைப் புரிந்து கொள்வதில் அவ்வளவு வில்லங்கமிருக்காது.

இக் கேள்வியை நாம் இரு தலைப்புகளில் அணுக வேண்டியுள்ளது.

ஒன்று தமிழ் பேசும் மக்களின் தேசிய உரிமை தொடர்பாக, இரண்டாவது முழு இலங்கையின் சமூகப் பொருளாதாரக் கட்டுமானம் தொடர்பாக.

தேசிய உரிமை தொடர்பான விடயத்தில் இவர்கள் இதய சுத்தியுடன் நடந்து கொள்ளவில்லை. தமது வர்க்கத் தேவைகளை நிறைவு செய்வதற்கு அவசியமான பாராளுமன்ற ஆசனங்களுக்கும், தமிழ் பகுதியின் அரசியல் அதிகாரத்துக்குமே முகியத்துவம் கொடுத்தனர். இதனால் தேசிய உரிமைக்கான போராட்டங்களையும், எழுச்சிகளையும், சிங்கள ஆளும் வர்க்கங்களுடன் பண்டமாற்றுச் சரக்காக பயன்படுத்தும் அரசியல் வியாபாரிகளாகவே நடந்துள்ளனர். இது ஏற்கனவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. மீண்டுமோர் விளக்கம் தேவையில்லை. ஆனால் இவர்கள் பின்பற்றிய கோட்பாடுகள் எவையென்பதை தொகுப்போம்.

முழு இலங்கையின் சமூகப் பொருளாதாரக் கட்டுமானம் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் சொல்லொன்றும் செயலொன்றுமாக இருந்துள்ளனர். தமிழ் மக்களுடன் பேசும்போது, "எமது கவனம் எல்லாம் தமிழ் மக்களின் நலன் மீதுதான், இலங்கை நலன் என்பதெல்லாம் அவற்றிற்கு அடுத்ததாகும்." இது மக்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் தமது வர்க்கத்துக்குள் பேசும்போது, "எமது கவனமெல்லாம் இலங்கை

நலன் மீதுதான், தமிழ் மக்கள் நலன் என்பதெல்லாம் அதற்குப் பிறகுதான்.'' என்பதைத்தான் அவர்கள் கடைப்பிடித்தார்கள். இவ்வித இரட்டைத் தன்மையுடனேயே அவர்கள் நடந்துகொண்டனர். மக்களுக்கு கூறும்போது 'இலங்கை நலன்' என்பது சிங்களவரைக் குறிக்கும் படியாகவே இவர்களின் பேச்சுக்கள் அனைத்தும் அமையும். இது தமிழ் மக்களுக்கு சிங்கள மக்கள் மீதான வெறுப்பை வளர்ப்பதாக அமையும். தமக்குள் பேசிக்கொள்ளும்போது, இலங்கை நலன் என்பது 'சிங்கள ஆளும் வர்க்கக் கட்டுமானத்தையும் அதன் அரசியல் கட்டுமானத்தை'யுமே குறிக்கும். இது தமது வர்க்க உறுப்பினர்களிடையே சிங்கள ஆளும் வர்க்கத்தின் மீது ஒரு அன்பையும் பணிவையும் வளர்ப்பதாகவே அமைந்திருந்தது. இலங்கையின் சமூக உருவாக்கம் தொடர்பான அவர்களின் கொள்கை சேர் பொன் இராமநாதனின் கொள்கையைப் பின்பற்றுவதாகவே இருந்தது. இதனால் இவர்கள் பிரித்தானிய காலனியல் எஜமானனுக்கு சேவைசெய்வதையும், அதன் சிங்கள முகவர்களுக்கு -UNP- உறுதுணையாக இருப்பதையுமே தமது வர்க்கக் கடமையாகக் கொண்டிருந்தனர். இதற்காக தமிழ்த் தேசிய நலன்களை எந்தத் தயக்கமுமின்றி அவ்வப்போ அடகுவைத்தும் வந்தனர்.

இதன் மூலம் வர்க்க நலன்களுக்கு தமிழர் நலன்கள் கீழ்மைப்படுத்தப்பட்டன (subordinated). எது உலகெங்கும் நடக்கிறதோ அது இங்கும் நடந்தது. அனைத்துச் சுரண்டும் வர்க்கங்களாலும் உரத்துக் கூச்சலிடப்படும் தேசிய நலன் என்பது என்றுமே வர்க்க நலனுக்கு கீழ்மைப்படுத்தப்பட்டதுதான் என்ற யதார்த்தத்தை, என்ற மாறாச் சமூகவிதியையே இவர்களும் பின்பற்றினார்கள்.

## 3.இ) **அகச்சிதைவுத் தமிழீழத் தேசியம்**
**(தமிழ்த் தேசியத்தின் மூன்றாவது அத்தியாய நிகழ்வுகளில் சில)**

### 3.இ 1) **அகச்சிதைவுத் தேசியம்**

தமிழீழத் தேசியம் எந்த மக்களின் தேசியமென்பதற்கும், அதன் வரலாற்றுத்தோற்றம் எப்போதென்பதற்கும் திட்டவட்டமான இறுக்கமான (rigid) வரையறை எதுவுமேயில்லை. தமிழ் பேசும் மக்களின் தேசியத்திற்கு வரையறைகள் இருந்தன. அவசியமான வரையறை, அது தோற்றம்பெற்ற வரலாற்றுக் காலகட்டத்தைப் பற்றியதாகும். காலனியலுக்குப் பின்பான காலகட்டமே 'தமிழ் பேசும் மக்கள் தேசியத்தின் தோற்றம் பற்றிய கால வரையறையாகும். இது எந்தக் குழப்பமுமில்லாத வரையறையாகும். தமிழ் பேசும் மக்களில் எவரையும் புறந்தள்ளி வைக்காத வரையறையாகும்.

கறுப்பர்கள் உள்ளிட்ட அனைவரையும் அமெரிக்கர்கள் ஆக்கிய வரையறைபோல, பாரம்பரிய மக்கள், காலனியல் கால ஆட்சியின் போது

வந்தேறிய குடிகள் உள்ளிட்ட அனைவரையும் பிரேசிலியர்கள் ஆக்கிய வரையறைபோல, பல்வேறு ஆபிரிக்க குலங்கள் காலனியல் வெள்ளையர்கள் உள்ளிட்ட அனைவரையும் தென்-ஆபிரிக்கர்கள் ஆக்கிய வரையறைபோல, தமிழ் பேசும் மக்கள் தேசியத்தின் வரையறையும் அமைந்திருந்தது. இத் தேசியத்தில் தமிழ் பேசும் மக்களிடையேயான ஒற்றுமை அகச்சிதைவுற இடமேயிருக்கவில்லை.

ஜனநாயக்கட்சிக்கான நிதி சேர்க்கும் நிகழ்ச்சியில் அமெரிக்க ஜனாதிபதி திரு ஒபாமா கூறிய சில வார்த்தைகள்: “எம்மில் அநேகமானோர் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்தவர்களாகும், அல்லது எமது பெற்றோர்களோ, இல்லையேல் எமது தாத்தா பாட்டியோ இல்லையேல் எமது கொள்ளுத் தாத்தா பாட்டியோ எங்கெங்கோவிருந்து வந்தவர்கள்தான். இவ்விதம் வந்தவர்கள் குறிப்பிட்டதொரு சிந்தனையால் கவரப்பட்டு தூண்டலுறுகிறார்கள் அந்த சிந்தனைதான் அமெரிக்கா”. (The Hindu)

ஆனால் வட்டுக்கோட்டையோ தமிழ் பேசும் மக்கள் என்ற வரையறையை இல்லை என்றாக்கியது. ‘இலங்கையின் பாரம்பரிய தமிழர்கள்’ ‘அந்நியர் வரமுன்னர் இருந்த மன்னர் ஆட்சிகள்’ ‘பிரித்தானியர் இலங்கையில் ஒற்றை ஆட்சியை ஏற்படுத்த முன்னர் இருந்த ஆட்சி எல்லைகள்’ ‘சோழமரபினர், ‘ஆண்டபரம்பரையினர்’ எனப் பல வரயறைகள் முன்வைக்கப்பட்டன. இவையனைத்துமே மகாவம்சம் போல் புனையப்பட்ட கட்டுக்கதைகளாக இல்லாவிட்டாலும் திரிக்கப்பட்ட, கத்தரித்து ஒட்டப்பட்ட உண்மைகளும் புனைவுகளுமாகும். தேசியத்தின் தோற்றக்காலத்தைப் பற்றிய வரையறைகளை உருவாக்கிக் கொள்வதற்கு அந்த வரலாறுகளைப் பற்றிய விவாதங்கள் வேண்டாம். மானுடவியல் பற்றிய கல்விக்கும், காலனிக்கு முன்பான பொருளாதாரக் கட்டுமானங்களைப் பற்றிய கல்விக்கும் இவை ஒரு விவாதப் பொருளாக இருக்கட்டும்.

### 3.இ 2) **நேற்றைய.. நேற்றைய.. நேற்றைய எங்குதான் முடியுமோ**!

இவையெல்லாமே உண்மையென்று வைத்துக் கொண்டு தமிழ்த் தேசியத்தை தீர்மானிக்கும் பணியில் இறங்குவோம். இவை உண்மை என்று ஏற்றுக் கொண்ட அக்கணமே, பின்வரும் குழப்பங்கள் எகிறி நிற்கின்றன.

குறுநில மன்னராட்சிப் பாரம்பரியம் எதுவுமேயில்லாது, இலங்கையில் தொடர்ச்சியாக 150 வருடகாலம் வாழ்ந்த பாரம்பரியம் கூட இல்லாத, இந்திய தேசவிஸ்தரிப்பாளர்களின் ஐந்தாம் படையென முத்திரை குத்தப்பட்டவர்களுமான மலையகத் தமிழ் மக்களின் நிலையென்ன?

அரேபிய மொழியில் இருந்து கடன்வாங்கிய சில சொற்களைச் சேர்த்து தமிழையே தமது பிரதான மொழியாக பயன்படுத்திவருபவர்களும், எட்டாம் நூற்றாண்டுக்கும் பதினைந்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்து அரேபிய வர்த்தகர்களின் வம்சாவழியினராக இருந்து வருபவர்களும், எதுவித மன்னர் பரம்பரைப் பாரம்பரியமும் அற்றவர்களுமான முஸ்லீம் மக்களின் (மூர்கள்) நிலையென்ன? போர்த்துக்கீய காலனியல் கால ஆதிக்கத்தின் போது போர்த்துக்கீய-அரேபிய வர்த்தகப் போட்டியின் காரணத்தால் கரையோரப் பகுதிகளில் இருந்த முஸ்லீம் மக்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இதனால் இவர்களில் அநேகர் மத்திய மலைநாட்டை நோக்கி இடம் பெயர்ந்தனர். இது இலங்கையிலும் ஒரு தொடர்ச்சியான நிலப் பாரம்பரியமில்லாத நிலைக்கு இவர்களை உள்ளாக்கியது. மலைப்பகுதியிலும், தென்பகுதிக் கரையோரங்களிலும் உள்ள முஸ்லீம் மக்கள் சிங்கள மொழியையும் தமது பிரதான மொழியாகப் பயன்படுத்துகிறார்கள். இதனால் தமிழீழத் தேசியத்தின் பார்வையில் இவர்கள் 'தீட்டுப்பட்டவர்களாகிறார்கள்.' இந்த முஸ்லீம் மக்களும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் 1987 இந்திய-ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தை முஸ்லீம் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் கணக்கில் கொள்ளவேண்டும்.

என்றுமே வடக்கின் ஆட்சிக்கு உட்பட்டிராத கிழக்கு வடக்கையிட்டும், தமிழ்த் தூய்மையும் பெரும் புகழுக்குரிய பாரம்பரியமும் மிக்கதாகத் தன்னைக் கருதிக்கொள்ளும் வடக்கு, கிழக்கையிட்டும் (மூன்று மக்களும் கலந்து வாழ்வதால் 'தீட்டுப்பட்டிருக்கும்' - தமிழீழ நோக்கில்) சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விட்டது. இந்த பரஸ்பர சந்தேகத்தின் பின்விளைவுகள் என்னவாயிற்று என்பது சகலரும் அறிந்ததே. புலியையும் இரு கூறாகப் பிளந்தது.

பிரித்தானிய காலனியல் ஆட்சியாளர்கள் இலங்கையை ஒன்றிணைக்கும்வரை, தனியரசாட்சியாக இருந்து வெள்ளையரோடு போராடிய வீரமிகு வன்னியர்கள் ஒதுங்கிப்போக அதிக நாட்கள் எடுக்காது.

தனியான ஆட்சிகள் நடத்திவந்த முக்குவகுலத்தோர் ஒதுங்கிப்போக இன்னும் எத்தனை நாட்களோ? கிழக்கு மாகாணத்தில் முக்குவருக்கென்று தனித் தேசவழமையே உண்டு. ஊர்காவற்துறை கடற்கோட்டை மன்னன் ஒரு முக்குவ குலத்தோன். மட்டக்களப்பில் மேலாண்மை நிலையிலிருக்கும் முக்குவர் யாழ்ப்பாணத்தில் கீழ் சாதியினராகவே கருதப்படுகின்றனர்.

'செங்கொடி' பத்திரிகை ஆசிரியராகவிருந்த எம்.கே.அந்தனிசில், செங்கொடிச் சங்கத்தின் வீழ்ச்சிக்குப் பின்னால், கடற்கோட்டை மன்னன் பற்றிய ஆய்வுநூலொன்று எழுதி வெளியிட்டார். முக்குவரொரு சாதிப்பிரிவல்ல

அவர்களொரு குலமென்பதை நிருபிப்பதே இந்நூலின் நோக்கமாகவிருந்தது. மிகப் புகழ்பெற்ற "வத்திக்கன் போப் முதல் வடக்கன் பாதிரிவரை" எனும் நூலை எழுதிப் புகழ் பெற்றவராகும்.

யாழ்பட்டின இராச்சியத்தின் ஆளும் குடிகளான வெள்ளாளர்களினதும் முதலியார்களினதும் அடிமை-குடிமைகளாக நடத்தப்பட்ட 'தீண்டப்படாதவர்கள் என ஒதுக்கிவைக்கப்பட்ட மக்களை, 'ஆண்டபரம்பரை ஆளநினைப்பது தவறா?' என்ற முழக்கம் இன்றுங்கூட அச்சுறுத்திக் கொண்டேயிருக்கின்றது. அவர்கள் இன்றுவரை தமிழீழ உள்வட்டத்துள் வரவில்லை. இவர்களின் நிலையென்ன?

கிறிஸ்துவர்களை எடுத்துக் கொள்வோம். இவர்கள் ஆக்கிரமிப்பு நோக்கங்கொண்ட காலனியல் வாதிகளால் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள்தான். இந்த மதமாற்றம் காலனியல் வாதிகளுக்கு அன்று பல வகையிலும் உதவியும் இருந்தது. இருந்தும் இவை சகலதும் இறந்தகாலங்கள். காலனியல்வாதிகளின் குற்றங்களுக்கும், மதம் மாறியோர்களின் மூதாதையோரின் ஒரு பகுதியினர் செய்த குற்றங்களுக்கும், இன்றைய கிறிஸ்தவர்கள் அனைவரும் பொறுப்பல்ல. யாழ்ப்பாண கடைசி மன்னன் சங்கிலியன் மன்னாரிலிருந்து பல நூற்றுக் கணக்கான கிறிஸ்தவர்களைச் சிறை பிடித்துக் கொண்டுவந்ததாகவும் வரலாற்றுத் தகவலுண்டு. அன்றைய சமூக உருவாக்கத்தின் விளிம்பு நிலையோர், அன்றைய சமூக அடக்குமுறையிலிருந்து தற்பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையாக மதம்மாறிய சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

ஆக்கிரமிப்பாளர்களின் துணைப்படையாக வந்திருந்த தேவாலயங்கள் இம் மதமாற்றத்தை தமது எஜமானர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதற்கான காரணம் அக்காலகட்ட மையப்பகுதி மக்களே. ஆகையினால், இவ்விதம் கடத்திவரப்பட்டவர்கள் மக்களின் எந்தப்பகுதியினர் என்பது ஆராயப்படவேண்டும். சிறைப்பிடிக்கப்பட்டது இந்த வளிம்பு நிலையோராக இருந்தால், அது சங்கிலி மன்னனால் நடத்தப்பட்ட ஒரு வர்க்க ஒடுக்குமுறையாகவே கருதப்படவேண்டும். அவ்விதமில்லாதிருந்தால் அதைச் சுதேசிய மன்னர்களால் ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தின் ஒரு பகுதியாகவே கருதவேண்டும். தேவாலயங்கள் இன்னமும் சங்கிலி மன்னனைத் தமது எதிரியாகக் கருதினால் அது தவறாகும். புலிகள், 'சங்கிலியன் படை' என்றோர் துணைப்படையை அமைத்தபோது அது கிறிஸ்தவர்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தியது. யாழ்ப்பாணத்தை விட்டு முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டபின்னர் தாமும் வெளியேற்றப்படுவோமோ என்ற அச்சமே அதற்கான காரணமாக இருந்தது.

இன்னும் வெளிப்படையாகக் கூறினால், இது வெள்ளாள மேட்டுக்குடி

மையத் தேசியவாதமேயாகும். இது பற்றி பிறிதோர் இடத்தில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது.

தமிழீழத் தேசியத்தின் தோற்றம் தொடர்பான காலவரையறைதான் இங்கு பிரச்சனை. தமிழ்த் தேசியத்தின் தோற்றத்தை, பிரித்தானிய காலனித்துவ காலத்திற்கு பின்பான தமிழ் மக்கள் என்றோர் கால வரையறை கொண்டு கணிக்கும்போது முரண் தன்மை பெற்ற இவ்வித பிரச்சனைகள் எதுவுமே இருக்கவில்லை. மாறாகத் தமிழ் பேசும் மக்கள் என்றோர் ஐக்கியம் உருவாகிவந்தது. அது ஒற்றுமைப்படுத்தும் தேசியமாக (Unifying Nationalism) இருந்தது. ஆனால் தமிழீழத் தேசியமோ தனது சொந்த மக்களையே பிரித்து வைக்கும் தேசியமாகவுள்ளது. (Divisive Nationalism).

### 3.இ.3) **அங்கீகரிக்கப்பட வேண்டிய சிங்கள குடியேற்றங்கள் எவை**?

அமையப்போகும் தமிழீழத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள குடியேற்றங்களையிட்டு என்ன செய்வது என்றோர் கேள்வி எழுந்தது. இதுபற்றிய பகிரங்க விவாதங்களும் நடைபெற்றன. ஸ்ரீலங்கா அரசால், 1948க்கு பின்னர் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களில் உள்ள சிங்கள விவசாயிகள் வெளியேறவேண்டும் என்பதே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவாக இருந்தது. இம் முடிவு சரியா தப்பாவென்பது வேறுவிடயம். ஆனால் தேசியத்தின் தோற்றத்திற்கு ஒரு காலவரையறையுண்டு என்பதை இம்முடிவு ஏற்றுக்கொள்வதுடன், அந்தக் காலவரையறை இலங்கையின் முதலாளித்துவ உருவாக்கத்திற்குப் பின்பானதாகத்தான் இருக்கவேண்டுமென்பதையும் ஏற்றுகொள்கிறது. இது இலங்கை முழுவதற்கும் பொதுவானதாகவுமாகிறது.

எதற்காக 1948 தேர்ந்தெடுக்கப்பட்டது? இரு காரணங்கள் ஊகிக்கக் கூடியதாகவுள்ளன.

ஒன்று 1948ற்கு பின்னர் நடந்ததுதான் பாரம்பரிய பிரதேச ஆக்கிரமிப்பென்றால் அதற்கு முன்னர் நடந்த குடிப்பரம்பல்கள் அனைத்தும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு அவை அதிகாரபூர்வமானவையாகின்றன.

மலையக மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டது 1949 இல்தான். 48-ஐத் தெரிவு செய்ததால் இச்சட்டம் செல்லாததாகிவிடுகிறது. இதனால் மலையகத் தமிழர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகளாகிவிடுவார்கள். இதுதான் காரணமாக இருந்தால் வரவேற்கக் கூடியது.

இரண்டாவது காரணம் இந்த 48தான் தமிழ் மற்றும் சிங்கள மேட்டுக்குடிகள்

இணைந்து அமைத்த இலங்கைத்தேசியம் குற்றுயிராக்கப்பட்ட காலமாகும். இதுதான் தமிழ் பேசும் மக்களின் தேசியம் போர்முழக்கத்துடன் களம் இறங்கிய காலமாகும். சமஷ்டிக் கோரிக்கை முழங்கப்பட்ட காலமாகும்.

இதற்கு முன்னால் ஏராளமான தமிழர்கள் கொழும்பில் குடியேறியிருந்தனர். இவர்கள் யாழ்ப்பாணத் தொடர்புகள் எதுவுமேயற்ற தமிழர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள், இந்திய வம்சாவழித் தமிழர்கள், முஸ்லீம் தமிழர்களென நான்கு வகையாகப் பிரிக்கலாம். யாழ்ப்பாணத் தொடர்புகள் எதுவுமேயற்றவர்கள் நீர்கொழும்புத் தமிழர்களாக இருக்கலாம் அல்லது அநுராதபுர நாகரிகத்தின் சிதைவுக்குப் பின்னர் இலங்கையெங்கும் சிதறிக்குடியேறியவர்களாக இருக்கலாம்.

யாழ்ப்பாணத்தவர்களும் முன்னாள் இந்தியவம்சாவழித் தமிழர்களும் ஐரோப்பிய காலனியல்வாதிகளின் ஆதரவுடன் காலத்துக்குக் காலம் குடியேறிய மேட்டுக் குடியினரேயாகும். பின்னைய குடியேற்றங்கள் இயல்பானவையல்ல, அந்நியர்களின் நலங்கருதி, அவர்களின் உதவியுடன் நடைபெற்றவையேயாகும்.

1949-ன் பின்னர், சமஷ்டி கேட்டதன் பின்னர், மேற்கு மாகாணத்தில் குடியேறுவது எந்தத் தமிழர்களுக்கும் அவ்வளவு சுலபமானதாக இருக்காது என்பது தமிழரசுக் கட்சிக்குத் தெரியும். 1956, 1977, 1983 இனவன்செயல்கள் அதை நிரூபித்தும் விட்டன. இந்த நிலையில்தான் 48என்ற காலவரையறை வகுக்கப்படுகிறது. இது கொழும்பு மேட்டுக்குடித் தமிழர்கள் தொடர்ந்தும் கொழும்பில் குடியிருக்கும் உரிமையைப் பாதுகாக்க உதவும். யாழ் மேட்டுக்குடியினரின் அப்புக்காத்துப் புத்தி (Advocate mind) மிக அருமையாகச் செயல்பட்டிருக்கிறது.

ஆனால் யாழ்ப்பாணத்துத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும் கொழும்பில் குடியேறும் நிகழ்ச்சி 1949-ன் பின்னரும் இன்றுவரை நடைபெற்றுத்தான் வருகிறது. அரச ஊக்குவிப்புகளோ, கட்டாயப்படுத்தல்களோ எதுவுமேயின்றி இயல்பாகவே நடந்துவருகின்றது.

எப்படியோ யாழ்பட்டினக் காலத்துக்கும், ஆரிய சக்கரவர்த்திகளின் காலத்துக்கும், சோழராச்சியக் காலத்துக்கும் சென்று இனக்குழும-தேசியவாதிகளாக நடந்து கொள்ளாமல், கொள்கையளவிலாவது இந்த விடயத்தில் நல்லதோர் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளாக தமிழ் அமைப்புகள் அனைத்தும் நடந்துகொண்டது நல்லது. இந்த நல்லது தொடரும் என எதிர்பார்ப்போம்.

## 3. இ 4) **ஏகாதிபத்திய சார்பு வம்சாவழித் தமிழ்த் தேசியம்**

1980-களின் முற்பகுதியில் இருந்து 1990-களின் நடுப்பகுதிவரை வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களிடையே தமிழ் மேட்டுக்குடித் தலைமை சிறகுடைந்த நிலையிலேயே காணப்பட்டது. 70-களின் பிற்பகுதியில் இருந்து 80-களின் முற்பகுதிவரையான காலப்பகுதி, தரகு முதலாளியத் தேசியவாதிகளின் சந்தர்ப்பவாத அரசியலின் சரணடைவுத் தன்மைக்கும், காட்டிக் கொடுப்புகளுக்கும் எதிராக சிறு முதலாளித்துவத் தமிழ்த் தேசியவாதிகளின் அரசியற் போராட்டக் காலகட்டமாக இருந்தது. இப் போராட்டத்தில் பின்னவர்கள் வெற்றிபெறவில்லை, ஆனால் தரகு முதலாளித்துவத் தமிழ் தேசியத்தலைமை தோல்வி கண்டு, சிறகுடைந்த பறவையானது. இந்நிலமை சுமார் பத்துவருடங்களுக்கு நீடித்தது. ஆனால் 90களின் நடுப்பகுதியில் இது மீண்டும் உயிர் பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியாகவல்ல (த.வி.கூ), புலிகளாக அது அரசியல் அவதாரம் கொண்டது.

த.வி.கூ - தமது வர்க்க அதிகாரத்துக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சார்ந்திருந்தது.

புலிகள் - தமது சொந்த இராணுவத்தைச் சார்ந்திருந்தனர்.

த.வி.கூ - மேற்குலக சார்புடைய தரகு முதலாளியமாக இருந்தது.

புலிகள் - அதிகாரத்துக்கு வந்ததன் பின் புலியும் அதேதான்.

த.வி.கூ - அடையாள அரசியலையே முன்நிலைப் படுத்தினர்.

புலிகள் - அ.ஃ.தே.

த.வி.கூ - வட கிழக்கில் முதலாளியப் பண்ட உற்பத்தியை ஊக்குவிக்கவில்லை. நிலமானிய உறவுகளையே ஊக்குவித்தார்கள். அதுவே அவர்களின் உள்ளூர் அதிகாரத்துக்குத் துணைநின்றது. கல்விசார் வர்க்கமாக இருப்பதுவே அவர்களின் அடிப்படைக் குறிக்கோளாக இருந்தது. இக்குறிக்கோளின் வெற்றிகளே அவர்களின் சமூகப் பாதுகாப்பாகவும் வர்க்கமேல் நிலையாக்கத்திற்கான உத்தரவாதமாகவும் இருந்தது.

புலிகளும் முதலாளிய உற்பத்திகளை ஊக்குவிக்கவில்லை ஆனால் தமது உள்ளூர் அதிகாரப் பிரயோகத்திற்கு இராணுவ எதேச்சதிகாரத்திலேயே தங்கி இருந்தார்கள். இராணுவ அதிகாரத்துவக் கட்டுமானமே இவர்களின் குறிக்கோளாக இருந்தது. இக்குறிக்கோளின் வெற்றிகளே அவர்களின் சமூகப் பாதுகாப்பாகவும் வர்க்கமேல் நிலையாக்கத்திற்கான உத்தரவாதமாகவும்

இருந்தது.

இருவரினதும் நேசத்துக்குரிய ஸ்ரீலங்கா நண்பன் இலங்கையின் பாரம்பரிய தரகு முதலாளியக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியேயாகும். ஆனால் 2005 ஜனாதிபதித் தேர்தலில் புலிகள் எதற்காக UNP தோற்கக் கூடிய முறையில் நடந்து கொண்டார்களென்பது இன்றுவரை பலருக்குப் புதிராகவேயுள்ளது. தன்னை மையமாகக் கொண்ட இராணுவ அதிகாரத்துவ கட்டுமானம் என்ற தனது குறிக்கோளுக்கு நெருக்கடி ஏற்படலாமென அஞ்சிய புலிகளின் தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தை தொடர்வதை விரும்பாததே இதற்கான காரணமாக இருக்கலாம். மேற்குலகம், குறிப்பாக அமெரிக்கா, பிரபாகரன்மீது அவநம்பிக்கை கொண்டதற்கும், அவரின் தலைமை நிலைக்கெதிராக ஒரு சதியை நடத்தியதற்கும் இதுவொரு காரணமாகவிருக்கலாம்.

புலிகளின் வர்க்க நிலைப்பாடு பற்றி மேலும் புரிந்து கொள்வதற்காக, “Sri Lankan peace talks the LTTE bows to international capital” எனும் தலைப்பிட்டு, 21 செப்ரம்பர் 2001-இல் Socialist Equality Party (SEP)யின் இணையதளமான World Socialist Web Site wsws.org இன் ஆசிரியர் குழுவால் வெளியிடப்பட்ட கட்டுரையின் சில பகுதிகள்:

திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை நடந்த ஸ்ரீலங்காப் பேச்சுவார்த்தைகள், பூர்ஷ்வா தேசியவாதத்தின் வங்குரோத்துத் தனத்தைப்பற்றி மீண்டுமொரு படிப்பினையைத் தந்துள்ளது. பேச்சுவார்த்தையை ஏற்றுக்கொள்வதானது, அரசாங்கத்தின் நிர்வாகச் செயலகத்துள்ளும், பல்தேசக் கம்பனிகளின் கூட்டமைப்புகளின் இயக்குசபை மண்டபத்துள்ளும் நுழைவதற்கான நுழைவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதாக அமைந்துள்ளது. இதன் மூலம் தமது கோணல் யுத்த புத்தியைத் தானஞ்செய்த தேசிய விடுதலை இயக்கங்களின் நீண்டவரிசையில் தாமும் இணைந்து கொள்ளப் போவதாக LTTEஉலகிற்கு அறிவித்துள்ளது...... பேச்சுவார்த்தை தொடக்க நிகழ்வின்போது, த.ஈ.வி.பு இயக்கத்தின் தலைமை உடன்படிக்கையாளரான அன்ரன் பாலசிங்கம் தனது தலைமை உரையில், தமது இயக்கம் அரசாங்கத்துடன் ஒரு பங்காளி உறவை வேண்டி நிற்கிறதெனப் பிரகடனப்படுத்தினார். இதன் மூலம் பேச்சுவார்த்தையின் தொனியென்ன என்பதை சரியாகக் குறித்துக் காட்டினார். அவர் கூறியது “ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தலைவர்கள் இத் தீவை வெற்றிகரமான புலிப் பொருளாதாரமாக (Tiger Economy) மாற்றுவதற்கான தமது அவாவை வெளிப்படுத்தினர்” மேலும் தொடர்கிறார், “நாம் அவர்களின் எதிர்பார்ப்புகளை பாராட்டுகிறோம். நாட்டின் பொருளாதார மீளமைப்புக் கடமைகளில் விடுதலைப் புலிகளாகிய எம்மை சம உரிமைப் பங்காளர்களாக தழுவியணைத்துச் செல்வதன் மூலமே இதைச் சாத்தியப் படுத்தலாம்”.

பொருளாதார அரங்கில் ‘புலிப் பொருளாதாரம்’ மிகத் துல்லியமான அர்த்தமுள்ளதொரு பதமாகும். ஓரவஞ்சனைப் போட்டிகளின் மூலம் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஆசியாவில் (சிங்கப்பூர், மலேசியா, தாய்வான்) 90களில் அமைக்கப்பட்ட கூலி மலிவுப் பொருளாதார மேடைகளையே இவை குறிக்கின்றன. IMF, உலக வங்கி, வர்த்தக முதலாளிகள் ஆகியோர் நாட்டை மேலும் போட்டித் தன்மை மிக்கதாக மாற்றும் நோக்கத்துக்காக, சமாதானத்தின் அடுத்த கட்டமாக ஸ்ரீலங்காவில் தனியார் மயமாக்கல், அரச செலவுகளை வெட்டிக் குறைத்தல் ஆகியன தொடர்பாக என்ன செய்யலாமென விரிவான திட்டங்களை வகுத்து வைத்துள்ளார்கள்.

அரசு மட்டத் தலைமைப் பேச்சாளர் பீரிஸ் கூறியது “பல்வேறு விதமான திட்டங்களையும் செயல்படுத்தத் தொடங்குவது மிக எளிமைப்படுத்தப்பட்டுள்ளது” மேலும், “நாட்டில் எந்தப் பகை முரணும் இல்லை, மாறாக உள்ளதெல்லாம் பங்காளியுறவே.” ஒழுங்குகளில் உள்ள குற்றங்குறைகளைக் களைவதற்காக, புதன்கிழமை நடத்தப்பட்ட பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது LTTE இனி என்றுமே சுதந்திரத் தமிழீழம் கேட்கப்போவதில்லையென அறிவித்தார். “LTTE தனியான அரசு என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கவில்லை”... “தாய்நாடு, சுய-நிர்ணய உரிமை ஆகிய சிந்தனைகளைக் கொண்டே இயங்குகிறோம். தாய்நாடென்பது தனியான நாடென்று அர்த்தப்படமாட்டாது. தமிழர்களும் முஸ்லீம்களும் வாழும் பிரதேசமென்றே அர்த்தப்படும். LTTE சுதந்திர அரசுக்காகப் போராடுகின்றதென்று கூறுவது பொருத்தமில்லாதவொரு விடயமாகும்.” (wsws.org/articles)

தரகு முதலாளியத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் 1977 பாரளுமன்றத் தேர்தலில் யு.என்.பி யுடன் இணைந்ததன் மூலம் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ வின் அரசியல் மூதாதையரைப் பலவீனப்படுத்தினர். அதுபோல், நேரடித் தலைவி சந்திரிகாவின் அதிகாரத்துக்கெதிரான பேச்சுவார்த்தை என்று கூறி 2002-ல் புலிகள் மீண்டும் UNPயுடன் இணைந்து கொண்டனர். ஆனால் பிரபகாரனின் தனிநபர் இராணுவ எதேச்சதிகார மோகம் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு சாதகமாக அமைந்துவிட்டது.

காலனியலுக்குப் பின்பிருந்து 2009 மே மாதம் வரையான காலம்வரை மூன்று வெவ்வேறுவகைத் தமிழ்த் தேசியங்களை இலங்கையின் தமிழ்பேசும் மக்கள் கண்டுள்ளனர். இம் மூன்றுக்கும் உரிய பொதுக் குணாம்சம் மேற்குலகு ஆதரவாகவே இருந்துள்ளது. இதனால் மேற்குலக ஆதரவுத் தமிழ்த் தேசியத்தை ஒட்டிய அச்சம் ‘அப்பே ஆண்டு’வ அரசியல் பரம்பரையினரின் உளவியல் நோயாகவே மாறியுள்ளது. இதனால் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அஞ்சுவதில் ஆச்சரியமெதுவுமில்லை.

## 3.ஈ) நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்
(Transnational Government of Tamil Eelam)
**TGTE தமிழ்த் தேசியத்தின் உத்தேச நாலாவது அத்தியாய ஆரம்ப நிகழ்வுகள்**

### ஈ.1) பெயரின் இரட்டைத் தன்மை

இலங்கைத் தமிழரின் குடிப்பரம்பல்

| | |
|---|---|
| Sri Lanka | 1,871,535 (1981) |
| Other significant populations: | |
| Canada | ~200,000 (2007) |
| United Kingdom | ~120,000 (2007) |
| India | ~100,000 (2005) |
| Germany | ~60,000 (2008) |
| France | ~50,000 (2008) |
| Switzerland | ~50,000 (2008) |
| Malaysia | ~24,436 (1970) |
| Netherlands | ~20,000 (2008) |
| Norway | ~10,000 (2000) |
| Denmark | ~9,000 (2003) |

தமிழரசுக் கட்சி, Fedaral Party எனும் இரட்டை அர்த்தப் பெயர் விளையாட்டுத்தான் இங்கும் நடைபெறுகிறது. அரசாங்கத்தில் பதிவு செய்த பெயர் - Fedaral Party (சமஸ்டிக் கட்சி), மக்களிடையே பாவனைக்கான பெயர் - தமிழரசுக் கட்சி. அதே போல்தான் இங்கும் ஆங்கிலத்தில் Transnational Government of Tamil Eelam. TGTE

இதன் அர்த்தம் எமது நோக்கம், நாடு கடந்த தமிழீழம் அல்லவென்று கூறுவதேயாகும். Government of Tamil Eelam in Exile என்றால்த் தான் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்று அர்த்தப்படும். இதை இன்னும் விரித்தால், தமிழீழத்தில் உள்ள தமிழீழ அரச இயந்திரத்தை வெளிநாடுகளிலிருந்து இயக்கும் அரசாங்கமென அர்த்தப்படும். இவ்விதமான அரசாங்கத்தை மேற்குலகம் ஏற்கமாட்டாது. அவ்வித ஒரு அரசை அமைக்கும் நோக்கம் இவர்களுக்கு (TGTE) இல்லை. அரசு என்று சொன்னாலே அதன் அச்சாணி இராணுவந்தான். ஏற்கனவே இலங்கை முழுவதும் தனக்கே சொந்தமென்று உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கு போட்டியானதோர் அரசாக இது இருக்கும். போட்டியான அரசென்றால் அது போட்டியான இராணுவந்தான். அது இவர்களின் (TGTE) நோக்கமல்ல. வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களை, சுய செயல்பாடும்,

ஸ்ரீலங்கா அரசுடன் உள்ள உறவில் ஒரு சுயாதீனத் தன்மையுமுள்ள, அரசியல்த் தன்மைகுறைவான, மேற்குலக நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவானதொரு தொண்டுநிறுவனமே (Semi-Political NGO) இந்த TGTE ஆகும். இது தமிழீழ அரசாங்கத்தின் அந்நியத் தூதுவராலயமல்ல. எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கத்துடனும் இராஜரீதியான உறவுகளை வைத்துக் கொள்ளும் உரிமை இதற்கில்லை. ஆனால் Government of Tamil Eelam in Exile க்கு அந்த உரிமையுண்டு. ஆகவே நாடு கடந்த தமிழீழம் எனும் பெயர் இதன் உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துக்காட்டும் ஒரு பெயரல்ல. ‘தமிழீழப் புலம் பெயர்ந்தோரின் உலகளாவிய அரசாங்கம்’ என்பதே உண்மையிலேயே இதன் பெயராக இருக்கமுடியும். அரசாங்கம் என்று கூறுவது மன்னிக்கக் கூடிய குற்றம். ஏனெனில் நிர்வாகமெனும் பதத்தை அரசாங்கமெனவும் குறிக்கலாம்.

எவ்விதமும் இன்னோர் அமைப்புக்கு நாம் பெயர் சூட்டமுடியாது, ஏனெனில் நாம் பிறரின் ஜனநாயகத்தை மதிக்கின்றோம். அதே நேரம், நாம் எமது ஜனநாயகத்தையும் மதிப்பதால் இனி வரும் பகுதிகளில் அதன் ஆங்கிலப் பெயரையே பயன் படுத்துகிறோம் - ஒரு சமரச உடன்பாடாக.

தற்போது தமிழ்த் தேசியத்தின் அனைத்துலக அங்கமாகத் தன்னை உருவகப்படுத்திக்கொண்டு, அமெரிக்காவின் ஆசியுடன், ஊரறிய உலகறிய அரங்கேறியுள்ள TGTEஆல் உருவாக்கப்படவுள்ள வரலாற்றை நாலாவது அத்தியாயமென அழைப்பதா அல்லது 3வது அத்தியாயத்தின் 2-ம் பாகமென அழைப்பதா என்பதுபற்றிக் கணிப்பதற்கான பருவம் வரவில்லை. 70கள் போல் இதுவும் ஒரு மாறிலிக் கட்டமாகவே இருக்கிறது. எந்த வடிவம் நிலைபெறும் என்பதைப்பற்றி முன்கூட்டியே எதுவும் கூறமுடியாதுள்ளது. இரண்டு சாத்தியப்பாடுகள் உள்ளன.

ஜனநாயகத் தேசியவாதிகளை மையமாகக் கொண்டதான வரலாறும் அமையலாம். அப்படியானால் அது நிச்சயமாகப் புதியதோர் அத்தியாயந்தான். இதுபற்றி ‘தமிழ் ஜனநாயகத் தேசியவாதிகள் ஊடாகவா?’ என்ற தலைப்பின்கீழ் கூறப்பட்டுள்ளது.

3வது அத்தியாயத்தின் கதாநாயகர்களான ஜனநாயக மறுப்புத் தேசியவாதிகள்தான் மீண்டும் அதிகாரத்துக்கு வருவார்களானால் அது புதிய அத்தியாயமாக இருக்குமா அல்லது முன்னைய அத்தியாயத்தின் 2வது பாகமாக இருக்குமா என்பது தெரியவில்லை.

தேசியத்தின் தேசிய உள்ளடக்கம் இனக்குழும தமிழீழத் தேசியமாகவும், தேசியத்தின் சமூக உள்ளடக்கம் ஜனநாயக மறுப்புத் தேசியமாகவும், இத்தேசியத்தின் தலைமையின் வர்க்கக் குணாம்சம் இராணுவ

அதிகாரத்துவமானதாகவும் இருந்தால், அத்தியாயம் மூன்று சிற்சில மாற்றங்களுடன் அப்படியே தொடரும். இன்னோர் பிரபாகரன் தோன்றுவார். ஆனால் அதற்கான சாத்தியப்பாடுகள் தெரியவில்லை. வரக்கூடாது என்பதே இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் விருப்பமாகவும் உள்ளது. மக்களின் விருப்பம் ஒரு பௌதீக சக்தியாக மாறுமானால் எது வரக்கூடாததோ அது நிச்சயம் வரமாட்டாது.

ஆனால் முன்சொன்ன மூன்று குணாம்சங்களில் இறுதியில் கூறியுள்ளதில் மட்டும் மாற்றம் ஏற்பட்டு, முன்னைய குணாம்சங்கள் இரண்டிலும் மாற்றமில்லாத தேசியவாதிகளைக் கதாநாயகர்களாகக் கொண்ட ஒரு தேசியம் தோன்றுமானால், அது மூன்றாவது அத்தியாயத்தின் இரண்டாவது பாகமாக இருக்கலாம். இந்த இரண்டாவது பாகத்தின் கதாநாயகன்தான் TGTE யாகும்.

இக் கதாநாயகர்களின் வர்க்கக் குணாம்சம் இராணுவ அதிகாரத்துவமல்ல. இராணுவ அதிகாரத்துவத்தின் மையக்கூறாக அல்லது கருவாகவிருந்த புலிகளின் தலைவர் பிரபாகரனை வீழ்த்த மேற்கொள்ளப்பட்ட சதிகளுக்கெல்லாம் காரணம் இவ் வர்க்கமேதான். பிரபாகரனை வளர்த்துவிட்டதும் இவர்கள்தான். வீழ்த்தியதும் இவர்கள்தான். தற்போது, ஒரு புறத்தில் பிரபாகரனின் உண்மை உள்ளடக்கத்தை சிதைத்து, வரலாற்றுப் பொக்கிஷமான ஒரு எதிர் மறையாசிரியனை காவிய நாயகனாக்கி வருகிறார்கள். மறுபுறம் பிரபாகரனின் புகழுக்குரிய படிமத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திவருகிறார்கள்.

தமிழீழத் தேசியத்தின் இனக்குழுமவாத தேசியத்தை இவ் வர்க்கம் உயர்த்திப் பிடித்துவருகிறதே தவிர, ‘தமிழீழம்’ என்ற அரசியல் கோரிக்கையைப் பொறுத்தவரை உறுதியின்மையையே காட்டிவந்தனர். சமஸ்டியோ அல்லது அதற்குக் குறைந்த ஏதோ ஒன்றுதான் இவர்களின் உள்ளக்கிடக்கையாக இருந்தது. ஒவ்வொரு பேச்சுவார்த்தையின் போதும் இவர்களின் கைகளே ஓங்கியிருந்தன.

இந்த வர்க்கமெது? இது தமிழீழத் தேசியத்தை எங்கு நோக்கி அழைத்துச் செல்லப் போகிறது? இதையிட்டு அதிபர் மஹிந்த ராஜபக்ஷ எதற்காக அஞ்சுகிறார்? போன்ற கேள்விகளுக்கான பதிலைப் பார்ப்போம். இம் மூன்று கேள்விகளில் முதல் கேள்விக்கான பதிலை அறுதியிட்டுச் சொல்லமுடியும். ஆனால் பின்னைய இரு கேள்விகளுக்குமான பதிலை அறுதியிட்டுக் கூறமுடியாது. இவற்றுக்கான பதில்கள் வாய்ப்புப் பார்ப்பதற்கானதோர் கருதுகோள்கள்தான்.

## ஈ.2) T G T E யின் தலைமை வர்க்கம் எது?

யுத்தம், வடக்கு, கிழக்கு மாகாண உழைக்கும் மக்களைத்தான் குறிப்பாக உடல் உழைப்பாளர்களைத்தான் மீள எழும்ப முடியாத மிகப் பெரும் பொருளாதாரப் பள்ளத்தில் தள்ளியுள்ளது. சேவை வழங்குதுறையின் கீழணியும் இவ்வித வீழ்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர். இவர்கள் அனைவரும் தமது வர்க்கநிலையிலிருந்து கீழிறக்கப்பட்டுள்ளனர். யுத்தம் முடிந்தபின்பும்கூட தமது பொருளாதாரச் செயல்பாட்டை எங்கிருந்து ஆரம்பிப்பதென்று புரியாமல் இன்னமும் தவித்து நிற்கின்றனர்.

மறுபுறத்தில், ஏற்கனவேயிருந்த மேட்டுக்குடியினரும், சேவைத்துறையினரின் கீழணி தவிர்ந்த பிறரும் அவர்கள் கனவிலும் கூட கண்டிராதளவிற்கு வர்க்கமேல்நிலையாக்கம் பெற்றுவருகிறார்கள். 1990ன் பின்னர் இவர்களில் பெரும்பான்மையினர் சினிமாவில் மட்டுமே துப்பாக்கிகளின் அவலங்களைப் பார்த்தவர்களாக உள்ளார்கள், ஆனால் துப்பாக்கிகளுக்காகத் தாராளமாக பணம் வழங்கி வந்தார்கள். யுத்தத்தின் முன்னர் இவர்கள் பொதுவாக கல்வி சார்ந்த மேட்டுக் குடியனராகவே இருந்தனர். நிர்வாகத்துறையும் பாதுகாப்புத்துறையுமே இவர்களின் பிரதான வருமானமீட்டும் துறைகளாக இருந்தன. ஆனால் இன்று தொழில் நுட்பத்துறையும், குறிப்பாகத் தகவல்த் தொழில் நுட்பத்துறையும், நிதிப் பரிபாலனத் துறையும், நிதி வர்த்தகத் துறையையும் சேர்ந்து கொண்டுள்ளனர். Real Estate துறையிலும் ஈடுபட அரம்பித்துள்ளனர். யுத்தத்தின் போது இவர்களில் ஏகப்பெரும்பான்மையினர் பணக்காரர்களாக மாத்திரமே இருந்தனர், முதலீட்டாளர்களாக இருக்கவில்லை. இவர்களின் ஜனநாயக விரோதத் தேசியத்திற்கு இதுவுமொரு காரணம். ஆனால் இவர்கள் இன்று முதலீட்டாளர்களாகவும் உருவாகி வருகிறார்கள். இதன் மூலம் சுமார் 100வருடங்களுக்கு மேலாக மிகமிக மந்தமாக நடந்து வந்த ஒரு சமூக நிகழ்வுப் போக்கு இன்று துரிதமாக நடைபெறத் தொடங்கியுள்ளது. இதுதான் அந்த வர்க்கமாகும். இவ்வர்க்கம் தமிழீழத் தேசியத்தை எங்கு நோக்கி அழைத்துச்செல்லப்போகிறது?

நிச்சயமாகத் தமிழீழத்தை நோக்கியல்ல. இராணுவ அதிகாரத்துவ வர்க்கத்தை உருவாக்குவதையும் நோக்கியல்ல. இலங்கை மக்கள் சற்று அமைதியடையலாம். அன்ரன் பாலசிங்கம் கோரியதுபோல் சமவுரிமைப்பங்கு கோராவிட்டாலும், அதை நோக்கி நகர்கிறார்கள். அன்ரன் பாலசிங்கம் கோரியதை மீண்டும் நினைவுபடுத்துவோம்

‘‘ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தலைவர்கள் இத் தீவை வெற்றிகரமான ‘புலிப் பொருளாதாரமாக’ மாற்றுவதற்கான தமது அவாவை வெளிப்படுத்தினர்’’ மேலும் தொடர்கிறார், ‘‘நாம் அவர்களின் எதிர்பார்ப்புகளை பாராட்டுகிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தை, மீளமைப்புக் கடமைகளில் விடுதலைப் புலிகளாகிய எம்மை சம உரிமைப் பங்காளர்களாக தழுவி அணைத்துச் செலவதன் மூலமே இதைச் சாத்தியப்படுத்தலாம்"

இவர்கள் இலங்கையை மறுகாலனியாக்கம் செய்வதில் ஸ்ரீலங்கா அரசின் ஜூனியர் பங்காளிகளாக மாறுவதை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியுள்ளார்கள். மஹிந்த நடத்திவரும் பொருளாதார யுத்தத்திற்கு 'அறிவையும்', முதலீட்டையும் வழங்கத் தயாராகி வருகிறார்கள். ஐரோப்பிய வங்கிகளின் ஊடாக, அந்நாடுகளின் அரசியல் பாதுகாப்புடன், தனிநபர்களாக அல்லாமல் கூட்டாக முதலீடு செய்வதற்கான ஒரு அமைப்பே TGTE ஆகும். இலங்கையில் தமது வர்க்கத்தின் பொருளாதார நலனை வளர்த்துக் கொள்ளவும், ஸ்ரீலங்கா அரசுடனான தமது பேரம் பேசும் ஆற்றலை அதிகரித்துக் கொள்ளவுமான நடவடிக்கைகளே இவர்களின் வேலைத்திட்டங்களாகும். தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால போராட்ட வடிவங்களை புலம் பெயர்ந்த நாடுகளில் இவர்கள் மேற்கொள்வார்கள். இலங்கையில் நடந்ததைப் போலன்றி இங்கு போராட்டங்கள் வெல்லும். இவ் வர்க்கங்களும் இவர்களின் படையணி வர்க்கங்களும் இலாபமடைவார்கள். உழைக்கும் மக்கள், குறிப்பாக, இலங்கையில் வாழும் தமிழ் உழைக்கும் மக்கள் நட்டமடைவார்கள். தமிழ் மக்கள்மீதான ஆயுதப் போரை நடத்துவதற்காக சில தமிழ் 'நண்பர்களை' MR தன்னுடன் வைத்திருந்தார். தற்போது பொருளாதார யுத்தத்தை நடத்துவதற்கான நண்பர்களை MR தன்னுடன் சேர்த்துக்கொள்ள உள்ளார். ஸ்ரீ லங்கா ஆளும் வர்க்கத்துக்காக இவ் நண்பர்களைத் தயாரிக்கும் வேலையை அமெரிக்கா செய்து வருகிறது. இவர்கள் MR இடம் ஒப்படைக்கப்படுவார்களா? அல்லது றணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்படுவார்களா என்பதே பதில் காணப்படவேண்டிய கேள்வியாகும். கருணாவைத் தயாரித்துக் கொடுத்தது பிரித்தானியா என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

### ஈ.3) **இதையிட்டு MR எதற்காக அஞ்சுகிறார்?**

அரசாங்கத்தில் தற்போது அமைச்சர்களாக இருக்கும் 'தமிழ் நண்பர்களை' உருவாக்கியதுபோல் இவர்களையும் மிக இலகுவாக உருவாக்கிவிடலாம் என எண்ணியிருந்தார். ஆனால் அவர்களுக்கு (TGTE) ஒரு சமூக வேர் உள்ளதாலும், இந்தியாவின் பகைமையை சம்பாதித்துக் கொள்ளக்கூடாத நிலை உள்ளதாலும், மேற்குலகில் வசிக்கும் தமிழ்த் தேசியவாதிகளை 'வழிக்குக் கொண்டுவருவதில்' TGTE வெற்றிபெறுமா என்பது நிச்சயமில்லாததாலும், இது அவ்வளவு சுலபமானதல்லவென்பது புரிகிறது. இதனால் மகிந்த அஞ்சுகிறார். இது சாதாரண அச்சமேயாகும். அச்சம் சாதாரணமானதுதான், ஆனால் எச்சரிக்கையோ சாதாரணமானதல்ல.

காரணம்? மேற்குலகிற்கு சாதகமாக இருந்துவருவதையே தமது மரபணுக் குணாம்சமாகக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய மேட்டுக்குடி, தற்போது அதன் உச்சத்திற்கே சென்றுள்ளது. இத் தமிழ்த் தேசியத்தை 'மேற்குலக ஏகாதிபத்திய ஆதரவு வம்சாவளித் தேசியம்' எனவும் அழைக்கலாம். தமிழ்த் தேசியம் சிங்கள-பௌத்த பேரகங்காரவாதத்திடம் தொடர்ந்தும் தோல்வியுற்று வருவதற்கான பிரதான காரணங்களில் இதுவுமொன்றாகும். அடுத்த பக்கத்தில் சிங்கள-பௌத்த பேரகங்காரவாதத்தின் அநகாரிக தர்மபால பரம்பரையினரோ மேற்குலக ஏகாதிபதியத்திற்கெதிரான அணியுடனேயே தம்மை இனங்காட்டி வருகிறார்கள். 'அப்பே ஆண்டுவ'த் தலைவன் பண்டாரநாயக்கவும் அவரின் மனைவியும் அணிசேரா நாடுகளின் தீவிர ஆதரவாளர்கள். குறிப்பாக, சீனாவினதும் இந்தியாவினதும் நண்பர்கள். இந்த நட்புத்தான் எந்த முரண்பாடுமின்றி கச்சதீவைக் கைப்பற்ற இலங்கைக்கு உதவியது. இன்று மகிந்தவும் அவர்களின் வழி நடந்து ஆசிய உலகின் நெருக்கமான நண்பராக உள்ளார். இந்த நட்புத்தான் புலிகளை வெற்றிகொள்ள உதவியது. உலகளாவிய அணிசேரலில் இருக்கும் இந்த வேறுபாடுதான், சிங்கள- பௌத்த பேரகங்காரவாதிகள் முஸ்லிம்களுடனும் மலையகத் தமிழ் மக்களுடனும் நடந்து கொள்வதைப்போலல்லாமல் இலங்கைத் தமிழர்களுடன் அதிக காட்டமாக நடந்து கொள்வதற்கான காரணமாக அமைகிறது.

மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய மேட்டுக்குடியினரை அணைப்பதும், அவர்களைத் தூண்டிவிடுவதும் பின்னர் அணைத்தவண்ணமே தமிழ்த் தேசியத்தின் முதுகில் குத்துவதுந்தான் மேற்குலகின் மரபணுக் குணாம்சமாக இருந்து வருகின்றது. மீண்டுமொரு தடவை தூண்டிவிடுகிறார்கள். இதனால் தமிழ்த்தேசியத்தின் முதுகில் மீண்டுமோர் தடவை கத்திக்குத்து விழப்போவது நிச்சயம். பாதிக்கப்படுவது யாராகவிருக்கும் என்பதையிட்டு எதிர்வு கூறமுடியும், அதற்கு முன்னால் தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்த மேற்கு முகாம் அமைத்துள்ள வியூகம் பற்றிச் சில வார்த்தைகள்

## ஈ.4) **சக்கர வியூகம்**



பாரதப் போரில் அபிமன்யூவைக் கொல்வதற்காக, கௌரவர்கள் சக்கர வியூகம் என்ற பெயரில் ஒரு வியூகத்தை அமைத்து அதற்குள் அபிமன்யூவின் படையணியை உள் நுழைய விடுகிறார்கள். குறுக்கிடும் ஒவ்வொரு படையணிகளையும் தோற்கடித்தபடி அபிமன்யூ வெற்றிப்பெருமிதத்துடன் முழக்கமிட்டபடி முன்னேறுகிறான். அவனெங்கு வரவேண்டுமென்று கௌரவர்கள் விரும்பினார்களோ அங்கு வரவழைக்கப்படுகிறான், அதாவது வியூகத்தின் மையத்தை நோக்கி நகர வைக்கப்படுகிறான். மையத்துள் நுழைந்துவிட்டால் முற்றுகையை உடைத்துக்கொண்டு வெளிவரும் போர்க்கலை அபிமன்யூவுக்குத் தெரியாது. அபிமன்யூவுக்கு அது தெரியாதென்பது கௌரவர்களுக்குத் தெரியும். முன்னேறத் தெரிந்த அவனுக்கு பின்வாங்கத்தெரியவில்லை. மாவீரனான அபிமன்யூ மிகச் சுலபமாக கொல்லப்படுகிறான். இதுதான் சக்கர வியூகம்.

புலிகளின் தலைவர் பிரபாகரனை அபிமன்யூவுடன் ஒப்பிட்டு இது சொல்லப்படவில்லை. அது மேற்குலகத்தின் வியூகத்தின் ஒரு சிறு பகுதியாகும். தமிழ்பேசும் மக்களையும் அவர்களுடன் சேர்த்து அவர்களின் பல்வேறு

வகை அரசியல் இயக்கங்களையும் தமது நாட்டினுள் அழைத்ததுதான் இந்த வியூகத்தின் முதற்படி. நீண்ட தூரத்துக்கு வந்துவிட்டார்கள். முதலாவது போர்முனைதான் முள்ளிவாய்க்கால். கௌரவர்களின் நோக்கம் அபிமன்யூவை அழிப்பது, ஆனால் மேற்கின் நோக்கமோ தமிழினத்தையே ஸ்ரீலங்காவின் அடிமையாக்குவது, இதன் மூலம் முழு ஸ்ரீலங்காவையும் தனது நவ-காலனியாக்குவது.. மேற்கின் கணிப்பின்படி தமிழ்த் தேசியம் இன்னமும் வியூகத்தின் மையத்துக்கு வந்து சேரவில்லை என்பதேயாகும். கௌரவர்கள் பாதையை மட்டுந்தான் வகுத்துக் கொடுத்தார்கள். ஆனால் மேற்குலகர்களோ தலைவர்களையும் தயாரித்துத் தந்துள்ளார்கள். அவர்கள்தான் TGTE.

## ஈ.4.அ) **அடுத்த பலிக்கடா யார்?**

தமிழ்த் தேசியத்தின் சார்பில் முதுகில் கத்திக்குத்து வாங்கப்போகும் அடுத்த அணியெது? புலம் பெயர்ந்தோர் நடத்தும் இயக்கங்களால் இலங்கையில் வாழும் தமிழர்கள்தான் மீண்டும் பலிக்கடாவாகப் போகிறார்கள் என்றோர் கருத்து நிலவுகிறது. அது அனேகமாக உண்மையாக இருக்காது. பலிக்கடா ஆகப்போகும் அடுத்த அணி மேற்குலகில் வாழும் புலம்பெயர்ந்தோர்களே.

மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரம் ஒரு நெருக்கடிக்குள்ளாகி வருவது யாவருமறிந்ததே. சீனா, ரஷ்யா, இந்தியா, தென் ஆபிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளின் வளர்ச்சி இந்த நெருக்கடியை மேலும் கூர்மைப்படுத்தும். இந்தியாவின் ஊசலாட்டந்தான் மேற்குலகுக்கொரு ஆறுதலான விடயமாக உள்ளது. மூச்சுவிடுவதற்கான ஒரு இடத்தை இந்தியா வழங்கியுள்ளது. ஆனால் இந்தியா நீண்டகாலத்துக்கு ஊசலாட முடியாது. இலங்கை விடயத்தில், இந்தியா இனியும் தான் ஊசலாடமாட்டேன் என்பதைத் துணிச்சலாக உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது. இந்தியா, அரசியல் ரீதியாக இல்லாவிட்டாலும் பொருளாதார ரீதியிலாவது ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் தன்னை மேலும் மேலும் இணைத்துக் கொள்ளுமானால், மேற்கு நாடுகளின் பொருளாதாரம் துரிதமாகச் சரிய ஆரம்பிக்கும். இதை எதிர்கொள்வதற்காக மேற்குலகம் கீழ்க் கண்ட இரண்டில் ஏதாவதொரு முடிவுக்கு வந்தேயாகவேண்டும்.

ஒன்று ஆசியா முழுமைக்கும் யுத்தத்தை நகர்த்துவது, மற்றையது மேற்குலகெங்கணும் இனவாதத்தைத் தூண்டிவிடுவது.

எந்த ஆசிய நாடுகளும் யுத்தத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையிலில்லை. ஏனெனில் அவற்றின் பொருளாதாரம் வளரும் நிலையிலேயே உள்ளது. ஆகையினால் மேற்குலக ஆளும் வர்க்கம் மீண்டும் இனவாதத்திடம் சரணடைதலே சாத்தியமானதாக இருக்கும். அன்றைய ஐரோப்பிய

இனவாதம் (பாஸிஸம்), கம்யூனிஸம் எனும் பூதத்தை எதிர்க்கும் பிசாசாகக் கிளம்பியது. இன்றைய இனவாதமோ, பயங்கரவாதம் என்ற குட்டிப் பிசாசை எதிர்க்கும் பெரும் பிசாசாக கிளம்பும். 2015க்குள் மேற்குலகம் எந்தப் பக்கம் போகவுள்ளது என்பது தெரிந்துவிடும்.

பொருளாதார ரீதியாக பின்நிலைக்குத் தள்ளப்பட்டுவரும் ஜப்பான் ஆசியாவில் யுத்தத்தை கட்டவிழ்த்துவிட அமெரிக்காவையும்விட முனைப்புக் காட்டுகிறது என்பதற்கு ஆதாரமான ஒரு தகவல்:

ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சகம் கடந்த வெள்ளிக்கிழமை (10/12/2010) தனது தேசிய பாதுகாப்பு வழிகாட்டு நெறிகள் பற்றிய கருத்தை ரோக்கியோ நகரத்தில் பகிரங்கப்படுத்தியது. இந்நெறிகள் 2011-ல் இருந்து 10வருடங்களுக்கு அமுலில் இருக்குமென அறிவித்துள்ளது.

இந்நெறிகளில் ‘பல்லடுக்கு பாதுகாப்பு ஒத்துழைப்பு’த் திட்டமும் (Multi layer Security Co-operation) ஒன்றாகும். இதன்படி கொரிய குடியரசு (தென்கொரியா), அவுஸ்ரேலியா, ‘ஆசியான்’ நாடுகள், இந்தியா ஆகிய நாடுகளுடன் இணைந்து பாதுகாப்பு ஒத்துழைப்பு முன்னெடுக்கப்படும். ‘அமெரிக்காவுடனான பிரிக்கமுடியாத உறவை (இராணுவ) மேலும் வளர்த்தெடுப்பதுவும், முன்னெடுத்துச் செல்வதுவும்’ இத் திட்டமிடலில் ஒன்றாகும். சீன எல்லையோரமுள்ள ‘தென்மேற்கு ஜப்பானில் முகாமிட்டுள்ள படைகளை உயர்ந்த நிலைக்கு வளர்த்தெடுப்பதற்கு முன்னுரிமை கொடுத்தல்’ இத் திட்டத்தின் மற்றோர் அம்சமாகும். ‘சீனாவின் இராணுவ நவீனமயமாக்கல்’,

இப்பிராந்தியத்தினதும் (ஆசியா) மட்டுமல்ல முழு உலகினதும் அமைதியை கேள்விக்குறியாக்கியுள்ள நிலைமை’ ‘தனது பாதுகாப்பு வலயத்தை அமைப்பது தொடர்பாக சீனா கடைப்பிடித்துவரும் அரைகுறை வெளிப்படைத் தன்மை கொண்ட (Insufficent Transparancy)’ கொள்கை, ‘வடகொரியாவின் அணுஆயுத மற்றும் ஏவுகணை விவகாரங்கள், அமைதியைச் சீர்குலைக்கும் உடனடிக் காரணிகளாக இருத்தல்’ ஆகியவைதான் தமது இந்த வழிகாட்டு நெறிகளுக்கான காரணங்களாகும் என்றும் கூறினார். (The Hidu, December/18/2010)

புலம் பெயர்ந்தோரிடையே உள்ள தமிழ் இனவாதிகளும் (Thamil racialist), புலம்பெயர் மேட்டுக்குடியினரும், இனவாதத்தை தேசியம் என்று கருதியுள்ள நடுத்தர வர்க்கத்தினரும், சக்கரவியூகத்துள் செல்வது நல்லதல்ல. ஆபத்து தூரத்திலில்லை. ஆபத்து வந்தவுடன் உலகநாடுகளே உதவுங்கள் என்று குரல் கொடுப்பதில் அர்த்தமில்லை.

## 3.2.4) **தமிழ் ஜனநாயகத் தேசிய வாதிகளுக்கா?**

### 4.அ) **'ஜனநாயகத் தேசியவாதிகள்'- யார் இவர்கள்?**

அனைத்துலக முதலாளித்துவத்திற்கு (ஏகாதிபத்திய உலகளாவிய கட்டுமானத்துக்கும், வல்லரசு நாடுகளுக்கும்) தமது வர்க்க நலனைப் பற்றி மட்டுந்தான் கவலை, வேறு எதுபற்றியும் அவர்களுக்குக் கவலையில்லை..

ஒடுக்கப்படும் தேசத்தின் அல்லது தேசிய இனத்தின் சுரண்டப்படும் வர்க்கமோ, தேசிய நலனின் முற்போக்கான வரலாற்று வகிபாகத்தை நிராகரிக்கவில்லை. அதே நேரம் தேசிய நலன் சுரண்டப்படும் வர்க்கத்தின் வர்க்க நலனுக்கு கீழ்ப்பட்டதே என்பதில் விட்டுக் கொடுப்புகள் எதையும் செய்ததுமில்லை. இனியும் செய்யப்போவதுமில்லை. அதற்காக வர்க்க நலன், தேசிய நலனின் எஜமானனாக ஆகவேண்டுமெனும் கொள்கையுடையவர்களுமல்ல. இக் கொள்கைதான் சமூக-பேரகங்காரவாதமாகும் (Social-Chavunism). இத் தவறான சிந்தனைமுறையால் சோவியத் ஒன்றியத்தை சிதறவிட்ட அனுபவம் உழைக்கும் மக்களுக்கு உண்டு. அதேநேரம் இவர்கள் தேசியவாதிகளின் வால்பிடிகளாகவும் இருக்கமாட்டர்கள். இலங்கையின் முதல் தலைமுறை இடதுசாரிகள் தம்மையும் அழித்து, நாட்டையும் குட்டிச்சுவராக்கிய வரலாற்றனுபவமும் அவர்களுக்கு உண்டு. தேசியவாதிகள் உழைக்கும் மக்களின் பங்காளிகள்தான், ஆனால் கீழ்நிலைப் பங்காளிகளேயாகும். எக் காரணங்கொண்டும் சமநிலைப் பங்காளிகளல்ல. அதுவும் ஒரு நேரத்தில் நண்பனாகவும் இன்னோர் தடவை எதிரியாகவும் மாறக்கூடிய, நம்பிக்கை வைக்கமுடியாத, ஊசலாட்டம் மிக்க பங்காளிகளாகும். இருந்தும், இது புரிந்தும், அவசியமான நேரத்திலும் சாத்தியமான வேளைகளிலும் தமது கீழ்நிலைப் பங்காளிகளுடன் நட்புக்கொள்ளவும், போர்க்களத் தோழர்களாக ஏற்றுக்கொள்ளவும் அவர்கள் தயாராகவே இருப்பர், இருக்கவும் வேண்டும்.

இதைச் செய்யத் தவறிய இரண்டாவது தலைமுறை இடதுசாரிகள் புரிந்த, ஒதுங்கிநிற்றல் அல்லது தப்பித்தல்வாதத்தவறு (Escapism) இடதுசாரிகளையே ஒதுக்கிவைத்து விட்டதையும் இவர்கள் மறந்திருக்க முடியாது. அந்தத் தவறுகள் இனி நடக்காது பார்த்துக் கொள்வரென எதிபார்க்கலாம். இவர்கள் ஜனநாயகத் தேசியவாதிகளுடன், பொது வேலைத்திட்டத்துடன் கூடிய உண்மையான நட்புக் கொள்ளவேண்டும். ஏகாதிபத்தியத்தையும், ஏகாதிபத்தியக் கட்டுமானத்தையும், வீழ்த்தக்கூடிய ஒரே ஒரு ஆயுதம் தேசியந்தான். இந்த அர்த்ததில், இடதுசாரிகள் தம்மட்டில் தாமொரு தேசியர்களாகவும் இருக்கவேண்டும். அதேவேளை தேசியப் போராட்டத்துக்காக தமக்கென்றோர் சொந்த வேலைத்திட்டம் இவர்களிடம் இருக்கவேண்டும். ஆனால் இவர்கள் 'தூய தேசியவாதி'களல்ல. சுரண்டும்

வர்க்க அணியினருக்கும் இவர்களுக்குமுள்ள வித்தியாசம் இவர்கள் தேசியவாதிகளை ஏமாற்றுவதுவுமில்லை, தம்மை ஒளித்து மறைத்து வர்க்கங்கள் கடந்த தேசியவாதிகளாக வேடம் போடுவதுவுமில்லை. இத் தேசியத்தை 'உழைக்கும் மக்களின் தேசியம்' என அழைப்போம். பெயர் நீளமாக இருந்தால் 'இடது தேசியம் ' என வைத்துக் கொள்ளலாம்.

ஒடுக்கப்படும் தேசத்தின் அல்லது தேசிய இனத்தின் மற்றோர் பிரிவினர்தான், உடலுழைப்பில் ஈடுபடாத நடுத்தர வர்க்கத்தினராகும். இவர்கள் சுரண்டலிலோ சூறையாடலிலோ ஈடுபடாத 'தூய இதயங்களை'யும், அதே நேரம் பண்டஉற்பத்தியில் ஈடுபடாத 'மென்மையான' 'அழுக்கில்லாக் கரங்களை'யும் கொண்ட சமூகத்தட்டினராகும். இவர்கள் ஆளும் வர்க்கங்களல்ல, அதில் சந்தேகமில்லை. ஆனால், சமூக-பொருளாதாரக் கட்டுமானத்தின் ஒட்டு மொத்த வலைப்பின்னல்களால் இவர்கள் மிக சூட்சுமமான முறையில் சூறையாடப்படுவதை அறியாமல், தாம் ஆளப்படும் வர்க்கங்களுமல்ல, எனக் கருதுவதுதான் வில்லங்கமானது. இதனால் தேசிய ஒடுக்குமுறையை மாத்திரமே இவர்கள் உணர்வுபூர்வமாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். வர்க்க ஒடுக்குமுறை, சுரண்டல் பற்றிய பல தகவல்கள் இவர்களுக்குத் தெரியும், ஆனால் உணர்வுபூர்வமாக இவைபற்றி இவர்களுக்கு எதுவும் தெரியாது. இதனால் இவர்களின் அக்கறைக்குரிய விடயம், தேசிய நலன் ஒன்றுதான். தேசிய நலனையே மிக உயர்வான, தூய்மையான, புனிதமான, தீர்க்கமான நலனாகக் கொள்கின்றனர். இவர்களின் இவ்வித சிந்தனையால் தமிழீழத் தேசிய இயக்கத்துக்கும், சிங்களத் தேசியத்துக்கும் ஏற்பட்ட அழிவுகள் ஏராளம்.

தொகுத்துச் சொன்னால், முதலாளித்துவத்திற்கு பின்னைய உலகில், உண்மையானதாகவும், அறிவியல் பூர்வமானதாகவும் இருக்கும் மக்கள் திரள்கள் இரண்டேஇரண்டுதான். ஒன்று தேசம், மற்றையது வர்க்கம்.

முதலாளித்துவம், வர்க்கம் பற்றி மட்டுமே அக்கறை கொண்டுள்ளது. அதற்குத் தெரிந்ததெல்லாம் சுரண்டல், மேலும் சுரண்டல், மேலும் மேலும் சுரண்டல் என்பதுதான்.

சுரண்டப்படும் வர்க்கத்துக்கோ, இரண்டிலும் அக்கறையுண்டு. ஆனால் வர்க்கநலன்தான் அடிப்படையானதென்பதே இவர்களின் நம்பிக்கையாகும். மனித சமூக வரலாற்றில் இறுதியாகத் தோன்றிய அரசியல்-பொருளாதார மக்கள்-திரள்தான் தேசமாகும். முதலில் தோன்றிய சமூக நிறுவனம் இறுதியிலும், இறுதியில் தோன்றியது முதலிலும் அழியும் என்பதுதான் சமூகத்தின் இயக்கவியல் நியதியாகும். ஆகவே, தேசம் என்பது குறுகிய ஆயுளுடையது என்பதே அவர்களின் நம்பிக்கையாகும்.

நடுத்தர வர்க்கத்தினரோ, வர்க்கம் என்றோர் அரசியல்-பொருளாதார மக்கள்-திரளை ஏற்றுக்கொள்ளவில்லை. அனைத்தும் தேசமே என்பதுதான் இவர்களின் நிலைப்பாடாகும். இவர்கள்தான் தேசியவாதிகளாகும். இதுதான் அடைமொழியில்லாத தேசியமாகும். தூய தேசியவாதம் எனவும் அழைத்துக்கொள்ளலாம்.

இவர்கள் உண்மையின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்கிறார்கள். இதனால் முழுமையற்ற பொருள்முதல்வாதிகளாகிறார்கள். ஆனால் தேசியத்தின் சார்புநிலையை ஏற்கமறுக்கிறார்கள். தேசம் தன்மட்டில், தான் தனித்து இயங்குவதாக கருதுகிறார்கள். இதன் மூலம் இயக்கவியலை மறுக்கும் கருத்துமுதல்வாதிகளாக இருக்கிறார்கள். இதனால் முழுமைபெறாத பொருள்முதல்வாதமும், கற்பனாவாதமுமே இவர்களின் சிந்தனைப்போக்காக உள்ளது.

தேசியவாதம் எந்த சமூகத்தட்டின் சிந்தனையோ, அந்த சமூகத்தட்டு ஒரு நிலையான சமூகத்தட்டல்ல. வர்க்க மேல்நிலை ஏற்றமும், வர்க்கக் கீழ்நிலை இறக்கமும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும், வர்க்கங்களை உள்ளடக்கிய ஒரு சமூகத்தட்டாகும். இதன் ஒருசாரார் ஆளும் வர்க்கமாகவும் மற்றோர் சாரார் சுரண்டப்படும் வர்க்கமாகவும் பரிணாமம் பெற்றுக்கொண்டே இருப்பார்கள். இது ஓர் ஓய்வற்ற இயக்கமாக இருந்து கொண்டேயிருக்கும். இவர்களின் அரசியல் சிந்தனை, இவ்வியக்கத்தை பிரதிபலிப்பதாகவே அமையும். ஒரு பகுதி தரகுமுதலாளியத்தை நோக்கிவளரும்; இவர்கள்தான் ஜனநாயக மறுப்புத் தேசியவாதிகளாகிறார்கள். மற்றோர்பகுதி உழைக்கும் வர்க்க சிந்தனையை நோக்கிநகரும்; இவர்கள்தான் இடதுசாரி தேசியர்களின் அணியின் புதியவரவுகளாகும்.

இன்னோர் பகுதியினர் மேல் நோக்கியும் போகமுடியாமல், கீழ்நோக்கியும் இறங்க விரும்பாமல், தமது தற்போதைய நிலையை தக்கவைத்துக் கொள்வதற்காக வாழ்நாள்ப் போராட்டம் நடத்திக்கொண்டிருப்பவர்களாகும். இவர்கள்தான் எண்ணிக்கையில் அதிகமானவர்களாகும். இவர்கள்தான் தேசியவாதத்தை இறுகஅணைத்துக் கொள்பவர்களாகவும் இருப்பர். அதைவிட்டால் இவர்களுக்கு வேறு அரசியலேயில்லை. இவர்கள் தேசிய ஒடுக்குமுறையாளர்களால் அடக்கவும் ஒடுக்கவும் படுவதினாலும், சமூக அடித்தட்டினருடன் இவர்களுக்கு இருக்கும் இரத்த உறவுத்தொடர்புகளினாலும், சமூக ஜனநாயகம் இவர்களின் இயல்பான குணவியல்பாக இருக்கும். இவர்கள்தான், ஜனநாயகத் தேசியவாதிகள் எனும் சக்திமிக்க முற்போக்கணியை ஆக்குபவர்களாகும். 60களின் பின்னர் இலங்கை வரலாற்றின் செயல்மறவர்களாக இவர்கள் மிக வீரியமிக்க பங்களிப்புகளை வழங்கியுள்ளார்கள்.

JVP யின் இரு பெரும் கிளர்ச்சிகளும், தமிழ்ப் போராளிக்குழுக்களின் போராட்டங்களும், முஸ்லீம் மக்களின் ஒலுவில் பிரகடனமும், குறிப்பிட்டுக் கூறக்கூடிய பங்களிப்புகளாகும். ஆனால் இவர்களின் போராட்டங்கள் விதேசியர்களால் கடத்திச் செல்லப்படுவதே இயல்பானதாகவுள்ளது. இனியாவது அவ்விதம் நடக்காமல் தமக்கென்றோர் தலைமையை உருவாக்கி தமது வீரத்தையும் தியாகத்தையும் யாருக்கும் காவுகொடுக்காமல், களம் இறங்குவார்களென எதிர்பார்ப்போம். இலங்கை மக்களின் இந்த எதிர்பார்ப்பை இவர்கள் நிறைவேற்றுவார்களானால் MR உம் அவரின் அனைத்துலக நண்பர்களும் கண்டு கிலிகொள்ளும் பிரமாண்டமான சமூக சக்திகளில் ஒன்றாக இவர்களும் இருப்பார்கள் என்பது நிச்சயம்.

ஜனநாயக தேசியவாதிகள்பற்றிய மேற்கூறிய பகுப்பும், கணிப்பும், இலங்கை என்ற சமூக உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட கருதுகோள்களாகும். ஆனால் இன்று இலங்கையரில் பலர் புலம்பெயர் நிலையில் உள்ளதால், புலம்பெயர் தேசியம் அல்லது தொலைதூரத் தேசியம் (Distanced Nationalism) என்றோர் கிளைத் தேசியமும் களம் இறங்கியுள்ளது. இக் கிளைத்தேசியத்தின் வர்க்கக் கட்டமைப்பும், அக்கட்டமைப்பில் உள்ள வெவ்வேறு வர்க்கங்களின் குணாம்சங்களும் இலங்கையினதையும் விட மாறுபட்டது, நிறையவே மாறுபட்டது. இதனால், இலங்கையின் ஜனநாயகத் தேசியம் பற்றிய எமது வரையறைகள், இக் கிளைத்தேசியத்திற்கு முற்றிலும் பொருந்தாதெனக் கூறமுடியாது.. இருந்தும் இது பற்றிய ஆய்வுகள் தனியாக மேற்கொள்ளப்படவேண்டும்.

## 4.ஆ) ஜனநாயகத் தேசியவாதிகளின் அரசியல் அடையாளங்கள்

ஜனநாயகத் தேசியவாதிகளின் ஸ்தூலமான குணவியல்புகளுக்கு வருவோம். இலங்கையின் தற்போதைய நிலையில் பின்வருவனவற்றைத் தமது அரசியல் குணாம்சங்களாகக் கொண்டவர்களை தேசிய ஜனநாயகவாதிகளென அடையாளம் காட்டலாம்.

- தமிழ் பேசும் மக்களின் அனைத்துப் பிரிவினரையும் தழுவியதாகவே தமிழ்த் தேசியம் இருக்க வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருத்தல். எந்தப்பிரிவையும் ஒதுக்கவும் கூடாது, குறிப்பிட்ட ஒரு பிரிவின் உணர்வுகளும், அபிலாசைகளும் இன்னோர் பிரிவினர்மீது திணிக்கப்படவும் கூடாது;

-தமிழ்த் தேசியம் எச் சந்தர்ப்பத்திலும் எவ் வல்லரசுகளினதும் இறங்கு தளமாகவோ, வேட்டைக் காடாகவோ மாறக்கூடாது என்ற கோட்பாட்டிலும், வல்லரசுகள் தமக்கிடையேயான போட்டியில் தமிழ் பேசும் மக்களைப்

பகடைக் காய்களாகப் பாவிக்க அனுமதிக்கக்கூடாது என்பதிலும் உறுதியாக இருத்தல்;

அதே நேரத்தில் வல்லரசு நாடுகளுக்கிடையே உள்ள சின்னஞ்சிறு முரண்பாடுகளையும், ஏகாதிபத்தியக் கட்டுமானத்துக்குள்ளே உள்ள வெடிப்புகளையும், தமிழ் தேசியத்தின் நலன்களுக்காக பயன்படுத்தும் திறன் பெற்றவர்களாகவும் இருத்தல்.

'பல்முனை உலகம்' எனும் கோட்பாட்டையே தமது அனைத்துலக கோட்பாடாக கடைப்பிடித்தல்.

இக் கோட்பாட்டிற்கு எதிராகச் செயற்படும் வல்லரசை (இன்றைய நிலையில் அது அமெரிக்கா), உலக அரங்கில் தனிமைப்பட்டுத்தல்.

உள்வேறுபாடுகளை பகைமையாக்கி, கொம்புசீவிவிடும் தன்மையும், ஏகாதிபத்திய சார்புத்தன்மையும் கொண்ட தமிழீழ விதேசியவாதிகளிடம் இருந்து தம்மை கொள்கைரீதியாகவும், அமைப்புரீதியாகவும் வேறுபடுத்தி நிற்றல்.

தமிழ் பேசும் மக்களிடையே உள்ள பகைமை வர்க்க முரண்பாடுகளைத் தவிர, ஏனைய அனைத்து முரண்பாடுகளையும், எந்தப் பிரிவினதும் ஜனநாயக உரிமைகள் பாதிக்கப் படக்கூடாத முறையிலும், வல்லரசுக்களுக்கு சாதகமாக அமையாத முறையிலும், விட்டுக்கொடுப்புகளுடனும், பொறுமையாகவும், இணக்கமாகவும் தீர்க்கும் கொள்கையைக் கடைப்பிடித்தல்.

கால சூழ்நிலையைப்பொறுத்து அவசியமானால், தமிழ் பேசும் மக்களுக்கென தனியான மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைப்பதற்கு அவசியமான கட்டுமானங்களைக் கொண்டிருத்தல்.

இலங்கையின் அனைத்து மக்களிடையேயும் ஒரு நிரந்தர நல்லுறவு நிலவவேண்டுமென்பதையே தமது அடிப்படைக் கண்ணோட்டமாகக் கொண்டிருத்தல்.

இதற்காக, இலங்கையில் 'சமஷ்டி மக்கள் ஜனநாயகக் குடியரசு' ஒன்றின் அமைவையே தமது இறுதி நோக்கமாகக் கொண்டிருத்தல்; ஆனால் அந்நிலை உருவாகும்வரை, எத்தனை வருடங்களானாலும் தனியரசுக்குரிய அரச கட்டமைப்புகளின் சுயாதீனத்தை இழக்காமல் பாதுகாத்துவரல் சமாதானத்திற்கான அரசியல் யுத்தக்களத்திலோ, உரிமைக்கான யுத்த

அரசியல்களத்திலோ, இச்சுயாதீனத்தை இழக்காமல் பார்த்துக் கொள்ளல்;

இந் நிலைப்பாடு தமிழ்ப் போராளிகளுக்கு ஒன்றும் புதிதல்ல. திம்பு பேச்சுவார்த்தையின் போது இந்நிலைப்பாட்டின் சிற்சில அம்சங்களை போராளிகளிடையே காணக்கூடியதாக இருந்தது.

இதனால் இவ்வித எண்ணங்கொண்ட 'முன்னாள் போராளிகள்' நிறையவே உள்ளனர் என்று துணிந்து கூறலாம். 2009 மே பேரழிவு உருவாக்கிய 'முன்னாள்களையும்' சேர்த்துக்கொள்ளவேண்டும். போராட்டத்தின் பாரிய பின்னடைவு, பல புதியவர்களையும் கூட இம்மார்க்கத்தில் சிந்திக்க வைத்து வருகிறது. இவ்விதம் சிந்திப்பதற்கு துணை புரியக்கூடியதான ஆரோக்கியமான கருத்தாடல்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## 4.இ) **வேண்டாம் தயக்கவாதம் (Pessimism)**

மத-மாறாமரபியல்த் தேசியவாதச் சிந்தனைகளாலும், இனக்குழும-தேசியவாதச் சிந்தனைகளாலும், கெடுக்கப்பட்டுள்ள சிங்கள மற்றும் தமிழ் இளைஞர்களை மீளவும் சரியான இடத்துக்குக் கொண்டுவந்து சேர்க்க முடியுமா என்றோர் அச்சமும், தயக்கமும் ஜனநாயகத் தேசியவாதிகளிடம் தோன்றுவதும், இதனால் அவர்களில் பலர் தயக்கவாதிகளாக மாறுவதும் புரிந்து கொள்ளக்கூடியதே. இந்தப்போக்கு வெற்றிகொள்ளப்படவேண்டும். அப்போதுதான், வரலாற்றை இயக்கும் சக்திகளாக அவர்களால் மாறமுடியும்.

மத-மாறாமரபியல்வாதம், இனக்குழும-தேசியவாதம் ஆகியன வெறுமனே அரசியல் வேலைத்திட்டங்களல்ல. முதலாளியமும், அவ்விதமே சோஸலிஸமும், அவ்விதமே கம்யூனிஸமும் வெறும் வேலைத்திட்டங்களல்ல. இவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசியல் வேலைத்திட்டங்களோ, பொருளாதார வேலைத்திட்டங்களோ, பண்பாட்டு வேலைத்திட்டங்களோ ஆயிரம் இருக்கலாம். ஆனால் மேற்குறிப்பிட்ட 'இஸங்களில்' (…ism) எதுவுமே தன்மட்டில் தான் ஒரு வேலைத்திட்டமுமல்ல, பல வேலைத்திட்டங்களின் தொகுப்புமல்ல. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித் தனித் வாழ்க்கைமுறைகள்/வாழ்வியல்சிந்தனைகளாகும். இரத்தத்துடன் கலந்துவிட்ட உணர்வுகளாகும். இதைத்தான் 'தானாடாவிட்டாலும் தன் தசையாடும்' என்பார்கள். ஜனநாயகத் தேசியமானது, அதைப் பின்பற்றுபவர்களின் வாழ்க்கைமுறையாக மாறவேண்டும்.

சார்புத்தன்மையும்பெற்ற, குறுகியகாலஆயுளுமுள்ள, மத-மாறாமரபியல் மற்றும், இனக்குழும-தேசிய வேலைத்திட்டங்களால், ஒரு மனிதனின் இயல்பான வாழ்க்கைமுறைகளும்/வாழ்வியல் சிந்தனைகளும்,

சேதப்படுத்தப்படுவது இயல்பு. இச்சேதங்களைச் தாமே சரிசெய்து, அனைத்து மத-மாறாமரபியல்களிலிருந்தும், இனக்குழும-தேசியவாதத்திலிருந்தும் மீண்டுவருவதற்கான ஏராளமான வாய்ப்புகள் தாராளமாகவேயுள்ளன. ஏனெனில் தேசியத்தையும் வர்க்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட இஸங்கள்தான் இயல்பானவை. அவை இரண்டுந்தான் நிரந்தரமானவை. இவ்விரண்டையும் தவிர்ந்த மீதமெல்லாம் மாயைகளே. மாயையுள் வீழ்த்தப்படுவதும், மாயைகளிலிருந்து விடுபடுவதும், மீண்டும் விழுவதும் மீண்டும் விடுபடுவதும் இதுதான் மனித அறிவின் வளர்ச்சி நியதி. இதைத்தான் 'தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும், சூது விலகும் தர்மம் வெல்லும்' எனச் சொன்னர் போலும். இலங்கை மக்கள் மட்டும் இந்த நியதிக்கு விதிவிலக்கானவர்களா என்ன?

ஜனநாயகத் தேசியவாதிகள் ஒரு அமைப்பாகத் தம்மை ஆக்கிக் கொள்வதில் இவர்களின் தற்போதைய நிலையென்ன என்பதை விவாதிப்பதற்குரிய களம் இதுவல்ல. ஆனால் சகலதடைகளையும் தாண்டி இவர்கள் வளர்ந்து வருகிறார்களென MR அஞ்சுவது தெரிகிறது.

### 3.2.5) **இஸ்லாமிய ஆயுதக் குழுக்களுக்கா?**

#### 5.அ) **கிழக்கில் முஸ்லீம் எதிர்ப்புத் தமிழ்ப் பேரகங்காரவாதம்**

##### 5.அ 1. **விடிவெள்ளியாகிய காத்தான்குடி**

அமைவிடம்: காத்தான்குடி, மட்டக்களப்பு, ஸ்ரீலங்கா.

இலக்குகள்: 4 பள்ளித் தொழுகையில் இருந்தவர்கள்

திகதி: ஆகஸ்ட் 4, 1990 7.30 மாலை (+6 GMT)

தாக்குதல் முறை: ஆயதப் படுகொலை

ஆயுதங்கள்: தானியங்கித் துப்பாக்கிகள், கைஎறி குண்டுகள்

இறந்தவர்கள்: 147

கொலைஞர்கள்: தமிழீழ விடுதலைப் புலிகள்

அரசியல் பின்னணி: ஜனாதிபதி பிரேமதாசாவுடன் செய்து கொள்ளப்பட்ட 13மாத கால யுத்தநிறுத்தம் முடிவடைந்த நிலை. ஜூன் 11

முன் அறிவிப்பு: நான்கு நாட்களின் முன்னால், 60,000 மக்கள் கொண்ட காத்தான்குடியை விட்டு மக்கள் வெளியேறவேண்டும் இல்லையேல் மரணமென அறிவிக்கப்பட்டது.

**நடந்த பிற கொலைகள்**

1. ஜூன் 13, யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும் போது பொலிஸ் நிலையங்களில் சுமார் 600பொலிஸார் மரணம்.

2. இதே மாதம் கிராமங்கள் தாக்கப்பட்டு, வீடுகளும் கடைகளும் எரிக்கப்பட்டன.

3. ஜூலை 29-ல் சம்பாந்துறைப் பள்ளிவாசலில் பத்து முஸ்லீம் பக்தர்கள் கொலை.

4. ஜூலை 24, மட்டக்களப்பு பள்ளிவாசல் ஒன்றில் நான்கு முஸ்லீம் பக்தர்கள் கொலை.

தமிழ் பேரகங்காரப் புலிகள் காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த முஸ்லீம் மக்களின் மீது சரமாரியான துப்பாக்கித் தாக்குதல்கள் நடத்தினர். இது நடந்து சரியாக ஒரு வருடத்தின் பின்னர் ஸ்ரீலங்கா அரசு அதே பள்ளிவாசலில் வைத்து முஸ்லீம் இளைஞர்களுக்கு ஆயுதங்கள் வழங்கியது. கிழக்கு மாகாணத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததன் பின்னர், இதே பள்ளிவாசலில் வைத்து, ஸ்ரீலங்கா இராணுவத்தின் கிழக்கு மாகாண கிழக்குப் பிராந்திய ஆணையிடு அதிகாரி, சிறிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் வைத்து ஆயுதங்கள் பகிரங்கமாகத் திரும்பப் பெறப்பட்டன. 2009-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதிக்குள் திருப்பித் தரப்படாத ஆயுதங்கள் சட்டவிரோத ஆயுதங்களென அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்கும்போது மாகாண அரசாங்க அமைச்சர் திரு.M.L.A.M.ஹிஸ்புல்லா அவர்கள் கூறியதாவது:

ஜிஹாத் போன்றதோ அல்லது அதற்கு இணையானதோவான ஆயுத எழுச்சி இங்கு உண்டு எனச் சில பகுதியினர் குற்றஞ்சாட்டுவதை நான் மறுக்கிறேன். பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் போது இந்த இளைஞர்கள் பாதுகாப்புப் படைகளுக்கு உதவினார்கள். இந்த ஆயுதங்களை பள்ளிவாசல்கள் கூட்டமைப்பின் ஊடாக கையளிக்கும் தருணம் வந்துவிட்டது.... ஆயுதங்களைத் தூக்கித் திரிய வேண்டிய அவசியம் தற்போது முஸ்லீம் இளைஞர்களுக்கில்லை. ஆகவே நாம் அரசின் இந்த முடிவை வரவேற்கிறோம்.

ஆயுதங்கள் விருப்புடன் திருப்பி அளிக்கப்படவில்லை என்பதையும், ஆயுதக் களைதலே நடைபெற்றது என்பதையும் இக்கூற்று நிருபிக்கின்றது. ஹிஸ்புல்லாவால் மறுக்கப்பட்ட நிகழ்ச்சிப் போக்கு மிகமிகத் தவறானது என்பதை 20/09/2010, திங்கட்கிழமை Indian Express 6-ம் பக்கச் செய்தி ஆதாரங்களுடன் மறுக்கின்றது.

இலங்கை முஸ்லீம்கள் மத்தியில் இலங்கை இஸ்லாமியப் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தளம் அமைக்கும் ஆபத்தான முயற்சியில் வஹாப்பிஸம் ஈடுபடுகிறதா என்றோர் அச்சம் நிலவுகிறதென மிதவாத (moderates) முஸ்லீம்களுக்காக முன்னின்று வாதாடும் ச.்.பி இஸ்லாம் தலைவர்கள் கூறினார்கள். இது இந்தியாவையும் அடையக் கூடும் என அவர்கள் எச்சரித்தார்கள்.

இதன் பின்னணியில் சவுதிஅரேபியா இருப்பதை அவர்கள் உணர்கிறார்கள். இஸ்லாமிய ஒருங்கிணைப்பு முன்னணியின் (Islamic Solidarity movement) தலைவர் நியாஸ் எம்.சலி இவ்வாறு கூறுகிறார். “உலகம் முழுமையிலும் வகாபிஸத்தை பரப்புவதற்காக சவுதி வருடாவருடம் 87 பில்லியன் அமெரிக்க டாலர்களைச் செலவழிக்கின்றனர்.” வகாபிஸத்தை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடக்கூடிய பள்ளிவாசல்களை அமைக்கும் நடவடிக்கைகள் தீவெங்கும் நடைபெறுகின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை அதிகாரபூர்வமற்ற வைகளாகும்.” அவர் மேலும் கூறியதாவது ‘ரௌகீட் ஜனாட், ஜமீட் ஈ இஸ்லாம் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த வகாபியர்கள் உள்ளூர்களில் வீடு வாங்குவதற்கு முஸ்லீம்களுக்கு பணம் கொடுக்கிறார்கள். இவ்வீடு பின்னர் ‘மதறாசாக’ மாற்றப்படுகிறது. அதன் பின்பு அது பள்ளிவாசல் ஆகிறது. உள்ளூரில் இருக்கும் மூன்று பள்ளிவாசல்களின் அங்கிகாரம் இருந்தால்தான் புதிய பள்ளிவாசல் அதிகாரபூர்வமானதாக ஏற்றுக்கொள்ளப்படும் என்றோர் வழமையுண்டு. இவ் வழமையை நிறைவேற்றமுடியாத வகாபியர்கள் பதிவு செய்யப்படாத பள்ளிவாசல்களை அமைத்துக் கொண்டே செல்கிறார்கள். சுமார் 300 பள்ளிவாசல்கள் உள்ள இலங்கைத்தீவில் 35 பள்ளிவாசல்களே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

சவுதிஅரேபியாவில் உள்ள மதநிறுவனங்களுக்குச் செல்வதற்கு இளம் முஸ்லீம்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் வஹாபிஸத்தைப் பரப்புவதற்காக பயிற்றப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். பணம் அவர்களுக்கு ஒரு பிரச்சனையாய் இருப்பதிலை. அரச அதிகார அங்கங்களில் இவர்கள் ஊடுருவியுள்ளதாக கூறும் இவர், புனரமைப்புச் செய்யப்பட்ட வ.்.ப் சபையின் மூன்று உறுப்பினர்களும் வஹாபியர்கள் என்றும் கூறுகிறார். மேலும் கூறுகையில், இவர்கள் பள்ளிவாசல்களின் சொத்துக்களை வஹாபிஸத்தைப் பரப்புவதற்குப் பயன்படுத்தத் தொடங்குவார்கள் என

அஞ்சுவதாகவும் கூறினார். மற்றொரு ச.்.பி முஸ்லீமான அஹமத் ஷா மௌலவி, ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லீம் பிரிவின் ஊளியர்களிலும், அதன் நிகழச்சிகளில் பங்குபற்றுவோர்களிலும் 98% வஹாபியர்களேயாகும். வஹாபிய சிந்தனைகளைப் பரப்புவதிலேயே இவர்கள் கண்ணும் கருத்துமாக உள்ளார்கள். அனைத்துலகப் பள்ளிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆங்கிலமூல இஸ்லாமியக் கல்விக்கான நூல்கள் வஹாபி சட்டங்கள் பற்றிய படிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக அமைந்துள்ளன.

ஆஹமத் ஷா மேலும் கூறியதாவது, ‘வஹாபியர்கள் தமது நம்பிக்கையைப் பின்பற்றும்படி முதலில் தமது குடும்ப உறுப்பினர்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள். ச.்.பி பிரிவினரின் பள்ளிவாசல்களைத் தாக்குகிறார்கள், கிழக்கு மாகாணத்தில் ச.்.பி பிரிவின் தலைவர்களைத் துப்பாக்கி கொண்டு தாக்கிய சம்பவமும் நடந்துள்ளது. ஒருவரின் தன்னகங்காரத்துக்கு எதிரான போரை வஹாபி அல்லாதவர்களுக்கும் முஸ்லீம் அல்லாதவர்களுக்கும் எதிரான போராக அர்த்தப் படுத்தி வளர்த்து வருவதே இதற்கான காரணமாகும்.

### 5.அ.2 **வஹாபிஸம் பற்றியோர் அறிமுகம்**

200 வருடங்களுக்கு மேலாக வஹாபிஸந்தான் சவுதிஅரேபியாவின் மேலாண்மை மிகு மதமாக உள்ளது. இது ஐக்கிய அரேபியக் குடியரசு, ஓமான், குவைத் ஆகிய நாடுகளிலும் கணிசமான அளவிற்கு செல்வாக்கு மிக்கதாகக் காணப்படுகின்றது.

கடும்போக்கு வஹாபிகள் தாம் பின்பற்றும் இஸ்லாமிய வடிவத்தைப் பின்பற்றாதவர்கள் அனைவரையும் தமது கடவுளை மறுப்பவர்களாகவும் விரோதிகளாகவுமே பார்க்கின்றனர். வுஹாபிஸத்தின் இறுக்கமான தன்மை, இஸ்லாமியப் போதனைகளுக்கு தவறான விளக்கங்களைக் கொடுக்கவும் அதன் சாரத்தைச் சிதைக்கவும் வைத்துள்ளதென விமர்சிப்பவர்களும் உண்டு. ஒருமுனைவாதிகளாக அடையாளப்படுத்தப்படும் ஒசாமா பின்லேடனையும் தலிபான்களையும் இதற்கு உதாரணமாகச் சுட்டிக் காட்டுகிறார்கள். 1970 களில் சவுதி அறக்கட்டளைகள் இஸ்லாமாபாத்தில் இருந்து கலிபோர்னியாவின் கல்வர் நகரம் வரையான வஹாபி பள்ளிகளுக்கும்(மதறாஸ) பள்ளிவாசல்களுக்கும் நிதியுதவி வழங்கத் தொடங்கியதில் இருந்துதான் வஹாபிஸத்தின் துரிதமான வளர்ச்சி ஆரம்பமாகின்றது. சவுதிஅரேபியாவின் மதப் பாடத்திட்டம் மக்கள் அனைவரும் அடிப்படையில் இரு பகுதியினராகப் பிரிக்கப்பட்டுள்ளனரெனக் கற்பிக்கின்றது. முதலாவது; சலா.்.பிஸ் (வஹாபிஸ்)-இவர்கள்தான் வெற்றியாளர்கள், இவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், இவர்கள்தான் மோட்சத்தை அடையக் கூடியவர்கள். இரண்டாவது பிறராகும். இந்தப்

பிறர் -முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் மற்றும் பிறர். இந்த மற்றும் பிறரில் மதத்திற்கு ஒவ்வாத காரியங்களைச் செய்வதாக இவர்களால் கருதப்படும் சுனி பிரிவினரும் அடங்குவர். தீர்க்கதரசி முகமட்டின் பிறந்த நாளைக் கொண்டாடுவது சுனி பிரிவினர் செய்யும் ஒவ்வாத காரியங்களுள் அடக்கப்பட்டுள்ளன…

கடந்த 20 வருடங்களாக, குறிப்பாக கடந்த பத்து வருடங்களாக, தலிபானின் அடிப்படைவாதத்திற்கும் வஹாபி அடிப்படைவாதத்திற்கும் இடையேயான தொடர்புகள் மிக மிக உறுதியாக வளர்ந்து வருகின்றன. தலிபான்கள் தம்மை இணைத்துள்ள டியோபண்டி பாடசாலை என அழைக்கப்படும் இஸ்லாமின் மேல்நிலைப் பாடசாலை ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானின் மிகப் பரந்த பகுதியிலும் மிகப் பிரபல்யமானதாகும். வட இந்தியாவும் வஹாபி போதனைகளை நோக்கி மேலும் மேலும் அதிகமாக கவரப்பட்டு வருகிறது. அத்துடன் பல்வேறு வஹாபி மதத் தலைவர்களுடன் மிக நெருக்கமான அமைப்புரீதியான தொடர்புகள் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

வஹாபிசத்தின் வளர்ச்சியை MR விரும்பலாம் மறைமுகமாக ஆதரவும் கொடுக்கலாம். இந்தியாவுடனான தனது பேரம் பேசல் சக்தியை வளர்த்துக்கொள்ள இதைப் பயன்படுத்தும் நோக்கமும் இருக்கலாம். மேற்குலகுக்கு எதிரான இயக்கம் தனக்கு பாதுகாப்பாக இருக்கலாம் எனவும் கருதலாம். மேற்குலகுக்கு ஆதரவான தமிழீழத் தேசியக் குழுக்களுக்கு எதிராகப் பயன்படுத்தலாமென்ற எதிர்பார்ப்புமிருக்கலாம். ஸ்ரீலங்கா இராணுவம் தான் பலமாக இருக்கும் பட்சத்திலேயே இவ்வித நடவடிக்கைகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது சாத்தியமாகும். அல்லது இது MR இன் கவனத்துக்கு வராமலேயே நடக்கும் ஒரு நிகழ்வாகவும் இருக்கலாம். அவ்விதம் இருந்தால் அது மற்றோர் இராணுவ நெருக்கடியாக மாறும்.

இந்தப் போக்கின் வளர்ச்சிக்கு காத்தான்குடி சம்பவம் மட்டும் ஒரு காரணமல்ல. முஸ்லீம் மக்களை கொதிப்படைய வைத்த மேலும் பல சம்பவங்களும் உண்டு. அவற்றில் சிலவற்றை இங்கு தருகிறோம்.

### 5.அ.3. **பொத்துவில் வன்முறை**

……றட்டால் குளத்தின் நீர்ப்பாசன சுலிசை சரிசெய்யச் சென்ற 11 தொழிலாளர்கள் திரும்பி வரவேயில்லை. அடுத்தநாள் இவர்களில் பத்துப் பேரின் உடல்கள் சுலிசுக் கதவுக்கு அருகில் கிடந்தன...... இக் கொலைகளைக் கண்டித்து மூன்றாவது நாளாகவும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தன. அரசாங்கம் இக்கொலைகளுக்கான காரணகர்த்தாவாக LTTE

ஐ குற்றஞ்சாட்டியது. ஆனால் மக்களோ அரசாங்கத்தின் STF தான் இதற்கான காரணமென அடித்துக் கூறினர்....

அடக்கத்திற்கு முன்னால் ஜனாசா (பூத உடல்கள்) வைக்கப்பட்டிருந்த ஜும்மா பள்ளிவாசலுக்கருகில் 2,000 முஸ்லிம்கள் திரண்டிருந்தனர்...... செவ்வாய்க் கிழமை, 15,000 மக்கள் ஜும்மா பள்ளிவாசலுக்கு வெளியில் கூடியிருந்தனர். அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இதில் தமிழர்களும் பங்குபற்றினர். இவ் ஆர்ப்பாட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் பௌசி அங்கு மீண்டும் விஜயம் செய்து பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார்...

புதன்கிழமை பொத்துவில் ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதற்கு வந்த STF வாகனத்தை பெறியஉலை முஸ்லீம்கள் இடைமறித்தனர். அது தொடர்பாக ஏற்பட்ட மோதலில் காவல் துறை கமாண்டோக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் காயமடைந்த 14பேரில் நால்வர் கடுமையாக காயமடைந்தனர். காவல்துறையினர் ஆர்ப்பாட்டங்களை அடக்கும் நோக்கத்துடன் அந்தப் பகுதியில் வியாழக்கிழமை காலைவரை ஊரடங்கை அமுல் படுத்தினர்..... ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) தலைவர் றஃப் ஹக்கீம் அனைத்துலக மட்ட விசாரணையைக் கோரினார். “வழமைக்கு மாறான இச் சம்பவத்தை விசாரணை நடத்தும் ஆற்றல் உள்ளவர்கள் ஸ்ரீலங்காவில் உள்ளனர்” என அரசாங்கம் பதில் கூறியது. (wsws.org). காத்தான்குடி, யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை ஆகிய பகுதிகளில் நடந்ததுபோல் மூதூரிலும் நடக்க இருந்ததாகவும் ஒரு பதிவு உள்ளது.

### 5.அ.4. **மூதூர் மிரட்டல்**

முஸ்லீம்களை இனச் சுத்திகரிப்புச் செய்யும் முயற்சியில் மீண்டும் LTTE நாட்டங்கொள்ளத் தொடங்கியுள்ளது. இத்தடவை குறிவைக்கப்பட்டுள்ள பிரதேசம் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருகோணமலை வட்டமாகும்.

மூதூரில் வதியும் முஸ்லீம் மக்கள் வரும் 72 மணத்தியாலத்தில் அப் பகுதியை விட்டு வெளியேறிவிட வேண்டுமென அச்சுறுத்தப் பட்டிருப்பது உண்மைதான் என்பதை எமது செய்தியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

‘தமிழீழ மீட்புப்படை’ என ஒப்பமிட்டதோர் துண்டுப்பிரசுரமொன்று திங்கட்கிழமை காலை மூதூர் எங்கணும் எல்லோரினது கைகளுக்கும் போகக் கூடியதாக விநியோகிக்கப்பட்டது. 72 மணத்தியாலத்தில்

இங்கிருந்து வெளியேறிவிடவேண்டுமென்று உத்தரவிட்டதன்படி செயல்பட ஆணையிட்டதுடன், முஸ்லீம்கள் STF உடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் குற்றம் சாட்டியது அப்பிரசுரம். அவர்கள் தமிழீழப் போராட்டத்துக்கு எதிரானவர்களென்றும் குற்றஞ்சாட்டியது.

இது தொடர்பாக சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன. முஸ்லீம்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறி அகதிமுகாம்களில் குடியேற வேண்டுமென அச் சுவரொட்டிகள் கூறின. அத்துடன் தமிழர்கள் அகதி முகாம்களில் படும் அவலங்களைப் புரிந்துகொள்ள இதுதான் சரியான தண்டனையெனவும் கூறின.

முஸ்லீம்கள் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மூதூரில்தான் வாழ்கிறார்கள் என அறியப்படுகிறது.... ஜனாப் நியாஸ் அவர்களின் கூற்றுப்படி மூதூர் நகரினதும் அதன் புறநகரத்தினதும் ஜனத்தொகை 35,319ஆகும். ஆனால் தற்போது இருப்பதோ 28,199 யாகும்.. மூதூரின் மொத்த ஜனத்தொகை 330,000ஆகும், இதில் 133,000 பேர் முஸ்லீம்கள். (Vacate Muthur, Muslims are told by suspected LTTE's auxiliary force, Asiantribune)

இப் பிரசுரத்தை யார் வெளியிட்டார்கள் என்பதல்ல இங்கு பிரச்சனை. ஏனெனில் இரு சாராரும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியவர்களே, ஈடுபட்டுள்ளவர்களே. ஆகவே ஒரு விசாரணைக் கமிஷனுக்குரிய நோக்கில் இதைப் பார்க்கவோ அல்லது விவாதிக்கவோ வேண்டாம். அப் பார்வையும் விவாதங்களும் புண்படுத்தப்பட்ட மக்களின் கோபத்தை சாந்தப் படுத்துவதற்காக ஒடுக்குமுறையாளர்களால் கடைப்பிடிக்கப்படும் ஒரு தந்திரோபாயமாக இருந்தாலும், விசாரணைகள் அவசியந்தான். இதை யார் செய்திருந்தாலும் அவர்கள் போர்க்குற்றவாளிகளென தண்டிக்கப்பட வேண்டியதும் அவசியந்தான். ஆனால் அவை இச் சமூக நிகழ்வுப் போக்கின் அரசியல் உள்ளடக்கத்தை நீர்த்துப் போகச் செய்து விடக்கூடாது.

IPKF காலத்தில் அதன் துணையுடன் முஸ்லீம்களுக்கு எதிராகப் பல தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. முஸ்லீம்கள் தமிழ்த் தேசியத்தின் மீதோ சிங்களத் தேசியத்தின் மீதோ நம்பிக்கை வைக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இரண்டுமே தேசிய அகங்காரங்கள்தான் என்பதை அவர்கள் புரிந்து வருகின்றனர்.

## 5.ஆ) **காலனியல் கால இன ஒழிப்புச் சம்பவம்**

1915-ல் முஸ்லீம் மக்களுக்கு எதிராக கண்டியில் ஆரம்பித்த சிங்கள பேரகங்காரத் தாக்குதல் இலங்கையின் தென்பகுதி முழுவதும் பரவத்

தொடங்கியது. பல சிங்களத் தலைவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், சிறையிலும் அடைக்கப்பட்டனர். இவர்களை விடுவிக்க தமிழ்த்தலைவர்கள் இங்கிலாந்து வரை சென்று கடும் முயற்சி செய்தனர். இதில் பொன். இராமநாதன் குறிப்பிடத்தக்கவர். இதனால் சிங்களத் தலைவர்கள் பாதுகாக்கவும் பட்டனர். இதற்கு பாராட்டுத் தெரிவிப்பதற்காக பொன்.இராமநாதன் லண்டனில் இருந்து திரும்பியபோது அவரை யானைமீது இருத்தி ஊர்வலம் நடத்தி செங்கம்பள வரவேற்பும் அளிக்கப்பட்டது.

இச் சம்பவம், இலங்கைத் தேசியம் முஸ்லீம் எதிர்ப்புக் கொண்டதாக இருந்தது என்பதை SEP (socialist equality party) இவ்விதம் கூறுகிறது;

மறுமலர்ச்சி இயக்கம் - சிங்கள,பௌத்த -, வெளிப்படையாக தமிழ் எதிர்ப்பு இயக்கமாக இருக்கவில்லை. அது பிரித்தானிய எதிர்ப்பு இயக்கமாகவே இருந்தது. ஆனால் தமிழ் முஸ்லீம்களுக்கு எதிரான இன ஒழிப்பு நடவடிக்கையின்போது இவ் இயக்கம் தனது இனவாதக் குணாம்சத்தை வெளிக்காட்டியிருந்தது. 1915 ஆம் ஆண்டு, செல்வந்த சிங்களவர்களால் வழிநடத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு எதிரான, இனப் படுகொலையின் பின்னர் அநகாரிக தர்மபால எழுதுகிறார்: சிங்களவர்கள் பௌத்தம் இல்லாது வாழ்வதைவிட சாவையே விரும்புகின்றனர். பிரித்தானிய அதிகாரிகள் சுடலாம், தூக்கிலிடலாம்... அல்லது எதையும் சிங்களவர்களுக்குச் செய்யலாம். எது நடந்தாலும் மூர்களுக்கும்-Moors- சிங்களவர்களுக்கும் இடையில் எப்போதுமே விரோதஉறவே நிலவும். (A reply to an LTTE supporter Marxism and the national question in Sri Lanka Part One ,wsws.org Peter Symonds )

முஸ்லீம் மக்களை ஒரு இனக்குழும-மத வழிப் பிரிவினராகக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காக சிங்கள, தமிழ் இனவாதிகள் 'மூர்' எனும் பதத்தையே பயன்படுத்துவர். இது தமிழில் 'சோனகர்' என்பதற்கு ஒப்பானது. செல்வந்த சிங்களவர்கள் என்று இங்கு குறிப்பிடுவது தென்மாகாண வர்த்தகர்களையே ஆகும். இவர்களில் பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்கள். தரகு வர்த்தக முதலீடுகளை உருவாக்கிக் கொள்வதற்காக மதம் மாறியவர்கள். அம் முதலீடுகளை விரிவுபடுத்தவும் பெரிதுபடுத்தவும் வேண்டி தமது முதலீட்டுக்கு தேசிய வடிவம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் தாம் தேசிய அரசியலுக்கு வரவேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஆகவே பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்தார்கள். இவ்வியக்கத்தின் தந்தையான *அநகாரிக தர்மபால, ஒரு பௌத்த துறவியல்ல என்பதுவும், இவர் ஒரு பிரபல கிறிஸ்துவ வர்த்தகக் குடும்பத்தின் மகன்* என்பதுவும், இவரின் நன்கொடையாளர்கள் கரையோர கிறிஸ்துவ வர்த்தகர்கள் என்பதுவும் அவதானிக்கப்பட வேண்டிய தகவல்கள். கண்டிய, கரையோரச் சிங்கள உயர் குடும்பங்களைப் பற்றிய ஆய்வுகள் நிறையவே உள்ளன. குமாரி ஜெயவர்த்தனவின் ஆய்வு இதில் குறிப்பிடத் தக்கது.

சைவ மற்றும் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்கள் இருவரும் முஸ்லீம் இனப் படுகொலையில் தோழர்களாகச் சந்திக்கின்றார்கள். சைவ மறுமலர்ச்சித் தலைவர் ஆறுமுக நாவலரின் அரசியல் பிரதிநிதிதான் பொன். இராமநாதன். அது மட்டுமல்ல இராமநாதனுக்கு பிரித்தானிய அரசு நைற்- Knight- பட்டமும் வழங்கியிருந்தது. அப்பட்டத்தின் அடைமொழிதான் 'சேர்' ஆகும். முஸ்லீம்கள் காலனியல் காலத்தில் இருந்தே இலங்கையின் இரு பெரும் தேசியங்களாலும் அடக்கப்பட்டே வந்துள்ளனர்.

## 5.இ) **முஸ்லீம்களின் மதச்சார்பின்மை**

இலங்கையைப் பொறுத்தவரையில் இலங்கை முஸ்லீம்கள் இன்றுவரை தமது சிறுபான்மையினத் தேசியத்தை தமது பண்பாட்டுக் கட்டுமானத்தின் துணைகொண்டுதான் பாதுகாத்து வருகிறார்கள். இதற்காக அவர்கள் ஒரு மதப் பிரிவினைவாதிகளாகவோ அல்லது மத ஒருமுனைவாதிகளாகவோ இருக்கவில்லை. தமது அரசியல் வாழ்வில் தமது மத நம்பிக்கையைப் புகுத்தாத ஒரு உயர்ந்த பண்பாட்டை பின்பற்றி வந்திருக்கிறார்கள். இவர்கள்தான் உண்மையிலேயே இலங்கையின் மதசார்பின்மைக் கோட்பாட்டை பின்பற்றுபவர்களாக இருந்துள்ளார்கள். மதநீக்கம் அடைந்து வாழ்வது, கடவுள் மறுப்பாளர்களாக வாழ்வது மதசார்பின்மையல்ல. சமூகத்தின் அரசியல் கட்டுமானத்தில் மதத்தையோ, மத நிறுவனங்களையோ தலையிட விடாமல் பார்த்துக் கொள்வதுதான் மதசார்பின்மையாகும். அதாவது பல மதப்பிரிவினர் வாழும் ஒரு நாட்டில் மத நம்பிக்கை என்பது அந்தந்த சமூகத்தின் தனிப்பட்ட பிரச்சனை. அதை வளர்ப்பதுவும், சீர் செய்வதுவும் அந்தந்த மதப்பிரிவினரின் பிரச்சனை. அதை ஒட்டுமொத்த சமூகத்தின் அல்லது அந் நாட்டின் பொதுப் பிரச்சனையாகாமல் அம் மதப்பிரிவு பார்த்துக் கொள்ள வேண்டும். அதேநேரம் அம் மதம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அந் நாட்டிற்கும் பிரச்சனையாகாமல் அம் மதப்பிரிவு பார்த்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் நோக்கில் இஸ்லாம் இலங்கையில் பிறமதப் பிரிவினருக்குப் பிரச்சனையை உருவாக்கவுமில்லை, தான் இலங்கையில் ஒரு பிரச்சனையாக மாறவுமில்லை.

அரசியல் கட்டுமானம், பண்பாட்டுக் கட்டுமானம் என்று தனித்தனியாக குறிப்பிடும் போது அரசியலுக்கும், பண்பாட்டுக்கும் இடையே தொடர்பில்லையென்று கருதிவிடக் கூடாது. பண்பாட்டுக் கட்டுமானத்தின் பல கூறுகளில் அரசியலும் ஒன்று. பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான அரசியல் தன்மட்டில் தான் ஒரு தனியான கட்டுமானமாகவும் உள்ளது. பல மதப்பிரிவுகள் உள்ளதோர் நாட்டில், மதப்பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டுக் கட்டுமானங்கள் பலதாக இருக்கும். அது ஒரு ஜனநாயக நாடாக இருந்தால், அக்கட்டுமானங்கள் ஒன்றுடனொன்று பகைமை உறவுகள்

அற்றதாகவும் இருக்கும். மதமற்றவர்களினதும், கடவுள் மறுப்பாளர்களினதும் பண்பாட்டுக் கட்டுமானமும் இப் பலவற்றில் சிலவாகும். அதுதான் அரசியல் ஜனநாயகம். அப்போதுதான், அப்போது மாத்திரந்தான் அனைத்து மதங்களிலும் உள்ள அனைத்து நற்பண்பாட்டுக் கூறுகளையும் வடிகட்டி, திறனாய்வுக்குள்ளாக்கி, சமூகம் சுயமாக உள்வாங்கிக் கொள்ளலும், மத நிறுவனங்கள் வாடி வதங்கி உலர்ந்து சருகாகி விடுதலும், மக்கள் மதத்தை மிக மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும், பவுத்திரமாகவும் தத்தம் நாடுகளின் தொல்பொருட்காட்சிச் சாலைகளில் சேர்க்கப் போவதும் சாத்தியமாகும்.

ஆனால், இவ்விதமான ஜனநாயக நாட்டின் அரசியல் பண்பாடென்பது முன் சொன்ன பல கட்டுமானங்களுக்கும் பொதுவானதாகவும் அவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அமையும். இதனால் இது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தனியானதோர் பண்பாட்டுக் கட்டுமானமாகின்றது. அத்துடன் நிறுவனக் கட்டுமானமுமாகின்றது. மத நிறுவனங்களிலும் விட சக்திபெற்ற நிறுவனமுமாகின்றது. மதச் சார்பின்மை, வேற்றுமையில் ஒற்றுமை, பலமானவர் பலவீனருக்கு விட்டுக் கொடுப்பதை அடிப்படையாகக் கொண்ட நட்பு, தனது பிரிவின் பண்பாட்டுக் கூறுகளை தான் நேசிக்குமாப் போல் பிறரின் பண்பாட்டுக் கூறுகளைத் தானும் நேசித்தல். (உன்னைப்போல் பிறரையும் நேசி என்பது எளிமையான வாக்கியம்), பிறரின் பண்பாட்டுக் கூறுகளில் சமூக சீர்திருத்தம் செய்வதற்கு முன்னர் தமது கூறுகளில் அதைச் செய்தல். அதன் மூலம் பிற பிரிவினர்களுக்கு தனது பிரிவை ஒரு முன்னுதாரணமாகக் கொணரல். ('உன்னை நீ திருத்திக்கொள் உலகம் தானாகவே திருந்தும்' சினேக முரண்பாடுகளை சுமூகமாகத் தீர்ப்பதற்கு இது பொருத்தமான வாக்கியம்) அரசியல் கட்டுமானத்தின் வேலைத்திட்டங்கள் வெறுமனே அரசியல் வேலைத்திட்டங்கள் மாத்திரமல்ல, அவை அரசியலின் பண்பாட்டுக் கூறுகளாகும், அவை வாழ்க்கை நெறிகளாகும்..

ஆனால் இலங்கை (ஸ்ரீலங்காவும் சரி, தமிழீழமும் சரி) ஒரு ஜனநாயக நாடல்ல. அதன் அரசியல் கட்டுமானம் முன் கூறிய தன்மைகளைக் கொண்டதுமல்ல. அப் பண்பாட்டுக்கூறுகள் ஸ்ரீலங்கா மற்றும் தமிழீழ மேட்டுக் குடியினரிடம் இல்லை. இதனால், தமக்கென்றோர் தனியான அரசியல் கட்டுமானத்தின் தேவை என்ற நிலைக்கு முஸ்லீம்கள் தற்போதுதான் வந்துசேர்ந்துள்ளார்கள். அப்படிச் சொல்ல முடியாது, வந்துசேர நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள் என்றே சொல்லவேண்டும். பண்பாட்டுக் கட்டுமானத்துள் மாத்திரம் இருந்த ஒரு மதம், தமிழ்த் தேசியக் கட்டுமானத்தில் வைத்திருந்த நம்பிக்கை உடைந்ததால், தனக்கென்றோர் அரசியல் கட்டுமானத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது. பௌத்த மாறாமரபியலுக்கு இனி இஸ்லாமும் ஒரு சவாலாக அமையலாம். மத-மாறாமரபியல் தாக்குதலுக்கெதிராகத் தோன்றும் ஒரு தேசிய இயக்கத்தில்

ஆக்கக் குணாம்சங்களையும் விட இராணுவத் தற்பாதுகாப்பை முன்நிறுத்திய அழிவு, பழிக்குப் பழி ஆகிய குணாம்சங்களே மேலோங்கியிருக்கும் என்பதை ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும்.

ஆனால், இது இன்னோர் மத-மாறாமரபியல் இயக்கமாகத்தான் இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல. முஸ்லீம் தேசிய இயக்கங்களுள் அல்கொய்தாவும், தலிபான்களும் மாத்திரமே தீவிர மத-மாறாமரபியல் இயக்கங்களாகும். ஏனையவை இஸ்லாம் மதத்தை அரசியல் கட்டுமானத்துடன் இணைத்தவை, ஆனால் அவை மத-மாறாமரபியல் இயக்கங்களல்ல.

ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் வர்த்தகச் சுரண்டல் காலகட்டத்தின் போது, அவர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய சுதேசிகள் தத்தமது பகுதிகளில் நிலைகொண்டிருந்த மதத்தின் பண்பாட்டுக் கட்டுமானத்தையும், நிர்வாகக் கட்டுமானத்தையும் அந்நியர்களுக்கு எதிரான போராட்டங்களில் பயன்படுத்திக் கொண்டனர். இதனால் சுதேசிய மதங்களை அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் அடக்கினார்கள். தமது மதத்தை 'அன்பாகவும்' பலவந்தமாகவும் திணித்தார்கள். இன்னமும்கூட, மதங்களை அவ்விதம் பயன்படுத்த முடியும். சமூக ஜனநாயகத்தை நிலை நிறுத்தவும் கூட மதங்களைப் பயன்படுத்த முடியும். அதற்குரிய வீரியம் மதங்களிடம் உண்டு. இஸ்லாம் மதம் இப்பங்கை ஆற்றிவருகிறது. இலங்கையிலும், பிற பகுதிகளிலும் பௌத்தமதம் இவ்விதம் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் நிறையவேயுண்டு. அம்பேத்காரையும், அயோத்திதாசப் பண்டிதரையும் நினைத்துப் பார்க்கலாம். அதேபோல் வள்ளலாரையும், ராமானுஜரையும் மறக்காமல் இருப்போம். சில ஆபிரிக்க நாடுகளிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் கிறிஸ்துவ மதம் வகிக்கும் மக்கள் சார்பு நிலையையும் பதிவு செய்து கொள்ளல் நல்லது. தலிபானிஸம், இந்துத்துவம், மகாவம்சம் ஆகிய மத-மாறாமரபியல் கோட்பாடுகளை வைத்துக் கொண்டு, மதமென்பது மாறாமரபியல்த் தன்மை கொண்டது என்ற முடிவுக்கு வரமுடியாது. அது மிகவும் ஆபத்தான முடிவாகும். எவ்விதமோ, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் இன்று பயன்பாட்டிலுள்ள மதங்களில் இஸ்லாமே முன்னணிப் பாத்திரம் வகித்துவருகின்றது. இதனால்தான், தலிபானிஸத்தை வஹாபிஸத்தின் அரசியல் வெளிப்பாடு - முன்நிறுத்தி இஸ்லாமுக்கு எதிரானதோர் யுத்தத்தை மேற்குலகம் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதை வளர்த்துவிட்டதும் அமெரிக்காதான் என்பதை மறவாதிருப்போமாக.

இலங்கையில் உருவாகிவரும் முஸ்லீம் தேசிய இயக்கம் ஒரு மத-மாறா மரபியல் இயக்கமாக மாறுமானால் ஆசியாவில் பாக்கிஸ்தானின் ஒரு ஜூனியர் பங்காளி அல்லது ஒரு தெற்காசிய லெபனான் உருவாகிறதென வேதனைப் படவேண்டியிருக்கும். அவ்விதம் இல்லையானால் இலங்கை

உலக முற்போக்குச் சக்திகளுக்கு ஒரு முன்னோடியாக இருக்கும். எப்படி அமைந்தாலும் MR க்குத் தொல்லைதான். அவருக்கு மாத்திரமல்ல தமிழீழப் பேரகங்காரவாதிகளுக்கும் தொல்லைதான். முன்னையது நடந்தால் அவர்களுக்கும் தொல்லை மக்களுக்கும் தொல்லை. பின்னையது நடந்தால் இலங்கை மக்களுக்கு நல்லதோர் நண்பன் கிடைப்பான். MR க்கும், தமிழீழப் பேரகங்காரவாதிகளுக்கும் நல்லதோர் எதிரி கிடைப்பான்.

## 5.ஈ) யாழ் முஸ்லீம்களும் இடதுசாரிகளும்

யாழ்ப்பாணத் தமிழ் முஸ்லீம்கள் ஒட்டுமொத்த அரசியல் கட்டுமானத்துடன் எந்த ஒதுங்கிநிற்றலும் (Reservation) இன்றிக் கலந்திருந்தனர் என்பதற்கு அதாரமாக சில சம்பவங்களை முன்வைக்க விரும்புகிறோம். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீன சார்பு) யாழ்-வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள முஸ்லீம் வட்டாரத்தில் மிகுந்த ஆதரவு பெற்றிருந்தது. கட்சிப் பத்திரிகையின் ஆசிரியர் சுபைர் இளங்கீரன் இப் பகுதியைச் சேர்ந்தவராகும். கட்சி உறுப்பினர்கள் சிலரும், மிகப் பலம்மிக்க வாலிபர் சங்கம் ஒன்றுமிங்கு இயங்கியது.

இங்கு வாழ்ந்த முஸ்லீம்களில் பெரும் பான்மையினர் சிறு அங்காடி வியாபாரிகளாகவும் (இவர்கள் அன்றாடங் காய்ச்சிகளாகவே) வாழ்ந்தனர். மற்றோர் பகுதியினர் சிறு வர்த்தகர்களாகவும், கணிசமான தொகையினர் மூளை உழைப்பாளர்களாகவும் இருந்தனர். பெரும் வர்த்தகர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் மிகச் சிலரே. மூளை உழைப்பார்களில் ஒரு பகுதியினரைத்தவிர மிகப் பெரும்பான்மையினர் அமைப்புச் சாரா தொழிலாளர்களாகவே இருந்தனர். ஒழுங்கமைக்கப்பட்ட தொழில் துறைகளிலான தொழிற்சங்க வேலைக்கு மட்டுமே பழக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியால் இவர்களை அணிதிரட்ட முடியவில்லை. அரச ஊழியர்கள் என்ற பக்கத்தில் ஆசிரியர்களே அதிகளவில் இருந்தனர். விவசாயம் என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. அதற்குரிய நிலம் இங்கு இல்லை.

இவர்களின் குடியிருப்புகள் விரிவாக்கப்படுவதற்கு அவசியமான நிலங்கூட இருக்கவில்லை. ஒரு சிறு பகுதி (பொம்மைவெளி) தவிர சுற்றிவர இருந்த அனைத்துப் பக்கங்களிலும் (வண்ணார்பண்ணை, நாவாந்துறை, கொட்டடி, ஓட்டுமடம்) முஸ்லீம் அல்லாத தமிழர்களே இருந்தனர். இதில் வண்ணார்பண்ணை மட்டும் உயர் சாதிய, நகர வர்த்தக நடுத்தர வர்க்கத்தினராகும். இவர்கள் இந்துக்கள். கொட்டடி என்ற கிராம வாசிகள் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த நகர்ப்புறத் தொழிலாளர்களாகும். இவர்களும் இந்துக்களாகும். நாவந்துறை என்ற கிராமம் ஒரு மீனவர் குடியிருப்பாகும். இது சிறு மீனவர்களும், மீன்பிடிக் கூலிகளும் வாழும் பகுதியாகும். இங்கு

பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்களாகும். ஓட்டுமடம் எனும் கிராமம் உயர் சாதியினரின் வர்க்கரீதியான கீழணி வாழும் குடியிருப்பாகும். இவர்கள் இந்துக்கள். இந் நான்கு ஊர்களும் குடிகள் அடர்த்தியாக வாழும் பிரதேசமாகும். இவர்களுக்கும் கடுமையான நிலப்பிரச்சனை இருந்தது. முஸ்லீம் வட்டாரத்துக்கும் இந் நான்கு ஊர்களுக்கும் இடையேயான எல்லைகள் ஒரு வீதியாகவோ அல்லது சிறு கைஒழுங்கையாகவோதான் இருந்தது. பொம்மைவெளி மட்டும் சற்று வித்தியாசமானது. முஸ்லீம் வட்டாரத்துக்கும் ஓட்டுமடத்துக்கும் இடையில், இரு பகுதியும் உரிமை கொண்டாடக் கூடிய அரச புறம்போக்கு நிலத்துண்டொன்று உண்டு. அதுதான் பொம்மவெளி. இதையொட்டி முஸ்லீம் வட்டார முஸ்லீம் தமிழர்களுக்கும், ஓட்டுமடம் இந்துத் தமிழர்களுக்கும் இடையே சிற்சில மோதல்கள் அவ்வப்போ எழும். ஆனால் அவை பெரிதாக வளர்வதில்லை. அவை நிரந்தரப் பகையாகவும் இருந்ததில்லை. இரு கிராமத்தவர்களுக்கும் இடையே நட்புறவும் நிலவியது. மற்றும்படி பிற மூன்று கிராமத்து இந்து, கிறிஸ்துவ தமிழர்களுக்கும் முஸ்லீம் வட்டார முஸ்லீம் தமிழர்களுக்கும் இடையே எந்த மோதல்களும் உருவாகியதில்லை. அதாவது முஸ்லீம் அல்லாத தமிழர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இந்த முஸ்லீம் தமிழர்களுக்கு பெரிய கட்சிகளின் அரசியல் பாதுகாப்பெதுவும் தேவைப்படவில்லை. தென் இலங்கையில், பெரிய கட்சிகளின் தயவை நம்பி வாழும் முஸ்லீம்களின் நிலையில் இவர்கள் இருக்கவில்லை. இந்த அரசியல் தந்திரத்துடன் இவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் இணையவில்லை. இவ் வண்ணார்பண்ணைத் தமிழ் முஸ்லீம்களின் குடியிருப்பு நிலப்பிரச்சனை பற்றியும் கம்யூனிஸ்ட் கட்சியிடம் எந்த வேலைத்திட்டமும் இருக்கவில்லை. அப் பிரச்சனையை வெளிக்கொணர அவர்கள் எந்த முயற்சியும் எடுக்கவுமில்லை.

யாழ்குடாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சீன சார்பு) வேலைத்திட்டம் பொது இடங்களில் தீண்டாமையை ஒழிப்பதாகவே இருந்தது. வேறு வேலைத்திட்டங்களெதுவும் இருக்கவில்லை. முஸ்லீம் வட்டாரத்துள் விளிம்புநிலையாக்கம் நடந்துகொண்டுதான் இருந்தது. மனிதர்கள் எங்கெங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கங்கெல்லாம் வர்க்க வகைப்படுத்தல் எனும் நிகழ்வுப் போக்கு ஓய்வின்றி நடந்து கொண்டுதான் இருக்கும். ‘கடவுளுடன்’ இரண்டறக் கலந்தாலும் கூட அது அங்கும் தொடரும். ‘கடவுள்களையும்’ அது விட்டுவைக்கவில்லை. முஸ்லீம் வட்டாரம் மூன்று வீதிகளாக கட்டுமானப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்-மானிப்பாய் பிரதான வீதியைத் தனது எல்லையாகக் கொண்ட பகுதி முதலாவது தெருவாகும். இங்கு வசிப்பவர்கள் நடுத்தரவர்க்கத்தின் மேலணியும் நடுவணியுமாகும். தலித் குடியிருப்புகளையும் (கொட்டடி), மீனவக்

குடியிருப்புகளையும் (நாவாந்துறை), பொம்மைவெளியையும் எல்லையாகக் கொண்டு வாழ்பவர்கள் மூன்றாவது தெருவினர் என அழைக்கப்படுவர். இவர்கள்தான் அன்றாடங்காச்சிகளாகும். நடுத்தர வர்க்கத்தின் கீழணியும் மூளை உழைப்பாளர்களும் வாழும் பகுதி இரண்டாவது தெரு என அழைக்கப்படுகிறது. இது முன் சொன்ன இரு தெருக்களுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். ஆனாலும் இம் முஸ்லீம் தமிழர்களுக்கிடையே தீண்டாமை இருக்கவில்லை.

இவ்வித நிலமையில் முஸ்லீம் தமிழர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் (சீன சார்பு) இவ்வளவு நெருக்கமாக இணைந்து கொண்டது இவர்களின் மிக உயர்வான அரசியல் பண்பையும், விழிப்புணர்வையும் காட்டுகிறது. மத நம்பிக்கை அதற்கோர் தடையாக இருக்கவில்லை. தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் இரகசியமான இராணுவக் கூறுகளாக இவர்கள் அளப்பரிய பங்கு வகித்தார்கள்.

இக்பால் எனும் தோழரே முஸ்லீம் தமிழ் இளைஞர்களுக்கு தலைமை தாங்கினார். இவரின் பங்களிப்பு இல்லையேல் நிச்சாமம், மாவிட்டபுரம். மந்துவில் ஆகிய போராட்டங்கள் வெற்றி பெற்றிருக்கவே முடியாது. இவர் அச் சமூகத்தில் இருந்து தனித்து வரவில்லை ஒரு குழுவுடன் வந்து அக்குழுவின் தலைவராகவே செயற்பட்டார். தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தின் வரலாறு பதியப்படும்போது இவரின் பெயரும் இடம் பெற வேண்டும். அப்படியில்லையானால் அதைப் பதிவு செய்தவர்களில் ஏதோ கோளாறு இருக்கின்றது என்றே அர்த்தப்படும். இவர் மேடைகளில் தோன்றுவதில் நாட்டம் இல்லாதவர். ஆனால் நல்லதோர் அரசியல்-இராணுவ அமைப்பாளன். இராணுவ கட்டமைப்பொன்றை அமைக்கும் நோக்கம் கட்சியின் தலைமைக்கு எப்போதுமே இருக்கவில்லை. இதனால் அவ்வித அமைப்பொன்றை அமைப்பதற்குக் கிடைத்த நல்லதோர் சந்தர்ப்பத்தை கட்சி தவறவிட்டுவிட்டது. கல்வி அமைச்சர் பதியுதீன் முகமத்தால் முன்வைக்கப்பட்ட தரப்படுத்தல் மசோதாவின் புகழ்பாட அமைச்சர் தானே நேரடியாக யாழ்ப்பாணம் வந்திருந்தார். அம் மசோதாவுக்கெதிராக யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பு இருந்தது. முஸ்லீம் வட்டாரம் தனக்கு எதிர்ப்புக் காண்பிக்காதென்ற துணிச்சலில் அங்கு அவருக்கு வரவேற்பொன்று வழங்கப்பட்டது. இக்பாலும் அவரின் தோழர்களும் முஸ்லீம் வட்டாரத்தில் வைத்து கறுப்புக்கொடி காட்டினர். அப்போதும் அதன் பின்னரும் ‘வண்டில்’ எனும் முஸ்லீம் தமிழ்த் தாதாவின் (பொறுக்கி) தலைமையில் ஒரு கோஷ்டி இந்த இளைஞர்களை பகிரங்கமாகத் தாக்கியது. இவர்களின் அரசியல் இருத்தலுக்கே சவால் விட்டது. சில நாட்களில் ‘வண்டில்’ சில இளைஞர்களால் பகிரங்கமாகவே கொல்லப்பட்டான். எவரும் சாட்சி சொல்ல வரவில்லை. இக்பாலும், கே.டானியலும் நெருங்கிய நண்பர்கள். கட்சியால்

மக்கள் சீனத்துக்கு அனுப்பப்பட்டவர்களில் இவருமொருவர். இக்பால் ஒரு தையல் தொழிலாளி. திருமணமானவர். கட்சி செயல் இழந்த பின்னர் இவருக்கும், இவரின் நெருங்கிய தோழர்களுக்கும் என்ன நடந்ததென்பது தெரியவில்லை. அதன் பின்னர் கீழைக்காற்று இயக்கம் (தொடரும் பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளது) செயல்பட்டபோதும் முஸ்லீம் தமிழ்த் தோழர்கள் அவ்வியக்கத்திலும் இணைந்து கொண்டனர். பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டனர்.

யார் இந்த 'வண்டில்'? முஸ்லீம் தமிழர்களுக்கும் சுற்றியிருந்த கிராமத்து முஸ்லீம் அல்லாத் தமிழர்களுக்கும் இடையே உராய்வுகள் ஏற்படும் போது இவர்தான் முஸ்லீம்களின் சார்பில் களம் இறங்கும் போராளியாக இருந்தார். குறிப்பாக பொம்மைவெளி முஸ்லீம் விளிம்பு நிலை மக்களின் முன்னணி வீரனாக இருந்தார். இவர் ஒரு தனிமனித விடுதலைப்படை. ஆனால் காலப்போக்கில் இப்படை முதலாந் தெருவின் வசதி படைத்த முஸ்லீம்களின் நண்பனாகவும் மாறியது. முதலாந் தெருவினரிடம் வட்டிக்கு நாளாந்தக் கடன் வாங்கித்தான் மூன்றாந்தெருவினர் அங்காடி வியாபாரத்துக்குச் செல்வார்கள். இக் கொடுக்கல் வாங்கலில் 'வண்டில்' ஒரு பக்கச் சார்பாக தலையிட ஆரம்பித்தார். இதனால் அவருக்கு ஒரு பக்கம் வரவேற்பும் மற்றோர் பக்கம் அவர்மீது ஒரு வெறுப்பும் இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்தின் பின் சண்டைமூலம் அல்லாமல் சமாதானம் மூலம் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டு வந்தன. இதனால் இந்த தனிமனித விடுதலைப் படையின் தேவை இல்லாமல் போனது. அல்லது குறைந்தது. ஆனால் அவரின் அடுத்தபக்கம் மேவிவர ஆரம்பித்தது. இந்த சந்தர்ப்பத்தில்தான் அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது.

இது சரியா தப்பா என்றோர் வாதமும் அப்போது கட்சிக்குள் இருந்தது. அவருக்கு வழங்கிய தண்டனை சரிதானென்று சிலர் அடித்துப் பேசினர். சரியல்ல, அவரைவிட சக்திமிக்க மிக உயர்வான அணியொன்று உருவாகியுள்ள நிலையில், அவர் மன்னிக்கப்பட்டு அவரின் சண்டித்தனம் பறிக்கப்பட்டு அவர் ஒரு போராளியாக மாற வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. 'வண்டிலில்' புலிகளைக் கண்டால் அதில் தப்பெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இக்பாலில் காண்பதற்கு யாரும் இல்லாத நிலையில் இவ் விவாதம் காலப் பொருத்தமற்றதாக மாறுகிறது.

இங்கு குறித்துக்காட்ட வந்த விடயம், தமிழ் முஸ்லீம்கள் எவ்விதம் தேசிய அரசியல் கட்டுமானத்துடன் இணைந்து செயற்பட்டனர் என்பதையேயாகும். தேசிய அரசியல் கட்டுமானத்தில் ஈடுபடுவதில் அவர்கள் யாருடனும் லாபநட்ட வியாபாரம் நடத்தவில்லை. வண்ணார்பண்ணையைத் தவிர மற்றைய மூன்று

கிராமங்களிலும் கிராமத்துக்கு ஒன்றென கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கங்கள் இருந்தன. இதனால் கிராமங்களிடையேயான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு புறத்தில் இருந்து யாரும் வரவேண்டிய அவசியம் இருக்கவில்லை. இவ் வாலிபர் சங்கங்களுக்கு மக்களிடையே நன் மதிப்பு இருந்ததனால், வாலிபர் சங்கங்கள் தமக்குள் பேசியே பிரச்சனைகளைத் தீர்த்துக் கொண்டன. இதனால் முஸ்லீம் தமிழர்களுக்கெனத் தனியான தேசிய இயக்கங்கள் எதுவும் அவசியப்படவுமில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் இருத்தல் அவ்வித தேவைக்கு இடமளிக்கவுமில்லை.

முழு இலங்கையிலும் இவ்விதமானதோர் நிலை தோன்றினால் எப்படியிருக்கும்? மே 18 என்றோர் நினைவு நாள் வந்திருக்கமாட்டாது. இது யாழ்குடாநாட்டில் தேசிய ஐக்கியத்தின் பொற்காலம் என்று சொன்னால் அது மிகையாகுமா?

### 5.உ) **ஒலுவில் பிரகடனம்**

முதலில் முஸ்லீம் மக்களின் குடிப்பரம்பல், மொழிப்பயன்பாடு ஆகிவை பற்றி புரிந்துகொள்வோம்.

#### 5.உ.1) **குடிப்பரம்பல்**

ஈழ நன்நாட்டில் முஸ்லீம்கள் ஒரு தனி இனமாகவே கருதப்படுகின்றனர். 1971-ம் ஆண்டு நடைபெற்ற பொதுமக்கள் கணக்கெடுப்பின்படி ஈழத்து முஸ்லீம்களின் எண்ணிக்கை 9,09,000ஆகும். ஈழத்தின் சிங்கள மற்றும் தமிழ் மொழிப் பயன்பாட்டைப் பொறுத்தவரை ஈழத்தை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவு சிங்களத்தை தாய் மொழியாகக் கொண்ட பெரும்பான்மையினர் வாழும் பகுதியாகும். இது மேல் மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம், சப்ரகமுவா மாகாணம் ஆகிய மாகாணங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கு சிங்களவர்களின் தொகை நூற்றுக்கு எழுபத்திஐந்தாகும். மொத்த முஸ்லீம்களில் 50% இப்பகுதியில் தான் வாழ்கின்றனர்.

வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இரண்டாவது பிரிவில் அடங்கும். இப்பகுதியில் நூற்றுக்கு எழுபத்தைந்து விழுக்காட்டினர் தமிழையே தாய் மொழியாகக் கொண்டவர்களாகும். மீதம் 25% சிங்களவர்கள். மொத்த முஸ்லீம்களில் 30% இப்பகுதியில் வாழ்கின்றனர்.

மூன்றாம் பிரிவில் மத்திய மாகாணமும், ஊவா மாகாணமும் அடங்கும். இங்கு நூற்றுக்கு ஐம்பது முதல் அறுபது விகிதம்வரையான மக்கள் தமிழையே தாய்மொழியாக கொண்டுள்ளனர். மொத்த முஸ்லீம்களில் 20%

இப்பகுதியில் வாழ்கின்றனர்.

அண்மையில் நடந்த கணக்கெடுப்பில் கொழும்பு மாநகரத்தில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் தமிழையே தாய்மொழியாகக் கொண்டவர்களென்பது தெரியவந்துள்ளது. சிங்களவர்களிடையே வாழும் முஸ்லீம்கள் தமிழ் மொழியையே வீட்டு மொழியாக வழங்கி வருகின்றனர். இதற்குக் காரணம் இல்லாமலில்லை.

ஈழத்து முஸ்லீம்களுக்கும் தமிழ் மொழியை வழங்கும் இனத்தார்க்கும் இடையே நெருங்கிய தொடர்பு முக்காலந்தொட்டே இருந்து வந்தது. ஈழத்தில் முதன்முதலில் குடியேறிய முஸ்லீம்களுள் பெரும்பாலானோர் தமிழ்நாட்டில் இருந்தே இங்கு வந்தார்கள். இவ்வாறு தமிழ்நாட்டிலிருந்து ஈழத்தில் வந்து குடியேறிய முஸ்லீம்களின் மூதாதைகள் வியாபாரத்தின் பொருட்டு அரபு நாட்டில் இருந்து வந்து தமிழ்நாட்டில் குடியேறிய அராபியரே. இவர்கள் ஈழத்தில் குடியேற வரும்போது பெரும்பாலும் தமிழ்நாட்டுப் பெண்களையே தமது மனைவியராகக் கொண்டு வந்திருக்கலாம். இந்நெருங்கிய தொடர்பே ஈழத்து முஸ்லீம்களை தமிழ் மொழியை வீட்டுமொழியாகக் கொள்ள ஊக்கியது என்று கொள்ளல் பொருத்தமுடையது (இஸ்லாமும் இன்பத் தமிழும், டாக்டர் முகமது உவைஸ்).

### 5.உ.2) **நிலவும் அரசியல் போக்கு**

சமீப வருடங்களில் முஸ்லீம் சமூகத்தின் அரசியல் நீரோட்டம் பல அடிப்படை மாற்றங்களுக்கு உள்ளாகிவருகிறது. அடிப்படை மாற்று நாடும் அவாவும், போர்க்குணமும் இவர்களின் அரசியல் சிந்தனைகளாக உருவாகி வருகின்றன.

2003 ஜனவரி 23-ல் கிழக்கு மாகாணத்தின் ஒலுவில் எனும் சிறு நகரத்தில் வைத்து, பெரும் கோபத்துடனும், நம்பிக்கையுடனும், மாணவர்களும், செயல்பாட்டாளர்களும் ஒப்பமிட்டு உருவாக்கப்பட்டதுதான் ஒலுவில் பிரகடனமாகும். சுமார் 30,000 முஸ்லீம் மக்கள் பங்குபற்றியிருந்தனர். முஸ்லீம்கள் அகவய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையும், பாரம்பரியத் தாயகக் கோரிக்கையையும், சுயாட்சியையும் (Autonomy) பகிரங்கமாக முன்வைத்தது இதுவே முதல் தடவையாகும். முஸ்லீம் தேசியவாதம் போர்க் குரல் எழுப்பி வீதிக்கு வந்து ஆர்ப்பாட்டம் நடத்திய நாளும் இதுதான். இதை வட்டுக்கோட்டைப் பிரகடனத்துடன் ஒப்பிடப்படலாம் என்றோர் கருத்தும் உண்டு. ஆனால் நிச்சயமாக இவ்விதம் இல்லை. இது பற்றிய ஆய்வு கீழே தனிப்பகுதியாகத் தரப்பட்டுள்ளது. இக் கோரிக்கை வடக்குக் கிழக்கையே தனது தாய்ப் பிரதேசமாக முன் வைத்தது. முன்வைக்கப்பட்ட காலம்,

ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்ட காலகட்டமாகும். இச் சமாதானப் பேச்சுவார்த்தை புலிகளையே தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டிருந்தது. இதை ஓர் அரசியல் திணிப்பாகவே முஸ்லீம் மக்கள் கருதினர். சிங்களப் பேரகங்காரவாதிகளின் U.N.P-ப் பிரிவும், தமிழ்ப் பேரகங்கார வாதிகளும், அவர்களின் ஆசானான மேற்குலகும் இணைந்து முஸ்லீம் மக்களின் மீது செலுத்திய திணிப்பேயாகும். இரண்டு ஓநாய்களும் அவர்களின் மேய்ப்பனும் இணைந்து ஆட்டுக்குட்டியின் எதிர்காலம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தின. இவ் அதிகாரத் திணிப்பு முஸ்லீம் தேசியத்தின் தோற்றத்திற்கான உடனடிக் காரணமாக இருந்தது. இப் பேச்சுவார்த்தையில் முஸ்லீம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமை ஸ்ரீலங்கா அரசுக்கோ, புலிகளுக்கோ இல்லை! முஸ்லீம்களுக்குத் தனியான பிரதிநிதித்துவம் வேண்டும்! ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்துவதே இப் பிரகடனத்தின் உடனடிக் குறிக்கோளாக இருந்தது. சமாதானப் பேச்சுவார்த்தை அரங்கம் இக் கோரிக்கைகளை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது. ஆனால் முழுமையான நடைமுறைக்கு வரவில்லை.

தமிழ்ப் பேரகங்காரவாத இராணுவ எதேச்சதிகாரத்தின் அரசியல் ஆலோசகரும், இப் பேச்சுவார்த்தையின் தளபதியுமான அன்ரன் பாலசிங்கத்தை இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின், கீழ்க்கண்டவாறு பேசவைத்ததற்காக இலங்கை மக்கள் இந்த முஸ்லீம் இளைஞர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

"தமிழர்களினதும் முஸ்லீம்களினதும் தாயகமான வடகிழக்குப் பகுதி ஆயுத மோதல்களினால் பல அவலங்களை அனுபவித்து வந்த நிலை மாறி தற்போது குடியிய (civil) வாழ்க்கை மெதுவாகவும் படிமுறையாகவும் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கினறது."

விடாக்கண்ட கொடாக்கண்ட புலிகளையே ஒலுவில் பிரகடனம் அச்சுறுத்திவிட்டதென்றால் MR அஞ்சாமல் இருப்பாரா?

### 5.உ.2.அ) **வட்டுக்கோட்டை மாநாட்டுச் சூழல்**

வட்டுக்கோட்டை மாநாடு நடைபெற்ற பிரதான சூழல் அல்லது சூழல்கள் பற்றி முதலில் பார்ப்போம்.

1.சிங்கள ஆளும் வர்க்கங்களுடனான தனது சமரசப் போக்கால் தமிழரசுக் கட்சி தமிழ் இளைஞரிடையே செல்வாக்கு இழந்திருந்த நேரம்.

2.தமிழரசுக் கட்சியில் நம்பிக்கை இழந்திருந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திச் சுயமான பாதையில் செல்ல மனதளவில் தயாராகி வந்த நேரம்.

3.'அப்பே ஆண்டுவ'ப் பொருளாதாரமானது இலங்கையில் தனியார் முதலாளித்துவத்தைத் தலைதூக்க முடியாதளவிற்கு பலவீனப்படுத்தி விடுமோ, என்ற அச்சத்தால் UNP யும் தமிழரசுக் கட்சியும், தொண்டமானும் எப்படியும் அதைத் தடுத்துவிட வேண்டுமென அங்கலாய்த்துக் கொண்டிருந்த நேரம். அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் தனியார்-தரகு முதலாளித்துவத்தின் அரசியல் தலைமை தொண்டமானிடம்தான் இருந்தது, துசுது இடமல்ல என்பதை வர்க்கத்தை விட இனத்தையே பிரதானமானதாகப் பார்க்கும் தேசியவாதிகள் நம்பவே மாட்டார்கள். ஆனாலும் அது உண்மை.

4.பாரளுமன்றத்தில் எப்படியும் அதிக ஆசனங்கள் எடுக்கவேண்டும் என்ற பேரவாவில் தமிழரசுக் கட்சிக்கும், தொண்டமானுக்கும் எந்த விட்டுக்கொடுப்புகளையும் செய்ய UNP தயாராய் இருந்த நேரம். அவர்களின் ஆலோசனையின் பேரில் தமிழர்களுக்காக UNP முதலைக் கண்ணீர் வடித்த நேரம்.
5.இலங்கையில் ஆதிக்கம் செலுத்திவந்த E-RN வானமே எல்லையாகக் கொண்டு வளர்ந்து விடுமோ என்று தாராளவாத முதலாளித்துவ பிரிவினரிடையே இருந்த அச்சம்.

6.இலங்கை மேற்குலகின் செல்வாக்கு மண்டலத்துள் இருந்து வெளியேறிவிடுமோ என்ற சந்தேகம் ஐஆகு க்கு ஏற்பட்டிருந்த நேரம்.

7.E-RN வளர்ச்சிகண்டு தமிழ் பேசும் மக்கள் அதிர்ந்துபோய் அச்சத்துடன் செய்வதறியாது திகைத்துப்போய் நின்ற காலம்.

இவைதான் வட்டுக்கோட்டை மாநாட்டின் புறச் சூழலாகும்.

* உள்ளூர் அரசியல் நெருக்கடிகளில் இருந்து தமிழரசுக் கட்சி தன்னைப் பாதுகாத்துக் கொள்வது.

* UNP க்கு அதிக பாராளுமன்ற ஆசனங்களை பெற்றுக் கொடுத்து, தானும் தனது நண்பனான UNP யும் எதிர்கொண்டுள்ள வர்க்க நெருக்கடிகளில் இருந்து தப்பித்துக் கொள்வது,

* தமது வெற்றியின் மூலம் மேற்குலகைத் திருப்திப் படுத்துவது,

ஆகியவைதான் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் உடனடி நோக்கங்களாக இருந்தன. தேர்தல்களில் மாபெரும் வெற்றிகளைப் பெற்றதன் மூலம் இந் நோக்கங்கள் திருப்திகரமாக நிறைவேறின. ஆனால் இவ் வெற்றி தமிழரசுக் கட்சியின் அழிவுக்கான நுழைவாயில் என்பதை தமிழரசுக் கட்சி அப்போது புரிந்துகொள்ளவில்லை. உதயசூரியனின் மறைவுக்குக் (தற்காலிக) காரணம் வட்டுக்கோட்டைப் பிரகடனமும், UNP இவர்களுக்குச் செய்த வர்க்கத் துரோகமுந்தான். உடனடி வெற்றியை மனதில் கொண்டு, வட்டுக்கோட்டை மாநாட்டு மேடையில் வைத்து களம் இறக்கப்பட்ட போதைப் பொருள்தான் அகச் சிதைவுத் தமிழ்த் தேசியமாகும். இது அனைவரையும் தழுவிச் செல்லக்கூடிய அனைவரையும் தழுவிய (All inclusive nationlalism) தேசியத்தைக் குற்றுயிராக்குமென்பதை தமிழரசுக் கட்சி எதிர்பார்த்திருக்க மாட்டாது.

ஜே.ஆர்-தொண்டமான்-அமிர்-கூட்டால் தமிழ் பேசும் மக்கள் தேசியத்தின் உடலில் செலுத்தப்பட்ட நின்று கொல்லும் கொடிய போதைவஸ்துதான் வட்டுக்கோட்டைப் பிரகடனமாகும். இது பிற்போக்குத் தேசியமாகும். ஆனால் ஒலுவில் பிரகடனம் அவ்விதமானதல்ல. அது அனைத்து முஸ்லீம் மக்களைப் பற்றியும் பேசுகிறது. கிழக்கு மாகாணத்தின் அனைத்து மக்களினதும் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகின்றது. இலங்கைத் தேசியத்தின் நலன் பற்றிப் பேசுகின்றது. புலிகளுக்கு எதிரான உணர்வை அடக்கியே வாசிக்கின்றது. ஒரு தேசிய இயக்கத்தின் பிரதான கடமை முதலில் தனது மக்களின் நிலவும் சமூக-பொருளாதார நடவடிக்கைகளைப் பாதுகாப்பதேயாகும் என்பதைப் புரிந்து கொண்டு, அதற்கொப்பத் தனது வேலைத்திட்டங்களை வகுத்துள்ளது. இக் குணாம்சங்களைக் கொண்ட இத் தேசியம் சம கால வரலாற்றையே தனது கால வரையறையாகக் கொண்டுள்ளது.

### 3.2.6) ஆசிய வல்லரசுகளின் கடும்போக்கா?

#### 3.2.6.அ) சீன நிலைப்பாடு

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கலை அமுல்படுத்துவதில் இலங்கை மேலும் சுணக்கம் காட்டி வருமானால், இந்தியாவோ சீனாவோ அல்லது இரண்டும் இணைந்தோ (இதற்கான சாத்தியப்பாடுகள் முயற்கொம்புதான்) ஸ்ரீலங்கா அரசுடன் சற்றுக் கடுமையாக நடந்து கொள்ளக் கூடுமென்பது ஜனாதிபதி மஹிந்தவின் மற்றோர் அச்சமாகும்.

பர்மாவின் அண்மைக்கால நிகழ்வு இதற்கோர் எடுத்துக்காட்டாகும். பர்மிய இராணுவ அரசின் ஞானத் தந்தை மக்கள் சீனம் என்பதை சகலரும் அறிவர். இந்த அங்கீகாரத்தைப் பர்மிய ஆளும் வர்க்கத்திடம் இருந்து பெறுவதற்காக,

சீனா, பர்மியக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கூட அடக்கி ஒடுக்கியதென்பதைத் தெரிந்து கொள்வது அவசியம். கூறவரும் நிகழ்வு, தன்னையும் சீனா கண்டிக்குமோ என MR ஐ சந்தேகிக்க வைத்திருக்கலாம்.

2010 ஜுலை-செப்ரம்பர் மாதங்களில் சீன-பர்மிய எல்லையிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனத்தின் மீது பர்மிய இராணுவம் இராணுவத் தாக்கல் கொடுத்த காரணத்தால் சுமார் 30,000 பேர் அகதிகளாக யுனான் மாகாணத்துள் பிரவேசித்துள்ளனர். அகதிகளை ஏற்றுக் கொள்ளாமைக் கோட்பாட்டை மிகக் கண்டிப்பாக பின்பற்றும் சீனா, அத் தேசிய இனத்தின் ஆயதம் ஏந்திய விடுதலை அமைப்புக்கும் பர்மிய இராணுவ ஆட்சிக்கும் இடையில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தும் முயற்சியில் கண்டிப்புடன் ஈடுபட்டது. பர்மாவில் உள்ள ஆறு தேசிய சிறுபான்மையினரின் ஆயுதபாணியான விடுதலை அமைப்புகளுடன் ஏற்கனவே பர்மிய அரசு யுத்தநிறுத்ததில் ஈடுபட்டுள்ளது. இவ் யுத்தநிறுத்தத்தில் சீனாவுக்கும் பங்குண்டு. இவ் விடுதலையமைப்புகள் மேற்குலகைச் சார்ந்து நிற்கவில்லை. இதனால் ஆசிய உலகம் இவர்களை அழித்தொழிக்க ஓரணி திரளவில்லை. இவர்களுக்கு எதிராக மூர்க்கத்தனமாக நடந்துகொள்ளவுமில்லை.

அத்துடன் நீடித்த யுத்தம் என்பது (Protracted War) வெறுமனே ஒரு இராணுவவிவகாரமல்ல, அது ஒரு அரசியல்-இராணுவ நிகழ்வுப்போக்கென்பதைப் புரிந்து கொண்டு நடந்துகொள்கிறார்கள். Protracted War எனும் ஆங்கிலப்பதத்திற்கு நீடித்த யுத்தம் எனத் தமிழ் மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. இப்பதம் ஒரு அர்த்த மயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நீடித்த என்பது காலநீடிப்பாக அர்த்தம் கொள்கிறது. இல்லை, ஒரு நீடித்த யுத்தம், ஒரு வருடத்திலும் முடிவடையாலாம்; பத்து வருடத்திலும் முடிவடையலாம். இது ஒரு காலந்தொடர்பான பிரச்சனையல்ல. யுத்தத்தின் தன்மையைப் பொறுத்த விடயாமாகும். பல்வேறு சோடி முரண்கள் ஒரே தொகுப்பாகி செயல்படும் ஒரு நிகழ்வுப்போக்காகும். ஒவ்வொரு சோடியின் ஒவ்வொரு முரண்களும் ஒன்றுமாறியொன்றாக மீண்டும் மீண்டும் மாறிமாறி செயல்படுவதும் செயல்படாமல் போவதும், தோன்றுவதும் மறைவதுமான ஒரு நிகழ்வுப் போக்காகும். யுத்தம் ஒரு முடிவுக்கு வரும்வரை இந் நிகழ்வுப் போக்குகள் தொடரும். இவ்விரு நிகழ்வுப் போக்குகளினதும் ஒட்டுமொத்தத் தொகுப்பே நீடித்த யுத்தமாகும். அச் சோடிகளில் சில:

பின் வாங்குதல் ----- முன்னேறித் தாக்குதல்

தற்காப்புநிலை ----- தாக்குதல் நிலை

உறங்குநிலை ----- தாக்குதல்நிலை

தாக்குதலில் தற்காப்பு ---- தற்காப்பில் தாக்குதல்

சமாதானநிலை ---- தாக்குதல் நிலை

கொரில்லாத் தாக்குதல் பிரதேசம் ---- விடுதலைப்பிரதேசம்

ஊடுருவித் தாக்குதல் ---- சுற்றிவளைத்துத் தாக்குதல்

நிலையான யுத்தம் ---- அசையும் யுத்தம்

தமது படைகளை ஒன்று குவித்துத் தாக்குதல் ---- தமது படைகளை சிறுசிறு அணிகளாக்கித் தாக்குதல்

பர்மிய ஆயுதக் குழுக்கள் நீடித்த யுத்தத்தைச் சரியாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் போலும். அதனால்தான், தம்மைக் காவுகொடுக்காமல் நீண்டநாள் அரை-உறக்கநிலைத் தற்காப்பு நிலையில் உள்ளார்கள் போலும்.

பர்மாவின் துறைமுகமும், பர்மாவின் எண்ணெயும், பர்மா ஊடாகச் செல்லும் எண்ணெய்வழிப் பாதையும் சீனாவுக்கு மிக முக்கியத்துவமிக்கது. ஆகவே பர்மாவில் அமைதி நிலவ வேண்டியது சீனாவின் தேசியப் பாதுகாப்புக் கொள்கையாக உள்ளது. அந்த அமைதி எவ்விதமாகவும் இருக்கலாம். அழகிய பூந்தோட்டமாகவும் இருக்கலாம், மயானமாகவும் இருக்கலாம். அது பற்றி சீனாவுக்கு அவசியமில்லை.

ஸ்ரீலங்காவிலும் சீனாவுக்கு இனி அவசியமானது அமைதியேயாகும். இலங்கைத்தீவின் அமைதி சீனாவின் தேசியப் பாதுகாப்புக் கொள்கையாக கருதப்படும் நிலை உருவாகியிருக்கின்றது. மிகச் சிரமப்பட்டு இலங்கையை ஒரு மயானபூமியாக்குவதன் மூலம் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளது. அந்த அமைதியை யாருமே கெடுத்துவிடக் கூடாது. இதுதான் சீன வல்லரசின் நோக்கமாகும். அதிகாரப் பரவலாக்கல் இல்லையேல் அமைதி பறிபோய்விடும். அமைதி பறிபோனால் மேற்குலகு தலையிட்டு குளத்தை மேலும் கலக்கி மீன் பிடிக்க ஆரம்பித்துவிடும். இதனால் அமைதி பறிபோய்விடக் கூடாது என்பதே சீன வல்லரசின் நிலைப்பாடாகும்.

இந்தியாவும் அமைதியையே விரும்பும். இலங்கைத்தீவின் அமைதியின்மை சிங்கள-தமிழ்ப் பிரச்சனையாக அமையுமானால், அது இந்தியாவின் தேசிய ஒற்றுமைக்கு பாதகமாக அமைவதற்கான வாய்ப்புகள் உண்டு. இதனால் இலங்கைத்தீவில் அமைதியைப் பேணுவதென்பது இந்தியாவின் தேசியக் கொள்கைகளில் ஒன்றாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த

அமைதியின்மையானது இந்தியாவின் நேரடி இராணுவத் தலையீட்டுக்கு வழிசமைத்துவிடலாம். இதையும் சீனாவிரும்பாது.

### 3.2.6.ஆ) **இந்திய நிலைப்பாடு**

இலங்கையில் நீண்டகாலமாக நடந்துவரும் உள்நாட்டு மோதல்களை வெறுமனே உள்நாடுப் பிரச்சனையாக மாத்திரம் அணுகும் போக்கே மேலோங்கியுள்ளது. ஆனால் காலனியல் காலத்தில் இருந்தே,-அதற்கு முன்னர் இருந்தே என்றும் கூறலாம் - இது தெற்காசியப் பிராந்தியப் பிரச்சனையாக இருந்து வருவதே உண்மையாகும். 1963-ல் இந்திய மத்தியரசு தனது அரசியல் சாசனத்தில் ஒரு திருத்தம் செய்தது. இதன்படி பிரிவினை என்பது கடும் தண்டனைக்குரிய குற்றமாகியது. சி.என். அண்ணாத்துரை, ‘மறப்போம் மன்னிப்போம்’ ‘மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி’ என்றார். இது தென் இந்தியத் திராவிட தனி நாட்டியக்கம் தன்னைத்தானே தடைசெய்தது போலாயிற்று. இது சட்டத்துக்கு வளைந்து கொடுக்கும் தந்திரோபாயமாகவும் இருந்திருக்கலாம். சரணடைவாகவும் இருந்திருக்கலாம்.

இவ்விதமாக, தானே தன்னைத் தனக்குள்ளே உயிருடன் புதைத்துக் கொண்ட இயக்கம், ஸ்ரீலங்காவின் வட-கிழக்கில் தமிழ்நாடு அமைப்போம் என்ற குரல் எழுந்ததும், ஓடோடிச் சென்று அமையப்போகும் அத்தனிநாட்டின் ஞானத்தந்தையாக தன்னை நியமித்துக் கொண்டது. இது உயிருடன் புதைக்கப்பட்ட திராவிட நாட்டுக் கோரிக்கை செத்துவிடக் கூடாதேயென்பதற்காக இருக்கலாம்.

தனித் தமிழ்நாட்டுக் கோரிக்கை இந்தியத் தமிழ் நடுத்தரவர்க்கத்தினரிடையே குறிப்பாக கிராமப்புற நடுத்தரவர்க்கத்தினரிடையே இன்னமும் உயிர்வாழ்கிறது. அது மீளுருவாக்கம் செய்யப்பட்டும் வருகிறது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரும் ஆறுகளின் பயன்பாடு தொடர்பாக தமிழ்நாடு ஓரங்கட்டப்பட்டு வருவது ஒரு முடிவற்ற நிகழ்வாகவுள்ளது. இதில் நீதி கிடைப்பதற்கான வழிவகை எதுவுமே யாருக்குமே தெரியவில்லை. அவநம்பிக்கையே நிலவுகிறது. இதனால் விவசாயத்துக்கும் குடிநீருக்கும் தமிழ்நாடு பெரிதும் அல்லல்படுகிறது. விவசாயப் பிரச்சனை தமிழ்நாட்டு தேசியப் பிரச்சனையாக உருவாகிவருகிறது. மற்றோர் புறத்தில் தென்முனை மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் தாக்கப்படும் நிகழ்ச்சியும் அதிகரித்து வருகிறது. இங்கும் நீதி கிடைப்பதற்கான வழிவகை எதுவுமே யாருக்குமே தெரியவில்லை. அவநம்பிக்கையே நிலவுகிறது. இதனால் மீனவர் பிரச்சனையும் தமிழ்நாட்டு தேசியப் பிரச்சனையாக உருவாகி வருகிறது. இவை இரண்டும் வெறுமனே விவசாயப் பிரச்சனையாகவும், மீனவர் பிரச்சனையாகவும் மாத்திரம் இல்லை,

தமிழ்நாட்டின் சுய-கௌரவத்தை இழிவு செய்யும் பிரச்சனையாகவும் உள்ளதெனத் தமிழ்நாட்டினர் கருதுகின்றனர். இதனால் இந்நிகழ்வுகள் விவசாயிகள், மீனவர்கள் என்ற வட்டத்தையும் தாண்டி நகர்ப்புற 'புத்திஜீவிய' நடுத்தர வர்க்கத்தின் தமிழ்நாட்டுத் தேசிய உணர்வையும் வருடிவிடத் தொடங்கியுள்ளது.

இந்திய அரசு, ஸ்ரீலங்கா அரசுடன் நடந்துகொள்ளும் முறை வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சும் செயற்பாடுகளாக அமைந்து வருகிறது. தமிழீழத்திற்கான ஆதரவை இவ் ஆதங்கங்களின் வெளிப்பாடகவே புரிந்து கொள்ளவேண்டியுள்ளது. இன்னும் ஞானத்தந்தைகள் இருப்பதற்கான காரணமும் இதுதான். புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் எனக் கோரி இந்திய நீதிமன்றத்தில் புலிகளின் சார்பில்/புலிகளுக்காக வாதாடும் துணிச்சல் உள்ள தலைவர்களும், அமைப்புகளும் இன்னமும் உள்ளதற்கான காரணமும் இதுதான். இவர்கள், இந்திய மாநிலங்களுக்கு முறையான சுயாட்சி வேண்டும் என்று கோரும் அதே வேளையில் ஸ்ரீலங்காவில் தமிழீழம் அமைக்கப்படவேண்டும் என்பதையும் வெளிவெளியாகவே கூறிவருகிறார்கள். இவ் இரண்டையும் தொடர்புபடுத்தி வருகிறார்கள். இந்நிகழ்வுப் போக்குகளும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ்நாட்டில் வைத்துக் கொலை செய்யப்பட்டதுவும், அக் கொலைபற்றிய விசாரணை தொடர்பான பல்வேறு புகார்கள் வெளிப்படையாகவே முன்வைக்கப்பட்டு வருவதுவும், இலங்கை மோதலுக்கு ஒரு தெற்காசிய பரிமாணமும் உண்டு என்பதைக் காட்டுகிறதல்லவா?

தற்போதைய நிலையை நோக்கும்போது தெற்காசியப் பிராந்தியப் பரிமாணந்தான் மேவி நிற்பதுபோல் தெரிகிறது. தமிழீழம் இலங்கைத் தமிழர்களின் தேவையா அல்லது தமிழ்நாட்டின் ஒரு பகுதியினரின் தேவையா என்று சந்தேகிக்கும் அளவிற்கு இது மேவி நிற்கிறது. இது ஒரு புறம். அடுத்த புறத்தில் தமிழீழப் போராளிகளை அடக்குவதென்பது ஸ்ரீலங்கா அரசின் தேவையா அல்லது இந்தியாவின் ஒரு சாராரின் தேவையா என்று சந்தேகிக்கும் அளவிற்கும் இது மேவி நிற்கிறது. இந்திய கொள்கைச் சிற்பிகளில் ஒன்றான 'தினமணி' இவ்விதம் கூறுகிறது.

"ஈழப் பிரச்சனையின் போது நாம் தமிழ் ஈழத்தை ஆதரித்தால், நாம் காஷ்மீரிலும் அதே பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதால், இரும்புக்கரம் கொண்டு தமிழரின் நியாயமான இன உரிமைப் போராட்டத்தை அடக்க உதவிய மத்தியரசு, அதேபோல் இரும்புக்கரத்துடன் இராணுவத்தை முழுமையாக இயக்கவிட்டு அநியாயமான காஷ்மீர் பிரச்சனையை ஒடுக்குவதுதானே? இலங்கை அதிபர் ராஜபட்ச செய்வதைப்போல், காஷ்மீரில் பிற பகுதிகளில் உள்ள இந்தியர்களைக் குடியேற்றும் புத்திசாலித்தனம்

நமக்கு இல்லாமல் போனதுதான் காஷ்மீர் பிரச்சனை தொடரக் காரணம்'' (தினமணி).

புலிகளையும், தமிழீழக் கோரிக்கையையும் அடக்கவேண்டுமென ஆர்வம் காட்டுவதில் The Hindu பத்திரிகையின் ஆர்வம் சாதாரணமானதா என்ன?

இலங்கைத்தீவின் அமைதியின்மை, சீனாவுக்கு பாதுகாப்பு மற்றும் பொருளாதார நெருக்கடியாக அமைகிறது. ஆனால் இந்தியாவுக்கோ இவற்றுடன் சேர்த்து இது மிகப்பெரும் உடனடி இந்தியத் தேசிய அரசியல் நெருக்கடியாக அமைகிறது.

இதனால் இந்தியாவும் சீனாவும் தம்மால் ஏற்படுத்தப்பட்ட மயானஅமைதி காக்காய் கரைந்து கூட குலைந்து விடக்கூடாது என்பதில் மிகவும் விழிப்பாக இருப்பார்கள், இருக்கிறார்கள். இதற்காக ஜனாதிபதி மஹிந்தவின் மீது அழுத்தங்களைச் செலுத்துவார்கள் என்பது எதிர் பார்க்கக் கூடியதே. இந்தியத் தரப்பு சில ஆயுதக்குழுக்களை உருவாக்கும் அளவிற்கு ஏற்கனவே சென்றுவிட்டதா என்ற சந்தேகம் தோன்றியுள்ளது.

இந்தியரசு அதிகாரபூர்வமாக ஸ்ரீலங்கா அரசுடன் 'நட்புறவு' கொண்டிருந்தாலும் இந்தியத் தேசியக் கட்டுமானத்தின் சில பகுதிகள் ஸ்ரீலங்கா அரசுடன் கருத்துரீதியான மோதலை ஆரம்பித்துவிட்டன. அரசியல் ரீதியான பனிப்போர் ஆரம்பமாகிவிட்டது.

இந்திய மண்ணில் அடைக்கலம் பெற்றுள்ள ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, 1987-இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்ற இலங்கை அரசை நிர்ப்பந்திக்கும்படி இந்திய அரசுக்கு மனுக்கொடுத்தது இதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டாகும். இது சிலவேளைகளில் தமிழ்நாட்டில் நடக்கவுள்ள மாநிலங்களவைத் தேர்தலில் திராவிடக் கட்சிகளை தனிமைப் படுத்துவதற்கானதோர் தேர்தல் தந்திரமாகவும் இருக்கலாம். ஆனால், அதற்காக ஒரு போராளிக் குழுவைப் பயன்படுத்தத் தேவையில்லை. இரண்டு நிகழ்வுகளும் ஒருங்கே நடைபெறுகின்றன என்றே எண்ணத்தோன்றுகிறது.

### 3.2.6.இ) **சீன-ஸ்ரீலங்கா நட்பு**

சீன-ஸ்ரீலங்கா நட்பையும், இந்திய-ஸ்ரீலங்கா நட்பையும் சீர்தூக்கிப் பார்த்தால் முன்னையதே ஆழமானதாகவும் மிகக் குறைந்த பகைமுரண்கள் கொண்டதாகவும் உள்ளது.

1950களில் இருந்தே சீனா, இலங்கையை தனது நம்பிக்கைக்குரிய நண்பனாகக் கருதி வருகிறது. காரணம் திபெத் விடயத்தில் சீனா 50 களில் இருந்து இன்றுவரை கடைப்பிடித்து வரும் அரசியல் நிலைப்பாடாகும்.

அது என்ன?

இலங்கையின் இரு பெரும் தேசியக் கட்சிகளும் சிங்கள-பௌத்த பேரினவாதக் கட்சிகளே என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் திபெத் விவகாரத்தில் இக் கட்சிகளோ இக்கட்சிகளின் தலைமையிலான அரசாங்கங்களோ தலாய்லாமாவை ஆதரிக்கவில்லை. அதிலும் குறிப்பாக அப்பே ஆண்டுவ அணியினர் திபெத் விவகாரம் சீனாவின் உள்நாட்டுப் பிரச்சனை என்ற கோட்பாட்டைப் பின்பற்றிவந்தனர்.

டிசம்பர் 1958-ல், திபெத்தில் கிளர்ச்சி கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. இக் கொந்தளிப்பை லாஷாவின் தெற்கு மற்றும் வடகிழக்குப் பகுதிக்குள் மட்டுப்படுத்த முடியாது போனால், சீன இராணுவம் லாஷாவையும் (திபெத்தின் தலைநகர்), தலாய்லாமாவின் மாளிகையையும் குண்டுவீசித் தகர்க்கத் தயாராய் இருந்தது. சுமார் 20,000 கொரில்லாக்களும் பல ஆயிரக்கணக்கான மக்களும் சீனத் துருப்புகளுடன் முட்டி மோதிக் கொண்டிருந்தார்கள். இந்த மோதல் அனைத்துலக கவனத்தையும் ஈர்த்ததுடன் முழுப் பௌத்த உலகத்தினதும் கண்டனத்துக்கும் உள்ளாகி இருந்தது.

திபெத்திய விவகாரத்தில் கொம்யூனிஸ்ட்களின் தலையீடும், 1951-ல் தலாய் லாமா திபெத்தைவிட்டு வெளியேறியதும் இலங்கையின் பௌத்தர்களில் பெரும்பான்மையினர் மத்தியில் அதிருப்தி உணர்வுகளை எழுச்சிபெறச் செய்திருந்தது. இருந்தும், துரதிஸ்டவசமாக, பண்டாரநாயக்க இது சீனாவால் தீர்க்கப்படவேண்டிய முழுமையான ஒரு உள்நாட்டுப் பிரச்சனை என்றே நோக்கினார். (Assassination of Banandaranaike... Iankalibrary.com)

இன்றோ சீனா ஒரு பெரும் வளர்ந்து வரும் பொருளாதார வல்லரசாகும். மேற்குலகின் பொருளாதார ஆதிக்கத்திற்கு எதிரான உலகளாவிய பொருளாதாரப் போராட்டத்திற்கு சீனாதான் தலைமை தாங்கப் போவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

அதன் முதற் கட்டம், உலக நாணயங்களின் இறையாண்மைக்கான யுத்தமாகவே அமையும் என்பது நிச்சயமாகிவிட்டது. ஒரு பக்கம் IMF, மறுபக்கம் சீனா என உலகம் பிரிந்துவிட்டது. அந்த யுத்தத்திற்கான முதலாவது பிரகடனத்தை IMF வெளியிட்டும் விட்டது. அந்தப் பிரகடனம் சீனா பணியவேண்டும் என்பதை அன்பாகச் சொல்வதாக உள்ளது. இந்த யுத்தத்தில் இந்தியா IMF பக்கமும், ஸ்ரீலங்கா சீனாவின் பக்கமும் நிற்கப்போவது உறுதி. ஆனால் இன்று சீனாவுடனான நட்பு என்பது ஒரு கபடத்தனமான அரசியலாகவும் இருக்கலாம்.

ஆனால் 50களிலோ சீனா வறிய நாடாகவே இருந்தது. அப்போதிருந்தே சீன-இலங்கை நட்பு வளர்ந்து வந்துள்ளது. செயற்கை இறப்பரை உலகச் சந்தையில் குவித்து இலங்கையின் இயற்கை இறப்பரின் விலையைக் குறைத்து இலங்கைக்கு பாரிய பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்திய அமெரிக்காவிடம் இருந்து இலங்கையை பாதுகாத்ததும் மக்கள் சீனமேயாகும். இயற்கை இறப்பரை தனது அரிசிக்காக பண்டமாற்றுச் செய்து கொண்டது. இதன் மூலம் இலங்கை ஒரு புறம் தனது இறப்பருக்கு ஒரு சந்தையை உருவாக்கிக் கொண்டது, மறுபுறம் தனது சொந்த நாணயத்தின் இறையாண்மையை அமெரிக்க டாலரில் இருந்து பாதுகாத்துக் கொள்வது சாத்தியமானது.

அதேபோல், 1970 களின் முற்பாதியில் P.L - 480 உடன்படிக்கையின் கீழ் அமெரிக்கா, தான் வழங்கிவந்த கோதுமை மாவின் விலையை அதிகரித்தது. அது மாத்திரமல்ல, அப்பணத்தை இலங்கையின் அமெரிக்கத் தூதரகம் தன் விருப்பப்படி உள்நாட்டிலேயே பயன்படுத்தலாம் என்ற ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி ‘அப்பே ஆண்டுவ’ அரசாங்கத்திற்கு எதிராக பணத்தை அள்ளிக் கொட்டி வந்தது. அப்போதைய பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, கோதுமை மா இறக்குமதியைத் தடை செய்தார். அதாவது அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குப் பணிய மறுத்த இலங்கை தனக்குத்தானே ஒரு பொருளாதாரத் தடையை ஏற்படுத்திக் கொண்டது. இதனால் இலங்கையில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. பட்டினிச் சாவுகளும் ஏற்பட்டன. அரசாங்கம், அல-வத்தள வியாபாரவை - மரவள்ளி, சக்கரை-வள்ளிக் கிழங்கு இயக்கம் - ஆரம்பித்தது. சிறு துண்டு நிலம் கூட வீணாகக் கூடாது, அரசாங்கச்செயலக பூந்தோட்டங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் இவ்விரு கிழங்கு உற்பத்திகளும் தொடங்கப்பட வேண்டும் என்பதே அந்த இயக்கமாகும். மக்களும் அனைத்து முற்போக்கு இயக்கங்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தன. இரு வருடங்களில் உணவுப் பஞ்சம் தீர்ந்தது. இலங்கைக்கு அந்நிய செலாவணி மீதமானது. இந்த அந்நிய செலாவணி 1977-ல் வந்த UNP அரசாங்கத்தால் ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதிக்கு, குறிப்பாக தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு செலவாகின என்பது வேறு விடயம். அதே போல் இந்த அந்நியச் செலாவணியை சிங்களமயப்படுத்துவதற்கா கத்தான் 1977ல் கொழும்பு நகரத்தில் இருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப் பட்டார்கள். முன்கூறிய பொருளாதாரப் போராட்டத்தின் போது சீனாவின் உதவி இலங்கைக்கு இருந்தது. இலங்கை-சீனா நட்பு 50களிலேயே உருவாக்கப்பட்டு படிப்படியாக வளர்ந்துவந்ததொன்றாகும்.

இந்தியாவையிட்டு இலங்கைக்கு இருக்கும் அச்சமும் இலங்கை-சீன நட்புக்கான காரணமாக இருக்கலாம். எப்படியோ ஒரு பௌத்த நாடாக இருந்தும், அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் நட்பைப் பாதுகாத்து வரும்

நாடாக இருந்தும், ஸ்ரீலங்கா கடைப்பிடித்து வரும் சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமைக் கொள்கை ஸ்ரீலங்கா-சீனா நட்புக்கான அரசியல் காரணிகளில் முக்கியத்துவம் மிக்க தொன்றாகும்.

அதேபோல், இலங்கையுடனான உறவைப் பொறுத்தவரையில் சீனா பஞ்சசீலக் கொள்கையைச் சரியாகவே கடைப்பிடித்து வந்தது. இன்றுவரை சீனா இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தன்னிச்சையாகத் தலையிட்டதேயில்லை. 'நீ உன் நாட்டில் என்ன செய்தாலும் செய்துகொள்.' அதேபோல் 'உனக்கு என்ன நடந்தாலும் எனக்குக் கவலையில்லை', 'நம் இருவரில் யார் வல்லவரோ அவரின் தேவையை முன்நிறுத்தி நட்புறவு வைத்துக் கொள்வோம். ஆவ்வளவுதான்' என்ற கொள்கையின் அடிப்படையில் இரு அரசுகளுக்கும் இடையே நிலவும் உறவு நட்புறவல்ல. ஒருவரின் உள்நாட்டு விவகாரத்தில் மற்றவர் தன்னிச்சையாகவும், பின் கதவாலும், முதுகுக்குப் பின்னாலும், எழுந்தமானமாகவும் தலையிடக்கூடாது என்பதேயாகும். இவ்விதம் இல்லாத தலையீடுகள் அவசியம். அத் தலையீடுகள் நேருக்கு நேராக (straight forward) இருக்கவேண்டும். சீனா இலங்கையுடன் நேருக்கு நேராகவே நடந்து கொண்டது. 1971 JVP கிளர்ச்சியை அடக்க ஸ்ரீலங்கா அரசுக்கு உதவியது. தீவிர இடதுசாரிவாதம் ஆபத்தானது என்ற தனது கருத்தை வெளிப்படையாகவே முன்வைத்தது. அது சரியா தப்பா என்பது வேறு விடயம், தலையீடு வெளிப்படையானதாகவே இருந்தது. அக் கிளர்ச்சி உண்மையிலேயே தோற்கடிக்கப்பட்ட UNP க்குச் சாதகமாகவே இருந்தது.

JVP இயக்கம் ஒரு சீன எதிர்ப்பு இயக்கமல்ல, அதில் எவரையும் சீனா விலைக்கு வாங்க முற்படவில்லை, அதாவது ஆள் பிடிக்க முற்படவில்லை. ஆனால் JVP ஐ அடக்க உதவி செய்த ஸ்ரீலங்காவின் மற்றோர் நட்புநாடு, JVP யினர் சிலரை (அதில் ஒரு தலைவரும் அடக்கம்) பாதுகாத்தது. அவர்கள் மேற்குலகுக்கு தப்பிப்போக உதவியும் செய்தது. மேற்குலகிலிருந்து திரும்பியவர்தான் இன்று JVP யின் தலைவராகவுள்ளார். இது ஆள் பிடிக்கும் வேலை. மேற்குலகிற்கு ஆள் பிடித்துக் கொடுக்கும் வேலை. அதே நாடு தமிழீழக் குழுக்களுடன் நடந்து கொண்ட முறைபற்றி உலகே அறியும். தமிழீழக் குழுக்களுடன் தொடர்பு கொள்வதற்கான போதிய வாய்ப்பு சீனாவுக்கு இருந்தது. சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட கட்சியின் ஊடாக அதைச் செய்திருக்கலாம். சண்முகதாசன் சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் மிக நெருக்கமான நட்புறவு கொண்டவர். அவர்கள் சண்முகதாசனை மிக உயர்வாகவும் மதித்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சி பல்வேறு காரணங்களுக்காக பலரை அடிக்கடி சீனாவுக்கு அனுப்பியும் வந்தது. சீன வானொலி ஊழியர்களுக்கும், பிற வெளியுலகத் தொடர்பாளர்களுக்கும் தமிழ் மொழி கற்பிப்பதற்காக சீனாவில் பல வருடங்கள் தமிழ் ஆசிரியராகத் தங்கியிருந்த மாதகல் கந்தசாமி ஊடாகவும் இதைச் செய்திருக்கலாம்.

கே.ஏ.டானியல், சின்னத்தம்பி (கார்த்திகேசன் மாஸ்டரின் மருமகன்), நீர்வை பொன்னையன் ஆகியோருடனும் சீனத் தூதுவராலயத்திற்கு நேரடித் தொடர்பு இருந்தது. இவர்கள் யாழ்ப்பாணத்தில் நன்மதிப்புப் பெற்ற புத்திஜீவிகள். இதனூடாகவும் செய்திருக்கலாம். ஆனால் இலங்கையின் உள்நாட்டு விவகாரத்துள் அத்துமீறித் தலையிடும் சிறு தவறைக்கூட சீனா செய்யவில்லை. இவர்களும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்களாக இருந்தார்களே தவிர சீன அரசாங்கத்தின் ஏஜெண்டுகளாக இருக்கவில்லை. கம்யூனிஸ்டுகளின் அனைத்துலக தோழமையை மிகக் கண்ணியமாகப் பின்பற்றினார்கள். ஸ்ரீலங்கா அரசு சீனாவின் நட்பையிட்டு சந்தேகங்கொள்ளா நிலையில் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஆனால், மேற்குலகிற்கு ஏஜென்டாக செயல்படும் மிக விசுவாசமான தலைவர்கள் பட்டாளமே இலங்கையில் இருந்தது, தற்போதும் இருக்கின்றது. சர்.ஜோன் கொத்தலாவல, டி.எஸ்.சேனநாயக்கே, டட்லி.செனநாயக்கே, யங்கி டிக்கி ஜே.ஆர்.ஜெயவர்த்தனே. சர்.பொன். இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம், சா.ஜே.வே.செல்வநாயகம், சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோர் இப் பட்டாளத்தின் அரசியல் பிரமுகர்களாகும். நிலைமை இப்படி இருக்கக் கூடியதாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கே - க்கு மாத்திரமே, அனைத்துலக மாநாட்டு மண்டபமாகச் செயல்படும் பிரமாண்டமான நினைவு மண்டபம் ஒன்று உண்டு. இதைக் கட்டிக் கொடுத்தது மக்கள் சீனக் குடியரசேயாகும். மூன்றாம் உலக நாடுகளின் தலைவர்களை கிள்ளுக்கீரையாகவும், கறிவேப்பிலையாகவும் பயன்படுத்தும் மேற்குலகு தனது விசுவாசிகள் எவருக்கும் எந்த நினைவு மண்டபமும் கட்டவில்லை. யாழ்ப்பாண படித்த இளைஞர்களாலும், சேவை வழங்கு துறையினராலும் தமிழ்த் தேசியத்தின் தந்தை என மகுடம் சூட்டப்பட்ட செல்வநாயகத்துக்கு மட்டும் யாழ்ப்பானத்தில் ஒரு நினைவு ஸ்தூபி உண்டு. அது ஒரு நடுகல், மிக உயரமானது. அது மக்களால் கட்டப்பட்டது. இது தமிழ்த் தேசிய எழுச்சியின் நினைவுத்தூணாகும்.

அதேபோல் பண்டாரநாயக்க நினைவு மண்டபம், இலங்கையில் முனைப்புடன் எழுந்த ஒரு சமூக எழுச்சியின், குறிப்பாக சிங்கள சமூகத்தின் எழுச்சியின் நினைவு மண்டபமாகும். சிங்கள மக்கள் சீனாவை நன்றி உணர்வுடன் தமது நண்பனாகப் பார்ப்பதற்கு இம் மண்டபம் துணை புரிந்துள்ளது.

ஆனால், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(சீனப் பிரிவு), 89களின் பிற்பகுதியில், செஞ்சீனம் நிறம் மாறிவிட்டது என்பதைப் புரிந்துகொண்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஓயிஸம்) ஆக புனரமைக்கப்பட்டபோது, அம்முயற்சியை முறியடிக்க சீனத் தூதுவராலயம் சதி நடவடிக்கைகளில்

ஈடுபட்டதாக அக்கட்சி பகிரங்கமாக கண்டனம் தெரிவித்துள்ளது. ("Thousand Flowers", Journal of the Ceylon Communist Party-Maoist (CCP-M) kasama) ஆனாலும் இது வெகுஜனத்தன்மை பெற்ற தகவலாக அமையவில்லை.

இக் காரணங்களால், சீனா தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள MR க்கு அதிக அழுத்தங்கள் கொடுக்கவேண்டி இருக்காது.. சாம, தான, தண்ட, பேதம் ஆகிய நான்கில் சாமத்தையும்(சமாதானம்), தானத்தையும் பின்பற்றும் வாய்ப்புகள் அதிகமுள்ள நிலையில் சீனா உள்ளது. தானத்தை பின்பற்றுவதற்கு தேவையான பொருளாதார வளங்கள் சீனாவுடன் தாராளமாகவே உள்ளன. அதற்கான ஆதாரம் ஸ்ரீலங்காவிற்கான வெள்ள நிவாரண நிதியாக $15.2இலட்சம் சீன அரசாங்கத்தால் வழங்கப்படுமென 4/01/2011-ல் சீன அதிகாரிகள் அறிவித்தார்கள். இதைவிட, சீனச் செஞ்சிலுவைச் சங்கம் $30,000 பணமாக வழங்குமெனவும் அறிவித்தார்கள். சமீப வருடங்களாக ஸ்ரீலங்காவின் மிகப்பெரும் நன்கொடையாளர்களில் ஒருவர் என்ற நிலைக்கு சீனா வளர்ந்துள்ளது. 2009-ம் ஆண்டு சீனா, ஸ்ரீலங்காவிற்கு கடனாகவும் மானியமாகவும் வழங்கிய மொத்தத் தொகை $120கோடிகளாகும். இதன் மூலம் ஸ்ரீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளில் முதற் பெரிய நாடு என்ற தகைமையை சீனா பெற்றுள்ளது. சீனா வழங்கிய உதவி, ஆசிய அபிவிருத்தி வங்கியும், உலக வங்கியும் வழங்கிய நிதியையும் விட அதிகமானதாகும்.

2009-2010-ம் ஆண்டுகளில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு சீனா வழங்கியுள்ள உதவியானது உலக வங்கி வழங்கியுள்ள உதவிகளைவிட அதிகமானதாகும். உலக வங்கி வழங்கியது ஒரு இலட்சம் கோடி டாலர்கள், சீனா வழங்கியதோ ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் கோடி டாலர்கள். (The Hindu)

ஆனால் சாம, தானத்தால் ஸ்ரீலங்காவை தனது ஆளுமையின் கீழ் வளைத்துப் போடுவது இந்தியாவுக்கு அவ்வளவு எளிதாக இருக்காது. ஆகவே பேத, தண்ட முறைகளையே அதிகம் நாடும். பேதம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. இதன் விளைவுதான் சரத்-மஹிந்த பேதம். அடுத்த கட்டம் தண்டந்தான். ஆகவே MR தனது இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவை ஒட்டிய அச்சம் பிரதான காரணமாகவுள்ளது என்று கருதுவது தவறல்ல.

ஆனால் இந்தியாவும் சீனாவும் நினைப்பது போல் அதிகாரப் பரவலாக்கலை ஏற்படுத்துவது என்பது ஜனாதிபதி மஹிந்தவுக்கு அவ்வளவு எளிதாக இருக்காது. அது ஒரு பகீரதப் பிரயத்தனமாகவே இருக்கும். அதிகாரப் பரவலாக்கலை அமுலாக்கினால் MR இந்திய ஆளென முத்திரை

குத்தப்படுவார். இந்திய எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்கள் மேலும் செழித்து வளர்வார்கள். இராணுவத்துக்குள்ளேயே எதிர்ப்புகள் ஏற்படும். பாவம் MR!! சொர்க்கம் போக நினைத்தார், ஆனால் திரிசங்கு சொர்க்கத்தில் தொங்கவேண்டிய நிலையேற்பட்டுவிட்டது. ஒரு பக்கம் இந்தியாவுக்கு அச்சம், மறுபக்கம் இந்திய எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களுக்கு அச்சம். இது தான் அவரின் இருதலைக்கொள்ளி எறும்பு நிலையாகும். இந்திய எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்கள் அவ்வளவு பலமானவர்களாக உள்ளார்களா? ஆம். இலங்கையின் அடுத்த சூறாவளி அங்குதான் தற்போது மையங்கொண்டுள்ளது. ஆகவே தொடர்வோம்.

### 3.2.7) **இந்திய எதிர்ப்புக் கிளர்ச்சியா?**

இந்திய-MR கூட்டு சுதந்திரமாக ஏறு நடை போடுமானால் அதற்கு எதிராக இலங்கை மக்கள் அனைவரினதும் ஒருமித்த எழுர்ச்சி ஏற்படக்கூடும் என்ற அச்சமும் உண்டு. JVP இதில் தனிக் கவனம் செலுத்தலாம். இவ்வித எழுர்ச்சி நிச்சயமாக மேற்குலகினது ஆதரவு பெற்றதாகவே இருக்கும், சிலவேளை குறிப்பிட்டளவு தூரத்திற்கு சீனாவினது உதவியை அல்லது கடைக்கண் பார்வையைப் பெற்றதாகவும் கூட இருக்கலாம்.

### 3.2.7.அ) **தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையம்**

யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போதே இந்திய எதிர்ப்பு முன்னணி ஒன்று தோன்றிவிட்டது. தமிழ் வாசகர்களுக்கு இத் தகவல் அவசியம் என்ற படியாலும், அவர்களின் அரசியல் பார்வையில் இத்தகவல்கள் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடுமெனக் கருதுவதாலும் இவ் அமைப்புப் பற்றி சற்று விரிவான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைக் காலத்தின் போது நோர்வே புலிகளுக்கு சாதகமாக நடந்துகொண்டதை யாவரும் அறிவர். உதாரணத்திற்கு, SLMM-இன் கூற்றுப்படி. 2002 பெப்ரவரிக்கும் 2007 ஏப்ரலுக்கும் இடையில் நடந்த யுத்தநிறுத்த மீறல்களில் 3,830 LTTE-யால் மீறப்பட்டதாகும், 351 மீறல்கள் GOSL-ல் மீறப்பட்டதாகும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தான 2002-ல் இருந்து 2006 ஜனவரி நடுப்பகுதிவரை தமக்கு எதிரான அரசியல்வாதிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 200 தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் LTTE-யால் கொல்லப்பட்டனர். LTTE-ன் தாளத்துக்கு ஏற்ப முழுமையாக இசை மீட்காத, பல தமிழ் ஊடகவியலாளர்களும் LTTE-யால் அழிக்கப்பட்டுள்ளார்கள் என நம்பப்படுகிறது.

LTTE-யால் திட்டமிட்ட முறையில் அழிக்கப்பட்ட தமிழ் எதிர்ப்பாளர்களின் நீண்ட பட்டியலொன்றை முன்வைத்த UTHR, சமாதானப் பலாபலன்களைவிட பயங்கரவாதத்தின் பலாபலன்களையே மிக அதிகளவில் அறுவடை செய்ய வழிவகுத்த யுத்தநிறுத்த உடன்படிக்கைகளைக் கண்டித்தனர். ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் இத் திட்டங்கள் 'ஆள்பிடிக்கும்' தன்மையும், 'கோட்பாடுகளற்ற' தன்மையும் கொண்டதெனக் கண்டித்தனர். அத்துடன் இவை அதிக செலவுகளை ஏற்படுத்தியதுதான் மிச்சமெனவும் கடிந்து கொண்டனர். இத் திட்டங்களுக்காக குடியிய மற்றும் சமூக செயல்பாட்டாளர்களையும், ஸ்ரீலங்கா அரசாங்கத்தையும், சர்வதேச சமூகத்தையும் குற்றஞ்சாட்டியிருந்தனர். LTTE-யால் மேற்கொள்ளப்பட்ட அனர்த்தங்களையிட்டு நோர்வே காட்டிய ஓரவஞ்சகத்தன்மையைக் கண்டு விரக்தியுற்ற தமிழ்க் குழுக்கள் அப்பப்போ தம்மவர்களின் இறந்த உடலை நோர்வே தூதராலயத்திற்கு முன்னால் கொணர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

LTTE யுத்த நிறுத்த நிபந்தனைகளை மீறியது என்பது உண்மை, ஆனால் இதன் அர்த்தம், ஸ்ரீலங்கா அரசு மீறவில்லை என்பதல்ல. கடல் பரப்பினில் யுத்த மீறல்கள் நடந்து கொண்டே இருந்தன.

இந்த சூழலில்தான் ஒலுவில் பிரகடனம் உருவானது. இதே சூழலில்தான், 2004, பெப்ரவரி மாதம் தேசபக்த தேசிய இயக்கம் (PNC Patriotic National Centre) உருவானது. இவர்கள் நோர்வேயை, LTTE-யின் ஆதரவாளர்களாகவும், புதிய காலனியல் ஆட்சியாளர்களாகவுமே பார்த்தனர். இதனால் நோர்வேயை வெளியேற்றவேண்டும் என்பதே இவர்களின் கோரிக்கையாக இருந்தது. ஸ்ரீலங்காவின் சுயாதிபத்தியத்தையும் பூகோள ஒன்றிணைப்பையும் பாதுகாக்க வேண்டுமானால் நோர்வே வெளியேற்றப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். இதற்காக பல ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இதில் ஒன்று 50,000 மக்கள் பங்குபற்றியதாக இருந்தது. ஸ்ரீலங்காவின் வரலாற்றிலேயே இதுதான் மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் எனக் கருதப்படுகிறது. 1960 களில் இடதுசாரிகளின் கூட்டணியால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களிலும்விட இவை பெரியனவா என்பது ஒப்பிடப்படவேண்டும். ஆனால் அதன் பின்னர் நடத்தப்பட்டவற்றில் இதுதான் மிகப் பெரியதாக இருக்கலாம்.

"இந்திய உளவு நடவடிக்கைபற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்து!" என்ற தலைப்பில் தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையத்தின் PNC தலைவரான, வணக்கத்துக்குரிய தம்பாற அமில தேரோ, தானே ஒப்பமிட்டு 29,நவம்பர், 2008-ல் வெளியிட்ட அறைகூவலின் சில பகுதிகள் :

"எமது வீரமிக்க பாதுகாப்புப் படைகள் கிளிநொச்சியை விடுவித்த அடுத்த

நாள் இந்தியப் புலனாய்வுத்துறை முகவர்களின் விமானம் ஸ்ரீலங்காவின் வான்பரப்பில் கிளிநொச்சியின் மீதாகப் பறந்ததென்ற தகவலை 'Times of India' நாளிதழ் வெளியிட்டிருந்தது.''

''ஸ்ரீலங்காவின் வானுரிமையை மதிக்காது, எமது இறைமையையும், பூகோள ஒன்றிணைவையும் கடுமையாக அச்சுறித்தியதற்காக, PNC ஆகிய நாங்கள், இந்தியாவைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். பத்திரிகைத் தகவலின் படி இந்த வானூர்தியானது நில மட்டத்தில் இருந்து 40,000அடி உயரத்தில் பறந்தவண்ணம் தரையில் நடப்பவற்றைப் புகைப்படம் எடுக்கக் கூடியளவுக்கு சக்தி மிக்க தொழில்நுட்பத்தைக் கொண்டிருந்தது. ஸ்ரீலங்காவின் நிலப்பரப்பில் இருந்து இரகசியமான முறையில் தகவல்களைத் திரட்டுவதே இப்பறப்பின் நோக்கமென்பது இதிலிருந்து தெளிவாகின்றது. பிரிவினைவாத புலிப் பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்கப்பட்ட நிலப்பரப்பிற்குச் சொந்தமான ஆகாயத்துள் நுழைந்து அந்நிலப்பரப்பை கட்டுப்படுத்த முற்படும் இந்திய முயற்சியை அனைத்து ஸ்ரீலங்கர்களும் கடுமையாகக் கண்டிக்கவேண்டும்.

அடுத்த பக்கத்தில், இப் பிராந்திய மேலாதிக்கத்திற்கான தனது யுத்தக் கூச்சலை அதிகரித்திருக்கும் இந்தியா, தனது இந் நடவடிக்கைமூலம் எமது பாதுகாப்புப் படையின் முன்னேற்றத்தைத் தடுக்க முற்படுகிறது. எமது படைவீரர்களின் நடமாட்டங்கள் கண்காணிக்கப் படுகின்றனவோ என்ற சந்தேகம் தோன்றுகிறது. இந்திய RAW அமைப்பின் இந்த இரகசிய நடவடிக்கைபற்றி அரசாங்கம் எதுவுமே சொல்லவில்லை.

29/10/2008-ல், வண.அமிலா பத்திரிகையாளர் சந்திப்பின் போது, ஜனாதிபதியின் முதுநிலை ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இந்தியத் தலைவர்களுடன் நடத்திய உரையாடல் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் கூறியவை:

''ஒன்றுபட்ட நாட்டினில் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கும், எமது நாட்டின் வளங்களை எமது மக்களின் நலனுக்குப் பயன்படுத்துவதற்குமாகத்தான் ஸ்ரீலங்கா மக்கள் MR க்கு அதிகாரத்தை ஒப்படைத்தார்கள். ஆனால், இன்று இந்த ராஜபக்ஷ அரசு மக்களின் அபிலாசைகளைக் கணக்கில் கொள்வதாகத் தெரியவில்லை. திரு. பசில் ராஜபக்ஷ தனது இந்திய விஜயத்தின் போது ஒத்துகொண்ட அனைத்தையும் வெளிப்படுத்தவேண்டும் என PNC பகிரங்கமாகக் கோருவதாகக் கூறினார். அத்துடன் வீரமிக்க பாதுகாப்புப் படையினர் பெற்றுக் கொண்ட வெற்றிகளை காட்டிக் கொடுக்கவேண்டாம் என்றும், எமது விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்றும் அமெரிக்கத் தூதரை எச்சரித்து வையுங்கள் அல்லது அவரை வெளியேற்றுங்கள், எனவும் எச்சரிப்பதாகக் கூறினார்.

16/10/2008-ல் ஹொரண நகர மண்டபத்தில் நடந்த PNC-இன் களுத்துறை மாவட்ட அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அமில தேரோ கூறியது: இந்த அரசாங்கம், 17வது சாசனத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தாது ஜனநாயகத்துக்கு பெரும் தடைக்கல்லாக உள்ளது. சுதந்திரமான கமிஷ னை அமைக்கத் தவறிவிட்டது. கைவிட்டெண்ணக்கூடிய குறுகிய வட்டத்துள் அதிகாரத்தைக் குவித்து வருகிறது. குடும்ப ஆதிக்க அரசியல் கட்டமைப்பை நோக்கி நாடு இழுத்துச் செல்லப்படுகிறதெனவும் கூறினார்.

எவ்விதமும், சாசனத் திருத்தம் 13-ஐ அமுல்படுத்துவதில் ராஜபக்ஷ அரசு காட்டும் அவசரத்தன்மை, இந்தியா எதைச் சொல்கிறதோ அதைச் செயல்படுத்தத் தயாராய் இருக்கும் இவர்களின் கோழைத்தனத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

அது மாத்திரமல்ல, எமக்கும், எமது எதிர்காலப் பரம்பரையினருக்கும் சொந்தமான தேசிய வளங்களை எந்தவிதத் தயக்கமும் இன்றி இந்தியாவுக்கு கையளித்து வருகின்றது. சம்பூரிலும், நொரச்சோலையிலும் பெருமளவு நிலங்கள், மின்நிலையங்கள் உருவாக்குவதற்காக இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. வெல்லசப் பகுதியில் வாழைத் தோட்டச ் செய்கைக்காக 15,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் இந்திய நிறுவனங்களுக்குக் கொடுபட்டுள்ளது. வளமிக்க கனிமவளங்கள் உள்ள புல்மோட்டைப் பகுதியை இந்தியாவிடம் வழங்குவதற்கான அனுமதியை மந்திரி சபை வழங்கி நீண்டகாலமாகிவிட்டது. கொழும்பு நகரத்துக்கு சமனான அளவு நிலம், திருகோணமலைப் பகுதியில், துறைமுகத்துக்கு அண்மையில், வர்த்தக வலயம் அமைப்பதற்காக இந்தியாவிற்கு கொடுக்க ப்பட்டுள்ளது.........

இவ் அரசாங்கம் இந்தியாவுடனான உறவில் பயந்தாங்கொள்ளித் தன்மையை வெளிப்படுத்துவதுடன் மாத்திரம் நிற்கவில்லை, மக்களுக்கும், மூலவளங்களுக்கும் துரோகமும் செய்து வருகின்றது.

17வது சாசனத் திருத்தம்: இது 2001-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்டது. நீதித்துறை, சுதந்திர கமிசன்கள் ஆகியவை உட்பட்ட அரச நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்களை ஜனாதிபதி தானே நேரடியாக நியமிப்பதைத் தடுப்பதற்காக சாசனக் கவுன்சில் ஒன்று பாரளுமன்றத்தால் உருவாக்கப்படும் எனக் கூறியது. இதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆனால் 2005-ம் ஆண்டிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, MR ஆகிய இருவரும் திட்டமிட்டே சாசனக் கவுன்சிலைக் கூட்டுவதைத் தவிர்த்து வந்தனர்.

மற்றோர் சந்தர்ப்பத்தில் PNC தலைவர் கூறியது:

“அரசாங்கத்தின் கொள்கைத் தடுமாற்றத்தால், அந்நிய சக்திகள் எமது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது சாத்தியமானதாய் உள்ளது....... யுத்தத்தைத் தவிர ஏனைய அனைத்து விவகாரங்களையும் பரணில் ஏற்றிவிட்டது. யுத்தத்தைக் காட்டி தனது அனைத்துப் பாவங்களையும் மறைக்க முயற்சிக்கின்றது..... மேலும் தொடர்கிறார்: “ஸ்ரீலங்காவின் விவகாரத்துள் இந்தியா தலையிடவேண்டும் என எதிர்பார்க்கும் மன்மோகன் சிங், கருணாநிதி, ஜெயலலிதா ஆகிய இன்னும் பிற அரசியல் வாதிகளுக்கும் நாம் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த நாட்டின் வரலாற்றைப் படியுங்கள், ஆக்கிரமிப்பாளர்கள் இங்கு எவ்விதம் நடத்தப்பட்டார்கள் என்பதை கற்றுக் கொள்ளுங்கள்...........”

குடும்ப ஆட்சியை நோக்கிப் பயணிக்கிறார்கள் என்ற அவதானிப்பு கலாநிதி அமில தேரோவினது மாத்திரமல்ல, எதிர்கட்சித் தலைவர் றணில் விக்கிரம சிங்கவின் கருத்தும் இதுவேயாகும். இக்கருத்தை ஆதாரங்களுடன் முன்வைத்துள்ள “மகிந்தவும் 3 சகோதரர்களும்!!!” என்ற தலைப்பிலான கட்டுரை ஒன்றின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன:

இன்று, ‘மகிந்த சகோதர’ நிறுவனத்தின் 363 பேர் பலதரப்பட்ட அரச பதவிகளை வகித்து வருகின்றனர். இவர்களில் எவருமே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள விதிமுறைக்கு அமைய, இப்பதவிகளில் அமர்த்தப்படவில்லை. இவர்களுக்கு இருக்கும் ஒரே ஒரு தகுதி அவர்கள் ‘சகோதர நிறுவனத்தின்’ உறுப்பினர்கள் என்பது மட்டுமேயாகும்..........

அதாவது அரசும், அரசோடு தொடர்புபட்டுள்ள முன்னணி நிறுவனங்கள் ஆகியன அனைத்தையும் நிர்வகித்து வருவோர் ‘பரசூட்களின்’ மூலம் உயர்பதவிக் கதிரைகளில் வந்து அமர்ந்துகொண்டுள்ள சகோதர நிறுவனத்தின் உறுப்பினர்களேயாவர்........

.......அதற்கமைய, இன்று அரசின் முதல்வரிசை நிறுவனங்கள் அனைத்தும் நிர்வகிக்கப்படுவது இந்த அண்ணன்-தம்பிமார்களினாலேயே ஆகும். அந்த வகையில், மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஷவின் உள்ளங்கையிலேயே நாட்டுப் பொருளாதாரத்தின் கேந்திர மையங்களான விமானசேவை மற்றும் துறைமுகங்கள் அடங்கியுள்ளன. நாட்டின் வருவாயின் அதிகளவான தொகை இந்த இரு துறைகளிலிருந்தே கிட்டுகிறது. அவற்றைவிட, நீர்ப்பாசனம் போன்ற துறைகளும் சமல் ராஜபக்ஷ வின் கரங்களிலேயே உள்ளது.

இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய அனைத்து அபிவிருத்தித் திட்டங்கள்

முழுமையாகவே சார்ந்திருப்பது சகோதர நிறுவனத்தின் அடுத்த முக்கியஸ்தரான பஸில் ராஜபக்ஷவின் கீழாகும். ‘கிழக்கின் உதயம்’, ‘வடக்கின் வசந்தம்’ ஆகியன பஸில் ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பின் கீழேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மறுபக்கத்தில், இன்றைய அமைச்சர்கள் அனைவரும் பெயரளவில் மட்டுமே அமைச்சர்களாக உள்ளனர். அதாவது, அவர்கள் தமது அமைச்சின் துறைகளிலுள்ள அவர்களது பதவிக் கதிரைகளுக்கு மட்டுமாக வரையறுக்கப்பட்டுள்ள பொம்மைகளாக அமர்ந்துள்ளனர். அவர்களுக்குரிய வேலைத்திட்டங்களின் அனைத்துச் செயற்பாடுகளும் சகோதர நிறுவனத்தின் பணிப்புரைகளின்படியே முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களின் உத்தரவுகளே அங்கு நிறைவேறுகின்றன. அமைச்சர்களின் உத்தரவுகளைவிட அமைச்சுக்களுக்கு அப்பாலிருந்து வரும் இந்த சகோதர நிறுவனத்தின் ‘பரசூட்’ உத்தரவுகளுக்கே அங்கு பெறுமதி கிட்டுகிறது.

இவர்கள் பயணித்துச் செல்வது வேறெங்குமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தி நிற்பது போன்று மன்னராட்சி அரசொன்றுக்கேயாகும், முடியாட்சிக்கேயாகும்.

## 3.2.7.ஆ) **JVPயின் இந்திய விஸ்தரிப்பு எதிர்ப்புக் கொள்கை**

### 3.2.7.ஆ.1) **1968-1970-களில்**

JVP இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி(சீன சார்பு) யிலிருந்து பிரிந்து வந்த ஒரு குழுவாகும். 1969-ல் அது தன்னை ஒரு நிறுவனமாக உருவாக்கிக் கொள்கிறது. இலங்கையில் சோஷலிஸத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு மார்க்சிய அமைப்பாகவே அந் நிறுவனம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டது. இலங்கை ஆளும் வர்க்கத்தின் அனைத்து ஊடகங்களும் இன்றுவரை அவ் அமைப்பை அவ்விதமாகவே இனம்காட்டியும் வருகின்றன. 1971-ல் இவ் அமைப்பால் நடத்தப்பட்ட ஆயுத எழுச்சியை அடக்குவதற்கு இலங்கை அரசுக்கு உதவி செய்த செஞ்சீனாகூட ‘இடதுசாரித் தீவிரவாதம்’ என்றே இவ் அமைப்பை மதிப்பீடு செய்திருந்தது.

இவ் அமைப்பின் தலைமைக்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (சீன சார்பு) தலைமைக்கும் இடையே நடந்த தத்துவார்த்தப் போராட்டங்களில் ‘காலுக்கேற்ப சப்பாத்துச் (shoe) செய்வதா அல்லது சப்பாத்துக்கு ஏற்ப காலைச்சீவுவதா?.’ என்பதுவும் ஒன்றாக இருந்தது. இங்கு ‘சப்பாத்து’ எனக் குறிப்பிடப்பட்டது சீனாவின் மக்கள் யுத்தப்பாதையையேயாகும், ‘கால்’ எனக் கருதப்பட்டது இலங்கையின் சமூகஉருவாக்கத்தையாகும். சீனா பின்பற்றிய மக்கள் யுத்தப் பாதையையே இலங்கைப் புரட்சியும் பின்பற்ற

வேண்டுமெனக் கட்சி முன்வைத்தது. றோகன விஜயவீரா (JVP நிறுவனர்) அதைக் கண்டித்தார். அந்தச் 'சப்பாத்து' எமக்குத் தேவையில்லை என்றார். சண்முகதாசன் காலைச் சீவச்சொல்கிறார் எனக் குற்றஞ்சாட்டினார். புதிய சப்பாத்துச் செய்வோமென்றார்.

**'மக்கள் யுத்தப் பாதை' எனச் சொல்லப்பட்டது என்ன?**

முதலாவது - தொழிலாளிவர்க்கத் தலைமையிலான ஜனநாயகப் புரட்சி

இரண்டாவது - தொழிலாள-விவசாயிகள் தலைமையிலான ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசு

மூன்றாவது - இரகசியமாகச் செயல்படும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி.

நான்காவது - இக் கட்சியின் தலைமையிலான ஒரு கொரில்லாப் படைப் பிரிவு.

ஐந்தாவது - இக் கட்சி தனது தலைமையின் கீழ் கிராமப்புறங்களில் ஆயுதப் போராட்டம் நடாத்தி தளப்பிரதேசங்கள் அமைத்தல். இத் தளப்பிரதேசங்களில் மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைத்தல், அதாவது ஒரு பூகோளப் பரப்பினிலேயே இரு அரசுகள் சமகாலத்தில் இயங்கும் நிலையைத் தோற்றுவித்தல்.

ஆறாவது - இவ் அரசின் துணையுடன் முழுநாட்டிலும் மக்கள் ஜனநாயகக் குடியரசை நிறுவுதல்.

இது தான் 'மக்கள் யுத்தப் பாதை' என்று விளங்கிக்கொள்ளப்பட்டிருந் தது.

1991-ல் நா.சண்முகதாசன் தலைமையில் நடந்த கட்சியின் சுயவிமர்சனக் கூட்டத்தில் இப் பாதையை இலங்கையில் அமுல்படுத்துவதில் கட்சி தவறிவிட்டதெனக் கூறியுள்ளார். அவரைத் தலைமையாக ஏற்றுக்கொண்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(மாஓயிசம்) இதை ஒத்துக்கொண்டு தனது பங்கிற்கு தனது சுயவிமர்சனத்தையும் முன்வைத்துள்ளது. இது பற்றிப் பிறிதோர் இடத்தில் பார்ப்போம். தற்போது JVP-க்கு வருவோம்.

JVP மக்கள் யுத்தப் பாதையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சோஷலிஸப் புரட்சியையே ஏற்றுக்கொண்டிருந்தனர். தொழிலாள-விவசாயிகள் தலைமையிலான ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசை ஏற்றுக்கொள்ளவில்லை. தொழிலாளி வர்க்கக் கட்சியின்

(அதுதான் JVP) தலைமையிலான சர்வாதிகாரத்தையே ஏற்றுக்கொண்டனர். அதேபோல் தளப்பிரதேசஅமைவு, நீடித்தயுத்தம் ஆகியனவற்றையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவை சகலதும் சீனாவுக்குப் பொருத்தமான 'சப்பாத்துகள்' என்பதே அவர்களின் கருத்தாக இருந்தது. கியூபப் புரட்சியின் பாதையையே முன்மாதிரியாகக் கொள்வதாகக் கூறினர். சேகுவேராவைப் பின்பற்றுவதாகவும் கூறினர். ஆனால் இந்த முன்மாதிரிகள் தொடர்பானதோர் கருத்துப் போராட்டமொன்று கட்சியினுள் நடைபெறவில்லை.

இதனால் இரகசியக் கட்சியையும், அதன் தலைமையிலான ஒரு படையையும் ஏற்றுக்கொண்டனர். ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொண்டனர். நா.சண்-னின் தலைமையிலான கட்சியைப்போல் இல்லாமல் இவர்கள் தமது கொள்கையை நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டனர். பேசிக்கொண்டே காலத்தைக் கழிக்கவில்லை. ஆயுதப் போராட்டத்துக்கு ஏற்ற முறையில் தமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளத் தயாரில்லாதவர்களாகவும் இருக்கவில்லை. களம் இறங்கினார்கள். அதன் தலைவர்கள் பெரும்பான்மையினர் முழுநேரப் புரட்சியாளர்களாக மாறினார்கள். அவர்களின் அசைவுகள் அனைத்தும் இரகசியமானவையாகவே இருந்தன. கிராமப்புற, நகர்ப்புற இளைஞர்களை அணிதிரட்டுவதில் இலங்கைப் புலனாய்வுத் துறையால் ஊகித்தறியக்கூட முடியாத பல சாதனைகளைச் சாதித்தார்கள். ஒரு ஆயுத எழுச்சியை ஏற்படுத்தக்கூடியவர்களாக மூன்று வருடத்திலேயே வளர்ந்து விட்டார்கள். பிரதான பல்கலைக் கழகங்களில் செயற்பட்டுவந்த சோஷலிஸ மாணவர் இயக்கங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இராணுவத்துள்ளும் தமது ஆதரவாளர்களையும் உறுப்பினர்களையும் உருவாக்கிக் கொண்டனர். இதே செயல்பாடு பௌத்த மத பீடங்களுக்குள்ளும் நடந்தது.

ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. உற்பத்தி செய்யப்பட்டன. பாதுகாப்புப் படையினரிடமிருந்து கொள்ளையும் அடிக்கப்பட்டன.

1971-ஏப்ரல் 5ம் திகதி அவர்களின் திடீர் புரட்சி ஆரம்பமாகின்றது. ஆனால் இதற்கு முதல் நாள் வெளியான கம்யூனிஸ்ட் கட்சியின் 'தொழிலாளி' வார இதழில், சிறு கல்லைக் கூடத் தூக்கி எறிய முடியாதவர்கள் என JVPயினர் விமர்சிக்கப்பட்டிருந்தனர்.

எந்தவிதமான முன் அனுபவமும் இல்லாத நிலையில், JVP இவ்வளவு துரிதமாகவும், மூர்க்கமாகவும் வளர்வது எவ்விதம் சாத்தியமாகியது என்ற கேள்விக்கான பதில்தான் எமது தலைப்புக்குள் எம்மை இட்டுச் செல்லவுள்ளது. தாம் அணிதிரட்டும் இளைஞர்களிடையே எந்தக் கருத்து விவாதத்தையும் அவர்கள் முன்னெடுத்துச் செல்லவில்லை. தத்துவார்த்த சிந்தனாமுறை ஒன்றைத் தமது உறுப்பினரிடையே வளர்க்க முற்படவும்

இல்லை, அது அனுமதிக்கப்படவும் இல்லை. (புலிகளுடன் ஒப்பிடவும்), ரோகண விஜேவீரவின் முன்முயற்சியில் தயாரிக்கப்பட்ட ஐந்து வகுப்புகள் இவ்விளைஞர்களின் சிந்தனையைப் 'புரட்சிகரமாக' மாற்றிவிடுமென்று கருதினர். இவ் ஐந்து வகுப்புகளுக்குமான காலம் சுமார் ஒரு வாரமாகும். குறைந்தது 15-20 பேருக்கு இது நடத்தப்படும். அவசர அவசரமாக தத்துவார்த்தத் தயாரிப்புகள் நடந்து முடிந்து விடுகின்றன. மூளைச் சலவையென்பது இதுதானா? படைப்பிரிவில் சேரும் தகைமையை அவ் இளைஞர் அடைந்து விடுகின்றனர்.

இவ் வகுப்புகளிலொன்று இந்தியத் தேச விஸ்தரிப்புப் பற்றியதாகும். இத் தேச விஸ்தரிப்பைப் பற்றிப் போதிப்பதுடன் மட்டும் நின்று விடவில்லை. மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் இந்திய தேச விஸ்தரிப்பாளர்களின் ஐந்தாம் படையென்றும் போதிக்கப்பட்டுள்ளது. இது ஏன் என்பதுதான் இங்குள்ள கேள்வியாகும். இந்நிகழ்வு 60களின் பிற்பகுதியில் நடக்கிறது என்பதை கணக்கில் கொள்ளவேண்டும்.

JVP யின் முன்நாள் பொதுச் செயலாளரும், 1968ல் இருந்து 1984 வரை கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவருமான லயனல் போபகே அவர்கள். "The JVP"s campaign among the Tamils 1977-1982" என்ற தனது கட்டுரையில் இதற்கான காரணத்தை முன்வைக்கிறார்.

R.V, CPC-P யின் தலைவர் ஒரு தமிழராய் இருந்தபடியால்தான் கட்சியைவிட்டு வெளியேறினார் என்றோர் கதை உலாவியது, ஆனால் அது உண்மையல்ல.

1960களில், இடதுசாரிகளில் சிலர், ஸ்ரீலங்காவின் சோஷலிஸப் புரட்சியின் முன்னணிப்படை மலையகத் தமிழர்கள்தான் என்ற நிலைப்பாட்டை எடுத்தனர். JVP இந்தக் கருத்துடன் முரண்பட்டது. புரட்சியின் தலைமைப் பாத்திரம் சிறுபான்மை இனம் ஒன்றிடம் போய்ச் சேருமானால், ஆளும் மேட்டுக்குடியினர் இனவாதத்தையும் வகுப்புவாதத்தையும் பயன்படுத்தி புரட்சியைத் திசை திருப்பவும் அதன் வெற்றியைத் தடுக்கவும் செய்வார்களெனவும், இதற்கான அனைத்துலக அனுபவங்கள் நிறையவே உள்ளனவெனவும் வாதிட்டார். மொத்தச் சனத்தொகையில் 80% கிராமத்தவர்களாகவும், நாட்டின் மொத்த வறியோர்களில் 90% கிராமிய ஏழைகளாகவும் நகர்ப்புறத் தொழிலாளர்களாகவும் இருக்கும் நிலையில் ஸ்ரீலங்கா புரட்சியின் முன்னணிப்படை கிராமிய விவசாயிகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்ட நகர்ப்புறத் தொழிலாளி வர்க்கமாகத்தான் இருக்கமுடியுமெனவும் கூறினார்.

JVPயின் அரசியல் வகுப்புகளில் விவாதத்துக்குரிய விவகாரமாக இருந்த 'இந்திய விஸ்தரிப்புவாதம்' எனும் தலைப்பிலான வகுப்பு, சிங்கள

இளைஞரிடையே மலையகத் தமிழர்களுக்கு எதிரான உணர்வைத் தூண்டிவிட்டது. மலையகத் தொழிலாளர்களை சேனைப்பயிர்த் தொழிலாளர்களுடன் ஒப்பிட்டதும், அவர்களை இலங்கையுடன் இணைந்தவர்களாக அல்லாமல் இந்தியாவுடன் இணைந்தவர்களாக காட்டியதும் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல் இருந்தது.

'இந்திய தேச விஸ்தரிப்பு' எனக் கூறியதற்கும், மலையகத் தமிழர்களை 'ஐந்தாம்படையினர்' என்று கூறியதற்குமான காரணங்கள் எதுவும் இங்கு காணப்படவில்லை. லயனலின் தற்திறனாய்வு குறைபாடுடையதாகவே உள்ளது.

ஒரு மக்கள் பிரிவை 'ஐந்தாம் படை'யினராகக் கருதுவது எவ்வளவு ஆபத்தானது என்பதற்கானதோர் இந்திய உதாரணத்தை அறிந்தபின் நாம் எமது ஆய்வைத் தொடர்வோம்

2010 ஏப்ரல் மாதம் கலாநிதி.சௌட்ஹறி(Dr. Rita Chowdhury) எனும் அசாம் நாவலாசிரியர் மகம் (makam)(meaning Golden Horse in Chinese) எனும் நாவலை வெளிக்கொணர்ந்தார். "இந் நாவல் சீன வம்சாவளி அசாம் மக்களின்" துயரம் சம்பந்தமானதாகும். இந்நாவலின் கதாநாயகர்களின் எண்ணிக்கை வெறுமனே 1500தான். இவர்கள், 1962 நவம்பர் மாதம் 19ம் திகதி மகம் பகுதியைச் சேர்ந்த சினப்பட்டி எனுமிடத்தில் வைத்து இந்திய இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டார்கள். இவர்கள் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள சிறப்புமுகாமில் அடைக்கப்பட்டார்கள். இவர்களின் சொத்துக்கள் எதிரியின் சொத்துக்களென முத்திரை குத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இந்தச் சீனர்கள் 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரித்தானிய காலனியல்வாதிகளால் தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களாக தொழில்புரிய கூட்டிவரப்பட்டவர்களாகும். இவர்கள் அசாமிய பெண்களை மணந்து அசாமிய சமூகத்துடன் கலந்து வாழ்ந்து வந்தவர்களாகும். யுத்த நிறுத்தம் அறிவித்த பின் இம்முகாமில் அடைக்கப்பட்டோர்களில் ஒரு பகுதியினர் சீனாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். இவர்களின் பெண்களும் பிள்ளைகளும் இவர்களுடனேயே சென்றனர். மூன்று வருடங்களின் பின்னர் மீதமானோர் விடுவிக்கப்பட்டனர். வாழவழியில்லாதபடியால் இவ்விதம் விடுவிக்கப்பட்டவர்களில் சிலரும் சீனா சென்றனர்.

இவர்களில் பலர் ஹொங்கொங்கில் வாழ்கிறார்கள். அவர்கள் இப்போதும் அசாம் மொழியையே பேசியும் எழுதியும் வருகிறார்கள். சிலர் ஹிந்தியும் அசாமும் கலந்தே பேசுகிறார்கள். அவர்கள் அசாம் திரும்ப விரும்பவில்லை ஆனால், தமது உறவுகளையும் சொந்த பந்தங்களையும் காண அசாம் வந்துபோக விரும்புகிறார்கள். "நாம் சீன ஒற்றர்களல்ல அப்படியிருக்க எதற்காக நாம் நாடு கடத்தப்பட்டோம்" என்பதே அவர்களின்

கேள்வியாகவுள்ளது. இந்நாவல் சீன வம்சாவளி அசாமியர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்நூலாசிரியருக்கோரு பாராட்டுவிழாவொன்று ஹொங்கொங்கில் நடைபெற்றது.

இந்நாவல் ஏற்படுத்திய தாக்கத்தால் அசாமின் தலைமை அமைச்சர் திரு கோர்கி நாடு கடத்தப்பட்டவர்களும் தாமாகச் சென்றவர்களும் விரும்பினால் அசாமுக்கு வந்து செல்லாமென அறிவித்துள்ளார். The Hindu.

கடத்திவரப்பட்ட தோட்டத் தொழிலாளர்களை 'ஐந்தாம் படை' யினராகப் பார்த்த அனுபவத்தை இந்திய அரசிடமிருந்து JVP பெற்றுக்கொண்டிருக்கலாம் அல்லது முதலாளித்துவம் எப்போதும் ஒரே மாதிரித்தான் சிந்திக்கிறது என்பதற்கு இதுவோர் எடுத்துக்காட்டாகவும் இருக்கலாம்.

1. **உள்ளூர் சூழல்**

இலங்கையை அப்போது ஆட்சி புரிந்தது UNP அரசாங்கம். இது அமெரிக்க ஆதரவு அரசாங்கம். ரோகண விஜேவீர இவ் அரசாங்கத்திற்கு எதிரான இராணுவச் சதியில் ஈடுபட்டார் என்றோர் குற்றச்சாட்டும் உண்டு. 1970 தேர்தலில் இவ் அரசாங்கத்திற்கு எதிராக SLFP கட்சிக்காகச் செயல்பட்டார். அதே நேரத்தில் "ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 'பாட்டாளிவர்க்க' நலனுக்காக செயல்படாது விடுவாரானால், அவரின் ஆட்சிக்கு எதிராக பலாத்கார கிளர்ச்சிகள் நடபெறும்" எனப் பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும், துண்டுப்பிரசுரங்களும், சுவரொட்டிகளும் வெளியிட்டனர். இத் தேர்தலின் போதுதான் இவ் அமைப்பு JVP என்ற தனது பெயரை வெளிப்படுத்தியது. இவர்களின் தீவிரத்தன்மைக்காக UNP அரசாங்கம் RV-ஐத் தடுப்புக் காவலில் வைத்தது. ஆனால், தாக்குதல் நடக்கும்போது சிறையில் இருந்த RV-ஐ SB, 1971 ஜூலை மாதம் விடுதலை செய்தார்.

SLFP-கும் இந்தியாவுக்கும் இடையே எப்போதுமே நல்லுறவு நிலவி வந்துள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையேகூட எந்தக் கசப்பான உறவும் இருக்கவில்லை. 1974-ல் இந்தியா, தன் நாட்டின் உள்ளூர் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் கச்சதீவை இலங்கைக்கு 'விட்டுக்கொடுத்தது'. இந்திய-இலங்கை உறவை வைத்துக்கொண்டு 'இந்தியத்தேசிய விஸ்தரிப்பாளர்' என்று கூறுவதற்கான காரணமும் எதுவும் அப்போது இருக்கவில்லை.

2. இந்தியா அனைத்துலக அரங்கில் முற்போக்கு பாத்திரம் வகித்த காலமாகும். அன்றைய இந்தியா அமெரிக்காவின் கருவியாகச் செயல்படவில்லை. மாறாக, இந்தியாவின் வளர்ச்சியைத் தடுக்க அமெரிக்கா

முயற்சிகள் எடுத்து வந்த நேரமாகும். ஆனால், அது சீன-இந்திய எல்லை யுத்தத்தின் சூடு ஆறாதிருந்த நேரம். 'இந்திய தேசவிஸ்தரிப்பாளர்' என்ற பதம் சீன அரசால் முன்வைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் JVP இலங்கைச் சிங்கள இளைஞர்களுக்கு இந்தியாவை 'தேசவிஸ்தரிப்பு', 'ஐந்தாம்படை' என்ற போதனைகளை நடத்தியது எதற்காக எனும் கேள்விக்கு பின்வரும் பதில்களை ஊகிக்கக் கூடியதாக உள்ளது.

1 - மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலார்களை என்ன செய்வதென இலங்கையின் அரசியல் கட்சிகள் கடுமையாகச் சிந்திக்கத் தொடங்கியிருந்த காலம். இதன் விளைவுதான் S.B அரசாங்கம் இந்திய அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையாகும். அனைத்துத் தொழிலாளர்களையும் இந்தியா ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கையை இந்தியா உறுதியாக மறுத்து விட்டது. ஒரு தொகையினரை மாத்திரம் ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தது. அதற்குப் பதிலாக குறிப்பிட்ட தொகையினருக்கு குடியுரிமை கொடுக்கவேண்டுமென இலங்கை நிர்ப்பந்திக்கப்பட்டது. இவ் அரசாங்கத்தின் வெற்றிக்கு உழைத்த JVP-யின் நோக்கம் யாருக்கும் குடி உரிமை கொடுக்கக் கூடாது என்று இருந்ததா? இந்தியா அனைவரையும் எந்த நிபந்தனையும் இன்றி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இருந்ததா? இது தொடர்பாக இரு கட்சிகளுக்கும் இடையில் ஏதாவது பேச்சுவார்த்தைகள் அல்லது ஒப்பந்தங்கள் நடைபெற்றதா? தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் விரட்டியடிக்கப்பட வேண்டும் என்பதை சொல்லாமல் சொல்வதற்காகவா தேயிலைச் செடிகள் அனைத்தையும் பிடுங்கியெறிந்துவிட்டு மரவள்ளிக் கிழங்கு வைக்கவேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டது? அதாவது, இனவாதந்தான் (racialism) ஏகாதிபத்திய எதிர்ப்பு முகமூடியுடன் முன்வைக்கப்பட்டதா? S.B அரசாங்கத்திற்கு ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காகத்தான் இந்த வகுப்பும், பிரச்சாரமும் வைக்கப்பட்டனவா? இவை பதில்கள் அவசியப்படாத கேள்விகளாகும்.

2- 1946-ல் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வித் திட்டத்தாலும், 50-களிலும் 60-களின் முற்பகுதியிலும் 'அப்பே ஆண்டுவ' அரசாங்கத்தின் சீர்திருத்தங்களாலும் உருவான படித்த இளைஞர் பட்டாளம், தாம் எதிர்பார்த்த தொழில் கிடைக்காததால் தம்மோடு போட்டி போடக்கூடிய தமிழரை ஒதுக்கித் தள்ளுவதற்காக முன்வைக்கப்பட்ட அரசியல் வேலைத்திட்டந்தான் இந்த இந்தியத் தேசவிஸ்தரிப்பா? அதாவது, இங்கும் இனவாதந்தான் (racialism) ஏகாதிபத்திய எதிர்ப்பு முகமூடியுடன் முன்வைக்கப்பட்டதா? கிராமிய படித்த இளைஞர்களே JVPயின் சமூக அடித்தளமாகும் என்ற யதார்த்தத்தை பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

3 - காலுக்கேற்ற முறையில்தான் சப்பாத்து செய்யப்படவேண்டுமென்ற R.V யின் நிலைப்பாடு ரொம்பவும் சரியானது. ஆனால் சப்பாத்துச் செய்வதற்கான மூலப்பொருள் (தத்துவம்) எது என்பதுதான் கேள்வி? சப்பாத்துச் செய்ய பௌத்த சிங்கள மாறாமரபியல்வாதம் என்ற தோலை R.V தெரிவு செய்ததுதான் தப்பாகிப் போய்விட்டது, காலுக்கேற்ற சப்பாத்துச் செய்யத் தெரியாது, நல்ல தோல் விற்பனையாளராக மட்டுமேயிருந்த நா.சண்-னின் தலைமையை விட்டு RV வெளியேறியது இலங்கை மக்கள் அனைவருக்குமே தீதாகிப் போய்விட்டது.

இக்காலகட்டத்தில் தமிழ்த்தேசியவாதிகளை பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்று சொல்வதற்கான சமூகக் காரணிகள் எதுவுமே தோன்றவில்லை. அதாவது, தமிழ்த் தேசியவாதிகள் யாரையும் கோபப்படுத்தக்கூடியவர்களாக இருக்கவில்லை. ருத்ரம் பழகாத, மனுக்கள் எழுத மாத்திரமே தெரிந்த 'செக்குகளாகவே' (Pessimists) இருந்தனர். ஆகவே தமிழ்த் தேசிய தீவிரவாதத்தின் எதிர்வினையாகத்தான் ஐந்தாம்படையினரென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதென்று கூறமுடியாது. சிங்கள-பௌத்த பேரகங்காரவாதத்தைத் தூண்டிவிடுவதற்கு எந்தப் புறநிலை நிகழ்வுகளும் அவசியமில்லை, அது தானே தன்னைத் தூண்டிவிட்டுக்கொண்டு நிரந்தர விழிப்புநிலையில் உள்ளது. இதனால்தான் 1969-களிலேயே மலையகத் தமிழ் மக்கள் மீது ஐந்தாம்படையினரென்ற குற்றம் சுமத்தப்பட்டது. மலையகத் தமிழர்களை காலனியல் (வி)தேசியவாதிகள் தாக்கியது போதாதென்று 'புரட்சிகர!!'த் தேசியவாதிகளும் அவர்களைத் தாக்கத் தயாரானார்கள்.

### 3.7.ஆ.2) **சமாதானப்படை கால JVP**

தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கையில் JVP க்கும் தொடர்பிருப்பதாகக் கூறி 1987 ஜூலையில் UNP அரசாங்கம் இவ்வியக்கத்தை மீளவும் தடை செய்தது. தடையைத் தொடர்ந்து JVP தலைவர்கள் தலைமறைவு அரசியல் களம் புகுந்தார்கள்.

1987ன் இரண்டாவது பாதியில் இவ்வியக்கத்தின் செயல்பாடுகள் தீவிரமடைய ஆரம்பித்தன. அதுதான் இந்திய-ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தின் காலமுமாகும். இந்திய சமாதானப்படையின் நுழைவும், தமிழ் சுயாட்சி கிடைத்துவிடுமோ என்ற அச்சமும் ஒன்றிணைந்து சிங்களத் தேசியவாத அலையை பொங்கியெழச் செய்தது. இது இவ்வொப்பந்தத்தைக் கண்டித்து அரசாங்கத்திற்கெதிரான வன்முறைகளை திடீரென வளர்த்துவிடுவதில் முடிவடைந்தது. 1987ல் தேசப் பிறேமி ஜனதா வியாபார-DJP (the Patriotic Liberation Organisation) என்றோர் புதிய இயக்கம் ஆரம்பமானது. இது

புதிதல்ல. JVP யின் ஒரு அணியாகும். கீர்த்திவிஜயபாகு -இது ஒரு சிங்கள மன்னனின் பெயர்- எனும் சமன் பியசிறி பெர்னாந்தோ என்பவரே இதன் தலைவராக இருந்தார். R.V-யின் மரணத்திற்குப் பின்னர் JVPக்குத் தலைமை தாங்கியது இவரேயாகும். R.V, உறுஹுுன விஜயவீர எனவும் அழைக்கப்பட்டார், - உறுஹுுன என்பது காலனிக்கு முன்னைய சிங்கள இராச்சியங்களில் ஒன்றாகும். இது துட்டகைமுனு மன்னனின் இராச்சியம்.

ஆகஸ்ட் 1987 ஜனாதிபதியையும், பிரதமரையும் கொல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு தாமே காரணம் என DJV உரிமை கோரியது. இத் தனிநபர் கொலைகள் ஆளும் கட்சியை அச்சுறுத்துவதற்காக முன்னெடுத்துச் சென்ற இயக்கத்தின் ஒரு அங்கமாக இருந்தது. மேலும் ஜூலையில் இருந்து நவம்பர் வரையான காலத்தில் பாரளுமன்ற உறுப்பினர்களில் எழுபதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வமைப்பின் புதுப்பிக்கப்பட்ட பலாத்காரத்துடன் இணைந்து இராணுவத்துள்ளான ஊடுருவலும் நடந்தது. 1987 மே மாதம் வெற்றிகரமாக நடந்து முடிந்த பல்லேகல இராணுவமுகாம் ஆயுதச் சூறையாடலைத் தொடர்ந்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணையில் JVP யுடன் தொடர்பு கொண்டிருந்தார்களென்ற சந்தேகத்தின் பேரில் 37 இராணுவத் துருப்பினர் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள்.

அக் காலகட்டத்தில் ஒவ்வொன்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இராணுவ அலகுகளாக இயக்கம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. மாத்தறையே இவர்களின் அதிக செல்வாக்குப் பிரதேசமாக இருந்தது. இங்கு மட்டும் JVPயால் கொல்லப்பட்டவர்கள் சுமார் ஆயிரம் பேராக இருக்கலாம். அது மட்டுமல்ல குறுகிய கால இடைவெளிகளில் மக்களைக் கட்டாயப்படுத்தி நடத்தப்பட்ட பொது வேலைநிறுத்தத்தால் சுமார் இரு வருடங்கள் நாடே ஸ்தம்பித்திருந்தது. இவர்களால் செய்யப்பட்ட கொலைகளுக்கு பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்று காரணமாக இருந்தது.

தொழிலாளிவர்க்கத் துரோகிகள், (இது இடதுசாரிகளைக்குறிக்கும்),

தேசத் துரோகிகள், (இது JVP எதிர்ப்பாளர்களையும், இலங்கை-இந்திய ஒப்பந்த ஆதரவாளர்களையும் குறிக்கும்),

காட்டிக் கொடுப்பாளர்கள், (இது பொலிஸ் ஒற்றர்களைக் குறிக்கும். உட் கொலைகளுக்கும் இது காரணமாக்கப்பட்டது),

சமூக விரோதிகள், (இது உள்ளூர் மக்களின் வெறுப்புக்குள்ளான தீய புள்ளிகளைக் குறிக்கும்),

1989 நவம்பர் மாதம் JVP த் தலைவர் R.V அரச படைகளால் கைதுசெய்யப்பட்டார். எந்த வெளிப்படையான விசாரணையும் இன்றி சிறையில் வைத்துக் கொல்லப்பட்டார். 1990 முற்பகுதியில் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர்கள் (கிட்டத்தட்ட) அனைவரும் கைதுசெய்யப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். சுமார் 7000 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டனர். இதைச் சாதிப்பதற்காக அரசாங்கம் சட்டத்துக்குப் புறம்பான கொலைகளிலும் மனித உரிமைமீறல் கொடூரங்களிலும் ஈடுபட்டது.

### 3.7.ஆ.3) **4-வது ஈழப் போரின் போது**

“நிகழ்கால நெருக்கடியில் கண்டதும் காணாததும்” என்ற தலைப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க அவர்களுடன் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா அவர்கள் நடத்திய நேர்காணல் நியமுவா வெளியீடாக வெளியாகியுள்ளது. அதில் தமது தற்போதைய இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு பற்றி விரிவாக விளக்கியுள்ளார். அதிலொரு பகுதியை அப்படியே இங்கு தருகிறோம். சோமவன்ச அமரசிங்க இந்தியாவுக்குத் தப்பிச்சென்று, அங்கிருந்து ஜேர்மனி சென்று சில வருடங்கள் கழிந்து இலங்கை திரும்பியவராகும்.

தோழர் சோமவன்ச அமரசிங்க:-

“நிகழ்கால இந்தியத் தலையீடு கடந்தகால இந்தியத் தலையீட்டினை விட மாறுபட்டதொன்றல்ல. இன்றுள்ள வித்தியாசம் என்னவெனில் இந்திய ஏகாதிபத்தியவாதிகள் எமது நாட்டுக்கு அவர்களின் படையை அனுப்பிவைக்கவில்லை. அது மாத்திரம்தான்.

1980-ம் ஆண்டுகளில் இலங்கையின் பிரிவினைவாத பயங்கரவாத அமைப்புக்களுக்கு பயிற்சியளித்ததும், அவற்றுக்கு ஆயுதம் வழங்கியதும் இந்தியாவே. அந்த அமைப்புக்களுக்கு அரசியல் அங்கீகாரத்தை வழங்கியதும் இந்தியாவே. அதன் மூலமாக இலங்கை இராச்சியத்தை பலவீனப்படுத்தியது. இலங்கையை பிரிந்து செல்லும் கட்டத்திற்கு கொண்டுவந்தது. இலங்கையின் ஆட்சியாளர்களை மண்டியிட வைத்தது. இலங்கையில் ஆட்சியாளர்களும் அதிகார மோகம் காரணமாக மண்டியிட்டார்கள்.

அடுத்ததாக 1987-ல் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை இலங்கை மீது சுமத்தினர். அதன் மூலமாக இலங்கையில் நீண்டகாலமாக நிலைநிறுத்திய பொருளாதார விஸ்தரிப்புவாதத்தை வளர்ப்பதற்காக

அரசியல் விஸ்தரிப்புவாதத்தையும் நிலை நிறுத்தியது.

தற்போது நடைபெறுவதும் அதே செயற்பாடுதான். ஏற்கெனவே இந்தியா எமது நாட்டில் முன்னொருபோதும் இருந்திராத வகையில் பொருளாதார விஸ்தரிப்புவாதத்தை நிலைநாட்டி உள்ளது. மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் அதனைப் பல மடங்குகளாக மேலோங்கச் செய்துள்ளது. எரிபொருள் சந்தையில் கணிசமான அளவினை இந்தியாவின் ஐ.ஓ.சீ (Indian Oil Company) கம்பெனி வியாபித்து வருகின்றது. என்றாவது ஒருநாள் இலங்கையின் போக்குவரத்தினைக்கூட நிறுத்தும் ஆற்றலை இந்தியா தனதாக்கி வருகின்றது. அன்று எமது ராணுவத்திற்கும் பொலீசுக்கும் கூட போக்குவரத்தினை நிறுத்தவேண்டி நேரிடும்.

எமது பாதுகாப்புப் படையினர் உயிரைத் தியாகம் செய்து புலிகளிடமிருந்து மீட்டெடுத்த சம்பூர் பிரதேசத்தில் நிலக்கரி மின் பிறப்பாக்கி ஒன்று அமைக்கப்படுகின்றது. அதன் நிர்மாண வேலைகளை இந்தியாவே மேற்கொண்டு வருகின்றது. மின்சாரத்தை உற்பத்தி செய்வதும் இந்தியாவே, மின்சாரத்தை விற்பனை செய்வதும் இந்தியாவே, எமக்கு இதில் ஒன்றுமே கிடையாது. தற்போது சம்பூர் பிரதேசத்தில் எமது நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினரால்கூட உட்புக முடியாது.

திருகோணமலை துறைமுகத்தை அண்டியுள்ள எணணெய்க்குதங்களும் இந்தியாவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. திரிகோணமலைப் பிரதேசத்தில் 675 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதி இந்திய பொருளாதார வலயமொன்றுக்காக ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. அது பருமட்டாக கொழும்பு மாவட்டத்தைப் போன்ற அளவு பாரிய நிலப்பரப்பாகும். இது இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி அவர்களின் கையொப்பத்துடனேயே கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கையைப் போன்ற ஒரு சிறிய நாட்டில், தனியான பொருளாதார வலயத்திற்காகவேனும் இந்தளவு பாரிய காலனியொன்றை ஒதுக்கிக் கொடுப்பது இயல்புக்கு முரணானது அபாயகரமானது. இந்தக் காணி தெளிவாகவே இந்தியாவினதும் புதிய நண்பனான ஐக்கிய அமெரிக்காவினதும் யுத்த மூலோபாய தேவைப்பாடுகளை ஈடேற்றுவதற்கே ஆகும்.

அடுத்ததாக புல்மோட்டை கனிய மணல் சேகரிப்பதையும் இந்தியா சுவீகரித்துக் கொண்டது. புல்மோட்டையில் இருந்து சம்பூர் இறங்குதுறைவரை காந்தி மாவத்தை எனும் பெயரில் அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டு வருவதும் அதற்காகவே. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையையும் இந்தியா சுவீகரித்துக் கொண்டது. மன்னாரில் உள்ள எண்ணெய் வளமும் இந்தியாவுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது.

சம்பூர், புல்மோட்டை, காங்கேசன்துறை, மன்னார் இவை தமிழீழமென பெயரிடப்பட்ட இரண்டு மாகாணங்களையும் தழுவுகின்ற இடங்கள் என்பது பார்த்த மாத்திரத்திலேயே புலப்படுகின்றது.

அதைப்போன்றே இப்பிரதேசத்தில் இந்தியா யுத்த மூலோபாய வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதென்பதையும் விளங்கிக் கொள்வது சிரமமன்று. இந்தியா தனது யுத்தத்தை பயங்கரவாதிகளைக் கொண்டு முன்னெடுத்து, தற்போது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உத்தியோக பூர்வமற்ற வகையில் இந்தியாவுடன் சேர்த்துக் கொண்டுள்ளது.

இவையனைத்திற்கும் மேலாக மேல்மாகாணத்திலும் பெரும்பாலான கைத்தொழில்களில் இந்தியக் கம்பெனிகள் கைவைத்துள்ளன. இந்தியாவின 'ரோ உளவுச் சேவையின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கான தகவல்களும் எமக்குகிடைத்துள்ளன. அத்துடன் பல்லாயிரக்கணக்கான இந்தியப் பிரசைகள் வீசா அனுமதியின்றி இலங்கையில் நடமாடித் திரிகின்றார்கள். அதுமாத்திரமன்றி இந்தியக் கம்பெனிகளில் உயர்பதவிகளை வகிக்கின்றார்கள் என்பதும், வேறு தொழில்களிலும் தொழில் முயற்சிகளிலும் ஈடுபடுகின்றார்கள் என்பதும் எமக்கு அறியக்கிடக்கிறது.

சுருக்கமாகக்கூறினால், இந்தியா இலங்கைக்குள்ளே விரிவாக்கும் பொருளாதார ஏகாதிபத்தியத்திற்கு ஏற்றவகையில் அரசியல் ஏகாதிபத்தியத்தையும் விரிவாக்கி வருகின்றது.

தற்போது 13வது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பார்க்கிலும் முன்னேறிச் சென்று வடக்கிற்கும் கிழக்கிற்கும் அதிகாரங்களைப் பகிருமாறு இலங்கையை நிர்ப்பந்திக்கும் அளவுக்கு இந்தியா கொடூரமாகிவிட்டது. வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தை மீண்டும் இணைக்குமாறும் இந்தியா வருங்காலத்தில் நிர்ப்பந்தம் செய்யும் அப்போது இலங்கையின் நிலப்பரப்பில் மூன்றில் ஒருபகுதி மாத்திரமன்றி வடக்கிழக்கு கடற்பரப்பினைக் கூட இலங்கை இழக்க நேரிடும். இலங்கையை இந்தியாவின் 29வது மாநிலமாக மாற்றிக் கொள்ளவா இந்தியா தயாராகி வருகின்றது? எனும் கேள்வி எம் எதிரில் நிலவுகின்றது. போகின்ற போக்கில் அது அவ்வாறு இடம்பெறாதென எவரால் உத்தரவாதம் அளிக்க முடியும்?

கேள்வி :- நீங்கள் அரசியல் தேவைக்களுக்காக அநாவசியமான இந்திய எதிர்ப்பினை மேலோங்கச் செய்விக்கிறீர்களென ஒரு சிலர் குற்றம் சுமத்துகின்றார்கள். அது பற்றி....?

தோழர் சோமவன்ச அமரசிங்க:-

......இந்தியா பொருளாதார ரீதியாக எமது நாட்டில் எவ்வாறு தலையிட்டுள்ளதெனவும் எந்தெந்த துறைகளிலெனவும் நாம் ஏற்கெனவே விளக்கிக்கூறினோம். மற்றுமோர் உதாரணத்தைக் கூறுகிறேன். தற்போது மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு மின்சாரம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மின்சாரக்கேபிள் இழுக்க பேச்சு வார்த்தை மேற்கொண்டு வருகின்றது. இந்த கேபிள் தமிழ் நாட்டின் தனுஸ்கோடியில் இருந்து கடலுக்கடியில் இலங்கையின் தலை மன்னார் ஊடாகவே இழுக்க முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மின்சாரக் கொள்ளளவு 1000 மெகாவாற் ஆகும். அத்துடன் தற்போது இந்தியா சம்பூரில் நிர்மாணித்துவருகின்ற நிலக்கரி மின்நிலையத்தின் ஆரம்பக்கட்ட மின்சாரக் கொள்ளளவு 500 மெகாவாற் ஆகும். எனவே இந்தியா இலங்கைக்கு வழங்குகின்ற மின்சார அளவு 1500 மெகாவாற்றாக அமையும். அது இலங்கையின் மின்சார நுகர்வின் 50% ஐ விட அதிகமானதாகும். ஆகவே இலங்கைக்கான மின்சாரத் தேவையின் 50% ற்கு மேலாக இந்தியாவுக்கு உரித்தாவது எமது தேசிய பாதுகாப்பிற்கு கூட அச்சுறுத்தலாகவே நாங்கள் காண்கிறோம். அதேவேளையில் இந்தியா இலங்கையின் எண்ணெய் விநியோகத்தையும் தமது கைக்குள் அகப்படவைத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே மின்சாரமும், எண்ணெயும் (சக்திவலு விநியோகத்தில் பெரும்பகுதி) இந்தியாவின் கைக்குச் சென்று விட்டால் அது எமது நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கு தீவிர அபாயமாக அடைந்து விடும்.

இந்த உண்மையைத்தான் நாங்கள் சுட்டிக் காட்டுகின்றோம். அந்த வளங்களின் உரிமையைப் பாவித்து இலங்கையைக் கட்டுப்படுத்த இந்தியாவுக்கு இயலுமானதாக அமையும். அதனை நிறுத்தக் கூடாதா? அதனைத்தான் நாங்கள் முன்வைக்கிறோம்.

கேள்வி :- புலிகள் அமைப்பினை தோல்வியடையச் செய்யப் போராடுகின்ற ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டைக் காட்டிக்கொடுக்கவோ, பிரிவினைவாதத்தை வெற்றியீட்டச் செய்யவோ நடவடிக்கை மேற்கொள்ளாதெனும் வாதம் நிலவுகின்றது. அது பற்றிய உங்களின் கருத்து யாது?

தோழர் சோமவன்ச அமரசிங்க:-

.....புலிகளைத்தோல்வியடையச் செய்யும் போராட்டம் ராஜபக்ஷ அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுவது உண்மைதான். அதன் பெருமை ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு மாத்திரம் உரித்தாகக்கூடாது. இதன் பொருட்டு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து, மக்கள் அபிப்பிராயத்தைக்

கட்டியெழுப்பி, ஆயுதப் படையினரை ஊக்குவித்து சுற்றுச் சூழலை உருவாக்கிக் கொடுத்தது மக்கள் விடுதலை முன்னணியே. அத்துடன், இந்நாட்டின் தேசப்பற்றுடைய மக்கள் யுத்தத்திற்காக அளித்த ஒத்துழைப்பு அளப்பரியது. விசேடமான விடயம் புலிகளைத் தோல்வியடையச் செய்ய ஆயுதப்படையினா் மத்தியில் நிலவுகின்ற அவசியமும், அா்ப்பணிப்பும் போராடும் திறனுமேயாகும். அதனால்தான் இந்த யுத்தம் வெற்றியுடன் முன்நோக்கி நகருகின்றது. ஆயினும், இந்த அரசாங்கம் தற்போது யுத்தத்தின்திரைமறைவில் நின்றுகொண்டு நாட்டைக் காட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கிறது.

அதனை மூடிமறைக்க முடியாது. அதுதான் உண்மை. .......ஆயுதப் படையினா் போராடி மீட்டெடுத்த கிழக்கு மாகாணத்தைச் சோ்ந்த திருகோணமலை மாவட்டத்தில் 675 சதுர கிலோ மீற்றா் நிலப்பரப்பினை பொருளாதார வலயமாக இந்தியாவிடம் கையளிக்கும்போது அது காட்டிக் கொடுத்தல் அல்லவா? எமது தாய் நாட்டினை, எமது நிலப்பரப்பினை இந்தளவில் ஏன் இந்தியாவுக்கு கொடுக்க வேண்டும்?

அந்த மண்ணைச் சோ்ந்த மக்கள் அகதிமுகாம்களில் அல்லறப்படுகின்ற வேளையில், அவா்களின், அவா்களுக்குச் சொந்தமான நிலப்பரப்பினை இந்தியாவுக்கு கொடுத்துள்ளாா்கள். எமது நாட்டில் கரையோரப் பிரதேசத்தில் உள்ள பெறுமதியான வளங்களை இந்தியாவுக்கு கொடுக்கிறாா்கள். மன்னாா் வடிநிலத்தில் எண்ணெய் அகழ்வினை இந்தியாவுக்கு கையளிக்கிறாா்கள். காங்கேசன்துறை சீமெந்து ஆலையை இந்தியாவின் பிா்லா கம்பெனிக்கு கொடுக்கிறாா்கள். .....கரையோர புகையிரதப் பாதை நிா்மாண வேலைகளையும் இந்தியாவுக்கு கொடுக்கின்றாா்கள். இவையனைத்தையும் விட பாரதூரமானது இலங்கையின் சக்தி வலுவினை (மின்சாரம் மற்றும் எண்ணெய்) நெறிப்படுத்தும் அதிகாரத்தை இந்தியாவுக்கு கொடுத்துவருவதே. இது தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகும். எனவே இவை காட்டிக் கொடுத்தல் அல்லவா?

.........“பயங்கரவாதத்தை” தோற்கடிக்க நடவடிக்கை மேற்கொள்ளும் அரசாங்கம் “பிரிவினைவாதத்திற்கு” பிராணவாயு அளித்து வருகின்றது. புலிகளிடமிருந்து மீட்டெடுத்த கிழக்கு மாகாணத்தில் அவசர அவசரமாக மாகாண சபையை நிறுவி பிள்ளையானை முதலமைச்சா் ஆக்கினாா்கள். இங்கே தொடங்கியிருப்பது அதிகாரப் பகிா்வுச் செயற்பாட்டினை பலப்படுத்துவது அல்லவா? இந்த வேலைகளைச் செய்வது இந்தியாவின் அழுத்தத்திற்கு கட்டுப்பட்டே என்பதுதான் உண்மை.

தற்போது பொதுவாக மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை

வழங்குகின்ற பிரேரணையை அங்கீகரித்து கிழக்கு மாகாணத்திற்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் உட்பட உச்ச அளவிலான அதிகாரங்களை வழங்க செயலாற்றி வருகின்றது.

வட மாகாணத்திற்கு இடைக்கால மாகாண சபையொன்றினை நியமிக்க தயாராகி வருகின்றது. இன்று இந்தியாவுக்கு தேவையாக அமைந்துள்ளதெல்லாம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இந்தியாவினால் ஆட்டிப்படைக்கக்கூடிய நிர்வாகத்தை அமைத்துக் கொள்வதாகும்.

.......எனவே மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் புலிகளைத் தோற்கடிக்கும் போராட்டத்தின் மறைவில் நின்று கொண்டு நாட்டைக் காட்டிக் கொடுப்பதிலும், பிரிவினைவாத (அதிகாரப் பகிர்வு) நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் ஈடுபட்டுள்ளமை மிகவும் தெளிவாகின்றது. அது வேறெதற்காகவும் அல்ல. தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காகவும், நீண்ட காலம் அதிகாரத்தில் இருக்கவேண்டுமென்ற மோகத்தை முதன்மையாகக் கொண்டுமாகும். (jvpsrilanka.com). JVPயின் இந்திய எதிர்ப்பை புரிந்து கொள்ள இவ்வளவும் போதும்.

JVPயும் PNCயும் MRஇன் இரண்டாவது பிரதான உடனடி எதிரிகளாகக் காணப்படுகிறார்கள். இவர்களுடனான முரண்பாடு ஒரு உள்நாட்டு யுத்தமாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே இவர்களையிட்டு MR அச்சங்கொள்வது இயல்பானதே.

### 3.2.8) முழு இலங்கைக்குமான முதலாளித்துவ ஜனநாயக இயக்கமா?

“அமைதியான பிரஜைகள், ஒரு எதேச்சதிகார ஆட்சியாளனுக்கு நற்குணம்மிக்க குடிமக்களாக இருக்கலாம் ஆனால் அதே பிரஜைகள் ஜனநாயகத்துக்கு பெரும் பேரழிவாக இருப்பார்கள்.” (Robert Dhal- ‘On Democracy’)

ஜனநாயக-எதேச்சதிகாரத்துடன் கூடிய தனது குடும்ப ஆட்சிக்கும், நடந்துவரும் ஜனநாயகக் கொலைகளுக்கும் எதிரான எழுச்சிகளில், தனித்தோ அல்லது மேற்குலகின் உதவியுடனோ இலங்கை மக்கள் (சிங்கள மக்கள்) ஈடுபடக்கூடும் என எதிர்பார்க்கிறார்.

> முதலாளித்துவ ஜனநாயகத்துக்கான இயக்கமே இன்று இலங்கையின் பிரதானமானதும் உடனடியானதுமான வேலைத்திட்டமாக அமைகிறது. தரகு முதலாளித்துவ-சிங்கள-பௌத்த கொவிகம, மஹிந்த குடும்பவிய-தனிநபர் இராணுவ எதேச்சாதிகாரமே

இலங்கையின் அனைத்து மக்களினதும் பிரதான எதிரியாக உள்ளது. இந்த எதேச்சாதிகாரம் ஆளும் வர்க்கத்துக்குள்ளேயே பல முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. அது மேலும் கூர்மையடைந்தும் வருகிறது. குறைந்தது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியாவது இலங்கைக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது.

- 50ன் முற்பகுதியில் நடந்த தொழிலாளர்களின் ஹர்த்தால்
- முதலாளித்துவ தலைமையிலும், தொழிலாள வர்க்க அமைப்புகளின் உதவியுடனும், சிங்களக் கிராமப்புறங்களைப் பிரதானமாகக் கொண்டு 1950-களின் பிற்பகுதியில் நடைபெற்ற 'அப்பே ஆண்டுவ' எழுர்ச்சி
- சிங்களக் கிராமப்புற படித்த இளைஞர்களை அடித்தளமாகக் கொண்டு 1971-இலும், 90களின் முற்பகுதியிலும் நடந்த JVP கிளர்ச்சிகள்
- தமிழ் கிராமப்புற படித்த இளைஞர்களை அடிப்படையாகக் கொண்டு 1980களில் நடைபெற்ற தமிழ்ப் போராளிக் குழுக்களின் முற்போக்கு ஜனநாயக எழுச்சிகள்

ஆகிய இவற்றையெல்லாம் தற்போது மீண்டும் நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது. நல்ல தளபதியின்மையால் இக்களங்கள் அனைத்தும் முழுமையான பலனைத் தரவில்லை. சில களங்கள் அதிக இழப்பையே தந்துள்ளன. இருந்தும் இலங்கை மக்கள் போர்க்குணமுள்ளவர்கள் என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

மீண்டுமோர் களம் உருவாகியுள்ளது. இது முன்னெப்போதும் இல்லாதளவிற்கு பரந்தும் விரிந்தும் பன்முகத்தன்மை பெற்றும் உள்ளதோர் களமாகும்.. இக்களத்தில் சமர் புரிய முன்சொன்னவர்கள் அனைவரும் முன்வருவர். அதில் சந்தேகமில்லை. நான்கு பேருமே, சிற்சிறு கால இடைவெளியில், ஒன்றன்பின் ஒன்றாக களம் இறங்குவார்களா? இவ்விதம் களம் இறங்குபவர்கள் தமக்கிடையே ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்வார்களா? ஆம், அவை சாத்தியமற்றவையென்று கூறுவதற்கில்லை. ஆனால் களம் இறங்கவுள்ள இப் போரணிகளினது தலைமையெது? என்பது மக்கள் ஜனநாயகவாதிகளின் இதயத் துடிப்பாகவுள்ளது. அதே நேரம் இப்போரணிகளை முளையிலேயே கிள்ளியெறிவது எவ்விதம் என்பதுவே MR இன் இதயத்துடிப்பாக உள்ளது. தன்னால் அது முடியாது போகுமானால் என்ன செய்வதென அவர் அஞ்சுவது இயல்பானதே.

அரசியல் துறையிலும், அரசகட்டுமானத் துறையிலும், பொருளாதாரத்

துறையிலும், இனங்களுக்கிடையேயான நல்லுறவுத்துறையிலும், மதநிறுவனங்களின் அரசியல் உரிமைத்துறையிலும் மிக உயர்ந்த கட்ட எதிர்ப்புரட்சியொன்றை நடத்தி முடிப்பதில் மஹிந்த சிந்தனை எவ்விதம் வெற்றிபெற்றுள்ளது என்பதைப் புரிந்து கொண்டால்தான் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியொன்றின் அவசியத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

### .3.2.9) **இலங்கைத் தொழிலாள வர்க்கப் புரட்சியாளர்களுக்கா?**

ஒரு ஆயுத அடக்குமுறையால் எதிர்கொள்ளக் கூடியளவிற்கு இலங்கைத் தொழிலாள வர்க்கப் புரட்சியாளர்கள் இப்போது பலமிக்கவர்களாக இல்லை. ஆகவே ஸ்ரீலங்கா அரசின் அவசர அவசரமான இராணுவமயமாக்கல் இவ்வித அமைப்புகளை நோக்கியதாக இல்லையென அனுமானிக்கலாம்.

#### 3.2.9.1) **தன்னெழுச்சிப் போராட்டங்கள்**

தொழிலாள வர்க்கப் புரட்சியாளர்கள் MR ஐ அச்சுறுத்தக் கூடியளவிற்கு தற்போது காணப்படாவிடினும், தொழிலாளர்களினதும் பிற உழைக்கும் மக்களினதும் தன்னெழுச்சிப் போராட்டங்கள் சாத்தியமானவையாகவே உள்ளன.

பற்பல தொழிற்துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் கூட்டாகவோ தனித்தனிப் பிரிவுகளாகவோ சம்பள உயர்வு கோரி இவ்வித போராட்டங்களில் குதிக்கக்கூடும். தற்போதைய தொழிற்சங்கங்கள் இவ்வித போராட்டங்களுக்குத் தயாரில்லாத நிலையிலிருந்தாலும், போர்க்குணமிக்க தொழிற்சங்க அமைப்புகள் இன்னமும் உருவாகாத நிலையிருந்தாலும், தொழிலாளர்களின் தன்னெழுச்சிப் போராட்டங்கள் இத் தலைவர்களையும் மீறி, அல்லது அவர்களையும் தம்முடன் இழுத்தபடி நடைபெறுவதற்கான சாத்தியப்பாடுகளை மறுப்பதற்கில்லை.

இதற்கு உதாரணமாக, 2006-ம் ஆண்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களால் நடத்தப்பட்ட வேலைநிறுத்தத்தை எடுத்துக் கொள்ளலாம். இது தன்னெழுச்சிப் போராட்டத்துக்குரிய சரியான எடுத்துக்காட்டில்லை. ஆனாலும் அதன் கூறுகள் அதில் உள்ளன.

#### 3.2.9.1.அ) **மலையகத் தொழிலாளர்களின் வீரமிகு போராட்டம்**

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் ஐந்து இலட்சம் பேர். 2006 ஆண்டு டிசம்பர் 5-ம் திகதி தமது நாளாந்தக் கூலியை ரூபாய் முந்நூறாக ($3 டாலர்களுக்கும் குறைவானதாகும்) உயர்த்தவேண்டுமென்ற

கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் இறங்கினர். இன்றுடன் 10 நாட்கள் (14/12/2006) ஆகின்றன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (CWC), லங்கா ஜாதிக தோட்டத் தொழிலாளர் யூனியன் (LJPWU) ஆகிய இரு பெரும் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பையும் மீறி மத்திய மலைப்பகுதியிலும், தென் மாவட்டங்களிலும் உள்ள கிட்டத்தட்ட அனைத்து தோட்டங்களும் மூடப்பட்டன.

......1998 இற்கு பின்பு சம்பள உயர்வு கோரி தோட்டத் தொழிலாளர்களால் நடத்தப்பட்ட முதலாவது மக்கள் போராட்டம் இதுவேயாகும். ....மலையக மக்கள் முன்னணியும் வேறும் பல சிறு தொழிற்சங்கங்களும் இணைந்தே இவ் வேலைநிறுத்தத்தைத் தொடக்கி வைத்தார்கள். இவ் வேலைநிறுத்தத்தின் முன்னால் இவர்கள் அடையாள அறிவிப்பாக மூன்று வார மெதுவாக வேலை செய்யும் இயக்கம் நடத்தினார்கள்..... "ரூபாய் முந்நூறு சம்பள உயர்வு கிடைக்கும்வரை தொடர்ந்து போராடுவோம்." "தொழிற்சங்கங்களுக்கான சந்தா செலுத்தமாட்டோம்" போன்றவை அவர்களால் முன்வைக்கப்பட்ட முழக்கங்களில் சிலவாகும். இவை தொழிற்சங்கத் தலைவர்கள் மீது தொழிலாளர்களுக்கிருந்த அவநம்பிக்கையை வெளிப்படுத்துபவையாகவே இருந்தன.......

டிசம்பர் 6-ம் திகதி, டிக்கோயா, டறவல, டன்பார், ஹட்டன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆண், பெண் தொழிலாளர்களில் சுமார் ஆயிரம் பேர் டிக்கோயா நகரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். வட்டவள தோட்டச் செயலகத்திற்கு அணிவகுத்துச் செல்ல முற்பட்ட அவர்களை ஆயுதந்தாங்கிய காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். அவர்களின் பதாகைகளும் கிழித்து எறியப்பட்டன. ஆனாலும் ஊர்வலத்தினர் செயலக வளாகத்தை அடைவதில் வெற்றி கண்டனர். அங்கு அவர்கள் இ.தொ.கா (CWC) தலைவர் தொண்டமானின் உருவப் பொம்மையை எரித்தனர்........

அடுத்த நாள் 600க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஹட்டனில் அணிதிரண்டார்கள். தொழிலாளர்களின் கோரிக்கைக்கும் ஊர்வலத்துக்கும் தமது ஆதரவைக் காட்டுவதற்காக நகரத்தின் வர்த்தக நடவடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட்டன. ஞாயிற்றுக் கிழமை. நுவரெலியா நகரத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதே நாளில் மத்திய மலையக நகரங்கள் பலவற்றிலும் ஊர்வலங்கள் நடைபெற்றன.......... ....பிரபல்யம் மிக்க தொழிற்சங்கத் தலைவர்களெவரும் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் பங்குபற்றவில்லை என்பது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல. அதற்குப் பதிலாக, அவர்கள் பதற்றமடைந்தார்கள், வேலை நிறுத்தத்தை எவ்விதமும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.....

டிசம்பர் 7ம்-8ம் தேதிகளில் தொழில் அமைச்சர் அத்தாவுட செனிவறட்னவின் மத்தியத்துவத்தில் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் எந்த முடிவுக்கும் வராமல் தோல்வியில் முடிவடைந்தன......

...டிசம்பர் 9-ல் மலையக மக்கள் முன்னணித் தலைவர் P. சந்திரசேகரம் MR ஐச் சந்தித்தார். ஆனால், அவரிடமிருந்து எந்த ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை. திங்கட்கிழமை நடந்த அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையும் (முதலாளிகளுக்கும்-சங்கத்திற்கும் இடையிலான) தோல்வி கண்டது................. "கடந்த திங்கட்கிழமை, இரத்தினபுரியில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய தொழில் அமைச்சர் செனிவறட்ன அரசாங்கமும் கொம்பனிகளும் அதிக இழப்புகளைச் சந்தித்து வருவதாகக் கூறி அரசாங்கம் இவ் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் திடமாக உள்ளதென எச்சரித்தார்.........

போராட்டம் மேலும் தொடருமானால் அடக்குமுறைத்தன்மை கொண்ட அத்தியாவசிய சேவைச் சட்டத்தை தொழிலாளர்களுக்கெதிராக பிரயோகிப்பதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் தயாராகவேயுள்ளது என்பதைக் கூறுவதே இவ் எச்சரிக்கையின் நோக்கமாக இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை அரசாங்கம் முடுக்கி விட்டுள்ளதன் காரணத்தால் பயங்கரவாத தடுப்புச் சட்டம் (PTA) மீளவும் அமுலுக்கு வந்தது. இது தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆரம்பித்த அடுத்த நாளாகும். இந்தக் காலப்பொருத்தம் ஒன்றும் தற்செயலானதல்ல. PTAயில் 'பயங்கரவாதத்திற்கு' கொடுக்கப்படிருக்கும் வியாக்கியானம் மிகவும் விரிந்து பரந்தது. எந்த விதமான அரசியல் எதிர்ப்புக்கும் அல்லது கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் இச் சட்டத்தை மிகச் சிரமமின்றிப் பிரயோகிக்கலாம். (Half a million Sri Lankan plantation workers continue strike for higher pay, M.Vasanthan and S.Jayanth)

தொழிலாளர்கள் மரபுவழித் தொழில் சங்கத் தலைமைகளைக் கணக்கில் கொள்ளாமல் அல்லது அவர்களை எதிர்த்து அல்லது அவர்களையும் வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டு தமது பொருளாதார நலன்களுக்காக போராட முன்வருகிறார்கள் என்பதற்கு இப் போராட்டம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். பெருந்தோட்டத் தொழிலாளர்கள், நீண்டகால போராட்ட வரலாறு உள்ளவர்களாகும். இலங்கையில் அதிகம் ஒடுக்கப்பட்ட, இன்றும் ஒடுக்கப்பட்டு வருகின்ற தொழிலாளர் அணியும் இதுதான். இலங்கையின் சராசரி வறுமைக்குக் கீழாகவே இவர்களின் வறுமைநிலையுள்ளது. ஆரம்பத்தில் இவ்வணி தமிழ்த் தொழிலாளர்களை மட்டும் உள்ளடக்கியதாகவே இருந்தது. ஆனால் இன்று சிங்களத் தொழிலாளர்களும் சிறு அளவில் உள்ளனர்.

இருந்தும் தமிழ்த் தொழிலாளர்கள் வர்க்க ஒடுக்குமுறைக்கு மேலதிகமாக இன ஒடுக்குமுறைக்கும் உள்ளாகி வருகிறார்கள். இதனால், இவர்கள் வர்க்க ஒடுக்கு முறைக்கு எதிராக மாத்திரமல்ல சிங்கள-பௌத்த மாறாமரபியல்வாதிகளின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் போராடவேண்டியுள்ளது. வேறு யாருக்காகவுமல்ல, தமது வர்க்கவிடுதலைக்காக இது அவசியப்படுகிறது. இதனால் அரசியல் ரீதியில் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தினது முன்னணிப் படையணியாக வரக்கூடிய வாய்ப்புகள் இவ்வணிக்கு உண்டு. என்று இது சாத்தியப்படுகிறதோ அன்றுதான் சிங்களத் தொழிலாளிகள் சிங்களப் பேரகங்காரவாத சிந்தனைகளில் இருந்து மீண்டு வருவதுவும் சாத்தியப்படும். அன்றுதான் தமிழ்த்தேசியம் முற்போக்குத்தன்மைபெறும். அன்றுதான் தொழிலாள வர்க்கத் தலைமையில் முழு இலங்கை தழுவிய ஜனநாயகத்துக்கான இயக்கம் ஒன்று சாத்தியமாகும். இந்நிலையில் இருந்து பார்க்கும் போது முன் கூறிய போராட்டம் முக்கியத்துவம் மிக்கதோர் எடுத்துக் காட்டாக அமைகிறது.

### 3.2.9.1.அ..1) **ஜனநாயகத் தேசியத்துக்கோர் எடுத்துக்காட்டு**

இப் போராட்டத்தை எடுத்துக்காட்டாகக் கொள்வதற்கு மற்றோர் காரணமும் உண்டு. வட-கீழ் மாகாண வம்சாவழித் தமிழர்களிடையே முற்போக்கு தமிழ்த் தேசிய இயக்கங்கள் வளரத் தொடங்கிய 70-ம் ஆண்டுகளில் மலையக வம்சாவழித் தமிழர்களின் தேசிய உணர்வுகளைப் புரிந்து கொண்ட இயக்கங்கள் எதுவும் மலையகத்தில் இருக்கவில்லை. ஏகாதிபத்திய சார்பு வம்சாவழித் தொண்டமான், UNP யுடனேயே தன்னை இனங்காட்டி இருந்தார். பெரும் செல்வாக்குடன் கொடிகட்டிப் பறந்த செங்கொடிச் சங்கமோ (நா. சண்முகதாசனின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந்தோட்டத் தொழிலாளர் சங்கம்) செயல்பாடிழந்து மெல்லச் செத்துக் கொண்டிருந்தது.

வடமாகாணத்தை, குறிப்பாக யாழ்ப்பாணத்தைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட தமிழ்த் தேசிய அமைப்புகளில் EPRLF, EROS ஆகிய இரு ஜனநாயகத் தேசிய இயக்கங்களும் மலைநாட்டின் ஊவா மாகாணத்தை தமிழீழத்துடன் இணைக்கும் கொள்கையை வகுக்கத் தயாராய் இருந்தன. அதற்கான பரப்புரைகளிலும் ஈடுபட்டு வந்தன. ஊவா மாகணத்தில் மலையகத் தமிழரையும், முஸ்லீம் தமிழரையும் இணைத்து தமிழ்பேசும் மக்களின் விழுக்காடு அதிகமானதாகவே இருந்தது. வேறு சில அமைப்புகள் “வாருங்கள் வட-கிழக்கிற்கு!” என மலையக மக்களுக்கு அறைகூவல் விடுத்தன. இந்த சூழலில்தான் மலையக மக்கள் இயக்கம் மலையகத்தில் உதயமானது. ‘மலையகத் தமிழ்த் தேசியம்’ என்ற கருத்துரு முன்வைக்கப்பட்டு அது பற்றிய ஒரு சொல்லாடலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச்சொல்லாடல் அனைத்து ஜனநாயகத் தேசிய இயக்கங்களுள்ளும் நடைபெற்றன. அதே நேரத்தில்

தமிழீழத் தேசியமும், மலையகத் தேசியமும் நண்பர்களாக வாழவும், மலையக மக்கள் இயக்கம் வழிகாட்டியது. இது நடந்தில்லையானால் இன்று மலையகமும் தமிழீழத் தீவிரவாதக் கருத்து வசப்பட்டு பேரழிவுக்கு முகங்கொடுத்திருக்கக் கூடும்.

இது ஒரு தொழிற்சங்கமல்ல. ஆனாலும் இதன் தலைமையிலான தொழிற்சங்கந்தான் இவ் வேலைநிறுத்தத்திற்கான முன்னோடியாக செயல்பட்டுள்ளபடியால், இப் போராட்டம் ஒரு முக்கியத்துவம் மிக்க எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய இயக்கம் அதே மக்களின் தொழிலாளர் போராட்டத்துக்கு முன்னோடியாக அமைந்தது இலங்கை வரலாற்றில் இதுதான் முதல் தடவையாக இருக்கலாம்.

இதுபோன்ற வேறும் பல போராட்டங்கள் யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் நடந்துள்ளன. நடப்பதற்கான சாத்தியங்களும் உள்ளன.

### 3.2.9.1.ஆ) **கொழும்பு நகர்ப்புறச் சேரிமக்களின் போராட்டம்**

SEP கொழும்பு நகர்ப்புறச் சேரிக் குடியிருப்புகள் தொடர்பாகத் தரும் மற்றோர் தகவலும் வாசகர்களின் கவனத்துக்கு முன்வைக்கப்படுகின்றது.

....... "கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம்- The City of Colombo Development Plan- 1999 அரச வர்த்தமானியில் வெளியாகி இருந்தது. ஆனால் பொதுமக்கள் மத்தியில் இருந்து எதிர்ப்பு வரக்கூடுமென்ற அச்சத்தில் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது."....... "கடந்த வருடம் மே மாதம் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், MR தேச அபிவிருத்தியின் பேரால் 'பொருளாதார யுத்தம்' ஒன்றை பிரகடனப்படுத்தினார். இப் பிரகடனம், உள்ளூர் மற்றும் அனைத்துலகப் பெரும் முதலாளிகளின் நலனுக்காக, தொழிலாளர்களுக்கும் பிற ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் எதிரான பொருளாதாரக் கொள்கையேயாகும். சேரி மக்களை வெளியேற்றுவது இவ்யுத்தத்தின் ஒரு பகுதித் திட்டமாகும்..........." "......கொழும்பு நகரத்தை தெற்காசியப் பிராந்தியத்தின் வர்த்தக நடுவமாக மாற்றி அமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, 66,000 ஏழைக் குடும்பங்களை அல்லது கொழும்பு மத்திய பகுதியின் 50%-ற்கும் அதிகமான குடிமக்களை அவர்களின் தற்போதைய இருப்பிடத்தை விட்டு எழுப்பவேண்டி வரும் என, அரசாங்கம் 2010-ம் ஆண்டு மே மாதம் அறிவித்தது. இதன் மூலம் சுமார் 390 கெக்டர் நிலத்தில் அமைந்துள்ள சேரிகள் அப்புறப்படுத்தப்பட்டு அந்நிலங்கள் சொத்து அபிவிருத்திக்காக உள்ளூர் மற்றும் அந்நிய முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும்." இந் நடவடிக்கைக்கு எதிராக சேரி மக்களை அணிதிரட்டிக் கொண்டிருந்த SEP கட்சியின் பிரதிநிதி பீரிஸ் மேலும் கூறியதாவது. "யாருமே எதிர்பார்த்திராத ஒரு நிகழ்வாக,

MR, நகர அபிவிருத்தி அதிகாரசபையையும், நில புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி சபையையும், - இவை இரண்டும் குடியியல் அமைப்புகள்- பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளார். இவ் அமைச்சு இவரின் தம்பியும், பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் உள்ளதை யாவரும் அறிவர். 2010 ஆகஸ்ட் மாதம் 12ம் திகதிய மந்திரிசபை, இம் மக்களைப் பெருமளவில் குடி அகற்றுவதற்கான, அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கியது.. .............'' அவர் மேலும் கூறியதாவது "உள்நாட்டு யுத்தத்தின் போது பயன்படுத்திய இராணுவ வழிமுறைகளையே பாதுகாப்பு அமைச்சு, இந் நகர்ப்புற ஏழைகளுக்கெதிராகவும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. மே மாதம், மத்திய மாகாணத்தின் கறுவாக்காட்டிலுள்ள (Slave Island) 45 குடும்பங்களின் வீடுகளை அழிப்பதற்கெதிராக எழுந்த எதிர்ப்பை அடக்குவதற்காக மே மாதம் முற்பகுதியில் பாதுகாப்பு அமைச்சு நூற்றுக்கணக்கான பொலிஸாரையும் இராணுவத்தினரையும் களம் இறக்கியிருந்தது''.

மட்டக்குளிய எனும் கொழும்பு புறநகர் பகுதியில் உள்ள ஒரு சேரியின் உள்ளூர் இளைஞரை அடித்து உதைத்துக் கைது செய்ததைக் கண்டித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக, ஜுலை மாதம் 8,000 சேரி மக்களை நூற்றுக்கணக்கான காவல்துறையினரும் இராணுவத்தினரும் சுற்றி வளைத்தனர் வெளியேற்றப்படவுள்ள அனைவரையும் மறுகுடியேற்ற வேண்டுமானால், அரசாங்கத்தால் 66,000வீடுகள் நிர்மாணிக்கப்படவேண்டும். ஆனால் அதற்கான எந்த ஒழுங்கும் திட்ட அளவில்கூட அரசாங்கத்திடமில்லை. இந்நிலையில் வெளியேறுவதற்கான உத்தரவு ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகரசபையைக் கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்படும், மக்களால் தேர்வு செய்யப்படாத ஒரு அதிகாரசபை அமைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (Sri Lankan shanty dwellers form committee to fight evictions, Vilani Peiris)

### 3.2.9.2) '**பொருளாதார யுத்தம்**' **யாருக்கு எதிராக?**

யுத்தம் நடந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் யுத்தத்தைக் காரணங்காட்டி மக்கள்மீது ஏற்றப்பட்ட பொருளாதார சுமைகள் இன்னமும் இறக்கப்படவில்லை, மாறாக அவை அதிகரித்தே வருகின்றன. அதன் இரணைப்பிறப்பான அடக்குமுறையும் அதிகரித்தே வருகின்றது. முன்னர் இந்த அடக்குமுறைக்கு யுத்தம் என்றோர் நியாயம் கற்பிக்கப்பட்டது.

இப்போதோ கற்பிக்கப்பட நியாயங்களின்றி கோரமுகங்காட்டி நிற்கின்றது. MR ன் இராணுவ அதிகரிப்புக்கான காரணம் இதுதானென வலியுறுத்துகிறது SEP.

“எதிர்காலத்தில் தமது ஆட்சிக்கெதிராக அனைத்து இனக்குழுக்களிலுமிருந்து திரண்டெழுந்து முன்வந்து சவால் விடப்போகிற, தமது நிரந்தர, இயல்பான மற்றும் உண்மையான எதிரியாகிய தொழிலாளி வர்க்கத்தின் சவாலை எதிர்கொள்வதற்காகவே கொழும்பு ஆட்சியாளர்கள் இவ்வளவு பிரமாண்டமான இராணுவத்தை துரிதமாகக் கட்டி வளர்த்துத் தம்மைத் தயார்படுத்திக் கொள்கிறார்கள் என்பது புரிகிறது. நடந்து முடிந்த யுத்தத்தின் சுமைகளைச் சுமந்து அதன் பொருளாதார இழப்புகளை ஈடுசெய்ய தொழிலாளி வர்க்கம் நிர்ப்பந்திக்கப்படவுள்ளது மட்டுமல்ல, பூர்ஷ்வா ஆட்சியாளர்கள் தமது கைப்பாவைகளாகச் செயற்படும் இப்பிரமாண்ட இராணுவத்தின் துணையுடன் திணிக்கத் திட்டமிட்டுள்ள தமது எதிர்கால வேலைத்திட்டங்களின் சுமைகளையும் சுமக்கக் கட்டாயப்படுத்தப்படுவார்கள்.” (The collapse of the ethno-nationalist project of the LTTE and the Tamil Question in Sri Lanka, Rajesh Tyagi)

SEP யின் கருத்துக்கள் ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டியன. இனி நடக்கவிருப்பது பொருளாதார யுத்தம் என மகிந்த சிந்தனை வீர முழக்கம் செய்திருப்பதுவும், SEP இன் இக்கூற்றும் ஒன்றுடன் ஒன்று பொருந்தி வருகின்றன.

ஆயுத யுத்தத்திற்கேற்ற முறையில் பாதுகாப்புப் பிரிவைக் கட்டி எழுப்பியது போல், தற்போது பொருளாதார யுத்தத்திற்கு ஏற்றமுறையில் அவசியமான குடியியல் நிறுவனக் கட்டமைப்புகளைக் கட்டிவருகிறார். சிவில் நிறுவனங்கள் இராணுவமயமாகி வருகின்றன. மஹிந்த மயமாகிவிட்ட இராணுவத்தை அடிப்படையாகக் கொண்டே சிவில் நிர்வாகம் இராணுவமயமாகி வருகின்றது. இன்னும் வெளிவெளியாகச் சொல்வதானால் சிவில் நிர்வாகக் கட்டமைப்பு இராணுவக் கட்டமைப்பின் ஒரு துணை அங்கமாகி வருகின்றது. இது இராணுவ வளர்ச்சியின் மற்றோர் வளர்ச்சிப்படியாகும். அளவியல் வளர்ச்சி மட்டுமல்ல, குணவியல் வளர்ச்சியும் அடைந்து வருகின்றது. SEP யின் இக்கணிப்பீடு சரியானதுதான், ஆனால் நமக்கு இங்கொரு சிறு மனத்தாங்கலுண்டு.

MRஆல் வளர்க்கப்பட்டுவரும் இப் பிரமாண்ட இராணுவக் கட்டமைப்பு என்ற மூர்க்க குணம் கொண்ட இக் காட்டுயானையின் ஒட்டுமொத்தக் குணாம்சம் பற்றி இன்னமும் இவர்கள் முழுமையாகப் பார்க்கவில்லையே என்பதுதான் அது. அரசின் இனக்குழும, சாதிய, மத-மாறாமரபியல்வாதக் குணாம்சங்களை அடிக்கடி மறந்துவிடுவது ஏனெனப் புரியவில்லை.

### 3.2.9.2.1) **நேரடியற்ற யுத்தச் சுமைகள்**

யுத்தத்தின் சுமைகள் உழைக்கும் மக்கள்மீது குறிப்பாக தொழிலாளர்மீது நேரடியாக மாத்திரமல்ல, நேரடியற்றும் (Indirectly) சுமத்தப்படுகின்றன.

அ), உள்நாட்டு யுத்தத்தின்போது ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டன என்றும், தேசிய இனங்களுக்கிடையே அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்த இன்னமும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையெனக் கூறி மேற்குலகு அப்பப்போ மிரட்டிவருகின்றது. MR ஐத் தமது அரசியல் வட்டத்துள் கொணர்வதே அவர்களின் நோக்கமாகும். இவ்வித பொருளாதாரத் தடைகளின் காரணத்தால் ஏற்படும் பொருளாதாரச் சுமைகளும் உழைக்கும் மக்கள்மீதுதான் ஏற்றப்பட்டுள்ளது, இனியும் ஏற்றப்படவுள்ளது. இதையே சுற்றி வளைத்த சுமைகள் என்கிறோம்.

ஆ) மேற்குலகில் வாழும் 'புலம்பெயர்ந்த தமிழர்கள்' ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக தொடுத்துள்ள பொருளாதார முற்றுகைப்போர் மற்றோர் சுற்றி வளைத்த சுமையாகும். ஐரோப்பிய நாடுகளில், ஸ்ரீலங்கா உற்பத்திப் பொருட்களின் விற்பனைவைக் குறைப்பதுவும், சுற்றுலாத்துறையினரின் வரவைக் குறைப்பதுவுமே இப் பொருளாதார முற்றுகைப் போரின் குறிக்கோள்களாகும்.

ஆனால், இன்றைய புதிய உலக ஒழுங்கில் பொருளாதாரத் தடைகளைக் கொண்டு ஒரு அரசை பொருளாதாரரீதியிலும் இராணுவரீதியிலும் தனிமைப்படுத்தவோ, பலவீனப்படுத்தவோ முடியாது. சில வேளைகளில் அரசியல்ரீதியில் சில வட்டாரங்களுக்குள் தனிமைப்படுத்த உதவலாம், ஆனால் பலவீனப்படுத்த முடியாது. இது காலங்கடந்ததொரு யுத்த தந்திரோபாயமாகிவிட்டது. ஏகாதிபத்தியக் கட்டுமானம் ஒட்டுமொத்தமாக பொருளாதாரத் தடையை விதிக்குமானால் அது வெற்றிபெறலாம். ஆனால் ஏகாதிபத்தியக் கட்டுமானம் ஒரே குரலில் ஒத்த முடிவுக்கு வருவதென்பது மிகமிகச் சிரமமானது. இதனால் இன்றைய சூழலில் விதிக்கப்படும் பொருளாதாரத் தடைகள், தடைகளுக்குள்ளான அரசை மேலும் மேலும் இராணுவமயப்படுத்த உதவுமே தவிர அதைப் பலவீனப்படுத்தமாட்டாது. எமது பிராந்தியத்தில் பர்மா இதற்கொரு சிறந்த உதாரணமாகும். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பர்மிய இராணுவ அரசை யாராலும் எதுவுமே பண்ண முடியவில்லை. இன்று இந்தியா தனது தோல்வியை ஒப்புக் கொண்டு தானே வலியச் சென்று பர்மிய இராணுவ அரசைத் தனது நண்பனாக்கிக் கொண்டுள்ளது.

தூரம் போவானேன், 'தமிழீழமே' இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு. ஸ்ரீலங்கா அரசால் பிரயோகிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் 'தமிழீழ' மக்களை மிகவும் பாதித்தது. ஆனால் புலிகளுக்கோ அது தாம் செழித்து வருவதற்கான விளைநிலமாக இருந்தது. எப்படியோ தன்மீது விதிக்கப்பட்ட பொருளாதரத் தடைகளை எதிர்கொள்ள அரசுகள் ஒரு பக்கம் மக்கள்மீது சுமைகளை ஏற்றும், இதற்காக தன்னை மேலும் இராணுவமயப்படுத்திக்

கொள்ளும். மறுபக்கம், பொருளாதாரத் தடையை விதித்த வல்லரசுகளுடன் முரண்பாடுகளுடைய பிற வல்லரசுகளுடன் தம்மை நெருக்கமாகப் பிணைத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடும். இது அந்நாட்டின் பொருளாதாரத்தை புதிய திசைகளில் வளர்த்துக் கொள்வதில் முடிவடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இலங்கையில் நடக்கப்போவதுவும் இதுதான். அம்மாற்றம் ஆரம்பமாகியும் விட்டது. ஸ்ரீலங்கா மீதான தடையால் தனக்கு ஏற்படும் நேரடிச் சுமைகளை தொழிலாளர்கள்மீது மறைமுகச் சுமைகளாக ஏற்றும் நடவடிக்கைகளில் MR தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

### 3.2.9.2.2). **தொழிற்சங்க ஜனநாயகமும் மேற்கின் கரிசனமும்**

The American Federation of Labour and Congress of Industrial Organisations (AFL-CIO) எனும் பெயர் கொண்ட, வலு மிகு அமெரிக்கத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் ஒன்று 2008-ம் ஆண்டு ஸ்ரீலங்காவின் தொழில் நடவடிக்கைகளின் தவறுகளைப் பற்றிய கண்டனங்களுடன் கூடிய ஒரு மனுவை அமெரிக்க அரசின் (United States Trade Representative-USTR)கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளது. சமீப வருடங்களாக நாட்டின் தொழிலாளர் உரிமைகள் மிக மோசமாக நலிவடைந்துள்ளதெனக் குற்றஞ்சாட்டும் இம்மனு, இக் காரணங்களால் America's General System of Preferances AGSP–க்கு உரிய நாடுகளின் பட்டியலில் இருந்து ஸ்ரீலங்காவை விலக்கி வைக்கும்படி அமெரிக்க அரசைக் கோரியிருந்தது. ஐரோப்பிய ஒன்றிய GSP கூடுதல் சலுகைகளை இழந்திருந்த ஸ்ரீலங்கா அரசு படபடப்புடன் முதலீடுகளுக்காக அனைத்துலக சமூகத்தை வருந்தி அழைத்துக் கொண்டிருந்த வேளையில்தான் இம்மனு அனுப்பப்பட்டுள்ளது. இதுவொன்றும் தற்செயலானதல்ல.

முற்பது பக்கங்களைக் கொண்ட இம்மனுவின் சாராம்சம், அனைத்துலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் உரிமைகளை ஸ்ரீலங்கா அரசு மதிக்கவில்லை அல்லது கடைப்பிடிக்கவில்லை என்பதேயாகும். இம்மனுவில் உள்ள பிரதான குற்றச்சாட்டுகளில் சில:

1- ஸ்ரீலங்கா தொழிற்சங்கச் சட்டதிட்டத்தின் 15வது விதியின்படி, தொழிற்சங்கப் பதிவாளரானவர் ஒரு தொழிற்சங்கத்தின் பதிவை ரத்துச்செய்யும் நடவடிக்கையை அல்லது பதிவை மீளப்பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை மேற்கொள்வாரானால், உடனடியாகவே அத்தொழிற்சங்கம் சட்டவிரோதமானதொரு ஒன்றுகூடலென்ற பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுவிடும். அச்சங்கம் இதை எதிர்த்து நீதிமன்றம் செல்லலாம். ஆனால் அது, தனது சட்டரீதியான அங்கீகாரத்தைப் மீண்டும் பெறுவதற்கு பல மாதங்களோ அல்லது சில வருடங்களோ ஆகலாம்.

2- ஸ்ரீலங்கா தொழிற்சங்க சட்டதிட்டத்தின் 20வது விதியின்படி, சுதந்திரமாக ஒன்றுகூடும் உரிமை பொதுத்துறை ஊழியர்களில் மிகவிரிவான 5 துறையினருக்கு முற்றாகவே மறுக்கப்படுகிறது. நீதித்துறை அலுவலர்கள், இராணுவ அமைப்பின் உறுப்பினர்கள், காவல்துறையினர், சிறைக்காவலர்கள், விவசாயக் கூட்டமைப்பு சட்டவிதிகளின் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோரே அவர்களாகும்.

3- ஸ்ரீலங்கா தொழிற்சங்க சட்டதிட்டத்தின் 21வது விதியின்படி, ஒரு பொதுத்துறை ஊழியர் சங்கமானது ஒன்றுக்கு மேற்பட்ட அரச திணைக்களங்களையோ அல்லது அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட சேவைப் பிரிவினரையோ பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. இதனால் பொதுத்துறை ஊழியர்கள் தமக்கென்றொரு சம்மேளனத்தையோ அல்லது தொழிற்சங்க கூட்டமைப்பையோ அமைக்க முடியாது. அதேபோல பொதுத்துறைத் தொழிலாளர்களையும் தனியார் துறைத் தொழிலாளர்களையும் உள்ளூர் மட்டத்திலேயோ அல்லது பரந்தளவிலேயோ ஒன்றிணைக்கக்கூடியதான சம்மேளனங்களையோ அல்லது கூட்டமைப்புகளையோ உருவாக்க முடியாது.

4- தொழில் பிணக்குகள் சட்டத்தின் (Indusrial Disputes Act) 4வது சரத்தின்படி, சம்பந்தப்பட்ட இரு பகுதியினரின் சம்மதமின்றி, ‘சிறு’ பிணக்குகளுக்கான தீர்ப்பை, தன்னிச்சையாக முன்வைக்கும் உரிமை தொழில் அமைச்சருக்கு உண்டு. இந்த ‘சிறு’ என்பது எது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை முழுமையாகவே அமைச்சருக்குரியதாகும்.

5- தொழில் பிணக்குகள் சட்டத்தின் 32-வது சரத்தின்படி, ஒரு தொழிற்சங்கம் எந்தத் தொழிலாளர்களுக்காக பேரம் பேச முன்வருகின்றதோ அந்தச் சங்கம் அந்த தொழிலாளர்களில் 40% ற்கு குறைவானவர்களை தனது உறுப்பினர்களாகக் கொண்டிருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதையே இன்னோர் வார்த்தையில் சொல்லப் போனால், 40%-ற்கு குறைவான தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள தொழிற்சங்கங்கள் பேரம்பேசலில் இருந்து முற்றாகவே ஒதுக்கி வைக்கப்படுகின்றன.

6 - வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமை, தொழில் பிணக்குகள், சட்டத்தில் காணப்படும் ஒரு வாக்கியத்தால் இல்லாமல் செய்யப்படுகிறது. யுத்தகாலத்தின்போது அவசியமான சில விதிகள் அத்தியாவசியமான சேவைகளில் வேலைநிறுத்தத்தை தடைசெய்கிறது. எது எது அத்தியாவசிய சேவைகள் என்பதைத் தீர்மானிப்பதற்கு எந்த வரைமுறைகளுமில்லை, அது அரசாங்கத்தின் முடிவைப் பொறுத்தது.

7 - வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமை தொடர்பான அனைத்துலக தொழில் நிறுவனத்தின் (Inetrnational Labour Organisation - ILO -) இரு உடன்படிக்கைகள் இலங்கைக்குச் செல்லுபடியாகாதென ஸ்ரீலங்காவின் மேல் (Supreme) நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இவ்விரு உடன்படிக்கைகளினதும் கோட்பாடுகள் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான உத்தரவாதத்தை தரக்கூடியதான சட்டவிதிகளெதுவும் ஸ்ரீலங்காவில் இல்லையெனவும் கூறியது. (US Government Pertioned about deteriorating Workers Rights in Sri lanka, Namni Vijayadasa)

The American Fedaration of Labour and Congress of Industrial Organisations (AFL-CIO) எனும் பெயர் கொண்ட இவ் அமைப்பு இத்துடன் நின்று விடவில்லை. “The Struggle for Worker Rights” Justice for All in SRI LANKA என்ற தலைப்பில் ஒரு ஆய்வறிக்கையும் வெளியிட்டுள்ளது. இது தாமாக நேரடியாக வெளியிட்டதல்ல. இவர்களின் துணை அமைப்பான, The American Center for International Labor Solidarity (Solidarity Center) என்ற நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டதாகும். இவ் ஆய்வறிக்கை இலங்கையின் தொழிற்சங்க இயக்கத்தின் வரலாறு பற்றிய ஒரு ஆய்வைச் செய்துள்ளதுடன், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் இன்றைய நிலை பற்றியதொரு விரிவான களஆய்வையும் செய்துள்ளது. இலங்கையில் சிறுவர் உழைப்புச் சுரண்டல் பற்றியும் ஒரு விரிவான விளக்கத்தை ஆதாரங்களுடன் தந்துள்ளது. ஆர்வம் உள்ளவர்கள் இவ் ஆய்வறிக்கையைப் படிக்கவும்.

### 3.2.9.2.3) **வர்க்க வெற்றி சாத்தியமா?**

நடந்து முடிந்த யுத்தத்தினது மாத்திரமல்ல, மறு காலனியலாக்கத்தின் சுமைகளையும், மறைமுகச் சுமைகளையும் சுமக்க கட்டாயப்படுத்தப்படுவதுதான் தொழிலாளர்களினதும் பிற உழைக்கும் மக்களினதும் இன்றைய வாழ்நிலையாகும். இக் கட்டாயப்படுத்தலுக்கு வளைந்து கொடுத்து வாழ்வதா அல்லது துணிவுடன் எதிர்த்து நிற்பதா என்பதே இன்று அவர்கள் முன்னால் உள்ள கேள்வியாகும். தனிநபர் இராணுவ எதேச்சதிகாரத்துக்கும், மறுகாலனியல் ஆதிக்கத்திற்கும் எதிரான ஜனநாயக இயக்கங்கள் - குறிப்பாக இந்திய எதிர்ப்பு இயக்கங்கள் - வளரத் தொடங்கியுள்ளமையும், மேற்கத்திய தொழிற்சங்க ஜனநாயகத்துக்கான இயக்கங்கள் இலங்கைத் தொழிலாளரிடையே கால் பதித்துள்ளமையும், பொது வேலைநிறுத்தத்திற்கு ஆதரவான புறச்சூழல்களேயாகும். இதனால் பொருளாதாரக் கோரிக்கைகளை மாத்திரம் உள்ளடக்கிய, சம்பள உயர்வுக் கோரிக்கைகளையே தமது உடனடிக் குறிக்கோளாகவும், தொலைதூரக் குறிக்கோளாகவும் கொண்ட ஒரு பொது வேலைநிறுத்தம் அல்லது வேலைநிறுத்தச் சங்கிலித்தொடர் நடைபெறுவதற்கான வாய்ப்புகளை மறுப்பதற்கில்லை. இவை நாட்டின் அரசியல் சமநிலையைக் குலைக்கக் கூடியளவு சக்தி பெற்றதாக

இருக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை. இதனால் இப்போராட்டங்கள் கடுமையான இராணுவ அடக்குமுறையை எதிர்கொள்ளும் என்பதுவும் உண்மை. ஆனால், மறுகாலனியல் ஆதிக்கத்திற்கு எதிரான ஜனநாயக இயக்கங்களினதும், - குறிப்பாக இந்திய எதிர்ப்பு இயக்கங்கள் - மேற்கத்திய தொழிற்சங்க ஜனநாயகத்துக்கான இயக்கத்தினதும் திசைதிருப்பல்களை எதிர்த்து தொழிலாளி வர்க்க அரசியலை முன்னெடுத்துச் செல்லும் சக்தி தொழிலாள வர்க்க அமைப்புகளுக்கு உண்டா என்பது சந்தேகமே. இப் போராட்டங்களுக்குத் தலைமை கொடுக்கக் கூடிய தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்கள் எதுவும் இலங்கையில் சக்தி பெற்றதாக இல்லாமையே இச் சந்தேகத்திற்கான காரணமாகும்.

### 3.8.2) **இடதுசாரிகளின் நிலை**

இடதுசாரிகளுக்கு MR அஞ்சவில்லையா என்றோர் கேள்வி எழுகின்றது. ஆம் அல்லது இல்லை என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட முடியாது. காரணம், அவர்கள் இரு கூறுகளாகப் பிரிந்துள்ளனர். ஒரு கூறைக் கண்டு MR அஞ்சவேயில்லை, காரணம், அக்கூறு அவரின் நட்புவட்டத்தினுள் அமைதியாக காலங் கழிக்கிறது. மறுகூறு MRன் விரோதிதான். ஆனால் அக்கூறு வினைத்திறனற்றுக் காணப்படுகிறது. முதல்கூறை முதல் தலைமுறை இடதுசாரிகள் எனவும், இரண்டாவது கூறை இரண்டாவது தலைமுறை இடதுசாரிகள் எனவும் அழைப்போம்.

### 3.2.9.3.அ) **முதல் தலைமுறை இடதுசாரிகள்**

1930-களின் ‘சூரியமல்’ இயக்கத்திலிருந்து தோற்றமுற்றவர்களும் அவர்களின் வழித்தோன்றல்களுமே முதல் தலைமுறை இடதுசாரிகளாகும். இவர்களின் அடிப்படைக் கொள்கைகளாவன:

### அ.1) **முதலாளித்துவ அரசுஇயந்திரத்தைக் கையேற்றல்**

காலனியல் ஆட்சியாளர்களிடம் இருந்து கையேற்று, முதலாளித்துவம் வளர்த்து வைத்திருக்கும் அரசு இயந்திரத்தின் அதிகார உறைவிடங்களான இராணுவக் கட்டுமானத்தையும், அதிகாரத்துவ கட்டுமானத்தையும், நீதி பரிபாலன அங்கத்தையும் முடிந்தளவு குறைந்த சேதங்களுடன் அப்படியே கையேற்று கட்சியின் சர்வாதிகாரத்தால் - தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தால் அல்ல - சோவியத்துக்களை (கம்யூனிஸ்டுகள்) அல்லது சோஷலிஸ அரசை (ட்ரொக்ஸிஸ்டுகள்) நிறுவுவது.

### அ.2) **பாராளுமன்ற ஜனநாயகப் பாதை**

அரசைக் கையேற்கும் இக் குறிக்கோளை அடைவதற்காக தமது நாட்டின் முதலாளித்துவம் காலனி ஆட்சியாளர்களின் வழிகாட்டுதல்களுக்கிணங்க வகுத்து வைத்துள்ள ஜனநாயக வரம்புகளை எக்காரணம் கொண்டும் மீறாமல் மக்கள் போராட்டங்களை நடத்துவது. இதற்காக, வாக்குகளையே தமது ஆயுதங்களாகவும், வாக்குரிமை பெற்ற மக்களையே தமது போர்வீரர்களாகவும் கொள்வது. ஆயுதங்கள் அற்ற மக்களை (வாக்குகள் அற்ற) ஒன்றுக்கும் உதவாதவர்களாகக் கருதி, ஒதுக்கிவைப்பது. (இவ்விதம் ஒதுக்கப் பட்டவர்கள்தான் வாக்குரிமை பறிக்கப்பட்ட மலையக மக்களாகும்.) வாக்குரிமை உள்ளவர்களின் வாக்குகள் தமக்குக் கிடைக்க வேண்டும் அல்லது தமது நண்பர்களான "தேசிய முதலாளிகளுக்கு"க் கிடைக்க வேண்டுமென்பதற்காக அல்லது தமது எதிரிகளான UNPக்கு கிடைக்கக்கூடாதென்பதற்காக கொள்கைச் சமரசங்கள் எதற்கும் தயாராயிருப்பது. இன்றுவரை அப்படியே இருந்துவருகிறார்கள். 1970-கள் வரை இவர்கள் UNP ஐ அதன் கனவிலும்கூடத் தோன்றி அச்சுறுத்துபவர்களாகவே இருந்தனர். 1971-ல் SLFP பெற்ற மாபெரும் தேர்தல் வெற்றிக்கு இவர்களே காரணமாக இருந்தனர்.

### அ.3) **முதலாளித்துவமற்ற பாதை**

முதலாளித்துவமற்ற பாதையில் சோஷலிஸத்தை நிறுவுவதற்காக முதலாளித்துவத் தேசிய மற்றும் நிலமானிய எதிர்ப்புப் பிரிவினராக தம்மால் அடையாளப்படுத்தப்பட்ட 'அப்பே ஆண்டுவ' அணியுடன் சமாதான சகஜீவனக் கொள்கையைக் கடைப்பிடிப்பது. இதன் விளைவு, ஒன்று UNP ஐ ஆயுட் காலப்பகைவனாக எடுத்துக் கொண்டது, மற்றையது, அப்பே ஆண்டுவ நாயகருடன் இரண்டறக் கலந்தது. அதன் இன்றைய வாரிசு MR உடன் கலந்துள்ளதும், இனிவருவோருடன் கலக்கத் தயாராய் இருப்பதுவும் இதன் தொடர்ச்சியேயாகும். 'அப்பே ஆண்டுவ' என சிங்கள மக்களால் இன்றும் வாஞ்சையுடன் அழைக்கப்படும் முதலாளித்துவ ஜனநாயக சீர்திருத்தங்களால் இலங்கை மக்கள் அனைவருக்கும் நிறையவே நல்லது நடந்துள்ளது. அதற்குரிய காரணம் இந்த இடதுசாரிகளேயாகும். 1930-களில் இருந்து 1960-கள் வரையான காலப்பகுதியிலான இவர்களின் கடுமையான உழைப்புத்தான் இச்சீர்திருத்தங்களின் வெற்றிக்கான காரணமாகும். இலங்கையில் அரச முதலாளித்துவத்தை வெற்றிகரமாக அறிமுகப் படுத்தியதும் இவர்கள்தான். இம் முதலாளித்துவத்தின் (மண்ணிறப் பாஸிஸத்தின்) செயற்பாடுகள் ஆரம்ப நாடகளில் முற்போக்கு பாத்திரம் வகித்ததென்பது மறக்கமுடியாத ஒரு உண்மை.

## அ.4) **பண்பாட்டின் வகிபாகத்தை குறைத்து மதிப்பிடல்**

உற்பத்தி உறவுகளும், உற்பத்திக் கருவிகளுந்தான் சமூக அமைப்பின் அடிப்படைச் சக்தி, அரசியல் உட்பட ஏனையவை சகலதும் அதன் பின்னால் இழுபட்டுவரும் துணை சக்திகள் அல்லது பக்கவாத்தியங்கள். முதலாளித்துவமற்ற பாதையில் சென்று சோஷலிஸத்தை அடைந்துவிட்டால், சோஷலிஸ உற்பத்தி உறவுகளை நிறுவிவிட்டால் இலங்கையின் அனைத்து நோய்களும் தானாகவே தீர்ந்துவிடும். வேர் அறுந்துவிட்ட பற்களை சுலபமாகப் பிடுங்கி எறிவதைப்போல இவற்றைப் பிடுங்கி எறிந்து விடலாம், அல்லது தானாகவே விழுந்துவிடும். பௌத்த-சிங்களக் கொழுப்பும்/திமிரும் தானாகவே அடங்கிவிடும். இதுதான் சமூக வளர்ச்சி நியதி. இதைவிட வேறு குறுக்குவழிகள் எதுவுமேயில்லை. அதற்கு முன்னர் சாதி, மதம், இனம், ஆண்மேலாதிக்கம், இத்தியாதி அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் அனைவரும், அவசரக் குடுக்கைகள், தீவிரவாதிகள் 90களுக்கு முன்னர் இவர்கள் CIA முகவர்கள், அதன் பின்னர் இவர்கள் பயங்கரவாதிகள் அல்லது பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்கள் என்பதுவே இவர்களின் உலகக் கண்ணோட்டமாகவும் அரசியல் வகைப்படுத்தலாகவும் இருந்தன. இருந்தும், தமிழ்ப்பகுதிச் சாதியக் கட்டமைப்புக்கு இதிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டிருந்தது. அங்கு சாதிய அடக்குமுறைக்கு எதிரான போராட்டமானது, இவர்களின் தனி விசேட வேலைத்திட்டமாகவே இருந்தது. வெள்ளாளரின் சாதிய மேலாதிக்கத்தைச் சேதப்படுத்துவதில் இவர்களின் பங்கு மதிப்புக்குரியதாக இருந்தது. ஆனால், சிங்களப் பகுதியில் வளர்ந்து வந்த கொவிகம ஆதிக்கத்துக்கு மௌன சாட்சிகளாக இருந்தனர். அதை எதிர்க்கும் கரவாஸ் உட்பட பிற சாதியினர் இந்த முதல் வகை இடதுசாரிகளின் ஆதரவாளர்களாக இருந்துங்கூட வளர்ந்து வந்த கொவிகம (வெள்ளாள) ஆதிக்கத்தை இவர்கள் கண்டுகொள்ளவேயில்லை.

வடபகுதியில் ஒரு விதமாகவும், தென்பகுதியில் வேறோர் விதமாகவும் நடந்து கொண்டதேன்? ‘அப்பே ஆண்டுவ’ அரசியலின் கோட்டையாக இருந்த இந்த கொவிகமப் பிரிவினரை எக்காரணம் கொண்டும் பகைத்துக் கொள்ளக்கூடாதென்பதே இவர்களின் சமரசமாக இருந்தது. இதனால், முதலாளியம் அற்ற பாதையின் முன்னோடிகளின் நட்பைப் பெற்றுக் கொள்வதற்காக இவர்கள் தமது தென்பகுதியில் (பாத்தறட்ட) இருந்த தமது சொந்த வாக்கு வங்கியைக்கூட இழக்கத் தயாராய் இருந்தார்கள். தென்பகுதியின் கொவிகம அல்லாத சாதிப்பிரிவினர் இவர்களின் வாக்கு வங்கிகளாகவே இருந்தன. முதல் தலைமுறை இடதுசாரித் தலைவர்களில் பலர் இச்சாதிப்பிரிவினராகவே இருந்தனர்.

சிங்கள கொவிகமவினர் தென் இலங்கையில் செய்துவந்த,

செய்துவருகின்ற அதே காரியத்தைத்தான் யாழ் வேளாளர்களும் இன்றுவரை செய்துவருகிறார்கள். ஒரு சிறு வேறுபாடு, யாழ் வேளாளர்கள் தீண்டாமை எனும் ஆயுதத்தைப் பயன்படுத்தியபடியால் மிக அநாகரிகமாக நடந்து கொண்டனர். இந்த அநாகாரிக நடத்தை கொண்ட வேளாள மேட்டுக்குடிதான் 1970-கள் வரை தமிழ்த் தேசியத்தின் தலைமையாக இருந்தது. இவர்கள், 'அப்பே ஆண்டுவ' ஆதரவாளர்களாக இருந்திருந்தால், இம் முதல்தலைமுறை இடதுசாரிகள் யாழ்ப்பாணச் சாதியொடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். இங்கும் மௌனசாட்சிகளாக இருந்திருப்பார்கள். ஆனால், தமிழ்த் தேசியர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி UNP ஆதரவாளர்களாக இருந்ததுதான் யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு கிடைத்த நல்லதோர் சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது. ஏகாதிபத்தியத்திற்கும், நிலமானிய உற்பத்தி உறவுகளுக்கும் எதிரான போராளிகளாகிய இந்த முதல்வகை இடதுசாரிகள் மக்கள் மத்தியில் என்றும் நின்று பிடிக்கக் கூடிய முறையில் தமது வகிபாகத்தை (role) வெள்ளாளத் தலைவர்களுடன் எந்தச் சமரசமுமின்றி நன்றே நிறைவேற்றினார்கள். உற்பத்தியுறவுதான் அடிப்படை, ஏனையவை எல்லாம் இயல்பாகப் பின்தொடர்ந்து வருபவை என்ற தமது கோட்பாட்டை இங்கு பின்பற்றவில்லை. பண்பாட்டு விழுமியங்களிலுள்ள அநீதிகளைக் களைவதில் சாத்தியப்பாட்டுவாதிகளாக (optmists) நடந்து கொண்டார்கள். பண்பாட்டுக் கட்டுமானம், உற்பத்தி உறவுக் கட்டுமானம் ஆகிய இரு களங்களிலும் சமகாலத்தில் சமர் புரிந்தார்கள், வெற்றியும் பெற்றார்கள்.

ஆனால், தென் இலங்கையிலோ உற்பத்தி உறவுதான் அடிப்படையானது, ஏனையவையெல்லாம் இயல்பாகப் பின்தொடர்ந்து வருபவையென்ற தமது கோட்பாட்டை இவர்கள் 1950-களின் முற்பகுதியில் இருந்தே மிகக் கண்டிப்பாகப் பின்பற்றத் தொடங்கி விட்டார்கள். ஆனால் சிங்கள பௌத்த மாறாமரபியல்வாதிகளால் அரசியல் அரங்கினில் கொண்டுவரப்பட்ட, இலங்கைத் தொழிலாளவர்க்கத்துக்கு பெரும் தீங்க்கிழைத்த, ஏ.ஈ.குணசிங்காவுடன் பல போராட்டங்கள் நடத்தியுள்ளனர். ஆனால், 1950-களில் தமது போர்க்குணத்தை தணித்துக் கொண்டனர். இதன் பின்னர் சிங்கள-பௌத்த மாறாமரபியல்வாதத்தை பின்னர் பார்த்துக் கொள்ளலாமென்ற அதே நிலைப்பாட்டில்தான் அன்றிலிருந்து இன்றுவரை இருந்துவருகிறார்கள். சிங்கள-பௌத்தர்களை தனியான ஒரு சிந்தனையோட்டம் என்ற வலிமையான நூலிழையில் கட்டிப்போட்டுள்ள மஹாவம்சம் என்ற பண்பாட்டுக் கட்டுமானத்தை இவர்கள் கண்டுகொள்ளவேயில்லை.

### அ.4.1) **மஹாவம்சக் கட்டுமானம்**

இப் பண்பாட்டுக் கட்டுமானம் அல்லது வாழ்க்கை நெறியானது

பழக்கவழக்கங்களாலும், சம்பிரதாய சடங்குகளாலும், சமூக விழுமியங்களாலும் (SOCIAL VALUES), சமுதாய ஒழுக்க அளவுகோல்களாலும் (SOCIAL NORMS) ஆக்கப்பட்டு சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்பட்டதொன்றல்ல. இப் பண்பாட்டுக் கட்டுமானம் தனக்கென்றோர் தனித்துவமான நிறுவனக் கட்டுமானத்தையும் கொண்டுள்ளது. இந் நிறுவனம், மக்களின் விருப்பத்துக்கு ஒப்ப மக்களால் இயக்கப்படுமொரு நிறுவனமல்ல. இது வழிபாட்டுத் தலமென்ற எல்லைக்குள் தன்னைக் குறுக்கிக்கொண்டவொரு அமைப்புமல்ல. பெரும் பணபலத்துடனும், அடிமை குடிமைச் சாதிகளுடனும், பெரும் கல்விமான்களால் இயக்கப்படும், ஏராளமான பல்திறன்மிகு முழுநேர ஊழியர்களையும் கொண்டதோர் அமைப்பாகும். இவ் அமைப்பு தமக்குத் தேவையான சகலத்தையும் தன்னகத்தே கொண்டதாகவுமுள்ளது. அரசியலில் நேரடியாகத் தலையிடாமலேயே ஆளுபவர்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் மிக்கதாகவும் உள்ளது. அவசியம் வரும்போது இவ் அமைப்பினர் அரசியலில் நேரடியாக தலையிடவும் செய்கின்றனர்.

அதாவது, இப் பண்பாட்டுக் கட்டுமானம் அல்லது வாழ்க்கைநெறி மக்களால் விருப்புடன் உள்வாங்கப்பட்டு மக்களின் தன்னார்வ உணர்வுடன் இயங்கும் ஒரு சமூக நிறுவனமல்ல. சிங்கள மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள ஒரு வாழ்க்கை நெறியாகும். மஹாவம்சக் சமூகக் கட்டுமானத்திற்கு இலங்கையில் உள்ள பிடிமானத்தை, ஈரானின் முஸ்லீம் கட்டுமானத்துடன் ஒப்பிட்டால் மஹாவம்சம்தான் அதிக சக்திமிக்கது எனக் கருதலாம். ஏனெனில் அங்கு மதத் தலைமைப்பீடம் வெளிப்படையாகவும், அரச சாசனரீதியாகவும் அரசியல் தலைமை ஏற்றுள்ளது. இது மதநிறுவனத்தின் பலத்தின் அறிகுறியல்ல, பலவீனத்தின் அறிகுறி. இலங்கையில் சமூகமரபே ஒரு அரசியல் சாசனமாகச் செயல்பட்டு மஹாவம்ச நிறுவனத்துக்கு ஒரு அரசியல் அதிகாரத்தைக் கொடுத்துள்ளது. இவர்களின் அதிகாரத்துக்கு கட்டுப்படவேண்டும் என்ற அரசியல் சாசனக் கட்டாயமெதுவும் எந்த அரசியல் கட்சிக்குமில்லை. கட்சிகள் நினைத்தால் மீறலாம், ஆனால் எவருமே இதுவரை மீறவில்லை. 40களில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் மீற முற்பட்டது. ஆனால் முடியவில்லை. இவ் எதிர்ப்பின் எதிர் விளைவுதான் பௌத்த மதபீடத்தின் பக்கபலத்துடன் நடந்த 'அப்பே ஆண்டுவ' எழுச்சியாகும்.

MR தற்போது இதன் உத்தரவுகளை மீறுகிறாரா என எண்ணத் தோன்றுகிறதா? இல்லை. அதன் ஒரு பகுதியுடன் முரண்படுகிறார். மற்றோர்பகுதியுடன் மிக நெருக்கமாகவே உள்ளார்.

பௌத்த மதபீடம் அதன் அரசியல் அதிகாரத்தை சமூக மரபிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளது. இதுதான் அதன் சமூக பலத்தின் அறிகுறியாகும். அதேபோல், இந்தியாவின் இந்துத்துவத்தைவிட இலங்கையின் மகாவம்சம்

பலமானது. இந்திய இந்துத்துவம் தனக்கென்றோர் தொண்டர்படையை வைத்துள்ளது. அதுவும் தொடர்ந்து அவ்வப்போ, இந்திய ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதியாலேயே கடுமையான விமர்சனத்துக்கும் உள்ளாகி வருகிறது. தடைசெய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அப்பப்போ முன்வைக்கப்படுகின்றது. பாபர்மசூதியை விநாசம் செய்ததற்காக பெரும் அரசியல் தலைவர் ஒருவருக்கு எதிராகவே குற்றவியல் வழக்கும் உண்டு.

ஆனால் இலங்கையில் நிலைமை இவ்விதமானதல்ல. சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்களை அடிக்கவும், உதைக்கவும், எரிக்கவும் அப்பப்போ அவர்களால் 'மக்களை' அணிதிரட்ட முடியும், அவசியமானால் இராணுவத்தின் ஒரு பகுதியைக்கூட களம் இறக்கமுடியும். 1977-இலும், 1983-இலும் சீருடை அணியாத இராணுவத்தினருக்கு, சீருடை அணிந்த புத்த பிக்குகள் தலைமை தாங்கவில்லையா? இராணுவத்துள் இன்று ஏற்பட்டுள்ள முரண்பாடு எதைக் காட்டுகிறது? இதுவரை எந்த பௌத்தகுரு தண்டிக்கப்பட்டுள்ளார். எவருமேயில்லை. இதனால் இலங்கையின் அவலநிலைக்குக் காரணம் பண்பாட்டுக் கட்டுமானமா அல்லது அரசுக் கட்டுமானமா என்றோர் கேள்வியை எழுப்பி ஆராயமுற்படுவது ஒன்றும் தவறல்ல. தவறோ, தவறில்லையோ பண்பாட்டுக் கட்டுமானத்தில் அடிப்படை மாற்றம் இல்லாமல் (radical change) இலங்கையின் சமூக உருவாக்கத்தில் எந்த முற்போக்கு மாற்றத்தையும் உருவாக்க முடியாது. இன்னும் குறிப்பாகச் சொல்வதானால், இலங்கையின் ஜனநாயகப் புரட்சி, மஹாவம்ச வாழ்க்கை நெறிக்கு எதிரானதோர் பண்பாட்டுப் புரட்சியையும் தனது அங்கமாகக் கொண்டுள்ளது. ஆனால் முதல் தலைமுறை இடதுசாரிகளோ, பண்பாட்டுக் கட்டுமானத்தை தமது கைபடக்கூடாத புனிதநிலையமாக்கிக் கொண்டுள்ளனர். அங்கு கைவைத்தால் 'அப்பே ஆண்டுவ' வம்சாவளியினரை UNP ஐ நோக்கித் தள்ளிவிட்டதாக ஆகிவிடுமோ என்ற அச்சத்துடன் வாழ்வதே அவர்களின் வாழ்க்கை நெறியாக மாறிவிட்டது. இந்தக் கலாச்சாரப் புரட்சி நடத்தப்படாததால் UNP, 1977-இல் ஓர் எதிர் புரட்சியை நடத்தி முடித்தது. 1960களின் முற்பகுதிப் பாராளுமன்றத் தேர்தலின் வெற்றியைக் கண்டு பெருமிதப்பட்ட இடதுசாரி இயக்கத் தலைவர்களில் ஒருவரான கொல்வின்.ஆர். டி. சில்வா, UNP ஐ சவப்பெட்டிக்குள் வைத்து கடைசி ஆணியும் அடித்தாகி விட்டதெனக்கூறினார். ஆனால் மக்களின் மனோநிலையில் மாற்றங்கள் ஏற்படுத்த முயற்சிகள் செய்யாததால் மீண்டும் வேதாளம் முருங்கைமரம் ஏறியது. 1977 தேர்தலில் UNP பிரமிக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றது.

இவர்களின் இந்திய நண்பர்களாகிய இந்திய இடதுசாரிகளோ, மதச்சார்பின்மைக் கோட்பாட்டின்படி ஒழுகி இந்துத்துவத்தையே தமது பிரதான எதிரியாகக் கொண்டுள்ளனர். பண்பாட்டுக் கட்டுமானத்தில் குறிப்பாகவும், தனியாகவும் எதையும் செய்யாவிட்டாலும், இந்துத்துவப்

பண்பாட்டுக் கட்டுமானம், அரசியல் கட்டுமானத்தில் செல்வாக்குப் பெறுவதற்கு எதிராகப் பெரும் தடைக்கல்லாக இருந்துவருகின்றனர். இவர்கள் தமது இலங்கை நண்பர்களுக்கு இதை எடுத்துச் சொல்லி, அவர்களை நெறிப்படுத்த முயல்வார்களா? முதல் தலைமுறை இடதுசாரியினர் சுமார் 50 வருடங்களாக பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளுடன் சமரச வாழ்வு நடத்திவிட்டார்கள். இனி அவர்களால் அதிலிருந்து மீண்டு வரமுடியுமாவென்பது சொல்லமுடியாது.

### அ.5). **ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள்**

இலங்கையின் முன்னணி அல்லது முதல்நிலை ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களென்றால் அது இவர்கள்தான். இலங்கையின் அரசியல் அரங்கில் முதலாவது ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் இவர்கள்தான். அநகாரிக தர்மபாலவின் ஏகாதிபத்திய எதிர்ப்பானது அரசியல் தன்மைபெற்றதாக இருக்கவில்லை. அது பண்பாட்டுத்தளத்தில் ஐரோப்பிய வாழ்க்கைநெறியின் சில அம்சங்களுக்கெதிராக நடத்தப்பட்டதோர் பண்பாட்டுச் சீர்திருத்த இயக்கமாகும். சிங்கள பௌத்த பேரகங்காரவாதம் காலனியல் காலத்தில் அநகாரிக தர்மபாலவின் தலைமையின் கீழ் ஒரு பண்பாட்டு சீர்திருத்தத்தை நடத்தியது. இவ் இயக்கந்தான், பௌத்த மதபீடங்கள் தம்மைப் புத்துயிர்ப்புச் செய்துகொள்வதையும், சிங்கள பௌத்த தரகு முதலாளிகள் பிற ஆளும் வர்க்கங்கள் மீதான தமது அரசியல் மேலாண்மையை நிலைநிறுத்திக் கொள்வதையும் சாத்தியமாக்கியது. ஒரு காலத்தில் மிகச் சிறந்த தொழிலாளர் தலைவராக இருந்த (தொழிலாளிவர்க்கத் தலைவரல்ல) ஏ.ஈ. குணசிங்காவும் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பாளரல்ல. இவர்கள் அனைத்துலகக் கண்ணோட்டம் கொண்டவர்களுமல்ல. இந்த இரு பெருமையும் இடதுசாரிகளையே சாரும். அன்றைய சூழலுக்கிணங்க இவர்கள் மேற்குலகுக்கு, அதிலும் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு, எதிரானவர்களாகவே இருந்தனர். 1977வரை இவ்வல்லரசுகளின் வலயத்துள் விழாமல் இலங்கையைப் பாதுகாத்தது இவர்களேயாகும். அனைத்துலக அரங்கிலும், ஒரு 'நடுநிலைநாடு' என்ற நற்பெயரை வாங்கிக் கொடுத்ததுவும் இவர்களேயாகும். 'அப்பே ஆண்டுவ' அரசாங்கங்களின் ஊடாக இவற்றைச் செய்வித்தார்கள். 1977இல் JR தலைமையில் நடந்த எதிர்ப்புரட்சி, இலங்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்பு-வரலாற்றுக்கொரு பெரும் பின்னடைவாக இருந்தது. இதைத் தொடர்ந்து இப் பின்னடைவு ஓரளவு சரிசெய்யப்பட்டுள்ளது. மகிந்த சிந்தனை மேற்குலக ஆதிக்கத்துடன் உடன்படாத கருத்துக்களையும் உள்ளடக்கியதாயிருப்பது இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

ஆனாலும் ஓரளவுக்குத்தான். ஏன்? 90களின் பின்னர் உலகம் பல வல்லரசுமைய உலகமாக மாறிவிட்டது. இதனால் இலங்கையின் இன்றைய

'தேசிய' முதலாளித்துவத்தின் நிலைப்பாடு மூலோபாய ரீதியில் அனைத்து வல்லரசுகளுக்கும் எதிரானதாக இருக்கவேண்டும். அதாவது, ஒட்டுமொத்த ஏகாதிபத்தியக் கட்டுமானத்துக்கு எதிரானதாக இருக்கவேண்டும். ஆனால் MR அவ்விதமில்லை. அவர் தரகுமுதலாளித்துவத்தை மடைமாற்றம் செய்கிறார். இது தேசியமல்ல. இதனால் MR ஆட்சிக் காலத்தில், அவருடன் இணைந்து முதல் தலைமுறை இடதுசாரிகளால் முன்வைக்கப்படும் மேற்குலகை மட்டும் குறிவைத்த ஏகாதிபத்திய எதிர்ப்பென்பது, வலுக்குறைந்தவர்களின் சாரமற்ற எதிர்ப்பேயாகும். MRஇன் சந்தர்ப்பவாத ஏகாதிபத்திய எதிப்புக்கு சேவைசெய்கிற எதிர்ப்பேயாகும்.

## அ.6). **பொருளாதாரவாதம்**

முதல் தலைமுறை இடதுசாரிகளின் வீழ்ச்சிக்கான மற்றோர் காரணந்தான் பொருளாதாரவாதமாகும்.

### அ.6.1) **வயிற்றுப் பிழைப்புவாதம்**

நாம் அன்றாடம் பயன்படுத்தும் வயிற்றுப் பிழைப்புவாதமென்ற சொற்பதத்திற்கும், பொருளாதாரவாதத்திற்கும் தொடர்புகளுண்டுதான். பொருளுக்காகவும்/பொருள்சார்ந்த வசதிவாய்ப்புகளுக்காகவும், தனது/ தமது சுயத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அவசியமான சகலவற்றையும் மறந்து/ விட்டுக்கொடுத்து/ அடகுவைத்து ஒரு அரை-அடிமை நிலையில் வாழும் சிந்தனைப்போக்குத்தான் வயிற்றுப்பிழைப்புவாதமாகும். தனிமனிதனோ, அமைப்போ, தேசமோ, வர்க்கமோ இந்த சிந்தனைப்போக்குக்கு ஆளாகக்கூடும். ஆனால் இச்சொற்பதம் தனிமனிதர்களைக் குறிப்பதற்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது. இதைவிட அதிக பரிமாணங்கள் கொண்ட பொருளாதாரவாதமே பொருத்தமான பதமாக கருதப்படுகிறது.

### அ.6.2) **தொழிற்சங்கங்கள்**

முதலாளித்துவ அல்லது அரை-காலனியல் சமூகக் கட்டமைப்பினுள் வாழும் தொழிலாளி வர்க்கத்தின் இறுதி நோக்கம், பாட்டாளிவர்க்க சர்வாதிகார அரசை உருவாக்குவதுதான். இதுதான் இடதுசாரித்துவமாகும். இக் கடமையை நிறைவேற்றுவதற்கு ஒப்ப தொழிலாளி வர்க்கத்தையும், பிற உழைக்கும் வர்க்கத்தையும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் அமைப்புரீதியாக வளர்த்தெடுப்பதுதான் இடதுசாரிக் கட்சிகளின் கடமையாகும். தொழிலாளர்களை அணுகுவதற்கான நுழைவாயிலும், அவர்களை அமைப்புரீதியாக அணிதிரட்டுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளுந்தான் பொருளாதாரக் கோரிக்கைகளை மையமாகக்கொண்ட

பொருளாதாரப் போராட்டங்களாகும். இப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான அமைப்புத்தான் தொழிற்சங்கங்களாகும். இதனால் தொழிலாளிவர்க்க சர்வாதிகாரத்தின் ஆரம்பநிலை அமைப்புத்தான் தொழிற்சங்கங்களாகும். பள்ளிக்கூடக் கல்வி முறையை உதாரணம் காட்டிச் சொல்வதானால், இதை உழைக்கும் மக்களின் தொடக்கப்பள்ளி எனக் கூறலாம். இவ்வித பள்ளிக்கூடங்களை உழைக்கும் மக்களின் அனைத்துப் பிரிவினரிடையேயும் உருவாக்குவது இடதுசாரிகளின் கடமையாகும்.

ஆனால், இவ்விதப் பள்ளிக்கூடங்கள் முதலாளித்துவத்திற்கும் தேவையாக இருப்பதுதான் தற்போதுள்ள நெருக்கடியாகவுள்ளது. முதலாளித்துவக் கட்டுமானத்தின் (structure) ஒரு அங்கமாக தொழிலாளர்களையும் சேர்த்துக் கொள்வதுதான் முதலாளித்துவத்தின் வேலைத்திட்டமாகவுள்ளது. தொழிற்சங்கங்களை அமைப்பதும், அவற்றைப் பேணிப் பாதுகாப்பதும் முதலாளித்துவவாதிகளின் வேலைத்திட்டமாகவுள்ளது. தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்துவதற்கு இவ்வித அமைப்புகள் தேவைப்படுகின்றன. இந்த சமரசந்தான் முதலாளித்துவ சமூகக் கட்டுமானத்தின் ‘சமூக அமைதி’க்கான உத்தரவாதமாகும். முதலாளித்துவ ‘சமூக அமைதி’ என்பது முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்கு எதிரான சவால்கள் இல்லாதிருக்கும் ஒரு நிலையேயாகும்.

முதலாளித்துவத்தின் இவ்வேலைத்திட்டத்தை இலங்கையின் ஒட்டுமொத்த முதலாளித்துவமும் புரிந்து கொண்டுள்ளார்கள் என்றில்லை. தனியார் முதலாளிகளில் அநேகர் இதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளவில்லை. இதனாலேயே இவர்கள் தமது தொழில் நிலையங்களில் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை மதிக்காது நடந்து கொள்கிறார்கள். அதேபோல், அரச முதலீடுகளில் அரசு, தொழிற்சங்கத்தை குறிப்பிட்ட தூரம்வரை மதித்தாலும் அதிகாரிகள் மதிக்கத் தயாராயில்லை. தொழிற்போட்டி, துரிதமாகவும் உடனடியாகவும் லாபமீட்ட வேண்டுமென்ற பேரவா, தனிமனித மேட்டுக்குடி ஆணவம் ஆகியனவே இதற்கான காரணங்களாகும். இதனால் சமூக அமைதியைப் பாதுகாப்பதற்கு எதிராக முதலாளிகளும் அதிகாரிகளுமே நடந்து கொள்கிறார்கள்.

இடதுசாரிகளின் பார்வையில் தொழிற்சங்கமென்பது, முதலாளிய வர்க்க சர்வாதிகார அரசை தூக்கியெறிவதற்காக தொழிலாளர்களை ஒன்று சேர்க்கும் ஆரம்பகால அமைப்பாகும்.

முதலாளித்துவ அரசியல்வாதிகளின் பார்வையில் தொழிற்சங்கமானது, பாராளுமன்றத்தையும், பிற ஜனநாயக ஆட்சியமைப்புகளைப் போன்று, ஜனநாயக வழிமுறைகளில் ‘சமூக அமைதி’யைப் பேணிப்பாதுகாப்பதற்கான

உயர்ந்த மட்ட அமைப்பாகும். தொழிற்சங்கங்கள் சமூக அமைதியைப் பேணும் அமைப்புகளாகச் செயல்படாது போகுமானால், ஒன்றில் இனவாதத்தை தூண்டிவிட்டு அல்லது ‘அவசரகாலச் சட்டம்’, ‘பயங்கரவாத தடுப்புச் சட்டம்’- போன்றவற்றைப் பிரயோகித்து ‘சமூக அமைதி’யைப் பாதுகாக்கும். இதுவே இலங்கையின் (முதலாளித்துவத்தின்) வரலாறாகவும் இருந்துவந்துள்ளது. இதை எதிர்கொள்ளும் நிலையில் தொழிலாளர்களை இடதுசாரிகள் தயார்படுத்தவில்லை.

மூன்றாம் உலக நாடுகளில் அரச முதலாளித்துவத்தின் தோற்றம், ‘தேசிய முதலாளித்துவத்தின்’ எழுச்சி, அணிசேராக்கொள்கையிலான நாட்டம், சோசலிஸ நாடுகளுடனான நட்பு, விவசாய நிலச் சீர்திருத்தங்கள் ஆகிய அனைத்தும் ஒருசேர நடந்த, ஒன்றுடன் ஒன்று பிணைந்த உலகளாவிய நடவடிக்கைகளாகும். இம் மாற்றம் அதிகளவில் நடைபெற்றது ஆசியாவில்தான். இவை 50களின் பிற்பகுதியிலும் 60களிலும் நடந்த மாற்றங்களெனக் கூறலாம். இதே காலப்பகுதியில் இவ் ஆசிய-மூன்றாம் உலக நாடுகளில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான தாக்குதல்களும் கம்யூனிஸ்ட் இயக்கங்களை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சிகளும் நடைபெற்றன. தேசிய பொருளாதார எழுச்சி, இடதுசாரிகளுக்கு எதிரான வன்மம், ஆகியவற்றுடன் கைகோர்த்தவண்ணம் ஆசிய நாடுகளின் தேசியவாதம் தத்தமது நாடுகளின் சூழலைப் பொறுத்து மத-மாறாமரபியல்வாதம், மதச்சார்பின்மைவாதம், (இது மதத்தின் அரசியல் மற்றும் சமூக அதிகாரத்தைப் பலவீனப்படுத்தும் நோக்குடன் பிரயோகிக்கப்படவில்லை. மேற்குலகுடன் ஒரு இணைவை ஏற்படுத்துவதற்கான ஒரு பண்பாட்டு வளைந்து கொடுப்பாகவே பயன்படுத்தப்பட்டது.) இனக் குழுமவாதம், சாதியவாதம், ஆதிக்குடிகள்வாதம் (Tribalism) இத்தியாதிகளில் ஏதாவதொன்றைத் தன்னுடன் அரவணைத்தபடி வளர்ந்து வந்தது. இலங்கையில் சிங்கள பௌத்த இனக்குழுமத் தேசியமும், மொழிவழித் தமிழ்த் தேசியமும் ஊக்குவிக்கப்பட்டன.

பொதுத்துறை, ‘மனித நேய முதலாளித்துவம்’, தேசிய மூலதனம், முதலாளித்துவம் அற்றபாதை மூலதனம் என பல்வேறு முற்போக்குப் பெயர்களால் அழைக்கப்பட்டு எழுச்சி பெற்று வளர்ந்து வந்த இலங்கையின் அரச முதலாளித்துவமானது இடதுசாரிகளையும், இடதுசாரி இயக்கங்களையும் அழிக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. எகிப்து, பர்மா, இந்தோனேசியா ஆகிய நாடுகளை இலங்கை பின்பற்றவில்லை. இடதுசாரிகளையும் இடதுசாரி இயக்கங்களையும் நீர்த்துப் போகச் செய்யும் முயற்சிகளிலேயே ஈடுபட்டது. அதில் வெற்றியும் பெற்றது. இதற்காக இலங்கையின் தேசிய முதலாளி வர்க்கம் பயன்படுத்திய ஆயுதங்கள் இரண்டாகும். ஒன்று சிங்கள பௌத்த தேசியவாதம், மற்றையது தொழிற்சங்கவாதம். இவை இரண்டிலும் இடதுசாரிகளைத் தோற்கடிப்பதில் அதிக வீரியமிக்க ஆயுதமாக திகழ்ந்தது,

தொழிற்சங்கவாதமேயாகும். இவ் ஆயுதம் இடதுசாரிகளின் அமைப்புக் கட்டுமானத்தையும் வர்க்க அரசியலையும் நீர்த்துப்போகச் செய்தது. சிங்கள பௌத்த தேசியவாதமோ, அவர்களின் தேசிய ஜனநாயக அரசியலை நீர்த்துப்போகச் செய்தது.

இடதுசாரிக் கட்சிகள் அரசாங்கத்தில் அங்கம் வகித்ததானது, தொழிற்சங்கங்களும் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதாகவே முடிந்தது. தாம் எந்த மூலதனத்தின் கூலி அடிமைகளாக உள்ளனரோ அந்த அரச மூலதனத்தை தமது மூலதனமாக (பொதுத்துறை மூலதனம்) கருதும் நிலை தொழிலாளர்களுக்கு உருவானது. மூலதனத்தின் எதேச்சதிகாரத்துக்கும், முதலாளிகளுக்கும் எதிரான போராட்டம் தொழில் நிறுவனங்களின் அரச அதிகாரிகளுக்கு எதிரான போராட்டங்களாக மாறின. இப் போராட்டங்களும் இரு வழிகளில் நடைபெற்றன. ஒன்று கீழிருந்து. மற்றையது மேலிருந்து. கீழிருந்து என்பது தொழிலாளர்களின் முப்பதாண்டுகால வழமையான போராட்டங்களாகும். மேலிருந்து என்பது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர் தலைவர்களால் அரசாங்க மட்டத்தில் இருந்து எடுக்கப்படும் நடவடிக்கைகளாகும். இந்த இரண்டாவது வழி, தொழிலாளர்கள் தமது சொந்தப் போராட்டங்களில் நம்பிக்கை இழக்கும் நிலையை படிப்படியாகத் தோற்றுவித்தது. இதன் விளைவாக தொழிலாளர்கள் தமது தனித்துவத்தையும் தமது சொந்தப் பலத்தையும் மறந்து போனார்கள். எந்த அரசியல் கட்சி அரசாங்கத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றதெனப் பார்த்து அந்தக் கட்சியின் தொழிற்சங்கங்களில் சேரும் நிலை ஓரிரு பத்து வருடங்களில் உருவானது. தொழிற்சங்கப் போராட்டங்கள் அரசியல் கட்சிகளின் (இடதுசாரிக் கட்சிகள் உட்பட) பலப்பரீட்சைக் களமாகியது. தொழிலாளர்களின் நலன் இரண்டாம் பட்சமாகியது. இதனால் இடதுசாரிக் கட்சிகளின் அடித்தளமே பலவீனமாகிப் போனது. இடதுசாரிக் கட்சிகளைக் கொண்டே அது பலவீனப்படுத்தப்பட்டது.

இலங்கையின் இடதுசாரிகளின் பலமே தொழிற்சங்கங்கள்தான். தொழிற்சங்கங்களையும் அதன் துணை அமைப்புகளையும் தவிர இவர்களிடம் இருந்த பிற அமைப்புகளெல்லாம் வெறுமனே பெயரளவினதாகவே இருந்தன. யாழ்குடாநாட்டில் செயற்பட்டுவந்த சிறுபான்மைத் தமிழர் மகாசபையும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் இதற்கு விதிவிலக்கானவை. அவையும்கூட திரவ நிலை இயக்கங்களாக இருந்தனவே தவிர திடமான அமைப்புக் கட்டுமானமாக இருக்கவில்லை. இதனால் தொழிலாளர்கள் பலவீனப்படுத்தப்பட்டதன் பின்னால், தங்கி நிற்பதற்கு வேறு களமெதுவும் இடதுசாரிகளுக்கு இருக்கவில்லை.

இந்தப் பலவீனப்படுத்தலானது இன்னோர் வழியிலும் நடைபெற்றது.

சம்மேளனத் தொழிற்சங்கத் தலைவர்களே கட்சியின் முக்கிய தலைவர்களாக இருந்தனர். தேசிய, மாகாண, பிராந்திய மட்ட முழுநேர, பகுதிநேர தொழிற்சங்க ஊழியர்களே கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்களாக இருந்தனர். தொழில் நிலையங்களில் உள்ள தொழிற்சங்கங்களின் தலைவர்கள் கட்சியின் அடிமட்டத் தலைவர்களாக இருந்தனர். இதுதான் தொழிற்சங்கங்களின் நிர்வாக அடுக்காகும். தனியார் முதலாளித்துவக் காலகட்டத்தில் (50களின் பிற்பகுதிவரை) இவ் நிர்வாக அடுக்கு தனியார் முதலாளிகளாலும் அரசாலும் அடக்கப்பட்டதொன்றாகவே இருந்தது, ஆனால் அரச முதலாளித்துவக் காலகட்டத்திலோ இவ் அடுக்கு அதிகார முதலாளித்துவத்தின் பிரதான அங்கமாக மாறிவிட்டது. தொழிலாளர்களின் சேவகர்களாக இருந்த இவர்கள், அதே தொழிலாளர்களின் ராஜாக்களாக மாறினார்கள். தொழிலாளர்கள் பக்கம் நிற்பதற்குப் பதிலாக அரசின் பக்கமே நின்றார்கள். அரச மூலதனத்தின் பாதுகாப்பும், வளர்ச்சியும்தான் அவர்களின் குறிக்கோள்களாகின. கட்சியின் நல் இரத்தம் (போர்க்குணம்) மிக விரைவிலேயே உறிஞ்சியெடுக்கப்பட்டது. அதற்குப் பதிலாக அசுத்த இரத்தம் (அதிகார முதலாளித்துவ குணாம்சம்) தாராளமாக ஏற்றப்பட்டது.

கட்சியும் நீர்த்துப்போனது, தொழிற்சங்கமும் நீர்த்துப்போனது. தனியார் தொழில் துறைகளில் தொழிலாளர்களின் நிலை சற்று மாறுபட்டதாகவே இருந்தது. ஆனால் போர்க்குணத்தை இழந்த கட்சியால் இத் தொழிலாளர்களை அணிதிரட்ட முடியவில்லை. மலையகத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்ட காரணத்தை ஏற்கனவே பார்த்தோம். இடதுசாரிக் கட்சிகளின் ஆரம்பகாலந்தொட்டே அவர்களிடம் இருந்த தொழிற்சங்கவாதக் கண்ணோட்டமே முதல்தலைமுறை இடதுசாரிகளின் துரித வீழ்ச்சிக்கான காரணமாகும்.

இவைதான் முதல் தலைமுறை இடதுசாரிகளின் கொள்கைகளாகும். இக் கொள்கைகள் MR உடன் நட்பை வளர்க்க உதவுமே தவிர பகைமையை உருவாக்காது. ஆகவே இவர்களைக் கண்டு அஞ்சவேண்டிய அவசியம் மஹிந்தவுக்கு இல்லை.

### 3.2.9.4.ஆ) **இரண்டாவது தலைமுறை இடதுசாரிகள்**

ஆ.1) மாஓயிஸ வாரிசுகள்
- ஆ.1.1) தாய்க்கட்சி
- ஆ.1.2)) JVP
- ஆ.1.3) கீழைக்காற்று
- ஆ.1.4) புதிய ஜனநாயகக்கட்சி

## ஆ.1.1) **தாய்க்கட்சி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மா ஓ)**

“உலகப் பாட்டாளிவர்க்க சோஷலிஸப் புரட்சியின் சித்தாந்தத்தினதும், நடைமுறையினதும் உச்சமட்ட அறிவுபூர்வத் தொகுப்பைத் தனது பொதுவான மார்க்கமாகக் கொண்டதுதான் அனைத்துலகக் கம்யூனிஸ இயக்கமாகும். எமது சகாப்தத்தில் இத் தொகுப்பு மார்க்ஸியம்-லெனினியிம்-மாஓயியமாகிறது. இதனால், ஒரு கம்யூனிஸ்ட் புரட்சியாளரின் வாழ்க்கையை, அதிலும் குறிப்பாக, கம்யூனிஸ்ட் தலைவரின் வாழ்க்கையை மதிப்பீடு செய்வதற்கான அளவுகோல் அவர் மார்க்ஸியம்-லெனினியம்-மாஓயியம் என்ற அறிவியலைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பதில் வகித்த பங்களிப்புகள் என்ன என்பதேயாகும். இந்த அடிப்படையில் நோக்கும்போது உலகப் பாட்டாளி வர்க்க சோஷலிஸப் புரட்சியை பாதுகாப்பதிலும் அதை முன்னெடுத்துச் செல்வதிலும் தோழர் சண் மிகத் தீர்மானகரமான பங்களிப்புகளை வழங்கியுள்ளார். அதிஉயர் அடிப்படை மாற்றத் தன்மையும் அனைத்தும் தழுவிய தன்மையும் கொண்ட, அனைத்து மனித வளங்களையும் பிரயோகிக்கின்ற, கம்யூனிஸ்ட் புரட்சியை நடத்துவதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணிக்க முன்வருகின்றவர்களும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதொரு தீர்மானகரமான இறுதி வெற்றியை ஈட்ட விரும்புவோரும், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட அடிமைத்தனத்தை முழுமையாகவே இல்லாதொழிக்க விரும்புவோரும், சர்வ வியாபக மானுட மேம்பாடு பூத்துக் குலுங்கும் ஒரு புதிய உலகைக் காண விரும்புவோரும், எமது நாட்டின் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தையும், மதிப்புக்குரிய தலைவரும், அன்புக்குரிய ஆசானுமாகிய தோழர் சண்ணிற்கு வீர வணக்கம் செலுத்துவது அவசியமானதாகும்.....” (Let Thousand flower….)

புதிய தலைமுறையினர் என்பது யாரையென்பதையும். அத் தலைமுறையினரின் தலைவர் யார் என்பதையும் புரிந்து கொள்ள இக் கூற்று போதுமானதாக இருக்கும். Revolutionary Internationalist Movement (RIM) ‘புரட்சிகர அனைத்துலக இயக்கத்தின்’ அமைப்பாளர்களில் நா.சண்ணும் ஒருவராகும். ‘ஆயிரம் பூக்கள் மலரட்டும்’ அமைப்பினரும் இதில் உறுப்புரிமை வகிக்கிறார்கள். இந்திய மற்றும் நேபாள சமூக உருவாக்கத்தில் RIMஇனர் பிரிக்கவொண்ணா அங்கமாக ஆகியுள்ளார்கள். இந்தியாவில் ஒரு விடுதலைப் பிரதேசத்தை அமைக்கும் நிலைக்கு இவர்கள் வளர்ந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

மாஓயிஸ்டுகள் தமக்கென வகுத்துள்ள பிரதான திட்டம் பிஹார், ஜார்கண்ட், தந்தகறனியா (Chttigar) ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியதாக ஒரு விடுதலைப் பிராந்தியம் (Zone) அமைத்தல் என்பதாகும். இந்த நோக்கத்திற்காகத்தான் கட்சியின் தாக்குதல் படையான ‘மக்கள் விடுதலை கொரில்லா இராணுவம்’ (PLGA) அமைக்கப்படுகிறது.

ஆந்திரா-ஒரிஸ்ஸா எல்லையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது, ஆந்திரா-ஒரிஸ்ஸா எல்லையின் மாநிலக் கமிட்டியின் உறுப்பினர் பிரசாத் இத் தகவலைத் தெரிவித்தார்........ 2011ம் ஆண்டு டிசம்பர் 2-ல் இருந்து 2012-ம் ஆண்டு ஜனவரி 2 வரையான காலத்தில் PLGAயின் 10வது ஆண்டு நிறைவு விழா கொண்டாட உள்ளதாகவும் அறிவித்தார். இதற்கான தயாரிப்புக்காக வைக்கப்பட்ட உள்ளூர்வாசிகளுக்கான கூட்டம் ஒன்றில் உள்ளூர்வாசிகளான கிறிஜன்ஸ் இனத்தவர்கள் (Girijans) வனத்துறையினருக்குச் சொந்தமான காப்பித்தோட்டங்களை பொறுப்பேற்பதென உறுதியெடுத்துக் கொண்டார்கள்.

PLGA மக்கள் விடுதலை இராணுவமாக மாற்றமுறும்போது விடுதலைப் பிரதேசமொன்று அவசியமாகின்றது. இந்தக் குறிக்கோளை அடைவதற்காக PLGA அமைப்புகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. இதற்காக அவர்கள் 'நடமாடும்' - Mobile - யுத்தத்திலும் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

"விடுதலைப் பிராந்திய அமைப்பும் அந்த நோக்கத்திற்காக PLGA ஐ தரமுயர்த்தும் நடவடிக்கைகளும் அதன் ஆரம்பகட்டத்துள் நுழைந்துவிட்டன. கிராம மட்டக் குழுக்களை அமைத்ததும், அவற்றை மண்டல் (தாலுக்) மற்றும் மாவட்ட மட்டத்திற்கு வளர்த்தெடுத்ததுமே இக் குறிக்கோளை அடைவதற்கான ஆரம்ப முயற்சிகளாக இருந்தன. தந்தகறனியாவில் (ஜனறன சார்க்கார்கள்) (புரட்சிகர மக்கள் கவுன்சில்கள்) (Revolutuionary Peoples Councils) ஏற்கனவே அமைக்கப்பட்டு விட்டன," எனவும் கூறினார்.

கம்பனிகள் அமைக்கும் மட்டத்திற்கு வளர்ந்திருக்கும் PLGA தற்போது பட்டாலியன் (Battalion) அமைப்பதற்காகத் திட்டமிட்டுள்ளது.

"தந்தகறனியாவில் நாம் இந்த நிலையை ஏற்கனவே அடைந்துவிட்டோம். பிற பகுதிகளில் இந்த நிலையை அடைவதற்கான காலப் பொருத்தம் இன்னமும் ஏற்படவில்லை. ஆனால் நிலைமைகள் எமக்குப் பொருந்தக்கூடியதாக அமையும் போது பிற பகுதிகளிலும், இந் நிலைமை ஏற்படும். அதாவது மக்கள் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையே எமக்குப் பொருந்தக்கூடிய அந்த நிலையாகும்." (விடுதலைப் பிராந்தியங்கள் அமைக்கும் திட்டத்தில் மாஓயிஸ்டுகள். The Hindu )

அதேபோல், நேபாளத்தில் புரட்சியை அதன் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நிலைக்கு இவர்கள் வளர்ந்துள்ளதாகவும் கருதப்படுகிறது.

நேபாளத்தில் நடந்த முதலாவது புரட்சி நிலப்பிரபுத்துவ அரசியல் மேலாண்மைக்கு எதிரானது. அடுத்ததாக எதிர்பார்க்கப்படுவது தரகு முதலாளித்துவத்திற்கு எதிரானது. இப் புரட்சி தென் கிழக்காசிய அரசுகளின் ஐக்கிய இராச்சியம் (United States of South Asia-USSA) என்றோர்

வேலைத்திட்டத்தையும் முன்வைத்துள்ளது. இந்திய மத்திய அரசு இவர்களையும் பயங்கரவாதிகளின் பட்டியலில் சேர்ப்பதுபற்றி ஆலோசித்து வருகிறது. 2008 பிற்பாதியிலிருந்து 2009 முற்பாதிவரை இலங்கையில் நடந்த இனப் பேரழிவு நேபாளத்திற்கானதோர் ஒத்திகை என்றோர் கருத்தும் சில வட்டாரங்களில் நிலவுகிறது.

நா.சண்முகதாசனை அக்கட்சியினர் மதிப்பதற்கான காரணம் புரிந்துகொள்ளக்கூடியதே.

ஆனால் இங்கு ஒரு நெருடல் ஏற்படுகிறது. இக் கூற்று ஒரு புதிய விவாதத்தை ஏற்படுத்துகிறது. எமது நாட்டின் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தலைவர் என நா.சண்ணிற்கு அடைமொழி வழங்கியதேன்? சுமார் முப்பதுவருடகால வரலாறுடைய கம்யூனிஸ இயக்கத்தை அப்படியே தூக்கி எறிவதா? கடந்தகாலத் தவறுகளுக்குக் காரணமான சிந்தனைப் போக்குகளில் இருந்து முழுமையாக விடுபடவேண்டியது அவசியம். இதில் சமரசம் இருக்க முடியாது. ஆனால் 1960களின் முற்பகுதிக்கு முன்னர் இடதுசாரி இயக்கங்களின் பங்களிப்புகள் முழுமையாகவே துரோகமென்ற முடிவுக்கு வருவதா? JVP கூறியதுபோல் அவர்கள் எல்லோரும் துரோகிகளாகி விட்டார்களா? இதைத்தானே புலிகளும் செய்தார்கள்? ஆக்கபூர்வமான தற்திறனாய்வுகளின் அடிப்படையிலான நிராகரிப்புகள் வரவேற்பைப் பெறும். ஆனால் பிள்ளையைக் குளிப்பாட்டிய அழுக்குத் தண்ணீருடன் சேர்த்து பிள்ளையையும் வீசும் தவறு வரவேற்க்கப்படமாட்டாது. ( நா.சண் அடிக்கடி கூறும் வாக்கியம்.)

ஆக்கபூர்வமான திறனாய்வுகள் சில இயக்கங்களை அல்லது தனிநபர்களை முழுமையாகவே நிராகரிக்கும் நிலைக்கு இட்டுச்செல்வது இயல்பானதுதான். திறனாய்வுகள் முற்சார்புகள் எதுவுமேயின்றி செய்யப்படவேண்டியதொன்றா னாலும் நிராகரிப்புகளும், ஏற்றுக்கொள்ளல்களும் வர்க்க மற்றும் தேசியக் கண்ணோட்டங்களில் இருந்தே நடைபெறுகின்றன. ஏ.இ.குணசிங்ஹ, எஸ். ஜே.வி. செல்வநாயகம், தொண்டமான், பண்டாரநாயக்க போன்ற முன்னாள் தலைவர்களையும், அவர்களால் நடத்தப்பட்ட இயக்கங்களையும் முற்றாகவே நிராகரிக்க முடியாமல் இருக்கும்போது, ‘சூரிய மல்’ இயக்கத்தையும், 50களின் ஹர்த்தாலையும், அணிசேரா இயக்கத்தையும், தாராளவாதப் பொருளாதார முறைமைகளுக்கு எதிரான போராட்டத்தையும், அதற்குத் தலைமை தாங்கிய இயக்கத்தையும் முழுமையாகவே நிராகரித்துவிட முடியுமா? இவ்வித நிராகரிப்புகள் உண்மையான நிராகரிப்புகளாக இருக்க முடியாது. இவை குழுவாத மேலாண்மை வகைப்பட்ட தூற்றுதல்களேயாகும். புலியிஸமும் இதே குணாம்சத்தையே கொண்டிருந்தது.

இருந்தும் இவ் அமைப்பினர் தமது இருபத்திநாலு வருடகால (1960 களின் முற்பகுதியில் இருந்து 1991வரை) வரலாற்றை ஆராயும் வெளிப்படைத் தன்மையில் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளார்கள். அவர்களின் தற்திறனாய்வு இவ்விதம் பகர்கிறது.

"........எவ்விதமிருந்தாலும், தோழர் சண் தனது தற்-திறனாய்வில் கூறியதைப்போல, திரிபுவாதத்தில் இருந்து முறித்துக் கொள்வதில் வெளிப்படுத்திய உறுதியின்மையும், கூட்டுத்தலைமை, அமைப்பு வடிவம், நடைமுறை ஆகியவற்றில் ஒரு புரட்சிகர மார்க்கத்தை, வகுத்துக் கொள்ளத் தவறியதும்தான் கட்சியின் உள் நெருக்கடிகளுக்கும், சீரழிவுகளுக்குமான காரணமாகும். கட்சி பொருளாதாரவாதத்தில் மூழ்கியிருந்தது. கட்சி மக்கள் திரளிடமிருந்து அந்நியமானது. புரட்சிகர செயல் முறையில் இருந்தும், யதார்த்தத்தில் இருந்தும் அந்நியமானது. அது செயலிழந்து போகக்கூடிய முறையில் ஓரங்கட்டப்பட்டது. ஜனநாயக-மத்தியத்துவம் இருந்த இடத்தில், அதிகாரத்துவ மத்தியத்துவம் கோலோட்சியது. அனைத்துலக சித்தாந்த வர்க்கப் போராட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி-மாவோயிஸ்ட் (CCP-M) முன்னணிப் படையாக திகழ்ந்தாலும், உள்நாட்டில் அடிப்படையில் அது ஒரு வெளிப்படையான, சட்டரீதியான தொழிற்சங்க மையமாகவே செயற்பட்டது. நீண்டகால மக்கள் யுத்தப் பாதையின் ஊடாக புதிய ஜனநாயகப் புரட்சியைத் தொடங்கிவைப்பதற்கான மார்க்கமோ, திட்டமோ, வேலைத்திட்டமோ, மூலோபாயமோ எதுவுமே இருக்கவில்லை. தனது விருப்பத்திற்கு மாறாக கட்சி திரிபுவாதக் கட்சியாக மாறியிருந்தது." (Let Thousand flower….)

கட்சியின் வரலாற்றுத் தொடர்ச்சியில் இருந்து தம்மைத் துண்டாடிக் கொண்டு தம்மைப் புதிதாக முளைத்தவர்கள் போல் அல்லது அக்கினிக் குண்டத்தில் மூழ்கியெழுந்து பாவவிமோசனம் பெற்றவர்கள் போல் காட்டிக் கொண்டு, தவறுக்கான காரணத்தை தமது முன்னைய கட்சியின் மீது சுமத்திவிட்டு புதுப்பிறப்பு எடுத்ததுபோல் பாவனை செய்யாமல், தமது சாம்பலிருந்து மீண்டெழும் பீனிக்ஸ் பறவைகள்போல், எமது தவறுகளில் இருந்து நாம் மீண்டு வருகிறோம் என்ற முறையில் அமைந்த இந்த திறனாய்வு வரவேற்கத்தக்கது. தவறை யார் மீதோ போட்டுவிட்டு கட்சியில் அதிகாரத்துவ மத்தியத்துவமே கோலோட்சியது என்று கூறுவதன் மூலம் கட்சியின் மத்திய கமிட்டியும், அரசியல் கமிட்டியும்தான் இத் தவறுகளை வழிநடத்தின என்பதுவும் உட்கட்சிப் போராட்டங்கள் நசுக்கப்பட்டிருந்தன என்பதுவும் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இவை பாராட்டப்படவேண்டும், ஆனால் இங்குமொரு மனநெருடலுள்ளது. பிறருக்கு சரியானதும், தமக்குத் தவறானதும் சமகாலத்தில் ஒரே

மூளையில் இருக்க முடியுமா? அப்படி இருந்ததென வைத்துக்கொள்வோம். அந்த மூளையின் சொந்தக்காரரை ஒரு மகத்தான ஆசானாகக் கருத முடியுமா? தனக்கு திரிபுவாதத்தையும், பிறருக்கு மாக்சிஸத்தையும் பிரயோகிப்பவர்களைத்தானே தாராளவாதிகளென மாஓ கூறியுள்ளார்? இது பற்றி விவாதிப்பது நல்லது.

இத் தவறுகளின் விளைவால் கட்சிக்குள் இருந்து காலத்துக்குக் காலம் பலர் வெளியேறிக் கொண்டேயிருந்தார்கள். பலர் சிறு சிறு கூட்டங்களாக விலகி ஒதுங்கிக் கொண்டார்கள். சிலர் மீண்டும் முதலாவது தலைமுறையின் வழித்தோன்றல்களாகச் செயற்பட்டார்கள். இவ்விதம் வெளியேறியவர்களில் 1972 க்கு முன்னர், ஆயுதப்போராட்டத்தை மையமாகக் கொண்டு வெளியேறியவர்கள் இரு அணிகளேயாகும். ஒன்று விஜயவீராவின் தலைமையிலான JVP மற்றையது காமினி யாப்பாவின் தலைமையிலான ‘கீழைக்காற்று இயக்கம்’. JVP பற்றி ஏற்கனவே பார்த்து விட்டோம். கீழைக்காற்று இயக்கம் பற்றி இனிவரும் பகுதிகளில் பார்ப்போம்.

ஜனநாயக மத்தியத்துவத்திற்குப் பதிலாக, அதிகாரத்துவ மத்தியத்துவமே கட்சியின் உட்சுபாவமாக இருந்ததென்ற தற்திறனாய்வு மிக முக்கியத்துவம் மிக்கதோர் கூற்றாகும். மிக அவதானமாக ஆய்வு செய்யப்படவேண்டிய ஒரு செயல்பாடாகும். தமிழ்த் தேசிய அமைப்புகளுக்கும், JVP க்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் என்ன வித்தியாசம்? அதிகார மத்தியத்துவம் எவ்விதம் தோன்றுகிறது என்பது ஆராயப்பட வேண்டியதாகும். ஆடு பயிரை மேய்ந்தால் அடித்துத் துரத்தலாம், வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது?

ஆரம்பத்தில் அதிகாரத்துவ மத்தியத்துவமானது கட்சிக்குள்/அமைப்புக்குள் மாத்திரமான ஒரு மேலாதிக்கப் போக்காகவே இருக்கிறது. இந்தக் கட்சி/ அமைப்பு ஒரு சமூக சக்தியாக மாறத் தொடங்கிய பின்னர், அக் கட்சி/ அமைப்பு தனது மக்களின் அதிகாரத்துவ மத்தியத்துவ மையமாக மாறியது. சுதந்திரத்துக்காக போராட அணிதிரண்ட மக்கள் மீதும், பிற போராட்ட அமைப்புகள் மீதும் அதிகாரத்துவ எஜமானத் தனத்தை பிரயோகிக்கும் ஒன்றாக மாறுகிறது. பிரபாகரனும், ரோகண விஜேவீரவும் மட்டுமல்ல, நா.சண்முகதாசனும் அந்நிலைக்குச் சென்றுள்ளார். இவர்கள் மட்டுமா? முதல் தலைமுறை இடதுசாரிகளும் தொழிற்சங்க அதிகாரத்துவ எஜமானர்களாக மாறினார்கள். இதுவும் அவர்களின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது. தொண்டமானுக்கு நடந்ததுவும் இதுதான்.

உலகையே குலுக்கிய பெரும் போராட்டங்கள் நடத்தி, வரலாற்றுக்குச் சாதகமான பல சாதனைகளை நடத்திய பின்னர் கொடிய சர்வாதிகார

மையங்களாக மாறிய இரு மிகப் பெரும் கட்சிகளையும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். அவையாவன, குருஷேவின் தலைமையில் மாற்றத்துக்கு உள்ளான சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியும், டென்-சியா-பெங் தலைமையில் மாற்றத்துக்கு உள்ளான சீன கம்யூனிஸ்ட் கட்சியுமாகும். கட்சியோ குழுவோ இவ்வித மாற்றங்களுக்கு உள்ளாகவே செய்கின்றன. இந்த மாற்றம் மாறுதலே இல்லாத ஒரு மாறாவிதியா? என்ற கேள்வி எழுகிறது. இக் கேள்வி பல அடிப்படைக் கேள்விகளுக்கு நம்மை இட்டுச் செல்கின்றது. அங்கெல்லாம் போகவேண்டாம். கட்சியின் தலைமைக்கும், கட்சியின் கீழ் அணிகளுக்கும், கட்சிக்கும் அதன் வெவ்வேறு அங்கங்களுக்கும், கட்சிக்கும், மக்களுக்கும், இடையே இயல்பாகவே அமைந்துள்ள இடைவெளி படிப்படியாகக் குறைக்கப்படவேண்டும். இது ஒரு எதிர்நீச்சல். துணிவுடனும், விடாப்பிடியாகவும், தொய்வின்றியும் இந்த எதிர்நீச்சலை நடத்தத் தவறும் கட்சிகளும், அமைப்புகளும் அதிகாரத்துவ மத்தியத்துவ அமைப்பாகி, பின்னர் சர்வாதிகார அமைப்பாக மாறியே தீரும். எந்தவித மக்கள் இயக்கத்தை நடத்தும் கட்சிகளுக்கும்/அமைப்புகளுக்கும் இது பொருந்தும்.

இடைவெளியைக் குறைப்பதற்கு பல சமூகப் பொறிமுறைகள் உள்ளன. ஒளிவு மறைவற்ற திறனாய்வும், தற்-திறனாய்வும் அதில் ஒன்று. CCP(M) அதைக் கையில் எடுத்துக் கொண்டுள்ளமை நம்பிக்கை ஊட்டும் நிகழ்வாக உள்ளது. இக் கட்சியின் தலைவர் நா.சண் இலங்கையில் மேற்கொண்ட இறுதி அரசியல் நடவடிக்கை, 1991-ல் அவரின் தலைமையில் கூட்டப்பட்ட கட்சியின் விசேட மாநாடேயாகும். இது முடிந்ததும் தனது நோய் காரணமாக இவர் வெளிநாடு செல்கிறார். இவரின் இவ் இறுதி மாநாடு பற்றிய CCP(M) இன் கூற்றை நோக்குவோம்

மேற்படி மாநாட்டில், கட்சி தனது பின்வரும் சித்தாந்தக் கோட்பாடுகளிலும், அரசியல் கோட்பாடுகளிலும், அமைப்புக் கட்டுமான கோட்பாடுகளிலும், அனைத்தும் தழுவிய ஒரு மாற்றத்தையும், திருத்தியமைப்பையும் முன்னெடுத்துச் செல்ல கட்சியை வழிநடத்தினார்.

அவையாவன:

மா-லெ-மாஓயிஸம் என்ற அறிவியலை முன்னிறுத்தி அதைப் பிரயோகிப்பது.

ஆயுதப் போராட்டத்தை பிரதான போராட்ட வடிவமாக ஏற்றுக்கொள்வது.

மக்கள் இராணுவத்தையே மக்கள் திரள் அமைப்புகளின் பிரதான வடிவமாக ஏற்றுக்கொள்வது.

CCP(M) ஐ இரகசியத் தலைமறைவான கட்சியாகவும், புரட்சியை முழுநேரத் தொழிலாகக் கொண்டதொரு கட்சியாகவும் புனரமைப்பது;

நீண்டகால யுத்த வடிவில் புதிய ஜனநாயகப் புரட்சியைத் தொடக்கி வைப்பதை நோக்கமாகக் கொண்டு கட்சி கிராமப்புறங்களிலான வேலைக்கு அழுத்தங்கொடுப்பது; ஆகியனவேயாகும்.

புதிய தலைமுறையினருக்கும், முந்தைய தலைமுறையினருக்கும் இடையேயான வேறுபாடு மாஓயிஸம் சம்பந்தப்பட்டது மாத்திரமல்ல; இலங்கையின் தேசிய இனச்சிக்கல் சம்பந்தப்பட்டதுமாகும். புதிய தலைமுறையினர் தமது ஆரம்ப நாட்களில் இந்த சிக்கலைக் கண்டுகொள்ளவில்லை. முதல் தலைமுறையினர் தமது ஆரம்ப நாட்களில் இச்சிக்கலுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைக் கூட கொடுக்கவில்லை. தெற்காசியப் பிரதேசத்துக்கே உரிய தனித்துவங்களான சாதியம்-மத-மாறாமரபியல்வாதம், தேசியம், -இனக்குழுமத் தேசியவாதம் ஆகியவற்றின் தொகுப்பை (Complex) பற்றிய சித்தாந்தப்படுத்தல் (Theorization) மாஓயிஸத்தில் இல்லாததும் இதற்கானதோர் காரணமாக இருக்கலாம். இவைபற்றி ஆராயவேண்டும். மாஓயிஸத்திற்கு ஒரு தெற்காசியப் பிராந்திய வாரிசு தேவைப்படுகிறதா? ஆனால் 1977-ன் பின்னர்தான் இலங்கையில் இவ்விதத் தொகுப்பைப்பற்றிய சிந்தாந்தப்படுத்தல் ஆரம்பமாகிறது, அதுவும் மிக மந்த கதியில் இன்னமும் தொடர்கிறது. இடது அணிக்குள் இதன் தொடக்கிவைப்பாளர் லயனல் போபகேயா? அல்லது கார்த்திகேயன் மாஸ்டரா என்பது ஆராயப்படவேண்டும். லயனல் போபகே பற்றி ஏற்கனவே பார்த்துவிட்டோம். கார்த்திகேயன் மாஸ்டரின் பங்களிப்பு பற்றிய தகவல்கள் அடுத்த பகுதியில் வருகின்றன.

CCP(MAO)இச் சிக்கல் பற்றி எடுத்த முடிவை அவதானிப்போம். மேற்சொன்ன நூலில் இருந்து சில மேற்கோள்கள் தரப்படுகின்றன.

### ஆ.1.2) **ஆயிரம் பூக்களும் தேசிய இனச் சிக்கலும்**

“அதிகாரப் பரவலாக்கம் ஒரு தீர்வாக இருக்கும் என நாம் கருதவில்லை. ஒரு ஒடுக்கப்பட்ட தேசத்தின் சுய-நிர்ணய உரிமையை மதிப்பதுதான் எம்முன்னால் உள்ள பிரச்சனையாகும். இத் தேசிய மேலாதிக்கத்திற்குக் காரணமான அரசைத் தூக்கி எறிந்து சுக்குநூறாக்குவதன் மூலம் மாத்திரமே அது சாத்தியமாகும். இருந்தும் ஒரு தேசமாக இருப்பதற்கான உரிமையை முற்றாக அடக்குவதையும் சிற்சில அரைகுறைத் தீர்வுகளைக்கூட

மறுப்பதையும் சவாலுக்குள்ளாக்காமல் விடமுடியாது.''

'அரசைத் தூக்கி எறிந்து சுக்குநூறாக்குவதன் மூலம்' எனக் கூறுவதனூடாக தேசிய இனப்பிரச்சனைக்குரிய தீர்வு அரசினதோ அரசாங்கத்தினதோ வடிவத்தையோ, சேர்வையையோ மாற்றியமைப்பதில் தங்கியில்லை என்பதையும், அது அரசைத் தூக்கியெறிந்து, புதிய அரசை நிறுவுவதிலேயே தங்கியுள்ளதென்பதையும் உறுதியாகக் கூறுகிறார்கள். இதனால் தேசிய இனப்பிரச்சனைபற்றி இவர்கள் என்ன கூற வருகிறார்களென்பது கூர்ந்து ஆவலுடன் கவனிக்கப்படவேண்டியதொரு விடயமாகின்றது. தொடர்வோம்

.........இலங்கையின் இன்றைய நிலையில், பெருமளவிற்கு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வசிக்கும் தமிழ்த்தேசத்தின்மீது பிரயோகிக்கப்பட்டு வரும் கீழ்நிலைப்படுத்தலும், வன்முறை ஒடுக்குமுறையும் LTTE யால் தலைமை தாங்கப்படும் நீடித்த தேசிய விடுதலை யுத்தத்திற்கு வழிவகுத்துள்ளது. தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தையின் நோக்கம் அரசியல்ரீதியாகவும் இராஜதந்திரரீதியாகவும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முற்றுகையிட்டு, நிராயுதபாணியாக்கி, முழங்காலில் நிற்கவைத்து நண்பனாக்கிக் கொள்ளலாகும். இதன் முடிவு, LTTE ஐ இளநிலைப் பங்காளியாகக் கொண்ட நவ-காலனியல் அடிமைத்தனக் கட்டுமானத்தைத் தீவின்மீது திணிப்பதாகவே அமையும். இது PLO வையும், யாசீர் அரபாத்தையும் தமது வழிக்குக் கொண்டு வந்தது போலாகும். இந்தப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் ஏகாதிபத்தியக் கட்டுமானம் முழுமையும் ஒன்றிணைந்து முழுமனதுடன் செயற்பட்டன. ........ இவ் விவகாரத்தில் நாம், எமது பங்கிற்கு, மாறிலிக் காலகட்ட சுபாவமுடைய புரட்சிகர ஜனநாயக வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசியத்தின் தேசிய சுய-நிர்ணய உரிமைக்காக உறுதியாக குரல் கொடுத்து வந்தோம். இம் மார்க்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் நாம் பல பாரதூரமான திசைமாறல் தவறுகளை இழைத்திருந்தோம். புரட்சிகரத் தன்மையற்ற, பூர்ஷ்வா ஜனநாயக அடிப்படையில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்திற்கு வால் பிடிக்கும் போக்கைக் கொண்டிருந்தோம். இத் தவறான போக்கு, நீடித்த மக்கள் யுத்தத்தை நடத்துவதற்கான ஒரு கட்சியைக் கட்டுவதற்கும், அதை வளரத்தெடுப்பதற்கும் எதிரானதாக அமைந்தது. நாம் எமது திசை விலகல்களை மீள நோக்கினோம். வர்க்கப் பிர்ச்சனைகளும் தேசியப் பிரச்சனைகளும் ஒன்றுக்குள் ஒன்று ஊடுருவியுள்ள தன்மையினையும், ஒன்றை ஒன்று ஊக்குவிக்கும் தன்மையினையும் பற்றிய ஸ்தூலமான பகுப்பாய்வு ஒன்று மிகமிக அவசியமென்பதை இவ் அனுபவம் எமக்குக் கற்றுத் தந்தது.

சில ஸ்தூலமான சூழல்களில், வர்க்கப் பிரச்சனை அடிப்படையாக

இருக்கக்கூடியதாகவே, தேசியப் பிரச்சனையும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் தேசிய சுய-நிர்ணய உரிமைக்கான போராட்டங்களும், அரசியல் அரங்கினிலான வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பிரதான காரணியாக அமைவதற்கான சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு.......

இலங்கையின் ஜனநாயகப் புரட்சியின் தலைமைப் பொறுப்பு இவர்களிடந்தான் செல்லுமோ என MR கருத இடமுண்டு.

இந்நூலில், 'வர்க்க நலன் தேசிய நலன்' என்ற பகுதியை மீழவும் ஒரு தடவை படித்துப் பார்க்கவும். சமாதானமா? யுத்தமா? என்று நிலவிய கருத்துப்பற்றி இவ்விதம் முன்வைக்கிறார்கள்...

"இனவாத பாஸிஸ-இராணுவவாத சக்திகள், அரசியல் தீர்வை எதிர்த்து யுத்தத்தை மீண்டும் நடத்தக் கோருகிறார்கள். பொதுவாகவே மக்கள் திரளினர் ஜனநாயகரீதியான அரசியல் தீர்வுக்கு ஆதரவாகவே உள்ளனர். ஜனநாயகபூர்வமான சமாதானத்திற்கான முழக்கத்தை நாம் முன்வைத்தோம்........ அதே நேரத்தில் சமாதானம் என்ற பெயரில் தமிழ்த் தேசத்தையும், இலங்கை (Lanka) மக்களையும் அடிமைப்படுத்துவதற்காக அமெரிக்கா, இந்தியா, ஏகாதிபத்திய கட்டுமானம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிராக அறைகூவலையும் விடுத்தோம்."

ஒரு பக்கம் சமாதானத்தீர்வுக்கான அறைகூவல். மறுபக்கம் அப்போது நடந்த குறிப்பிட்ட அந்த சமாதானத் தீர்வுக்கான முயற்சிகளை எதிர்க்கக் கோரிய அறைகூவல். முயற்சிகளை எதிர்ப்பதுவும் தீர்வை எதிர்ப்பதுவும் ஒன்றுதானே? இவ் அறைகூவல் சமாதானத்தை முறியடித்து யுத்தத்தை நடத்தவேண்டுமென்று கோருபவர்களுக்குத்தானே உதவும். இது முன்பின் முரணாகத் தெரியவில்லையா? தமிழ் மக்களுக்கு வால் பிடிப்பதுபோல் இது சிங்கள மக்களுக்கும் வால் பிடிப்பதாகத் தோன்றவில்லையா? தோன்றக் கூடுமென்ற அச்சத்தைப் போக்க, ஏன் அவ்விதம் செய்தோம் என விளக்குகிறார்கள்.

ஜனநாயகபூர்வமான சமாதானத்தை வென்றெடுப்பதற்கான ஒரே வழி தரகு அதிகாரத்துவ அரசையும் ஏகாதிபத்தியத்தையும் தூக்கியெறியக் கூடிய முறையிலான முழுமைதழுவிய புதிய ஜனநாயக புரட்சிக்கு அறைகூவல் விடுப்பதேயாகும் என்ற அடிப்படையிலேயே நாம் இதைச் செய்தோம்.

இங்கு எமக்கு இரு கேள்விகள் எழுகின்றன. ஒன்று, பொதுவாகவே மக்கள் திரளினர் ஜனநாயகரீதியான அரசியல் தீர்வுக்கு ஆதரவாகவே உள்ளனர். என்ற வாக்கியத்தில் எந்த மக்கள் திரள்? தமிழர்களா?

சிங்களவர்களா? ‘பொதுவாக’ என்பதன் அர்த்தம் என்ன? மக்கள் திரள் என்பது தமிழர்களாயின், அவர்கள் அதற்கு சம்மதம்தான். ஆனால், இவ்வரசின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் சாத்தியமற்றது என்று முதலில் கூறப்பட்டுவிட்டதே? அதிகாரப் பரவலாக்கம் சாத்தியம் இல்லாதவிடத்து சமாதானம் மட்டும் சாத்தியமாகிவிடுமா? இது முன்பின் முரணான கூற்றா? மக்கள் திரள் என்ற பதம் சிங்களவர்கள் என்றால் உண்மை நிலை அதற்கு மாறுபட்டதாகவல்லவா இருந்தது? அக் குறிப்பிட்ட சூழலில் சிங்கள மக்களிடையே இருந்த MR எதிர்ப்பு அணி அனைத்துமே யுத்தத்திற்கு எதிரான அணியல்ல. அது MR ன் ஏகபோக அதிகாரத்துவப் போக்கிற்கும் ஊழலுக்கும் எதிரான அணி. பெரும் பான்மையோர் யுத்தத்திற்கு ஆதரவாகவே இருந்தனர். இவர்கள் யுத்தத்தை எதிர்க்கவில்லை, யுத்தத்தின் ‘விதிமுறை மீறல்களை’யே எதிர்த்தார்கள். யுத்தத்திற்கு ஒரு ‘மனிதநேய முகம்’ வேண்டுமென்றே கோரினார்கள். இது யுத்தம் பற்றிய அவர்களின் தவறான கண்ணோட்டமாக இருக்கலாம் அல்லது மேற்கு முகாமின் கருத்து ஊடுருவலாக இருக்கலாம். சிங்கள மக்களின் பலவீனத்தை ஒத்துக்கொள்வதில் ஒரு தடுமாற்றம் தெரிகிறது.

அடுத்த கேள்வி, வல்லரசுகள் மேற்கொள்ளும் சமாதானத்திற்கான முயற்சியை எதிர்க்கக் கோரும் பகிரங்க அறைகூவலானது தவறான சமூக இயக்கத்துக்குத்தானே துணைபுரியும்? JVP யின் அறைகூவலும் இவ் அறைகூவலும் ஒரு தளத்தில் சந்திக்கிறதல்லவா? குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்ற அரசியல் அறைகூவலையும், அரசியல் முழக்கத்தையும் முன் வைப்பதில் தவறு நடந்துள்ளது.

முன் கூறிய பாரதூரமான திசைமாறல் தவறுகளுக்கு காரணமாக இருந்த அவர்களின் கண்ணோட்டம் எது என்பது அவர்களின் அறிக்கையிலேயே காணப்படுகிறது. இதோ சில பகுதிகள்

..... நாட்டின் ‘இடதுசாரி’ இயக்கம் சிங்கள பௌத்த பேரகங்காரவாத முகாமிடம் தஞ்சமடைந்ததுதான், தமிழ்த் தேசியப் போராட்டம் LTTE போன்ற பூர்ஷ்வாத் தலைமையிடம் போய்ச் சேர்ந்ததற்கான காரணமாகும். இந்த அடிப்படை உண்மையை நாம் இங்கு ஏற்றுக்கொள்ளவேண்டும்....

தமிழ்த் தேசத்தின் சுய-நிர்ணய உரிமையை முன்நிறுத்தும் ஒரு சில கட்சிகளில் ஒன்றான CCP(M) மக்கள் யுத்தப் பாதையை முன்னெடுக்கத் தவறிவிட்டது. இந்தப் போராட்டத்திற்குத் தலைமை கொடுக்கத் தவறிவிட்டது. இதை அவர்கள் (இலங்கைப் புரட்சியாளர்களும், ஜனநாயக விரும்பிகளும்) ஒத்துக்கொண்டு, இந்தச் சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்ட பாட்டாளி வர்க்கம் அல்லாத சக்திகளுக்கு நன்றி சொல்லிக்கொள்ள வேண்டும். ஒரு கோட்பாட்டு மட்டத்தில் அப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கவும்

வேண்டும். இந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவண்ணம், உண்மையான புரட்சியாளர்கள் அனைவரும், தாம் அரசியல் உறுதியும் ஆற்றலும் அற்றிருந்தமைக்காக வெட்கித் தலைகுனிய வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான புரட்சியின் ஒரே பாதையான நீடித்த மக்கள் யுத்தத்தின் ஊடான மக்கள் ஜனநாயகப் புரட்சி மார்க்கத்தில் பயணித்து ஒடுக்கப்பட்ட மக்களின் இவ்விதமான போராட்டங்களுக்கு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை நிறுவ வேண்டும். இந்த நோக்கத்துடன் தமது குறைபாடுகளைத் திருத்திக்கொண்டு இதற்கு அவசியமான கட்டுமான வேலைகளில் முழுமனதுடன் ஈடுபடவேண்டும். (Armed with this attitude,while being ashamed of their own lack of political will and capacity, genuine revolutionaries should exert all conscious efforts to make up for their shortcomings by making active organizational preparations for establishing the leadership of the proletariat in all such struggles of the oppressed people through the path of the people's democratic revolution and protracted peoples war, which is the only path to the genuine liberation of the oppressed..... )

இவர்களின் மேற்சொன்ன கூற்றுகள் மூலம், தமது சொந்தத் தவறுகளை இவ்வளவு வெளிப்படையாகவும், துணிவாகவும் ஒத்துக்கொண்டமையானது, இவர்களின் உயர்ந்த உள்ளத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. அதுவும் திறனாய்வு கூட செய்யத் தயங்கும் இன்றைய தமிழ் அரசியல் சூழலில் இதுவொரு முன்மாதிரியாகும். தவறின் விளைவுகளையும் அதில் தமது பங்களிப்பையும் உணர்வு பூர்வமாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். இது மனப்பாங்கு சம்பந்தப்பட்டது; மார்க்ஸிய வாழ்க்கை முறை சம்பந்தப்பட்டது, இதில் அவர்கள் வெற்றிபெற்றுள்ளார்கள். ஆனால் தவறுக்கான காரணத்தைக் கண்டுகொள்வதில் இவர்களின் தற்-திறனாய்வு வெற்றி பெறவில்லை. இதனால் தீர்வுக்கு வருவதிலான தடுமாற்றம் தொடர்கிறது. எவ்விதம் என்பதை நோக்குவோம்.

என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்ல வரும் கடைசிப்பந்தி மிக நீண்ட தொடர்வாக்கியமாகவும், என்ன சொல்ல வருகிறார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்ல சிரமப்படுவதாகவும் அமைந்துள்ளது. ஆங்கில வசனத்தை மேலே அப்படியே தந்துள்ளோம்.

- நீடித்த யுத்தத்தின் மூலம் நடத்தப்படும் மக்கள் ஜனநாயகப் புரட்சிதான் ஒரே தீர்வு என பல இடங்களில் அதற்கான ஆழமான நியாயங்களுடன் கூறப்படுகிறது.
- தொழிலாளி வர்க்கம் தமிழ்த் தேசிய விடுதலைக்குத் தலைமை தாங்கவேண்டும் என்றும் இடையிடையே கூறப்படுகிறது. இரு கூற்றுக்களும் எந்த அடிப்படையும் இன்றி வெற்றுக் கோஷ ங்களாகவே உள்ளன. இங்குதான் முடிவுக்கு வருவதில் குழப்பம்

காணப்படுகிறது. புலிகள்பற்றி CCP(M) ன் கருத்து என்ன என்பதைப் புரிந்துகொண்டு இவ் விவாதத்திற்குச் செல்வோம்.

எவ்விதமும், ஒரு பூர்ஷ்வா வர்க்க அணியாக இருக்கும் விடுதலைப் புலிகள் தமது பூர்ஷ்வா பார்வைக்கு, மார்க்கத்துக்கு, மூலோபாயத்திற்கு, வேலைத்திட்டத்திற்கு ஏற்பத்தான் தனது போராட்டத்தை நடத்தும்..... இறுதியாக, தனது சொந்த பூர்ஷ்வா அரசை நிறுவுவதற்காக அது தனது தேசத்தை அமைப்பதற்கே முயற்சிக்கும்....

புலிகளின் பரிணாம வளர்ச்சி எங்குபோய் முடிந்திருக்கிறது என்பதை மிகச் சரியாகவும் எந்தத் தடுமாற்றம் இன்றியும் முன்வைக்கிறார்கள். ஆனால் இவ்விதமான புலிகளுடனான உறவை எவ்விதம் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு இவர்கள் தரும் பதிலென்ன?

LTTE யின் சித்தாந்த மார்க்கத்தினதும், அரசியல் மார்க்கத்தினதும் எதிர்மறை பூர்ஷ்வா குணவியல்புகளை வைத்துக் கொண்டு LTTE ஐ ஒரு பிற்போக்கு அணி என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது... ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசியத்தின் சுதந்திரத்துக்கும் விடுதலைக்குமாகப் போராடும் காரணத்தால், சாராம்சத்தில் LTTE வரலாற்றுரீதியான ஒரு முற்போக்கு இயக்கமேயாகும். அது, பூர்ஷ்வா வர்க்க உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தாலும், தமிழ் மக்கள் திரளின் தேசிய ஜனநாயக அபிலாசைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவது, நவ-காலனியல் அரசை எதிர்ப்பது ஆகிய இரண்டிலும் நின்று பிடிக்கும்வரை அது முற்போக்கு அணியாகவே இருக்கும்'...

ஆகவே புரட்சிகர சக்திகள் புலிகளுடன் நட்புறவை வைத்திருக்கவேண்டும் என முடிக்கிறார். 'இறுதியாக, தனது சொந்த பூர்ஷ்வா அரசை நிறுவுவதற்காக அது தனது தேசத்தை அமைப்பதற்கே முயற்சிக்கும்' என்று முதலில் கூறியதையும், அதனுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று பின்னர் கூறியதையும், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மாஓயிஸ்டுகள் தலைமை தாங்கவேண்டும் என்று கூறியதையும், எவ்விதம் இணைப்பது? காலனியல் பூஷ்வாத் தலைமை 'வாருங்கள் தலைமையை ஏற்றுக் கொள்ளுங்கள்' என வரவேற்குமா? எந்தச் சூழலிலும் இது நிச்சயமாக நடக்காது. அங்கு ஒரு கடுமையான வர்க்கப் போராட்டமே நடக்கும். வாருங்கள்! ஒன்றுபட்டுப் போராடுவோம்!! என நேசக்கரம் நீட்டுமா? எவ்வேளையிலும் தானாக நேசக்கரம் நீட்டாது. ஆனால் இவர்கள் ஒரு சமூக சக்தியாக இருந்துகொண்டு நேசக்கரம் நீட்டினால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடும். அதுவும் புலிகள் ஒரு வீழ்ச்சிக் கட்டத்தில் இருக்கும்போது மாத்திரமே சாத்தியமாகும். ஆனால் புலிகளைப் பற்றிய இயங்கியல் ஆய்வு வரவேற்கத்தக்கது. நிரந்தரப் பகைவனாகவும் பார்க்கவில்லை, நிரந்தர நண்பனாகவும் பார்க்கவில்லை.

பல நிபந்தனைகளுடனேயே பார்க்கிறார்கள். ‘இரண்டிலும் நின்று பிடிக்கும் வரை’ என்பது ஒரு முக்கிய நிபந்தனையாகும்.

இன்றைய ஏகாதிபத்தியக் கட்டுமானத்தின் கீழ் இனக்குழும/மதவாத தேசியங்களின் அடிப்படையிலான தேசிய விடுதலை இயக்கங்களால் சுயமாக இயங்க முடியாது என்ற கருத்து பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, பாட்டாளி வர்க்கத் தலைமையில் இல்லாத எந்தத் தேசிய விடுதலைப் போராட்டமாய் இருந்தாலும் அதன் தலைமை தரகு முதலாளித்துவத்தின் கைகளுக்கு போய்ச்சேருவதே இயல்பான பரிணாம வளர்ச்சியாக இருக்கும். இது உலகளாவிய முறையில் பொருந்துமா? இல்லையா? என்பது விவாதத்துக்குரியது, ஆனால் இலங்கைக்கு இது பொருந்தும். இந்நூலின் ‘மேற்குலகத் தமிழ்த் தேசியத்துக்கா’ என்ற பகுதியில் இது விவாதிக்கப்பட்டுள்ளது.

தமிழீழத் தேசிய இயக்கத்துக்கு சோஷலிஸவாதிகளும், ஜனநாயகவாதிகளும் தலைமை தாங்கவேண்டுமென்ற இவர்களின் இலட்சியம் வெற்றுக் கோஷமாக இல்லாது, அது ஒரு நடைமுறை வேலைத்திட்டமாக வேண்டும். அது சாத்தியமற்றதொன்றல்ல. அது முடியுமென்பதையும், அது ஒரு வரலாற்றுக் கட்டாயமென்பதையும் உறுதியாக நம்பவேண்டும். அதற்கானகாலம் கடந்துவிடவுமில்லை. கோஷங்களில் இருந்து விடுபட்டு வேலைத்திட்டத்திற்கு வரவேண்டும். அதை விடுத்து புலிகளுடன் முன்னணி, தலைமையை பங்கிடல் என்ற விதத்தில் நடக்கப் புறப்பட்டால், ‘அப்பே ஆண்டுவ’ அலையின் தலைவர்களாக வருவதற்கு முதல் தலைமுறை இடதுசாரிகள் எடுத்த முயற்சிகளுக்கு என்ன நடந்ததோ அதுவே மீண்டும் நடக்கும். புதிய தலைமுறை இடதுசாரிகளின் சிதறலால் தனிநபர்களாக ஆனவர்கள் பலர், புலிகளுடன் முன்னணி அல்லது புலிகளூடாக ஜனநாயக சீர்திருத்தங்கள் ஏற்படுத்துதல் போன்ற முயற்சிகளில் ஈடுபட்டு தோல்வி கண்டுள்ளார்கள். இத் தோல்வி பலரின் அரசியல் வாழ்க்கையை முடங்கச் செய்துள்ளது.

இடதுசாரிகளின் தலைமையிலான தமிழ்த் தேசிய இயக்கத்துக்கும், மக்கள் ஜனநாயகப் புரட்சிக்கும் இடையேயான உறவுகள் எவ்விதமானதாக இருக்கும்? இலங்கையின் ஸ்தூலமான நிலையையும், குறிப்பிட்ட காலகட்டத்தையும் மனதில் கொண்டு இதற்கான பதில்கள் ஆராயப்படவேண்டும். இதில் வெற்றி பெறும்போதுதான் இலங்கை மக்கள் வெற்றி பெறுவார்கள். கூடவே இலங்கையில் மார்க்ஸிஸமும் வெற்றி பெறும்.

இலங்கை முழுமையிலும் இல்லாவிட்டாலும், ஆகக் குறைந்தது வட கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில், புதிய ஜனநாயகப்

புரட்சிப்புயல் இலங்கையின் அரசியல் மையமாக வரும்வரை இலங்கை இடதுசாரிகளிடையே இந்தத் தடுமாற்றம் இருக்கவே செய்யும்.

இரண்டாவது தலைமுறையினரின் தொடர்ச்சியான இயக்கமாகத் தம்மைப் துணிச்சலுடன் பிரகடனம் செய்துள்ளதும் (சுய-விமர்சனப் பண்பு இல்லாதவர்களுக்கு இந்தத் துணிச்சல் வராது.) RIM உடன் அமைப்பு ரீதியாகத் தொடர்புகொண்டுள்ளதும், JVP ஐ நேருக்குநேர் எதிர்கொண்டுள்ளதுமான CCP(M) மீது முற்போக்குவாதிகள் நம்பிக்கை கொள்வதில் அர்த்தம் உண்டு. சிங்கள-பௌத்த மாறாமரபியல்வாதத்தின் இளநிலை பங்காளியான JVP யின் ஆலோசனையின் பேரிலும், இந்திய மத்தியரசின் ஆலோசனையின் பேரிலும் MR, CCP(M) ஐக் கண்டு அச்சம் கொள்வதில் ஆச்சரியமில்லை.

### ஆ.2) **JVP**

ஏற்றுக்கொள்வதற்கு கடினமானதாக இருந்தாலும், இரண்டாவது தலைமுறை இடதுசாரிகளின் வழித்தோன்றல்களில் JVP யும் ஒன்றாகும். இலங்கையின் சமூகப் புரட்சிக்கான சித்தாந்த அல்லது உலக கண்ணோட்டக் களத்தில் எதிரும் புதிருமாக இருக்கும் இரு சிந்தனைப் போக்குகளில் ஒன்று சிங்கள பௌத்த மாறாமரபியல்வாதம். மற்றையது மார்க்ஸிஸம். சிங்கள பௌத்த மாறாமரபியல்வாதத்துடன் தற்போது மாக்ஸியர்களுக்கு எதிரான சித்தாந்தப் போராட்ட அணியில் இனக்குழுமவாத தமிழீழத் தேசியமும் சேர்ந்து கொண்டுள்ளது. மார்க்ஸிய முகாம் இவ் இரண்டுக்கும் எதிரான சித்தாந்தப் போராட்டத்தை இன்னமும் ஆரம்பிக்கவில்லை. அரசியல் போராட்டமே நடத்தப்பட்டு வருகின்றது. நடத்துபவர்களின் அரசியல் சக்தி பலவீனமானதாக இருப்பதால் இவ் அரசியல் போராட்டம் வினைத்திறன் குறைந்ததாகவே உள்ளது. ஆனால் எதிர் முகாம்கள் கண்ணுறங்காமல் மாக்ஸிஸத்திற்கு எதிரான போராட்டத்தை பெருமளவிலும், குறுமளவிலும் (Macro and Micro Leval) நடத்திக்கொண்டே இருக்கின்றன. இப்போராட்டத்தில் இலங்கையின் மேட்டுக்குடி, தமிழீழ மேட்டுக்குடியுடன் சேர்ந்து மூன்று அரசியல் வெற்றிகளைப் பெற்றுள்ளது.

முதலாவது: முதல்தலைமுறை இடதுசாரிகளைச் செல்லாக் காசாக்கியது;

இரண்டாவது: இலங்கைத் தமிழ்த் தேசியத்தை இனக்குழுமத் தேசியமாக (Ethno-nationalism) தமிழீழத் தேசியமாக- சிதைவடையச் செய்தது;

மூன்றாவது: இடதுசாரி இயக்கத்தின் இரண்டாம் தலைமுறை

வழித்தோன்றல்களில் ஒன்றான JVP-ஐ அடுத்த கட்ட இனக்குழுமவாதத் தலைவனாக வளர்த்தெடுத்தது;

எழிமைப்படுத்திச் சொல்வதானால் என்.எம்.பெரேராவையும், பீட்டர்கெனமனையும் வீழ்த்தியது, புலிகளையும் JVP ஐயும் பெரும் தலைவர்களாக்கியது எனக் கூறலாம்.

JVP பற்றி ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது, தற்போது JVP யின் இனக் குழுமவாதப் போக்குபற்றி சில வாக்கியங்கள்

### ஆ.2.1) **JVP யின் 'தமிழ்' அரவணைப்பு**

குற்றுயிரும் குறையுயிருமாக இருக்கும் இலங்கைத் தேசியத்தை எப்படியும் கொன்று தீர்த்திட வேண்டும் என்ற வன்மம் கொண்டவர்கள், இலங்கைத் தேசியத்தின் குற்றுயிர் நிலைகண்டு துடித்து அதை எப்படியும் மீண்டும் உயிர் பெறச் செய்துவிட வேண்டும் எனத் தவம் இருப்பவர்கள், ஆகிய இரு பகுதியினருக்கும் கீழ்வரும் தகவல்கள் பிடித்தமானதாக இருக்கும். தகவல்கள் முன்னையவர்களுக்கு இனிப்பாகவும் பின்னையவர்களுக்கு கசப்பானதாகவும் இருக்கும். ஆனால் இத்தகவல்களை வைத்துக்கொண்டு வரக்கூடிய முடிவுகள் இலங்கைத் தேசியர்களுக்கு ஒரு பெரும் அரசியல் பாடத்தைக் கற்பிக்கின்றது. JVP யின் தமிழ் எதிர்ப்புத் தன்மையைத் தணித்து, அவ் அமைப்பை தமிழர்களின் நண்பராக ஆக்குவதற்கு அரசியல் களத்திலுல், சித்தாந்தக் களத்திலும் கடுமையான போராட்டங்களை நடத்தி அதில் பல வெற்றிகளும் பெற்றவர் லயனல் போபகே. ஆனால் மிகக் குறுகிய காலத்தில் அவ் வெற்றிகளெல்லாம் கானல்நீராகிப் போக JVP அமைப்பை விட்டே வெளியேறியவர். வெளியேறினாரா அல்லது வெளியேற்றப்பட்டாரா என்பது தெரியவில்லை. இனவாதக் கோட்டைக்குள்ளேயே இருந்தவண்ணம் இனவாதத்திற்கு எதிராகப் போராடிய அவரை இலங்கைத் தேசியர்களின் முன்னோடிகளில் ஒருவர் எனச் சொல்வதில் தவறொன்றும் இருக்காது. அம் முன்னோடியின் பேனாமுனையால் நடப்புகளை அறிந்து கொள்வோம்.

1971 கிளர்ச்சிக்குப் பின்னர் சிறையில் அடைக்கப்பட்ட JVP தலைவர்கள், அச் சந்தர்ப்பத்தை, தமது மாஓயிச அரசியல் மார்க்கத்தை மீண்டும் திரும்பிப் பார்க்கவும், ஸ்ரீலங்காவின் தேசிய இனச்சிக்கலையும் அதனுடன் தொடர்புபட்ட மார்க்ஸிய நிலைப்பாட்டையும் கற்கவுமான கால அவகாசமாகப் பயன்படுத்தினார்கள். அப்போது, 1972-ல் கொண்டு வரப்பட்ட புதிய அரசியல் சாசனத்துக்கெதிராக சிறைக்கு வெளியே தமிழ் இளைஞர்கள் வன்முறையற்ற எதிர்ப்பியக்கங்களை நடத்திக் கொண்டிருந்தனர்.....

யாழ்ப்பாணம், கண்டி, Hammond Hills ஆகிய சிறைகளில் நீண்ட காலத்துக்குத் தடுத்து வைக்கபட்டிருந்த தமிழ் இளைஞர்களும் சிங்கள இளைஞர்களும் தமக்குள் அரசியல் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள். 1950 களின் முற்பகுதியில் சிங்களவர்கள் மத்தியில் சிங்கள இனக்குழும உணர்வு மிகப் பெரியளவில் உருவாகத் தொடங்கியிருந்தது. அது போல் 70களின் முற்பகுதியில் தமிழர்கள் மத்தியில் தமிழ்த் தேசியம் உருவாகத் தொடங்கியிருந்தது.

இங்குதான் லயனல் தப்பு விடுகிறார். 1950 களின் முற்பகுதியில் சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியது சிங்களத் தேசியவாதமல்ல. அது சிங்கள-பௌத்த இனக்குழுமவாதத் தேசியமாகும். காலனியல் மேட்டுக்குடியினரிடம் இருந்த தேசியமாகும், இத் தேசியம் சில முற்போக்கு அம்சங்கள் சேர்க்கப்பட்டு, மிதவாத முதலாளித்துவவாதிகளால் சிங்கள மக்களிடம் கொண்டு செல்லப்படுகிறது. முதல் தலைமுறை இடதுசாரிகள் இத்தன்மையைச் சுட்டிக்காட்டிக் கொண்டே பண்டாரநாயக்கவுடன் இணைந்தார்கள். இதற்கு மேலுமோர் ஆதாரம்

1939-ம் ஆண்டில் தனது உரையொன்றில LSSP தலைவர் கொல்வின் ஆர்.டி. சில்வா அவர்கள் பண்டாரநாயக்கவின் சிங்கள மஹாசபை பற்றி இவ்விதம் எச்சரித்தார். “அதுவொரு ஆபத்தான பிற்போக்கு அமைப்பாகும். இவரின் (SWRDயின்) அறைகூவலுக்கு அரசியல்ரீதியாக பின்தங்கிய கண்டி மாகாணமும், சாதிப்பாகுபாடுகளில் மூழ்கியுள்ள தென் பகுதியும் காட்டிய மிக உயர்ந்த வரவேற்பு இவ் அறைகூவலின் இயல்பை மிகத் தெளிவாகக் காட்டி நிற்கிறது. சூழல் சாதகமாக இருந்திருந்தால் இது மண்ணிறத்தோல் பாசிஸத்தின் உள்ளூர் பதிப்பாக இருந்திருக்கும்; ஆனால், சாதகமாக அமையவில்லை. முறையான தலைமை இல்லாததாலும், தொடர்ந்து குறுகிவரும் சமூக அடித்தளத்தாலும், வரலாற்று சக்திகள் இதற்கெதிரான இயல்பினதானதாக உள்ளதாலும் மண்ணிறத் தோல் பாசிஸம் நிச்சயம் தோல்வியைத் தழுவும். எவ்விதமானாலும் அது இன்னோர் வகையான பூர்ஷ்வா எதிர் விளைவைக் காட்டி நிற்கிறது.” (A reply to an LTTE supporter, Marxism and the national question in Sri Lanka, Part One, Peter Symonds.)

நிலைமையைக் கணிப்பதில் மிகச் சரியாகவிருந்த முதல் தலைமுறை இடதுசாரிகள், கையாள்வதில் தவறியதேன் என்பது பற்றிய கருத்துப் பரிமாற்றம் முன்னைய பகுதியில் கொடுபட்டுள்ளது.

1950 களின் முற்பகுதிச் ‘சிங்களத் தேசியம்’ உண்மையிலேயே மண்ணிறத் தோல் சிங்களப் பாசிஸத்தின் முதல் பாகமேயன்றி வேறெதுவுமில்லை. இந்த முதல் பாகத்தின் சில முற்போக்கு அத்தியாயங்கள் காணப்பட்டது

உண்மை. இது இயல்பானது. பாஸிஸத்தை ஜனரஞ்சகப்படுத்துவதற்கும், அதற்கோர் பரந்த சமூக அடித்தளத்தை உருவாக்குவதற்கும் இவ்வித முற்போக்கு அத்தியாயங்கள் அவசியம். இது ஒரு அனைத்துலக நியதி. இதுதான் பொப்புலிஸம்-Populism- என அழைக்கப்படுகிறது. 1950 களின் பண்டாரநாயக்கவின் சிந்தனையின் புதுப்பிக்கப்பட்ட வடிவந்தான் மகிந்த சிந்தனையாகும். அதன் இரண்டாவது பதிப்பு என்றும் கூறலாம். புலிகளின் சோஷலிஸத் தமிழீழமும் இதுதான்.

அடுத்தது, 1950 களின் முற்பகுதியின் இலங்கை சமூக உருவாக்கத்தில் ‘சிங்களத் தேசியம்’ என்றொன்று தோன்றுவதற்கான இயல்பான சமூகக் காரணம் எதுவுமே இருக்கவில்லை. சிங்களத் தேசிய இனம் என்று தனித்துப் பார்க்கவேண்டிய தேவை என்ன வந்தது? அது எதிர்கொண்ட தனித்துவமான, விசேடத்துவமான அந்தத் தேசிய ஒடுக்குமுறை என்ன? எதுவுமேயில்லை. அப்படியானால் எதற்காக சிங்களத்தேசியம் உருவானது? அது இயல்பாக உருவாகவில்லை, மாறாக, செயற்கையாக உருவாக்கப்பட்டது. சிங்கள சமூகத்தின்மீது திணிக்கப்பட்டது. யாரால்? யாருக்கு எதிராக?

இம் முற்போக்கு அம்சங்களின் அத்தியாயங்களின் விளைவால், 1950 களில் சிங்கள மக்களிடையே ஒரு சமூக எழுச்சியேற்பட்டது உண்மை. அது காலவியல் கட்டுமானத்தின் அன்றைய வடிவத்துக்கு எதிராகவும், அன்றைய காலனியல் தரகு முதலாளிகளுக்கு எதிராகவும், நிலமானிய உறவுமுறைகளின் சில மூலக்கூறுகளுக்கு எதிராகவும் நடந்த எழுச்சியாகும். இது இலங்கையின் பிற பகுதிகளுக்கும் பரவியது. அரசியல் அரங்கில் நோக்கினால் இது UNP யின் பொருளாதார வேலைத் திட்டங்களுக்கு எதிராக நடந்த உள்நாட்டு அரசியல் யுத்தமாகும். இந்த ‘அப்பே ஆண்டுவ’ வின் இயல்புகள் பற்றி இதற்கு முன்னைய பகுதிகளில் சொல்லப்பட்டுள்ளது. இவ் எழுச்சியின் உள்ளடக்கத்தில் தேசிய மூலக்கூறுகளையும்விட முற்போக்கு வர்க்க மூலக்கூறுகளே மேலோங்கியிருந்தன. இதனால் இலங்கை மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கக்கூடிய ஒரு அகநிலை உந்துசக்தியும் (inner potential) இவ் எழுச்சிக்கு இருந்தது. இவைதான் மண்ணிற பாஸிஸத்திற்கு அவசியமான சமூக அடித்தளத்தை அமைத்துக் கொடுத்த கிளர்ச்சிகளாகும்.

ஆனால் துக்ககரமான நிகழ்வு, இவ்வித எழுச்சிக்காக முப்பது வருடங்களாக உழைத்து வந்த இடதுசாரிகளால் இவ் எழுச்சிக்கு தலைமை கொடுக்க முடியாமல் போனமையேயாகும். வளரும் பயிரை முளையில் புரிந்து கொள்ளும் ஆற்றலின் குறைபாடா அல்லது முதலாளித்துவமற்ற பாதை என்ற கோட்பாடுதான் இதற்குக் காரணம் என்பது அராயப்பட வேண்டும்.

தென்பகுதித் தரகு முதலாளித்துவ மிதவாத அணியின் ஒரு பகுதியும். மலைநாட்டு நில உடமை வர்க்கமும் இணைந்து இவ் எழுச்சியின் தலைமையை அபகரிப்பதில் வெற்றி பெற்றிருந்தார்கள். வர்க்கரீதியாகப் பார்த்தால் இதுவொரு விநோதமான கூட்டுத்தான். எதிரும் புதிருமான இரு வர்க்கங்கள் ஒன்றிணைந்தன. முதலாளித்துவ சீர்திருத்தத்தைக் கூட விரும்பாத கண்டிய நிலஉடமை வர்க்கமும், அடிப்படை மாற்ற சீர்திருத்ததை (Radical reformism) விரும்பிய தென்பகுதி மிதவாத தரகு முதலாளித்துவவாதிகளின் ஒரு பகுதியினரும் இணைந்து கொண்டார்கள். முதல் தலைமுறை இடதுசாரிகள் இதை எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். UNP ஐ எதிர்க்க வேண்டும், இடதுசாரிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும், மக்கள் எழுச்சியைத் திசைதிருப்ப வேண்டும் இவைதான் இவ் வர்க்கக் கூட்டணியின் நோக்கங்களாக இருந்தன. இந்நோக்கத்தில் வெற்றி பெறுவதற்காக இக் கூட்டணி கையிலெடுத்துக்கொண்ட சித்தாந்த ஆயுதந்தான் சிங்கள-பௌத்த இனக் குழுமவாதமாகும். எதிரும் புதிருமான வர்க்கங்களை இணைத்த காந்தசக்தியும் இதுதான். இச் சித்தாந்த ஆயுதத்தின் அரசியல் வெளிப்பாடுதான் தனிச்சிங்களப் பரப்புரையாகும். சிந்தாந்த ஆயுதம் இன்றுவரை தொடர்கிறது. அரசியல் ஆயுதம் காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டு போகிறது. ஆரம்பத்தில் சட்டசபை பிரதிநிதித்துவமாக இருந்தது, அடுத்ததாக குடியேற்றமாய் ஆகியது, பின்னர் மொழியாகியது, மீண்டும் குடியேற்றத்தை மொழியுடன் சேர்த்துக் கொண்டது, இன்று அதிகாரப் பரவலாக்கத்தில் வந்து நிற்கிறது.

ஆனால், இக்கூட்டு ஒன்றும் விநோதமானதல்ல. முதலாளித்துவம் உலகளாவிய அளவில் வளர்ந்ததன் பின்னர், தன்னைத் தொடர்ச்சியாக மீளுற்பத்தி செய்துகொள்வதற்கான அனைத்து வளங்களையும் பெற்றுள்ளது. அதனால் ஆரம்பகாலத்தில் தனது வளர்ச்சிக்குத் தடையாக இருந்த தனது பிறப்புக்கு முந்தைய சமூக உருவாக்கங்களின் கட்டுமானங்களைப் பற்றி தற்போது அவர்கள் அச்சங்கொள்ளவில்லை. தமது தேவைக்கு ஏற்றமுறையில் அவற்றை வடிவமைத்துக் கொள்கிறார்கள், அவசியமானால், அவற்றில் சிலவற்றை மீளுருவாக்கம் செய்தும் கொள்கிறார்கள். இவ்விதம் பழையன, புதியன சகலதையும் கலந்த ஒரு சமூக உருவாக்கத்தை ஆக்கவும், அவற்றைப் பாதுகாக்கவுமான வல்லமை ஏகாதிபத்தியக் கட்டுமானத்திற்கு உண்டு. இவ்விதக் கலவைக் கட்டுமானமுள்ள நாடுகளைத்தான் வளரும் நாடுகளென அழைத்துக்கொள்கிறார்கள்.

ஆகவே 1950 களின் முற்பகுதியில் நிலவியது லயனல் அவர்கள் கூறியதுபோல் சிங்களத் தேசியமல்ல, அது சிங்கள பேரகங்காரவாதமே. அவரை மேலும் தொடர்வோம்

எழுபதுகளின் முற்பகுதியிலேயே JVP தனது கொள்கைப் பிரகடனத்தை நிறைவு செய்திருந்தது. தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகத்தினரிடையே அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணத்தில் வசிப்போர்களிடையே அரசியல் வேலை செய்யவேண்டியதன் அவசியத்தை கட்சியின் வேலைத்திட்டம் வலியுறுத்தியிருந்தது. 70களின் நடுப்பகுதியில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. இதன்பின் JVP தனது அரசியல் நடவடிக்கைகளை வெளிப்படையாக ஆரம்பித்தது.

அந் நேரத்தில் JVP ஏற்கனவே முன்சொன்ன பகுதிகளில் தமிழ்த் தோழர்களுடன் சில தொடர்புகள் வைத்திருந்தது. JVPயில் சிலர் இவர்கள் மத்தியில் செயல்படக்கூடிய வாய்ப்பையும் பெற்றிருந்தார்கள். 1977 நவம்பர் மாதம் JVP யின் முதலாவது மத்தியகுழு கூடியது, சிங்களவர்கள் அல்லாதவர்களிடம் செயல்படுவதற்கான பொறுப்பும், கடமைப்பாடும் அரசியல் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது..... வடக்கின் முதலாவது கட்சிக்கிளைகள், 1977-ன் பிற்பகுதியில் மரபுவழி இடதுசாரிகளுக்கு தொடர்புகள் இருந்த சுன்னாகம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் உருவாக்கப்பட்டன. அடுத்த வருடத்துள் இது வடமாகாணத்தின் பிற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. ஆனால் கிழக்கில், முஸ்லீம்கள் அதிகமாக வாழ்ந்த பகுதிகள் தவிர பிற இடங்களுக்கு JVP யின் நடவடிக்கைகள் பரவவில்லை. மலையகத்தின், கண்டி. மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் JVP யின் சிறு குழுக்கள் அமைந்தன, நுவரெலிய. தலவாக்கல. ஹட்டன் ஆகிய பகுதிகளில் கட்சிக் கிளைகளும் அமைக்கப்பட்டன. மேலும் சொல்வதானால் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கங்களுடன் பலமான அரசியல் கூட்டும் அமைக்கப்பட்டது.

JVP வடபகுதியின் தமிழ் இளைஞர்களை அணுகியபோது அவர்களில் பெரும்பான்மையோர் தேசிய அரசியல் நிலைப்பாடுகளால் கவரப்பட்டிருந்தார்கள், வெவ்வேறு தமிழ் போராட்டக் குழுக்களுடன் தம்மை இணைத்துக்கொள்ளத் தொடங்கியிருந்தார்கள். தனித்தனியாகச் சந்தித்த இடங்களிலும் பொது இடங்களிலும் JVP யினருக்கும் இவ் இளைஞர்களுக்குமிடையே சூடான விவாதங்கள் நடந்தன. செயற் துடிப்புள்ள தமிழ் இளைஞர்களில் அதிகமானோர் வர்க்க விடுதலைக்கான போராட்டத்திலும் விட தேசிய ஜனநாயகத்துக்கான போராட்டங்களுக்கே தம்மை அர்ப்பணித்திருந்ததைக் காணக்கூடியதாய் இருந்தது. சிங்கள கிராமப்புறச் சூழலில் இருந்து வடக்கிற்கும் கிழக்கிற்கும் அரசியல் வேலைகளுக்காக வந்தவர்களால் கிராமப்புற தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே எந்த வேறுபாட்டையும் காணமுடியவில்லை. சிங்கள விவசாயிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத்தான் தமிழ் விவசாயிகளும் எதிர்கொள்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்கள். இருந்தும் தமிழ் மக்களின் பண்பாட்டுக்

கூறுகள் மற்றும் மொழிப் பின்னணியின் காரணத்தால் எழும் பிரச்சனைகளை அவர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. தமிழ் மக்களின் மொழி, மரபுகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அவர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

அளவெட்டி, மல்லாகம், திருநெல்வேலி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் சில தமிழ் JVP செயற்பாட்டாளர்களும் இருந்தனர். வேலைசெய்வதை நிறுத்துமாறு வாய்மூலமான அச்சுறுத்தல்கள் அவர்களுக்கு விடப்பட்டன. இவ்விதம் அச்சுறுத்தியவர்கள் யார் என்பது தெரியவில்லை. வல்வெட்டித்துறை, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் CPC-C ஆதரவாளர்களிடமிருந்தும் இவ்வித அச்சுறுத்தல்கள் வந்தன. வேறு பகுதிகளில் இவ்வித அச்சுறுத்தல்கள் தேசியவாத போராளிக் குழுக்களிடம் இருந்தும் வந்தன. உதாரணத்திற்கு, 80களின் முற்பகுதியில் JVP யால் நடத்தப்பட்ட இரு பெரும் பொது நிகழ்ச்சி மேடைகள் தாக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தின் பொதுக் கேட்போர் கூடத்தில் ‘விடுதலையின் கீதங்கள்’ நடத்தப்பட்டபோது மேடையை நோக்கி கதிரைகள் வீசப்பட்டன. இன்னோர் தடவை பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருந்த R.V ஐ நோக்கி வீசப்பட்ட கல்லொன்று அவரின் தலையைக் காயப்படுத்தியது. இவ்விரு சம்பவங்களும் மாஓயிஸ்ட் குழுக்களின் வேலை எனப் பின்நாளில் அறிந்து கொண்டோம்.

**இந்நிகழ்வுகள் தரும் படிப்பினைகள் என்ன?**

1, 70 களின் இறுதிப் பகுதியில் கூட இலங்கைத்தேசிய உணர்வு தமிழ் இளைஞர்களில் ஒருபகுதியினரிடையே இருந்துள்ளது.

2. தமிழ்த் தேசிய இயக்கங்கள் அக்காலப் பகுதியில் இனவாதிகளாக இருக்கவில்லை. தமிழ் மக்களும் அவ்விதமே. இவர்கள் தமிழின வெறியர்களல்ல. மாற்றுக் குழுக்களை ஜீரணிக்க முடியாத ஒரு தன்மைதான் இருந்திருக்கிறதே தவிர இனவாதம் இருக்கவில்லை. வடமாகாணத்தில் இருந்த பௌத்த கோவில்கள் எதுவும் என்றுமே சேதப்படுத்தப்படாதது இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

3. மாஓயிஸ்டுகளின் மீதான லயனலின் குற்றச்சாட்டு உண்மையானால் புலிகள் மட்டுந்தான் பாசிஸ்டுகள் என்று கூறுவது சரியா?

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செய்யப்பட்ட வேலை இறுதியில் என்னவானது? லயனலைத் தொடர்வோம்.

### ஆ.2.2) **தமிழர்களுக்கு என்று தனியான அமைப்பு**

"….அடுத்த பக்கத்தில், 80களின் ஆரம்பகாலங்களில் தமிழர்களிடையேயான வேலைகள் பற்றி JVP க்குள் இரு எதிரெதிர் முனைகளில் இருந்து வெவ்வேறு விதமான இரு அழுத்தங்கள் உருவாகின. ஒன்று கிளிநொச்சி, விஸ்வமடு ஆகிய பகுதிகளில் இருந்த தமிழ்த் தோழர்களால் உருவாக்கப்பட்டது. தமிழர் உரிமைக்கான விவகாரத்தை இலங்கை மக்களின் ஒட்டுமொத்த சமூக-பொருளாதார விவகாரத்துடன் கலப்பதை விடுத்து, JVP, தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை தனியொரு வேலைத்திட்டமாக முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்பதே இவர்கள் முன்வைத்த கோரிக்கையாகும். JVP இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

அடுத்த அழுத்தம் JVP யின் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளிடம் இருந்து, அதிலும் குறிப்பாக கட்டுபெத்த வளாகத்தில் இருந்து வந்ததாகும். தமிழ் மக்கள் தொடர்பான பொதுவிவாதங்கள் முழுமையாகவே நிறுத்தப்பட வேண்டும் என்பதே இவர்களின் கோரிக்கையாகும்....." வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சனைகளை சிங்கள மக்கள் புரிந்து கொள்ளுதல் அவசியம் எனக்கூறி, இக் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. இந்த விவகாரத்தை பொதுமக்கள் முன்பாக எடுத்துச் செல்வதற்காகவும், கட்சி ஊழியர்களின் அறிவு மட்டத்தை வளர்க்கும் நோக்கத்துடனும் 1981-ன் பிற்பகுதியில் கொழும்பு சுகததாஸ அரங்கில் திறந்த உரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இக் கொள்கையின் முன்னெடுப்பாளர்களில் ஒருவரென்ற முறையில் நானே இவ் உரையாடலை நடத்தினேன். மண்டபம் நிறைந்து வழிந்தது. தமிழ் மக்களின் சுய-நிர்ணய உரிமையை JVP ஏற்றுக்கொண்டுள்ள அதே வேளையில் தமிழ் மக்களின் பிரச்சனைக்கான தீர்வாக JVP பிரிவினையை ஆதரிக்கவில்லை என்பதையும், அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழக்கூடிய முறையிலான பிரதேச சுயாட்சியுடன் கூடிய ஐக்கியப்பட்ட ஸ்ரீலங்காவுக்காகவே போராடுகிறோம் என்பதையும் நான் மிகத் தெளிவாக விளக்கினேன்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கிலும் கிழக்கிலும் பல இடங்களில் வெற்றிகரமான பொதுக்கூட்டங்கள் நடத்தினோம். இருந்தும் வடக்கிலும் கிழக்கிலும் விழுந்த வாக்குகள் மிகவும் குறைவாகவே இருந்தன...... தென் பகுதிகளிலும் இவ்விதமே. ஆகக் குறைந்த வாக்குகள் பெற்றமைக்கான பிரதான காரணம் சிங்கள மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத JVP யின் சுய-நிர்ணய உரிமை ஆதரவுப் பரப்புரைதான் என்ற கருத்து கட்சிக்குள் தலைதூக்கியது. ......

1977-ல் இருந்து 1982 வரை லயனலும் அவரின் தோழர்களும் (தமிழ்த் தோழர்களும் அடங்குவர்) JVP ஐ இனவாத சேற்றில் இருந்து மீட்க எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டார்கள். அதில் வெற்றியும் பெற்றார்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் தோல்வி லயனல் அணியினரின் வெற்றியை திருப்பிப் பெற்றுக்கொண்டது. JVP யும் தோற்றது; இவர்களும் தோற்றனர்.

விஸ்வமடு, கிளிநொச்சி தோழர்கள் முன்வைத்த, "தமிழர் உரிமைக்கான விவகாரத்தை இலங்கை மக்களின் ஒட்டுமொத்த சமூக-பொருளாதார விவகாரத்துடன் கலப்பதைவிடுத்து, தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை தனியொரு வேலைத்திட்டமாக முன்னெடுத்துச் செல்லவேண்டும்" என்ற கோரிகையை JVP ஏற்றுக்கொண்டிருந்தால் லயனலின் முயற்ச்சி வெற்றி பெற்றிருக்குமா? ஆம், நிச்சயமாக! என்று துணிந்து சொல்லலாம். ஆனால் தமிழ் மக்களின் சுய-நிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டதாகக் கூறும் இன்றுள்ள இடதுசாரி அமைப்புகள்கூட இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லையே!! அமைய இருக்கும் இலங்கைத் தேசியக் குடியரசு, இரு அரசுகளின் கூட்டரசாக இருக்கும் என்று கூறும் அமைப்புகள் முதலில் தமது சொந்த அமைப்புகளில் தமிழ் பேசும் மக்களின் விவகாரங்களுக்காக தனியான பிரிவை அமைப்பதுதானே சரியானதாக இருக்கும். இவ்வித அமைப்பு தமிழர்களை மட்டும் கொண்டதாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. அது தமிழர்களின் சுய-நிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு அதற்காகப்போராட முன்வருபவர்களையும் உள்ளடக்கியதாகவும் இருக்கலாம். அப்போதுதான், சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் ஒரு இனவாதப் போராட்டமாக இருக்கும் நிலை மாறும். அது, நாளைய கூட்டாட்சிக்கான முன்னோடியாக இருக்கும். ஆகவே விஸ்வமடுத் தோழர்களால் முன்வைக்கப்பட்ட அந்தக் கோரிக்கை பொது விவாதத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும். இடதுசாரிக் குழுக்கள் தமது பதிலை இந்த விவகாரத்தில் சொல்லியாகவேண்டும்.

இவ்விவகாரத்தில் இலங்கை இடதுசாரிகள் ஏற்கனவே ஒரு முன்னுதாரணத்தை யாழ்ப்பாணத்தில் உருவாக்கியுள்ளார்கள். 'சிறுபான்மைத்தமிழர் மகாசபை' யும், அதைத் தொடர்ந்து உருவான 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க'மும் இதற்கான உதாரணங்களாகும்.

இச்செயலின் விளைவு, பஞ்சமர்கள் இடதுசாரிகளின்மேல் மிகுந்த நம்பிக்கை கொண்டார்கள். அவர்கள், இடதுசாரிகளின் தலைமையில் சாதிய பாகுபாடுகளுக்கு எதிராகப் போராடினார்கள். பல வெற்றிகளையும் கண்டார்கள். பஞ்சமர்கள் இடையே சாதிவாதம் தோன்றாமல் தடுப்பதில் இடதுசாரிகள் வெற்றி பெற்றார்கள். 'சிறுபான்மைத் தமிழர் மகாசபை' உருவாகவில்லையானால் 1940 களிலேயே யாழ்ப்பாணத்தில் 'வல்லைமுனி' ( கே.டானியலால் நடத்தப்பட்ட சிறு பத்திரிகை) எனும் பெயரில் 'பஞ்சமப்

புலிகள்’ உருவாகியிருப்பார்கள். இடதுசாரிகளின் சரியான மூலோபாயம் இவற்றைத் தடுத்துவிட்டது. இல்லையெனில் பிரபாகரனை மிஞ்சிய பயங்கரவாதம் பஞ்சமரிடையே இருந்து தோற்றம் பெற்றிருக்கும். யாழ்ப்பாணம்; பஞ்சமர், வெள்ளாளர் என இரு கூறுகளாக சிதறியிருக்கும். இரத்த ஆறு ஓடியிருக்கும். பாளைக்கத்திகள் பாளையைச் சீவுவதுபோல் பல தலைகளைச் சீவியிருக்கும். சாதிகளுக்கு இடையேயான முரண்பாடும் ஒரு சிநேக முரண்பாடுதான். சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடவும் வேண்டும் அதே நேரத்தில், பஞ்சமர்களுக்கும், வெள்ளாளர்களுக்கும் இடையே ஒரு வைரப்பகை உருவாகாத முறையில் நடந்து கொள்ளவும் வேண்டும். ஏனெனில் வெள்ளாளர்களின் பெரும்பான்மையினர் உழைக்கும் விவசாயிகளாகும். அவர்களும் உழைக்கும் மக்களில் ஒரு பகுதியினராகும். சோஷலிஸ/புதிய ஜனநாயக அரசின் தலைமை அணியின் ஒர் அங்கமாக வேண்டியவர்களாகும். அவர்களை ஒதுக்கி வைத்தால் சமூகப் புரட்சி சாத்தியமேயில்லை. அவர்களை ஒதுக்கி வைப்பவர்கள் முற்போக்குவாதிகளேயல்ல. இன்று அந்த வெள்ளாள உழைக்கும் விவசாயிகள் தப்புவிடலாம், வெள்ளாள மேட்டுக்குடியின் பேரகங்காரவாத சாதிவாதக் கருத்துக்களால், சாதி வெறியர்களாகச் செயற்படலாம், இருந்தும் அவர்கள் உழைக்கும் மக்கள். அவர்களை அந்த மாயையில் இருந்து விடுவிக்கவேண்டியது கிராமியத் தொழிலாளர்களாகிய பஞ்சமர்களின் கடமை. இதைப்புரிந்து கொண்டு இடதுசாரிகள் தாய்மை உணர்வுடன் நடந்து கொண்டார்கள். அதாவது முழு மக்களினதும் தாயாக நடந்து கொண்டார்கள். தப்புச் செய்த குழந்தைகள் தண்டிக்கப்பட்டார்கள்; அதேவேளை குழந்தைகளிடையே நிரந்தரப் பகைமை வளராமல் பார்த்துக் கொள்ளபட்டது.

ஆனால் சாதி ஒடுக்குமுறையாளர்களோ இதைப் பஞ்சமரின் பலவீனமாகப் புரிந்து கொண்டார்கள். முதல் தலைமுறை இடதுசாரிகளின் தப்புகளும் இதன் காரணங்களாக அமைந்தன.

1966ல் ‘தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்’ ஆரம்பிக்கப்படுகிறது. முன்னைய அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு, முன்னையதையும் விட உயர்ந்த வடிவத்தில் இப்போராட்டம் அமைந்தது. முழு விபரத்துள்ளும் போகமுடியாது. எமக்கு இவ்விடத்திற்கு அவசியமானவை மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ‘சிறுபான்மைத் தமிழர் மகாசபை’க்குப் பதிலாக ‘தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்’ என்றோர் அமைப்பு உருவாக்கப்பட்டது. தீண்டாமை ஒரு தனி விவகாரம்; சாதிய ஒடுக்குமுறை ஒரு தனிவிவகாரம் என்று பார்க்கப்பட்டது. அதில் முன்னைய பார்வைக்கும் தற்போதைய பார்வைக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ஆனால் இந்தத் தனிவிவகாரம் ஒடுக்கப்பட்ட சாதியினரின் பிரச்சனை மாத்திரமல்ல, முழு சமூகத்தினதும் பிரச்சனை என்று முழுமக்களையும் பார்க்க வைக்கும்

முயற்சியில் ஈடுபட்டதுதான் இங்குள்ள முன்நோக்கிய குணாம்ச மாற்றமாகும். சாதி, மத வேறுபாடின்றி தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைக்கு நடைமுறை பங்களிப்புச் செய்ய விரும்புவோர்களைக் கொண்டு இவ் அமைப்பு உருவாக்கப்பட்டது. பல சாதிகளைச் சேர்ந்தவர்களும் இதில் இணைந்து கொண்டார்கள். தீண்டாமை ஒழிப்பில் உணர்வுபூர்வமான பங்கு வகித்தார்கள். அடுத்த குணாம்ச வளர்ச்சி கட்சியின் தலைமையின் கீழான வாலிபர் சங்கங்களாகும். இப்போராட்டத்தின் இயக்குவிசையாக இருந்த இவ் வாலிபர் சங்கங்கள் சாதி அடிப்படையில் அமைக்கப்பட்டவை அல்ல.

இவ் அனுபவம் தமிழ் பேசும் மக்கள் பிரச்சனையிலும் பின்பற்றப்பட்டால் ஆகாதா? இடதுசாரிகள் இதைக் கணக்கில் கொள்ளட்டும். களமுண்டு, படையுண்டு, தலைமை தாங்க முன்வருவார்களா?

தோல்விக்குப் பின்னர் JVP என்னவானது? லயனலே கூறுகிறார்: '….JVP ஐ முழுமையாக எடுத்துக் கொண்டால் அது மார்க்ஸிஸ்ட் சிந்தனைப் போக்கையும், சிங்கள தேசியவாத சிந்தனைப் போக்கையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. இதன் தேசியவாதச் சிந்தனைக் கூறுகள் கடந்தகால சிங்கள இராசதானிகளின் வரலாற்றுப் பெருமைகளில் தம்மைத் தக்க வைத்துள்ளன. தற்போதைய JVP தனது மார்க்ஸிய சிந்தனைப் போக்குகள் அனைத்தையும் களைந்தெறிந்துவிட்டு முழுமையான தேசியவாத இயக்கமாக மாறியுள்ளது. தமது தாய்நாட்டைப் பாதுகாப்பதன் மூலம் அது ஒற்றைத் தேசிய அரசை நிறுவ முயற்சிக்கிறது. இதன் மூலம் சிங்கள-பௌத்த பண்பாட்டுக் கட்டுமானம் செழித்து வளர்வதற்கான வாய்ப்புகள் தோற்றுவிக்கப்படும், அதேநேரம் இவ்வித அரசின் மூலமாகத்தான் மேற்கத்திய நாசகாரமான விளைவுகளிலிருந்தும், பிற கலாச்சாரங்களின் செல்வாக்கிலிருந்தும் சிங்களவர்களைப் பாதுகாக்க முடியுமென்றும் கருதுகிறது. அவர்களால் முன்வைக்கப்படும் சோஷலிஸம் என்ற கருத்தாக்கம், காலனியல் உருவாக்கமான ஒற்றைத் தேசிய அரசை பாதுகாக்கும் ஒரு தத்துவமாக வடிவமைக்கப்பட்டுள்ளது….'

இன்றைய JVP யின் குணாம்சத்தை மிகத் துல்லியமாக இனங்காட்டியுள்ளார். இதில் தவறுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஆரம்பகாலத் தவறுகள் பற்றிய மதிப்பீட்டில் இரு தவறுகள் உள்ளன. ஒன்று 'சிங்கள தேசியவாதம்' எனச் சொல்வது. இதுபற்றி ஏற்கனவே பார்த்தோம். மற்றையது 'JVP மார்க்ஸியச் சிந்தனைப் போக்கையும் சிங்கள தேசியவாத சிந்தனைப் போக்கையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.' என்று கூறுவது கருத்து மயக்கத்தைத் தருவதாக அமைந்துள்ளது. இது ஒரு போதும் சாத்தியமில்லை.

லயனல் அவர்களின் கூற்றுப்படி 1977க்குப் பின்னர்தான் JVP ஒரு

நிறுவனமாகத் தொடங்கியுள்ளது. இதற்கு முன் இதில் பல்வேறு சிந்தனைப் போக்குகள் இருந்தாலும் இவ் இயக்கம் ஒருவரின் தலைமையின் கீழ் செயற்பட்டுள்ளது. வெளியாரின் தலையீடுகளின்மை இதற்கானதோர் நிச்சயமான காரணியாகும். R.Vயின் தனிநபர் ஆளுமைக்கூறு இதற்கான மற்றோர் காரணமாக இருக்கலாம். இதே காலப்பகுதியில் இதே நிலையிலிருந்த தமிழ் இளைஞரிடையே இவ்வித நிலை காணப்படவில்லை. ஆளுமை மிக்க பல தனிநபர்கள் இருந்தார்கள். ஆனால், மிகச் சர்வ சாதாரணமான அந்நியத் தலையீடு இவ்விதமான தலைமை ஏற்படுத்துவதைச் சாத்தியப்படுத்தவில்லை. சிறையில் R.Vயின் வாக்குமூலம் மெல்லமெல்லக் கசியத் தொடங்கிய பின்னர்தான் இயக்கத்துள் பல மையங்கள் முளைவிடுகின்றன. உயிரோட்டமான கருத்துப் போராட்டங்களும் ஆரம்பிக்கின்றன. கூடவே உட்கொலைகளும் நடக்கின்றன. சுய-நிர்ணய உரிமை விவகாரமும் இக் கருத்துப் போராட்டத்தில் ஒன்றாகும். அக்கருத்துப் போராட்டம் பற்றித்தான் லயனல் அவர்கள் தனது கட்டுரையில் விபரித்துள்ளார். இப்போராட்டத்தின் விளைவு சுய-நிர்ணய உரிமையை ஆதரித்தவர்கள் இயக்கத்தை விட்டு வெளியேறுவதில் போய் முடிகிறது. அவர்கள் என்னவானார்கள் என்பது பற்றிய முழுமையான விபரங்கள் எம்மிடமில்லை. ஆனால் பல வழிகளிலும் பிரபாகரனுக்கு இணையாக R.Vயும், அவரைத் தொடர்ந்து வந்த தலைவரும் பலரைப் புதைகுழிக்குள் அனுப்பினர்.

பலர் இலங்கையில் தலைமறைவானார்கள், சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்தார்கள். இதில் இணைந்த மலையகத் தமிழர்களில் பலர் பின்னர் ‘கீழைக்காற்று’ இயக்கமானார்கள். சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்துவதிலும், புத்திஜீவிகளின் போர்க்குணத்தை வெளிக்கொணர்வதிலும் முன்னணிப் பாத்திரம் வகித்த ‘இலங்கை ஆசிரியர் சங்கம்’ இதில் இருந்து பிரிந்தவர்களின் முயற்சியேயாகும். H.N.பெர்னாண்டோ என்பவரே இதன் முன்னோடியாகும். சம்பந்தப்பட்ட நண்பர்கள் இந்த வரலாறுகளை முன்கொண்டு வருவார்களானால் (பி.ஏ.காதர் அவர்கள் சந்திரசேகரம் அவர்களின் வரலாற்றை வெளிக்கொணர்ந்தது போல்; காதர் இவ் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக இருந்தார் என்பதால், இவ் வரலாற்றையும் அவர் வெளிக் கொணர்வது நல்லது.) அவை சமகால இலங்கை மக்கள் வரலாற்றை வெளிக்கொணர்வதாக இருக்கும்.

### ஆ.3) **கீழைக்காற்று**

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீன சார்பு) யில் இருந்து ஆயுதப் போராட்டத்தை மையமாகக் கொண்டு வெளியேறிய இரண்டாவது குழுதான் கீழைக்காற்று இயக்கமாகும். அநேகமாக 70ம் ஆண்டாக இருக்கலாம். கட்சியின் சிங்கள வாரப்பத்திரிகையான ‘கம்கறுவ’வின் ஆசிரியராக இருந்த

காமினி யாப்பா எனும் விமல் ரணசிங்ஹவும், விமல் விஜயக்கோனுமே இதன் அமைப்பாளர்களாகும். காமினி யாப்பா சிறை பிடிக்கப்பட்டபின் (1974ஆக இருக்கலாம்) இவ்வியக்கம் செயலிழந்து போகிறது. இல்லாதவொரு இயக்கத்தையிட்டு MR அஞ்சவேண்டியதில்லை. ஆனாலும் இந்த இயக்கத்தின் செயற்பாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட இன்றைய சூழலுக்கு அவசியமான சில அனுபவங்களை இவ் இடத்தில் முன்வைப்பதை ஏற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

பிரிந்து போவதற்காக நடந்த உட்கட்சிப் போராட்டம் அடிப்படையில் செயலின்மைக்கும் செயல்பாட்டிற்கும் இடையிலானதாகவே இருந்தது. கட்சித்தலைமை புரட்சியைப் பேசிக்கொண்டிருக்கத்தான் லாயக்கானது என்பதே குற்றச்சாட்டாக இருந்தது. இருந்தும் கருத்துப் போராட்டங்களும் நடந்தன. அவை தென் இலங்கையில் முன்கொண்டு செல்லப்பட்ட தொழிற்சங்கவாதப் போக்கிற்கும், வடஇலங்கையில், தீண்டாமையை நிலப்பிரபுத்துவத்தின் மிச்சசொச்சமென முன்வைத்த கருத்துக்கும் எதிரானவையாக மாத்திரமே இருந்தன. மிகக் குறுகிய பரப்பளவுதான்.

70களின் முற்பகுதியில் வடபகுதியில், குறிப்பாக யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்க இளைஞர்களிடையே ‘தீவிர தேசியவாதக் கருத்துக்கள் உருவாகியிருந்தன. நா.சண்ணால் நடத்தப்பட்ட கூட்டங்களிற்கும் கருத்தரங்குகளிற்கும் இவ்விளைஞர்களே அதிகளவில் பங்கு கொண்டனர். இவர்கள் தமக்கிடையே நடத்திய கருத்துப் போராட்டங்களும், இவர்களுக்கும் கட்சிக்கும் இடையே நடந்த கருத்துப் போராட்டங்களும் பட்டி தொட்டி எங்கணும் நடந்தன. இப்போராட்டங்கள் இத் ‘தீவிர’ இளைஞர்களின் சித்தாந்தத்தில் பல நேர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தின. அதேபோல் கட்சியின் வடபகுதி உறுப்பினர்களிடையேயும் நேர்மறைத் தாக்கங்கள் ஏற்பட்டன. இதன் வெளிப்பாடுதான் யாழ்-மாவட்ட கட்சி செயலர் மு.கார்த்திகேசன் கட்சியை விட்டு பிரிந்து சென்றதாகும். இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) எனும் குழுவை அமைத்தார். இதுவும் பின்நாளில் செயலிழந்து போனது. ஆனால் கட்சியின் தலைமையின் சித்தாந்தத்திலோ எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கட்சி உதட்டளவில் புரட்சியையும், செயலளவில் திரிபுவாதத்தையும், மனதளவில் சீனச் சப்பாத்தையும் கொண்டதாக இருந்ததே இதற்கான காரணமாகும். தாய்க் கட்சியும் சண்முகதாசனும் இவற்றை 1990களில் ஒத்துக்கொண்டபின் அதுபற்றி இங்கு அதிகம் பேசத் தேவையில்லை.

‘கீழைக்காற்று’ நடத்திய உட்கட்சிப் போராட்டமும் மனதளவில் சீனச் சப்பாத்தையே கொண்டிருந்தது என்பதே இங்கு சொல்லவரும் விடயமாகும். அதன் அமைப்புக்கட்டுமான வேலைகளும் அதற்கொப்பவே இருந்தன. 1970களின் முற்பாதியில் இலங்கையின் அரசியல் புற நிலைமை புரட்சிக்கு

சாதகமாகவும், அரச அடக்குமுறையோ மிகவும் உச்சகட்டத்திலும் இருந்தது என்பதே கீழைக்காற்றின் கணிப்பீடாகும். ஆகவே, உடனடிக் கடமை இப்புரட்சியை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு ஆயுதபாணியான கட்சியைக் கட்டுவதென்றே அவ்வியக்கம் கருதியது. இதே கருத்தைத்தான் விஜயவீரவும் முன்வைத்தார். ஆனால் அவர் சீனச் சப்பாத்து தவறு என்று கூறினார், கீழைக்காற்றோ அச் சப்பாத்து அளவானதென வாதிட்டது. இதனால் அமைப்பைக் கட்டும் பணியிலேயே கீழைக்காற்று அதிக முனைப்புக் காட்டியது.

### 3.1) **புரட்சிக்கான அமைப்பைக் கட்டுதல்**

கட்சியும் கட்சியின் தலைமையிலானதோர் இராணுவக் கட்டுமானமுந்தான் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் அடிப்படையென்பதே கீழைக்காற்றின் கோட்பாடாக இருந்தது. இலங்கை புரட்சிக்குத் தயாராய் உள்ளது என்பதே கீழைக்காற்றுத் தலைவர்களின் கணிப்பீடாக இருந்தது. இக் கோட்பாட்டினதும் கணிப்பீட்டினதும் அடிப்படையில் துரித கதியில் கட்சிக் கிளைகள் உருவாக்கப்பட்டன. இதில் எந்தவிதச் சடங்குகளும் பின்பற்றப்படவில்லை. தாய்க்கட்சியில் இருந்து விலகி வந்தவர்கள் முதலில் ஒன்று கூடினர். மத்திய கமிட்டி ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் மத்திய மாகாணம், தென் மாகாணம், வட மாகாணம், மேல் மாகாணம் ஆகிய மாகாணங்களில் மாகாணக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. காலப்போக்கில் வடமேல் மாகாணம், கிழக்கு மாகாணம், ஊவா மாகாணம் ஆகிய மாகாணங்களிலும் அமைந்தன. கட்சியில் சேர்த்துக்கொள்வதற்காக தாய்க்கட்சி உறுப்பினர்களிடம் விவாதங்கள் நடத்தக் கூடாதெனவும், தாமாக விலகி வருபவர்களை மட்டுமே சேர்த்துக்கொள்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது. வீண் மோதல்களைத் தவிர்ப்பதுவும், கட்சிக்குள் ‘புதிய இரத்தம்’ வர வாய்ப்பளிப்பதுவுமே அதற்கான காரணங்களாக இருந்தன. அதற்காக ஆட்களை அள்ளிக் கட்டும் முயற்சியிலும் ஈடுபடவில்லை. இரண்டு வருடத்தில் தலைமறைவாகச் செயல்படும் நிலையில் சுமார் 15பேர் உருவாக்கப்பட்டனர். பகுதிநேர தலைமறைவுச் செயற்பாட்டாளர்கள் சுமார் 40 பேராவது இருக்கும்.

இவர்கள் அனைவருக்கும் காடுகளில் தலைமறைவாக வாழக்கூடியதான கொரில்லா பயிற்சியும், விவசாயிகளுடனும், அமைப்புசார் தொழிலாளர்களுடனும் வாழ்ந்து அவர்களுடன் இணைந்து உடல் உழைப்பில் ஈடுபடும் பயிற்சியும், வழங்கப்பட்டன.

இதன்படி காமினி யாப்பா மகாவலிகங்கையில் மணல் அள்ளும் தொழிலாளர் குடியிருப்பில் சுமார் ஆறு மாதங்கள் வாழ்ந்து மணல் லொறிக்கு

மணல் அள்ளிக்கொட்டும் தொழில் புரிந்தார். விமல் விஜயக்கோன் வலப்பன பகுதியில் சேனைப்பயிர் விவசாயியாக இருந்தார். வடமாகாணத்தைச் சேர்ந்த சில தோழர்கள் சம்மாந்துறை விவசாயிகளுடன் சில மாதங்கள் வாழ்ந்தனர். அவர்கள் தங்கியிருக்கும் வீட்டுக்காரர்களுக்கு மட்டும் அவர்கள் யாரென்பது தெரிந்திருக்கவேண்டும், அவ்வீட்டுக்காரர் அமைப்புத் தொடர்புகளை அனுமதிக்க வேண்டும். மற்றும்படி அவர் யாரென்பது எவருக்குமே தெரியக்கூடாதென்பதே ஒழுங்காக இருந்தது. இராணுவக் கட்டமைப்பில் ஒரு திருப்திகரமான கட்டத்தை எட்டும்வரை கட்சி உறுப்பினர்கள் எவரும் எந்த மக்கள் போராட்டங்களிலும் நேரடியான தொடர்புகள் எதுவும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பது மற்றோர் ஒழுங்காக இருந்தது. அது JVP ஐ அடக்குமுறையில் இருந்து தப்பிப் பிழைத்திருப்பவர்கள் மீண்டும் ஒன்றுசேரக் கூடாதென்பதில் அரசாங்கம் மிகவும் விழிப்பாக இருந்த காலகட்டமாகும். இதைவிட காட்டோரக் கிராமங்களில் சேனைப்பயிர்க் காணி குத்தகைக்கு எடுக்கப்பட்டு, அங்கு தங்குகுடில் அமைத்து; விவசாயமும் செய்யப்பட்டன. இவை வாடிகளென அழைக்கப்பட்டன. இவ்விதமான வாடிகள் சுமார் 20-30வரை இருந்தன. இவ்வாடிகளே அவை அமைந்துள்ள பகுதிகளின் செயலகங்களாக விளங்கின.

இலங்கை முழுமைக்குமான இராணுவக் கமிஷனும் அமைக்கப்பட்டது. முதற் கட்டமாக இராணுவ அரசியல் கமிசார்களுக்கான அரசியல் பயிற்சிகள் நடைபெற்றன. மிகச் சிறியளவில் இராணுவப் பயிற்சிகளும் நடந்தன. இருந்தும் இராணுவப் பயிற்சியில் ஒரு தொழில்முறைத் தன்மை கடைப்பிடிப்பது ஆரம்பிக்கப்படவில்லை. கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் இராணுவப் பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டிருந்தது.

மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள நக்கிள்ஸ் மலைத்தொடரே தலைமைப் பிரதேசமாக இருந்தது. இம் மலைத்தொடரின் லக்கல பிரதேசத்தின் களுப்பான மலையே தலைமைச் செயலகமாக இருந்தது. இதனால் இம்மலைத்தொடர் மக்கள், இந்த இயக்கத்தை ‘களுப்பான கொள்ளோ’ (களுப்பான பொடியள்) எனவும் அழைத்தார்கள்.

இயக்கத்தில் 50% ற்கு மேற்பட்டோர் தமிழர்களாக இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களினது அனைத்து மாவட்டங்களிலும் தொடர்புகள் இருந்தன. அதுபோல் மலையகத்தின் அனைத்து மாவட்டங்களின் தமிழர், சிங்களவர் ஆகிய இரு சாராரிடையேயும் உறுப்பினர்கள் இருந்தனர். அதிக வாடிகள் இருந்ததுவும் இங்குதான். உறுப்பினர்கள் தம்மை இனங்காட்டிக் கொள்ளக்கூடாதென்று சொல்லப்பட்டாலும், பல இடங்களில் நல்லதோர் மக்கள் அடித்தளங்கள் இருந்தன. அவற்றை வரிசைப்படுத்தினால் முதலில் தோட்ட லயங்கள், இரண்டாவது சம்மாந்துறை, மூன்றாவதாக யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்ட

மக்கள் அதற்கு அடுத்ததாகத்தான் பிற என வரும். சிங்கள மக்கள் மத்தியில் இருந்த அடக்குமுறையின் காரணத்தால் அங்கு ‘இரகசியம் பாதுகாப்பு’ மிகக் கறாராக இருந்தது. தோட்ட லயங்களில் மக்கள் காட்டிய அன்பும், ஆதரவும், நம்பிக்கையும் அவற்றை வெளிப்படுத்துவதில் அவர்களிடம் காணப்பட்ட துணிச்சலும் நெஞ்சை நெகிழ வைப்பவை. வர்க்க உணர்வும், இலங்கைத்தேசிய உணர்வும் கலந்த போராட்டங்களில் வீரதீரத்துடன் பங்குபற்றுவதுதான் அவர்களின் வரலாறாக இருந்துள்ளதென்பது 70 களின் நடுப்பகுதியிலும் நிரூபிக்கப்படுகிறது. தேசியரீதியான இரண்டாவது நிலை இராணுவக் கமாண்டர்களாகவும், மத்திய மாகாணத்தின் முதல் நிலை, இரண்டாம் நிலை கமாண்டர்களாகவும் இருந்தது மலையகத் தமிழ் இளைஞர்களே. ஜனநாயகத் தேசியவாதிகள் இச் செய்தியை தமது மனங்களில் ஆழப்பதித்துக் கொள்ளவேண்டும். மலையகத்தில் களமுமுண்டு படையுமுண்டு.

இராணுவப் பயிற்சியில் ஒரு தொழில்முறைத் தன்மை இருக்கவில்லை என்பது முதலில் குறிப்பிடப்பட்டது. இது ஒரு கால அவகாசப் பிரச்சனையாகவும் இருக்கலாம். ஆனால் எதற்காக இராணுவத்தைப் பிரயோகிப்பது, அல்லது எவ்விதம் பிரயோகிப்பது என்பது தொடர்பாக எந்தக் கொள்கையும் இருக்கவில்லை. இதனால்தான் இத்துறையால் தயாரிப்புக் கட்டத்துக்கு அப்பால் வளர முடியவில்லை. இங்கும் நிலப்பிரபுக்களுக்கு எதிரான தாக்குதல்கள் என்ற ‘சீனச் சப்பாத்து’ கொடுத்த அழுத்தத்தால் ஸ்தூல நிலைமைக்கொப்ப சிந்திக்க விடவில்லை. இங்கு இரு பிரச்சனைகள் உள்ளன.

ஒன்று மரணதண்டனை விதிக்கப்பட வேண்டியவர்களெனக் கருதப்படக்கூடிய; நிலப்பிரபுக்கள் இல்லாத; நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவினுள் இராணுவச் செயற்பாடுகள் எப்படி அமையுமென்பதாகும். சந்தர்ப்பம் கிடைத்தால் இந் நிலப்பிரபுக்களும், மீனவ சம்மட்டிமார்களும் பணக்கார விவசாயிகளாகவோ, மீனவர்களாகவோ மாறவும் தயாராய் இருந்தார்கள். இதன் மூலம் ஜனநாயகப் புரட்சியின் நண்பர்களாகிறார்கள். யார் அந்த நிலப்பிரபுக்கள்?. இதற்கோர் விடை கிடைக்காததுதான் இயக்கம் கலைந்து போனமைக்கான காரணங்களில் ஒன்றாகும். இது பற்றிய விவாதம் காமினியாப்பா கைதுசெய்யப்பட முன்னரேயே இயக்கத்துள் ஆரம்பமாகியிருந்தது. நிலப்பிரபுக்களுக்குப் பதிலாக தீயபுள்ளிகள் குறிவைக்கப்படலாம் எனக் கருதப்பட்டது. ஆனால் இது மக்கள்படை அமைப்புக்கான நடைமுறைக்குப் பொருத்தாது என்பது பின்னர் புரிந்து கொள்ளப்பட்டது.

இரண்டாவது அரை-காலனிக்குள் ஒரு காலனியை உருவாக்குவதற்காக

நடைபெறும் தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான இராணுவச் செயல்பாடுகள் எப்படியமையும் என்பது. ஒரு அரை-காலனியல், அரை-நிலப்பிரபுத்துவ நாட்டில், அந்த நாடு ஒரு அந்நிய நாட்டினால் தாக்கப்பட்டால் தவிர, மற்றும்படி நாடுபரந்தளவில் எங்கும், எப்போதும் வர்க்கப்போராட்டமே அந்நாட்டின் பிரதான போராட்டமாக இருக்குமென்ற கருத்தோட்டத்துக்கு 'கீழைக்காற்று' துரோகம் செய்ய விரும்பவில்லை. வாய்ப்பாட்டுத்தனத்திலிரு ந்து விலகி வரவும் விரும்பவில்லை.

ஆனால், தமிழ்பேசும் மக்கள்வாழும் பகுதிகளில் (மலையகம் விதிவிலக்கு) வர்க்கப்போராட்டம் என்ற நிகழ்ச்சி நிரல் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு தேசியப் போராட்டம் முதன்மை நிலைக்கு வருவதை 'கீழைக்காற்று' புரிந்து கொண்டது. ஆனால் வர்க்க முரண்பாடுகளை அடிப்படையாகக் கொள்ளாத ஆயதப்போராட்டத்தில் இருந்து ஒதுங்கி நிற்க விரும்பியதேயல்லாமல், சூழலுக்கொப்ப தனது கண்ணோட்டத்தை மாற்றிக்கொள்ளத் துணியவில்லை. உள்ளூர்த் தேசியவாதத்தை தீண்டக்கூடாதென்ற தமது வர்க்கத் தூய்மைவாதத்தை விட்டுக்கொடுக்கத் தயாராய் இல்லை. இதனால் உள்ளூர்த் தேசியவாதத்தின் பூதாகரமான வளர்ச்சி கண்டு, கீழைக்காற்று உறுப்பினர்களில் பலர், இலங்கைப் புரட்சியின் மீதே அவநம்பிக்கை கொள்ளுமளவிற்குச் சென்றார்கள்.

விளைவு சிங்கள உறுப்பினர்களில் பலர் முற்றாகவே ஒதுங்கிக்கொண்டார்கள். காமினியாப்பா சிறையிலிருந்து மீண்ட பின்னர் அவர் 'கீழைக்காற்று' அனுபவம் பற்றிப் பேசக்கூடத் தயாராய் இருக்கவில்லை. அரசியலுக்கே வரவில்லை. விமல் விஜயக்கோனின் நிலையும் அவ்விதமேயானது. தனக்கு வேண்டாதவர்களைக் கொலை செய்த JVP யின் நடவடிக்கைகளும் அதற்கொரு காரணமாக இருந்திருக்கலாம். எவ்விதமும் ரஷ்யமயமாதலும், சீனமயமாதலும் இலங்கையின் கம்யூனிஸ இயக்கங்களை சீர்குலைத்ததற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

### 3.1.2) **மலையகத்தின் விதிவிலக்கு**

மலையகத்தில் வர்க்கப் போராட்டமும் தேசியப் போராட்டமும் ஒன்றை ஒன்று மேவாமல் இரண்டும், இரு வேறு கோடுகளில் ஆனால் கிட்டத்தட்ட ஒரே அலைவரிசையில் பயணிக்கின்றன. இக்கோடுகள் ஒன்றுக்கொன்று அண்மித்துச் செல்லும் சமாந்தரக்கோடுகளாக இருந்தாலும், இடையிடையே ஒன்றையொன்று தழுவியும் செல்கின்றன. சில சந்தர்ப்பங்களில் ஒரே கோடாகவும் செல்கின்றது. அதாவது இரு போராட்டங்களும் ஒரே நேரத்தில் நடக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஓர் அரங்கில் தோன்றி மற்றைய அரங்கிற்கும் செல்லும் போராட்டங்களுமுண்டு. உழைக்கும் மக்கள்

தேசியம் செழித்து வளர்வதற்கு உகந்த சிறந்த வளமான நிலந்தான் மலையக மக்களாகும். இதனால் கீழைக்காற்றின் மலையகத் தொடர்புகள் வீண்போகவில்லை. கீழைக்காற்றின் 'தளப் பிரதேசம்' எனக் கருதப்பட்ட ஹங்குறாங்கத்த-வலப்பனப் பகுதிதான் JVP சுயநிர்ணயக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட காலகட்டத்தில் JVP யின் பலமிக்க தமிழ்த் தொடர்புகளில் ஒன்றாக மாறியது. 1977 இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசத் தமிழர்கள் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்து அங்கு ஆரம்பகால தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOTE) உறுப்பினர்களாக இருந்தனர். கீழைக்காற்றுத் தொடர்புகளில் மற்றோர் பகுதியினர் மலையக மக்கள் இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டனர். இவைதான் மலையகத் தமிழர்களின் தனி விசேடமாகும்.

### 3.1.3) **கிழக்கின் தனித்துவம்**

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கும் சில தனித்துவங்கள் உண்டு. யாழ்ப்பாணத்தில் மேலாண்மை செலுத்திய இனக்குழும-தேசியவாதம் வளர்வதற்கான வளமிக்க நிலம் இம்மாவட்டங்களில்லை. இது, நான்கு தேசிய இன மக்கள் பிரிவுகளும், நான்கு பிரதான மதங்களும் இணைந்து வாழும் பூமியாக இருப்பதே இதற்கான காரணமாகும். இது வந்தாரை வரவேற்கும் பூமியாகும்.

மற்றைய காரணம், இங்குள்ள பெரும்பான்மையான மக்களுக்கு தேசியப் பிரச்சனையென்பது விவசாயத்துக்கான நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சனையேயாகும். அது தேசிய அரசின் ஆளுமைக்குட்பட்ட நிலப்பிரச்சனையல்ல. அதாவது தேசிய அரசை நிறுவுவதற்கு அவசியமான ஒரு பூகோளப்பரப்பு சம்பந்தப்பட்ட தேசிய அரசியல் பிரச்சனையல்ல. சிங்கள குடியிருப்புகள் அதிகமானால் தமிழ் மக்களின் வாக்குச் சீட்டுகளின் விகிதாசாரம் குறைந்துவிடுமே என்பதே ஸ்ரீலங்காப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கத் துடிக்கும் அரசியலாளர்களின் பிரச்சனை. ஆனால் தமிழ், முஸ்லீம் விவசாயிகளுக்கோ விவசாயத்துக்கான தமது நிலம் குறைகிறதே என்ற பிரச்சனை. இதனால், அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட விவசாய மக்களுக்கு நிலம் ஒரு விவசாயப் பிரச்சனை. இது நேரடியாகவே ஒரு பொருளாதாரப் பிரச்சனை. இதனால் இது ஒரு வர்க்க அரசியல் பிரச்சனை, தேசிய அரசியல் பிரச்சனையல்ல.

ஆனால் இப் பகுதி விவசாயிகளின் விவசாய நிலப் போதாமைக்கு ஓர் அரை-காலனியல் அரை-நிலப்பிரபுத்துவ சமூகத்துக்கு இயல்பாகவே உள்ள காரணங்களைவிட மேலதிகமான ஒரு காரணியுமுண்டு. அதுதான் விவசாயத்துக்கான நில மற்றும் நீர்ப்பகிர்வில் கடைப்பிடிக்கப்படும் இனவாத

நிலைப்பாடாகும். ஸ்ரீலங்கா அரசும், தமிழீழ அரசும் இந்நிலைப்பாட்டையே பின்பற்றி வந்துள்ளனர். இதனால் இவ்விரு மாவட்ட மக்களின் நிலப்பிரச்சனையானது தேசியப் பிரச்சனை என்ற பரிமாணத்தைப் பெற்று, தேசியப் பிரச்சனையானது விவசாயிகள் பிரச்சனையாகிறது. இப் பகுதியில் வாழும் தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர்கள் ஆகிய மூவருக்கும் இது பொருந்தும். இதனால் இம்மூன்று பிரிவினரின் தேசியத் தனித்துவத்தை அங்கீகரிக்கும் தன்மை பெற்ற உழைக்கும் மக்கள் தேசியத்தாலும் ஜனநாயகத் தேசியத்தாலும்தான் இம் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வைக் காண முடியும். ஏனெனில் தேசியத் தனித்துவமென்பது அவர்களின் விவசாய நிலங்களின் தனித்துவமாகவும் உள்ளது. சிங்கள மற்றும் தமிழ்ப் பேரகங்காரவாதிகளால் இப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது. அவர்களின் தலையீடு இம்முப்பிரிவு மக்களும் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்ளும் நிலையைத்தான் தோற்றுவித்துள்ளதே தவிர, அங்கு அமைதியை ஏற்படுத்தவில்லை. ஏற்படுத்தவும் மாட்டாது.

கிழக்குமாகாணத்தின் ஒரு பகுதியான திருகோணமலை மாவட்டம் 13 அல்லது 14-ம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு ஆரியச் சக்கரவர்த்திகளால் ஆளப்பட்ட இராச்சியத்துள் அடங்கியிருந்தது. இதை 'Demala-pattanama' (தமிழ் பட்டணம்) என சிங்கள வரலாற்று நூல்கள் குறிக்கின்றன. தமிழில் யாழ் பட்டினம் என அழைக்கப்படுகிறது. மட்டக்களப்பு இக்காலப்பகுதிக்குப் பின்புவரை கண்டி இராசதானியின் ஆளுகைக்குக் கீழிருந்தது. இதனால் சமூகப் பழக்க வழக்கங்களிலும் மரபுகளிலும் திருகோணமலைக்கும், மட்டக்களப்பிற்கும் இடையே வேறுபாடுகள் நிலவுகின்றன. இருந்தாலும் திருகோணமலை மாவட்டத்தின் நிலப்பங்கீடு தொடர்பான நிலையும் கிட்டத்தட்ட இதுவேதான். ஆகவே கிழக்குமாகாணம் என்று முழுமையாகக் கூறலாம்.

ஏகாதிபத்தியசார்பு வம்சாவளித் தேசிய, இனக்குழுமவாத தேசிய, யாழ் மேட்டுக்குடியோ, உழுவதற்கு நிலம் கேட்ட கிழக்கின் தமிழ் விவசாயிகளுக்கு, "வா! ஆள், நிலம் தருகிறேன்" என ஆசைவார்த்தைகாட்டி அவர்களைத் தமது பீரங்கிக் குண்டுகளாகப் பயன்படுத்தி வருகிறது. இதுதான் யாழ் ஆதிக்கத் தேசியவாதத்தின் மற்றோர் குணாம்சமாகும்.

கிழக்கில் வர்க்கமும் தேசியமும் ஒரு நட்புறவு கொண்டிருந்தாலும், மலையகத்தைப் போல் இவையிரண்டும் தனித்தனியாக ஒரே அலைவரிசையில் பயணிக்கவில்லை. வர்க்கம் தேசியத்தின் ஊடாகவே தன்னை வெளிப்படுத்திக்கொண்டு, அல்லது வர்க்கம் தேசியத்துள் மறைந்துகொண்டு இரண்டும் இணைந்து பயணிப்பதே பொதுவான போக்காகக் காணப்படுகிறது. கிழக்கின் தமிழ்பேசும் மக்கள், போராட்டம், அபிவிருத்தி ஆகிய இரண்டுக்கும்

இடையே மாறிமாறிப் பயணிப்பதன் காரணம் இதுதான். வர்க்கநலன் (குறிப்பாக விவசாயிகளினதும் மீனவர்களினதும்) பாதிக்கப்படும் பொழுது அபிவிருத்திக்கான அவா மேலோங்குகிறது, தமிழ் மக்களின் தேசிய நலன் பாதிக்கப்படும்போது போராட்ட அவா மேலோங்குகிறது. அபிவிருத்திக்கான அவா மேலோங்கும் போது யாழ்-மைய தேசியவாதத்துடன் பிணக்கும், சிங்களத் தேசியவாதத்துடன் சமரசமும் ஏற்படுகிறது. போராட்ட அவா மேலோங்கும் போது யாழ்-மைய தேசியவாதத்துடன் சமரசமும், சிங்களத் தேசியவாதத்துடன் பிணக்கும் ஏற்படுகிறது. இராசதுரையிலும் இதைக் காணலாம், கருணா அம்மானிலும் இதைக் காணலாம். இது ஊசலாட்டமோ சந்தர்ப்பவாதமோவல்ல. கிழக்கு மக்களின் வர்க்க, தேசிய நட்புறவின் விளைவான இராஜதந்திரமாகும். தமது பகுதியில் உள்ள சிங்களக் குடியிருப்புகளுடனான (அயலவர்கள்) சமூக உறவைப் பேணுவதற்கும் இவ்வித இராஜதந்திரம் அவசியமாகிறது.

யாழ்ப்பாணத்தில் தேசியம் உழைக்கும் வர்க்க நலனை தனது கால்களால் மிதித்துத் துவைத்துக் கொண்டு பயணிக்கிறது என்பதை இங்கு கவனிக்கவேண்டும்.

‘கீழைக்காற்று’ கிழக்கின் வர்க்க நிலமையைப் புரிந்திருந்தது. கிழக்கின் கிராமப்புறங்கள் வர்க்க நோக்கிலான ஆயுத நடவடிக்கைகளுக்கு உகந்த இடமென்பதையும் புரிந்திருந்தது. இதனால் கிழக்கு மாகாணத்திலும் அதன் எல்லையோர பசறையிலும் சிங்களக் கிராமங்களை அண்டிய பகுதிகளில் ‘வாடிகளும்’ அமைத்தது. மூன்று மக்கள் பிரிவினருக்கும் இடையில் நேச உறவை உருவாக்கக் கூடியதாகவே அதனது அமைப்புக் கட்டுமான வேலைகள் அமைந்திருந்தன. ஆனால் வர்க்கத்துக்கும் தேசியத்துக்கும் இடையே நிலவிய நட்புறவை கணக்கில் கொள்ளவேயில்லை. முடிந்தால் தனதாக்கிக் கொள்ளவேண்டிய இந்தத் தேசியத்தை, இல்லையேல் நெருங்கிய நண்பராகவாவது ஆக்கிக் கொள்ளவேண்டிய இந்தத் தேசியத்தை தீண்டத்தகாத அருவருப்புப் பொருளாகவே பார்த்தது.

கீழைக்காற்றின் செயற்படு காலமாக இருந்த 70களின் நடுப்பகுதி, கிழக்குத் தமிழ்பேசும் மக்கள் யாழ்-மையவாதத் தேசியத்துடன் சமரச உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த காலமாகும். இதனால், கீழைக்காற்றானது யாழ்-மையவாதத் தேசியத்துடன் ஒரு கடுமையான அரசியல் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. செயற்படமுடியா நிலை ஏற்பட்டவுடன் பலமாக வீசிய இனவாத சூறாவளியானது தமிழ், சிங்களத் தொடர்புகளை அள்ளிக்கொண்டு போனது அல்லது தனிமைப்படுத்தித் தூக்கியெறிந்தது. 1977 இனப் படுகொலைகள் ஏற்படுத்திய அதிர்ச்சியும் இதற்கோர் காரணமாக அமைந்தது.

### 3.1.4) **யாழ்-குடாநாட்டு அனுபவம்**

70களின் முற்பகுதியில் குடாநாட்டில் ஒடுக்கப்பட்ட சாதியினரின் சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான உணர்வும், உழைக்கும் மக்களின் வர்க்க ஒடுக்குமுறைக்கெதிரான உணர்வும் பின்னிப்பிணைந்தே இருந்தன. இந்தப் பிணைப்பு வர்க்க உணர்வை சேதப்படுத்துவதாகவும் சாதிய உணர்வை செழுமைப்படுத்துவதாகவுமே இருந்தது. ஒடுக்கப்பட்ட சாதிப்பிரிவினரிடையே இருந்து விவசாயம், கைத்தொழில், சேவை வளங்குதுறை ஆகிய சகல துறைகளிலும் நடுத்தர வர்க்கம் ஒன்றின் உருவாக்கம் தொடங்கியிருந்தது, இவ் வர்க்கம் பொருளாதார ரீதியில் வளர்வதற்கான சமூக-பொருளாதார சூழல் இருந்ததுவுமே அதற்கான காரணங்களாகும். ஒடுக்கப்படும் சாதியினர் உழைக்கும் வர்க்கமாக இருந்ததால் சேதப்படுத்தப்பட்ட வர்க்க உணர்வு மழுங்கடிக்கப்படவில்லை. பொருளாதார ரீதியில் வளர்ந்து வந்த இவ் வர்க்கம் தனது வளர்ச்சிக்காக ஒரு பக்கம் சாதிய ஒடுக்குமுறைகளை எதிர்த்தது, மறுபக்கம் சாதியைச் சொல்லி தனது சொந்தச் சாதியினரையே சுரண்ட ஆரம்பித்தது. இதற்காக சாதிய முரண்பாடுகளை தனது வர்க்க வளர்ச்சிக்கு சாதகமாகப் பயன்படுத்தியது.

இவ்வளர்ச்சியும், இந்நிகழ்வுப் போக்கும் நடந்து கொண்டிருக்கும் அதே வேளையில் அடுத்த பக்கத்தில் குடாநாட்டின் கிராமப்புறங்களில் வாழ்ந்த சாதிய-பிணைப்புத் (Cast-bonded) தொழிலாளர்களிடையே இருந்து கிராமப்புறச் சுதந்திரத் தொழிலாளவர்க்கம் ஒன்று உருவாகி வந்தது. இவ் வர்க்கம் சாதிய மற்றும் வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடியும் வந்தது. இக் கிராமப்புறச் சுதந்திரத் தொழிலாள வர்க்கத்தின் தோற்றம் சாதிய-பிணைப்புத் (Cast-bonded) தொழிலாளர்கள் மத்தியில் மாத்திரம் நடைபெறவில்லை, அனைத்து சாதிப்பிரிவினரிடையேயும் நடைபெற்றது. வெள்ளாளரிடையேயும் இது நடைபெற்றது. இதனால், சாதிய எல்லைகளைத் தாண்டி வர்க்க அடிப்படையில் கிராமப்புறச் சுதந்திரத் தொழிலாள வர்க்கம் என்ற முறையில் புதியதோர் ஐக்கியம் ஒன்று உருவாகுவதற்கான சமூக-பொருளாதாரச் சூழலொன்று தோன்றியிருந்தது.

இக் கணிப்பீட்டின் அடிப்படையில், ‘கீழைக்காற்று இயக்கம்’ தேசிய ரீதியில் கலைந்து போனாலும்; அதன் குடாநாட்டு உறுப்பினர்களில் சிலரும் புதிய வரவுகளும் இணைந்து ‘கிராம உழைப்பாளர் சங்கம்’ என்ற பதாகையின் கீழ் கிராமப்புறச் சுதந்திரத் தொழிலாளி வர்க்கத்தை அணிதிரட்டினர்.

ஒடுக்கப்பட்டசாதிய-உழைக்கும் வர்க்க உறவுகள் இவ்விதமாக இருக்க, தமிழ்த் தேசிய-சாதிய உறவுகளும், தமிழ்த் தேசிய-வர்க்க உறவுகளும் 70களின் முற்பகுதியில் எவ்விதம் இருந்தன என்பதை நோக்குவோம்.

தமிழ்த் தேசியத்திற்கும் ஒடுக்கப்பட்ட சாதியத்திற்கும் இடையே இருந்த உறவுகள் நேசமற்றே இருந்தனவென்பது அனைவரும் அறிந்ததே. இப்பிரச்சனையை ஒரு தேசியப் பிரச்சனையாகப் பார்க்காமல் கட்சிகட்டும் பிரச்சனையாகவே தாய்க்கட்சி பார்த்தது. அதே தவறையே கீழைக்காற்று இயக்கமும் பின்பற்றியது. இதனால் தேசிய இயக்கத்திலிருந்து மாத்திரமல்ல, உயர் சாதிய உழைக்கும் விவசாயிகளிடமிருந்தும், குடாநாட்டின் இளைஞர்களிடமிருந்தும் தனிமைப்பட்டும் இருந்தார்கள். இவைபற்றி ஏற்கனவே சொல்லப்பட்டுவிட்டன.

தேசிய-உழைக்கும் வர்க்க உறவுகள் எவ்விதம் இருந்தன? ஒருபுறம் பகைமை உறவாகவும் இன்னோர்புறம் சிநேக உறவாகவும் இருந்தது. சாதியும் வர்க்கமும் நெருக்கமாகக் கலந்திருந்ததே பகமையுறவுக்கான காரணமாகவிருந்தது. குடாநாட்டில் தமிழ்த் தேசியமென்பது சேவை வழங்குதுறைக்குத் தம்மைத் தயார்படுத்தி வைத்திருந்த மற்றும் தயார்படுத்திக் கொண்டிருந்த குடாநாட்டு நடுத்தர வர்க்க இளையோர்களின் பிரச்சனையாக இருந்தது. இந்த இளையோர்களில் ஏகப்பெரும்பான்மையினர் ‘உயர் சாதியை’ச் சேர்ந்தவர்களாகவும், இவர்களின் பெற்றோர்கள் உழைக்கும் வர்க்கத்தினராகவும் இருந்தனர். இவர்கள்தான் ஜனத்தொகையில் அதிகமானவர்களாகும். இதனால் இன்னோர் புறத்தில் தேசியத்துக்கும் உழைக்கும் வர்க்கத்துக்கும் இடையேயான உறவுகள் சிநேக உறவுகளாகாவும் இருந்தன. அத்துடன் இதன் காரணத்தால் தமிழ்த் தேசியத்திற்கு பலமானதும் பரவலானதுமான ஒரு சமூக அடித்தளமும் இருந்தது. இந்த புறநிலை யதார்த்தத்தை கீழைக்காற்று கணக்கில் கொள்ளவில்லை.

புரட்சிகர அல்லது எதிர்ப்புரட்சிகர அலை பொங்கி எழும்போது அதனால் அள்ளிச்செல்லப்படுவதைத் தவிர்க்க வேண்டுமானால், ‘வரட்டுவாதிகளாக’ (Dogmatist) இருப்பதை விடுத்து, விருப்புவெறுப்பின்றி புறநிலை யதார்த்தத்தை கணக்கில் கொள்ளவேண்டும். அதை எதிர்கொள்ளக்கூடிய முறையில் தமது வேலைத்திட்டங்களை ஆக்கிக்கொள்ளவும், அமைப்பைத் தகவமைத்துக் கொள்ளவும் வேண்டும்.

### 3.2) **தீண்டாமை மிச்சசொச்சமா?**

தாய்க்கட்சி தீண்டாமையை நிலப்பிரபுத்துவத்தின் மிச்சசொச்சமாகவே புரிந்து கொண்டிருந்தது. இப்புரிதலின் அடிப்படையிலேயே கட்சியின் வாலிபர் சங்கங்களும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் உருவாக்கப்பட்டதுடன், யாழ் குடாநாட்டு வேலைத்திட்டங்களும் வகுக்கப்பட்டன. ஆரம்பமான முதல் இருவருடங்களும் போராட்டம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறியது.

யாழ்குடாநாடே கலகலப்பாக இருந்தது. ஆனால் மூன்றாவது வருடத்தில் இருந்து போராட்டம் மெதுமெதுவாகத் தனது வடிநிலைக்குச் செல்ல ஆரம்பித்தது. இறுதியில் முற்றுப் பெற்றுவிட்டது. வர்க்கப் போராட்டமென்ற முடிவை அடைவதற்கானதோர் மார்க்கமாக (mean) இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட பொதுஇடங்களில் தீண்டாமையை ஒழிப்பதற்கான இப் போராட்டம் தன்மட்டில் தானே ஒரு முடிவாக அமைந்துவிட்டது. (A mean has become an end itself) ஒரு வர்க்கப் போராட்டமாகத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. இதை மையமாகக் கொண்ட கருத்துப் போராட்டமொன்று கட்சிக்குள் நடைபெற்றது. தீண்டாமை நிலப்பிரபுத்துவத்தின் மிச்சசொச்சம் என்ற கருத்தை நிராகரித்தவர்கள் பின்னாளில் கீழைக்காற்றின் வடபகுதிக் கிளையாக மாறினார்கள்.

### 3.2.அ) **முதலாவது வகைச் சாதியக் கட்டுமானம்**

யாழ்ப்பாணத்தில் இடதுசாரிக் கட்சிகளின் கவனத்தை ஈர்த்த சாதியக் கட்டுமானமும், இந்தியச் சாதியக் கட்டுமானமும் வேறுபட்டது. யாழ்குடாநாட்டிலேயே இருவிதச் சாதியக் கட்டுமானங்கள் இருந்துள்ளன, இன்றும் தொடர்கின்றன. ஒன்று வெள்ளாளரையும் அவர்களின் அடிமை-குடிமைச் சாதிகளையும் உள்ளடக்கியது. இதை வெள்ளாளர்-பஞ்சமர் இணை என்றும் சொல்லலாம். இது நேரடியாகவே நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுமுறையின் உற்பத்தி உறவுகளாகவும், வர்க்க ஒடுக்குமுறையின் நிலப்பிரபுத்துவ வடிவமாகவும் இருந்தது. இதை ஆண்டான்-அடிமை உறவுமுறை என்று இனிவரும் பகுதிகளில் அழைத்துக் கொள்வோம்.

குடிமைச் சாதியினர் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஒரு வகையினர் வெள்ளாளரின் உள்வீட்டுப் பிள்ளைகளாக இருக்க அனுமதிக்கப்பட்டவர்களாகும். இவர்கள் தீண்டப்படாதவர்களாகக் கருதப் படவில்லை. தச்சர், கொல்லர், பொற்கொல்லர், கட்டிடக் கலைஞர், பிராமணர் ஆகியோர்கள் இவர்களில் சிலராகும். வெள்ளாளர்களின் சடங்குகளில் இவர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை. நில உடமை இவர்களுக்கும் மறுக்கப்பட்டது, ஆனாலும் இவர்கள் கௌரவக் குறைவாக நடத்தப்படவில்லை. அடுத்தவகைக் குடிமைகள் தீண்டாமைக்கு உட்படுத்த ப்பட்டவர்களாகும்.

இலங்கைத் தமிழரிடையேயான சாதியக் கட்டுமானத்தில் பிராமணர்களும் குடிமைச் சாதிக்குச் சமமானவர்களே என்பது கவனிக்கப்படவேண்டும். இவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட தொழில் ஆகம வழிபாட்டு முறைக் கோவில்களில் பூசை செய்தல். அர்ச்சகர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

தீண்டாமையெனும் கருத்துருவும், அதை அடித்தளமாகக் கொண்ட சமூக ஒழுங்குமுறைகளுந்தான் இந்த ஆண்டான்-அடிமை உறவுமுறையைப் பாதுகாக்கும் ஆயுதங்களாக இருந்தன. இன்றும் (21ம் நூற்றாண்டின் முற்பாதியில்) அக்குணாம்சம் முற்றாக அழியவில்லை. ஆகவே இதை நிலப்பிரபுத்துவ உறவின் மிச்சசொச்சம் என்று இன்றுங்கூடச் சொல்ல முடியாது. இவ்விதம் இருக்க 1960 களில் அவ்விதம் இனங்காட்டியது முற்றிலும் தவறானதாகும். இத்தவறான கணிப்பீட்டால்தான் புரட்சிகரப் போராட்டமாக ஆரம்பித்த தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் ஒரு 'சமூக-பண்பாட்டுச் சீர்திருத்தம்' என்ற எல்லைக்குள் குறுக்கப்பட்டுவிட்டது. இது எவ்விதம் நடந்தது?

யாழ் குடாநாட்டு சமூக உருவாக்கத்தின் சில விவசாயப் பகுதிகளில் நிலப் பிரபுத்துவ நிலவுடைமை முறையும், நிலபிரபுத்துவ உற்பத்தி உறவு முறைகளும் இன்னமும் நிலவுகின்றன என்பதே கீழைக்காற்று முன்னோடிகளின் கருத்தாக இருந்தது. இப் பகுதிகளில் 'தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், வர்க்கப் போராட்டத்தின் துவக்கப் புள்ளியாகும். ஆகவே இப்பகுதிகளில் இப் போராட்டத்தை நிலத்துக்கான போராட்டமாக, உழுபவருக்கே நிலம்! என்ற கோரிக்கைக்கான போராட்டமாக முன்னெடுத்துச் சென்றிருக்க வேண்டுமென்தே அவர்களின் வாதமாக இருந்தது. இது தவிர்ந்த பிற பகுதிகளில், தீண்டாமை ஒழிப்பு என்பது, முதலாளித்துவ ஜனநாயகத்துக்கான போராட்டமாகவே இருந்தது. பொது இடங்களிலான தீண்டாமையை ஒரு மிச்சசொச்சம் என்ற கருத்து இவ்விடங்களுக்கே பொருந்தி வரவில்லை. ஏனெனில் இதைப் பாதுகாக்க முழு அதிகார அடுக்குகளும் அங்கு சமூகம் தந்திருந்தன. முன்சொன்ன பகுதிகளில் இப் போராட்டத்தை நிலப்பிரபுத்துவ உறவு முறைகளுக்கு எதிரான போராட்டமாக முன்னெடுத்திருந்தால் முதலாளித்துவ ஜனநாயகத்துக்கான போராட்டம் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் துணைப்படையாக இருந்திருக்கும். யாழ்ப்பாணத்தில் புதிய ஜனநாயகப் புரட்சி ஆரம்பமாகியிருக்கும். ஆனால் போராட்டத்தின் முடிவு அவ்விதம் அமையவில்லை. இப் போராட்டத்தால் சாதிய ஆதிக்கம் நிராயுதபாணியாக்கப்படவில்லை, ஆனால், தீண்டாமை எனும் நிலப்பிரபுத்துவ ஆயுதத்தின் முனை மழுங்கடிக்கப்பட்டது.

இதனால் ஒரு புறம் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் தொடர்ந்தன. மறுபுறத்தில், முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் அரும்பத் தொடங்கியிருந்த விவசாயப் பிரதேசங்களில் பஞ்சமர்களிடையே இருந்து நிலவுடமை உழைக்கும் விவசாயிகள் அணி ஒன்று வளர்வது சாத்தியமானது. 1971-ல் 'அப்பே ஆண்டுவ' அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பணப்பயிர் செய்கை இந்த வளர்ச்சியைத் துரிதப் படுத்தியது. கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சி நிலவும் வர்க்கக் கட்டமைப்புக்குள், ஒரு சாராரின் வர்க்க

மேல்நிலையாக்கத்திற்கு துணைபுரிவதாக மட்டும் அமைந்துவிட்டது. புதிய ஜனநாயகப் புரட்சிக்கு சாதகமான ஒரு சந்தர்ப்பத்தை கம்யூனிஸ்டுகள் கைநழுவ விட்டுவிட்டார்கள். 'நிச்சாமம் ஒரு நக்ஸல்பாரியாக மாறுகிறது' என்ற அமிர்தலிங்கத்தின் அச்சத்தை பொய்யாக்கிவிட்டார்கள்.

### 3.2.ஆ) **இரண்டாவது வகைச் சாதியக் கட்டுமானம்**

தற்போது இரண்டாவது வகைச் சாதியக் கட்டுமானத்தைப் பார்ப்போம். வெள்ளாளர், பஞ்சமர் இரு சாராரையும் தவிர்த்து மூன்றாவது ஒரு பிரிவுமிருந்தது. வரலாற்றின் வெவேறு கட்டங்களில் தனித்தனிக் குலங்களாகவும் (முக்குவர், கரையார், திமிலர் போன்றோர்), குறுநில மன்னர்களின் தொழில் பிரிவுகளாகவும் (கைக்கோளர், சிவியார், இத்தியாதியோர்), வந்தவர்களுந்தான் அந்த மூன்றாவது பிரிவினராகும்.

வெள்ளாளர்களை குழு-1 எனவும், பஞ்சமர்களையும் பிற குடிமைகளையும் உள்ளடக்கியவர்களை குழு-2 எனவும், மூன்றாவதாகக் கூறியவர்களை குழு-3 எனவும் கொள்வோம். குழு1-க்கும் குழு2-க்கும் இடையேயான உறவுமுறைபற்றி ஏற்கனவே பார்த்தோம். குழு2-க்கும் குழு3-க்கும் உற்பத்திச் செயல்முறை சார்ந்து எந்த நேரடித் தொடர்பும் இருக்கவில்லை. சாதாரண நடவடிக்கைகளில்கூட உறவோ பகைமையோ இருக்கவில்லை. குழு3-க்கும் குழு1-க்கும் இடையே கூட உற்பத்தி சார்ந்து எந்த நேரடித் தொடர்பும் இருக்கவில்லை. ஆனால் அன்றைய பிரதான உற்பத்திக் கருவிகளாக இருந்த நிலம் (உவர்நிலம் தவிர்ந்து), தறி, கிணறு என்ற நீர்நிலை, விவசாயக் கருவிகள் செய்யும் தொழில் நுட்பம், உயிர்க் கருவிகளான அடிமைகள், குடிமைகள் ஆகியவற்றின் உடமை உரிமையிலும், (Property Rights) பயன்பாட்டு உரிமையிலும் குழு3-இனர் தலையிடக்கூடாது என்பதில் குழு1-இனர் மிகவும் விழிப்பாக இருந்தார்கள்.

இத்தலையீட்டைத் தடுப்பதற்கான கருத்துருவும், சமூக ஒழுக்க முறைகளுந்தான் 'தூய்மைக் கோட்பாடும்', 'உள்மணமுறையுமாகும்'. நிலத்துடன் சம்பந்தப்படாத தொழில்கள் தூய்மையற்றவையாகின் மச்சம், மாமிசம் அசைவமாகிறது. - இங்கு உணவுமுறை மத நடைமுறையுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. அசைவம் தூய்மையற்றதாகிறது, அதே நேரத்தில் காய்-கனி உற்பத்தியில் இருந்து அவர்கள் தடுக்கப்படுகிறார்கள் - 1900களின் நடுப்பகுதிவரை உணவுப்பொருள் விவசாயம் 'கைக்கும் வாய்க்குமானதாகவே' இருந்தது, அவை சந்தைக்கான உற்பத்திகளாக இருக்கவில்லை. தேவை போக மீதமானவைகளே சந்தைக்கு வந்தன. ஆரம்ப நாட்களில் 'சாய வேரும்' பின்னர் புகையிலையுமே சந்தைக்கான உற்பத்திகளாக இருந்தன. இதனால் குழு மூன்றினர் உணவுப் பொருட்களுக்காக தன்னிறைவை எய்த

முடியாதவர்களகவே இருந்தனர். உணவுப் பொருட்களின் சந்தைகளும் குழு-1இன் கைகளிலேயே இருந்தது. அகதிகளாக வெளியேறும்வரை மீனவர்களில் பலர் பல காய்கனிகளைப் பார்த்ததே இல்லை என்பது பொய்யான தகவலல்ல.

மனிதர் இயல்பாகவே ஈருணவுண்ணிதான். அதாவது, தாவர பட்சணியாகவும், மாமிச பட்சணியாகவும் உள்ளனர். ஒரு பகுதியினர் பெரும்பான்மை மக்களிடம் இருந்து தம்மைப் பிரித்து தாம் உயர்ந்தவர்களாவதற்காகவும் மீன் சந்தையை வளர விடாமல் பண்ணுவதற்காகவும் மச்சம்-மாமிசத்தை இழிவாக்கி, அதை ஒரு மதத்திற்கு வேண்டப்படாததாக்கி அவ்வுணவுக்கு அசைவ உணவு என்று பெயரும் வைத்து விடுகிறார்கள். அசைவ உணவு உண்பவர்கள் அசைவர்களாக்கப்பட்டு, அவர்களுக்கு தூய்மையற்றவர்கள் என்ற படிமமும் கொடுக்கப்படுகிறது. ஏன் இதற்கு மதவிழுமியத்தையும், தூய்மைவிழுமியத்தையும் கொடுக்கவேண்டும்? அதை உண்பவரை ஏன் இழிவு படுத்தவேண்டும்? தாவரஉண்ணி, ஈருணவுண்ணி என பிரித்திருக்கலாமே? காலனியவாதிகளுடன் நெருங்கியிருந்த மேல்சாதியினர் ஆங்கிலத்தில் Vegitarian, Non-vegitarian என மொழிபெயர்த்துள்ளார்கள். தாவரம் மட்டுமே உண்பவரென்று ஒருவர் இருக்கலாம். ஆனால், தாவரம் உண்ணாதவரென்று ஒருவர் இருக்கமுடியுமா? அரிசியும், கோதுமையும் கூட தாவரந்தானே? இது வெள்ளைக்காரருக்கு புரியாததொன்றல்ல. புதிய சூழலுக்கு இசைவாக நிலப்பிரபுத்துவ விழுமியங்களுக்கு மீளுருக்கொடுப்பதுதானே (Reactivation) வெள்ளைக்காரர்களின் (காலனியலிசத்தின்) வேலை. இப் பதப் பிரயோகம் மனிதரை விலங்குகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கக் கூடியதாகவே அமைந்துள்ளது. தாவர உண்ணிகள் பசுவாகின்றனர், அல்-தாவர உண்ணிகள் நாய், பூனை, நரி, பன்றியாகின்றனர். என்னே நுட்பமான பண்பாட்டுக் கட்டுமானம்!!

- எலிவளையானலும் தனிவளை வேண்டும் எனக் கூறி சொந்த நிலமும் சொந்தக் குடிலும் இல்லாதவர்கள் தூய்மையற்றவர்களகிறார்கள். அதே நேரத்தில் அவர்களுக்கு சொந்த நிலமும் சொந்தக் குடிலும் மறுக்கப்படுகிறது.

- அடிமை-குடிமைச் சாதிகளின் பங்களிப்புகள் இல்லாத சடங்குகள் தூய்மையற்றவையாகின்றன. தூய்மையற்ற சடங்குகளைச் செய்பவர்களும் தூய்மையற்றவர்களாகிறார்கள். அதே நேரத்தில் இந்தத் 'தூய்மையற்றவர்களில்' மிகச் சிலர் அடிமை, குடிமைகளைத் தமது சடங்குகளுக்கு அமர்த்தினால் அந்த அடிமை குடிமைகள் தண்டிக்கப்பட்டார்கள்.

- ஆகம வழிபாட்டுமுறையைப் பின்பற்றாத கோவில்கள்

தூய்மையற்றவையாகின்றன. தூய்மைவாதிகளின் புரிதலின்படி நல்லூர் கந்தன் அப்பழுக்கற்ற தூய்மையானவன், சன்னதிக் கந்தனோ தூய்மையில்லாதவன். ஐயரைக் கொண்டு கும்பாவிசேகம் நடத்திக் கோவில்களைத் தூய்மைப்படுத்தும் சம்பவங்கள் யுத்த-இடை சமாதானத்தின் போது துரிதமாகவும் ஏராளமாகவும் நடைபெற்றன என்பதைக் கவனிக்கலாம்.

- பரத நாட்டியம் தவிர்ந்த பிற கலைஞர்கள் கூத்தாடிகள் ஆக்கப்பட்டு அக்கலையும் அவர்களும் தூய்மையற்றவர்களாகி றார்கள்.

- காதலிப்பது தூய்மையற்றதாகிறது. காதலிப்பவர்கள் ஓடுகாலிகளாக்கப் படுகிறார்கள். உள் மணமுறையால் அதிகம் பாதிக்கப்பட்டது குழு3-இனரேயாகும். இவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும், குறுகிய பரப்பளவிலும் வாழ்கின்றபடியாலும் "சுற்றியும் சுற்றியும் சுப்பற்ர கொல்லைக்குள்" சோடி தேடவேண்டியிருந்தது.

எமக்கு நினைவுக்கு வந்த தூய்மையற்ற செயல்களை முன்வைத்துள்ளோம். வாசகர்கள் உங்களுக்குத் தெரிந்ததையும் சேர்த்துக் கொள்ளலாம்.

'தூய்மை' என்ற கருத்துரு மாத்திரமல்ல, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைமுறையில் இருந்த 'தேசவழமைச் சட்டமும்' இதற்குத் துணையாக இருந்தது. இவ்விதமாக குழு3-இனர் ஓரங்கட்டப்பட்டார்கள், ஒதுக்கப்பட்டார்கள். நிலவுடைமைக் கட்டமைப்பால் உள்வாங்கிக் கொள்வதில் இருந்து இவர்களை விலத்தி வைப்பதற்காக தீண்டாமை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படவில்லை, ஆனால் அவர்கள், விளிம்புநிலைப்படுத்தல் நடவடிக்கைகளினாலும், மிக நுணுக்கமாக திட்டமிடப்பட்ட சமூக வழமைகளாலும் தடுக்கப்பட்டார்கள். இந்த நிலையைப் பாதுகாப்பதற்காகத்தான் வெள்ளாள மேட்டுக்குடியினரிடையே இருந்து பெருந்தொகையான வக்கீல்கள் தோன்றினார்கள். - தமிழரசுக் கட்சி 'அப்புக் காத்துமார் கட்சி' என்றே அந்நாட்களில் அழைக்கப்பட்டது.

தீண்டாமையெனும் ஆயுதம் பலவீனப்பட்டதன் பின்னர், நிர்வாகச் சேவைத் துறைசார் நடுத்தர வர்க்கத்தினர் பஞ்சமர்களிடையே இருந்து உருவாகத் தொடங்கினர். இதன் பின்னர் 'தூய்மைவாதம்' எனும் ஆயுதம் முன்னாள் அடிமை-குடிமை மக்கள் மீதும் பிரயோகிக்கப்படும் நிகழ்வுகள் ஆரம்பமாகிவிட்டன.

இந்த இரண்டாவது வகைச் சாதியக் கட்டுமானந்தான் சிங்கள

மக்களிடையேயும் நிலவுகிறது. சிங்கள சாதியக் கட்டுமானத்தின் தூய்மைவாதத்தை நியாயப்படுத்துவது மஹாவம்சம். ஸ்ரீலங்காவில் பௌத்த-சிங்கள கொவிகம ஆதிக்கம் தோன்றியதற்கான காரணத்தை புரியக்கூடியதாய் உள்ளது. ஆனால், தமிழரிடையே இதை நியாயப்படுத்துவது எது? இதன் சித்தாந்த அடித்தளம் எது? ஆராயப்பட வேண்டும். இவ் ஆய்வு மிகமிக அவசியம். தமிழீழத் தேசியம் யாழ்-வெள்ளாள மேட்டுக்குடி ஆதிக்கத்திற்குள் போய்விட்டது என்றோர் கருத்து முன்வைக்கப்படுகிறது. இது ஒரு வாய்ப்பாடாகவும் மாறிவிட்டது. அது என்ன? அது எவ்விதம் என்பது விரிவாக்கப்படவேண்டும். இந்நூலில் அதற்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.3) **தமிழ்த் தேசியப் போராட்டத்தை புதிய ஜனநாயகப் புரட்சியின் கீழ்க் கொணர எடுத்த முயற்சியும் தோல்வி**

உட்கட்சிப் போராட்டத்தின்போது, 'கீழைக்காற்று' மனதளவில் 'சீனச் சப்பாத்தையே' கொண்டிருந்தது. அதனால், உட்கட்சிப் போராட்டத்தின் நிகழ்ச்சி நிரல்களில் தேசிய இனச்சிக்கல் தொடர்பான விவகாரங்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. தாய்க்கட்சி தன்னிடமிருந்த சீனச் சப்பாத்தையிட்டு பெருமைப்பட்டுக் கொண்டு வாழாவிருந்தது. 'கீழைக்காற்று' அதைத் தூக்கிக் கொண்டு வேகமாக ஓடியது. இதுதான் வித்தியாசம்.

முதல் தலைமுறை இடதுசாரிகள் தேசிய இனப்பிரச்சனையை ஒரு மொழிப் பிரச்சனையாக மாத்திரமே பார்த்தார்கள் என்றோர் குற்றச்சாட்டு உண்டு. ஆனால் கீழைக்காற்றோ மொழிப்பிரச்சனையை ஒரு அரசியல் பிரச்சனையாகவே பார்க்கவில்லை. கீழ் வரும் நிகழ்வு அதற்கோர் எடுத்துக்காட்டாகும். இவ் அமைப்பின் அரசியல்குழு, இராணுவக்குழு ஆகிய இரு அங்கங்களிலும் தமிழ்த் தோழர்களும், சிங்களத் தோழர்களும் உறுப்புரிமை பெற்றிருந்தனர். யாழ், மாவட்டமும், மாத்தறை மாவட்டமும் இதற்கு விதிவிலக்கானதாக இருந்தன. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் நடந்த கூட்டங்களும் உரையாடல்களும் சிங்களத்திலேயே நடந்தன. தலைமை மட்டத்தில் இருந்து வருகை தரும் பிரதிநிதிகளில் ஒருவராவது தமிழ் தெரியாத சிங்களவர்களாக இருப்பார் என்பதால் யாழ்ப்பாணத்தில் சிங்கள மொழிபெயர்ப்பு கட்டாயமானதாக இருந்தது. ஏனைய பகுதிகளில் மொழிபெயர்ப்பு சிலவேளைகளில் இருக்கும் அதுவும் என்றுமே முழுமையானதாக இருந்ததில்லை. இந்நிகழ்வுகளில் பங்குகொள்ளும் அனைவருக்கும் (கிட்டத்தட்ட) சிங்களம் புரியக்கூடியதாய் இருந்ததே அதற்கான காரணமாகும். பலருக்கு சிங்களம் சரளமாகப் பேசவும் தெரிந்திருந்தது. கூட்டங்களில் அவரவர்கள் தத்தமது தாய்மொழியிலேயே பேசவேண்டும் என்ற தீர்மானம் பல தடவைகள் எடுக்கப்பட்டன. ஆனால் அது

இறுதிவரை அமுல்ப்படுத்தப்படவில்லை. கடைசி நாட்களில் தலைமைமட்ட சிங்களத் தோழர்களில் காமினி யாப்பா மட்டும் தமிழில் பேசினால் புரிந்து கொள்ளக் கற்றுக்கொண்டார். அமைப்புக்குள்ளேயே மொழிச் சமத்துவத்தை ஏற்படுத்த முடியவில்லை. சிங்களத் தரப்பினர் அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவுமில்லை.

அடுத்ததோர் உதாரணந்தான், 'திராவிட சகோதரய' எனும் பதப் பிரயோகமாகும். சிங்கள மார்க்ஸியர்களும் முற்போக்குவாதிகளும் தமிழ் நண்பர்களையும், தோழர்களையும் நேரடியாக விழிக்கும் போதும் சரி, பிறருக்கு அறிமுகப்படுத்தும் போதும் சரி தமிழர் என அழைக்க மாட்டார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம், தமிழரை கௌரவமாக அழைக்கும் சொற்பதம் சிங்களத்தில் இல்லை என்பதேயாகும். 'தெமிழு' என்றோர் பதமேயுண்டு. இது இழித்துச் சொல்லப்படும் பதமாகும். இதற்கு முன்னால் 'ஊ' என்ற சொல்லும் சேர்க்கப்படுகிறது. ('ஊ' என்பது தரக்குறைவான அஃறிணைப் பதமாகும்.) பொதுவாக அழைக்கும்போது 'தெமிழ ஜனதாவ'- தமிழ் மக்கள்- எனவும், மலையக மக்களை 'வத்து ஜனதாவ' எனவும் அழைப்பர். தமிழர் விடயத்தில் மட்டுமல்ல, முஸ்லீம்கள் விடயத்திலும் இவ்விதமே. அவர்கள் 'மறக்கல மினுசு'-மரக்கல மக்கள்- என அழைக்கப்படுவர் மரியாதைக்குரிய பதங்கள் இல்லாதபடியால்தான் 'திராவிட சகோதரய' என அழைக்கிறோம் என்பார்கள். இதுவும் ஒரு இனவாதப் பதப்பிரயோகம் என்று கூறியும் ஏற்றுக்கொள்ளவில்லை. 'எம்மைத் திராவிடர் என அழைப்பதன் மூலம் நீங்கள் ஆரியர் என்பதை சொல்கிறீர்கள், இது அதைவிட மோசம்' என்று கூறினாலும் தகுந்த பதில் வரமாட்டாது. 'திராவிட சகோதரய' தொடர்ந்தது. இன்றும் தொடர்கிறதா? தெரியவில்லை.

உட்கட்சிப் போராட்டத்தின் போது தேசிய இன விவகாரம் இடம் பெறவில்லையே தவிர சுயமாகச் செயல்படத் தொடங்கிய பின்னர் தாய்க் கட்சியின் நிலைப்பாட்டில் இருந்தவண்ணம் இது ஒரு பிரதான விவகாரமாக அமைப்புக்குள் எடுத்துக் கொள்ளப்பட்டது. சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் நாசகாரப் பரிமாணத்தைப் பற்றி மௌனம் சாதிப்பது, ஆனால் தமிழ்த் தேசியவாதத்தின் எதிர்மறைக் கூறுகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றலை அமைப்பு உறுப்பினர்களிடையே ஏற்படுத்துவது, இதுதான் தாய்க் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. இதுதான் கீழைக்காற்றின் நிலைப்பாடகவும் தொடர்ந்தது. இந்த வேலை நன்றாகவும் நடந்தது. இதனால்தான் கீழைக்காற்று அமைப்புக்குள் சிங்களவர்களும் தமிழர்களும் எந்த வேறுபாடும் இன்றிக் கலந்திருந்தனர். பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதிலும், பொறுப்புகள் ஒப்படைக்கப்படுவதிலும் தமிழர் சிங்களவர் என்ற வேறுபாடு இருக்கவில்லை.

ஆனால் கீழைக்காற்று ஆயுதப் போராட்டத்திற்குரிய ஒரு அமைப்பாகத் தன்னை உருவாக்கி வந்ததனால் இவ்விவகாரத்தை ஒரு இராணுவப்

பிரச்சனையாகவே பார்த்தது. அரசுக்கெதிரான போராட்டத்தின் மையப்புள்ளியாக உருவானால் தமிழ்த் தேசியவாதம் பிரிந்து போவதற்கான அபிலாசைகளைக் கைவிட்டு கீழைக்காற்றின் தலைமையில் இணைந்து கொள்வார்கள் என்றே கீழைக்காற்று எதிர்பார்த்தது. அதாவது; புதிய ஜனநாயகப் புரட்சி நடைமுறைக்கு வரும்போது தேசியம், சாதியம் போன்ற ஏனைய பிரச்சனைகளின் பகைமைத் தன்மைகள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனியைப்போல் தானாகவே அகன்று விடும் எனக் கீழைக்காற்று விசுவாசமாக நம்பியது. குழந்தைப்பிள்ளைத்தனமான ஆசை! தமிழ்த் தேசிய இயக்கத்தின் உள்ளாற்றல் பற்றிய மிகக் குறைவான மதிப்பீடு! தேசிய இன ஒடுக்குமுறை என்ற பிரதான முரண்பாட்டை புறந்தள்ளிவிட்டு வர்க்க முரண்பாட்டை முன்கொணர்ந்துவிடலாம் என்ற அசட்டுக் கற்பனை. வர்க்க முரண்பாடுகள் மேலெழும்போது அதைத் திசை திருப்புவதற்காக ஏனைய முரண்பாடுகள் மிக மூர்க்கமாக முன் தள்ளப்படும் என்பதே இலங்கையின் வரலாறாக உள்ளது.

கீழைக்காற்றின் மண்டைக்குள் இருந்த 'சீனச் சப்பாத்து', இலங்கையின் ஸ்தூலமான நிலைக்கொப்ப சிந்திப்பதைத் தடுத்து வந்ததே இதற்கான காரணமாகும். இலங்கைப் புரட்சி சம்பந்தமான வரட்டுவாத சிந்தனை முறையால் வீழ்த்தப்பட்ட இயக்கங்களுள் கீழைக்காற்றும் ஒன்றாகும்.

## ஆ.4) **புதிய ஜனநாயக மாக்சிய – லெனினிய – மாவோயிச கட்சி**

### ஆ.4.1) **5வது அனைத்து இலங்கை மாநாடு**

'எமது புதிய-ஜனநாயக கட்சி 1978-ம் ஆண்டு யூலை மாதம் 3-ந் திகதி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்னும் பெயரில் மார்க்சிஸ லெனினிச மாஓசேதுங் சிந்தனை அடிப்படையில் உருவாக்கப்பட்ட கட்சியாகும். இது தோழர் நா.சண்முகதாசன் தலைமையில் 1964-ல் உருவாகிய மார்க்சிஸ லெனினிசக் கட்சியின் தொடர்ச்சியில் உருவாகிய கட்சியாகும்.

1991-ல் நடைபெற்ற கட்சியின் இரண்டாவது தேசிய காங்கிரஸ் கட்சியின் பெயரை புதிய ஜனநாயகக் கட்சி எனப் பெயர் மாற்றம் செய்து கொண்டது.

கம்யூனிஸ்ட் கட்சி என்னும் பெயரில் இழைக்கப்பட்ட தவறுகள், பாராளுமன்ற சந்தர்ப்பவாத, திரிபுவாத நிலைகள், தமிழ் மக்கள் மத்தியில் தேடப்பட்ட அவப்பெயர்கள் எல்லாம் அதே பேரில் நாம் சுமப்பதை விரும்பவில்லை.'' பெயரில் மட்டும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதேயன்றி அதன்

அடிப்படைத் தத்துவார்த்த கொள்கை நடைமுறை வேலைகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

புதிய-ஜனநாயக மார்க்சிஸ-லெனினிசக் கட்சியின் 5வது அனைத்து இலங்கை மாநாட்டின் ஊடகங்களுக்கான அறிக்கை (27-06-2010) யின் சிலபகுதிகள் முவைக்கப்படுகின்றது.

புதிய ஜனநாயகக் கட்சியின் 5வது அனைத்து இலங்கை மாநாடு யூன் 25,26 -ம் திகதிகளில் கொழும்பில் இடம் பெற்றது. அதன் போது கட்சியின் பெயர் புதிய – ஜனநாயக மார்க்சிஸ – லெனினிசக் கட்சி என மாற்றம் செய்யப்பட்டது

“தேசிய இனப் பிரச்சினை இன்னும் இலங்கையின் பிரதான முரண்பாடாக இருப்பதால் அதற்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முழுப் பொறுப்பையும் இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.”

என்ற வாக்கியத்துடன் அறிக்கை ஆரம்பிக்கின்றது. அரசாங்கம்தான் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்று கோரப்படுகிறதா? அல்லது அரசாங்கந்தான் இதற்குப் பொறுப்பு என்பது எதிர்மறையாகச் சொல்லப்படுகிறதா என்பது தெரியவில்லை. இம் மாநாடு முடிந்ததன் பின்னர் பெயர் மாற்றத்துக்காக பதிவாளர் நாயகத்திடம் விண்ணப்பிக்க வேண்டியிருப்பதால் எதிர்மறையில் பேச வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கலாம்.

அத்துடன் ஒத்த பெயருடைய கட்சி ஒன்றை தேர்தல் ஆணையாளர் ஏற்கனவே அரசியல் கட்சியாக அங்கீகரித்தும் இருக்கிறார். மாநாட்டின் ஊடக அறிக்கையைத் தொடர்வோம்

‘.....அவர்களிடையே சமத்துவம், சுயாட்சி, சுயநிர்ணய உரிமை, ஐக்கியம் என்பனவற்றை உறுதி செய்யும் வகையில் ஐக்கிய இலங்கைக்குள் உரிய அரசியல் தீர்வு காணப்படுவது தாமதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும்..... அச் சட்டங்களின் கீழ் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களும், கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போனவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென இம் மாநாடு வலியுறுத்துகின்றது. இப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது மக்களைத் திசை திருப்பவே ஆளும் வர்க்க சக்திகள் தேசிய இனப் பிரச்சினையை தகுந்த கருவியாகத் தமது கைகளில் வைத்து ஆட்சி அதிகாரம் நடாத்தி வருகின்றனர். இதனை அனைத்துச் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் உழைக்கும் மக்களும் உணர்ந்து வர்க்க அடிப்படையிலான போராட்டங்களை முன்னெடுக்க அணிதிரள வேண்டும் என மாநாடு கோருகின்றது.’

இவ்வாறு புதிய-ஜனநாயக மாச்சிச-லெனினிசக் கட்சியின் (புதிய ஜனநாயக கட்சி) ஐந்தாவது மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், ‘2009-ம் ஆண்டின் இராணுவ நடவடிக்கைகளின் போது இடம் பெற்றுள்ளது எனப் பரவலாக முன் வைக்கப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் பற்றி இலங்கை அரசாங்கம் நேர்மையாக விசாரித்துக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.......’ இவையும் கோரிக்கைகள்.

அரசாங்கத்தை நோக்கிய கோரிக்கைகளே அதிகமாக உள்ளன. கட்சியின் அறிக்கையின் தொனி ஒன்றாகவும் ஊடகங்களுக்கான அறிக்கை வேறொன்றாகவும் இருக்கலாம். ஆனால் கட்சியின் இவ் அறிக்கையிலோ ‘இனியொரு’ இணையத்தளத்தில் வந்த இக்கட்சியின் வேறு தகவல்களிலோ, அமைப்பின் சட்டவிரோத தன்மை பற்றியோ, சட்டவிரோத வலைப் பின்னல்கள்பற்றியோ, கட்சியின் அடிப்படைக் கட்டுமானங்கள் பற்றியோ, புரட்சிக்குத் தலைமை தாங்கும் நிலைக்கு வருவதானால் கட்சியின் எந்தக் கட்டத்தில் அது சாத்தியமாகும் என்பதுபற்றியோ எதுவும் சூட்சுமமாகத்தானும் இல்லை. அரசின் புலனாய்வுத்துறைகளுக்கு எந்தத் தகவலும் கசியக்கூடாதென்பதற்காகவும் இவ்வித உருமறைப்புகள் செய்யப்பட்டிருக்கலாம்.

தாய்க் கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் எல்லோருமே கட்சி ஆயுதப்போராட்டத்திற்குத் தயாராய் இல்லை என்று குற்றஞ்சாட்டியே வெளியேறினார்கள். அது மட்டுமல்ல, தெற்காசிய மாஓயிஸ்டுகள் எல்லோருமே ஆயுதப்போராட்டத்தை ஏற்றுக்கொண்டவர்களாகவும் உள்ளனர். ஆகவே முப்பது வருட அனுபவமுள்ள புதிய ஜனநாயகக் கட்சியிடம் இருந்து இவற்றை எதிர்பார்ப்பதில் எந்தத் தவறும் இருக்காது. தற்போது தாய்க்கட்சி இது விடயத்தில் தனது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றது. தெற்காசியப் பிராந்தியத்திலும் இது தொடர்பான விவாதங்கள் நடைபெறுகின்றன. ஆகவே NDP(M-L) க்கு இவ்விவாதங்களில் பங்குபற்றும் ஒரு கடமைப்பாடு உண்டு.

அல்லது ஆயுதப் போராட்டமற்ற மார்க்கந்தான் இக்கட்சியின் கொள்கையாகவும் இருக்கக்கூடும். பிலிப்பைன்சிலும், ஈரானிலும் (இரு தடவை) நடந்து பெரும் வெற்றிகளை ஈட்டித் தந்த மக்கள் திரள் எழுச்சி வடிவம் இலங்கைக்கும் பொருந்துமென இக்கட்சி கருதலாம். தாய்லாந்தில் நடந்த மக்கள் எழுச்சி வெற்றி பெறவில்லை. ஆனால் பெருமளவிற்கு அழிவுகள்

எதையும் ஏற்படுத்தாமல், தானும் அழிந்து போகாமல் அது பின்வாங்கிக் கொண்டது. சமீபத்தில் துனிசியாவில் இந்த வடிவம் வெற்றி பெற்றுள்ளது. சுற்றியுள்ள நாடுகளுக்கும் பரவி வருகிறது. எகிப்தின் சர்வாதிகார ஆட்சியை ஆட்டம் கொள்ளச் செய்துள்ளது. இவையெல்லாம் அமெரிக்க உதவியுடன் இராணுவ எதேச்சதிகாரம் நிலவி வந்த நாடுகளாகும். அரசின் இராணுவ சர்வாதிகார குணாம்சத்தை முடிவுக்குக் கொண்டு வந்து முதலாளித்துவ ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் இவை நிறைந்த பலனைத் தந்துள்ளன. இனியும் தரவுள்ளன. இதை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியென்று கருதலாமா?

பேரிழப்புகளுடன் தோல்வி கண்ட இலங்கையின் மூன்று ஆயுதப் போராட்டங்களின் அனுபவம் இம்முடிவுக்குவரக் காரணமாய் இருந்திருக்கலாம். இலங்கையின் ஸ்தூல நிலைக்கு இது சரியானதாகவும் இருக்கலாம். இது தொடர்பாகத் தமது நிலைப்பாட்டைக் கூறி அதை நியாயப்படுத்துவதற்கான விவாதங்களை முன்வைத்தால் நல்லது.

### ஆ.4.2) **மாநாடு அங்கீகரித்த முக்கிய தீர்மானங்கள்**

1. .......இத்தகைய (இலங்கையின் ஆளும் வர்க்கங்கள்) சக்திகளே ..... உழைக்கும் மக்களை ஆள்வதுடன் இலங்கை மக்களுக்குரிய தேசிய ஜனநாயகத்தை மறுத்தும் வருகின்றன. ஆதலால் தேசிய ஜனநாயகத்தை வென்றெடுப்பது உடனடியானதும் அவசரமானதுமான தேவையாகவே உள்ளது.

பதினொரு தீர்மானங்களை முன்வைத்திருக்கும் இவ் ஊடக அறிக்கையின் 11வது தீர்மானத்திலும், 4-வது தீர்மானத்திலும் இதே பிரச்சனை முன்வைக்கப்படுகின்றது.

11-வது தீர்மானப் பகுதி .......எனவே ஏகாதிபத்தியத்திற்கும் பூகோளமயமாதலுக்கும் மேலாதிக்கத்திற்கும் எதிராக வலுவான ஐக்கியப்பட்ட பரந்துபட்ட மக்கள் இயக்கத்தை கட்ட வேண்டும் எனவும் மாநாடு அறைகூவல் விடுத்தது.

4-வது தீர்மானப் பகுதி இலங்கையில் தேசிய ஜனநாயகம் நிலை நாட்டப்படும் போதே நியாயமான அரசியல் தீர்வைக் காணமுடியும். புதிய-ஜனநாயகப் புரட்சி வெற்றிபெறும் சூழ்நிலையில், தமிழ் மக்களின் சுய விருப்பின் பேரிலான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முடியும். எனவே தேசிய ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் பங்கெடுப்பதே புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு சிறந்த தெரிவாக இருக்க முடியும்.

தேசிய ஜனநாயகம் என்ற பதப் பிரயோகம் இங்கு சற்று மயக்கத்தைத்

தருகிறது. அதற்கு இரு அர்த்தங்களுண்டு.

ஒன்று - ஒரு தேசத்தின் ஜனநாயகம் சம்பந்தப்பட்டது.

மற்றையது - ஒரு நாட்டினில் (ஒரு தேசத்திலல்ல) உள்ள தேசிய இனங்கள், மற்றும் பிறபிரிவு மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகள் சம்பந்தப்பட்டது.

### 4.2.1) **தேசத்தின் ஜனநாயகம் சம்பந்தப்பட்டது**

இலங்கை மக்கள் அனைவருக்கும் உரிய தேசிய ஜனநாயகம் என்பது எது? தேசிய ஜனநாயகம் என்பது தேசத்துக்கும் அத் தேசத்தின் ஜனநாயக உரிமைகளை மறுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையேயான பிரச்சனை. அவ் ஆக்கிரமிப்பாளர்கள் உள்நாட்டினராகவும் இருக்கலாம், அந்நியராகவும் இருக்கலாம். தமிழ் பேசும் மக்களின் தேசிய ஜனநாயகத்தின் எதிரி சிங்கள பௌத்த பேரகங்காரவாத அரசு. இது மிகத்தெளிவானது. சிங்கள மக்களின் தேசிய ஜனநாயக எதிரி யார்? அதாவது அந்நியருக்கு எதிரான முரண்பாடுதான் பிரதான முரண்பாடு என்ற கட்டத்துக்குள் சிங்கள தேசம் சென்றுவிட்டதா? அந்நியருக்கு எதிரான வலுவான ஐக்கியப்பட்ட, பரந்துபட்ட மக்கள் இயக்கத்தைக் கட்டவேண்டிய தேவை அங்கு உருவாகிவிட்டதா?

ஆம்! என்று JVP கூறுகிறது. இந்தியாதான் அந்த அந்நிய எதிரியென்று சுட்டிக் காட்டுகின்றது. NDD(M-L) அக் கருத்தை ஏற்றுக் கொள்கிறதா? இலங்கை மக்கள் அனைவரும் தமக்கிடையேயான இன பேதங்களை மறந்து இலங்கையின் தேசிய ஜனநாயகத்தைப் பாதுகாக்க இந்தியாவுக்கு எதிராக ஓரணி திரளவேண்டுமா? NDD(M-L) தனது கருத்தை தெளிவாக முன்வைத்தால் நல்லது. இல்லை என்ற மற்றோர் கருத்தும் உண்டு

சிங்கள தேசத்தின் பிரதான முரண்பாடு வர்க்க முரண்பாடாகவே உள்ளது. அந்த முரண்பாடு இன்னமும் ஒரு தனி அரசியல் சக்தியின் கீழானதோர் சமூக-அரசியல் இயக்கமாக மாறவில்லை. அவ்விதம் மாறும்போதுதான் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிரான போராட்டம் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து தோன்றும். ஆகவே அதுவரை இருவருக்கும் பொதுவான ஒரு வேலைத்திட்டமொன்று சாத்தியமில்லை. இலங்கைத்தீவினில் தனித்தனி அரசுகளை உள்ளடக்கிய இரு வெவ்வேறுபட்ட சமூக உருவாக்கங்கள் ஆழமாக வேரூன்றி விட்டன. இவ் இரு சமூக உருவாக்கங்களும் ஒரே நிலப்பரப்பை எவ்விதம் தமக்குள் சகோதரத்துவத்துடன் பங்கிட்டுக் கொள்வதென்பதே இன்று இலங்கைத் தீவின் முன்னுள்ள கேள்வியாகும். இதனால்தான் புதிய தலைமுறை இடதுசாரிகள் அனைவரும் ஒற்றையரசை முழுமையாக நிராகரிக்கிறார்கள், சமஷ்டிக் குடியரசுகள் பற்றிப்

பகர்கிறார்கள். இந்தக் கருத்தை புதிய ஜனநாயகக் கட்சி (ML) ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை இது காட்டுகிறது.

### 4.2.2) **மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகள் சம்பந்தப்பட்டது**

இந்த அர்த்ததில் இப்பதம் பிரயோகிக்கப்பட்டிருக்குமானால் அது சரியானது. ஒரு சமாதான சகஜீவன இலங்கையை உருவாக்குவதில் எல்லோரையும் ஒன்றுபட்டுப் போராட அணி திரட்டுவது அவசியமானது. ஆனால் இங்கு அத்தியாவசியமான நிபந்தனை ஒன்றுண்டு. சமாதான சகஜீவன இலங்கை உருவாக வேண்டுமானால் சிங்கள மக்கள் தமிழ்பேசும் மக்களின் தேசியஜனநாயகத்துக்காக வெளிப்படையாக குரல் கொடுக்கவேண்டும். இக் குரல் கொடுப்பு, அறிக்கைகள் வடிவினிலன்றி; இயக்க வடிவினிலானதாக அமையவேண்டும். இதுபற்றி இவ்வெளியீடுகளில் எதையுமே காணவில்லை. கீழ்க்கண்ட வாக்கியந்தான் இந்த சொல் மயக்கத்துக்கு காரணமாய் உள்ளது.

‘தேசிய ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் பங்கெடுப்பதே புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு சிறந்த தெரிவாக இருக்க முடியும்.’

எந்தத் தேசியஜனநாயகம்? முதலாவது வகையென்றால் அப்படியொன்றில்லை. இரண்டாவது வகையென்றால் அவர்களின்று ‘தமிழீழத்தின்’ தேசிய ஜனநாயகத்துக்காகத்தானே போராடுகிறார்கள். அப்போராட்டங்கள் சரியா, தப்பா என்பதுதான் விவாதிக்கவேண்டிய பிரச்சனையாக உள்ளது.

2. அடுத்த கட்டமாக இலங்கை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடல்லாதபடியால்..... நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களை அகற்றி, சோஷ லிஸ கட்டுமானங்களை முன்னெடுக்க வேண்டும்.

நிலப்பிரபுத்துவமும் இல்லை, அது அழிந்துவிட்டது. இருப்பதோ அதன் மிச்சசொச்சங்கள். அதே நேரத்தில் இது ஒரு முதலாளித்துவ நாடுமல்ல. அவ்விதமானால் இது என்னநாடு? இலங்கையில் நிலப்பிரபுத்துவம் இனியும் இல்லை (1966-ல் இருந்து இதே கருத்துத்தான்), இருப்பதெல்லாம் அதன் மிச்சசொச்சந்தான் என்ற கருத்தில் இருந்து இன்னமும் கட்சி விடுபடவில்லை.

3. ......எனவே இலங்கை அரசாங்கம் பிரதான பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பதுடன், போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் பற்றி விசாரித்துக் குற்றவாளிகளைத்

தண்டிப்பதுடன்; பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். அதனுடாகவே வெளிநாட்டுச் சக்திகள் இலங்கையில் தலையிடுவதை தடுக்க முடியும்.

இது, ஆசிய வல்லரசுகளின் செல்லப்பிள்ளையும், ஆசிய வல்லரசுகளை வருந்தி அழைத்து வயிறு புடைக்க விருந்தளித்து வரும் இலங்கையின் மிக வல்லமை பொருந்திய தரகு முதலாளியுமான MR இடம் முன்வைக்கும் மற்றோர் கோரிக்கை.

7. இனவாதம் மக்களின் ஐக்கியத்திற்குப் பாரிய தடையாக இருந்துவருகிறது. .......உழைக்கும் மக்கள் அனைவரையும் தொழிலாளர்கள் என்ற அடையாளத்திற்குள் கொண்டு வருவதுடன் அவர்களது அனைத்துப் போராட்டங்களிடையேயும் ஒத்துழைப்பை உறுதி செய்து வர்க்கப் போராட்டப் பாதையில் அணிதிரளச் செய்தல் வேண்டும்.

இந்த ஏழாவது தீர்மானமும் கேள்விக்குரியது. சிங்கள பேரகங்காரவாதம் கோலோச்சும் வரை வர்க்கப் போராட்டப் பாதையில் இலங்கை மக்கள் அனைவரையும் இனவேறுபாடுகளை மறந்து வர்க்கப் போராட்டப் பாதையில் ஒரே குடையின் கீழ் அணிதிரட்டுவது சாத்தியமில்லாதது. பிற மக்கள் சிலவேளைகளில் மிகத் தயக்கத்துடன் முன்வந்தாலும் பௌத்த-சிங்கள பேரகங்கார போதையில் மிதந்து கொண்டிருக்கும் சிங்கள மக்கள் வரமாட்டார்கள். இலங்கை வரலாற்றில் இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதில் மகத்தான பல வெற்றிகளும் ஈட்டப்பட்டன. ஆனால், இறுதியில் தோல்வியில் முடிவடைந்தன. இதற்கான பிரதான காரணம் தமிழர்களல்ல சிங்களவர்களே.

இதற்கான தீர்வு, சிங்கள பேரகங்கார அதிகாரத்துக்கு எதிராக, ஒவ்வொரு தேசியங்களும் தத்தமது தேசிய ஜனநாயகத்துக்கான போராட்டத்தை பரஸ்பரக் குறுக்கீடுகளின்றி இட்டுச் செல்ல வேண்டும். ஒவ்வொருவரும் மற்றவர்களின் தனித்துவத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் இவர்கள் தமக்குள் ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இது ஒரு புறம் நடக்க, மறுபுறம் சிங்கள மக்களிடையேயான வர்க்கப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். ஒடுக்கப்பட்ட மூன்று தேசியங்களின் போராட்டங்களும், ஒடுக்கும் சிங்களத் தேசியத்தின் உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டங்களும் ஒரே எதிரியை நோக்கியே அமைகின்றன என்பது நடைமுறையில் வெளிப்படவேண்டும். வெவ்வேறான நான்கு போர்க் களங்களிலும் உள்ள நான்கு வகைப் போராளிகளும் தாம் நால்வரும் நண்பர்கள்தான் என்பதை நடைமுறையில் புரிந்து கொள்ளவேண்டும். இது நடைபெறும்போதுதான் இலங்கை மக்கள் அனைவரும் வர்க்கரீதியாக ஓரணி திரள்வதற்கான மக்கள் திரள் களம் ஒன்று உருவாகும்.

8. விவசாயிகள் சமூக மாற்றப் புரட்சியின் பிரதான சக்திகளாவர். அதனால் விவசாயிகளினதும் விவசாயத் தொழிலாளர்களினதும் பரந்துபட்ட ஐக்கியம் கட்டப்பட வேண்டும்.

விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் தனித்தனி சமூக அணிகளாகப் பார்த்தது மிகவும் வளர்ந்த ஒரு கண்ணோட்டமாகும். ஆனால், 'பரந்துபட்ட ஐக்கியம் கட்டப்படவேண்டும்' என்ற வாக்கியத்தில் ஒரு மயக்கம் தெரிகிறது. ஒரே அமைப்பினில் இவர்கள் இருவரையும் இணைப்பதா? அல்லது இவர்கள் இருவருக்கும் தனித்தனி அமைப்புகளை உருவாக்குவதா? இவ் இரு அமைப்புகளும் கட்சியின் தலைமையின் கீழ் இருக்குமா? ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் இவ்விரு சாராரையும் ஐக்கியப்படுத்துவதா? போன்ற அடிப்படையான கேள்விகளுக்கு விடையில்லை. ஒரு அறிக்கையில் இதற்கான விடையை எதிர்பார்க்க முடியாதுதான். அறிந்ததை வைத்துக்கொண்டு நோக்கும்போது, இக் கட்சி, MR ஐ அச்சுறுத்தும் நிலைக்கு வருவதற்குரிய காலம் இன்னமும் வரவில்லை.

### ஆ.5) **இரண்டாவது தலைமுறையினரின் பிற அமைப்பினர்**

இவர்கள் பகிரங்க அரங்கிற்கு இன்னமும் வராததால், இவர்கள்பற்றிய திறனாய்வு தவிர்க்கப்படுகிறது.

## 3.2.10) **இன்னோர் இனப் படுகொலைக்காகவா?**

### 10.அ) **இனச் சுத்திகரிப்பின் இயங்கியல்**

முள்வேலிமுகாம்கள், ஒரு மனிதாபிமானப் பிரச்சனையல்ல. அது முகாமில் உள்ள நிகழ்காலப் 'புலி'களையும், பெண்களின் கருவறைகளிலும் ஆண்களின் விந்துயிர் அணுக்களிலும் உள்ளதாகக் கருதப்படும் வருங்காலப் புலிகளையும் சல்லடை போட்டுத் தேடும் பாதுகாப்புப் பிரச்சனையுமல்ல. அப்படித் தேடியும் அது கிடைக்காது. மாறாக, இது 1930 களிலேயே ஆரம்பித்து வைக்கப்பட்ட, வடக்கையும் கிழக்கையும் காலனியல் மயப்படுத்தும் செயல்களினதும், 1940 களில், மலையக மக்களில் பிரயோகித்துப் பார்த்து வெற்றி கண்ட பிற தேசிய இனங்களின் 'ஜனநாயக அரசியல்' ஆளுமையை நீர்த்துப் போகச் செய்யும் செயல்களினதும் தொடர்ச்சியேயாகும். அதாவது இது மறுகாலனியலாக்க அடக்குமுறைப் பிரச்சனையாகும்.

மறுகாலனியலாக்கம் என்பது உள்ளூர் ஆளும் வர்க்கம் ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் ஒரு அங்கமான 'பேரழிவு முதலாளித்துவத்துடன்'

இணைந்து, நவகாலனிக்குள் ஒரு காலனியை உருவாக்கும் முயற்சியேயாகும். அனைத்து மூன்றாமுலக /'வளர்ந்து வரும்' நாடுகளிலும் இந் நிலைமை காணப்படுகின்றது. இந் நாடுகளின் தேசியப் பொருளாதாரமானது அந்தந்த நாடுகளுள் உள்ள காலனிகளின் மீது, அக் காலனி மக்களின் இறந்த உடல்களின் மீது கட்டப்பட்டு வரும் மாளிகையாகவே உள்ளது. இலங்கை அதற்கு விதிவிலக்காகி விடுமா என்ன?

2009 இனப் படுகொலை, இதற்கு முந்தைய படுகொலைகளிலும் விட தன்மையிலும் வேறுபட்டதாகும். அதிகம் பேர் கொல்லப்பட்டார்கள். அதிகம் பேர், அதிக நாட்களுக்கு அகதிகளாக்கப் பட்டுள்ளார்கள். ஈனத்தனங்களும் கொடூரங்களும் அதிகரித்துள்ளன என அடுக்கிக் கொண்டே போகலாம். இவை அளவியல் வேறுபாடுகள். இவ் வேறுபாடுகள் உண்மைதான். ஆனால் இந்த வேறுபாடுகளை மட்டும் நாம் புரிந்து கொள்வது கொடூரங்களை மீண்டும் மீண்டும் பட்டியல் இட மாத்திரமே உதவும். தமிழர்களின் எதிரி எவ்வளவு கொடியவன் என்பதைப் பட்டியலிட்டு பிறருக்குக் காட்ட உதவும். அதன் மூலம் பேரினவாதத்தை அம்பலப்படுத்த உதவும். அதற்குமேல் எதற்கும் உதவாது. இதற்கும் அப்பால் இதைப் புரிந்து கொள்ளவில்லையானால், இனி ஒரு போராட்டம் நடந்தால் சாகப்போகும் ஒரு இலட்சம்பேர் யாராக இருக்கும் என்று எண்ணுமளவிற்கு நம்மைப் பைத்தியங்கள் ஆக்கிவிடும். ஆகவே அளவியல் மாற்றத்தை மட்டுமல்ல குணவியல்பு மாற்றத்தையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

இலங்கையில், இலங்கை முழுமைக்குமான இனப் படுகொலைகளும், அதனுடன் இணைந்த பெருமளவான அகதிகள் உற்பத்தியும் (Mass production of Refugees all over Ceylon) மூன்று தடவைகள் நடந்துள்ளன. 1956-முதலாவது, 1977-இரண்டாவது, 1983-மூன்றாவது. 1980-க்கும்,1983-க்கும் இடையில் மலையக வம்சாவழித் தமிழர் வாழும் பிரதேசங்களில் வரிசையாக நடைபெற்றன. ஒவ்வொரு அகதிகள் உற்பத்தியின் போதும் மூன்று சமூக நிகழ்வுகள் நடந்துள்ளன.

முதலாவது: சிங்கள இனத்தின் ஒரு சமூகத் தட்டின் அல்லது ஒரு சில சமூகத்தட்டுகளின் வர்க்க மேல் நிலையாக்கத்திற்குத் (upward class mobilty) தடையாக இருந்த பிற இனப் போட்டியாளர்கள் அப்புறப்படுத்தப் படுகிறார்கள் அல்லது அவர்களின் போட்டித் திறன் பலவீனப்படுத்தப்படுகிறது.

இரண்டாவது: இலங்கையின் ஆளும் வர்க்கத்தட்டினரின் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் சிங்களப்பிரிவு, இன மத வேறுபாடின்றி ஆளும் வர்க்கத்தின் பிற அணிகளையும் விடத் தன்னை முதல் நிலைப்படுத்திக் கொள்கிறது. அதாவது, ஒவ்வொரு இனவன்முறைகளும் ஆளும் வர்க்கங்களுக்கிடையே

உள்ள போட்டியைக் கூர்மைப்படுத்தி குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் மேலாட்சிமைக்கு வளிசமைக்கின்றது.

மூன்றாவது: முழு நாட்டிலும் சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் தனது அரசியல் மேலாதிக்கத்தை அதிகரித்துக் கொள்கிறது.

### 10.அ.1) **1956-ன் இன வன்செயல்**

சிங்கள புத்திஜீவிகள் தமிழ் புத்திஜீவிகளை புறமுதுகிட வைத்தனர். அப்பே ஆண்டுவ அணியினரின் தலைவன் SWRD.பண்டார நாயக்கவின் கட்சி ஆளும் வர்க்கத்தின் தலைமையை அபகரித்துக் கொண்டது. 1972 அரசியல் சாசனம் சிங்கள-பௌத்த பேரினவாதமானது தனது அரசியல் மேலாதிக்கத்தை அதிகரித்துக் கொள்ள வழிசமைத்துக் கொடுத்தது. "UNP சவப்பெட்டிக்குள் வைக்கப்பட்டு கடைசி ஆணியும் அடிக்கப்படுகிறது." (கொல்வின் ஆர் டி சில்வாவின் வாக்கியம்) பண்டார நாயக்கவும் சுட்டுக் கொல்லப்படுகிறார். இங்கு மேல் நிலை பெற்றது அரச முதலீட்டிய தரகு பூர்ஷ்வா வர்க்கம். இப் புதிய (இலங்கைக்கு) ஆளும் வர்க்கத்தின் நெருங்கிய சகாவாக உருவானதுதான் அரசு அதிகாரத்துவ முதலாளிய வர்க்கமாகும். இதுவும் இலங்கைக்குப் புதிது. இப் புதியன இரண்டையும் சிங்கள மயப்படுத்துவதே இவ் இனச்சுத்திகரிப்பின் நோக்கமாகும். இவ் இனச்சுத்திகரிப்பால் உச்சகட்டப் பலன் அடைந்தது இவ்விரு வர்க்கங்களும்தான். புதிதாகத் தோற்றமெடுத்த இரணைப் பிள்ளைகளான இவ்விரு வர்க்கங்களையும் சிங்கள மயப்படுத்துவதற்காக நடந்த உருவ மாற்று அறுவைச் சிகிச்சைதான் (Plastic Sugery) இந்த இனப்படுகொலையாகும். தமிழர்களின் ஆதிக்கத்தில் இருந்த கல்வியாளர்கள் துறையின் மீது (Professional class) தமிழர்கள் செலுத்திய மேலாண்மையை வீழ்த்துவதற்காக நடந்த சிங்கள எழுச்சிதான் இந்த இனப் படுகொலை என்று கூறுவது மிகத் தவறு. இது சிங்கள பேரினவாதத்தின் நோக்கத்தை குறைத்து மதிப்பிடுவதாக அமைந்துள்ளது. தமிழர்கள் கனவில்கூட நினைத்தே பார்த்திராத அரசு அதிகாரத்துவ முதலாளிய வர்க்க அணியினுள் (தமிழர்கள்) உள்நுளைந்து விடக்கூடாது என்பதுதான் இந்தப் படுகொலைகளின் நோக்கமாகும். இதில் சிங்கள பேரினவாதம் அபார வெற்றிகளைப் பெற்றுள்ளது. அவ்வெற்றி இன்றும் தொடர்கிறது.

இதைத் தொடர்ந்து இதற்கேற்ற முறையில் அரசியல் மற்றும் பொருளாதார மேல் நிலையாக்கங்களும் அமைந்தன.

## 10.அ.2) **1977 இன வன்செயல்**

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமயப் பொருளாதாரத்தில் ஈடுபடத் தயாராய் இருந்த சிங்கள நகர்ப்புற வர்க்கத் தட்டினர், தொழில் முனைவோர் பிரிவினருக்குத் தடையாக வரக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட தமிழ், முஸ்லீம் நடுத்தர வர்க்கத்தட்டினரின் அதே பிரிவினரை உடல் ரீதியாக அழித்தது, சொத்து ரீதியாக முறித்தது. அல்லது ஆட்களையே அப்புறப்படுத்தியது. (நாட்டைவிட்டே ஓடப்பண்ணியது). JRJ தனது அரசியல் அதிகாரத்தை மிக உறுதியாகவும், பலவந்தமாகவும் நிலைநிறுத்தி தனிக் காட்டு ராஜாவானார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. ஜனாதிபதி ஆட்சி முறை தன்மட்டில் தானே ஒரு இன அடக்குமுறை அரசியல் கட்டுமானமாகும். பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சிங்களத்தலைவனின் கீழ் சிறுபான்மை இனம் என்ன செய்ய முடியும்? இவ் வன்செயல்களின் மூலம் வர்க்க மேல் நிலை பெற்றது தாராளவாத முதலீட்டிய தரகு முதலாளித்துவ அணியினரேயாகும்.

## 10.அ.3) **1983 இன அழிப்பு**

கொழும்பில் சிங்கள நடுத்தர வர்க்கத் தட்டுக்கு தமிழர்களால் ஏற்பட்டிருந்த அல்லது ஏற்படவிருந்த தடைகள் மேலும் தகர்க்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக பிறமாகாணங்களின் தலைநகரங்களில் இருந்த சிங்களவர்கள் அல்லாத நடுத்தர வர்க்கத் தட்டினரின் தொழில் முனைவோர் பிரிவினரை உடல் ரீதியாக அழித்தது, சொத்துரீதியாக முறித்தது. அல்லது அப்புறப்படுத்தியது (நாட்டைவிட்டே ஓடப்பண்ணியது). இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியானார் JRJ. பிரேமதாசா வாரிசானார். ஆளும் கட்சியின் அடுத்த பகுதியான அப்பே ஆண்டுவக் கட்சியினரும் ஆளும் வர்க்க இளநிலை பங்காளர்களான இடதுசாரிகளும் தொடர்ந்தும் அடக்கப்பட்டனர். தமிழ் ஆளும் வர்க்க அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி மீது அறிவிக்கப்படாத ஒரு தடையே விதிக்கப்பட்டது. இதனால் தமிழ் ஆளும் வர்க்கம் மிக மோசமாகப் பலவீனப்படுத்தப்பட்டது. இங்கு மேல் நிலை பெற்றது அந்நிய நேரடி முதலீட்டாளர்களின் தலைமையிலான சிங்களத் தரகு முதலாளித்துவப் பிரிவின் சர்வாதிகார அணியாகும். பூர்ஷ்வாக்கள், அதிலும் குறிப்பாக தென்பகுதி (பாத்தறட்ட) தரகு முதலாளிகளாகும்.

இலங்கையின் தொழில் முனைப்புத் திறன் உள்ளோரை வரிசைப்படுத்தினால், அது பின்வருமாறு அமையும் தென்பகுதி சிங்களவர்கள் (குறிப்பாக கரவாஸ்), முஸ்லீம்கள், மலையக வம்சாவழித் தமிழர், யாழ்ப்பாணத்தமிழர், கண்டிய சிங்களவர்கள் அதன் பின்னர்தான் பிறர். மலையகத்தில் நடந்த இனவன்செயல்களால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள்

நகர்ப்புறங்களில் வாழ்ந்த தமிழர்களேயாகும். 80களில்தான் றியல் எஸ்டேற் (Real Estate) வணிகமும் சூடுபிடிக்கத் தொடங்குகிறது. இவ் வணிகத்தை சிங்களமயப்படுத்தவேண்டியதும் அவசியமானதாய் இருந்தது. .

### 10.அ.4) **2009 இனப்படுகொலை**

இப் படுகொலைமூலம், சமூக பொருளாதார மேல்நோக்கிய இயங்கு வாய்ப்புகளைப் பெற்றது (An opportunity for Socio-Economic upward mobility) தரகு முதலாளித்துவ அணியினரின் இராணுவ எதேச்சதிகாரப் பிரிவினரேயாகும். JRJ யின் தலைமையிலான சர்வாதிகாரத்தையும் விட இது அதிக தீங்கானது. இவ் வர்க்கப் பிரிவினரே தமது இராணுவத்துடன் நேரடியாகக் களம் இறங்கி இருந்தனர்.

இவ் வளர்ச்சி செங்குத்துத் தளத்திலும் கிடைத் தளத்திலுமானதாக இருந்தது. கிடைத்தளம் என்பது புதிய தரகு முதலீடுகளைக் குறிக்கிறது. கடல்அடி வளம், பணவணிகம், அறிவியல் கல்வி (Knowledge Education), Real Estate ஆகியவையே குறிப்பான புதிய தரகு முதலீடுகளாகும். நாடெங்கும் துரித கதியில் அமைக்கப்பட்டு வரும் தொழில் முதலீட்டு வலயங்கள். பெருப்பிக்கப்படும், மேலும் புதியன அமைக்கப்படும். இவை தெற்கில் ஏற்கனவே உள்ளன (படம்). தாராளவாதப் பொருளாதாரத்தை அமுல்படுத்திய UNP யின் நடவடிக்கைகள் தொடரும். வடகிழக்கில் புதிதான ஏற்றுமதி வலயங்கள் அமைக்கப்படும். இது முன்னைய மூன்று இன அழிப்பிலும் விட குணாம்ச ரீதியில் மாறுபட்டதொன்றாகும்.

இதுவரை இராணுவம் நேரடியாகப் பங்குபற்றவில்லை, தற்போது இராணுவமே நேரடியாக தலைமையேற்று நடத்தியது. தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடுவது, அவர்களை அடித்துத் துரத்துவது, முடிந்தால் கொன்று குவிப்பது போன்ற நடவடிக்கைகளில் இராணுவம் தவிர பிறர் ஈடுபடுவது முற்றாகவே தடுக்கப்பட்டது.

அடுத்த குணாம்ச வேறுபாடு, இவ் இன வன்செயலானது, அரச அதிகாரத்துவ முதலாளித்துவமும் தாராளவாத தனியார் முதலாளித்துவமும் இரண்டறக் கலந்து நின்று நடத்திய இனஒழிப்பாகும். மகிந்த சிந்தனையின் தனித்துவ குணாம்சம் இதுதான். 50களின் நடுப்பகுதியிலிருந்து தொடர்ந்துவந்த அரச-கட்டுப்பாடு எதிர் (Vs) தாராளவாதம் என்ற முரண்பாடு கட்டாயத்தின் பேரில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எதிரும் புதிருமான இரு விலங்குகள் ஒரே பெட்டிக்குள் அடைக்கப்பட்டுள்ளன. கடித்துக் குதறாமல் விடுமா? இது நிர்வாக இயந்திரத்தையே நிலைகுலைய வைக்கும் ஒரு ஆளும் வர்க்க உள் முரண்பாடாகத் தொடரக் கூடும்.

ஆளும் வர்க்க உள் முரண்பாடுகளின் மேலும் சில வெளிப்பாடுகள்

பௌத்த-சிங்கள கொவிகம வெள்ளாளப் பிரிவு மேல்நிலை பெறுகிறது. UNP உடைக்கப்பட்டு அதன் தலைவர்களில் பலருக்கு மந்திரி பதவி கொடுக்கப்படுகிறது. சரத் பொன்சேகா சிறைப்பிடிக்கப்படுகிறார். பௌத்த மத பீடத்தின் ஒரு பகுதியினருக்கு எதிராக காவல்துறையின் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. குடும்ப சர்வாதிகாரம் நிலை நிறுத்தப்படுகிறது.

இனவாத அரசியல் மேலாண்மையைப் பொறுத்தவரை, இலங்கையில் வாழும் எவராக இருந்தாலும் நாம் எல்லோரும் ஸ்ரீலங்கர்கள், நம்மில் எவருக்கும் எந்தத் தனித்துவமும் அவசியமில்லை என சாத்தான் வேதமோதி விட்டது. இலங்கையின் இனப்பிரச்சனைக்காக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள், அறிக்கைகள், சட்டத்திருத்த பிரேரணைகள், நீதிமன்றத் தீர்ப்புகள், பேச்சுவார்த்தைப் பதிவுகள், கமிஷன் விசாரணை அறிக்கைகள் இவை போன்ற இன்னும் பிறவற்றையும் கொண்ட காகிதங்களை ஒன்று சேர்த்து ஒன்றாகக் குவித்தால் அக் குவியல் பேதுருதாலகால மலையைவிட உயர்ந்து நிற்கும். மீண்டும் குப்பை கொட்ட வேண்டாம் எனக் கருதி MR ‘நல்லதோர் தீர்வை’ முன்வைத்துள்ளார். சிங்கள பௌத்த கொவிகம வெள்ளாளரைத் தவிர மற்றெல்லோரையும் இன நீக்கம், மதநீக்கம், சாதியநீக்கம் செய்யச் சொல்கிறார். பசியை அறியாத நீரோமன்னனுக்கும், பண்பாட்டு அடையாளப் பசியை அறியாத இவருக்கும் அவ்வளவு வேறுபாடு தெரியவில்லை.

2009 இன அழிப்பு, முன்னைய அழிப்புகளில் இருந்து முற்றிலும் வேறு பட்டது எனக் கூறுவதற்கான காரணங்கள் இவைதான்.

இந்த நான்கு நிகழ்வுகளிலும் விவசாயிகள் பற்றிய மௌனம் ஏன் என்ற கேள்வி எழுகிறது. விவசாயிகளைப் புறக்கணிக்கும் IMF-ன் திட்டம்போன்று இவ் ஆய்வும் மௌனம் காக்கிறதா? இல்லை. சிங்கள விவசாயிகள் பயன்படுத்தப்பட்டனர். அவர்களை முன்நிறுத்தி தமிழ்ப் பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டன என்பது உண்மைதான். ஆனால், காலனியல் காலத்தில் இருந்து இன்றுவரை விவசாய அபிவிருத்தி தொடர்பாக எந்த அரசாங்கமும் பொறுப்பான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அப்பே ஆண்டுவ அரசாங்கம் 50-ம் ஆண்டுகளின் பிற்பகுதிகளில் விவசாயிகளை நிலமானிய உறவுகளில் இருந்து விடுவிக்க சில நடவடிக்கைகள் எடுத்தது உண்மைதான். ஆனால், இது தமிழ்ப் பகுதிகளில் குடியேறிய விவசாயிகளுக்கு எந்த நன்மையையும் செய்யவில்லை. அதேபோல் 1970-களின் முற்பாதியில் அப்பேஆண்டுவ அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட இறக்குமதித் தடை, அந்நியச் செலாவணி மீதப்படுத்தக் கூடியதான விவசாய உற்பத்தி

ஊக்குவிப்பு, ஆகிய நடவடிக்கைகள் பணப்பயிர் செய்கையை நோக்கி நகர்த்திச் சென்றது உண்மைதான்.

இதனால் நீர்ப்பாசன வசதிகள் உள்ள விவசாயக் குடியேற்றத்திட்ட விவசாயிகளின் பொருளாதார வாழ்க்கையில் ஒரு வளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் 1977-ல் ஆட்சிக்குவந்த UNP இந்த உற்பத்திக்கு பாதகமான கொள்கையையே கடைப்பிடித்தது. இதனால் விவசாயிகளின் குறுகிய கால வசந்தகாலம் ஒரு முடிவுக்கு வந்தது. இக் காரணங்களினால், விவசாயிகள் இவ் இன அழிப்பு நடவடிக்கைகளில் உணர்வுபூர்வமான ஈடுபாடு காட்டவில்லை. இனவாத உணர்வுகளைத் தூண்டிவிடும் சில வதந்திகளாலும், முழக்கங்களாலும் உணர்ச்சி வசப்பட்டு இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட சம்பவங்கள் உண்டு, ஆனால் உணர்வுபூர்வமான ஈடுபாடுகள் மிக மிகக் குறைவு. விவசாயிகள் இன அழிப்பின் மந்தகதிப் (Passive) பங்காளிகளாகவே இருந்தனர். அதாவது சிங்கள பௌத்த பேரகங்கார ‘எழுச்சி’ சிங்கள விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டதல்ல. தமிழ்ப் பகுதிகளில் நடந்த சிங்களக் குடியேற்றங்களின் நோக்கம் சிங்களக் கட்சிகளின் பாராளுமன்ற ஆசனங்களை அதிகரிப்பதாகவே இருந்தது. குடியேற்றப்பட்ட சிங்கள விவசாயிகளின் வாழ்க்கை அபிவிருத்தியைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. அது புத்திஜீவிகளினதும், தரகு முதலாளித்துவ அணியினரதும், மதபீடாதிபதிகளினதும் எழுச்சியேயாகும். நகர்ப்புற தொழிலாளி வர்க்கத்தின் மேல்தட்டினருக்கும் இதில் பங்குண்டு. இது விவசாயிகளின் எழுச்சியல்ல. அவ்விதமோர் மாயை உண்டு, அது களையப்படவேண்டும். இதனால்தான் விவசாயிகள் இங்கு தவிர்க்கப்பட்டனர்.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய மற்றோர் விடயம், சமூக மேல்நிலையை அடையும் வர்க்கம், ஆளும் வர்க்க உள்முரண்பாடு, பேரினவாத இன அரசியல் மேலாண்மை ஆகிய இந்த மூன்றில் எது முதன்மையானது? அவற்றை வரிசைப்படுத்துவது எவ்விதம்? அல்லது இதில் இதுஅடிப்படை முரண்பாடு, இதுபிரதான முரண்பாடு என்று ஏதாவது உண்டா? போன்ற கேள்விகளாகும்.

ஆய்வின் கருத்து, இன ஒழிப்பு என்ற நிகழ்வுப் போக்கை மட்டும் தனித்தும் பிரித்தும் எடுத்துக் கொண்டு இக் கேள்விக்குப் பதில் கூறமுடியாது என்பதேயாகும்.

தனித்து எடுத்துப் பதில் கூறுவதே தமிழர்களிடையேயான பொதுவான பழக்கமாக உள்ளது. அதிலும் இம் மூன்றில் எது முக்கியத்துவம் என்று கேட்டால் அரசியல் மேலாதிக்கத்துக்கே முன்னுரிமை கொடுக்கின்றனர்.

ஆளும் வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாட்டைப் பற்றி யாரும் அக்கறை செலுத்துவதே இல்லை.

இலங்கையின் மேட்டுக்குடியினருக்கும், வர்க்க, இன, மத, சாதிய, பாலியல் ரீதியாக அடக்கவும் சுரண்டவும் படும் இலங்கையர்களுக்கும் இடையேயான முரண்பாட்டைக் கணக்கில் எடுக்காமல் இக் கேள்விக்குப் பதில் கூறமுடியாது. இம் முரண்பாடுதான் இன ஒழிப்புக்குக் காரணமான அடிப்படை முரண்பாடாகும். இம் முரண்பாடுகளின் வளர்ச்சியானது தப்பிக்க வழியில்லாத ஒரு அரசியல் நெருக்கடியை மேட்டுக்குடியினருக்கு உருவாக்கும் நிலையை அடையும்போது, மேட்டுக் குடியின் ஆதிக்க வர்க்கம் அல்லது ஆதிக்க நிலைக்கு வரக்கூடிய வர்க்கம் அந் நெருக்கடிகளில் இருந்து தப்புவதற்காக சில அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களைச் செய்ய முயல்கிறது. இந்நடவடிக்கை மேட்டுக்குடியின் வெவ்வேறு வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது. இதனால் நாட்டின் அரசியல் நெருக்கடி மேலும் அதிகரிக்கிறது. முன்னைய நெருக்கடியுடன் சேர்ந்து நிலமையை மேலும் மோசமாக்குகின்றது. இந்நெருக்கடி தனக்குச் சாதகமாக தீர்க்கப்பட முடியாததொன்றாக மாறுமானால், அதில் இருந்து தப்பிக்கும் ஒரு வழிமுறையாக மேட்டுக்குடியின் ஆதிக்கப் பகுதி இனப் படுகொலையை ஆரம்பித்து வைக்கின்றது. இதுதான் இலங்கையின் வரலாறாக இருந்து வருகின்றது.

2009 இனப்படுகொலையை எடுத்துக் கொள்வோம், 2005-ல் இருந்து நடந்த நிகழ்வுகளை அவதானிப்போம். ஸ்ரீலங்கா அரசிற்கும் தமிழ் மக்களுக்கும் இடையே இருந்த முரண்பாடே பிரதான முரண்பாடாகச் செயல்பட்டது. இம் முரண்பாடு ஆளும் வர்க்கத்தை இரு எதிர் எதிர் முகாம்களாகப் பிரித்து வைத்தது. ஜனாதிபதி சந்திரிக்காவின் முகாமினது விருப்பத்துக்கு மாறாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ முகாம் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருந்தது. விளைவு ரணில் அரசாங்கம் கலைக்கப்பட்டது. MR வரவுடன் சமாதானம் முறிந்து சண்டை ஆரம்பமானது. UNP யும் ஓரங்கட்டப்பட்டது. சண்டை நடந்து கொண்டிருக்கும் போதே இன ஒழிப்பும் நடைபெற்றது. இன ஒழிப்பு நடந்த பின்னர், UNP-MR முரண்பாடு மேலும் கூர்மையடைந்தது. அதனுடன் சேர்த்து (மகிந்த-சரத்) MR-GSP முரண்பாடு என்ற புதிய முரண்பாடும் சேர்ந்து கொண்டது. இதைத் தொடர்ந்து MR-பௌத்த மத பீட (ஒரு பகுதி) முரண்பாடு என்ற மற்றோர் புதிய முரண்பாடும் சேர்ந்து கொண்டது. MR தலைமையிலான ஆளும் வர்க்கத்தின் இளநிலைப் பங்காளியான JVP அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர் அணிக்குச் சென்றது. ஆளும் வர்க்கங்களுக்கு இடையேயான முரண்பாடு மேலும் ஆழமடையவும் விரிவடையவும் செய்தது.

அடுத்த பக்கத்தில் 2005-ல் இருந்தே தரகு முதலாளித்துவ அணியினர் இலங்கையின் மூலவளங்களை அபகரிக்கும் முயற்சியும் ஆரம்பமானது. இனஒழிப்பின் போதும் அது நடந்தது. முடிந்த பின்பும் தொடர்கிறது.

அரசியல்ரீதியான சிங்களமயப்படுத்தல் யுத்தம் முடிந்த பின்னர்தான் ஆரம்பமானது. முன்னைய நிகழ்வுகளிலும் இதுவே நடைபெற்றது. மூன்றாவதான இந்த அரசியல் ஆதிக்கந்தான் நோக்கமானாலும், முதலில் ஆரம்பித்து இறுதிவரை தொடர்வது ஆளும் வர்க்கங்களிடையேயான முரண்பாடோ அல்லது முரண்பாடுகளோதான்.

இதிலிருந்து நாம் கற்றுக் கொள்வது, பௌத்த-சிங்கள பேரினவாதிகளால் மிக மூர்க்கமாகவும் துரிதமாகவும் முன் எடுத்துச் செல்லப்படும் பௌத்த சிங்கள மயப்படுத்தல் எனும் வேலைத்திட்டம், இலங்கையின் ஆளும் வர்க்கத்தின் மிகச் சிறு பகுதியினரின் கைகளில் அனைத்து அதிகாரங்களையும் குவிப்பதை நோக்கியே படிப்படியாகவும் ஒழுங்குமுறையாகவும் வளர்ந்து செல்கிறது. அப்படிச் செய்யாமல் அவர்களால் அந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்த முடியாது. MR ஆல் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இந்த மிகச் சிறிய பகுதி (Tiny) இலங்கையின் மிகமிக அதிகளவிலான மக்களிடமிருந்து, தான் தனிமைப்படுவதுடன் மாத்திரமன்றி, தன்னுடன் சேர்த்து சிங்கள பௌத்த பேரகங்காரவாதத்தையும் சிங்கள மக்களிடம் இருந்து மிகத் துரிதமாகத் தனிமைப்படுத்திவருகிறது. தனது பாவங்களுக்குத் தானே பிராயச்சித்தம் செய்யத் தயாராகி வருகிறார் போலும்!

இதனால் இன ஒழிப்பின் போதான சமூக நிகழ்வுகளில் ஆளும் வர்க்கங்களிடையேயான முரண்பாடே பிரதானமானது என்பதே நடைமுறையாகவுள்ளது. அரசியல் மேலாதிக்கம்தான் என்ற கருத்து சிங்கள இனத்திடையே ஏற்பட்டுவரும் இரு துருவச் சேர்க்கையைக் (Polarisation) கண்டு கொள்வதில் இருந்து எம்மைத் தடுக்கின்றது. பூதாகரமாக வளர்ந்து வரும் இந்த அரசியல் மேலாதிக்கம் என்பது சிங்கள இனத்தின் மேலாதிக்கமல்ல; சிங்கள இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் மிகச் சிறு குழுவின் மேலாதிக்கமேயாகும், அது சிங்கள இனத்தால் செலுத்தப்படும் மேலாதிக்கமல்ல. இதைப் புரிந்து கொண்டால்தான், சோகத்தை எம்மால் விவேகமுடன்கூடிய வீரமாக மாற்றமுடியும். அவநம்பிக்கை என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லாமல் போகும்.

### 10.ஆ) **இன்னோர் இனப்படுகொலை சாத்தியமா?**

சிங்கள பௌத்த பேரினவாதம் புதைகுழிக்குள் போகும்வரை ஒன்றல்ல பல இனப்படுகொலைகள் சாத்தியமே. இப் பேரினவாதிகளின் பார்வையில் இனப் படுகொலை ஒன்றின் தேவைக்கான பல காரணங்கள் உண்டு.

அ) யாழ் குடாநாடு இன்னமும் சிங்களமயப்படுத்தப்படவில்லை.

ஆ) வட-கிழக்கு கரையோரங்களிலும் தீவுப்பகுதிகளிலும் இன்னமும் சிங்களக் குடியிருப்புகள் உருவாக்கப்படவில்லை.

இ) மேற்கு மாகாணத் தமிழர்களும் முஸ்லீம்களும் இன்னமும் ஊனமாக்கப்படவில்லை.

ஈ) பிற மலைப்பகுதி மாகாணத் தலைநகரங்களில் தமிழர்களை ஓரங்கட்டும் நிகழ்ச்சி இன்னமும் முற்றுப்பெறவில்லை.

உ) இனக் கொலைகளின் மூலம் முஸ்லீம்களை ஓரங்கட்டும் நிகழ்ச்சியின் இரண்டாவது அத்தியாயம் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

ஊ) புலம் பெயர்ந்த தமிழர்களின் எதிர்பாற்றலை கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

பேரினவாதிகளுக்கு ஆசைகள் இருக்கும் என்பது சரிதான் ஆனால் அதற்குரிய சூழல் உள்ளதா?

யுத்தக்களத்தில் சிந்திய இரத்தம் உறையுமுன்னரே, படுகொலைக்கான ஆதாரங்கள் அப்புறப்படுத்தப்படுமுன்னரே, மேலே கூறிய அடிப்படை முரண்பாடு செய்ற்படத் தொடங்கிவிட்டது. இவைபற்றி இதற்கு முன்னைய பகுதிகளில் அவதானித்தோம். இதனால் ஆளும் வர்க்கம் முன்னெப்போதும் இல்லாதளவிற்கான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை துரிதமாக உருவாகி வருகின்றது. இந் நெருக்கடிகளால் ஆளும் வர்க்கங்களுக்கு இடையேயான முரண்பாடுகளும் கூர்மை அடைய ஆரம்பித்துள்ளன. இந்திய எதிர்ப்பணியின் தற்போதைய தலைமை -Patriotic National Movement (PNM), JVP -, இனவாத கடும்போக்காளர் அணி, இராணுவச் சதி தயாரிப்பு அணி, மேற்குலகு சார்பு தரகுமுதலாளிய தமிழீழப் போராளிகள் அணி, அரசுசாரா நிறுவனங்களால் நடாத்தப்படும் ஜனநாயகத்துக்கான இயக்க அணி, முஸ்லீம் மக்களின் விடுதலையணி ஆகியவை இலங்கையின் ஆளும் வர்க்கத்தட்டின் உறுப்பினர்களேயாகும். இவர்களுக்கும் MR க்கும் இடையேயான முரண்பாடு ஆளும் வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாடேயாகும். சிங்களப்பகுதியில் ஒரு ஆயுதக் கிளர்ச்சியை உருவாக்கும் அளவுக்கு இம் முரண்பாடு கூர்மையடையக் கூடும். இம்முரண்பாடு இதுவரை நடந்ததுபோல், தனது உடன் பிறப்பான இனச் சுத்திகரிப்பையும் கூடவே அழைத்து வந்தாலும் வரலாம். அது நாடு தழுவியதாக அல்லாமல், 1983க்குப் பின்பும் முன்பும் வெவ்வேறு காலங்களில் மலையகப்பகுதியின்,

வெவ்வேறு நகரங்களில் நடந்ததுபோல் ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இன்றி நடப்பதாகவும் இருக்கலாம்.

அவ்விதம் நடந்தால், அதனூடாக வர்க்க மேல் நிலையாக்கம் அடையப்போகும் வர்க்கம் அல்லது வர்க்கத்தட்டு எதுவாக இருக்கும்? 2009-போல் தரகு முதலாளித்துவத்தின் இராணுவ எதேச்சதிகாரப் பிரிவு வேறு எந்த வர்க்கத் தட்டையும் எதிர்பார்க்காமல் தான் தனது இராணுவத்தின் துணைகொண்டு நேரடியாக களம் இறங்கும் ஆற்றலும் துணிவும் அதற்கு உண்டு. அபகரிக்கப்படும் வளங்களில் ஒரு பகுதியை வயிறார சிங்கள நடுத்தர வர்க்கத்துக்கும் புத்திஜீவிகளுக்கும் பகிர்ந்து கொடுக்கும் ‘தாராள’ மனோநிலையும் அதற்கு உண்டு. இந்திய எதிர்ப்பாளர்கள் அடக்கப்பட்டால் சரி என்பதற்காக மீண்டும் இந்தியா 2009 இந்தியாவாகவே நடந்து கொள்வதுவும் சாத்தியமாகலாம். ஆகவே சிங்கள மக்கள்மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, அதன் இரத்தம் காயமுன்னரேயே, அதற்குப் பிராயச்சித்தமாக தமிழர்கள்மீது ஒரு வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவது சாத்தியமே. மேற்குலகுடன் ஒரு நட்பை ஏற்படுத்திக் கொள்வதில் MR வெற்றிபெறுவாரானால் இவ்வித நிகழ்வு தடையின்றி நடக்கலாம்.

### 3.2.11) **அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவா?**

வடக்கு, கிழக்கு மகாணங்களை காலனியல் மயப்படுத்த பெரும் கூலிப்பட்டாளங்கள் அவசியம். இம் மாகாணங்களில் போக்குவரத்து மார்க்கங்கள் துரிதகதியில் உருவாக்கப்பட்டு வருகின்றன. துறைமுகங்கள் உருவாக்கப்படுகின்றன, அனல்மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப் பட்டுவருகின்றன, மின்சாரம் கொண்டு செல்லும் மார்க்கங்கள் உருவாக்கப்படுகின்றன. இம் மாகாணங்களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களை பணப்பயிர் செய்கை விவசாயிகளாக மாற்றும் நோக்கத்தோடு நீர்ப்பாசன திட்டங்கள் உருவாக்கப்பட உள்ளன, இராணுவத்துக்கு பெரும் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன, இராணுவ முகாம்கள் உருவாக்கப்படுகின்றன. பௌத்த பண்சாலைகளுக்குரிய கட்டிடங்கள் உருவாக்கப்படுகின்றன. அதற்குரிய நிலங்கள் துப்பரவு செய்யப்படுகின்றன. இவ்விதமான ‘அபிவிருத்தி’ வேலைகள் நடைபெறுகின்றன, மேலும் நடைபெற உள்ளன.

தமிழர்களையும் முஸ்லீம்களையும் கொண்டு இவற்றை நிறைவேற்றுவது சிரமம். அவை ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் ஆக்கிரமிப்பாளர்களின் மேற்பார்வையில் செய்யப்படுவதால், அடிக்கடியும் அங்கொன்றும் இங்கொன்றுமாக எதிர்ப்புகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் உண்டு. பிரித்தானிய காலனியல் வாதிகள் இதற்காகத்தான் சிங்கள விவசாயிகளைக் கொண்டு மலைநாட்டை அபிவிருத்தி செய்யவில்லை. இந்தியாவில் இருந்து

கடத்தி வரப்பட்ட தமிழ் விவசாயிகளைக் கொண்டே மலைநாட்டை அபிவிருத்தி செய்தார்கள். இதற்காக இந்த மக்கள் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இதே போன்று தற்போது MR ஆல் நடந்து கொள்ளமுடியாது. ஐ.நா சபை உட்பட பல உள்ளூர், வெளிநாட்டு மனிதநேய அமைப்புகள் தலையிடத் தொடங்கிவிடும். இப்போது காலனியல் மயப்படுத்தப்போகும் நாடுகளின் மக்களைப் படுகொலை செய்யலாம், செய்துவிட்டுத் தப்பித்துக் கொள்ளலாம். பிடிபடாமலும் தப்பித்துக் கொள்ளலாம். பிடிபட்டாலும் தப்பித்துக் கொள்ளலாம். ஏனெனில் படுகொலைகள் எல்லாம் சில நாட்களில் அல்லது சில மணித்தியாலங்களில் நடந்து முடிந்து விடுபவை. நடத்தி முடித்துவிட்டு ஆதாரங்களை மறைக்கக் கூடியவை. அதுதான் கடந்த வருடம் நடந்தது. ஆனால் தமிழர்களையே கூலிகளாகக் கொண்டு, அவர்களின் மாகாண வளங்களை தமதாக்கிக் கொள்வதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல.

அத்துடன் இராணுவத்தைக் கொண்டு செய்விப்பதால் ஸ்ரீலங்கா அரசுக்கு மற்றோர் நன்மையும் உண்டு. அபிவிருத்திக்காக செலவிடப்படும் தொகை அரசாங்கத்திடமே வந்துவிடுகிறது. ஆனால், இது இன்று இனித்து நாளை கசக்கும் ஒரு விடயமேயாகும். உற்பத்தி வேலைக்கு மனித உடல் உழைப்புத் தேவைப்படும் நிலை ஓரிரு வருடங்களில் முடிவடைந்துவிடும்.

**************************************************

## 3.இ மஹிந்த சிந்தனையும் இராஜதந்திரமும்

3.இ.1. மாறுபட்ட இராஜதந்திரம்:

1.1. அரசியல்

1.2. இந்திய நட்பு

1.3. பல மைய அதிகார உலகம்

1.4. தாராளமாகக் கிடைக்கும் தாராளவாதம்

1.5. விதேசிய இராஜதந்திரமும் தேசிய இராஜதந்திரமும்

## 3.இ.1) மாறுபட்ட இராஜதந்திரம்

இலங்கை வரலாற்றில் இதுவரை முன்வைக்கப்பட்டு வந்த தேர்தல் கால அரசியல் வேலைத்திட்டங்களையும் விட மகிந்த சிந்தனை (ம.சி) மிகவும் வேறுபட்டதாய் காணப்பட்டது. பொருளாதாரக்கோட்பாடுகளின் அடிப்படையில் அனைத்துலக அளவில் எந்த ஒரு அணியையும் பகைத்துக்கொள்ளாத முறையில் வாக்கியங்கள் மிகக் கவனமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. புலிகளின் இரணுவப்பிரிவு சிதறடிக்கப்படும்வரை, மகிந்த சிந்தனை, மேற்குலகுடனும் ஆசிய உலகுடனும் நெருங்கிய உறவைப் பேணி வந்தது, அதேபோல் அனைத்து வல்லரசுகளுடனும், இஸ்லாமிய உலகுடனும் அரசியல் நட்புறவு பேணப்பட்டும் வந்தது. அவர்களின் ஒத்துழைப்பும், வழிகாட்டலும் தாராளமாகவே பெறப்பட்டன. புலிகளைத் தோற்கடிப்பது என்ற விடயத்தில் ம.சி-யின் உறுதிதான் இவ் அரசியல் நட்புக்கும் அந்த நண்பர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட தங்குதடையற்ற உதவிகளுக்குமான காரணமாகும்.

புலிகளின் தோற்கடிப்புக்குப் பிறகுதான் மேற்குலகுடனான அரசியல் முரண்பாடு தோற்றம் பெறத் தொடங்குகிறது. பிரபாகரனைத் தோற்கடிப்பதற்காக முழு உலகமும், இலங்கை மக்களில் பெரும்பான்மையினரும் ஒன்றுபட்டிருந்தனர். அதன் பின்னர்தான் மஹிந்த, சரத் என இருபிரிவுகளாகப் பிரிகின்றனர். ஆனால் பொருளாதார ரீதியாகவும் (தாராளவாதப் பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்துவதில் தாராளமாகவே இருத்தல்), ஓரளவு தூரத்திற்கு இராணுவ ரீதியாகவும் மேற்குலகுடன் நட்பைப் பேணுவதே ம.சி-யின் தன்மையாகவும் சாராம்சமாகவும் இருந்து வருவதால் இம் முரண்பாடுகூட, பகைமைத் தன்மை பெறாமல் இன்னமும் வாய்த் தகராறுகள் என்ற வட்டத்துக்குள்ளேயே சுழன்று கொண்டிருக்கின்றது. இந்திய சாணக்கியத்தின் நல்லதோர் மாணவனாக ம.சி உள்ளதெனக் கூறலாம்.

### 1.1) அரசியல்

90கள் வரை, அணிசாராக் கொள்கையும், அணிசேரா இயக்கமும் மூன்றாம் உலக நாடுகளின் பாதுகாவலனாகவும், அந்நாடுகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நிற்பனவாகவும் இருந்தன. அணி சேராமையென்பது உண்மையிலேயே மேற்குலகிற்கு அதிலும் குறிப்பாக அமெரிக்காவுக்கு, எதிராக அணிதிரளலாகவே இருந்தது. இதுதான் மூன்றாமுலக நாடுகளின் அன்றைய இராஜ தந்திரமாக இருந்தது. இந்த அணி திரளலும், இராஜ தந்திரமும் அன்றைய வல்லரசான சோவியத் யூனியனது ஆதரவைப் பெற்றதாகவும் இருந்தது. ஆனால் இன்று அந்த நிலையில்லை. தாம் தனியாக

அணி திரள்வதற்கான மேடைகள் எதுவுமே மூன்றாம் உலக நாடுகளுக்கு இல்லை. வல்லரசுகள் உட்பட அனைத்து நாடுகளுடனும் ஒரு நட்பைப் பேணுவது, வல்லரசுகளுடனான உறவுகளில் அனைத்து வல்லரசுகளுடனும் ஒரு சமதூரத்தைப் பேணுவது, உலகின் பல்மைய அதிகாரத்துவத் தன்மையை ஊக்குவிப்பது ஆகியவைதான் மூன்றாமுலக நாடுகளின் இன்றைய இராஜ தந்திரமாக வளர்ந்து வருகிறது. இதுதான் ஏகாதிபத்திய எதிர்ப்பு இராஜ தந்திரமாகவுள்ளது. ம.சி அவ்வழியையே பின்பற்றுகின்றது. இதன் மூலம் ம.சி ஊரோடு ஒத்தோடுகின்றது. இதனால் ம.சி-யால் பலருடனும் நட்புறவை வளர்த்துக் கொள்வது சாத்தியமானதாய் உள்ளது. ஆனால் ஸ்ரீலங்கா அரசு வளர்ச்சி பெற்றதொரு முதலாளித்துவ அரசுமல்ல, ஒரு மக்கள் ஜனநாயக அரசுமல்ல, ஒரு சோஷலிஸ அரசுமல்ல, ஆகவே, வல்லரசு நாடுகளுடனான அதனது நட்பென்பது அந்நாட்டின் சுரண்டல்களுடனும் மேலாதிக்கத்துடனும் ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு சமரசமாகவே அமையும். இலங்கையின் தேசிய வளங்களையும், அதன் பூகோள அமைவிட வாய்ப்புகளையும், தேசியத்தை அனைத்து வல்லரசுகளுக்கும் பங்கிட்டு அளிக்கும் வேலையையும் MR வெற்றிகரமாகச் செய்து வருகிறார். ம.சி-யின் வெற்றிக்கான அனைத்துலக காரணிகள் இவையேயாகும்.

## 1.2) **இந்திய நட்பு**

V.K. சசிக்குமார் எனும் முதுநிலை புலனியல் இதழியலாளருக்கு பாதுகாப்புச் செயலரான கோத்தபாய ராஜபக்ஷ வழங்கிய செவ்வியொன்றை அடியொற்றி அவரால் எழுதப்பட்ட கட்டுரையின் சில பகுதிகள்:

“தான் பதவிக்கு வந்த ஆரம்பத்திலேயே, இந்தியாதான் யுத்தத்தில் வெற்றியை அல்லது தோல்வியை கொணரக்கூடிய தீர்க்கமான யுத்த தந்திரோபாயக் காரணியாகும் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்.”...... கோதபாய மேலும் கூறியதாவது: “இந்தியாவை எமது நண்பனாக்கிக் கொள்ளல் மிக முக்கியமானதென ஜனாதிபதி கூறினார். கடந்தகாலப் போர் நடவடிக்கைகள் பற்றிய ஆய்வின்போது 1987-ல் நடந்த வடமாராட்சி தாக்குதல்களின் வெற்றிகரமான போர் முடிவுகளை எம்மால் தக்க வைக்க முடியாது போனமை ஏன் என்ற கேள்வி எம்மிடையே எழுந்து எமது ஆய்வைத் தூண்டியது.” ஸ்ரீலங்காவின் இராணுவ வரலாற்றின் இரு பெரும் யுத்த நாயகர்களான SLAF-ன் பிரிகேடியர் டென்சில் கொப்பக்கடுவவும், கேர்னல் விஜே விமலறட்னவும், LTTE-யை இராணுவரீதியாகத் தோற்கடிப்போமென அப்போதைய ஜனாதிபதி ஜூனியஸ் றிச்சட் ஜெயவர்த்தனவுக்கும், தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலிக்கும் உறுதியளித்தனர். ஆனால் 1987,ஜூன் 4-ல் யாழ்ப்பாணத்தின்மீது இந்திய விமானப்படைமூலம் உணவுப் பொட்டலங்களை

தூவுவதன் மூலம் (பூமாலை நடவடிக்கை) இந்தியரசு தனது தலையீட்டை உறுதிப்படுத்தியது. JRJ மீது பிரயோகிக்கப்பட்ட இந்திய அழுத்தம் இந்தோ-ஸ்ரீலங்கா உடன்படிக்கையில் (ISLA) ஒப்பமிடும் நிர்ப்பந்தத்தையும் இந்திய சமாதானப் படையை வரவழைக்கும் நிர்ப்பந்தத்தையும் அன்றைய ஜனாதிபதிக்கு ஏற்படுத்தியது. JRJ-ன் பாதையில் செல்லாமல், LTTE க்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் கொழும்பின் குறிக்கோளுடன் டெல்லி இணைந்து நிற்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவில் மகிந்த மிகவும் விழிப்புடனேயே இருந்தார். வடமராட்சித் தாக்குதலுக்கு நடந்த கதி மீண்டும் நடப்பதை அவர் விரும்பவில்லை.''.... கோத்தபாய மேலும் கூறியது.

''நாம் இவ்விதம் நடந்திருக்காவிட்டால், 2005-க்கும் 2009-க்கும் இடைப்பட்ட சுமார் மூன்றரை வருட (நாலாவது ஈழப்போர்) காலத்தில் யுத்த நடவடிக்கைகளை நிறுத்தும்படி இந்தியா பல தடவைகள் எம்மை நிர்ப்பந்திக்கும் நிலை ஏற்பட்டிருக்கக் கூடும்.'' தொடர்கிறார், ''ஆனால் நாம் அவ்வித நிலைமை ஏற்படுவதை அனுமதிக்கவில்லை. டெல்லிக்கு முறையாக அப்பப்போ நிலைமையைப் பற்றிய விளக்கத்தைக் கொடுத்து வந்தோம். கலாநிதி.மன்மோகன் சிங்கின் அரசாங்கம் ஒரு கூட்டணியரசாங்கம் என்பதையும் நாமறிவோம். இதனால் கூட்டணிக் கட்சிகளின், அதிலும் குறிப்பாக தி.மு.க-வின் அதிருப்திகளையிட்டு காங்கிரஸ் கட்சி விசனமுற்றிருந்ததையும் நாம் புரிந்து கொண்டோம். குடிமக்களுக்கு ஏற்படும் சேதங்களையும் இழப்புகளையுமிட்டு உருவான தமிழ்நாட்டு மக்களின் இதயத் துடிப்பையும் நாம் உணர்ந்து கொண்டோம். இதனால் ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியத் தலைமைக்கு அவ்வப்போவான நிலவரங்கள் பற்றிய விளக்கத்தைத் தந்து கொண்டேயிருந்தார். எமது தொடர்புக் கட்டுமானங்கள் எந்நேரமும் தயார் நிலையிலேயே இருக்கும்படியும் பார்த்துக் கொண்டார். எமது பக்கத்தில், பசில் ராஜபக்ஷ (ஜனாதிபதியின் முதுநிலை ஆலோசகரும், பாராளுமன்ற உறுப்பினருமாகும்), லலித் வீரதுங்காவும் (ஜனாதிபதியின் நிரந்தரச் செயலாளர்), நான் ஆகிய மூவரும் இந்தியப் பக்கத்திலான எம்.கே. நாரயணன் (இந்தியாவின் முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர், தற்போது மேற்கு வங்காள கவர்னர்) சிவ்ஷங்கர் மேனன் (முன்னாள் இந்திய வெளிநாட்டுச் செயலர், தற்போது தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்), விஜேசிங் (முன்னாள் பாதுகாப்புச் செயலர்) ஆகிய மூவருடனும் மிக நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தோம். எம் அறுவருக்கும் இடையே தொடர்ச்சியான உரையாடல்கள் நடந்து கொண்டே இருந்தன. உணர்ச்சிபூர்வமான நிகழ்வுகள் ஏற்படும் போதெல்லாம் நாம் நேரில் சந்தித்துத் தீர்த்தும் உள்ளோம். இத்தகு நடைமுறைகளால் தான், SLAF தனது இராணுவ நடவடிக்கைகளை எந்தக் குறுக்கீடுகளும் இன்றி தொடர முடிந்தது.''

மேலும், “LTTE யின் மீதான SLAF இன் தாக்குதல் நடவடிக்கைகளைக் கண்டித்து 2009 ஏப்ரல் 27-ல், தி.மு.க தலைவரும், தமிழ்நாட்டின் முதலமைச்சருமான மு. கருணாநிதி, சென்னை அண்ணா சதுக்கத்தில் நடத்த இருந்த உண்ணா நோன்புக்கு முதல் நாள் மேனன் எனது கைபேசி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டார். அப்போது நேரம் மாலை 4.30. அவசர உரையாடலுக்காக இந்தியக் குழுவொன்று கொழும்புக்கு உடனடியாக வரவேண்டிய நிலையுள்ளதென அறிவித்தார். நான் நேரடியாக ஜனாதிபதிச் செயலகம் சென்று அவரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டேன். ஐந்து நிமிடத்தில் மேனன் அழைக்கப்பட்டார். இதன் விளைவாக, ‘துப்பாக்கிச் சூட்டுத் தவிர்ப்பு வலயத்துள்’ குண்டுகள் வீசுவதையும் மோதுதல் நடவடிக்கைகளையும் நிறுத்துவதை தெரிவிக்கும் அறிவிக்கையொன்று, கருணாநிதியின் உண்ணாவிரதத்துக்கு ஆறு மணத்தியாலங்க்ளுக்கு முன்னர் உடனடியாக வெளியிடப்பட்டது. இவ் அறிக்கை சென்னையில் ஏற்படவிருந்த நெருக்கடியை நிறுத்திவிட்டது. கருணாநிதி தனது உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொண்டார். இதுதான், இரு அதிகாரபூர்வமான அரசுகளுக்கு இடையில் இருக்கவேண்டிய அமைதியான, சரியான முன்மாதிரி இராஜதந்திர உறவாகும்.” கோத்தபாய பெருமைப்பட்டுக்கொண்டார்.

மேலும் தொடர்கிறார், “இந்தியாவுடனான உறவைக் கையாள்வதில் ஜனாதிபதி ராஜபக்ஷ கடைப்பிடித்த வழிமுறைகள்தான் எமது இராணுவ வெற்றிக்கான திறவுகோல் காரணமாகும். இந்தியாவால் மாத்திரந்தான் இராணுவரீதியாக எம்மீது செல்வாக்குச் செலுத்த முடியும் என்பதை நாம் சரியாகவே கணிப்பிட்டிருந்தோம். எமது அயலிலுள்ள மிகப்பிரமாண்ட சக்தி இந்தியாதான். இலங்கையில் எது நடந்தாலும் அதனால் உணர்ச்சிவசப்படக்கூடிய 6 கோடி தமிழர்கள் வாழும் தமிழ்நாடு மிக அண்மையில் இருப்பது எமது நிலைமையை மிகவும் குழப்பகரமானதாக ஆக்கியுள்ளது. ஏனைய நாடுகளால் எமக்கெதிராகப் பொருளாதாரத் தடையை விதிக்க முடியும், சில வேளைகளில் அவற்றால் இதில் வெற்றி பெறவும் முடியலாம். ஆனால் இந்தியாவால் மாத்திரந்தான் எமது யுத்த நடவடிக்கைகளின் போக்கில் ஏதாவது மாற்றத்தைச் செய்ய முடியும். இதனால் கொழும்பின் யுத்த நோக்கத்துடன் டெல்லியை நண்பனாக்கி வைத்திருந்தோம். இதற்கான பாராட்டுகள் அனைத்துமே ஜனாதிபதி ராஜபக்ஷவையே சாரும்.”

கோத்தபாய தனது பேட்டியில் இந்தியா சிங்களத் தேசியத்துக்கு எதிரானதென்ற தமது கருத்தை மறைக்கவில்லை. இது அவரின் நேர்மையான கூற்றா அல்லது யுத்தத்தின்பின் மிகவேகமாக வளர்ந்து வரும் இந்திய எதிர்ப்பு சிங்களத் தேசியவாதத்திற்கு பயந்து இவ்விதம் கூறுகிறாரா என்பது தெரியவில்லை. எவ்விதம் இருந்தாலும் நாம் (303 உறுப்பினர்களைக் கொண்டு

ஸ்ரீலங்காவின் அனைத்து அதிகாரங்களையும் தமதாக்கிக் கொண்டுவரும் மஹிந்த குடும்பம்) இந்திய மேலாதிக்கத்திற்கு எதிரானவர்கள் என்பதை மிக நாசூக்காக, ஆனால் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறுகிறார். இந்த எதிரியைக் கைக்குள் போட்டுக் கொண்டதுதான் ஜனாதிபதியின் ராஜதந்திரம் எனப் பெருமையுடன் பகர்கிறார், மார் தட்டுகிறாரென்றும் கூறலாம்.

வடமாராட்சி படை நகர்வில் இருந்தும், இந்திய சமாதானப் படை நகர்விலிருந்தும் அவர் கற்றுக்கொண்ட பாடங்கள் சரியானவைதான். இந்தச் செவ்வியின்போது அவர் திம்புவைக் குறிப்பிடாது போனதேன் என்று புரியவில்லை. திம்புவின் அனுபவம் கற்றுத் தரும் பாடங்களும் இதுதான். இலங்கைத் தீவின் எந்தப் பிரிவினர்களினதும் இறைமையை மதிக்கும் நிலையில் இந்தியா இல்லையென்பதே அந்தப் பாடமாகும். இது இருதரப்பினராலும் கற்றுக்கொள்ளப்பட்ட பாடமெனக் கொள்ளலாம்.

பௌத்த-சிங்கள பேரினவாதிகளின் பார்வையில் MR-ன் இராஜதந்திரத்தின் உடனடிப் பலாபலன்கள்:

* புலிகளை அழித்ததுவும், பிற தமிழீழ ஆயுதக் குழுக்களை ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்ததுவுந்தான் ம.சி யின் இராஜதந்திரத்தின் வெற்றியின் உயர் கட்டமாகும். ஏதோ ஒரு வழியில் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் தொடர வேண்டுமென்பதே மேற்குலகினதும், இந்தியாவினதும் விருப்பமாக இருந்தது. ஆனால் ம.சி உள்நாட்டு யுத்தத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது, இருவரது எதிர்பார்ப்புகளும் சுக்குநூறாகின. அவர்களின் கரங்களைக் கொண்டே அவர்களின் முகத்தில் கரி பூசப்பட்டது.

* ம.சி இந்தியாவுக்குத் தண்ணி காட்டுவதில் அல்லது இந்தியாவின் காதில் பூச்சூடுவதில் வெற்றி பெற்றுள்ளது.

* உலகத் தமிழர்கள் முன்னால் இந்தியாவைத் தலைகுனிய வைத்து இந்தியாவுக்கு ஒரு அவப்பெயரை தோற்றுவித்துள்ளது.

* தமிழ்நாட்டுத் தமிழர்கள் இந்திய மத்தியரசை தமிழர்களுக்கு எதிரான அரசு என்ற சந்தேகத்துடன் பார்க்க வைத்துள்ளது.
அதாவது ‘இந்திய தேசிய ஒருமைப்பாடு’ என்ற அரசியல் கட்டுமானத்தில் சில வெடிப்புகள் ஏற்பட வழி சமைத்துள்ளது.

* இலங்கையில் மையங்கொண்டிருந்த தமிழ்த் தேசியமெனும் சூறாவளியை, இந்தியாவை நோக்கித் திருப்பும் அரசியலில் குறிப்பிட்ட சில அடிதூரம் முன்னேறியுள்ளது.

* மஹிந்தவின் படுகொலைகளைப் பற்றிய அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்படுமானால், அதில் இந்திய மத்தியரசின் அதிகாரிகளின் பெயர்களும் இழுபடலாம் எனும் நிலையை உருவாக்கியது.

* ஐ.நா சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினராகச் சேர்வதில் மேற்குலகம் காட்டி வந்த எதிர்ப்பு இப் பேரழிவின் பின்னர் இன்னும் வலுப்படும் நிலையைத் தோற்றுவித்தது.

* இந்தச் சாதனைகளுக்காக சீனாவும், மேற்குலகும் மஹிந்த தலைமைக்கு மேலும் மேலும் பல சன்மானங்களை வாரி வழங்கப்போவதுவும் உண்மை.

* இரட்சிக்கப்பட்ட புனித பூமியான லங்காதுவீப பௌத்தர்களுக்கு மாத்திரமே சொந்தமானது என்ற நம்பிக்கையை நிறைவேற்றக்கூடிய தலைவர் மஹிந்த ஒருவரேதான் என்ற நம்பிக்கையை சிங்கள-பௌத்த மாறாமரபியல்வாதிகள் மத்தியில் ஏற்படுத்துவதில் இந்தியாவை முழுமையாகப் பயன்படுத்துவதில் ம.சி பிரமாண்ட வெற்றிகளைப் பெற்றுள்ளது.

ஆசியாவின் முதிர்ந்த இராஜதந்திரிகளில் ஒருவராகக் கருதப்பட்டவரும், கிழட்டுக் குள்ள நரியென அழைக்கப்பட்டவரும், யங்கி டிக்கியென இலங்கை இடதுசாரிகளால் நாமமிடப்பட்டவரும், பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாகவே தனிநபர் இராணுவ எதேச்சதிகார அரசுக் கட்டுமானத்தை இலங்கையில் அமுலுக்குக் கொண்டு வந்தவரும், நீதித் துறையை ஓரங்கட்டி அதை ஜனாதிபதியின் பொம்மை ஆக்கியவரும், தெற்காசியப் பிராந்தியத்திலேயே ஏகாதிபத்திய உலகமயமாக்கலை முதன் முதலில் தனது நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வந்தவருமான JRJ மஹிந்தவுக்கு குறைந்தவரா என்ன?

JRJ யும் இந்தியாவைத் தனது கைகளுக்குள் போட்டுக் கொண்டவர்தான். அதற்காக அவர் கொடுத்த விலை இரண்டாகும்,

ஒன்று : இரு மாகாணங்களை ஒன்றிணைத்த ஒரு அரசியல் அலகு.

இரண்டாவது : தமிழர்களுக்கான ஒரு அதிகாரப் பரவலாக்க அலகு.

அதுதான் மாகாணசபை. ஆனால் மஹிந்தவோ எந்த விலையும் கொடுக்கவில்லை. JRJ கொடுத்த விலையையும் திரும்பப் பெற்றும் கொள்வார் போல் தெரிகிறது. போர் முடிந்து ஒரு வருடத்திற்கு

மேலாகியும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக எந்த நடவடிக்கையும் இன்னும் கொள்கையளவில் கூட எடுக்கவில்லை. இந்தக் கோணத்தில் நோக்கும் போது -அதாவது இந்தியாவுக்குத் தண்ணி காட்டுவதில் - MR, JRJ-ஐ முந்திவிட்டார். இந்திய வல்லரசு ஒரு காகிதப்புலிதான் என்பதை நிரூபித்துவிட்டாரென்று கூறமுடியுமா? இல்லை அதற்கு இன்னமும் காலம் இருக்கிறது. ஒரு நாட்டுடன் உள்ள உறவை மட்டும் வைத்துக்கொண்டு அவ்வித முடிவுக்கு வந்துவிடவும் முடியாது. இது இந்தியாவின் வளைந்து கொடுக்கும் தந்திரோபாயமாகவும் இருக்கலாம். இறால் போட்டுச் சுறா பிடிப்பதென்று சொல்வார்களே, அப்படியும் இருக்கலாம்.

எவ்வளவு நெருக்கடி இருந்தாலும் JRJ பொருளாதாரரீதியில் எதையுமே இந்தியாவுக்கு விட்டுக் கொடுக்கவில்லை அல்லது மிகச் சொற்பமாகவே விட்டுக் கொடுத்தார் என்று கூறலாம்.

மஹிந்தவின் பொருளாதார விட்டுக்கொடுப்புகள் சிங்கள மேட்டுக் குடியினரின் பௌத்த சிங்கள பேரகங்காரவாதத்தை அரசியல்ரீதியாகக் காயப்படுத்தவில்லை, மாறாக, ஏற்கனவே இருந்த காயங்கள் சுகப்படுத்தப்பட்டுள்ளன. காயப்படுத்தி வந்த நகங்கள் சீவப்பட்டுள்ளன. ஆனால், இதற்காக மஹிந்த நடைமுறைப்படுத்திய, பார்த்துப் பாராத பொருளாதார விட்டுக்கொடுப்புகள் இலங்கையைப் பொருளாதாரரீதியில் நிறையவே காயப்படுத்தியுள்ளன. அதன் தீய விளைவுகளை இனித்தான் மக்கள் உணர ஆரம்பிப்பார்கள். கண்ணை விற்று ஓவியம் வாங்கியதற்காக MR வருந்தும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

மேற்குலகின் ஆசீர்வாதத்துடன் JRJ-யால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தியாவுக்கு எதிரான, சேர்ந்து கழுத்தறுக்கும் கபட அரசியல் இயக்கத்தை ம.சி மேலும் சிறந்த முறையில் முன்னெடுத்துச் சென்றுள்ளது.

ஆனால் இவ்வெற்றிகள் நிலைத்து நிற்குமா? இந்த வெற்றிகளுக்காக இந்திய பெரு முதலாளித்துவத்திற்கு அவர் விரித்துள்ள செங்கம்பளம் இலங்கைப் பொருளாதாரத்தின் தூக்குக்கயிறாக மாறி இலங்கையின் பொருளாதாரத்தின் கழுத்தை நெரிக்கும்போதுதான் ம.சி-யின் ஆபத்துகள் புரிந்து கொள்ளப்படும்.

நாளைய நடப்பு எவ்விதமோ, ஆனால் இன்று, அவரும், அவரின் கூட்டுக் குடும்பமும், சிங்கள பௌத்த பேரகங்காரவாத மேட்டுக்குடியினரும் மிகப் பெரும் அரசியல் இராணுவ வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள்.

அடுத்த பக்கத்தில், கடந்த கால போர் நடவடிக்கைகளில் இருந்து

தமிழ்த் தரப்பு கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன?

வடமராட்சி தாக்குதலை முறியடிக்கும் முயற்சிகளில் தமிழ்த் தரப்பு முன்னேறி வந்த வேளையில்தான் ‘பூமாலை’ வீசப்பட்டது. இலங்கையின் தமிழ்த் தரப்பு சொந்தக் காலில் நிற்க வேண்டுமென இந்தியா விரும்பியிருந்தால் தனது நேரடித் தலையீட்டைத் தவிர்த்திருக்க வேண்டும். டெல்லி அதை விரும்பவில்லை என்பதை பூமாலை கற்றுக் கொடுத்தது.

சிங்கள தேசியத்தினதும், தமிழ்த் தேசியத்தினதும் இறைமையை இந்தியா ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை என்பதை திம்புவும் இருவருக்கும் கற்றுக் கொடுத்தது. திம்பு இருவருக்கும் சேர்த்து வீசப்பட்ட வலையாகவே இருந்தது. ஆனால் இங்கும் தனது காலப் பொருத்தப்பாடான இராஜதந்திரத்தால் ஸ்ரீலங்கா அரசு தப்பித்துக் கொண்டது. தனது வலது முனைவாத இராஜதந்திரத்தால் தமிழீழத் தரப்பு வலையில் மாட்டிக்கொண்டது.

முதல் இரு தடவைகளிலும் கற்றுக்கொண்ட பாடத்தை இன்னும் தெள்ளத்தெளிவான முறையில் கற்றுத் தந்ததுதான் 1987 இலங்கை-இந்திய உடன்படிக்கையாகும். இலங்கையின் தேசிய இனச் சிக்கலுக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் இந்திய தரகு முதலாளிகளின் தலையீட்டைத் தவிர்ப்பது நடைமுறைச் சாத்தியமற்றது. இத்தலையீட்டை இலங்கை வரலாறுக்கு சாதகமானதாக மாற்றுவதா அல்லது பாதகமாக இருக்க அனுமதிப்பதா என்பதை இலங்கையர்கள்தான் தீர்மானிக்கவேண்டும். முயன்றால் முடியாததல்ல. ஆனால், இயல்பானதாக அமைவதென்பது முயற்கொம்பாகவே இருக்கும். இவையே தமிழர், சிங்களவர் ஆகிய இரு பகுதியினருக்கும் கிடைத்த பொதுவான படிப்பினைகளாகும். இந்தியத் தரகு முதலாளித்துவ ஆட்சியாளர்களின் தலையீடு குறுகிய காலத்திற்கு, இன்று ஒரு பகுதியினருக்கும், நாளை இன்னோர் பகுதியினருக்கும் சாதகமானதாக இருக்கலாம், ஆனால் நீண்ட நோக்கில் அது இருசாராருக்கும் பாதகமானதாகவே அமையுமென்பதே இயல்பானதாக உள்ளது. பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் இந்தியாவிடமிருந்து இலங்கையை நோக்கிய நட்புறவுக்கரம் நீட்டப்படுமென்பதை எதிர்பார்ப்பதற்கான நிலைமை இல்லை. இந்த யதார்த்தத்தை எவ்விதம் எதிர்கொள்வது என்பதே இலங்கையர்களின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான அங்கமாக உள்ளது.

சிங்களத் தரப்புக்கில்லாத மேலதிகமானதொரு பாதக அம்சம் தமிழ்த் தரப்புக்கு உண்டு. இலங்கையின் எந்தவகைத் தமிழ்த் தேசியமாக இருந்தாலும், அவை இந்தியத் தேசியத்துக்கும் ஆபத்தானதென்று இந்திய ஆட்சியாளர்கள் கருதுவதுதான் அந்தப் பாதுகாப்பு அம்சமாகும்.

1970கள் வரை தமிழ்நாடு பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் விளிம்பு நிலை மாநிலமாகவே இருந்தது. ஆனால், இன்று பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் முன்னணி வகிக்கும் மைய மாநிலங்களில் மூன்றாவது இடத்திற்கு வளர்ந்துள்ளது. இவ் வளர்ச்சி மேலும் துரித கதியில் தொடர்கிறது. மையத்தை நோக்கிய இந்த இடப்பெயர்வானது தமிழ்நாட்டின் மேட்டுக்குடியினரின் பெரும்பகுதி இந்தியத் தேசியத்துடன் இரண்டறக் கலக்கும் நிலையைத் தோற்றுவித்துமுள்ளது. இம்மேட்டுக் குடியினர் அனைவரும் தமிழர்களல்ல. தி.மு.க-வின் ஆரம்ப நாட்களில் இம்மேட்டுக் குடியினரின் பெரும்பகுதியினர் தமிழர் அல்லாதவர்களாகவே இருந்தனர், இவர்களே மேலாண்மை செலுத்துபவர்களாகவும் இருந்தனர். இந்தியத் தமிழ்த் தேசியத்தின் முன்னாள் 'வீரியத்திற்கு' தமிழ்நாட்டு ஆளும் வர்க்கங்களுக்கிடையேயான இந்த முரண்பாடும் ஒரு காரணம். ஆனால் இன்றோ நிலமை மாறிவிட்டது. இதனால் தமிழ்நாட்டு மேட்டுக்குடி இந்தியத் தேசியத்துடன் இரண்டறக் கலத்தலிலேயே அதிக நாட்டங்காட்டி வருகிறது. இதன் விளைவு இந்திய மத்தியரசும், தமிழ்நாட்டரசும் இந்திய தேசிய விவகாரங்களைப் பொறுத்து ஒத்த கண்ணோட்டமுள்ளனவாகவே உருவாகி வருகின்றன.

தமிழீழம் கண்டு மத்தியரசும் அஞ்சுகிறது, தமிழ்நாட்டரசும் அஞ்சுகிறது. இதுதான் தமிழ்நாட்டின் பிரதான கண்ணோட்டமாக உள்ளது. எதிரோட்டமான கண்ணோட்டங்களும் உண்டு. அதுபற்றி 'மகிந்த சிந்தனையும் இராணுவமும்' என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளது.

இந்த இரண்டறக் கலத்தலின் அரசியல் வெளிப்பாடுதான் இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மிகப் பாதக தெற்காசியச் சூழலாகும். அதேவேளையில், இவ் ஒன்றிணைதல் சிங்கள பௌத்த பேரகங்காரத்திற்கு கிடைத்த ஒரு மிகப் பெரும் சாதக அம்சமாகும். இந்தச் சாதக, பாதக அம்சங்களை முறையாகக் கையாண்டதன் பலாபலன்தான் MR-ன் வெற்றியாகும்.

சிங்களத் தேசியத் தலைவர்களான JRJ-ம், மஹிந்தவும் புலிகளை ஒடுக்குவதற்கு ஏற்ற முறையில், இந்தியாவைக் கையாள்வதில் தற்காலிக வெற்றிகள் பெறக் கடைப்பிடித்த இராஜதந்திரங்கள் எவை?

தமது அரசியல் தனித்துவத்தைப் பேணி வரும் அதேவேளையில், மூலோபாய எதிரியைப் பகைவனாக்காமல் அவனுடன் தந்திரோபாய ரீதியில் தமது அரசியல், இராணுவ, பொருளாதாரத் தனித்துவத்தை இழக்காத முறையில் நட்பைப் பேணுவது என்ற கோட்பாட்டை மிகச் சகிப்புத் தன்மையுடனும், மதிநுட்பத்துடனும் பின்பற்றி வருவதே அவ்

இராஜதந்திரமாகும். அதாவது, பகைவனாகியுள்ள எதிரியை மட்டும் முதலில் குறி வைத்து, பிற எதிரிகளைத் தாமாகப் பகைவனாக்கிக் கொள்ளாமல், அவர்களுடன் பரஸ்பர விட்டுக்கொடுப்புகளுடன் வாழப் பழகிக் கொள்வதில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளார்கள்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா மட்டும் இராஜதந்திரத்தில் சாமான்யமானவரா? நண்பியாக வந்திருந்த எதிரியான இந்தியாவுடன் (சிங்கள மேட்டுக்குடி எப்போதுமே இந்தியாவை எதிரியாகவே பார்க்கிறார்கள்) வார்த்தையளவிற் கூட பகைத்துக் கொள்ளாமல் இலங்கையைவிட்டு வெளியேற்றுவதற்காக பகைவராக இருந்த எதிரியான புலிகளுடன் நட்புறவு கொண்ட இவரின் இராஜதந்திரம் சாதாரணமானதா? இந்த நட்பு JVP-ஐ அடக்கவும் உதவியது; இந்தியாவை வெளியேற்றவும் உதவியது. இதற்காக இவர் மேற்குலகுடன் எந்த உடன்படிக்கைக்கும் செல்லவில்லை.

தமிழ்த் தரப்பின் ஒரு தரப்பு இந்தியரசுடன் ஒரு நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளத் தாமாக எந்த முயற்சிகளும் எடுக்காதது மாத்திரமல்ல, அதற்குரிய சந்தர்ப்பங்களையும் வேண்டுமென்றே உதாசீனப் படுத்தியும் வந்துள்ளார்கள். இந்திய அரசுடன் பகைமையை வளர்த்துக் கொள்வதில் தாமே முன்முயற்சி எடுத்தும் வந்துள்ளார்கள். தெற்காசிய வல்லரசை, தொடர்ந்து பகைவனாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தமது தனித்துவத்தை மட்டுமல்ல, தம்மையே அழித்தும் வருகிறார்கள். அதேநேரம் மேற்குலகுடனான நட்பைப் பேணுவதில் அதீத நாட்டமுள்ளவர்களாக உள்ளனர். இந்த நட்பு மேற்குலகைச் சார்ந்து நிற்பதாகவே அமைந்துள்ளது.

மற்றோர் தரப்போ, இந்திய மத்தியரசை தமது நம்பகரமான நண்பனாக ஆக்கிக்கொளவதில் வெற்றிபெற்றுள்ளது. ஆனால் தமது தனித்துவத்தை பேணுவதில் இவர்கள் எவ்வளவு தூரத்திற்கு பலமானவர்களாக உள்ளார்கள்? இலங்கை மக்களின் கட்டுக்கடங்காத சக்தியின் மீதுள்ள இவர்களின் நம்பிக்கைகள் எந்த மட்டத்திலுள்ளது எனப்தைப் பொறுத்தே இவர்களின் வெற்றி மேலும் முன்னெடுத்துச் செல்லப்படுமா என்பது அமையும்.

### 1.3) **பல மைய அதிகார உலகம்**

90-களுக்கு முற்பட்ட உலகம் தனி மைய ஆதிக்க உலகமாகவே காணப்பட்டது. அமெரிக்காவே அத்தனி மையமாகும். 90-களின் பிற்பகுதிவரை அமெரிக்கா மிகவும் சக்திமிக்க ஏறுநிலை வல்லரசாகவும் இருந்தது. ஆனால் 90-களில், ஒரு புறம் உலகம் பல மைய உலகமாக மாறியது. போதாக்குறைக்கு அமெரிக்கா இறங்குநிலை வல்லரசாக மாறிவருகிறது. 80-களிலும், 90-களிலும் இருந்ததுபோல் அமெரிக்கப் பருப்பு வேகுவது இனி அவ்வளவு சுலபமானதல்ல.

அடுத்த பக்கத்தில், ஆசிய வல்லரசுகளான சீனாவும் இந்தியாவும், எந்தக் காரணத்தைக் கொண்டும் தெற்காசியப் பிரதேசத்தில் தமக்கிடையேயான பகைமை உறவை தணித்துக் கொள்ளப் போவதில்லை. ஒருவர் மற்றொருவருக்கு பணியவோ, விட்டுக்கொடுக்கவோ போவதுமில்லை. அதேவேளை ஒருவர் மற்றொருவரை விட்டுப் பிரிந்துநிற்கப் போவதுமில்லை. இதனால் நிதானமிழந்த செயல்பாடும், வஞ்சகமும், சூதும் வாதுமே இவர்களிடையேயான உறவுகளாக இருக்கும்.

இதனால் தேச அரசுகளின் (தேசிய அரசல்ல) உடமை வர்க்கங்கள், அவர்கள் எவர்களாக இருந்தாலும் சரி வல்லரசுகளுடன், அது எந்த வல்லரசாக இருந்தாலும் சரி, அதனுடன் அல்லது அவற்றுடன் பேரம் பேசுவது இலகுவாகிறது.

இலங்கையில் இந்த மாறுதலைச் சரியாக புரிந்து கொண்ட இலங்கை அரசியல் தலைவர் மஹிந்த ஒருவரேதான். புலிகளும் மேற்கை எதிர்பார்த்து ஏமாந்தார்கள், இன்றும் ஏமாறுகிறார்கள். றணில் (யு.என்.பி) பிரிவும் மேற்கை எதிர்பார்த்து ஏமாந்தது.

## 1.4) **தாராளமாகக் கிடைக்கும் தாராளவாதம்**

பொருளாதார ரீதியிலும், அணிசேரா உலகம் இருந்த அன்றைய காலத்தில், உலகளாவிய அளவில், சோஷலிஸ நாடுகள் தவிர்ந்த பிற நாடுகள் அனைத்திலும் இருவிதமான பொருளாதாரக் கொள்கைகள் செயற்பட்டுவந்தன.

### 1) **சுதந்திர வர்த்தகக் கொள்கை / தாராளவாதக் கொள்கை**

தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைதான் உலகின் சக்தி மிக்க கொள்கையாக இருந்தது. மேற்குலகே இதன் ஊக்கிகளாக இருந்தனர்.

### 3) "**முதலாளித்துவமற்ற பாதை**"

இது "தேச உடைமைப் பொருளாதாரம்", "அரசுமையப் பொருளாதாரம்" "முதலாளித்துவ பாதையற்ற முதலாளித்துவம்" "கலப்புப் பொருளாதாரம்" "Populist பொருளாதாரம்" என பல பெயர்களால் அழைக்கப்பட்டது. இதுவே அன்று இந்தியா உட்பட அனைத்து வளர்ந்துவரும் நாடுகளிலும் பரவிக் காணப்பட்டது. இது "தேசிய முதலாளிகள்" எனக் கூறப்பட்டவர்களின் கொள்கை என்றும் உலகளாவில் நம்பப்பட்டது. இதுதான் இலங்கையில் "அப்பே ஆண்டுவ" என்று மக்களால் அழைக்கப்பட்டது.

இன்று அந்த நிலைமையில்லை. தாராளவாதக் கொள்கையே உலகெல்லாம் பரந்து காணப்படும் நிலையே உள்ளது. தரகு முதலாளிகள் அதைத் தேடி இன்று மேற்குலகம்தான் செல்ல வேண்டியதில்லை. இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேசில், தென் ஆபிரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் அனைத்தும் தாராளவாதக் கொள்கையினதும், அவ்வித வேலைத் திட்டங்களினதும் மொத்த வியாபாரிகளாகி விட்டார்கள். அவர்களிடம் பார்த்துப் பாராமல் கொசுறுகளும் (லஞ்சம்) பெற்றுக்கொள்ளலாம். முன்னரைப் போலன்றி, மேற்குலகின் ஆதிக்கத்தில் இருந்து ஓரளவு விடுதலை பெற்றுள்ள முன்னாள் புலிப் பொருளாதாரங்களான (Tiger Economy) மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் சிறு வணிகமும் செய்து கொள்ளலாம். தரகு முதலாளிகளின் தலைமையில் தம்மைக் கட்டுமானப்படுத்தியுள்ள இலங்கையின் தமிழ், சிங்கள மேட்டுக்குடிகள் இனியும் மேற்கில்தான் தங்கி நிற்கவேண்டும் என்பதில்லை. வாய்ப்புகள் பல உள்ளன. ஆனால், IMF போன்றோ, உலகவங்கி போன்றோ முறைப்படுத்தப்பட்ட ஒரு நிதி மேலாதிக்க சக்தி நிறுவனமும்; நிதி வர்த்தக நிறுவனமும் மேற்கல்லாதவர்களிடம் இல்லை, இதனால் தனிநபர்களின் துரிதமான வளர்ச்சிக்கு அவசியமான வளங்களை மேற்கல்லாதவர்களிடம் இருந்து மிகத்தாரளமாகப் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆனால், போட்டி IMF ஒன்று உருவாவதற்கான நிலைமை வளர்ந்து வருகின்றதென்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் IMF-ல் மேற்க்கல்லாதவர்களின் முதலீடுகளும் பெருகி வருகின்றன. இந்த இரண்டில் எது வெல்கிறதோ அது நிலைக்கும். ஒன்றில் இரு IMF-கள் உருவாக்கப்படும் அல்லது இருக்கும் IMF-ல் மேற்குலகின் ஆதிக்கம் செயலிழக்கப்படும்.

இந்தப் புதிய அரசியல் சூழலையும், பொருளாதார சூழலையும், அதன் வளர்ச்சியையும் ம.சி புரிந்து கொண்டளவுக்கு றணில்-சரத் கூட்டோ, றணில்-அன்ரன்பாலசிங்கம் கூட்டோ புரிந்து கொள்ளவில்லை. மேற்குலகுடன் சேர்ந்துதான் தரகு முதலாளித்துவத் தேசஅரசை வளர்க்க முடியும்; வளர்க்கவும் வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்த இரு கூட்டுகளும் தோற்றுப் போய்விட்டன. றணில் தனது தவறைப் புரிந்து கொண்டுள்ளார் போலும். "The return of the Asians, Challanges before rising Asia" எனும் இரு தலைப்புகளில் முன்னாள் பிரதமர் றணில் விக்கிரமசிங்ஹ, " South Asia Conference of the Rotary International in Bangkok"ல் 2010 நவம்பர் 27-ல் ஆற்றிய உரை வெளிப்படுத்துகிறது. உலகின் அனைத்து அரங்கிலும் முன்னிலை வகித்த ஆசியா மீண்டும் எழுந்து வருகிறார் என்ற கருத்தை முன்வைப்பதுடன், இந்த வளர்ச்சி கட்டாயமாக நடக்கும் என்பதை வலியுறுத்துவதுடன், அவ்வளர்ச்சியுடன் ஆசியர்கள் ஒன்றிணைந்து நிற்கவேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். ஸ்ரீலங்கா அவ்விதம் நிற்கும் என்பதையும் எதிர்க்கட்சித்

தலைவர் என்ற முறையில் உறுதிப்படுத்துகிறார்.

ஆனால் புலி வம்சாவளியினர் தாம் ஆசியர்களென்பதை மறந்து விட்டார்கள். இதனால் முழு ஆசியாவிலும் இருந்து தனிமைப்பட்டார்கள். இத்தனிமைப்பாடு தொடர்கிறது. இவர்களை எதிர்க்க 'முழு உலகமும் திரண்டு வந்தது என்பது உண்மையல்ல', உலகத்துடன் இணைந்து போவதில் தவறு செய்துவிட்டார்கள் என்பதே உண்மையாகும்.

புதிய சூழலுக்குப் பொருத்தமான இராஜதந்திரத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலந்தான் தரகு முதலாளித்துவ அரசை வளர்க்க முடியும், வளர்க்கவும் வேண்டுமென்பதில் மிகப் பிடிவாதமாக இருந்த ம.சி வெற்றியும் பெற்றுவிட்டது. இந்த வெற்றியின் விளைவு நாளை மேற்குலகம் அவரை அணைத்துக் கொள்வதையும், அனைத்து வல்லரசுகளுடனும் ஒரு சமதூர உறவைப் பேணக்கூடிய நிலையை உருவாக்குவதையும் சாத்தியமானதாக்கலாம். மறு புறத்தில், மாவீரன் மஹிந்த, இலங்கைத் தேசியர்கள், ஜனநாயகவாதிகள், இலங்கையின் தமிழ், சிங்கள, முஸ்லீம் உழைக்கும் மக்கள், இலங்கையின் தேசிய இனங்கள் ஆகியவற்றிடம் இருந்து தொலைதூரம் விலகிச் செல்வதையும் சாத்தியப்படுத்தும்.

## 1.5.) **விதேசிய இராஜதந்திரமும் தேசிய இராஜதந்திரமும்**

1977-ல் இருந்து இன்றுவரை வல்லரசுகளுடனான உறவு தொடர்பாக இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இராஜதந்திரங்களை பின்வரும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. சில விட்டுக்கொடுப்புகளுடன் கூடிய நட்பு
2. நிரந்தர மோதல்
3. சரணாகதி

இவைபற்றி ஏற்கனவே கூறப்பட்டுவிட்டன, ஆகவே அடுத்த தலைப்புக்குள் தொடர்வோம்.

இம்மூன்றும் தவிர்க்கமுடியாதவை, இவற்றை விட்டால் இலங்கைக்கு, மிகத் துல்லியமாகச் சொல்வதானால், இலங்கையின் உழைக்கும் மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட தேசிய இன்ங்களுக்கும் மாற்று வழி எதுவுமேயில்லை எனக் கூறிவிட முடியாது. செய்வதற்கு இனி ஒன்றுமில்லை எனக் கூறி அவநம்பிக்கை கொள்ளவும் இயலாது, கொள்ளவும் கூடாது. 'விதிவச ஒப்பாரி' நிறுத்தப் படட்டும். 'சூழலின் கைதியாகி விட்டோமே' என்று கூறி தலையில் அடித்துக் கொள்வதுவும் நிறுத்தப்படட்டும்.

ஒரு தேசஅரசு வகுத்துக் கொள்ளவேண்டிய தேசியக் கொள்கைகள் பற்றி நாம் இதுவரை பேசவுமில்லை, ஆராயவுமில்லை. 1977க்கும் 2009க்கும் இடையில், இலங்கைத்தீவில் இரு தேசஅரசுகள் இருந்தன. ஆனால் எந்தத் தேசிய அரசுகளும் இருக்கவில்லை. நாம் இதுவரை பேசியதெல்லாம் விதேசிய அரசுகளினதும், விதேசிய அரசுகளின் முன்னோடிகளினதும் இராஜதந்திரங்களைப் பற்றித்தான். அவர்கள் அதில் பெற்ற வெற்றி தோல்விகளைப் பற்றித்தான். அவர்களின் தனித்துவமென்பது தேசத்தின் தனித்துவமுமல்ல, தேசிய இனத்தின் அல்லது மதத்தின் தனித்துவமுமல்ல, மக்கள் ஜனநாயகத்தின் தனித்துவமுமல்ல, மாறாக அது ஏகாதிபத்திய உலக மயமாக்கலுக்கு சேவை செய்யப் புறப்பட்டுவிட்ட கட்சியினதும், குழுவினதும், குடும்ப உறவுகளினதும், தனி மனிதர்களினதும் தனித்துவமேயாகும். ஆளும் வர்க்கத்தின் ஒட்டு மொத்தத் தனித்துவத்தைக்கூட இவர்கள் மதிப்பதில்லை. ஆளும் வர்க்கத் தட்டின் ஒரு சாராரின் நலனுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர், கொடுத்தும் வருகின்றனர்.

- குடும்ப சர்வாதிகாரத்தை நிலைநிறுத்த முற்படுகிறார் மஹிந்த
- தமிழீழத்தை தனது தனிச் சொத்தாக்க முற்பட்டார் பிரபாகரன்

தாராளவாத முதலாளித்துவத்தை முன்னிலைப்படுத்த முற்பட்டார் ரணில் விக்கிரமசிங்க இவர்களில் யாருக்கும் தேசியம் பற்றி கவலையில்லை.

இவர்களின் இராணுவக் கால்களும், பொருளாதாரக் கால்களும், பிரபல்யம் என்ற கால்களும் எவ்வளவு பலமானதாகவும் இருக்கலாம். இவற்றை வைத்துக் கொண்டு ஒரு பூதம் போல் இவர்கள் காட்சி தரலாம். ஒரு நிஜப் புலியாகவோ சிங்கமாகவோ கூட இவர்கள் காட்சி தரலாம். சில வேளைகளில் காடுகள் அதிர உறுமவோ அல்லது கர்ஜிக்கவோ கூடச் செய்யலாம். தம்மவர்களையும் தமது எதிரிகளையும் அச்சுறுத்தவும், தமது அதிகாரப்பசிக்குத் தீனிபோடவும் ஆயிரக் கணக்கானவர்களை கொல்லவும் செய்யலாம். ஆனால், அவையெல்லாம் வெறும் தோற்றமாயைகளே. நிஜத்தில், மூலோபாயப் பக்கத்தில் இவர்கள் காகிதப் புலிகளே. ஏனெனில் இவர்களுக்கு சொந்தமான அரசியல் கால்கள் இல்லை; நொண்டிகளுமல்ல; கால்களே இல்லாதவர்கள். அரசியல் ரீதியில் றிமோட் கொன்ரோலில் (remote control) இயங்குபவர்கள். வல்லரசுகளில் தங்கி நிற்றலே இவர்களின் அரசியலாகும். டெல்லியுடனோ, வாசிங்ரனுடனோ, பீஜிங்குடனோ 24 மணிநேர கைபேசித் தொடர்பில்லாமல் இவர்களால் அரசியல் நடத்த முடியாது. இதனால், ஒரு குறிப்பிட்ட எல்லைக்கப்பால் இவர்களால் தமது சொந்த இராஜதந்திரத்தை உருவாக்கிக் கொள்ளமுடியாது. அது ஒரு விதேசிய இராஜதந்திரமாகவே இருக்கும், அல்லது காலப்போக்கில் அவ்விதமே மாறும்.

இது புறநிலையின் தவிர்க்க முடியாத தன்மையல்ல, இவர்களின் அகநிலையின் தவிர்க்கமுடியா வெளிப்பாடேயாகும். வீசி எறியப்பட வேண்டிய கூழ் முட்டைகள் தாய்க்கோழியில் தப்புச் சொல்கின்றன. ஆகவே இவர்களின் தோல்விகளும், சரணடைவுகளும், தன்னையே தாரை வார்த்துக் கொடுக்கும் விட்டுக் கொடுப்புகளும் தேசிய அரசுகளின் தன்மைகளல்ல. அவை விதேசிய அரசுகளின் தன்மைகள். இலங்கையின் வருங்காலத் தேசிய அரசுகள் இத் தோல்விகளில் இருந்து சில எதிர் மறைப் பாடங்கள் கற்றுக் கொள்ளலாம். வல்லரசுகளுக்கு இடையே உள்ள முரண்பாடுகளை (அது ஒன்றுமாறி ஒன்றாகத் தொடர்ச்சியாகத் தோன்றிக் கொண்டே இருக்கும்) சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இலங்கைத்தீவின் சிங்கள, தமிழ்த் தேசியர்கள் அல்லது இலங்கைத் தேசியர்கள் தத்தமது தேசியங்களை நிலை நிறுத்திக் கொள்வது ஒன்றும் பெரிய விடயமல்ல.

தெற்காசிய சூழலில் ஒரு தேசிய அரசின் இராஜதந்திர மூலோபாயம் எவ்விதம் இருக்கவேண்டுமென்பது தொடர்பாக நேபாளப் புரட்சித் தலைவர்களின் கூற்றை நோக்குவோம். அவை நேர்மறைப் பாடங்களாக இருக்கும்.

The Question of Building a New Type of State by Baburam Bhattara எனும் கட்டுரையில் இருந்து சில பகுதிகள்:

ஒக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் லெனின் கூறியது, "... ஒக்டோபர் புரட்சியின் ஆரம்பத்தில் இருந்தே, வெளிநாட்டுக் கொள்கையும் அனைத்துலகத் தொடர்புகளும் நாம் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சனைகளாக இருந்து வருகின்றன. இன்றிலிருந்து உலகின் அனைத்து அரசுகளும் ஏகாதிபத்தியத்தால் தனி ஒரு கட்டுமானமாக இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ளன, என்பதற்காகவோ அல்லது அசிங்கமான இரத்தத் தாகமுள்ள ஒரு குப்பைத் தொட்டியாக இணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்காகவோ அல்ல, தனி ஒரு நாட்டில் மாத்திரம் சமதர்மப் புரட்சியின் முழுமையான வெற்றி என்பது நினைத்தும் கூடப் பார்க்க முடியாததொன்றாகவும், ஆகக் குறைந்தது மிகச் சில வளர்ச்சி பெற்ற நாடுகளின் அதி உச்சமட்ட செயல்பாடுள்ள ஒத்துழைப்பை வேண்டி நிற்பதொன்றாகவும் இருக்கிறது எ ன்பதற்காகவேயாகும்...."(லெனின் 1986:117)

.........இதற்காக, ஒரு பக்கத்தில், மூலோபாய ரீதியில் பாட்டாளி வர்க்க அனைத்துலக தேசிய கண்ணோட்டத்தில் உலகின் அனைத்து பாட்டாளி வர்க்க அணியினருடனும் ஐக்கியமுறுதல் அவசியமானதாகின்றது. அடுத்த பக்கத்தில், தந்திரோபாயமாக, வெவ்வேறுபட்ட அரசு வடிவங்களுடன் சமாதான சகஜீவனம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து நாடுகளுடனும்

இராஜதந்திர உறவுகளைப் பேணுவது, ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகளில் இருந்து எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு அவற்றில் இருந்து சாதக பலாபலன்களைப் பெற்றுக்கொள்வது."

இந்தப் பொதுக் கொள்கையின் வழி நின்று, நேபாளத்தின் குறிப்பான புவிசார் அரசியல் நிலையை மனதினில் கொண்டு, அணி சேராமையும் பரஸ்பர நன்மைகாணல் (Mutual benifit) என்ற கொள்கையின் அடிப்படையில் எமது உடனடி அயல்நாடுகளான இரு பெரும் நாடுகளுடனும் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதற்கு முயற்சிக்க வேண்டும். அத்துடன் எமது கட்சியின் இரண்டாவது தேசிய காங்கிரசில் (2001) ஏற்றுக்கொள்ளப்பட்ட, தெற்காசிய நாடுகளின் புரட்சி முடிந்ததன் பின்னரான எதிர்கால எதிர்பார்ப்பான தெற்காசிய சோவியத் சமஷ்டியை (South Asian Soviet Federation-SASA) உருவாக்குவதை நோக்கி நாம் முன்னேற வேண்டும்.

This entry was posted on May 28, 2008 and is filed under Maoist Theory, Nepal Background இணையத்தளம்- kasama

*- ஆய்வுத் தொடரின் முதல் நூல் முற்றிற்று -*

# பின்னிணைப்புகள்

## ஊக்குவிப்பும் தகவல்களும் தந்த
## நூல்களும், இணையத்தளக் கட்டுரைகளும், இணையத்தளங்களும்

1.The Sri Lanka Army Wikipedia

2. Sri Lanka's Judiciary: Politicised Courts, Compromised Rights-Crisis Group, Asia Report N°172 30 Jun 2009

3. Nepal's Political Rites of Passage-Crisis Group, Asia Report N°194 29 Sep 2010

4. Sri Lanka's Muslims: Caught in the Crossfire-Crisis Group, Asia Report N°134 29 May 2007

5. Sri Lanka's eastern province: land, development, conflict-Crisis Group Asia Report N°159 – 15 October 2008

6. The IMF and World Bank in Sri Lanka
http://www.sangam.org/ANALYSIS/Weisbrot_6_14_03.htm

7. What is the hardest IMF condition for Sri Lanka to meet? http://www.transcurrents.com/tc/2009/07/

8. Feature: Historical roots and contemporary causes of conflict in 20 Sri Lanka-Peace and Conflict Timeline (PACT) Date: Sat, 5 Sep 2009 http://pact.lk/2009/03/05/feature-historical-roots-contemporary-causes-and-contributory%20factors-of-conflict-in-sri-lanka/

9. Justice for all
The Struggle for Worker Rights in Sri Lanka
A Report by the Solidarity Centre
American Center for International Labor Solidarity/
afl-cio 1925 K Street, NW Suite 300
Washington, DC

10.UK medical journal, the BMJ. http://www.bmj.com/cgi/content/abstract/336/7659/1482 20

11.http://.Iankalibrary.com/pol/swrd.htm 16/62 Virtual Library: Assassination of Bandaranaikae

12.Armed Conflict and Humanitarian Law The Rajapakse Era by International Law Project, International Educational Development, September 21, 2006

13. As Sri Lanka Conflict Ends Crisis Escalates-Washington, May 19 (OneWorld.net)

14. The meaning and the power of the Vadukoddai Resolution (Part 1) By H. L. D. Mahindapala

15. The revolt of the privileged Vellahlas (Part II)
By H.L.D Mahindapala

16. Govigama From Wikipe dia, the free encyclopedia
17 Karava of Sri Lanka http://www.karava.org admin@karava.org

18. Caste Conflict and Elite Formation: the Rise of the Karava Elite in Sri Lanka, 1500-7831. by C.R. De Silva Reviewed by Michael Roberts, Cambridge University Press, 1982. www.ozlanka.com/reviews/caste.htm

19. Nine decisions that helped lanka beat LTTE April 24, 2010- http://www.adaderana.lk/news.php?nid=7920

20. Politicisation Of Military And The Fonseka Factor Monday, By D.B.S.Jeyaraj January 25, 2010 dbsjeyaraj@yahoo.com, hesundayleader.lk/…/politicisation-of-

21. Sri Lanka expands number of troops and officers in its armed forces http://www.tamilnet.com/art.html?catid=13&artid=30588

22. Sri Lankan peace talks the LTTE bows to international capital-By the Editorial Board,21 September 2002 http://www.wsws.org/articles/2002/sep2002/sril-s21.shtml

23. Sri Lankas expanding peacetime army http://news.bbc.co.uk/2/hi/south_asia/8121385.stm

24."Day of Reckoning in Sri Lanka", Robert Templer in Foreign Policy,20 April 2009, Foreign Policy

25.The Muslim Perspective-M.H.M.Salman
Attorney at Law, Convener of Constitutional Affairs Committee of the Sri

Lanka Muslim Congress

26. புலிகள் இயக்கத்தால் வடக்கிலிருந்து முஸ்லீம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 19 ஆண்டுகள் தமிழ்மணம் பரிந்துரை : 0/1

27. The Role of the Sangha in the Conflict in Sri Lanka
By Professor Asanga Tilakaratne-ISSN 1076-9005,Volume 10 2003. Journal of Buddhist Ethics, buddhistethics.org/…/tilakaratne-sri-lan… 2/

28. Buddhist Nationalism and Religious violence in SriLanka-Naravila Dhammaratana www.class.uidaho.edu/ngier/slrv.htm

29. The politics of Akon visa denial have a wider impact on Sri Lanka and Buddhism- transcurrents On March 28, 2010

30. Norway's 50 years of NATO membership
http://www.norway.org/ARCHIVE/News/archive/1999/199903nato/

31. The failure of successive peace processes with the LTTE - A historical overview by: Prof. Rajiva Wijesinha, 05 novembre 2008 http://www.lankamission.org/content/view/1083/40/

32. Tamil United Liberation Front General Election Manifesto July 1977)

33. Geopolitics drowns Sri Lanka's Tamils: The great game
By M K Bhadrakumar, TamilNet, Tuesday, 09 June 2009,

34. Britain sold arms despite Sri Lanka's abuses – The Times TamilNet, Tuesday, 02 June 2009,

35. Sri Lankas's sovereigty is at stake.-Proffesor Gravin Karunaratnae Ph.D. Sat/02/Jan/2010. toplankanews.com/indexphp?view=art

36. In the battle for the President of Sri lanka, what does 'mahindachinthana' promise? by Commodore RS Vasan

37. The Liquidation of the Liberation Tigers of Thamil Eelam (LTTE): Lessons Paid In Blood!
Posted By Surendra Ajit Rupasinghe On November 2, 2009http://www.groundviews.org –

38. Theory and Practice of Democracy in Sri Lanka
Posted By Sumanasiri Liyanage On October 31, 2009http://www.groundviews.org

39. Reconstruction and Reconciliation in Sri Lanka – Part 1- groundviews - http://www.groundviews.org -

40.Post-conflict Transition and Aid Effectiveness:Posted By Darini Rajasingham Senanayake On October 22, 2009

41. The JVPs campaign among the Tamils 1977-1982 December 17, 2009 Groundviews,

42. Intelligence Guidance: Week of Feb. 20, 2011
Created Feb 20 2011 an internal STRATFOR document

43. Marxism and the national question in Sri Lanka
By Peter Symonds 10 March 2001
World Socialist Web Site

44. The Socialist Equality Party in Sri Lanka replies to a supporter of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) 29 September 2000 World Socialist Web Site

45. Sri Lankan peace talks the LTTE bows to international capital By the Editorial Board 21 September 2002 http://www.wsws.org/articles/2002/sep2002/sril-s21.shtml

46. Thousand Flowers- Journal of the Ceylon Communist Party-Maoist (CCP-M) Volume 1, Issue 1 March 2008 web kasama

47. Introduction Interrogating an Obscured Legacy-By N. Shanmugaratnam

48. Ahilan Kadirgamar on southasian Soidarity and Question of State and Land the author is an activist with the Sri Lanka Democracy Forum.http://kafila.org/2008/06/16/ahilan-kadirgamar-on-southasian-solidarity-and-questions-of-state-and-l…

49. John Martyn Notes on Jaffna, 1923. Sunday Island, Colombo,1 March 2009

50. Castes, religions and Eezham Tamil nationalism http://www.tamilnet.com/art.html?catid=99&artid=29814

51. Caste Conflict and Elite Formation: the Rise of the Karava Elite in Sri Lanka, 1500-7831. by C.R. De Silva
Reviewed by Michael Roberts, Cambridge University Press, 1982. 382 p
www.ozlanka.com/reviews/caste.htm

52. Caste in Tamil Culture: The Religious Foundations of Sudra Domination in Tamil Sri Lanka Pfaffenberger> Syracuse> Syracuse University tamilnation.org/books/Caste/bryan.htm

53. Just War Ideology in Buddist Sri Lanka in deffence of Dharma. http://www.buddhistethics.org/6/bartho991.html

54.From Vulnerability to Virtudity: Buddhist Reflections on Responding to Terrorism and Tragedy http.//www.buddhistethics.org/10/hersh031.html

55. Sinhala Buddist Ethno Nationalism-masquerading as Sri Lankan 'Multi Ethinic Civic Natinalism' http.//www.facebook.com/topic.php?ui….
56. Sinhala Buddist Chavunism & the Buddhist Clergy—Brian senewiratne tamilcanadian.com/tools/print/php?=48

57. Sinhala Buddist Ethno Religious Chavunism and its strongest advocates, the Buudhist Clergy, are the most important factors that prevent a solution to the Sri Lankan ethnic conflict- lankanewspapers.com/…/4590_space…

58. In Defense of Buddhism
By Surendra Ajit Rupasinghe Oct. 30, 2009 http://www.groundviews.org

59. Buddhist Monks and Politics in Sri Lanka James J. Hughes Presented at the April, 1987 Spring Institute for Social Science Research University of Chicago, Chicago

60. On "Sinhala Buddhism" and "Mahavamsa Mentality" Can the charge of "Rascism" leveled against the chronicle be sustained?-by Bandu de Silva January 09, Colombo, Sri Lanka Guardian

61. The Sinhalese: Racial Uniqueness and Politicized Buddhism http://www.country-data.com/cgi-bin/query/r-13238.html

62. Anagarika Dharmapala From Wikipedia

63. Buddhism and Politics http://www.country-data.com/cgi-bin/query/r-13189.html

64. A Review of Buddha's Warriors: The Story of the CIABacked
Tibetan Freedom Fighters, the Chinese Communist Invasion, and the Ultimate Fall of Tibet- Vibha Arora - Journal of Buddhist Ethics
http://www.buddhistethics.org/

65. Responses to Libaralism poses severe challenge to Sinhala Natinalism at 2010 Presenditial Election. By Buddika Bandara and Praba Manu Sun/25/Jan/2010- Sri Lanka Gaurdian

66. Britain: All the Super Powers you do have blood in your hands wherever tiu went. By- Gravin Karunaratnae, July/29/2009

67. Election for Asian model of Dictatorship- http://www.tamilnewsnetwork.com/2010/14/14/election-for-asian-model-of-dictatorship

68. US - India - China: Changing Dynamics & an Emerging Bi Polar World ? - a Ten Minute Read Nadesan Satyendra 23 February 2009
tamilnation.org/saty/090223bipolar.htm

69. Vellalar (Sri Lankan Tamil) http://en.academic.ru/dic.nsf/enwiki/5456925

70. The revolt of the privileged Vellahlas (Part II) By H.L.D Mahindapala (P……wordpress.com/…/the-revolt-of-the-pr…

71. Caste Conflict and Elite Formation: the Rise of the Karava Elite in Sri Lanka, 1500-7831. www.ozlanka.com/reviews/caste.htm
by C.R. DE SILVA
Reviewed by Michael Roberts Cambridge University Press 1982. 382

72. Diaspora and Conflict: Locality, Long-distance nationalism and Delocalisation of conflict dynamics
By: Jolle Demmers the public Vol.9 (2002),1, 85 – 96

73. Who is the Rogue State?Discourse, Power and Spatial Politics in Post –war Sri Lanka-Benedikt Korf Paper submitted for the 9th International conference on Sri Lanka Studies, 28th – 30th November 2003,
Matara, Sri Lanka

74. Ethno-Political conflict in Sri Lanka A.R.M. Imtiyaz1 and Ben Stavis2. The Journal of Third World Studies, Vol 25, No 2, (Fall 2008), pp, 135-152.

75. The JVP like the LTTE by Tisaranee Gunasekara VI. ANATOMY OF A FAILURE

76. Evaluating the Cultural Revolution in China and its Legacy for the Future
By the MLM Revolutionary Study Group in the U.S. (March 2007) mlm.rsg@gmail.com. Web kasama

77. Nine Letters to Our Comrades, Getting Beyond Avakian's New Synthesis BY MIKE ELY CONTACT: kasamasite @yahoo .com

78. Sri Lanka's untold story | Suren Surendiran guardian.co.uk

79. Sri Lanka Betrayals and Transcending Beyond LTTE: Paper No. 3241 South Asia Analysis Group, By Ravi Sundaralingam.

80. Ending the LTTE: Recipe for Counter Revolution by Arabinda Acharya- 8 June 2009 RSIS, www.rsis.edu.sg.

81. ஈழ விடுதலைப் போராட்டமும் காந்தியமும் - சூரியதீபன், சோழன் பதிப்பகம், டிசம்பர் 2009.

82. ஈழப்போராட்டம் தேசபக்தியும் கம்யூனிஸ்ட்களும் - எஸ்.வி.ராஜதுரை, தமிழோசைப் பதிப்பகம், கோவை.

83.தேசியம் எப்பொழுதும் எங்கும் முதலாளித்துவக் கோரிக்கையே தவிர பாட்டாளிவர்க்கக் கோரிக்கையல்ல - பி.இராயகரன், கீழைக்காற்று பதிப்பகம், மே 1998.

84. மக்கள் விடுதலை இராணுவமும் புதிய ஜனநாயகக் கட்சியும் வைக்கும் அரசியல் - பி.இராயகரன், சமர், Wednesday, 09 December 2009

85. கருணா, ராசபக்ஷே, போராடும் தமிழீழ மக்கள் - யாருக்காக பேசுகிறார் அ.மார்க்ஸ்? பா.செயப்பிரகாசம் Keetru

86. ஈழச்சிக்கலும் தமிழர் கடமையும் - இராசோ Manmozhi கீற்று நவம்பர் - டிசம்பர் 2008

86.a ஈழப் போராட்டத்தால் வெளிச்சமாகும் உண்மைகள் இந்தியாவிற்குப் பங்காளி யார்? பகையாளி யார்?- கலைவேலு Samooka Neethi Thamizh Thesam ஜனவரி 2009

87. ஈழ விடுதலை: தமிழகத் தமிழரும், தமீழீழத் தமிழரும் - இந்திய அரசை நம்புவது கொலையாளி வீட்டில் அடைக்கலம் புகுவதற்கே ஒப்பாகும் வே. ஆனைமுத்து Keetru Sinthanaiyalan

88. The Question of Building a New Type of State by Baburam Bhattarai, This entry was posted on May 28, 2008 at 5:40 pm and is filed under Maoist Theory, Nepal Background, Teach-in Materials.

89. புலியெதிர்ப்பின் அரசியல் – ஆய்வு Bல : தேசபக்தன்!.
http://www.orunews.com/?p=6249 nellaiyans@yahoo.co.uk

90. இலங்கை துப்பாக்கிகள் மௌனமான வரலாறு -என்.மருத்துவமணி ரூமா.இராமசாமி, உழைப்பாளிகள் பதிப்பகம், 2009.

91. கச்சதீவும் இந்திய மீனவரும் - வி. சூரியநாரயணன் & மே.முரலிதரன், காலச்சுவடு பதிப்பகம், 2009.

91. சேதுகால்வாய்த் திட்டமும் இராமேஸ்வரத் தீவு மக்களும் - குமரன் தாஸ் - கருப்புப் பிரதிகள், டிசம்பர் 2008.

92. கனவாகிப் போன கச்சதீவு - வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஸ்ணன், உயிர்மைப் பதிப்பகம்,அக்டோபர், 2008

93. சேதுசமுத்திரத் திட்டம் ஏன் இந்தக் குளப்பம்? - ஈராச்சி பொ.ம. சுப்பாய்யா, உழைப்பவர் ஆயுதம் பதிப்பகம். 2008

94. கச்சத்தீவு - முனைவர் புலவர் செ.இராசு, கொங்கு ஆய்வு மையம், தஞ்சாவூர்.

95. சேதுவில் கப்பல் விடுவோம் - மருத்துவர் அகத்திய தாசன், நாட்டுப் புறவியல் ஆய்வுக் குடில், 2009

96. சேது சமுத்திரத் திட்டம் -பொருளியல் கண்ணோட்டம் - தீக்குச்சி, ஸ்ப்ரம்பர் - ஒக்ரோபர் 2007, அணங்கு.

97. கச்சத்தீவு: மறைக்கப்படும் வரலாறு பறிக்கப்படும் மீனவர் உரிமைகள் - டி. அருள் எழிலன், கீழைக்காற்று வெளியீட்டகம், ஜனவரி 2010

98.. Sri Lankan Tamil society and Politics- Karthigesu Sivathamby, New Centuary Book House (Pvt)Ltd, January 1995

99. யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்வோம் - கார்த்திகேசு சிவத்தம்பி, தர்ஷனா பிரசுரம், கொழும்பு, 1983

100. துனிஸியாவை உலுப்பிய இஸ்லாமிய இயக்கம்... - மு. குலாம்மு’மது, இலக்கியச்சோலை, சென்னை, 2005

101. வளர்முக நாடுகளில் பாப்புலிசம் -வி.ஹோரொஸ், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983.

102. இஸ்லாமும் இன்பத் தமிழும் - டாக்டர் முகமது உவைஸ், யுனிவர்சல் பப்பிளிஷர்ஸ், டிசம்பர் 2008.

103. ஆளும் வர்க்கமாக அறிவுஜீவிகள் - அசோக் ருத்றா, அலைகள் வெளியீட்டகம், நவம்பர் 2008

104. Oil to change nation’s history?
Sunday , 18 February 2007 http: / /www.sundayobserver . lk/2007/02/18/ f in04.asp

105. Sri Lankan conglomerates scent oil
Oct 18, 2007 (LBO) Lanka Business Online

106. Offshore oil in Sri Lanka likely by 2009
Lanka Times online, Submitted by Suj on Sun, 2007-04-15 15:27. Technology and Progress

107. Govt. to invite the world for Lankan oil in August
By Poornima Weerasekera
http://www.dailymirror.lk/2006/03/04/ft/

108. Legal regime in South Asia, oil and gas exploration
By Dulip Jayawardena, Sunday Times Online, October 8 2006.
(The author is a retired Economic Affairs Officer, United Nations ESCAP who was in charge of the Marine Affairs Programme and could be contacted at fasttrack@eol.lk )

109. Norwegian oil pact halted By Santhush Fernando Courtesy Nation 28-08-2006
http://www.lankaweb.com/news/items06/290806-5.html

110. Indians will explore for oil
2nd July, 2006 Volume 12, Issue 51 http://www.thesundayleader.lk/20060702/business.htm

111. Indian Oil and Natural Gas Corp; British Gas buy up seismic data on Sri Lankan oil deposits Sept 27, 2006 (LBO)

112. Tenders for oil exploration in H'tota Rajmi Manatunga
Tue sday , 16 Oc to be r 200 7
http://www.dailynews.lk/2007/10/16/news13.asp

113. Lanka to drill for natural gas in 2005
http://www.dailymirror.lk/2004/01/12/ft/1.asp

114. CAIRAN Energy India private Limited http://www.keralanext.com/news/?id=1172813

115. India's seabed claim may lead to dispute with Sri Lanka By Jacob P. Koshy, jacob.k@livemint.com livemint.com

116. IndoSri Lankan Economic Cooperation: Contemporary Scenario, Monday 27 July 2009, by Bharti Chhibber
http://www.mainstreamweekly.net/article1532.html

117. Anatomy of LTTE collapse and the Fonseka factor
By Shamindra Ferdinando www.island.lk/2009/11/20/features1.html

118. SWRD Banclaranaike: Assassination of a Prime Minister September 25th, 2009 By D.B.S. Jeyaraj http://dbsjeyaraj.com/dbsj/archives/1101

118. Sixty-One Years of Independence and the Tamils of Sri Lanka- February 4th, 2009 By D.B.S. Jeyaraj http://dbsjeyaraj.com/dbsj/archives/213

119. Ethnic Conflict and the Impact on the Dry Zone of Sri Lanka- by Ryan Walkiewicz & Kurt Brockman

120. Ethno-Political conflict in Sri Lanka -A.R.M. Imtiyaz and Ben Stavis The Journal of Third World Studies, Vol 25, No 2, (Fall 2008), pp, 135-152.

121. High Security Zones and the Rights to Return and Restitution in Sri Lanka - a case study of Trincomalee District 2009, by: The Centre on Housing Rights and Evictions (COHRE), Geneva, Switzerland ISBN: 978-92-95004-61-0

122. Sri Lanka will seek bids for Oil Exploration licenses http://www.sangam.org/2007/03/Oil_Exploration.php?uid=2320

123. International private equity fund Unlisted private companies to receive US$ 100 mn boost by Devan Daniel island.lk/2009/11/20/business2.html

124. திருகோணமலை இன்றுவரை திருடப்படும் தொடர்கதையா? ஜெ.ஜென்னி http://inioru.com/?p=7198

125. புத்தரின் பூமியாகும் தமிழரின் நிலங்கள் 13/11/2009
tamilkathir.com/news/…/d,full_view.aspx

126. Defeat of the LTTE and the Future of Tamil Militancy written on July 13, 2009 and published in the journal "World Focus" Volume XXX Number 7 - July 2009> World Focus (www.cnfworldfocus.org)

127. Sri Lankas stalemated conflict http://www.opendemocracy.net/Democracy_power/politics_protest/sri_lanka_stalemated

128. Chinese built Hambantota port in Sri Lanka …Los Angeles Times - Reproduced from Morning Leader, theepori

129. Limks to other designated Terrorists Organisation
http://en.wikipedia.org/wiki/LTTE

130. Political programme of Tamils in the current context of Tamil homeland - August 06, New Delhi, Sri Lanka Guardian) slglanka@gmail.com

131. The Crisis of the State of Sri Lanka calls for a Re creation of the State. It is a Mistake to see the Crisis of the State of Sri Lanka as a purely Ethnic Crisis. Tamil Natiom.org

132. நேபாள தேசிய இனங்களின் சமஷ்டிக் குடியரசு http://kalaiy.blogspot.com/2009/12/blog-post_09.html

133. The silent horror of the war in Sri Lanka
pic.html?path=/img/publish/2009/03/Aroy_01.jpg&width=351&height=253&caption=Arundhati Roy

134. LTTE welcomes US initiative, asks Sri Lanka to listen to IC [TamilNet, Monday, 20 April 2009, 07:35 GMT]

135. Millennium Development Goals in Sri Lanka
January 2009

136. End Game in Sri Lanka http://yaleglobal.yale.edu/content/end-game-sri-lanka

137. Anton Balasingham's Vision by Dr. Brian Senewiratne, January 11, 2008 http://www.sangam.org/2008/01/Balasinghams_Vision.php

138. The LTTEs Proposals for an Interim Self Governing Authority http://www.sangam.org/articles/view/?id=54

139. When world Tamils cry why the Tamil civil society in Sri Lanka maintains dumfounded silence? By Rajasingham Jayadevan – http://tamilaffairs.com/featured/when-world-tamils-cry-why-the-tamil-civil-society-in-sri-lanka-maintains-dumfounded-silence

140. Historical roots and contemporary causes of conflict in Sri Lanka - Peace and Conflict Timeline

141. Remembering Rajani and Re Reading The Broken Palmyrah - 01 Sep 2009 PDT Kafila

142. "The mirage of Eelam" Fri, April 24, 2009 http://www.pjeganathan.org/south-paw/2009/4/24/the-mirage-of-eelam.html

143. சேது சமுத்திர திட்டம் - பொருளியல் கண்ணோட்டம் செப்டம்பர் - அக்டோபர் 2007 தீக்குருசி அணங்க்கு-பெண்ணிய வெளி

144. Global implications of Sri Lanka's civil war http://www.telegraph.co.uk/news/worldnews/asia/srilanka/2990205/Analysis-Global-implications-of-Sri-Lankas-civil-war.html

145. Statement of Karen Parker, j.d. before the subcommittee on Near East and South and Central Sffairs Committee of foreign affairs United State Senate February 24, 2009

146. திசை மாறிய அயலுறவுக் கொள்கை அ.மார்க்ஸ், கீற்று

147. Statement of Bruce Fein, Attorney, Tamils against
Genocide before the Senate Foreign Relations Subcommittee on

Middle East and south asia- re: recent violence in sri lanka- february 24, 2009 - www.tamilsagainstgenocide.org

148. Sri Lanka's challenge: winning the peace
Rohan Gunaratna, 27 - 05 - 2009 openDemocracy.net principles.

149. Democracy and Dynasty - By Tisaranee Gunasekara, JANUARY 26, 2009, Sri Lanka Gaurdian

150. A big defeat, no more Tamil guerillas says Victor Ivan Colombo, 19 June, (Asiantribune.com)

151. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் எதை நோக்கி? வி.சிவலிங்கம், உயிர் நிழல் ஜனவரி -பெப்ரவரி 2006, ஏப்ரல்-ஜூன், ஜூலை -செப்ரம்பர்

152. Press Freedom and Freedom of Expression in Sri Lanka: Struggle for survival Report January 2007, International Press Freedom and Freedom of Expression Mission to Sri Lanka

153. ஈழத்தமிழர் சிக்கலும் தமிழக அரசியல் கட்சிகளும் -
இரா.சம்புகன் நவம்பர் - டிசம்பர் 2008 கீற்று

154. Reports of Umiversity Teachewrs for Humen Rights (Jaffna) Sri Lanka

155. புலிகளின் தோல்விக்கான காரணமும், அரசியல் எதார்த்தமும் பி.இரயாகரன் Sunday, 31 May 2009 - சமர் 2009

156. Summary of, Sri Lanka: Finding a Negotiated End to Twenty-Five Years of Violence Author Nick Lewer and Joe William Publication Searching for Peace in Central and South Asia Year2002

157. Muslim Reactions to the UTHR(Jaffna).

158. இலங்கை - இது பகை மறுப்புக் காலம். சிராஜ் மசூர். புதன் 16. செப்டம்பர் 2009 கீற்று

159. Uphold Democracy, Strengthen solidarity!- Tuesday, May 6, 2008, Sri Lanka Guardianm Joint statement released by: [diaspora organisations of] Sri Lanka Democracy Forum (SLDF), Sri Lanka Islamic Forum – UK (SLIF) Tamil Forum for Peace (TFP), Social Development Organisation of Sri Lankan Dalits (SDOLD)

160. Lanka: Genocide and Other Majoritarian Falsehoods  Pothik Ghosh Monday, 09 February 2009

161. Notable assassinations of the Sri Lankan Civil War-  Book Rags

162. List of attacks atributed to the LTTE- Book Rags

163. Kathankudi mosque massacare - Book Rags

164. Indo-Sri Lanka Accord- Book Rags

165. Indo-Sri Lanka Accord Summary- Book Rags

166. Expulsion of Muslims from the Northern province by LTTE- Book Rags

167. Muslims have a right to know from the LTTE leadership Sun, 2007-04-15 By Ahsan Habib Lincoln - Asian Tribune -

168. துரத்தியடிக்கப்பட்ட முஸ்லீம்களின் வாழ்வு…by ஸ்ரீரங்கன்  February 19th, 2009  மூலம் தேனீ

169. The Plight Of Colombo Muslims And The National Political Parties In Sri Lanka  By  M. I. M. Mohideen, Sri Langa Guardian,  Wednesday, January 6, 2010

170. Sri Lanka: "Falling Down on the Job" Gareth Evans in Foreign Policy-ForeignPolicy.com - The Argument 1 May 2009

171 Lest We Forget Massacres of Tamils 1956 - 2001
Part I NESOHR, Karadipokku Junction, Kilinochchim, Sri Lanka

172. Priority for Butenis in Sri Lanka. by Daya Gamage – US National Correspondent Asian Tribune Published by editor News, USA Jun 17, 2009

173. Sri Lanka – camps, media…genocide? Martin Shaw, 30 - 06 -2009 http://www.opendemocracy.net/article/sri-lanka-camps-media-genocide

174. The politics of postwar Sri Lanka  By Dayan Jayatillaka  http://www.lankaenews.com/English/news.php?id=7924

175. Everyone wants to be a hero as the battle for plaudits begins  -Mandana

Ismail Abeywickrema Sunday Leader May 31 2009

176. Sri Lanka's Judiciary: Politicised courts, compromised rights Crisis Group Asia Report n°172

177. Sri Lanka after the War Col R Hariharan http://www.southasiaanalysis.org/papers33/paper3224.html

178. Culture, politics and economy in the Sri Lankan crisis: preliminary comments- by Jonathan Spencer & University of Edinburgh
"From Developmental to Cultural Nationalism in Asia?"
Workshop, University of Victoria 3-5 October 2003

179. Sri Lanka :the untold story Chapter 27 - Horsewhip Amirthalingham By KT Rajasingham http://www.atimes.com/ind-pak/DB16Df06.html

180. The Sri Lankan Conflict- A Multi-Polar Approach by Asoka Bandarage

181. Benign Parliamentarian from Batticaloa by D.B.S Jeyaraj http://www.tamilweek.com/Benign_parliamentarian_from_Batticaloa_0101.html

182. கூட்டுமன அதிர்விற்குள் ஒரு இனம்: தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் போக்கு குறித்த ஒரு உளவியல் பதிவு - 9/05/2009, 03:25 ]- பரணி கிருஸ்ணரஜனி (பாரிஸ்) யாழினி ரவிச்சந்திரன் (ஒக்ஸ்போட்) சித்ரலேகா துஸ்யந்தன் (வியன்னா) பிரியதர்சினி சற்குணவடிவேல் (பர்சிலோனா) Contact details : educationfeminism@yahoo.com P_krishnarajanifeminist@yahoo.com

183. US of South Asia Can it be a reality? By: Satya Sivaraman Bangkok Tamilcanadian June 2009

184. The Tamil Tigerd last battle- By Eric S. Margolis, June 13, Paris, Sri Lanka Guardian T

185. இந்தியாவைச் சூழும் பேரபாயம், சீனா-பாக்-சிங்களர் கூட்டுச்சதி - By: பழ. நெடுமாறன், தென் செய்தி - ஐப்பசி 1, 2006

186. The politics of easternTamil regionalism By D. B. S. Jeyaraj 21st March, 2004 Volume 10, Issue 36 The Sunday Leader

187. Pillaiyan, Hizbullah, Keerthi and The Eastern Provincial Council- May 17th, 2008 by D.B.S. Jeyaraj transCurrents

188. Endless Agony of Eastern Tamils Must be Ended By D.B.S. Jeyaraj http://transcurrents.com/tamiliana/archives/date/2005/04/

189. fpof;fpd; Raepu;zak; D:/Main divisions/freqent use/politics/Sri Lanka/East\www_Thuuu_net » fpof;fpd; Raepu;zak;.htm
190. Communal violence disrupts relief efforts in the east http://transcurrents.com/tamiliana/

191. Who is the Rogue State?Discourse, Power and Spatial Politics in Post –war Sri Lanka by Benedikt Korf, Paper submitted for the 9th International conference on Sri Lanka Studies, 28th – 30th November 2003, Matara, Sri Lanka

192. Castes, religions and Eezham Tamil nationalism
http://www.tamilnet.com/art.html?catid=99&artid=29814

193. Can Asians think? by- Andrew Sheng, Asia News Network, Publication Date : 21-04-2010

194. Can Asians think outside of West's box?

195. Can Asians Think Understanding the Divide Between East and West Kishore Mahbubani, Joanne J. Myers January 24, 2002

196. Great Power Confrontation in the Indian Ocean: The Geo-Politics of the Sri Lankan Civil War- By Mahdi Darius Nazemroaya Global Research, October 23, 2009

197. Paddy Lands (Special Provisions) Act (No.4 Sri Lanka Consolidated Acts
Paddy Lands (Special Provisions) Act (No. 2 of 1970)- Sect 7

198. A mission to Wanni - A delegation of leaders belonging to various faiths from southern Sri Lanka visits the Wanni region. D.B.S. Jeyaraj

199. Challenges in the Aftermath of the Cessation of Terrorist Hostilities, Keynote Address by Richard W. A. Yokes, Country Director, Sri Lanka Resident Mission , Asian Development Bank , At the 22nd Annual Sessions of the Organization of Professional Associations (OPA)

200. தேசியவாதத்தின் நாசகாரப் பரிமாணங்கள்

201. How India kept pressure off Sri Lanka by Nirupama Subramaniam- The Hindu, Thu/Mar/17/2011
202. Sri Lanka wants U.S help as Indian raders 'not sufficent' The Hindu,Tue/ Mar/15/2001

203. Jihadist Opportunities in Libya
Created Feb 24 2011 - 03:55 : http://www.stratfor.com/weekly/20110223-jihadist-opportunities-libya

204. "dissenting dialogues" on Egypt, Sri Lanka and other debates- February 20, 2011 tags: authoritarianism, dissenting dialogues, Egypt, neoliberalism, sri lanka by Ahilan Kadirgamar - dissenting dialogues Issue No 2, February 2011

205. Pakistani Arms Enabled Lanka Defeat of LTTE – Wednesday, may 20, 2009-HAQ'S MUSINGS

206. Unrest and Libya's Energy Industry Created Feb 22 2011 - http://www.stratfor.com/analysis/20110222-unrest-and-libyas-energy-industry

207. ஸ்ரீலங்காவின் தேசியத் தற்கொலை - பிரிமின் தர்மோத் ஜீவராமு, Parivaedhana Publishers, 4/A, Directors Colony, Kodampakkam 600 034

208. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தோழர் சண்முகதாசன் - வெகுஜனன் இமயவரம்பன். சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை 600002

209. துணைநின்ற இணையத் தளக் கட்டுரையாளர்கள்: இவர்களில் மிகச் சிலரின் சில கட்டுரைகள் முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அனைத்தும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே கட்டுரையாளர்களின் பெயரை இங்கு பட்டியல் இட்டுள்ளோம்.

D.B.S.ஜெயராஜ், றோஹான் குணவர்த்தன, கிறவின் கருணரட்ன, ஹரிஹரன், ஸ்ரீ ரங்கன், சபா நாவலன், ரகுமான் ஜான், இரயாஹரன், சூரியதீபன், லெனின் மதிவாணன், பழ. நெடுமாறன், செயப்பிரகாசம், அ.மார்க்ஸ், எஸ்.வி. இராஜதுரை, ஜெஹன் பெரேரா.

210. **இணையத் தளங்கள்**

1.இனியொரு. 2.தேசம்நெற். 3. தீப்பொறி. 4.tamilnet.com 5. transcurrentsnts. 6.groundview.org (தற்போது நெருக்கடியில் உள்ளது.) 7 tamilnation org 8. IRIN 9. kasama 10. Kafila.org 11. one world.net 12. Lankalibrary.com 13. WSWS.org 14. buddhistethics.org 15. South Asian Analysis Group 16. Lanka Business On Line(BLO) 17. lankaweb.com 18. Asian Tribune 19. Sri Lanka Guardian 20. Book Rag 21. Foreign Policy.com 22. http://www.stratfor.com

211. பருவ இதழ்கள்: புதிய ஜனநாயகம், தினமணி, The Hindu, தீக்கதிர்

குறிப்பு

*இவற்றில் எதையும் எவருக்கும் பரிந்துரைக்கும் நோக்கம் எமக்கு இல்லை. இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவை அனைத்தும் இந்நூலுடன் உடன்பாடு கொண்டுள்ளன என்பதல்ல. உடன்பாடுள்ளனவும் உள்ளன. உடன்பாடுள்ளவை அறிவை வளர்க்க உதவியது என்பது உண்மை, அவை அறிவியல் போராளியாக மாறுவதற்குரிய ஆயுதங்களைத் தந்தன, ஆனால் உந்துதலைத் தரவில்லை. அல்லது குறைவாகவே தந்தன. உடன்பாடற்ற நூல்கள்தான் அந்த உந்துதலைத் தந்தன. வாய்ப்பாட்டுத்தனமான படைப்புகள், தனிநபர்தூற்றுதல் மற்றும் போற்றுதற் படைப்புகள், தொகுக்கப்பட்ட முழக்கங்களின் வடிவிலான படைப்புகள் ஆக்கபூர்வமற்ற படைப்புகளேயாகும்.*

*இருந்தும் சவால் விட்டுத்தூண்டிவிடும் ஆற்றல் இவ்வித படைப்புகள் சிலவற்றிற்கு உண்டு. இருந்தும் காரண காரியத் தொடர்புகளை ஆராயப்புகும் படைப்புகள் அனைத்தும், அவற்றின் கருத்துக்களுடன் இணக்கம் காணமுடியாவிட்டாலும் அவை ஆக்கபூர்வமானவையே. இவ்வித படைப்புகள் வாசகரின் கருத்தை வளர்ப்பதில் ஒன்றில் நேர்மறை பங்களிப்பை வழங்கும், அல்லது எதிர்மறைப் பங்களிப்பை வழங்கும். அவரின் சிந்தனையை மழுங்கடிக்காது.*

இயக்கம் என்பது வெறுமனே
ஒரு அல்லது சில தனிநபர்களோ
நிறுவனங்களோ அல்ல.
இயக்கத்தினதும்,
இயக்கத்தின் தலைமையில்
அணிதிரண்டு போராடிய
மக்களினதும் தியாகங்கள்
என்றுமே வீண் போகாது.
ஒடுக்கப்பட்ட மக்கள் அதை
வீண் போக விடமாட்டார்கள்...

ஆழ்மனப் படிமங்கள்
பௌதீக வடிவம் பெறும்.
புதிய தலைமை உருவாகும்.
போராட்டம் தொடரும்...

- சமூகவியல் ஆய்வு மையம்

மறுநிர்மாணம்